
# சுபீனாவின் சாகரம்



சுபீனா குணரத்தினம்
(பல்கலைக்கழக மாணவி)
அரசறிவியற் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# சுபீனா குணரத்தினம்

தோற்றம்: 06.08.1998 மறைவு: 23.12.2023

அவர்களின்

# முதலாம் ஆண்டு நினைவு மலர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நினைவுகள் ...........**

செல்வி சுபீனா குணரட்னம் அரசறிவியல் துறையில் மூன்றாம் வருட மாணவியாக கல்வி கற்கின்ற போது டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்த செய்தி அரசறிவியல் துறைக்கு பெரும் துயரமான செய்தியாகியது. என்றுமே மறக்க முடியாத ஒரு துயரத்தை சுபீனாவின் இழப்பு மாணவர்களுக்கும் துறைக்கும் ஏற்படுத்தி இருந்தது. மாணவர்கள் தங்கள் சகபாடியை இழந்திருப்பது என்ற எண்ணம் ஒரு பக்கம் அமைய மறுபக்கம் இத்துறைக்கு கிடைத்த ஆளுமையுள்ள ஒரு மாணவியை இழந்தது என்ற துயரம் ஏற்பட்டுள்ளது. கல்வியிலும் நடத்தையிலும் சிறந்து விளங்கிய ஒப்பற்ற எண்ணங்களை பிரதிபலித்துக் கொண்ட மாணவி சுபீனாவினது இழப்பு அரசறிவியல் துறையை பொறுத்தவரையில் பெரும் துயராகவே உள்ளது. அவரது மறைவு ஓர் ஆண்டு அடைந்தாலும் அவரது நினைவுகள் மிக அண்மியதாகவே காணப்படுகிறது. அவரது குடும்பம் பெரும் துயரங்களை அனுபவிக்கின்ற இவ்வேளையில் செல்வி சுபீனாவின் பதிவுகளை மாணவியின் பேராசிரியர் என்ற வகையில் நினைவு கொள்ள முயற்சிக்கின்றேன்.

வகுப்பறை முழுவதும் தனது அன்புக்கும் அடையாளத்துக்கு உட்படுத்தி மிளிர வைக்கின்ற மாணவியாக சுபீனா காணப்பட்டார். அவரது வகுப்பறை பிரசன்னம் ஏனைய மாணவர்களை கற்றலுக்கு தூண்டுவதோடு புரிதலும் விளக்கமும் தெளிவும் கொண்ட உரையாடலாக அமைந்திருப்பதைக் காண முடிந்தது. விரிவுரைகளில் உண்மை நோக்கங்களை அடையாளம் காண்பதிலும் அவதானம் கொண்ட மாணவியாக சுபீனா காணப்பட்டார். விரிவுரை முழுவதும் தனது கவனத்தைக் கொண்டிருக்கும் சுபீனாவின் நடத்தை அனைத்து மாணவர்களிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டக்கூடியதாகும். சுபீனாவின் உரையாடல்களும் அளிக்கைகளும் (Presentation) தனித்துவமானவையாக அடையாளப்படுத்துகின்ற ஆளுமைகளை கொண்டிருந்தார். சுபீனா எப்போதும் விரிவுரையை தவறவிடாத மாணவியாக மட்டுமன்றி விரிவுரை விடயங்களை மேலும் விரிவாக்கிக் கொள்ளும் பொழுதை அரசறிவியல் துறையின் முற்பகுதியில் அமைந்திருக்கின்ற நிழல்தரும் மரத்தின் கீழ் மாணவர்களோடு உரையாடுவதை கண்டுகொள்ள முடியும். நீண்ட நேர வாசிப்பும் நூல்களை தேடுவதும் அதன் உண்மையான பக்கங்களை கண்டறிவதிலும் சுபீனாவின் அறிவுப் பயணமாக அமைந்திருந்தது. அவ்வாறே நூலகத்திலும் தனது தேடலை முதன்மைப்படுத்துகின்ற ஒரு மாணவி. ஏனைய தனது சக பாடிகளோடு விரிவுரை குறிப்புகளை பகிர்வதிலும் கலந்துரையாடுவதிலும் வழமையான பண்பாகக் கொண்டிருந்தார். விரிவுரையின் போதெல்லாம் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிப்பதில் கவனம் சிதறாமல் செயல்படும் பண்பு மேலானதாக அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சுபீனாவின் ஆளுமைகளில் இன்னொரு பக்கம் பொதுத்தளத்திலும் ஊடகங்கள் மற்றும் இதழ்களுக்கு கட்டுரை எழுதுவதிலும் அதற்கான கவனத்தை குவிந்திருந்ததை கண்டுகொள்ள முடியும். எப்போதும் விரிவுரை முடிந்த நேரங்களில் வகுப்பறையில் இருந்து தேடலை முதன்மைப்படுத்தி அவற்றை ஆய்வுகளாக்கி அதற்கான உரையாடல்களை விரிவுரையாளர்களோடும் சகபாடிகளோடும் கலந்துரையாடுகின்ற மரபை கொண்டிருந்தவர். நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகளுக்குள்ளால் விரிவுரையாளர்களுடனும் சக மாணவர்களோடும் உரையாடுவதன் ஊடாக தகவல்களை பெறுதல் அவற்றுக்கான குறிப்புகளை எடுத்தல் அதற்கான நூல்களை தேடிச் செல்லுதல் என பல தனித்துவமான குணவியல்புகளை சுபீனாவிடம் கண்டு கொள்ள முடிந்தது. மாணவர்கள் மத்தியில் ஒரு முன்னோடியாகவே செல்வி சுபீனாவின் இயல்புகள் காணப்பட்டன. பிறரை நேசிப்பது அவர்களை மதிப்பது அவர்களுடைய சொற்களைக் கேட்டு ஒழுகுவது என்ன தனித்துவமான பண்புகள் சுபீனாவிடம் காணப்பட்டது. சுபீனாவின் திறமைகளைக் கண்டு அவரை சிறந்த எழுத்தாளராக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சில கட்டுரைகளை தட்டச்சு செய்ய வருகைதந்த சந்தர்ப்பத்தில் எழுத்துக்களையோ சொற்களையோ சிதறவிடாது பதிவு செய்வதைக் கண்டு கொள்ள முடிந்தது. ஒரு தடைவை கூறினால் மீள கேட்க வேண்டும் என்ற தேவை சுபீனாவிடம் கிடையாது. நீண்ட காலமாக நெருக்கடிகளின் போதும் துயரங்களின் போதும் எல்லாவற்றையும் எதிர்கொள்ளுகின்ற துணிச்சலும் கையாளுகின்ற ஆற்றலும் சுபீனாவிடம் காணப்பட்டது. தனது கல்வியிலும் தேடலிலும் ஆர்வமும் அவாவம் கொண்ட ஒரு மாணவியின் இழப்பீடு சமூகம் சார்ந்து அரசறிவியல் துறை அதிகமான துயரத்தை அடைந்துள்ளது.

எதிர்காலத்தில் சிறந்த ஆய்வாளராக தன்னை அடையாளப்படுத்தக் கூடிய அனைத்துப் பண்புகளும் கொண்டவராக காணப்பட்ட சுபீனாவினது இழப்பு குடும்பத்திற்கு மட்டும் உரியதல்ல. அரசறிவியல் துறையையும் கடந்து இந்த சமூகத்திற்கான இழப்பாகவே தெரிகிறது. அவரது குடும்பம் சுமக்கும் துயரத்தில் அரசறிவியல் துறையினரும் பங்கெடுக்கின்றது. அவரது ஆத்மாவின் பலம் அமைதியானது போன்று ஆத்ம ஈடேற்றமும் அமைதியாகவே அமையும். சுபீனாவின் நினைவுகளைச் சுமந்து அவரது பெயரில் அரசறிவியல் துறையின் சிறப்பு பிரிவில் மிளிரும் முதல் மாணவருக்கு புலமைப்பரிசில் வழங்க முன்வந்துள்ள சுபீனாவின் குடும்பத்தினருக்கு நன்றிகள். சுபீனாவின் நினைவுகளை சுமந்தபடி அரசறிவியல் துறை பயணிக்கும்.

**பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்**
**தலைவர்**
**அரசறிவியல் துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுபீனாவும் அவரின் புலமை வெளிப்பாடும்

சி.அ.யோதிலிங்கம்
வருகைதரு விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

யாழ் பல்கலைக்கழக அரசறிவியல் துறை இறுதி வருட மாணவி கு.சுபீனா அமரராகி ஒரு வருடமாகின்றது. எமது கண்முன்னே நடமாடித்திரிந்த சுறுசுறுப்பான அதியாற்றல் கொண்ட மாணவி அமரராகியமை அரசறிவியல் துறைக்கு மிகப்பெரும் துயரமே! ஆசிரியர்களுக்கு முன்னாலேயே மாணவர்கள் மரணம் அடைவது ஆசிரியர்களைப் பொறுத்தவரை தாங்க முடியாத ஒன்று. இத்துயரம் தந்த வலியிலிருந்து அரசறிவியல் துறை ஆசிரியர்கள் இன்னமும் மீளவேயில்லை. அதுவும் தவிர்த்திருக்கக் கூடிய மரணம் என்பது இரட்டி மடங்கு துயரத்தை தருகின்றது. சுபீனா எதிர்காலத்தில் தலை சிறந்த புலமையாளராக வரக்கூடியவர் என்ற நிலை வேறு இடி போல இடிக்கின்றது. சுபீனாவை நினைவு கூருதல் மாணவர்கள் மத்தியில் புலமைத்துவ ஆற்றலை புத்துயிர் பெறுவதற்கு உதவும் என்றே நம்புகின்றேன்.

கு.சுபீனாவின் புலமைத்துவ ஆற்றலை "அரசறிவியலாளன்" ஆறாவது இதழில் அவர் எழுதிய "சீனாவின் தேசிய நலனும் தைவானின் புவிசார் அரசியலும்" என்ற கட்டுரை மூலம் தெளிவாகத் தரிசிக்க முடிந்தது. கட்டுரையின் சிறப்பு தகவல்களை தேடுதல், தேடிய தகவல்களை தர்க்க ரீதியாக ஒழுங்கமைத்தல், சிறந்த மொழி நடையை பின்பற்றுதல் என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

சிறந்த கட்டுரையில் தர்க்கவியல் இருக்கும். அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு முறைகள் இருக்கும். கோட்பாட்டு வெளிச்சம் இருக்கும். சுபீனாவின் கட்டுரையில் இவை அனைத்தும் தெளிவாக வந்துள்ளன. அரசறிவியல் ஒரு சமூக விஞ்ஞானம் என்ற வகையில் தனித்து இயங்கக் கூடியதல்ல. வரலாறு, பொருளியல், தர்க்கவியல், புவியியல், சமூகவியல் என்பவற்றுடன் இணைந்தே பயணிக்கின்றது. ஒரு அரசறிவியல் ஆய்வாளன் தனித்து அரசறிவியலை மட்டும் கற்றுத் தேர்ந்து புலமையாளனாக வந்து விட முடியாது. ஏனைய துறைகளின் அறிவும் அவசியம். இவ்வாறு ஏனைய துறைகளுடன் இணைத்து எழுதும் ஆற்றல் சுபீனாவுக்கு இயல்பாகவே வந்து விடுகின்றது. சிறுவயதிலிருந்தே தேடிக்கற்கும் ஆர்வம் உள்ளவர்களுக்கு இது ஒன்றும் கடிமானதல்ல.

கட்டுரையின் மைய விவகாரத்தை கோட்பாட்டு வெளிச்சத்துடன் அணுகுவது மிகவும் முக்கியம். கோட்பாட்டு வெளிச்சம் இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவகாரத்தை முழுமையாக அணுக முடியாது. கு.சுபீனா சுருக்கம், அறிமுகம், அதிகாரம், தைவானின் அரசியல் வரலாறு, தைவானின் புவிசார் அரசியல் முக்கியத்துவம், முடிவுரை, என்ற உப தலைப்புக்களினூடாக கட்டுரையை நகர்த்திச் செல்கின்றார். கட்டுரையை உபதலையங்களினூடாக நகர்த்திச் செல்வது விடயப் பொருள் பற்றிய தெளிவான புரிதலை வாசகர்களுக்கு கொடுப்பதாக அமையும்.

கட்டுரையின் சுருக்கத்தை ஆரம்பத்திலேயே கூறுவது வாசகர்களுக்கு கட்டுரை மீதான ஆர்வத்தை தூண்டும். சுபீனா, சீனாவின் கரிசனை அயல்நாடுகளின் கடல்சார் உரிமையை மட்டும் கொண்டதல்ல. வல்லரசுகளின் இராணுவ, வர்த்தக, கடல் போக்குவரத்து என்பவற்றையும் உள்ளடக்கியது என சுருக்கத்தில் கூறுகின்றார். புவியியல் ரீதியாக கேந்திர இடத்தில் இருக்கின்ற நாடுகளை பொறுத்தவரை இந்த நிலை வந்தே தீரும்.

இலங்கை தீவு தொடர்பாக இந்தியாவின் கரிசனையும் தைவான் தொடர்பாக சீனாவின் கரிசனையும் ஏறத்தாழ ஒன்றுதான். இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை தீவு இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள் தான் இருக்கின்றது. இந்தியாவுக்கு எதிரான சக்திகள் இலங்கை தீவில் காலூன்றினால் அது இந்திய தேசிய பாதுகாப்பில் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் இலங்கை விரும்பினால் என்ன? விரும்பாவிட்டால் என்ன? இந்தியா தலையீடுகளை நடத்தியே தீரும். இதே போன்ற நிலையில் தான் தைவான் தொடர்பாக சீனாவின் அக்கறையும் இருக்கின்றது. இதனை சீனாவின் கரிசனை என்ற சொற்பதத்தினூடாக சுபீனா தெளிவாக புரிய வைக்கின்றார். புவியியல் அமைவிடம் இந்தியாவைப் போல சீனாவுக்கும் தேசிய பாதுகாப்பு, கேந்திர பிரச்சினை என இரட்டைச் சுமையை கொடுத்து விடுகின்றது.

இக்கட்டுரை முழுக்க முழுக்க புவிசார் அரசியல் பற்றியதாகும். இதற்கு புவிசார் அரசியல் பற்றிய கோட்பாட்டுப் புரிதல் அவசியமானது. இதனால் அறிமுகப் பகுதியில் புவிசார் அரசியல் பற்றிய கோட்பாட்டு விளக்கத்தை சுபீனா கொடுக்கின்றார். இதனைத் தெளிவாக புரிய வைப்பதற்கு "நிக்கொலஸ் ஸ்பைக்மேன்" மேற்கோளை சுபீனா எடுத்துரைக்கின்றார். "அமைச்சர்கள் வருகின்றார்கள் போகின்றார்கள் சர்வதிகாரிகள் கூட இறக்கின்றார்கள் மலைத்தொடர்கள் கலங்காமல் நிற்கின்றன" என்பதே அந்த மேற்கோளாகும். புவியியல் அமைவிடத்தின் முக்கியத்துவத்தை குறிப்பதற்கு இந்த மேற்கோள் ஒன்றே போதுமானது.

அதிகாரம் என்ற உப தலைப்பின் கீழ் சீனாவின் அதிகார ஆசையை சுபீனா விளக்குகின்றார். உலகில் அமெரிக்காவுக்கு நிகரான சக்தியாக சீனா இன்று வளர்ந்து வருகின்றது. இந்திய வெளிநாட்டமைச்சர் ஜெய்சங்கர் தான் எழுதிய "இந்திய வழி நிச்சயமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிற்கான வியூகங்கள் " என்ற நூலில் "கடந்த 20 ஆண்டுகளாக போரிடாமலேயே சீனா வெற்றி பெற்றுக் கொண்டிருக்கின்றது. அமெரிக்கா வெற்றியே இல்லாமல் போரிடுகின்றது." என கூறியவை இங்கே கவனிக்கத்தக்கதாகும்.

மூன்றாவது உப தலைப்பாக தைவானின் அரசியல் வரலாறு வருகின்றது. தைவான் நாடு பிறந்த கதையை இங்கு சுபீனா சுருக்கமாகத் தருகின்றார். கோமிங்டாங்கட்சிக்கும், சீனக்கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே ஏற்பட்ட மோதல் பற்றியும் அந்த மோதல் இரு நாடுகளையும் எவ்வாறு தோற்றுவித்தது என்பதையும் விளக்குகின்றார். இதில் சன்யாட்சென் பற்றி குறிப்பிட்ட அவர் "சியாங்கைசேக்" பற்றி குறிப்பிடத் தவறிவிட்டார். மாவோவின் நீண்ட பயணம் பற்றியும் குறிப்பிட்டிருந்தால் கட்டுரை மேலும் சிறப்பாக அமைந்திருக்கும்.

நான்காவது உபதலைப்பில் தைவானின் புவியியல் முக்கியத்துவம் விளக்கப்படுகின்றது இலங்கையைப் போல தைவானும் ஒரு தீவாக இருக்கின்றமை புவியியல் முக்கியத்துவத்தை அதிகரிக்கச் செய்துள்ளது. தென் சீனக்கடல், கொரியகுடா, தைவான் ஜலசந்தி என்பன சூழ இருக்கின்றமையும் இதன் பொருளாதார முக்கியத்துவத்தை வலுப்படுத்துகின்றது. இது தொடர்பான புள்ளி விவரங்களையும் சுபீனா தந்திருக்கின்றார்.

இறுதியாக முடிவுரையில் தைவான் ஒரு பக்கம் சீனக் கடலையும் மறுபக்கம் பசுபிக் சமுத்திரத்தையும் கொண்டிருப்பது வல்லரசுகளின் கவர்ச்சிக்குரியதாகவும் தைவான் அமைந்துள்ளது என்பதை கூறும் சுபீனா வல்லரசுகளின் நலன்களிலும் தைவான் பாரிய பாதிப்பை செலுத்தும் என எதிர்வு கூறுகின்றார்.

மொத்தத்தில் மிகவும் அருமையான கட்டுரை. இக்கட்டுரை மூலம் சுபீனாவுக்குள் இருக்கும் ஆய்வாளன் வெளியே வந்திருக்கின்றார். சுபீனா உயிரோடு இருந்திருந்தால் அவரை சிறந்த ஆய்வாளராக நாம் மாற்றி இருப்போம் "அரசறிவியலாளன் " இதழ் வெளியீட்டு விழாவில் நான் இதனை கூறி இருந்தேன்.

சுபீனாவுக்கு நாம் செய்யும் சிறந்த அஞ்சலி எதிர்காலத்தில் சிறந்த ஆய்வாளர்களை உருவாக்குவதே!

யாழ் பல்கலைக்கழக அரசறிவியல் துறை இருக்கும் வரை சுபீனாவின் நாமம் வாழும்

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## In loving memory of subeena Kunaratnam..................

One year ago, we lost subeena to dengue fever, and the pain of her absence still lingers in our hearts.

As her lecturer, I had the privilege of witnessing her remarkable intellect, unwavering curiosity, and genuine passion for learning.
She was a student who not only excelled academically but also brought warmth, kindness and respect into every interaction.
Her calm nature and bright smile were a source of comfort and inspiration to all who knew her, subeena had an innate ability to inspire those around her, and her dedication to understanding the world left a lasting impression on me and all of her classmates.

Though she was taken from us for too soon, her memory continues to inspire us. We honor all today and always, remembering the joy she brought into our lives and the lasting impact she left on our hearts.

***Tharmini Narendranathan***
***Lecturer(prob)***
***Dept of political science***
***University of jaffna***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நினைவுப் பகிர்வு.......**

மனித வாழ்வின் அகப் பரிமாணமே வாழ்வியல் அனுபவங்களின் பெரும் பகுதியை ஆக்கிரமிக்கிறது. அதிலும் துன்பியல் சார் அனுபவங்கள் ஆழப் பதிந்து பெரும்பாலும் மீட்கப்படும் மீள் அனுபவங்களாகின்றன. இம் மீள் அனுபங்கள் புதிய புரிதலுக்கும் நேர்முக அகநிலை மாற்றங்களுக்கும் இட்டுச் செல்லின் உளப்பரிணாமத்திற்கு இட்டுச் செல்லும். அன்றேல் எதிர்மறை விளைவுகளை விழைவிக்கும். இறப்பும் பிரிவும் மனிதவாழ்வில் தவிர்க்க வொண்ணா நிகழ்வு மனிதனின் கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்ட விடயம் ஆயினும் இவற்றின் தாக்கம் பெரும்பாலும் மனித வாழ்வையே நிலைகுலைய செய்கிறது.

நீத்தார் பெருமை பேச விழைவது ஆற்றுப்படுத்தலின் ஓர் அங்கமே நிலைகுலைவை நேர் செய்யும் ஓர் முயற்சியே. எனது பல்கலைக்கழக வாழ்வில் சந்தித்த துயரமிகு நினைவுகள் பெரும்பாலும் மாணவ மாணவிகளின் இறப்பின் துயரே. கடந்த வருடம் அரசறிவியல் துறை மூன்றாம் ஆண்டு மாணவரின் கற்பித்தல் முடிவுற்று அவர்கள் பரீட்சைக்குத் தயாராகும் சமயம் தற்செயலாக அவர்களில் ஒரு சிலரை சந்தித்த போது அவர்களில் ஒரு சிலரை சந்தித்த போது அவர்களில் ஒருவர் மூன்று தினங்களில் எம்மைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்துவிடுவார் என்பதைக் கனவில் கூட கருதியிருக்க முடியாது எதிர்காலம் பற்றிய திட்டங்கள், கனவுகளுடன் இறுதியாண்டில் காலடி எடுத்து வைக்கவிருந்த மாணவிகளில் ஒருவரான சுபீனா இவ்வுலகைப் பிரிந்த செய்தி தொலைபேசி வழி எட்டிய போது, பிரபஞ்ச நியதியின் கையறு நிலையையே உணர முடிந்தது.

இறப்பின் துயரம் கொடியதெனினும் அதனை எதிர் கொண்டு மரணித்தவர் தம் குடும்பம், உறவுகள் தொடர்பாகக் கொண்டிருந்த எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்ய விழைவதே அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக அமையும்.

**ஓம் சாந்தி!**
**த. அருணகிரிநாதன்**
**ஆங்கிலப் போதனாசிரியர்**
**யாழ் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அரசியல் கோட்பாடு என்பதனை அறிமுகப்படுத்தி அதன் உள்ளடக்கங்களினை விபரிக்குக. | 01-19 |
| இந்தியாவில் பெண்களுடைய சமத்துவம் தொடர்பான பிரச்சனைகளை ஆராய்க. | 20-27 |
| "மத்திய கால அரசியல் சிந்தனையில் மதம் பிரதான இடம் வகித்துள்ளது." இக்கூற்றை பனிப்போருக்கு பின்னரான உலக ஒழுங்கை பிரதிபலிக்கும் நாகரீகங்களின் மோதல் என்ற நூலோடு தொடர்புபடுத்தி ஆராய்க. | 28-39 |
| கி.மு 512 சீனாவின் போரியல் வல்லுனரான சன்சூவின் (sun tzu) போர்க்கலை (The Art of War) எனும் நூல் முன் வைக்கும் 13 அத்தியங்களின் உள்ளடக்கங்களையும் முதன்மைப்படுத்தி போர் எனும் பகுதியை ஆராய்க | 40-50 |
| அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் இருகட்சி முறையின் பண்புகளை விமர்சன ரீதியாக ஒப்பிட்டு ஆராய்க. | 51-63 |
| ஹவர்மாக்ஸ் (J.Habermas) மறுசீரமைப்பு ஜனநாயகம் பற்றிய சிந்தனைகளை இலங்கையின் நடைமுறை சார்ந்து ஆராய்க. | 64-73 |
| "முதலாளித்துவத்தின் உச்சக்கட்ட வளர்ச்சியே ஏகாதிபத்தியம்" இக்கூற்றை விளாடிமிர் லெனினுடைய சோசலிசக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு பரிசீலிக்குக. | 74-83 |
| தேசியம் என்பதனை வரையறுத்து தேசியவாதம் இயல்பிலும் பண்பிலும் உலகளாவிய தளத்தில் காணப்படும் முக்கியத்துவத்தினை மதிப்பீடு செய்க. | 84-95 |
| ஜப்பானின் அரசியல் முறைக்கு அதன் அரசியல் யாப்பு எவ்வாறு ஆதாரமாக விளங்குகின்றது. என்பதை ஆராய்க | |
| இலங்கையின் மக்கள் தீர்ப்பு முறைமையை சுருக்கமாக விபரிக்குக. | 96-107 |
| இலங்கையில் பெண்களின் அரசியல் பங்குபற்றலை பாதிக்கும் காரணிகளை ஆராய்க. | 108-113 |
| விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைப்படி இலங்கையின் பாராளுமன்ற பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறையினை பகுப்பாய்வு செய்க. | 114-121 |
| இலங்கையில் இடது சாரி அரசியற் கட்சிகளுக்கு இடையிலான பிளவுகளையும் பின்னணிக் காரணிகளையும் தெளிவு படுத்துக. | 122-135 |
| இலங்கையின் மனித உரிமைகள் வளர்ச்சியினை 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. | 136-144 |
| சமகால இலங்கையின் அரசியல் பொருளதார நெருக்கடிக்கான அடிக்கட்டுமானத்தையும் (Base). மேல்கட்டுமானத்தையும் (Super Structure) மாக்சிஸ மரபுகளுக்கு ஊடாக ஆராய்க. | 145-157 |
| | 158-165 |
| சகல விதமான இனரீதியான பாரபட்சங்களை இல்லாது ஒழித்தல் குறித்த சர்வதேச சமவாயத்தின் (ICERD) பொருத்தப்பாட்டினை இலங்கையினை அடிப்படையாகக் கொண்டு விமர்சன ரீதியாக ஆராய்க. | 166-176 |
| இலங்கையின் சமகால அரசியல் பொருளதார நெருக்கடிக்கான பின்னணிகளை விபரிக்குக | 177-184 |
| சமகாலத்தில் இலங்கையிலிருந்து பல்வேறுபட்ட தரப்பினரும் | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| புலம்பெயர்ந்து (Emigration) செல்வதற்கான அடிப்படைக் காரணிகளை வெளிக்கொணர்க. | 185-191 |
| "பொதுத்துறை நிர்வாகம் என்பது பொதுமக்களையும், பொது வளங்களையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும்" விளக்குக. | 192-204 |
| பங்குபற்றல் அபிவிருத்தி செயற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகிகளைக் காட்டிலும் பயனாளிகள் (மக்கள்) குறித்தே அதிக கரிசனை கொள்கிறது. இக் கருத்துடன் உடன்படுகிறீரா உமது விடைக்கான காரணத்தினை தருக. | 205-215 |
| கொள்கைச் செயன்முறையினை விளக்கிக் கொள்வதில் டேவிட் ஈஸ்ட்டனின் கறுப்புப் பெட்டி (Black Box) பெறும் முக்கியத்துவம் குறித்து கருத்துரைக்குக. | 216-224 |
| ஒரு பல்லின சமூகத்தில் பொதுக் கொள்ளை எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு இலங்கையின் பொதுக் கொள்கை உருவாக்கத்தில் உள்ள சவால்களை தெளிவுபடுத்துக. | 225-228 |
| இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏதாவது ஒரு அபிவிருத்தி திட்டம் ஒன்றை குறிப்பிட்டு ஆராய்க. | 229-239 |
| தென்னாசியாவின் பன்மைத்துவ நெருக்கடியால் ஏற்பட்ட முரண்பாடொன்றிற்கு நியாயமான தீர்வினை பரிந்துரைக்குக. | 240-248 |
| சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேசப் பொருத்தனை (ICCPR) | 249-256 |
| தென்னாசிய அரசியலில் அரசியல் புவியியல் மூலங்கள் வகிக்கும் முக்கியத்துவத்தினை ஆராய்க. | 257-269 |
| சமகாலத்தில் ரக்ஷ்யாவுக்கும் உக்கிரைனுக்கும் இடையிலான போர் பதட்ட நிலையும் அது தொடர்பாக மேற்கு நாடுகளின் போக்கையும் யதார்த்தவாதத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. | 270-276 |
| சிவில் போர் என்கின்ற எண்ணக்கருவினை விபரித்து மேற்காசியப் பிராந்தியத்தில் நிகழும் சிவில் போர்களையும் அவற்றின் விளைவுகளையும் ஆராய்க. | 277-280 |
| சமகால சர்வதேச அரசியலில் பனிப்போரினுடைய தாக்கத்தினை ஆராய்க. | 281-290 |
| சர்வதேச சட்டத்தின் தோற்றம் வளர்ச்சி சார்ந்து முன்வைக்கப்படும் விடயங்களை பகுப்பாய்விற்கு உட்படுத்துக. | 291-304 |
| அரசறிவியல் ஆய்வின் முக்கியத்துவத்தினை விபரித்து ஆய்வு முறைமைக்கும் (Research Methods) ஆய்வு முறையியலுக்கும் (Research Methodology) இடையிலான வேறுபாடுகளை ஆராய்க. | 305-317 |
| சுயதிறன் எய்தல் அல்லது தன்னிறைவு எய்தல் மற்றும் உளவியல் தொடர்பான ஆரோக்கியமான நபரின் குணாதிசயங்கள் பற்றி மாஸ்லோ மற்றும் ரோஜர்ஸ் நோக்குகளை ஒப்பிடுக. | 318-322 |
| முழுநிலைக்காட்சி வாதிகள் உளவியலிற்கு ஆற்றிய பங்களிப்பினை புலக்காட்சி, அகக்காட்சி தலைப்புக்களின் கீழ் ஆராய்க. | 323-328 |
| கெப்னரின் மாதிரியை பிரயோகித்து செய்தி அறிக்கையிடலைப் பகுபாய்வு செய்தல். | 329-339 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசியல் கோட்பாடு என்பதனை அறிமுகப்படுத்தி அதன் உள்ளடக்கங்களினை விபரிக்குக.**

அன்று முதல் இன்று வரை அரசு நிலைத்திருந்தாலும் அது காலத்திற்கு காலம் பல மாறுதல்களையும் உள்வாங்கி வருகின்றது. அரசு (State) பற்றி அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் அக்கால சூழலைக் கருத்திற்கொண்டு எதிர்கால நோக்கில் கற்பனைகளினூடாக சில அறிஞர்கள் கோட்பாடுகளினை முன்வைத்துள்ளனர்.

கோட்பாடு என்ற சொல்லைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான Theory என்ற சொல் "theoria" என்ற கிரேக்க சொல்லில் இருந்து வந்ததாகும். இதனது கருத்து விஷேடமாக நோக்குதல், ஆழமாகப் பார்த்தல் (well focus) என்பதாகும். இதனடிப்படையில் பொதுவாக அறிவியல், தர்க்கம், நடைமுறை அம்சங்களை தன்னகத்தே கொண்டு அரசியல் விடயங்களினை ஆழமாக நோக்குவதே அரசியற் கோட்பாடுகள் என குறிப்பிடப்படுகின்றன.

அரசியற் கோட்பாடுகள் சமூகத்தில் காணப்படும் மரபு, விழுமியங்கள், மதம், ஒழுக்கம், நீதி, சட்டம், என்பவற்றை பற்றிக் குறிப்பிட்டு அவை எவ்வாறு அரசியல் செயற்பாடுகளில் பாதிப்பு செலுத்துகின்றன என்பதைப் பற்றியும், சமூகத்தில் அதிகாரம் எவ்வாறு பங்கிடப்படுகிறது அதன் இயல்பு எத்தகையது, அது அரசியலில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன என்பதைப் பற்றியும் விளக்குகின்றது.

"சமூகமே கோட்பாட்டுக்கான அடித்தளம். சமூகத்திலிருந்தே கோட்பாடுகள் தோற்றம் பெறுகின்றன" கோட்பாடுகள் ஒருபோதும் வெறுமையிலிருந்து தோன்றுவதில்லை. சமூகத்தில் தோன்றும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயலும் போது முன்வைக்கப்படும் சிந்தனைகளே கோட்பாடுகள் ஆகின்றன. கால மாற்றத்திற்கேற்ப கோட்பாடுகளும் மாற்றுமுறுகின்றன. ஒவ்வொரு காலத்திலும் ஏற்படும் புதிய பிரச்சினைகளை அக்கால கோட்பாடுகள் பிரதிபலிக்கின்றன. எண்ணங்களே கோட்பாட்டுக்கான அடிப்படை ஆயினும் தோற்றம் பெறுகின்ற எண்ணங்கள் எல்லாம் கோட்பாடுகள் ஆவதில்லை. எண்ணங்கள் பகுத்தறிவினடிப்படையில் பொதுமைப்படுத்தப்பட்டு சமூகத்திற்கு அவசியமான பொருத்தமான விடயங்களே கோட்பாடுகள் ஆகின்றன. அரசியல் விடயங்களோடு தொடர்புள்ளதாக அமையும் போது அவை "அரசியற் கோட்பாடுகள்" எனப்படுகின்றன. அரசியற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டுக்கு (Political theories) உதாரணமாக மாக்ஸிசக் கோட்பாடு, பாஸிசக் கோட்பாடு, தாராண்மைவாதக் கோட்பாடு போன்றவற்றை குறிப்பிடலாம்.

அரசியற் கோட்பாடானது பல இயல்புகளைக் கொண்டிருக்கிறது. அவையானவன பரந்ததாகவும், குறுகியதானதுமாக இயல்பைக் கொண்டிருந்தாலும் மிக ஆழமானது, மரபுரீதியான அம்சங்களினையும் நவீன அம்சங்களினையும் தன்னகத்தே கொண்டது. எதிர்கால அரசியல் போக்கு பற்றி எதிர்வு கூறக் கூடியது, நடைமுறை அரசியலை விளங்கிக் கொள்ளவும் அரசியலில் முறையான ஆய்வு வளரவும் வழிவகுக்கிறது. அரசியலில் நடத்தைவாத பண்பையும் தற்கால அரசியல் யதார்த்தத்தையும் பிரதிபலிக்கிறது. சமூகத்தில் காணப்படும் அரசியல் பொருளாதார சமூக் காரணிகளை விளங்கிக் கொள்ளவும் உதவி செய்கிறது ஆகிய இயல்புகளைக் கொண்டுள்ளது.

அரசியல் எண்ணக்கருக்களை உருவாக்குகின்ற போதும் அவற்றை பயன்படுத்துகின்ற போதும் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன. அதாவது அரசியல் எண்ணக்கருக்களை அரசியல் தொடர்பான ஒழுக்க, தத்துவ மற்றும் கருத்தியல் அடிப்படைகளில் இருந்து பிரிக்க முடியாமை போன்றன பிரச்சினையாக காணப்படுகிறது.

பொதுவாக அரசியற் கோட்பாடு என்ற சொல்லுக்கான அர்த்தத்தை விளங்கிக் கொள்வதில் சிக்கல்கள் காணப்படுகின்றன. அதாவது அரசியல் சிந்தனைகள், அரசியல் தத்துவம், அரசியல் கருத்தியல், போன்ற எண்ணக்கருக்களோடு அரசியல் கோட்பாட்டை இணைத்து ஒன்றென மயங்கும் ஒரு நிலை காணப்படுகின்றது. எண்ணக்கருக்களுக்கும் கோட்பாடுகளுக்கும் இடையில் சில ஒற்றுமைகள் காணப்பட்ட போதும் அவை முற்றிலும் வேறானவை ஆகும்.

அரசியற் கோட்பாடுகள் தற்கால அரசியல் சமூக நிலையை விளக்குவதால் பொதுக்கொள்கை உருவாக்குவதற்கும் சட்டவாக்கத்திற்கும் உதவுகின்றன. அத்துடன் அரசியலை எவ்வாறு கற்பது என்பதை அறியவும் அரசியலில் எந்த அணுகுமுறையை பயன்படுத்துவது என்பதை அறியவும் அரசியல் கோட்பாடுகள் புதிய கருதுகோள்களை வழங்குவதால் காலத்திற்கேற்றவாறு புதிய அரசியல் கோட்பாடுகள் தோற்றுவதற்கும் வழிவகுக்கின்றன. மேலும் ஒரு காலத்தின் சமூக பொருளாதார அரசியல் நிலைமைகளினை விளக்கி அரசியல் வரலாற்றுப் போக்கினை அறிய துணைபுரிகின்றன. சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் அரச முறைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கவும் உதவுகின்றன. ஆரோக்கியமான அரசியல் விவாதத்திற்கு அடித்தளமிட்டு சமூக அரசியல் முன்னேற்றத்துக்கும் வழிவகுக்கின்றன. மேலும் நடைமுறையில் உள்ள அரசியல் முறைகளினுடைய குறைபாடுகளை சுட்டிக்காட்டி அவற்றை திருத்தியமைக்க துணைபுரிகின்றமை போன்றவை அரசியற் கோட்பாடுகளின் பயன்பாடுகளாக அல்லது முக்கியத்துவமாக காணப்படுகின்றன.

“அரசியற் கோட்பாடுகள் அதனது தோற்றம் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு கீழைத்தேய அரசியல் கோட்பாடுகள், மேற்கத்தைய அரசியற் கோட்பாடுகள் என வகைப்படுத்தி நோக்கப்படுகின்றன. அந்த வகையில் கீழைத்தேய அரசியல் கோட்பாடுகள், மேற்கத்தைய அரசியற் கோட்பாடுகள், இரண்டிற்குமிடையிலான ஒப்பீட்டு நோக்கு, அவற்றின் இயல்புகள் என்பவற்றை சற்று விரிவாக நோக்குவோம்.

அந்த வகையில் முதலாவதாக கீழைத்தேய அரசியல் கோட்பாடுகள் பற்றி நோக்குவோம். கீழைத்தேய அரசியற் கோட்பாடுகள் காலத்தால் முந்தியவை ஆகும். கீழைத்தேய அரசியற் கோட்பாடுகளை புராதன ஆசியாவின் அரசியற் கோட்பாடுகள் என அழைக்கப்படுகின்றன. இப்புராதன ஆசியாவின் அரசியற் கோட்பாடுகள் குறிப்பாக ஆசியப் பிராந்தியத்தினை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்திருந்தது. இதனுள் பொதுவாக புராதன இந்திய அரசியல் சிந்தனைகளும் புராதன சீன அரசியற் சிந்தனைகளும் முக்கியம் பெறுகின்றன.

புராதன இந்திய அரசியற் சிந்தனைகளுள் இந்துமத அரசியல் சிந்தனைகள் மற்றும் பௌத்த மத அரசியல் சிந்தனைகள் என்பன உள்ளடங்குகின்றன. புராதன சீன அரசியல் சிந்தனைகளுள் கன்பூசியஸின் அரசியல் கருத்துக்கள் பிரதான இடத்தினை வகிக்கின்றன. அவற்றினை சற்று விரிவாக பார்ப்போம். அந்த வகையில் முதலாவதாக புராதன இந்திய அரசியற் கோட்பாடுகளில் இந்து மத அரசியல் சிந்தனைகள் பற்றி நோக்குவோம்.

மதத்திற்கும் அரசியலுக்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றன. பல்வேறு அரசியல் சிந்தனைகள், மத சிந்தனையில் இருந்து தோற்றம் பெற்றன. இன்றும் கூட சில நாடுகளில் அரசியற் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் வழிநடத்தும் கருவியாக மதம் செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இத்தகைய பின்னணியில் இந்து மதம் அரசியற் கல்விக்கு முக்கியமான பங்களிப்பை செய்திருக்கின்றது. இதில் இந்து மத நூலான கௌடில்யரின் அர்த்த சாஸ்த்திரம் முக்கியமானதாகும். இந்நூல் இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத நூலாக கொள்ளப்பட்ட போதும் அரசியல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு அரசியல் நூலாகவே காணப்படுகின்றது.

சிந்துவெளிப் பிரதேசத்தில் இரு வேறுபட்ட தத்துவ நிலைகள் காணப்பட்டன. பௌத்த தத்துவ நிலையும் பகுத்தறிவு தத்துவ நிலையும் இப் பிராந்தியத்தினை ஆக்கிரமித்தன. அலெக்ஸ்சாண்டரின் படையெடுப்பினை முறியடிக்க இத்தத்துவ நிலைகள் பயனுடையவையாக இருக்கவில்லை. இதனால் புதிய தத்துவ நிலை ஒன்றை ஏற்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த கௌடில்யர் அர்த்த சாஸ்திரம் என்னும் நூலினை எழுதினார். இந்நூல் மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்திருக்கின்றது. இது 15 அதிகாரங்களையும் 150 அத்தியாயங்களையும் 180 பிரகரணங்களையும் கொண்டு மொத்தம் 6000 சுலோகங்களையும் கொண்டு காணப்படுகின்றன.

இந்திய சாம்ராச்சியத்தை நிறுவி ஒரு பலமான ஆட்சியை ஏற்படுத்த கௌடில்யர் முயன்றார். ஒரு நாட்டில் அரச அதிகாரங்கள் பேணப்பட வேண்டும் எனவும் அரச அதிகாரத்தை பேணுகின்ற அம்சங்கள் ஒரு நாட்டில் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். நலன்பேணும் அரசின் ஆதரவாளராக கௌடில்யர் இருந்தார். ஆனால் அதேசமயம் யுத்தத்தையும் அவர் ஊக்குவித்தார்.

ஆட்சியாளர் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டு குழந்தைப் பருவத்திலிருந்து பத்து வயது வரைக்கும் விஞ்ஞானம், பொருளாதாரம் அரசியல் அறிவு என்பன புகட்டப்பட வேண்டும் என குறிப்பிடுகின்றார். மேலும் குடியாட்சி, முடியாட்சி போன்ற ஆட்சி முறைகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளபோதும் முடியாட்சி சிறந்தது என்பது இவரது கருத்தாகும். முடியாட்சி பரம்பரையாக வரவேண்டும் எனவும் இவர் குறிப்பிடுகின்றார்.

மேலும் ஒரு நாடு அரசுக்கும் மக்களுக்குமிடையிலான தொடர்பை சிறப்பாக பேண வேண்டும் எனவும் மக்களின் உரிமைகளினை சிறப்பாக பேணும் போதே மக்களுடனான உறவை சிறப்பாக பேண முடியும் எனவும் குறிப்பிட்டார்.

கௌடில்யரும் பிளேட்டோவும் குறிப்பாக சமூக அமைப்பு, சர்வாதிகாரம், ஒழுக்கம், மற்றும் உயர் குடியானவருக்கான ஆதரவு என்பவற்றில் பெரிதும் ஒன்றுபடுகின்றனர். ஆயினும் பல்வேறு விடயங்களில் வேறுபடுவதையும் காணலாம்.

கௌடில்யர் உறவுகள் தொடர்பான கொள்கையையும் இவர் விளக்கியுள்ளார். பலமான நாடுகள் பவீனமான நாடுகளை ஆக்கிரமிக்கும் மீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதியின் அடிப்படையிலேயே வெளிநாட்டுக் கொள்கையானது செயற்படுகிறது என்கிறார். உள்நாட்டு வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை பாதுகாக்க உதவுவதே வெளிநாட்டுக் கொள்கை என இவர் குறிப்பிடுகின்றார்.

மனித உரிமைகளுக்கு கௌடில்யர் மிக முக்கியமான இடம் வழங்கியுள்ளார். எவ்வாறு ஒரு ஆட்சியாளன் போர் புரிய வேண்டும் மற்றும் போர்க்களத்தில் எதிரிகளை எவ்வாறு நடாத்த வேண்டும் என்பது போன்ற பல விடயங்களைப் பற்றி இவர் குறிப்பிட்டுள்ளார். இது தற்காலத்தில் மனிதாபிமான சட்டத்தை ஒத்ததாக இருக்கின்றது.

மாக்கிய வல்லியின் கருத்துக்கள் கௌடில்யரின் கருத்துக்களை விட யதார்த்தமானதாக அமைந்திருக்கின்றது. ஆயினும் பல விடயங்களில் இருவரும் ஒன்று பட்டு காணப்படுகின்றனர். இருவரும் பலமுள்ள சாம்ராச்சியத்தை உருவாக்க முனைந்தார்கள் அத்துடன் இராஜதந்திர செயற்பாட்டின் அவசியத்தையும் குறிப்பிடுகின்றார். எனினும் இராஜதந்திர முயற்சிகள் செயலற்றுப் போகும் போது யுத்தம் அவசியமானது என்பதனை இருவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

அடுத்ததாக புராதன சீன அரசியல் கருத்துக்களை சற்று நோக்குவோம். பௌத்த மத சிந்தனைகளில் காணப்படுகின்ற அரசியற் கருத்துக்கள் அக்கால அரசியற் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதில் மிகப் பெரிய பங்களிப்பினை வழங்கியிருக்கிறது. பௌத்தம் தேராவாத மற்றும் மகாயன பௌத்தம் என இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தி நோக்கப்படுகின்றன.

"பௌத்த இலக்கியங்களில் மன்னராட்சியின் தோற்றம் மற்றும் இயல்பு பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன. பௌத்தமத இலக்கியங்களான அக்கண சூத்திரம் (Agganasutta) திக்கநிகாயா மற்றும் ஜாதக கதைகள் என்பன மன்னராட்சியின் தோற்றம் மற்றும் இயல்பு பற்றி குறிப்பிடுகின்றன.

முழு உலகத்தையும் ஆளுகின்ற இலட்சிய அடிப்படையிலான உலகலாவிய மன்னன் பற்றி பௌத்தம் குறிப்பிடுகின்றது. முழு உலகையும் அமைதியுடனும் சமாதானமாகவும் பேணக்கூடிய இயல்புள்ளவனாக இந்த உலகளாவிய மன்னன் இருப்பான் என புத்தர் கூறியதாக சொல்லப்படுகின்றது. மேலும் அரசியலில் தர்மம் என்கின்ற எண்ணக்கரு முதன்மை பெறுவதற்கு பௌத்தம் வழிவகுத்திருக்கின்றது. தர்மத்தை அரசியல் செயற்பாட்டை வழிநடத்தி செல்கின்ற அடிப்படை சட்டமாக பௌத்தம் குறிப்பிடுகிறது. சிறந்த அரசாங்கம் எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதையும் விளக்குவதற்கு பௌத்தம் பத்து கடமைகளை குறிப்பிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த மத அரசியற் கருத்துக்கள் மேற்கத்தைய அரசியற் சிந்தனைகளை போல கோட்பாட்டு அடிப்படைகளை அதிகமாக கொண்டிருக்கவில்லை ஆயினும் சமூகத்தில் தனிமனிதனின் நலன் பற்றிய சமூக கருத்துக்களையும் சமூகத்தில் தனிமனிதனின் நல்வாழ்வுக்கு அடிப்படையான அரசியற் கருத்துக்களையும் அதிகமாக கொண்டிருக்கின்றது. ஆயினும் பிற்காலத்தில் சில நாடுகளில் பௌத்தம் அரச மதமாகவும் சமூக வன்முறைக்கான அடிப்படையாகவும் கொள்ளப்பட்டமை பெரிதும் விமர்சிக்கப்படுகின்றது. எனினும் பிற்கால ஐரோப்பிய சிந்தனைகளின் வளர்ச்சிக்கும் ஜனநாயக புரட்சிக்கும் பௌத்தமத கருத்துக்கள் பெரிதும் உதவுகின்றன.

அடுத்தாக புராதன சீன அரசியற் கருத்துக்களை பார்ப்போம். சீன அரசியற் கருத்துக்களில் கன்பூசியஸின் கருத்து முக்கியமானதாகும். இவரது கருத்துக்கள் கம்பூசியவாதம் என குறிப்பிடப்படுகின்றது. கம்பூசியஸின் அரசியல் தத்துவமானது நீதிநெறிமுறை (Ethical) அடிப்படையில் அமைந்ததாகும். கம்பூசியஸ் உறுதியற்ற, குழப்பமான ஆட்சியை இல்லாதொழித்து உறுதியான ஆட்சியை ஏற்படுத்த உழைத்தார். ஒழுக்கத்தினடிப்படையில் இடம்பெறும் ஆட்சி முறையே சிறப்பான ஆட்சி முறையாக இருக்கும் என இவர் கூறினார். மேலும் ஆட்சியாளனின் தன்மை எவ்வாறிருக்க வேண்டும் என்றும் அதனை மாற்றியமைக்கும் வழிவகைகள் பற்றியும் குறிப்பிட்டார். மேலும் சமூக அரசியல் கட்டமைப்பினை தீர்மானிப்பதில் பொருளாதாரக் கொள்கைகள் மிக முக்கிய பங்கு வகிக்கிறது என்றும் கூறினார்.

நவீன அரசியலில் சட்டம், அரசியல் ஒழுக்கம் போன்ற சிந்தனைகள் முதன்மை பெறுவதற்கு கன்பூஸியசின் கருத்துக்கள் உதவியிருக்கின்றன. அரசியல் ஒழுங்குள்ள சட்ட ரீதியான அரசியல் சமூகம் ஒன்றை படைப்பதில் கன்பூஸியஸ் முக்கிய பங்காற்றியுள்ளார். அத்துடன் மதச்சார்பற்ற கருத்துக்கள் அரசியலில் இடம்பெறுவதற்கு முக்கிய வழிகாட்டியாகவும் இருந்துள்ளார்.

கீழைத்தேயத்தில் மறுமலர்ச்சிக்கு பிற்பட்ட காலத்தில் இந்தியாவில் காந்தியம் என்கின்ற சிந்தனை தோற்றம் பெற்றது. இன, மத, சாதி, பிராந்தியம் என்ற ரீதியில் பிளவுபட்டிருந்த இந்திய மக்களை ஒற்றுமைப்படுத்தி இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற உயர் நோக்கத்தோடு செயற்பட்டவர் காந்தி இதற்காக காந்திய சிந்தனையை முன்வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் என்பது சமூக சேவைக்கான ஒரு தளமாக இருக்க வேண்டுமே தவிர ஒரு தனிப்பட்ட நலனுக்காகவோ அல்லது வேறு குறுகிய நோக்கங்களுக்காகவோ இருக்கக் கூடாது எனக் குறிப்பிட்டார். காந்தியமானது நேர்மை, ஒழுக்கம், கண்ணியம், சத்தியம் அஹிம்சை போன்ற ஒழுக்கங்களை உள்ளடக்குகிறது. மேலைத்தேய அரசியல் சிந்தனையில் நோக்கம் தான் முக்கியமே தவிர மார்க்கம் முக்கியமானதல்ல ஆனால் காந்தியத்தில் இந்த இரண்டிற்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

காந்தியினுடைய சத்தியாகிரகப் போராட்டமானது ஏனைய போராட்டங்களிலிருந்து வேறுபட்டதாகும். இது உயர்ந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தார்மீகப் போராட்டமாகும் காந்தியத்தை கடைப்பிடித்தால் சமூகத்திற்கு நன்மை கிடைக்க முடியும் எனப்படுகிறது.

20ம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் சீர்திருத்தவாதியாகவும் அரசியல் வாதியாகவும் காந்தி குறிப்பிடப்படுகிறார். இந்திய சமுதாயத்தை ஒற்றுமைப்படுத்தி சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்த பெருமை காந்தியையும் அவருடைய சிந்தனையையும் சாரும். இவ் காந்திய கோட்பாட்டில் காந்தியால் குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் அரசியலில் இடம்பெறுவதற்கு முக்கிய வழிகாட்டியாகவும் இருந்துள்ளார்.

அடுத்ததாக மேற்கத்தேய அரசியல் கோட்பாடுகள் பற்றி விரிவாக நோக்குவோம். மேற்கத்தைய அரசியற் கோட்பாடுகள் கிரேக்க காலம் தொடங்கி தற்காலம் வரைக்குமான அரசியற் சிந்தனைகளை உள்ளடக்கியதாகும்.

அரசியல் சிந்தனையின் வரலாற்றில் கிரேக்க காலம் ஒரு பொற்காலமாக கருதப்படுகிறது. ஏனெனில் பிற்கால அரசியற் சிந்தனைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக கிரேக்ககால அரசியற் சிந்தனை காணப்படுகின்றது. இதனால் தான் "மேற்கத்தைய அரசியல் சிந்தனைகளினுடைய தோற்றம் பிளேட்டோ அரிஸ்ரோட்டிலில் இருந்து தொடங்குகிறது என்பதை விட அது அவர்கள் மூலம் உயிர்வாழ்கிறது" என்று சொல்லப்படுகிறது.

கிரேக்க கால அரசியல் கோட்பாட்டின் இயல்புகள் பலவகைத் தன்மையினதாக காணப்பட்டது. அவையாவன இக்காலத்தில் காணப்பட்ட அரசியல் தத்துவமானது அரசைப் பற்றிய ஆய்வாக மட்டுமன்றி ஒழுக்கம் மற்றும் பொது நன்மை என்பவற்றையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. பகுத்தறிவு அடிப்படை கிரேக்கர் கால ஆய்வுகளின் முக்கிய அம்சமாக அமைந்தது. சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தனிமனிதப் பெறுமதிகள் கவனத்தில் கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும் கிரேக்கர் கால சமுதாய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயன்ற போது பெருமளவிற்கு அடிப்படை மாற்றங்கள் எதையும் செய்யவில்லை என்றே கூறிக் கொள்ள வேண்டும். அவர்கள் ஏற்கனவே இருந்து கொண்டிருக்கின்ற முறையில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்து அமைதியை நிலைநாட்டவே விரும்பியிருந்தார்கள். மேலும் பிளேட்டோவும் அரிஸ்ரோட்டிலும் தமது அரசியல் சிந்தனையில் நல்ல அரசு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இதில் பிளேட்டோ "இலட்சிய அரசு" பற்றி குறிப்பிட அரிஸ்டோட்டில் "யதார்த்த அரசு" பற்றி குறிப்பிட்டார். பிளேட்டாவின் புகழ் பெற்ற நூல் "குடியரசு" (The Republic) ஆகும். இந்நூலே இவரது அரசியல்கோட்பாட்டுக்கான அடிப்படையாகும்.

பிளேட்டோவின் பல்வேறு கருத்துக்களில் சோக்கிரட்டீஸின் தாக்கம் காணப்படுகிறது. பிளேட்டோ ஆட்சியாளன் ஞானத்தோடு பிறப்பதில்லை என்றும் அவர்களுக்கு ஞானத்தை ஏற்படுத்துவதற்காக கல்வியினை பயிற்றுவிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். மேலும் இவர் அரசாங்க முறைகள் பற்றியும் கூறியிருக்கின்றார். மேலும் இவர் ஜனநாயக ஆட்சியை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. அதனை ஒரு கும்பல் ஆட்சியாகவே கருதினார்.

பிளேட்டோ குறிப்பிடுகின்ற இலட்சிய அடிப்படையினை அரிஸ்டோட்டில் ஏற்றுக் கொள்ளவில்லை. அரிஸ்டோட்டில் குடும்பம் (Family), கிராமம் குலம் (Village), அரசு (State) இவ்வாறாக சமுதாயமானது மூன்று அலகுகளைக் கொண்டுள்ளது என்றும் மக்களை சமூகப் பிராணி எனவும் இவர் குறிப்பிடுகிறார். அரிஸ்டோட்டிலின் அரசாங்க முறைகள் தொடர்பான வகைப்பாட்டினை நோக்கினால் எண்ணிக்கையோடு ஆட்சியின் தரத்தினையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

கிரேக்க காலத்தில் கல்விக்கு வழங்கிய முக்கியத்துவம் வியக்கத்தக்க ஒன்றாகும். அறியாமை தான் ஒரு சமூகத்தினுடைய சீரழிவிற்கு காரணம் என்றும் அறிவின் வளர்ச்சியிலேயே சமூக மேன்மை தங்கியிருப்பதாகவும் புராதன கிரேக்கத்தில் நம்பப்பட்டது. இதனாலேயே சோக்கிரட்டீஸ் மக்களுடைய அறியாமையை போக்கவும் அவர்களை நற்பிரஜைகளாக்கவும் இறுதிவரை உழைத்தார். "நற்பண்பே அறிவு (VIRTUE IS KNOWLEDGE ) என்பது சோக்கிரட்டீஸ் உடைய மகா வாக்கியங்களில் ஒன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சட்டங்கள் பற்றி முதலில் பேசியவர்கள் கிரேக்கர்களே ஆவர் அரசை ஒரு சட்ட உருவகம் (LEGAL ENTITY) ஒரு அரசினுடைய சிறப்பை அந்த அரசினுடைய சட்டங்கள் வாயிலாகவே மதிப்பிட்டார்கள். அரசு சிறப்பான சட்டங்களை இயற்றி அமுல்படுத்துகின்ற அதே வேளை சட்டத்திற்கு அடிபணிவை வழங்க வேண்டும் என்று கிரேக்க சிந்தனையாளர்கள் வலியுறுத்துகின்றனர். கிரேக்க நகர அரசுகளில் அரசியல் யாப்பு சட்டங்கள் காணப்படுகின்றன. அரிஸ்ரோட்டிலின் Politics என்ற நூல் அடிக்கடி சட்டங்களோடு தொடர்புடைய நூலாக காணப்படுகின்றது.

அரசு பற்றிய ஆக்கபூர்வமான சிந்தனைகளை முதலில் முன்வைத்தவர்கள் கிரேக்கர்கள் ஆவார். கிரேக்க சிந்தனையாளர்கள் அரசை Polity (பொலிரி) என்ற பதத்திலே அழைத்தனர். மேலும் சமூக நல்வாழ்வு பற்றியும், சமூக உரிமைகள் பற்றியும் அரசு எத்தகைய கொள்கையினை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்கள்.

மேலும் நீதி பற்றிய கருத்துக்களின் முன்னோடியாகவும் கிரேக்க அறிஞர்களே காணப்பட்டனர். சட்டமே நீதியின் அடிப்படை என்றும் சட்டத்தினால் உருவாக்கப்பட்டு சட்டத்திற்கு மேற்படாததாக நீதி இருக்க வேண்டும். சட்டத்தை விட மேலானவர்கள் எவரும் இருக்க முடியாது என்ற கிரேக்க அறிஞர்களது கருத்துக்களே நவீன காலத்தில் சட்டவாட்சி உருவாக அடிப்படையாக உள்ளது.

கிரேக்கத்தில் வாழ்ந்த பிளேட்டோவினுடைய கருத்துக்கள் விமர்சிக்கப்படுகின்ற போதும் அவர் கிரேக்க கால பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சித்தமை பாராட்டுக்குரியதாகும். ஒரு நன்மையானதும் நீதியுமான அரசொன்றை நிறுவ முயற்சித்தார். நவீன அரசியல் சிந்தனைகளுக்கு இவரது கருத்துக்கள் அடிப்படையினதாகும். இன்றும் அரசியல் கற்கை நெறியில் பிளோட்டோவின் செல்வாக்கு இருந்து கொண்டே இருக்கிறது.

சட்டத்திற்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் முக்கியத்துவம் வழங்கிய அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் பிளேட்டோவின் கருத்துக்களினை விட பெருமளவிற்கு நடைமுறைச் சாத்தியமானது. ஆயினும் கோட்பாட்டினடிப்படையில் அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் எந்தளவிற்கு பெறுமதியானது என்று நோக்குகின்ற போது பிளேட்டோவின் கோட்பாட்டு அடிப்படை அளவுக்கு இவரது கருத்துக்கள் அமையவில்லை என்கின்ற குறையும் சொல்லப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் பெற்ற கிரேக்க நாகரிகமும் மகாஅலெக்ஸ்சாண்டர் உருவாக்கிய கிரேக்க சாம்ராஜ்யமும் என்றோ மறைந்து விட்டன. ஆனால் கிரேக்க அறிஞர்களுடைய சிந்தனைகளும் அவர்கள் அறிமுகப்படுத்திய அரசியல் நிறுவனங்கள், நடைமுறைகள் என்பவை இன்றும் முக்கியத்துவத்தை இழக்கவில்லை. கிரேக்கத்தின் பின்னர் வந்த உரோமர் காலத்திலும் அதையடுத்து வந்த மத்திய காலத்திலும் இறுதியாக வந்த நவீன காலத்திலும் புராதன கிரேக்கத்தினுடைய செல்வாக்கு மங்கிவிடவில்லை. இன்று நாம் காணுகின்ற ஜனநாயக தத்துவங்களும் நிறுவனங்களும் பற்றிய சிந்தனைகளும் கோட்பாடுகளும் தனிநபர் சுதந்திரம், உரிமைகள் பற்றிய விடயங்கள் யாவும் கிரேக்கர்களுடைய சிந்தனையிலிருந்து தோன்றியதாகும். கிரேக்க அறிஞர்கள் தமது சிந்தனை வளத்தாலும், சேவையும் தியாகமும் நிறைந்த வாழ்க்கையினாலும் கிரேக்கத்திற்கு மட்டுமன்றி முழு உலகத்திற்குமே பல செய்திகளை வழங்கியுள்ளனர்.

புராதன கிரேக்கர் காலம் அரசியல் சிந்தனையில் ஆரம்ப கட்டமாக இருந்தாலும் அதனுடைய தொடர்ச்சியும் வளர்ச்சியும், அரசியல் சிந்தனையின் இறுதிக் காலகட்டமாகிய இன்றைய காலத்திலும் ஊடுருவி நிற்கின்றது.

கிரேக்க காலத்தை அடுத்து வந்த முக்கியமான காலப்பகுதியாக உரோமர் காலம் காணப்படுகின்றது. கிரேக்கர்களை போன்றே உரோமர்களும் உலகம் முழுவதும் பெரும் சாம்ராச்சியத்தை வைத்திருந்தனர். கிரேக்க நாகரிகம் போலவே உரோம நாகரிகமும் உலகப் புகழ்பெற்ற நாகரிகங்களுள் ஒன்றாக காணப்பட்டது. ஆனால் கிரேக்கர் காலத்துடன் ஒப்பிடும் போது உரோமர் காலம் அவ்வளவு சிறப்பானதல்ல. கிரேக்கர்களை போல உரோமர்களிடம் இருந்து பெருந்தத்துவ அறிஞர்கள் உருவாகவில்லை. ஆனால் கிரேக்கர்களுடைய ஒரு தொடர்ச்சியை அவர்கள் முன்னெடுத்தார்கள். கிரேக்க சிந்தனையின் செல்வாக்கு உரோமர்களிடையே அதிகம் காணப்பட்டது. அதே சமயம் சில தனித்துவமான வழிகளிலும் உரோமர்களுடைய பங்களிப்பு காணப்பட்டது.

உரோமர்களிடையே நாம் உலகப் புகழ் பெற்ற சிந்தனையாளர்களை காண முடியாது. மூன்று புகழ் பெற்ற சட்ட அறிஞர்கள் மாத்திரம் பண்டைய உரோமர் காலத்தில் காணப்பட்டார்கள். அவர்கள் சிசறோ (CICERO), பொலிபியஸ் (POLYBIUS) SENECA (செனெகா) என்பவர்கள் ஆவார். ஆனால் சட்டத்துறைக்கு இவர்களுடைய பங்களிப்பு மிக முக்கியமானதாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகிறது. சட்டம் சார்ந்த அரசியல் நிறுவனங்கள் பற்றியும் இவர்கள் தெரிவித்த கருத்துக்கள் முக்கியமானவை ஆகும்.

உரோமர்கள் ஐரோப்பாவிலும் ஏனைய கண்டங்களிலும் தமது சாம்ராச்சியத்தை விரிவுபடுத்தி உள்ளனர். இச்சாம்ராச்சியத்தில் இனம், மதம், மொழி, வரலாறு பண்பாடு போன்றவற்றால் வேறுபட்ட மக்கள் வாழ்ந்து வாழ்ந்தார்கள், இந்த மக்கள் யாவரையும் ஒன்றுபடுத்தி அடிபணிவை வழங்குவதற்கு சட்ட அமைப்பு அவசியமானதாகும். இதனால் உரோமப்பேரரசின் மதமான கிறிஸ்தவம் காணப்பட்ட போதிலும் உரோமர்கள் கிறிஸ்தவ மதத்தையும் கலாசாரத்தையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த மக்களுக்கு திணிக்கவில்லை. கிறிஸ்தவ மத செல்வாக்கு உரோமப் பேரரசில் மிகுந்திருந்த காரணத்தால் பெருமளவிற்கு மதச்சார்பற்ற கோட்பாட்டிலே உரோமர்கள் இத்தாலிக்கு அப்பால் கடைப்பிடித்தார்கள். இந்தப் பின்னணியில் தான் உரோமர்களுடைய சிந்தனைகளும் செயற்பாடுகளும் அமைந்தன.

மரபுகள் வழக்காறுகளுடனும் மதத்துடனும் கட்டுப்படுத்துகின்ற சட்டங்களினை ஒழுங்கு முறையாக தொகுத்தும் புணரமைத்தும் புதிய விதிகளை உள்ளடக்கியும் முதல் முறையாக சிவில் சட்டங்களை உருவாக்கியதும் உரோமர்கள் ஆவார். மேலும் இயற்கைச் சட்டங்கள் என்பவை பற்றி கிரேக்கர்கள் பேசிய போதிலும் அதனை விரிவுபடுத்தி நவீன சட்டங்களின் மூலமாக உருவாக்கியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

நவீன காலப்பகுதியின் ஆரம்பத்தில் உருவாகிய சமூக ஒப்பந்தக் கோட்பாடு மூலங்கள் யாவும் உரோமர் காலத்திலே ஆரம்பித்து வைக்கப்பட்டது. மக்களால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையிலேயே மன்னன் நாட்டை நிர்வகிப்பதாக அறிஞர்களால் (ரோமசட்ட) வலியுறுத்தப்பட்டது. ஆனால் தவறாக நடக்கின்ற மன்னனை அப்புறப்படுத்துகின்ற அதிகாரம் மக்களுக்கு இருப்பதாக அவர்கள் கூறவில்லை. உரோமப் பேரரசை ஆண்ட மன்னர்கள் மக்களால் எவ்விதத்தாலும் கட்டுப்படுத்த முடியாதவர்களாக காணப்பட்டனர். இவ்வகையில் உரோமர்கள் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை ஆரம்பித்து வைத்த பெருமையை பெற்றுக் கொள்ளும் அதேவேளை பூரணப்படுத்தாத நிலையை நாம் காணலாம். மேலும் உரோமர் காலத்தில் காலணித்துவ நிர்வாக முறை, உள்ளூராட்சி அரசாங்க முறை, கலப்பு அரசாங்கம் போன்றன அபிவிருத்திகளுக்கு ஓர் முன்னுதாரணமாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே உரோமர்களுடைய சட்டங்களும் நிறுவனங்களும் இன்று வரை நிலை பெற்று காணப்படுகின்றன. ஜனநாயக அரசாங்க முறைக்கும் உரோமர்கள் அதிகளவு பங்களிப்பினை ஆற்றியுள்ளனர்.

புராதன காலத்திற்கும் நவீன காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதி மத்தியகாலம் என்று அழைக்கப்படுகின்றது. மத்தியகாலமானது சிறப்பான அறிஞர்களையோ கோட்பாடுகளையோ, நிறுவனங்களையோ வழங்கவில்லை. அரசியலதிகாரத்திற்கு தலைமை தாங்கிய மன்னனுக்கும் மத விடயங்களுக்கு தலைமை தாங்கிய பாப்பரசர்களுக்கும் இடையில் அதிகாரத்திற்கும், செல்வாக்கிற்குமிடையிலான போட்டியையே மத்தியகாலம் குறித்து நிற்கிறது. இதன் விளைவால் மத்தியகாலம் என்பது அரசியல் சிந்தனையில் இருண்டகாலம், வறண்ட காலம் என கூறப்படுகிறது. அக்காலத்தில் திருச்சபை உயிரென்றும் மன்னன் உடலென்றும் குறிப்பிடப்படுகிறது. பல சமயங்களில் திருச்சபை தங்கத்திற்கும் மன்னன் வெள்ளிக்கும் ஒப்பிட்டு கருத்துக்கள் கூறப்பட்டன. இத்தகைய வாதங்களினை முன்வைத்தவர்களில் அக்குவைனாஸ் (Acquinas), சலிஸ்பரி (Salisbury) போன்றோர் முக்கியமானவர்கள் ஆவார்.

திருச்சபையினுடைய ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுவிப்பதற்காக முடியாட்சி, தெய்வீக உரிமைக் கோட்பாடு என்பதனை (Divine Right Theory) ஆதாரமாக முன்வைத்தது. மிகவும் பிரபலமான இக்கோட்பாடு மன்னனை கடவுளின் பிரதிநிதியாக கூறியது.

மத்திய கால அரசியல் சிந்தனையின் முக்கியமான இயல்புகளாக மத்திய காலத்தில் திருச்சபை என்பது பிளவுபடாத வலிமையான நிறுவனமாக இருந்தது, மத்தியகால அரசியல் சிந்தனையாளர்கள் யாவருமே கிறிஸ்தவ மத குமார்களே, அறிவியல் சிந்தனைகளோ சீர்திருத்த சிந்தனைகளோ அதிகம் வரவேற்றக்கப்படவில்லை, அரசின் இறைமை என்பது மத்திய காலத்தில் காணப்படவில்லை போன்ற எதிர்மறையான இயல்பினை கொண்டிருந்தாலும் மத்திய காலத்தில் வரவேற்கத்தக்க பண்புகளையும் கொண்டிருக்கின்றன. அவையாவன, மதரீதியாக எவ்வித பிரச்சினைகளும் இன்றி பாப்பரசரே ஐரோப்பாவின் ஏகபோக மதத் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். இவ்வாறு ஐரோப்பாவில் உருவான மத ரீதியான ஒற்றுமை உணர்வே பிற்காலத்தில் சர்வதேச ரீதியான அணுகுமுறையும் நோக்கங்களுக்கும் வளர்ச்சி பெற காரணமாகியது. மேலும் மத்தியகாலமானது நவீன ஜனநாயகத்தின் பிரதிநிதித்துவ முறைக்கும் வழிகாட்டியது மேலும் மத்திய காலத்தில் ஹில்ட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Guild) என்ற பெயருடைய வர்த்தக அமைப்புக்கள் காணப்பட்டன. இது நவீன காலத்திற்கும் சில முன்மாதிரிகளை வழங்கின.

மத்திய காலமானது கிரேக்க, உரோம காலத்தை போன்று முக்கியத்துவத்தையோ சிறப்பையோ கொண்டிருக்கவில்லை. எனினும் சில வரவேற்கத்தக்க பண்புகளை மத்தியகாலம் கொண்டிருந்தது உண்மையாகும்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த மாக்கிய வெல்லி அரசியல் சிந்தனையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவராக கருதப்படுகிறார். மத்தியகால அரசியல் சிந்தனையிலிருந்து நவீன காலத்தை நோக்கி அரசியல் சிந்தனையை நகர்த்தியவர் மாக்கியவெல்லி ஆவார். இதனாலேயே நவீன அரசியல் கோட்பாட்டின் தந்தையாக இவரை குறிப்பிடுகின்றனர். கால சூழ்நிலைக்கேற்ப மரபு ரீதியான அரசியல் கருத்துக்களிலிருந்து விடுபட்டு நவீன அரசியற் கருத்துக்களின் அபிவிருத்திக்கு வழிகாட்டியாக திகழ்ந்தார். கிறிஸ்தவ மதத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு புதிய தேசிய அரசுகளின் நிலையை உறுதிப்படுத்துவதிலும் முன்னின்று உழைத்தார். மாக்கிய வெல்லியின் குறிக்கோள் இத்தாலியினுடைய ஐக்கியமும் பலம் வாய்ந்த முடியாட்சியுமாகும்.

மாக்கியவெல்லி ஏராளமான நூல்களை எழுதினார். அவற்றுள் "இளவரசன்" (1513), "போர்க்கலை", "பிளாரன்ஸ் வரலாறு" ஆகியவை மிகவும் புகழ் பெற்றதாகும். இந்த நூல்கள் அனைத்திலும் "இளவரசன்" என்ற நூலில் 26அத்தியாயங்களில் தனது சிந்தனையை முன்வைத்தார். "இளவரசன்" நூல் விசேட நோக்கம் ஒன்றை மனதிற் கொண்டு அதனை நிறைவேற்றுவதற்காக முன்வைக்கப்பட்ட மாக்கியவெல்லியின் கருத்துக்களாகும். எனவே அது அறிவியல் பூர்வமாக முன்வைக்கப்பட்ட அரசியற் கோட்பாடல்ல என விமர்சிக்கப்படுகின்றது.

ஆட்சியாளன் சிங்கத்தை போன்று வீரமுள்ளவனாகவும் நரியை போன்று தந்திரமானதாகவும் இருக்க வேண்டும், மாக்கியவெல்லி மக்களை அறிவு ரீதியாக சிந்தித்து முடிவெடுப்பவர்களாக ஒரு போதும் கருதவில்லை, மன்னன் வள்ளலாக இருப்பதை தீங்கானதாக குறிப்பிடுகிறார். மக்களுடைய அபிமானத்தையும் அன்பையும் பெற மன்னர்கள் முற்படக்கூடாது, நல்ல ஆலோசகர்களை பெறாத அரசன் ஒருபோதும் ஆட்சியில் நீடிப்பதில்லை, மாக்கியவெல்லி அரசியலில் எவரையும் நிரந்தர விரோதியாகவோ அல்லது நிரந்தர நண்பனாகவோ கருதவில்லை, ஆட்சிக்கலை என்பது இரகசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுவதிலேயே தங்கியுள்ளது போன்ற சிந்தனைகளை மாக்கியவெல்லி கூறினார்.

மனித இயல்பு பற்றி மாக்கியவெல்லி குறிப்பிடுகின்றபோது மிருகங்களோடு ஒத்ததான பேராசை கொண்ட சுயநலமிக்கவனாக கூறுகிறார். மேலும் இவர் ஒழுக்கத்தை கருத்திற்கொள்ளாமல் அதிகாரத்தினை முதன்மைப்படுத்தி அதனை அடைவதையே நோக்கமாக மாற்றியவர். இவர் அரசாங்கங்களை வகைப்படுத்தி நல்லவை, தீமையான அரசாங்கங்கள் என கூறினார்.

வரலாற்றில் முதல் தடவையாக மத சிந்தனையை புறக்கணித்து நோக்கமே வழிமுறைகளை தீர்மானிக்கிறது எனக் கூறினார். தேசியவாதம் மற்றும் தேசிய அரசுகளின் எழுச்சிக்கு இவரது கருத்துக்கள் முக்கியமானவை. தேசியவாத எண்ணக்கருவின் தோற்றத்திற்கு அடித்தளமிட்டவர்களுள் இவரும் முக்கியமானவர். இவர் பற்றிய விமர்சனங்களும் ஏராளமானவை உண்டு. அதாவது மக்களாட்சி பொருந்தாது, மக்கள் உளவியல் ரீதியில் தாழ்ந்தவர்கள் போன்ற கருத்துக்கள் விமர்சனத்திற்கு உள்ளானவை. எனினும் அரசியல் கோட்பாடுகளது செல்நெறியை ஒரு புதிய திசையை நோக்கி திருப்பியவர் இவரே. இதனாலேயே நவீன அரசியல் கோட்பாட்டின் தந்தையாக கௌரவிக்கப்படுகிறார்.

மறுமலர்ச்சிக்கு பிற்பட்ட கால அரசியல் கோட்பாடுகளான சமூக ஒப்பந்தக் கோட்பாடு, தாராண்மைவாதக் கோட்பாடு, மார்க்ஸிசம், பாஸிசம், பின் நவீனத்துவ அரசியல் சிந்தனைகள், லஸ்கியின் சிந்தனைகள் போன்றன முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக காணப்படுகின்றன. இவற்றினை சற்று சுருக்கமாக நோக்குவோம்.

அரசின் தோற்றம் பற்றி விளக்குகின்ற பல்வேறு கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று சமூக ஒப்பந்தக் கோட்பாடு ஆகும். மனிதர்களிடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாகவே அரசு தோன்றியது என்பது இதன் கருப்பொருளாகும். "ஹொப்ஸ், ஜோன்லொக், ரூசோ" போன்றோர் இக் கோட்பாட்டினை முன்வைத்தார்கள்.

"இம் மூவரும் மூன்று வேறுபட்ட கருத்துக்களை முன்வைக்கவே இக்கோட்பாட்டை பயன்படுத்தினர். கொப்ஸ்வரம்பற்ற முடியாட்சியை நிலைநிறுத்தவும், லொக் வரம்புடைய முடியாட்சியை நிலைநிறுத்தவும், ரூசோ மக்கள் இறைமை பொருந்திய மக்கள் ஆட்சி சிறந்தது என்று குறிப்பிடவும் இக் கோட்பாட்டினை பயன்படுத்தியுள்ளனர். எனினும் மூவரின் கருத்துக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாகும். தோமஸ் கொப்ஸ் "லேவியாதன்" என்ற நூலினூடாக தனது கருத்துக்களை முன்வைத்தார். லொக் "சிவில் அரசாங்கத்தினுடைய இரு உடன்படிக்கைகள், சகிப்புத் தன்மை தொடர்பான 4 கடிதங்கள்" என்பவை மூலமாகவும் ரூசோ "சமூதாய ஒப்பந்தம், எமிலி" போன்ற நூல்களினூடாக தமது கருத்தை தெரிவித்தனர்.

ஆரம்ப காலங்களில் சோக்கிரட்டீஸ் சமூக ஒப்பந்தம் பற்றிய கருத்துக்களினை நிராகரித்த போதிலும் பிளேட்டோ மற்றும் கௌடில்யர் கருத்துக்களில் சமூக ஒப்பந்தங்கள் பற்றிய சிந்தனைகள் காணப்பட்டிருந்தன. மேலும் உரோமானிய காலத்திலும் இதன் பண்புகள் காணப்பட்டிருந்தன.

சமூக ஒப்பந்தக் கோட்பாடு அரசு எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதனை விளக்குகின்றது. மக்களினால் செய்து கொள்ளப்பட்ட சமூக ஒப்பந்தம் ஒன்றின் விளைவாகவே அரசு தோற்றம் பெற்றது என்பதினை இக்கோட்பாடு குறிப்பிடுகின்றது.

அரசின் தோற்றம் பற்றிய சமூக ஒப்பந்தக் கோட்பாடு அரசு அரசாங்கம், இறைமை பற்றிய எண்ணக் கரு, ஆட்சிமுறை பற்றிய கருத்துக்கள், ஜனநாயக அடிப்படை என்பன வளம் பெறுவதற்கு துணை புரிந்துள்ளது.

சமூக ஒப்பந்தம் ஒன்றின் மூலமாக அரசு தோற்றம் பெற்றது என்ற கருத்தை முதன் முதலில் கோட்பாட்டு ரீதியாக சொன்ன பெருமை ஹொப்ஸ்க்கு உரியது. மேலும் தர்க்க ரீதியாகவும் பகுத்தறிவு ரீதியாகவும் கருத்துக்களை முன்வைத்தவராகவும் இவர் காணப்படுகிறார்.

லொக்கினை குறிப்பிட்டால் தாராண்மைவாத கோட்பாட்டின் தந்தையாக போற்றப்படுகிறார். பாராளுமன்ற ஜனநாயகத்தின் குறியீடாகவும் இவர் இருக்கிறார்.

ரூசோ பற்றி நோக்கினால் தற்கால அரசியல் சிந்தனை வரலாற்றில் இவருக்கு முக்கியமான இடம் காணப்படுகின்றது. சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையிலான அரசு, மக்கள், இறைமை, அரசியல் சமுதாயம், பொதுவிருப்பு, மற்றும் மக்களாட்சி பற்றி இவர் தெரிவித்த கருத்துக்கள் பிற்கால நவீன அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளன.

தாராண்மை வாதக் கோட்பாடு பற்றி நோக்கினால் அரசு என்பது தாராண்மையின் படி "லிபரலிசம்" என்ற இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். அரசு செயற்கையாக தோற்றுவிக்கப்பட்டதோ அல்லது நிச்சயமான காரணிகளினடிப்படையில் தோன்றியதோ அன்று, அது சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை வளர்ச்சியின் விளைவில் தோன்றியது என குறிப்பிடப்படுகின்றது. இக்கோட்பாடானது மனிதன் தோற்றுவித்த சமூக நிறுவனங்களுள் உயர்ந்த நிறுவனமே அரசு என கூறுகிறது.

தாராண்மை கோட்பாட்டின்படி அரசு பொதுவான இயல்பினைக் கொண்டிருந்தாலும் அரசியல், சமூக, பொருளாதார காலோட்டத்திற்கு ஏற்ப தலையிடா அரசுக் கொள்கை, நலன்புரி அரசுக்கொள்கை, குறைந்தபட்ச அரசுக் கொள்கை என தனது வடிவத்தை காலத்திற்கு காலம் மாற்றியமைத்துள்ளது.

தாராண்மை கோட்பாடானது அரசுக்கு எதிர்காலம் நிச்சயமானது என்றும் ஆனால் சிற்சில மாற்றங்களுக்கு உட்பட்டாலும் நிரந்தரமாக நிலைத்திருக்கும் என்றும் சமூகத்தின் தேவைகள் இருக்கும் வரை அரசும் நிலைத்திருக்கும் எனவும் கூறுகின்றது.

நவீன அரசியல் சிந்தனை வரலாற்றில் கால்மாக்ஸ் மிகவும் முக்கியமானவராவார். வரலாற்றை மாற்றியமைத்த முக்கியமான ஆவணங்களில் கம்யூனிஸக்கட்சி அறிக்கையும் ஒன்றாகும். மார்க்சிசக் கோட்பாடு முதலாளிகள் தொழிலாளிகள் என்பவர்களுக்கிடையிலான சமத்துவமின்மையை எடுத்துக்காட்டி அதனை விளக்கப்படுத்தி அதற்கான தீர்வினையும் வலியுறுத்துகின்றது. இத்தீர்வு நடைமுறைக்கு சாத்தியமாக இருந்ததால் இக்கோட்பாடு **விஞ்ஞான சோசலிசம்** என்று அழைக்கப்படுகிறது.

மாக்சிசக் கோட்பாடானது பொருளாதார அடிப்படை, இயக்கவியல் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வரலாற்றினை 5 கால கட்டங்களாக பிரித்து (புராதன கம்யூனிச சமுதாயம், அடிமைமுறை சமுதாயம், நிலமானிய முறை சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம் மற்றும் கம்யூனிச சமுதாயம்) மார்க்சிசக் கோட்பாட்டினை முன்வைக்கின்றார். மாக்சிசக் கோட்பாட்டில் மிக முக்கிய அம்சமாக புரட்சி குறிப்பிடப்படுகின்றது.

கம்யூனிச சமுதாயத்தில் சொத்துடைமை தோற்றம் பெறாததால் சுரண்டல் இருக்காது, வர்க்க வேறுபாடு இருக்காது, சமத்துவம் நிலவும் என கால்மாக்ஸ் குறிப்பிடுகின்றார். எனவே பொருளாதாரக் காரணிகள் இயக்கவியல் அடிப்படையில் வரலாற்று மாற்றங்களை ஏற்படுத்துகின்றது எனக் கூறி இதனடிப்படையில் கம்யூனிச சமுதாயத்தின் தோற்றத்தை கால்மாக்ஸ் வலியுறுத்துகின்றார்.

நவீன அரசியற் கோட்பாடுகளில் பாஸிசக்கோட்பாடும் முக்கியமானதாகும். பாஸிச அரசு பற்றிய சிந்தனையானது தீவிரவாதம், அதிகாரத்தன்மை, தேசியவாதம் என்பவற்றின் சேர்மானக் கோட்பாடு ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பொதுவாக கம்யூனிசத்தை ஏதிர்க்கின்ற ஒன்றே பாஸிசம் ஆகும்” கட்டற்ற லிபரல் வாதமானது வறியவர்களுக்கு தீங்கானது அதுபோலவே கம்யூனிசம் கடுமையான அரச கட்டுப்பாடு கொண்டது எனவே அரசு பற்றிய பாஸிச சிந்தனையே சிறந்தது என முசோலினி குறிப்பிடுகின்றார். கொள்கை எதிர்ப்பு, தர்க்கரீதியற்ற தன்மை, போர்புரியும் தன்மை பேன்ற பண்பினை பாஸிசக் கோட்பாடு வலியுறுத்துகிறது.

21 ஆம் நூற்றாண்டில் நவ மார்க்ஸிசம், நவதாராண்மை வாதம் போன்ற புதிய கோட்பாடுகள் தோற்றம் பெற்றன. இதற்கு லஸ்கி, கிராம்சி போன்ற அரசியல் சிந்தனையாளர்கள் முக்கிய பங்காற்றினர்.

ஆரம்பகால அரசியல் கோட்பாடுகளிலிருந்து புதுப்பிக்கப்பட்ட 21 ஆம் நூற்றாண்டின் நவீன கால அரசியற் கோட்பாடு பல வழிகளில் வேறுபடுகிறது. நவீன கால அரசியற் கோட்பாடு புதிய போக்குகளைக் கொண்டு வளர்ச்சியடைந்தது. உதாரணமாக குறிப்பிட்டால் இது துருவ அரசியல் நிலையினை தோற்றுவித்தது. 21 ஆம் நூற்றாண்டின் அரசியல் கோட்பாடு 1960 களின் பின்னர் புதிய உயிர்ப்புடன் மீள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் நடத்தைவாத புரட்சி ஏற்படுத்திய தாக்கம் முக்கியமானதாகும்.

கீழைத்தேய மற்றும் மேலைத்தேய அரசியல்கோட்பாடுகள் பற்றி ஒப்பிட்டு நோக்குவோம். மேற்கத்தைய அரசியல் கோட்பாடானது உலகளாவிய ரீதியில் ஆதாரங்களின் அடிப்படையில் அரசியல் அறிஞர்களால் ஏற்கப்பட்டு பலம்மிக்கதாக இருப்பதைக் காணலாம். ஆனால் கீழைத்தேய அரசியல் கோட்பாடுகள் ஆரம்ப காலத்தில் அவ்வாறு உலகளாவிய ரீதியில் அரசியல் அறிஞர்களால் அங்கிகரிக்கப்படவில்லை.

மேற்கத்தைய அரசியற் கோட்பாடுகள் அக்காலத்தில் காணப்பட்ட அரசியற் பிரச்சினையை தீர்ப்பதற்காக தோன்றியதாகும். ஆனால் கீழைத்தேய அரசியல் கோட்பாடுகள் நேரடியாக அரசியற் சிந்தனைகளாகவன்றி சமய சிந்தனைகளை பிரதிபலிக்கும் நூல்களிலே இடம்பெறுவதை காணலாம்.

கீழைத்தேய அரசியல் கோட்பாடுகளின் வரலாறு தொடர்பாகவும் உறுதியான உடன்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. ஆயினும் மேலைத்தேயத்தில் கோட்பாடுகளின் வரலாறு உறுதியாக அறிஞர்களால் ஏற்கப்பட்டிருக்கின்றது.

ஓரளவுக்காவது கீழைத்தேய அரசியல் கோட்பாடுகளை மேற்கைத்தேய அரசியல் கோட்பாடுகளுடன் ஒப்பிடக் கூடிய அளவுக்கு இட்டுச் செல்கின்ற பெருமை இந்து மதத்தையே சாரும். அதிலும் குறிப்பாக கௌடில்யரையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரும். மேலைத்தேய அரசியல் கோட்பாடுகளின் தொடக்கத்தினை கீழைத்தேய அரசியல் கோட்பாடுகள் பிரதிபலிப்பதைக் காணலாம்.

எனவே பொதுவாக அரசியற் கோட்பாடுகள் காலமாற்றத்திற்கேற்றவாறு அபிவிருத்தியடைய வேண்டும் என குறிப்பிடப்படுகிறது. மேலும் சுதந்திரம், நீதி, பொதுநன்மை என்பவற்றை விட்டு விலகி காலமாற்றத்திற்கேற்றவாறு விடயங்களினை உள்வாங்கி வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது.

அரசியல் கோட்பாடுகள் எத்தன்மையினதாக இருக்க வேண்டும் என்பதிலும் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. அதாவது யதார்த்த அடிப்படையிலா அல்லது இலட்சியவாத அடிப்படையிலா நடைமுறை விடயங்களை பிரதிபலிக்க வேண்டுமா என்றவாதம் முக்கியம் பெறுகின்றது. இவ்வாறான விடயங்கள் அரசியல் கோட்பாட்டின் விமர்சனங்களாக கருதப்படுகின்றன.

எனினும் அரசியற் கோட்பாடானது இன்றியமையாத ஒன்றாகவும் அரசியற் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் வெளிக்கொணரும் ஊடகமாக இருக்கின்றது என நான் கருதுகின்றேன். மேலும் கீழைத்தேய அரசியற் கோட்பாடுகளும் மேலைத்தேய அரசியற் கோட்பாடுகளும் அரசறிவியல் பாடப்பரப்பில் இன்றியமையாத ஒரு பகுதியாக காணப்படுகிறது.

அரசியல் கோட்பாடுகள் தற்கால அரசியல் சமூக நிலையை விளக்குவதால் பொதுக்கொள்கை உருவாக்கவும், சட்டவாக்கத்திற்கும் உதவுவதாகவும் காணப்படுகிறது. இவ் அரசியற் கோட்பாட்டினால் அரசியலை எவ்வாறு கற்பது என்பதை அறியவும் மிகவும் துணையாகவுள்ளது என நான் கருதுகிறேன். அரசியற் கோட்பாடானது அரசியல் கல்வியின் அபிவிருத்தி மற்றும் நிலைத்தல் தன்மைக்கும் அரசாங்க முறையின் அபிவிருத்திக்கும் ஆரோக்கியமான அரசியல் விவாதத்திற்கும் மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

பாஸ்கரன்.ச, (2019), அரசியற் கோட்பாடுகளும் சிந்தனையாளர்களும், குமரன் புத்தக இல்லம்.

சிவராசா.அ, (1989), நவீன அரசியற் கோட்பாடுகள், பட்டப்படிப்புக்கள் கல்லூரி, 148/1, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

அருந்தவராஜா.க, (2018), "அரசியற் சிந்தனையாளர்கள், அஞ்சு வெளயீட்டகம் நல்லூர்.

குணரத்தினம்.வே, (2009), "அரசறிவியல்", குமரன் புத்தக இல்லம்.

ராஜகோபால்.என்.ஜே, (1960), "அரசியல் கோட்பாடுகள்", சாந்தி பிரசில் சென்னை

Plant.R, (1991), "modern Political thought", ox ford Blackwell.

சண்முகலிங்கம்.க, (2009), "நவீன அரசியல் சிந்தனை – ஓர் அறிமுகம்", குமரன் புத்தக இல்லம்

யோதிலிங்கம்.சி.அ.(2016), "அரசறிவியல் ஓர் அறிமுகம்", குமரன் புத்தக இல்லம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தியாவில் பெண்களுடைய சமத்துவம் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்க.**

உலகம் ஆண், பெண் இருவராலும் ஆக்கப்பட்டது. ஆண், பெண் சேர்ந்த ஒன்றே உலகம் ஆகும். "இவ்வுலகில் பெண்ணுரிமை என்பது ஆணுடன் போர்புரிவதன்று" எந்த நாட்டில் பெண்ணுக்கு மதிப்பும் பெருமையும் இருக்கின்றதோ அந்த நாடு முன்னேற்றம் பெற்ற நாடாக உயரும்.

பாலின சமத்துவமின்மை (Gender inequality) என்பது ஆண்களும் பெண்களும் சமமாக நடாத்தப்படாத செயல்முறையாகும். சமத்துவமின்மை தொடர்பான வேறுபாடுகள் சில அனுபவ ரீதியாகவும் மற்றயவை சமூக ரீதியாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளதாக கருதப்படுகின்றது. கல்வி, ஆளுமை, குடும்ப வாழ்க்கை, தொழில் மற்றும் அரசியல் உட்பட்ட பல துறைகளில் பாலின வேறுபாடு இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வரலாற்று ரீதியாக பெண்கள் எப்பொழுதும் சமுதாயத்தில் ஒரு அடிபணிந்த பதவியினையே ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஆண்களுக்கு படிப்பு மற்றும் அரசியல் பங்கேற்பு உரிமை உண்டு, பெண்கள் வீட்டைக் கவனித்துக் கொண்டார்கள், முடிவெடுப்பதில் எந்தக் கருத்தும் தெரிவிக்க முடியாமை போன்ற நிலையே ஏற்பட்டது. பல நூற்றாண்டுகளாக பெண்கள் தாழ்ந்தவராகவும் திறமையற்றவர்களாகவும் கருதப்படுகிறர்கள்.

பண்பாட்டு ரீதியாக ஆணாதிக்கத்தில் வேரூன்றி பெண் சமர்ப்பிப்பு என்பது சமூகத்தில் வாழ்க்கையின் தொடக்கத்திலிருந்தே வருகின்றது. தாய்மையுடன் தொடர்புடைய பெண் கீழ்ப்படிதல் மற்றும் அடிபணிதல் ஆகிய சமூக பாத்திரத்தை ஏற்றுக் கொண்டார்கள். அதில் வீடு, குழந்தைகள், அவர்களது கணவரின் கவனிப்பு ஆகியவை அடங்கும். இன்று இந்த மனநிலை மறுக்கப்பட்டிருந்தாலும் இன்றைய சமூகம் அந்த சிந்தனைகளின் விளைவுகளை இன்றும் கொண்டுள்ளது.

எனவே உலகெங்கிலும் பெண்கள் சமத்துவம் தொடர்பான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள். அந்தவகையில் இந்தியாவிலும் பெண்களுடைய சமத்துவம் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வது இங்கு பொருத்தமுடையதாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

இந்தியாவில் கல்வி பெற்றுக் கொள்வதில் பெண்களுக்கு சமத்துவமின்மை காணப்பட்டு வருகின்றது. பெண்கள் கல்வி கற்கும் விகிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53.63% மட்டுமே பெண்கள் படிப்பறிவு பெற்றவர்களாக காணப்படுகின்றனர். ஆண்கள் ஏறத்தாழ 20% விட அதிகமாக கல்வியறிவு பெற்றவர்களாக காணப்படுகின்றனர். இதற்கு காரணம் பெண்கள் படிப்பதற்கு என்ன இருக்கின்றது என்கின்ற மனோநிலையும் ஆணாதிக்க சிந்தனையுமே காரணமாக அமைந்து இருக்கிறது. அத்தோடு வீட்டு வேலைகளுக்கு துணையாக இருப்பதற்கு பெற்றோர்கள் பெண் பிள்ளைகளை பாடசாலைக்கு செல்ல விடாமல் இடைமறிப்பது அத்தோடு பருவமடைந்த பெண்களினை பாடசாலைக்கு விடக்கூடாது என்கின்ற எண்ணங்களும் காரணமாக அமைகின்றன. இந்தியாவில் கேரளாவில் 92% உத்தரபிரதேசத்தில் 42.2% தமிழகத்தில் 73% பீகாரில் 33.1% காணப்படுகிறது. இந்தியாவில் கேரளாவிலும் தமழகத்திலும் ஓரளவு அதிகமாக பெண்கள் கல்வியினை பெற்றுக் கொள்கின்றனர் என மகிழ்ச்சியடைந்தாலும் பீகாரும் உத்தர பிரதேசத்திலும் மிகவும் குறைந்த அளவிலே பெண்கள் கல்வியறிவினை பெறுகின்ற சூழல் காணப்படுகின்றது.

இந்தியாவில் பெண் சமத்துவமின்மைக்கு சிறந்த எடுத்துக் காட்டாக அங்கு பெண் சிசுக் கொலை அதிகமாக காணப்பட்டு வருகின்றது. பெரும்பாலான நாடுகளில் காணப்படுவதைப் போல அல்லாமல் இந்தியாவில் ஆண்களுக்கு நிகரான பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது என ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு உதவி அமைப்பு இந்தியாவில் பெண்களின் நிலை பற்றிய ஆய்வொன்றில் வெளியிட்டுள்ளது. அதாவது 1000 ஆண்களுக்கு 927 பெண்கள் தான் இந்தியாவில் உள்ளனர். இதற்கு காரணம் உலகத்தை காண்பதற்கு முன்பே பெண் குழந்தைகளை கருவிலே அழிக்கப்படல், பெண் சிசுக் கொலை போன்றனவே ஆகும். இந்திய சமூதத்தினரிடையே இன்னமும் பெண் குழந்தையை பாரமாகவும் சுமையாகவும் தரித்திரமாகவும் எண்ணி வருகின்ற போக்கு காணப்பட்டு வருகின்றது. பெண் சிசுக் கொலை இந்தியாவில் மஹாராஷ்ரம், ஜம்புஹாஷ்மீர், Haryana போன்ற இடங்களில் அதிகமாகக் காணப்பட்டு வருகின்றன.

ஆண் குழந்தையை விட பெண் குழந்தைக்கு சத்துணவு குறைவாகவே கிடைக்கிறது. பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள், பலவீனமாகவும், நோய் எதிர்ப்பு சக்தி அற்றவர்களாகவும் உள்ளனர். இந்தியாவில் குடும்பத்தில் அனைவரும் சாப்பிட்ட பின்னர் கடைசியாகவும், மீதமிருப்பதையும் உண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் பெண்கள் பலர் உள்ளனர். இவ்வாறான பழக்க முறைகள் பெண்களை அடிமைத்தனமாக்கும் போக்கினை இன்னமும் வலுப்படுத்துவதாக காணப்படுகின்றது.

யுனிசெப் நிறுவனத்தின் அறிக்கையின் படி இந்தியாவில் சிறுவயது திருமணம் அதிகமாக இடம்பெறுகின்றது என கூறுகின்றது. இதற்கு காரணம் பெண்களுக்கான சமத்துவமின்மையே ஆகும். இந்தியாவில் 223 மில்லியன் சிறுவயது திருமணம் இடம் பெறுகின்றது. இந்தியாவில் 102 மில்லியன் பெண்கள் 15 வயதிற்கு முதல் திருமணமாகின்றது. 121 மில்லியன் பெண்களுக்கு 18 வயதுக்கு முதல் திருமணமாகின்றது. இந்தியாவில் சிறுவயது திருமணம் உத்தரபிரதேஷ் 36 மில்லியன் பீகார் 22 மில்லியன், மேற்கு வங்காளம் 22 மில்லியன், மஹாராஷ்ரா 10 மில்லியன், மத்திய பிரதேஷ் 16 மில்லியன் பெண்கள் அதிகமாக சிறுவயது திருமணத்திற்கு உள்வாங்கப்படுகிறார்கள். இந்தியாவில் சிறுவயது திருமணத்தினால் அதிகளவு பிரச்சினைகளை பெண்கள் எதிர் நோக்குகின்றார்கள். அதாவது கருக்கலைப்பு, அங்கவீனமான பிள்ளைகள் பிறத்தல், வாழ்வாதார பிரச்சினை, சுகாதார சீர்கேடுகள், விபச்சாரத்தில் பெண்கள் ஈடுபடுதல் போன்ற பிரச்சினைகளை பெண்கள் எதிர்கொள்கின்றார்கள்.

இந்தியாவில் வீடுகள், நிறுவனங்கள் போன்றவற்றில் மிகக் குறைந்த சம்பளத்திற்கு பெண்கள் பணியமர்த்தப்படுகின்றார்கள். வீடுகளிலும் ஆண்களை விட பெண்கள் அதிக நேரங்கள் வேலை செய்கின்றனர். சம்பளமும் அங்கிகாரமும் இன்றி எத்தனையோ பெண்கள் வீடுகளில் அடிமைகளைப் போல் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். ஆணும் பெண்ணும் பணியாற்றும் ஒரே நிறுவனத்தில் ஆணை விட பெண்ணுக்கு குறைந்த சம்பளமே அளிக்கப்படுகின்றது.

பெண்கள் வேலை செய்யும் தளங்களில் பெண்கள் என்கின்ற காரணத்தினால் அங்கு அவர்களுடைய கருத்துக்களினை செவிசாய்க்காமை, திருமணமானவரா திருமணமாகாதவரா என்பதைப் பார்த்து வேலை கொடுக்கப்படுகின்றது, பால் ரீதியான தொந்தரவுகள், பாரபட்ஷம் போன்ற பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றார்கள், இவ்வாறு வேலைத்தளங்களில் பெண்களுக்கெதிரான பாகுபாட்டில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் குறிப்பிட்ட இடங்களுக்கு பெண்களை அனுமதிப்பதில்லை. இதற்கு பின்னால் இருக்கும் காரணங்கள் என்னவென்று பார்த்தால் தூய்மையின்மை, ஆண் கடவுள்களை கோபப்படுத்துவது என வலுவில்லாத காரணங்கள் காணப்பட்டு வருகின்றது. இந்தியாவில் பெண்கள் நுழைய அனுமதியில்லாத இடங்களாக சனி ஷிங்னாபூர் பாறை தெய்வம், நிஜாமுதீன் தர்கார் உள் அறை, சபரிமலை - ஐயப்பன் கோயில், கார்த்திகேயர் கோவில் போன்ற இடங்கள் அதிகமாக காணப்பட்டு வருகின்றன. இதனால் பெண்களுக்கு வெறுப்புத்தன்மை, விரக்த்தி, மன அழுத்தம் என்பன ஏற்பட்டு வருகின்றன என்றே கூறிக்கொள்ள வேண்டும்.

இந்தியாவில் பெண் உறுப்பு சிதைப்பு ஒரு, சடங்காகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு, மஹாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்த்தான் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் அதிகமாக இச் சடங்கு காணப்பட்டு வருகின்றது. இந்த சடங்கு "கா.ஃ.ப்டா" என்றும் அழைக்கப்படுகின்றது. இச் சடங்கின் போது சிறுமிகளின் பெண் உறுப்பின் வெளிப்புறம் வெட்டப்படும் அல்லது வெளித்தோல் அகற்றப்படும் என ஐ.நா வின் விளக்கம் கூறுகின்றது. இச் சடங்கு செய்வதற்கான காரணங்களினை தொடர்ந்து மாற்றிக் கொண்டே வருகின்றார்கள் இந்திய சமூகத்தினர். முதலில் தூய்மைக்காக என்றார்கள். பின்னர் பாலுணர்வை கட்டுப்படுத்த என்கிறார்கள். இப்போது அதற்கும் எதிர்ப்பு கிளம்பிய பின்னர் பாலுணர்வினை அதிகரிக்கவே இது செய்யப்படுகின்றது என்கிறார்கள். இவ்வாறு பெண் உறுப்பு சிதைப்பின் மூலம் பெண்கள் உடல் நலத்தை மட்டுமல்லாது மன நலத்தையும் பாதிக்கிறது. இது பின்னாட்களில் அவர்கள் பாலுறவின் மூலம் மகிழ்ச்சியடைவதனையும் தடுக்கின்றது. இந்தியாவில் பெண் உறுப்பு சிதைப்பு நடப்பதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தில் ஆவணங்கள் எதுவும் இல்லை. அதனால் அரசு இந்த நடைமுறைக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க முடியாது என்று கூறப்படுகின்றது. ஆகவே பெண் உறுப்பு சிதைப்பை ஒரு குற்றமாகவே கருதாத நாட்டில் எப்படி அதற்கான குற்ற ஆவணங்கள் இருக்க முடியும். எனவே இந்தியா இதனைப்பார்க்கும் பொழுது பெண்களுக்கெதிரான சமத்துவமின்மையிலும் வன்கொடுமையிலும் உச்சமாகவே காணப்படுகின்னறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் பெண்களுக்கு சமத்துவமின்மையினால் பெண்கள் தமது உரிமைகளினைக் கூட சுதந்திரமாகக் கூறும் நிலையில் இல்லாமல் காணப்பட்டு வருகின்றது. இந்தியாவில் பெண்ணுரிமை மிகவும் பாதிக்கப்படும் மாநிலமாக ராஜஸ்தான் உள்ளது. இங்கு 0.98% பெண்கள் மட்டுமே தங்களின் உரிமைகளை சுதந்திரமாக கூறும் நிலையில் உள்ளனர். மேலும் பஞ்சாப் மாநிலத்தில் 1.14%, பீகாரில் 1.19% மட்டுமே பெண்கள் உரிமைகளினை சுதந்திரமாக அனுபவிக்கின்றனர் என்பது கவலைக்குரிய ஒரு விடயமாகக் காணப்பட்டு வருகின்றது. ஆனாலும் மணிப்பூரில் 96% பெண்கள் சுதந்திரமாக தங்களின் உரிமைகளை கூறும் நிலை காணப்படுகின்றது என்பது மகிழ்ச்சியான ஒரு விடயமாக காணப்படுகின்றது.

2018 இல் செப்டம்பர் மாதம் பிரபல மருத்துவ இதழான லான்செட்டில் "பாலின வேறுபாடு மற்றும் இந்தியாவில் தற்கொலை மரணங்களின் நிலைமாற்றம் உலகலாவிய நோய் பெரும் சுமை குறித்த ஆய்வு வெளியானது." அந்த அறிக்கையில் கடந்த 2016 இல் மட்டும் ஒரு லட்சத்திற்கு 15 பேர் என்ற கணக்கில் இந்தியாவில் பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது உலக அளவில் பெண்கள் தற்கொலையின் சராசரியை விட 2.1 மடங்கு அதிகமாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பெண்களின் தற்கொலை அளவில் இந்தியா ஆறாவது இடம் வகிக்கின்றது என்றும் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறு பெண்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு காரணங்கள் பெண்கள் வீட்டிலும், வீட்டிற்கு வெளியிலும் பல்வேறு வன்முறைகளை தாங்கிக்கொள்ள முடியாத சூழ்நிலைகள், வரதட்சனைக் கொடுமைகள் போன்றவற்றினை கூறிக்கொள்ளலாம். இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம் ஆணாதிக்க சிந்தனைகளே ஆகும். ஆணுக்கு சமனாக பெண்களை நினைக்காமை ஆகும்.

காவல்துறை புள்ளி விவரத்தில், இந்தியாவில் ஒவ்வொரு நிமிடத்திற்கும் 26 பெண்கள் வன்முறைத்தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். ஒவ்வொரு 34 நிமிடத்திற்கும் ஒரு பெண் கற்பழிக்கப்படுகின்றாள். ஒவ்வொரு 42 நிமிடத்திற்கும் ஒரு பெண் உடல் வன்முறைக்கு உள்ளாகின்றாள். ஒவ்வொரு 43 நிமிடத்திற்கும் ஒரு பெண் கடத்தப்படுகின்றார். ஒவ்வொரு 93 நிமிடத்திற்கும் ஒரு பெண் கொல்லப்படுகின்றாள் என்று கூறப்படுகிறது. இவ்வாறு பெண்களுக்கு இவ்வளவு அநீதி இழைக்கப்படுவதற்கு காரணம் பெண்களினை சமனாக மதிக்காமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். இதனை விட இந்திய சமுதாயத்தில் பெண்கள் வன்முறைக்கு உட்பட்டால் அந்த ஆண்மகனையே அந்தப் பெண்ணுக்கு திருமணம் செய்து வைக்கும் போக்கு காணப்படுகின்றது. இதனால் இக் குற்றங்கள் அதிகரிக்கின்ற போக்கே காணப்பட்டு வருகின்றது.

இந்தியாவில் பெண்கள் என்றால் கண்ணுக்கு அழகான, லட்சணமாக இருக்க வேண்டும் என்கிற மூடக்கருத்து பல பெண்களின் வாழ்க்கையை சீரழிக்கிறது. கறுப்பாக இருக்கிறாய், குண்டாக இருக்கின்றாய் என்று விமர்சித்து அவர்கள் மனதில் தாழ்வு மனப்பான்மை உண்டாக்குதல் ஒரு புறம் என்றால் மறு புறம் உனக்கு ஆடத்தெரியுமா, பாடத்தெரியுமா? என்று கேட்டு அவர்களை கடையில் விற்கும் பொருளாகவே பார்க்கப்பட்டு வருகின்றது.

இந்தியாவில் திருமணமாகி கணவர் வீட்டுக்குச் செல்லும் பெண்களுக்கு வரதட்சணைக் கொடுமை, ஓயாத வீட்டு வேலைகள், மனைவியின் விருப்பு வெறுப்புக்களை கருத்தில் கொள்ளாது மேற்கொள்ளப்படும் உடலுறவுகள், கட்டாய கருச்சிதைவுகள் என தொடரும் சித்திரவதைகள் நாளுக்கு நாள் அரங்கேறி கொண்டே இருக்கின்றன. வரதட்சணை தொல்லையால் பெண்களை தீக்கிரையாக்கும் சம்பவங்கள் தமிழ் நாட்டில் தலைவிரித்து ஆடுகிறது. இதனைக் குறைக்கும் விதமாக மகளீர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு பெண்கள் தாமாகவே காவல் நிலையத்திற்கு சென்று முறையிடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருந்தாலும் பல இடங்களில் விழிப்புணர்வு குறைவாக இருப்பதால் வன்கொடுமைகள் திரைமறைவில் அரங்கேறி வருகின்றன.

மேலும் கொரோனா காலத்தில் இந்தியாவில் பெண்களின் நிலை மிகவும் மோசமாகியுள்ளது. தற்போது சர்வதேச அளவில் பாலின சமத்துவமின்மை பட்டியலில் இந்தியா மிக மோசமான நிலையில் உள்ளது என்பது மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

பெண்களின் சமத்துவமின்மையால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்தியாவில் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன அவற்றினை நோக்குவோம். இந்தியா அரசியலமைப்பு சட்டப் பிரிவுகள் 14,15 இரண்டும், எல்லா வகையான வேறுபாடுகளையும் களைந்து சமத்துவத்தோடும் சகோதரத்துவத்தோடும் வாழ்வதற்கான உரிமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்திக் கூறுகிறது. இந்தியாவில் பணியிடங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைக்கு எதிராக 2013 ஆம் ஆண்டு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

வரதட்சணை தடுப்புச் சட்டம் (1961), கடத்தல் தடுப்புச் சட்டம் (1986), சதி தடுப்பு சட்டம் (1987), பெண்களை அநாகரிகமாக சித்தரித்தல் தடுப்பு சட்டம் (1986), குடும்ப வன்முறை சட்டம் (2005) என்று பெண்களுக்கான சட்டங்கள் உள்ளன. இது தவிர, இந்தியக் குற்றவியல் சட்டமும் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் உள்ளது. மேலும் இந்து திருமண சட்டத்தின் படி கணவனால் இழைக்கப்படும் கொடுமையிலிருந்து விவாகரத்து மற்றும் ஜீவனாம்சம் பெற சட்டத்தில் வழியுள்ளன. பரஸ்பர உடன்பாட்டின் படி விவாகரத்து பெற வழிவகுக்கப்பட்டிருக்கின்றது. பெண்களுக்கு சொத்தில் சம உரிமை கிடைக்க சட்டங்கள் வழிவகுக்கின்றன.

கடந்த (2022) டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி இந்தியாவில் குழந்தை திருமணத்திற்கு எதிரான உறுதி மொழி செய்யப்பட்டுள்ளது. தி.மு.கவினால் மேலும் "இளந்தளிர் இல்லத் திட்டம்" அதாவது பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இத் திட்டம் செந்தில் பாலாஜியால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இந்தியாவில் பெண்கள் பாதுகாப்பு தொடர்பாக பல சட்டங்கள் விதிமுறைகள் காணப்பட்டு வந்தாலும் இந்தியப் பெண்களின் நிலை என்பது சாபக்கேடாகவே காணப்படுகின்றது. இதற்கு காரணம் அறியாமையாலும், அச்சத்தாலும் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளனர்.

பெண்களின் இத்தகைய நிலையினை வெற்றி கொள்வதற்கு பெண்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் தங்களை மேம்படுத்திக் கொள்வது அவசியமானதாகும். தங்களுக்கு சட்டப்படியுள்ள உரிமைகளையும், பாதுகாப்பையும் உணரும் போதும் அவர்கள் சமூகத்தின் தாக்குதல்களிலிருந்து தப்பிக்க முடியும். பெண்கள் தங்களுக்கு ஏற்படும் அவமானங்களையும், வன்முறைகளையும் முதலில் மற்றவர்களுடன் பேச வேண்டும். அலுவலகமாக இருந்தால் சக பெண் ஊழியர்களிடம் பேசவேண்டும். அவர்கள் அறியும் படி செய்ய வேண்டும். தனியாக போரடுவதை விட குழுவாக இணைந்து எதிர்கொள்ளும் போது பலன்கள் கூடுதலாக கிடைக்கும். மேலும் பெண்கள் தங்கள் ஆண் குழந்தைகளை வளர்க்கும் போது அவர்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புள்ளவர்களாகவும், பெண்களை மதிக்கக் கூடிய தன்மையுடனும் உருவாக்க வேண்டும். மேலும் சிறு குழந்தைகளுக்கு தகாத தொடுகைகள் பற்றியும் சொல்லிக்கொடுத்து விழிப்புணர்வினை செய்தல் வேண்டும். இவ்வாறு இருந்தாலே அல்லது செய்தாலே பெண்கள் அனுபவித்து வரும் கொடுமைகள் குறைக்கப்படும்.

தற்போது பெண்களின் நிலை குறித்த ஐ.நா.ஆணையகத்தின் உறுப்பினராக இந்தியா தேர்வு செய்யப்பட்டு உள்ளது. நான்கு ஆண்டுகள் இந்தப் பதவியில் இந்தியா நீடிக்கும் என ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி D.S திருமூர்த்தி தெரிவித்துள்ளார். எல்லா முயற்சிகளிலும் பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் அதிகாரம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக இந்தியாவின் உறுதிப்பாட்டிற்கான வலுவான ஒப்புதலாக இது காணப்படுகின்றது. இந் நிகழ்வானது இந்தியப் பெண்களின் சாபக்கேடான வாழ்க்கையிலிருந்து விமோஷனத்தை பெற்றுத் தரக்கூடியது என நம்பப்படுகின்றது.

எனவே கருவறை முதல் கல்லறை வரை துயர கடலில் பயணம் மேற்கொள்ளும் பெண் சமூகம் இனியேனும் மகிழ்ச்சி களிப்பில் குதூகலிக்க துணை நிற்பது அனைவரினது கடமையாக எண்ண வேண்டும். பெண்ணிய கொடுமை ஒரு சாபக்கேடு இதற்கு விமோசனம் கிடைக்க அனைவரும் சேர்த்து வழிகோலுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மத்திய கால அரசியல் சிந்தனையில் மதம் பிரதான இடம் வகித்துள்ளது." இக்கூற்றை பனிப்போருக்கு பின்னரான உலக ஒழுங்கை பிரதிபலிக்கும் நாகரீகங்களின் மோதல் என்ற நூலோடு தொடர்புபடுத்தி ஆராய்க.**

அரசியல் சிந்தனைகள் ஒவ்வொரு காலத்திலும் அக்கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப தோற்றம் பெற்றுள்ளன. அந்தவகையில் மத்திய காலத்திலும் அரசியல் சிந்தனைகள் தோற்றம் பெற்றன. "மத்திய கால அரசியல் சிந்தனைகள் புதிய வகையான பிரச்சினைகளை பிரதிபலித்தன." நிலமானிய சமூக அமைப்பில் மதமும் அரசியலும் எத்தகைய இடத்தை வகித்தன என்ற விடயம் இங்கு பேசப்பட்டது. மதத்திற்கும் அரசியலுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண மத்தியகால அரசியல் சிந்தனையாளர்கள் முயன்றனர். சிலர் மதத்திற்கு ஆதரவாகவும் சிலர் அரசுக்கு ஆதரவாகவும் தமது கருத்துக்களை முன்வைத்தனர். இவ்வாறு மத்திய கால அரசியல் சிந்தனைகளை முன்வைத்தோரில் சென் ஒகஸ்டின், சென் தோமஸ் அக்குவைனாஸ் போன்றோர் முக்கியமானவர்கள். எனவே மத்திய கால சிந்தனைகள் அனைத்துமே மதத்தினை மையப்படுத்திய கட்டமைப்புக்குள்ளேயே காணப்படுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

"பனிப்போருக்கு பின்னரான அரசியலும் மத்திய காலத்தை பிரதிபலிக்கின்ற ஒன்றாகத் தான் இருக்கின்றது." அதற்கான சான்றுகளாக பனிப்போருக்கு பின்னரான உலக ஒழுங்கை பிரதிபலிக்கும் நாகரிகங்களின் மோதல் என்கின்ற சாமுவேல் பி. ஹண்டிங்டன் எழுதிய புத்தகத்தினை எடுத்துக் கொள்ளலாம். அவர் அப் புத்தகத்தில் நாகரிகங்களின் வடிவங்களான மதம், கலாசாரம் பனிப்போரின் பின்னரான காலத்தில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அந்த வகையில் "மத்திய கால அரசியல் சிந்தனையில் மதம் பிரதான இடம் வகித்துள்ளது." இக் கூற்றை பனிப்போருக்கு பின்னரான உலக ஒழுங்கை பிரதிபலிக்கும் நாகரிகங்களின் மோதல் என்ற நூலோடு தொடர்படுத்தி ஆராய்வதாகவே இக் கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

அந்த வகையில் முதலாவதாக மத்தியகால அரசியல் சிந்தனையில் மதம் பிரதான இடத்தை வகித்துள்ளது. எனவே மத்திய காலத்தில் மதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சிந்தனையில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை விரிவாக நோக்குவோம்.

புராதன காலத்திற்கும் நவீன காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதி மத்திய காலம் என்று அழைப்படுகின்றது. உரோம சாம்ராச்சியத்தினுடைய வீழ்ச்சியில் இருந்து நவீன காலத்தின் தொடக்கமான கி.பி 1500 வரையிலான காலம் மத்திய காலமாக வரையறுக்கப்படுகின்றது. இது சுமார் 900 வருடங்களைக் கொண்ட காலப்பகுதி ஆகும்.

மத்திய காலமானது சிறப்பான அறிஞர்களையோ, கோட்பாடுகளையோ, நிறுவனங்களையோ வழங்கவில்லை. அரசியலதிகாரத்திற்கு தலைமை தாங்கிய மன்னனுக்கும் மத விடயங்களுக்கு தலைமை தாங்கிய பாப்பரசர்களுக்கும் இடையில் அதிகாரத்திற்கும் செல்வாக்கிற்கும் இடையிலான போட்டியையே மத்திய காலம் குறித்து நிற்கின்றது. உரோம் சாம்ராச்சியம் வீழ்ச்சியடைந்து பலவீனப்பட்ட போது திருச்சபை எவ்விதமான பாதிப்பிற்கும் உள்ளாகாது பலமாக நிலைத்திருந்தது. இதனால் பலவீனமடைந்த முடியாட்சி மன்னன் மீது திருச்சபை ஆதிக்கம் செலுத்தக் கூடியதாக இருந்தது. திருச்சபையின் ஆதிக்கத்திற்கு மற்றொரு காரணியும் துணையாக இருந்தது. உரோம சாம்ராச்சியம் வீழ்ச்சியடைந்த போது பிரபுக்களது ஆட்சி சாம்ராச்சியத்தின் பல பாகங்களிலும் வலுப்பெறலாயிற்று. பிரபுக்கள் பலம் வாய்ந்த முடியாட்சி மீண்டும் உருவாகினால் தமது அதிகாரத்திற்கும் செல்வாக்கிற்கும் பங்கம் ஏற்படலாம் என்று கருதினர். இதனால் பாப்பரசருக்கு தமது ஆதரவை வழங்கினர்.

மத்திய காலத்தின் ஆரம்பங்கள் திருச்சபையின் உடைய ஏகபோக ஆதிக்கம் முடியாட்சி மீது காணப்பட்டது. மன்னனுடைய முடிசூட்டு விழா பாப்பரசரினாலேயே நிறைவேற்றி வைக்கப்பட்டது. முடியாட்சியைப் போலேவே சட்ட நிர்வாக நீதித்துறை அதிகாரங்கள் திருச்சபைக்கும் காணப்பட்டது. மன்னனை பதவி நீக்கத்தக்க அதிகாரம் பாப்பரசருக்கு இருந்தது. ஆனால் மத்திய காலத்தின் நடுப்பகுதிகளில் முடியாட்சியும் திருச்சபையும் ஏறத்தாழ சமமான ஆதிக்கத்தைக் கொண்டிருந்தன. ஆனால் மத்திய காலத்தின் முடிவில் திருச்சபை ஓரம் கட்டப்பட்டு முடியாட்சியே வலுவானதாக மாறியது. இருப்பினும் மத்திய காலம் முழுவதும் திருச்சபைக்கும் முடியாட்சிக்கும் இடையிலான அதிகாரப் போராட்டத்தையே வெளிப்படுத்துவதாக காணப்பட்டது. இப் போராட்டத்தின் உடைய விளைவுகள் நன்மை பயப்பனவாக இருக்கவில்லை. இதனால் தான் மத்திய காலம் என்பது அரசியல் சிந்தனையில் இருண்டகாலம், வறண்ட காலம் என்றும் வர்ணிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய காலத்தினுடைய தனியொரு பிரச்சினையும், முக்கியமான பிரச்சினையும் மன்னுக்கும் பாப்பரசருக்கும் இடையிலான மோதலே ஆகும். அரசியல் அதிகாரங்கள் மன்னனுக்கு உரியன எனவும் மத விவகாரங்கள் பாப்பரசருக்கும் உரியது எனவும் திருச்சபை ஏற்றுக் கொள்ள மறுத்தது. பாப்பரசர் தான் உலகத்தின் கடவுளுடைய பிரதிநிதி என்றும் அவருக்கே அரசியல் மத அதிகாரங்கள் உரித்தானவை என்றும் மன்னன் தற்காலிகமாக அரசியல் அதிகாரங்களை பாப்பரசர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதாகவும் அவருக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியுள்ளதாகவும் அவருடைய விருப்பின் பெயரிலேயே மன்னன் பதவியிலிருப்பதாகவும் திருச்சபை வலியுறுத்தியது. திருச்சபை அல்லது பாப்பரசர் சூரியனாகவும் மன்னன் சந்திரனாகவும் உவமானப்படுத்திக் கூறப்பட்டது. மேலும் திருச்சபை உயிரென்றும் மன்னன் உடலென்றும் குறிப்பிடப்படுகின்றது. பல சமயங்களில் திருச்சபையை தங்கத்திற்கும் மன்னனை வெள்ளிக்கும் ஒப்பிட்டு கருத்துக்கள் கூறப்பட்டன. இத்தகைய வாதங்களை முன்வைத்தவர்களில் அக்குவைனாஸ் (Thomas Aquinas), சலிஸ்பரி (Salisbury) போன்றவர்கள் முக்கியமானவர்கள். மேலும் மத்திய காலத்தில் வாழ்ந்த அறிஞர்களான தோமஸ் அக்குவைனாஸ் (Thomas Aquinas) புனித ஒகஸ்ரின் (st. Augustine) போன்றவர்களது அரசியல் சிந்தனைகளில் மதம் பிரதான இடத்தை வகிப்பதுமாகவே காணப்பட்டது.

"இடைக்காலக் கிறிஸ்தவ சிந்தனையாளர்களில் தலைசிறந்தவராக காணப்படுபவர் புனித ஒகஸ்ரின்." இவர் சிசரோ, தர்னேஸ், வேர்ஜில் போன்றவர்களின் தத்துவங்களினை அப்படியே ஏற்றுக் கொண்டு தனக்குத் தானே புதியதொரு தத்துவத்தினை உருவாக்கியவர். கிரேக்க சிந்தனைகளும் தொடர்ந்து வந்த உரோமனியர்களது சிந்தனைகளும் பகுத்தறிவுக்கு முதன்மை கொடுத்து மக்களை அறியாமை என்ற இருளில் இருந்து அகற்றுகின்ற வகையில் அமைந்தன. ஆனால் "இடைக்கால சிந்தனைகள் பெருமளவுக்கு கிறிஸ்தவத்தினை மையமாகக் கொண்டே அமைந்தன" அந்த வகையில் மதச் சிந்தனைகளை வழங்கி சிந்தனையாளர்களில் முன்னோடியாக விளங்கியவர் புனித ஒகஸ்ரின். ஆரம்பத்தில் இவர் பெற்றோரின் சொல்லைக் கேட்காத இவர் விபச்சாரப் பெண்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார். ஆனால் கடவுளின் குரல் கேட்டதன் பின்னணியில் தன்னை உலகம் போற்றும் அறிஞராக உருவாக்கிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒகஸ்ரின் வாழ்ந்த காலமானது மதத்தின் காரணமாக ஜரோப்பாவில் அரசியல் ஒற்றுமை காணப்பட்ட காலப்பகுதியாகும். அதுமட்டுமன்றி ஒரு முக்கியத்துவமான அரசியல் சமயச் சூழல் இவர் வாழ்ந்த காலமாக அமைகின்றது. அக் காலப்பகுதியானது அரச மதமாக கிறிஸ்தவம் செல்வாக்கினைப் பெற்றுக் கொள்வதற்கு ஆரம்பித்த காலமுமாகும். உரோமப் பேரரசின் வீழ்ச்சியின் ஆரம்பமும் இவர் காலத்தில் தான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவ்வேளை வட ஆபிரிக்கா, இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகள் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தன. மேலும் மதத்திற்கும் அரசியலுக்கும் நல்லதொரு உறவு நிலையும் அச் சமயத்தில் காணப்பட்டது.

மதந்தொடர்பாக பல வகையான அரிய நூல்கள் இவரால் எழுதப்பட்டன. அதாவது மூன்றன் தொகுதி (De Trinitate), சுயவிருப்பாற்றல் (Feewill), பாவமன்னிப்பு (confessious), கடவுளின் நகரம் (city of God) போன்றன இவர் எழுதிய நூல்களாகும்.

புனித ஒகஸ்ரின் வாழ்ந்த காலப்பகுதியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதியாகும் இதனால் அவர் உரோமனியப் பேரரசு வீழ்ச்சியடைந்து கிறிஸ்தவ மதம் எழுச்சியடைந்த சூழ்நிலையில் அவ் எழுச்சிக்கான காரணத்தை விளக்கமளித்தார். இவர் இடைக்காலக் கிறிஸ்தவர்களின் காலத்தின் குரலாக ஒலித்தார். முக்காலங்களையும் உள்ளடக்கிய வகையில் முழுமையான கிறிஸ்தவ வரலாற்று திட்டத்தினை தயாரித்துக் கொடுத்தார். இரு நகரங்களுக்குமிடையிலே ஒகஸ்ரின் காட்டிய வேறுபாடானது போப்பாண்டவர்கள் பேரரசர்களுடன் போராடுவதற்கான தூண்டுதலை உண்டாக்கியது. கிறிஸ்தவ வரலாற்று பார்வையானது இனம். மதம், மொழி, தேசம் கடந்தது மட்டுமன்றி அது உலகத்திற்கே பொதுவானதென்பதனை உணர்த்தினார்.

இவர் தன்னுடைய படைப்புக்களில் கிரேக்கர்கள் மற்றும் உரோமானியர்களால் வரலாற்றில் புறக்கணிக்கப்பட்ட கடவுளினது பங்கிற்கு முக்கியத்துவத்தினை வழங்கி மதச்சார்பான வரலாற்றினை எழுதினார்.

அடுத்ததாக புராதன சிந்தனைகளின் உயிர்வாழ்ந்த தன்மைக்கு அக்குவைனாசினுடைய (Thomas Aquinas) எழுத்துக்கள் சிறந்த எடுத்துக் காட்டுக்களாக இருந்து வருகின்றன. அரசு மக்களுக்காக காணப்படுகின்றதெனவும் அரசியல் அதிகாரங்கள் எல்லாவற்றிக்கும் அது தோற்றுவாயாக இருக்கின்றதெனவும் தெரிவித்தார். இவ் அதிகாரம் ஆண்டவனால் மக்களின் தலைவனுக்கோ அல்லது மக்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தப்படுகின்ற ஆட்சியாளர்களுக்கோ வழங்கப்படுவதாக கூறினார். அவ்வப்போது போப்பினுடைய அதிகாரமானது குறைவில்லையென்பதனை வலியுறுத்தி வந்தார். மேலும் கிறிஸ்தர்வகளுக்கே குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதைப் பகிரங்கமாகவே இவர் கூறி வந்தாரென்பது குறிப்பிடத்தக்கதாகும். திருச்சபையின் ஆதரவினைப் பெற்ற அரசாங்கம் மக்களுக்கு நன்மைகள் பலவற்றினை வழங்கும் என்றார். மனிதன் கடவுளை அறிந்து எப்போதும் இன்புற்றிருக்கக் கூடிய நிலையினை அடைவதே மனித வாழ்க்கையின் உண்மையான குறிக்கோளாக காணப்படுகின்றது. மனிதனுடைய பண்புகளால் மட்டுமே இதனை அடையமுடியுமென்றால் அரசனுடைய அதிகாரம் மட்டும் போதுமானது ஆனால் இது உலகியல் வாழ்க்கையினையும் கடந்து காணப்படுவதனால் இதற்கு உதவுகின்ற அரசாங்கமானது குருமார்களது அராசங்கமாக இருத்தல் வேண்டும். அந்தவகையில் அரசரும் குருமார்களுக்குக் கட்டுப்பட்டவராகக் காணப்படுகின்றார். இவரது கருத்தின் பிரகாரம் மனிதன் எப்படிப்பட்ட நல்லவனாகக் காணப்படுகின்ற போதும் திருச்சபையின் ஆதரவின்றி ஆத்மாவின் சாந்தியினை பெற முடியாது என்பதே. அத்துடன் ஆட்சி செய்பவர் எவராயினும் திருச்சபையினது ஆதரவின்றி ஆட்சி நடவடிக்கைகளில் ஈடபடமுடியாதென்பதே இறை நம்பிக்கையே இதற்கு உதவி புரியும் பகுத்தறிவானது இவ்விடயமாக தேவையற்றது. இதனால் திருச்சபைக்கும் குருமார்களுக்கும் சகலருக்கும் பணிந்து நடக்க வேண்டியவராகின்றனர். திருச்சபையினை ஏற்றுக் கொள்ளாத அரசன் அதனிலின்றும் விலக்கப்படுவான். இதனால் அரசும் திருச்சபையும் ஒன்றை ஒன்று சார்ந்த நிலை காணப்பட்டது. இவ்வாறாக மத்திய காலத்தில் தோன்றிய அறிஞர்களது அரசியல் சிந்தனைகள் மதம் சார்ந்ததாகவே காணப்பட்டன.

திருச்சபையினுடைய ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுவிப்பதற்காக முடியாட்சி தெய்வீக உரிமைக் கோட்பாடு (Devine Right Theory) என்பதனை ஆதாரமாக முன்வைத்து மிகவும் பழமையான இக்கோட்பாடு மன்னனை கடவுளினுடைய பிரதிநிதி எனக் கூறியது. பாப்பாண்டவரும், மதத்தலைவராக இருந்தாலும் மன்னனுடைய அதிகாரங்கள் கடவுளிடமிருந்து பெறப்பட்டவை என்றும் அதன் காரணமாக மன்னன் கட்டுப்பட வேண்டும் என்பது பொருந்தாதது என வாதிடப்பட்டது. பாப்பரசர் கடவுளின் பிரதிநிதியாக இருந்தால் மன்னனும் கடவுளினுடைய பிரதிநிதியே எனக் கூறி திருச்சபையின் ஆதிக்கத்தை முடியாட்சி நிராகரிக்க முற்பட்டது. இருப்பினும் திருச்சபையைப் போல முடியாட்சி தன்னை அதிகளவிற்கு சமூகத்தில் நிலைநிறுத்த முடியவில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் மத்திய காலம் முழுவதும் திருச்சபைக்கும் முடியாட்சிக்கும் இடையிலான அதிகாரப்போட்டி முடிவடையாத ஒன்றாகவே காணப்பட்டது. இப்பின்னணியில் மத்திய கால அரசியல் சிந்தனையினுடைய முக்கியமான இயல்புகளினை இங்கு நோக்குவது பொருத்தமுடையதாக இருக்கும்.

மத்திய காலத்தில் திருச்சபை என்பது பிளவு படாத வலிமையான நிறுவனமாக இருந்தது. ஐரோப்பா முழுவதும் தனித்து கத்தோலிக்க மதமே காணப்படுகின்றது. இஸ்லாமிய மதம் அக்காலத்தில் அராபிய நாடுகளுடன் மாத்திரமே கட்டுண்டு இருந்தது. இதனால் கத்தோலிக்க மதத்தின் தலைமை பாப்பரசருக்கு ஐரோப்பா முழுவதும் அங்கிகாரமும் மதிப்பும் காணப்பட்டது. இதனால் பாப்பரசருடைய அரசியல் அதிகாரமும் கணிசமாக வளர்ந்து காணப்பட்டது. முடியாட்சிக்குரிய கட்டமைப்புக்கள் யாவும் திருச்சபைக்கும் இருந்தது. கிறிஸ்தவ மதத்தின் இந்த ஏகபோக ஆதிக்கம் காரணமாக மத்திய கால அரசியல் சிந்தனையில் மதத்தினுடைய செல்வாக்கு தவிர்க்க முடியாததாக இருந்தது.

மத்திய கால அரசியல் சிந்தனையாளர்கள் யாவருமே கிறிஸ்தவ மத குருமார்களே. இதனால் மத்திய கால அரசியல் சிந்தனையில் மதத்தின் செல்வாக்கு இயல்பாக மேலோங்குவது இயல்பான ஒன்றாக காணப்படுகின்றது.

மத்திய காலத்தில் அறிவியல் சிந்தனைகளோ சீர்திருத்த சிந்தனைகளோ அதிகம் வரவேற்றகக்கப்படவில்லை. அரிஸ்ரோட்டிலினுடைய நூல்கள் ஆரம்பத்தில் திருச்சபையினால் தடைவிதிக்கப்பட்டது. அக்குவைனாஸ் போன்ற சில அறிஞர்கள் அரிஸ்ரோட்டிலினுடைய கருத்துக்களில் கிறிஸ்தவ மதத்திற்கு இணக்கமான சிலவற்றை ஏற்றுக் கொண்டனர். பொதுவாக கிரேக்க காலமோ உரோம காலமோ மதம் ஓங்கியிருந்த மத்திய கால சிந்தனையில் அதிகம் செல்வாக்கினைப் பெற முடியவில்லை.

திருச்சபை, முடியாட்சி தவிர்க்கப்பட முடியாத ஒன்று எனக் கூறியபோதும் அதனை மட்டுப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர். நவீன காலத்தில் வளர்ச்சி கண்ட அரசின் இறைமை என்பது மத்திய காலத்தில் காணப்படவில்லை. காரணம் மத்திய கால கோட்பாட்டாளர்களும் அரசினுடைய இறைமைக்கு ஆதரவாளர்களாக இருக்கவில்லை.

எனவே மத்திய கால அரசியல் சிந்தனையில் மதமே பிரதான இடத்தினை வகிப்பதாக காணப்படுகின்றமையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மத்திய காலத்தினை பிரதிபலிக்கின்ற ஒன்றாக பணிப்போருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரான காலமும் காணப்படுகின்றது. அதாவது மத்திய கால அரசியல் சிந்தனைகளில் எவ்வாறு மதம் தாக்கத்தினை செலுத்துகின்றதோ அதைப்போலவே பனிப்போருக்கு பின்னரான அரசியல் சிந்தனையில் மதம், கலாசாரம் பிரதான இடத்தினை வகித்துள்ளது. பனிப்போருக்கு பின்னரான அரசியல் சிந்தனையில் மதம், கலாசாரம் எவ்வாறு தாக்கத்தினை செலுத்துகின்றது என்பதனை ஆராய்வது பொருத்தமுடையதாக இருக்கும். இதற்கு சாமுவேல் பி.ஹண்டிங்டனின் நாகரிகங்களின் மோதல் என்கின்ற புத்தகத்தினை சான்றாக எடுத்து ஆராய்வது சிறப்பானதாக இருக்கும் அல்லது பொருத்தமுடையதாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

நாகரிங்களின் மோதல் ஓர் அறிவுச் செறிவு கொண்ட புத்தகம். உலகின் இன்றைய குழப்பத்தின் அர்த்தத்தை அது மறுவரையறை செய்துள்ளது. மதம், கலாச்சாரம், அரசியல் ஆகியவற்றின் கட்டுமானப் பெயர்ச்சிகளில் ஹண்டிங்டன் செய்துள்ள பகுப்பாய்வு தொடக்கத்தில் அதிர்ச்சியை அளிப்பதாயினும் மென்மேலும் ஈர்க்கின்ற தன்மையுடையதாக இருக்கின்றது.

கடந்த நூற்றாண்டின் கடைசி தசாப்தத்தில் பிரபலமான அமெரிக்க அரசறிவியல் நிபுணரான சாமுவேல் ஹன்ரிங்டன் நாகரிகங்களின் மோதல் என்ற கருதுகோள் ஒன்றை முன்வைத்தார். உலக அரசியலின் எதிர்காலப் போக்கு மேற்குலக நாகரிகத்துக்கும் மேற்குலகத்தை அல்லாத நாகரீகத்திற்கும் இடையிலான மோதலினால் வரையறை செய்யப்படப் போகிறது என்று அவர் வாதிட்டார்.

ஹண்டிங்டன் தனது புத்தகத்தில் "பனிப்போருக்கு பிந்திய ஆண்டுகள் மக்களின் அடையாளங்களிலும் அந்த அடையாளங்களின் சின்னங்களிலும் நாடகத்தனமான மாற்றங்களின் தொடக்கங்களை கண்டன." கலாசார அடிப்படையில் உலக அரசியல் மறுசீரமைப்புச் செய்யப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பனிப்போருக்கு பிந்திய உலகில் கொடிகள் முக்கியமானவை அது போல சிலுவைகள் பிறைகள், ஏன் தலைமுடிகள் (குல்லாய் போன்றவை) உள்ளிட்ட கலாசாரத்தின் பிற குறியீடும் முக்கியமானவையே. ஏனெனில் கலாசாரம் முக்கியமானது. மிகப் பெரும்பான்மை மக்களுக்கு மிக அதிக அர்த்தமுள்ளது கலாச்சார அடையாளம் தான் என குறிப்பிட்டார்.

பனிப்போருக்கு பிந்தைய காலத்தில் மக்களுக்கிடையிலான மிக முக்கியமான வேறுபாடுகள் கருத்தியல், அரசியல் அல்லது பொருளாதாரம் சார்ந்ததாக அல்ல. அவை கலாசாரம் சார்ந்தவையாக காணப்பட்டது என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டார். இதற்கு உதாரணமாக இஸ்ரேல் - பலஸ்தீன போர், இலங்கை உள்நாட்டு யுத்தம் போன்றவற்றினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

மேலும் ஹண்டிங்டன் "பனிப்போருக்குப் பிந்தைய உலகம் என்பது ஏழு அல்லது எட்டு முதன்மையான நாகரிகங்களின் உலக கலாசாரப் பொதுமைகளும் வித்தியாசங்களும் அவர்களின் நலன்கள், பகைமைகள், சேர்க்கைகள் ஆகியவற்றை உருவமைக்கின்றன. பெரிய போர்களாக மாற இருக்கின்ற உள்நாட்டு மோதல்கள் யாவும் வெவ்வேறு நாகரிகங்களைச் சேர்ந்த குழுக்கள், அரசுகள் இடையிலானவை. அரசியல் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய பாணிகள் நாகரிகத்துக்கு நாகரிகம் வேறுபடுகின்றன. சர்வதேச விவாதத்துக்கான விஷயங்களில் முக்கிய பிரச்சினைகள் நாகரிகங்களின் வேறுபாடுகளை உள்ளடக்கியுள்ளன என்றார். இவருடய கருத்திலிருந்து நாகரிகங்களின் வடிவங்களான மதம் கலாசாரம் எவ்வாறு பனிப்போருக்கு பின்னரான அரசியல் சிந்தனையில் தாக்கத்தினை செலுத்தி வருகின்றது என்பது சான்றோடு தெரிய வருகின்றது.

"எந்த ஒரு கலாசாரம் அல்லது நாகரிகத்திற்கும் மையக் கூறுகள் மொழியும் மதமும் ஆகும்." ஆனால் பனிப்போருக்குப் பின்னரான அரசியலில் மொழியினுடைய தாகத்தித்தினை விட மதத்தினுடைய தாக்கமே அதிகமாக காணப்படுகின்றது குறிப்பிடத்தக்கதாகும்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மதம் உலகமெங்கும் எழுச்சி கண்டது. அந்த எழுச்சியின் காரணமாக மத உணர்வு தீவிரமாதலும், அடிப்படைவாத இயக்கத்தின் எழுச்சியும் நிகழ்ந்துள்ளன. இதற்கு உதாரணமாக இஸ்லாமிய அடிப்படை வாத இயக்கங்கள் (I.S.I.S) பௌத்த வாத அடிப்படை இயக்கங்கள் போன்றவற்றினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இத்தகையதொரு பண்பு (மத உணர்வு தீவிரமாதல்) மத்திய காலத்திலும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பனிப்போருக்கு பின் தென்னாசிய நாடுகளின் அரசியல் சூழ்நிலையை பொறுத்தமட்டில் மதம் இணைந்திருப்பது ஒரு முக்கிய பண்பாக உள்ளது. தென்னாசிய நாடுகளில் எந்த மதம் பெரும்பான்மையினரை உடையதோ அதுவே அந் நாட்டின் அரசியலில் மேலாதிக்கம் உடையதாக காணப்படுகின்றது. உதாரணமாக இலங்கையில் அண்மையில் இடம் பெற்று வரும் நிகழ்வுகள் மதங்களின் பெயரால் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோல் தெற்காசியாவில் மட்டுமல்ல மத்திய கிழக்கில் பனிப்போர் காலத்திலிருந்தே இடம் பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பனிப்போருக்கு பின்னரான உலக அரசியலில் இலாபத்தினை ஈட்டும் ஒரு பொறிமுறையாக மதம் காணப்படுகின்றது. உதாரணமாக மதத்தின் பெயரில் வந்த உள்நாட்டு யுத்தமான சிரியா யுத்தத்தினை உலக அரசியலை நடாத்துகின்ற ஒரு களமாக வல்லரசுகள் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். பனிப்போருக்கு பிந்தைய காலத்தில் நேட்டோ, மேற்கத்திய நாடுகளின் பாதுகாலனாக இருக்கின்றது என்றார் ஹண்டிங்டன். இவ் விடயம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். கலாசாரம், மதம், மொழி என்கின்ற அடிப்படையிலேயே சர்வதேச அரசியலில் அமைப்புக்கள் அல்லது நிறுவனங்கள் தோற்றம் பெறுகின்றன.

எனவே பனிப்போருக்கு பின்னரான அரசியல் சிந்தனையில் மதமே பிரதான இடத்தினை வகிக்கின்றது. என்பது ஹண்டிங்டனின் எழுத்துக்களில் இருந்து தெளிவாக தெரிகின்றது. பனிப்போருக்கு பின்னரான உலக அரசியலை வழிநடத்தக் கூடிய ஒன்றாக மதம் காணப்படுகின்றது. குறிப்பாக பனிப்போருக்கு பின்னரான காலத்தில் ஏற்பட்டிருக்கின்ற மோதல்கள், போர்கள், பிரிவினைகள் என்பன ஏற்படுவதற்கு அடிப்படை மதமே காணப்படுகின்றது என ஹண்டிங்டனின் நாகரிகங்களின் மோதல் என்கின்ற நூலை படித்ததனூடாக தெளிவாக தெரிகின்றது. பனிப்போருக்குப் பின்னரான உலக ஒழுங்கினை தீர்மானிப்பதில் மதம் பிரதான இடத்தினை வகித்துக் காணப்படுகின்றது. வல்லரசசுகள் ஏனைய நாடுகளை மதத்தினால் பிரித்தாளுகை செய்து அதில் குளிர் காய்கின்றன. அதற்கு சான்றாக சிரியா யுத்தம், அரபு இஸ்ரேலிய யுத்தம் போன்றவற்றினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். அடுத்து இன்று உலகில் காணப்படுகின்ற தீவிரவாத இயக்கங்கள் மதத்தின் பெயரிலே ஸ்தாபிக்கப்ட்டதாகும். உதாரணமாக I.S.I.S இஸ்லாமிய அரசினை ஸ்தாபிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

ஹண்டிங்டனின் கணிப்புக்களின் படி உலகின் தோற்றம் பெரும்பாலும் ஏழு அல்லது எட்டு பெரிய நாகரிகங்களுக்கு இடையிலான தொடர்பின் போக்கில் உருவாகும் என்றார். மேற்கத்திய கன்பூசியன், ஜப்பானிய, இஸ்லாமிய இந்து, ஆர்தடாக்ஸ் ஸ்லாவிக், லத்தீன் அமெரிக்க மற்றும் ஒருவேளை ஆப்ரிக்க நாகரிகங்கள் இதில் அடங்கும். எதிர்காலத்தில் மிக முக்கியமான மோதல்கள் பல காரணங்களுக்காக நாகரிகங்களுக்கிடையேயான தவறான கோடுகளில் வெளிப்படும் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 20ஆம் நூற்றாண்டின் அனைத்து இராணுவ மோதல்களும் நாகரிகங்களின் எல்லையில் நடந்தன. பாரசீக வளைகுடாவில் மத்திய ஆசியா மற்றும் காகசஸ், பாகிஸ்தான் மற்றும் இந்தியா இடையே ஏற்பட்டதனை குறிப்பிட்டுக் கொள்ளலாம். கலாசார வேறுபாடுகள் இந்த நாடுகளுக்கிடையிலான பொருளாதார மோதலில் அதிகரிக்கின்றன.

எனவே நாகரிகங்களுக்கிடையிலான மோதல் உலகாளவிய மோதலின் முக்கிய வடிவமாக கருத்தியல் மற்றும் பிற மோதல் வடிவங்களை மாற்றும் என்றார். மேலும் எதிர்காலத்தில் உலக அரசியலின் மைய அச்சு "மேற்கு மற்றும் உலகின் பிற பகுதிகளுக்கு இடையிலான மோதலாகவும், மேற்கத்திய சக்தி மற்றும் மதிப்புக்களுக்கு மேற்கத்திய அல்லாத நாகரிகங்களின் எதிர்வினையாகவும் இருக்கும்" என்றார்.

எனவே பனிப்போருக்கு பின்னரான காலத்தில் அரசியல் சிந்தனையில் நாகரிகத்தின் வடிவமான மதமே பிரதான இடத்தை வகித்து காணப்படுகின்றது என்பது ஹண்டிங்டனின் எழுத்துக்களினூடாக தெளிவாக தெரிகின்றது. எனவே மத்திய கால அரசியல் சிந்தனையில் மதம் எவ்வாறு பிரதான இடத்தினை வகித்ததோ அதைப்போலவே பனிப்போருக்கு பின்னரான அரசியல் சிந்தனையிலும் மதமே பிரதான இடத்தினை வகிக்கின்றது. எனவே மத்திய காலத்தினை பிரதிபலிக்கின்ற ஒன்றாகவே பனிப்போருக்கு பின்னரான காலம் காணப்படுகின்றது எனலாம். எனவே மத்திய காலமானது பனிப்போருக்கு பின்னரான காலத்திலும் பிரதிபலித்து அதன் மூலம் போர், முரண்பாடு, பிரிவினை போன்றிவற்றினை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது.

மத்திய காலமானது முற்று முழுதாக எதிர்மறையான பண்புகளைக் கொண்டது என்று நாம் கூற முடியாது. மத்திய காலத்தில் கிறிஸ்தவ மதம் மாத்திரமே ஐரோப்பாவின் ஒரே மதமாகவும் பிளவுபடாத மதமாகவும் காணப்படுகின்றது. மத ரீதியாக எவ்வித பிரச்சினைகளும் இன்றி பாப்பரசரே ஐரோப்பாவின் ஏகபோக மதத் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். திருச்சபை முடியாட்சிகளுடன் பல பிரச்சினைகளை கொண்ட போதிலும் ஐரோப்பா முழுவதையும் மத ரீதியாக ஒன்றிணைந்தது. ஐரோப்பாவில் உருவான மதரீதியான ஒற்றுமையான உணர்வே பிற்காலத்தில் மேம்பட்டும் சர்வதேச ரீதியான அணுகு முறைகளும் நோக்கங்களும் வளர்ச்சி பெற காரணமானது. நவீன சர்வதேச வாதம் (Internationalism) மத்திய காலத்திலிருந்தே தனது அடிப்படைகளை விரிவாக்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய காலத்தில் சமூக பொருளாதார அமைப்புக்கள் எவ்வித பாதிப்பிற்கும் உள்ளாகாமால் சிறப்பாக இயங்கி வந்தது. ஹில்ட் (Guild) என்ற பெயருடைய அமைப்புக்கள் உற்பத்தி வர்த்தகம் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகளை சிறப்பாக ஒழுங்கமைத்து நடத்தின. அது போலவே சமூக ஐக்கியத்தையும் நல்லுறவையும் "Commune" அமைப்புக்கள் சிறப்பாக பேணி வந்தன. இவ்விரு அமைப்புக்களின் செயற்பாடுகள் நவீன காலத்திற்கும் சில முன்மாதிரிகளை வழங்கின.

மத்திய காலமானது நவீன ஜனநாயகத்தின் பிரதிநிதித்துவ முறைக்கு வழிகாட்டியது. திருச்சபையும் முடியாட்சியும் மக்களின் பிரதிநிதிகள் பங்காற்றிய மக்கள் கழகங்கள் (Peoples Councils), மக்கள் சபைகளை கொண்டிருந்தன. இச் சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் தெரிவிக்கின்ற கருத்துக்கள் கணிசமாக மதிக்கப்பட்டன. மன்னனும் பாப்பரசரும் அதிகாரம் மிக்கவர்களாக இருந்த போதும் மக்கள் குரலுக்கு ஓரளவு செவிசாய்க்க வேண்டிய நிலை காணப்பட்டது.

எனவே மத்திய காலமானது கிரேக்க, உரோமர் காலத்துடன் ஒப்பிடும் போது முக்கியத்துவத்தையோ சிறப்பையோ கொண்டிருக்கவில்லை. உரோமர் கால தொடர்ச்சி மத்திய காலத்தில் காணப்படவில்லை. கிரேக்க, உரோம காலத்தைப் போல மத்திய காலம் நவீன காலத்திற்கு அதிக பங்களிப்பை வழங்கவில்லை. இருப்பினும் பல குறைபாடுகளுக்கு மத்தியிலும் சில வரவேற்கத்தக்க பண்புகளை மத்திய காலம் கொண்டிருந்தது என்பது உண்மையாகும் என நான் கருதுகிறேன். மேலும் மத்திய காலத்தில் மதம் எங்கும் எச்செயற்பாடுகளிலும் வியாபித்து காணப்பட்டதைப் போல அதன் மறு வடிவமாக பனிபோருக்கு பிந்தைய காலத்திலும் காணப்பட்டு வருகின்றது என்பதே உண்மையாகும்.

எனவே மத்திய காலத்தின் பிரதி வடிவமாகவே பனிப்போருக்கு பிந்தைய உலகம் காணப்படுகின்றது. அதாவது மத்திய காலத்தில் மதம் எதனையும் தீர்மானிப்பதாக காணப்பட்டது. பனிப்போருக்கு பிந்தைய காலத்தில் நாகரிகங்கள் அதாவது மதம், மொழி, கலாசாரம் என்பன பிரதான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. அதிலும் குறிப்பாக மதமே அரசியலை வரையறை செய்வதாக காணப்பட்டு வருகின்றது. எனவே மத்திய காலத்தின் பிரதிபலிப்பாகவே பனிப்பேருக்கு பின்னரான உலகமும் காணப்படுகின்றது என்ற முடிவுக்கு வருவது பொருத்தமுடையதாகவும் உண்மைத்தன்மையுடையதாக இருக்கும் எனவும் நான் கருதுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை

சரவணன;.p.c, (2017), “சர்வதேச சட்டம்”, www.dinamalamani.com

(N.A), (2014), “சர்வதேச சட்ட மூலங்களும்”, www.yarl.com

(N,A), (2020), “சர்வதேச சட்டத்தின் இயல்பும் அடிப்படையும்”, www.vikespedia.com

(N.A), (2023), “International law”, www.vritlnnick.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கி.மு 512 சீனாவின் போரியல் வல்லுனரான சன்சூவின் (sun tzu) போர்க்கலை (The Art of War) எனும் நூல் முன்வைக்கும் 13 அத்தியங்களின் உள்ளடக்கங்களையும் முதன்மைப்படுத்தி போர் எனும் பகுதியை ஆராய்க**

போர் என்பது ஒரு பன்னாட்டு உறவுகள் சார்ந்ததும் நாடுகளின் படைகளிடையே நடைபெறும் ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறைகளால் வெளிப்படுவதுமான பிணக்கு ஆகும். "மனித வரலாற்றில் யுத்தம் இல்லாத காலப்பகுதியை அடையாளப்படுத்த முடியாது" யுத்தம் அதிகாரத்தினை முழுமையாக தீர்மானிக்கும் நீதிபதியாகும். இதனால் இது சர்வதேச அரசியலில் ஆதிக்கமுடைய வகிபாகத்தினைக் கொண்டிருக்கிறது. "சர்வதேச அரசியலுக்குள் உச்ச அதிகாரமானது எப்போதும் மறைந்திருந்தே வருகின்றது." ஆகவே மனித வரலாறு யுத்தத்தினால் நிறைந்தாகும். யுத்தமும் சமாதானமற்ற வாழ்க்கையுமே நாகரீகமடைந்த மானிட சமுதாயத்தின் இயல்பாகவுள்ளது.

"ஒவ்வொரு அரசுகளும் தமது தேசிய நலன்களையும் வெளிவாரியான நோக்கங்களையும் பூர்த்தி செய்வதற்கு பிறிதொரு கருவி போர் ஆகும்". இத்தகைய போர் (War) தொடர்பாக பல்வேறு அறிஞர்கள், அரசறிவியலாளர்கள் அதன் முக்கியத்துவங்கள், விளைவுகள், போரினை எவ்வாறு நடாத்த வேண்டும் போன்ற பல்வேறு கருத்துக்களினை முன்வைத்துள்ளனர். அந்த வரிசையில் சன்சூ(sun tzu) என்பவர் போர்க்கலை (The Art of war) என்ற தனது நூலில் போரின் நுட்பங்களையும் போரில் வெற்றி பெறும் வழிமுறைகளைப் பற்றியும் எழுதியுள்ளார். அந்த வகையில் கி.மு 512 இல் சீனாவின் போரியல் வல்லுனரான சன்சூவின்(sun tzu) போர்க்கலை (The Art of war) எனும் நூல் முன்வைக்கும் 13 அத்தியாயங்களின் உள்ளடக்கங்களையும் முதன்மைப்படுத்தி போர் எனும் பகுதியை ஆராய்வதாக இக் கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

சன்சூ(sun tzu) என்பவர் சீனாவைச் சேர்ந்த தலைசிறந்த படைத்தளபதி மற்றும் தத்துவஞானி ஆவார். இவரின் போர்த் தந்திரங்களினாலும் போர் யுக்திகளாலும் சிஜி எனும் மன்னர் போர்களில் வெற்றி பெற்றார். பின் சிஜி மன்னன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இவர் போர்க்கலை (The Art of war) எனும் போரின் நுடபங்களையும் போரில் வெற்றி பெறும் வழிமுறைகள் பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் நூலை எழுதியுள்ளார். இவரின் இந்த புத்தகம் அனைவராலும் தலைசிறந்த புத்தகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இப் புத்தகம் போரில் மட்டுமல்ல வாழக்கையிலும் வெற்றி பெற உதவுவதாக காணப்பட்டு வருகின்றது. இப் புத்தகத்தில் கூறியுள்ள விடயங்களினை நடைமுறைப்படுத்தியே நெப்போலியன், அலெக்சாண்டர் போன்றோர் பல போர்களில் வெற்றிபெற்றுள்ளார்கள் எனக் கூறப்படுகின்றது.

போர்க்கலை எனும் நூல் போரில் பயன்படுத்தப்படும் மூல உபாயங்களையும், உத்திகளையும் சிறப்பாக விபரிக்கிறது. இது 13 பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவும் போரின் வெவ்வேறு அம்சங்கள், நுட்பங்கள், வழிமுறைகள் குறித்து எழுதப்பட்டுள்ளது. திட்டங்களை தீட்டுதல், போர்புரிதல், தந்திரத் தாக்குதல், போர்த்தந்திர வியூகங்கள், ஆற்றல், பலவீனமான ஸ்தாபனங்களும் பலம் வாய்ந்த ஸ்தாபனங்களும், இராணுவ வியூக நடவடிக்கை, போர்த்தந்திரங்களை மாற்றியமைத்தல், இராணுவப் பிரயாணம், நிலப்பரப்பு, ஒன்பது நிலவரங்கள், நெருப்புத் தாக்குதல், ஒற்றர்களைப் பயன்படுத்தல் ஆகிய 13 அத்தியாயங்களினூடாக சன்சூ போர் தொடர்பாக என்ன விடயங்கள் கூறுகின்றார் என்பதனை இங்கு விரிவாக நோக்குவது பொருத்தமுடையதாக இருக்கும்.

முதலாவது அத்தியாயமான தீட்டங்கள் தீட்டுதலில் சன்சூ "போர்க்கலையானது, நாட்டிற்கு ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்தது" என குறிப்பிடுகின்றார். போர் என்பது பாதுகாப்பிற்கான அல்லது நாசத்திற்கான வழி ஆகவே அது எக்காரணம் கொண்டும் அலட்சியப்படுத்த முடியாத ஆய்வுக்குரிய ஒரு விடயமாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார். சன்சூ இவ்வாறு குறிப்பிட்டுள்ளது போரின் முக்கியத்துவத்தினையும் அதன் ஆழத்தினையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

பகுப்பாய்வு செய்யாமல் இருப்பதும் நன்கு தயார் செய்யாமல் இருப்பதும் போரில் தோல்விக்கு வழிவகுக்கும் என்பதே இவ் அத்தியாயத்தின் முக்கிய செய்தி ஆகும். போர்க்கலை ஐந்து நிலையான காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. அவையாவன தர்மநெறி (மக்கள் தங்கள் அரசனுடன் பரிபூரண இணக்கத்துடன் இருக்கச் செய்கிறது அதன் காரணமாக எந்த ஆபத்துக் கண்டும் அச்சுற்றுத்திகைக்காமல், தங்கள் உயிர்களையும் பொருட்படுத்தாது அவர்கள் அவனைப் பின்பற்றியொழுகுவார்), விண்ணுலகம், (இரவு மற்றும் பகல், குளிர்ச்சி மற்றும், வெப்பம், காலங்கள் மற்றும் பருவங்கள் ஆகியவற்றைக் குறிக்கிறது.) பூமி (பெரிய மற்றும் சிறிய தொலைவுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபாயம் மற்றும் பாதுகாப்பு, திறந்த வெளிக்களம் மற்றும் குறுகிய கணவாய்கள், வாழ்வதற்கும் இறப்பதற்குமான சந்தர்ப்பங்கள் ஆகியவற்றறை உள்ளடக்கியது) தளபதி (விவேகம், நாணயம், உதாரகுணம், வீரம் மற்றும் கண்டிப்பு ஆகிய நல்லொழுக்கங்களைப் பெற்று திகழ்கிறான்) முறைமை மற்றும் ஒழுக்கம் என்பனவாகும்.

பல முன் யோசனைகள் வெற்றிக்கு வழிகோலுகின்றன. சில முன் யோசனைகள் தோல்விக்கு வழிவகுக்கின்றன. இந்த அம்சத்தின் மீது கவனம் செலுத்தி பார்ப்பதன் மூலம் தான் வெற்றி பெறுவதற்கோ அல்லது தோல்வியுறுவதற்கோ சாத்தியமான நிலையில் இருப்பது யார் என்பதை முன்கூட்டியே அறிய முடியும் என குறிப்பிடுகின்றார். எனவே இவ் அத்தியாயமானது திட்டமிடத்தவறினால் தோல்வியை திட்டமிடுவதாகும் என்ற மையப் பொருளில் அமையப் பெற்றுள்ளது.

“போர் புரிதல்” அத்தியாயம் போரின் செலவுகளை மையமாக் கொண்டுள்ளது. இது போர்க்கலை பற்றிய ஒரு முக்கியமான கருத்தாகும். ஏனெனில் மோதல் விலை உயர்ந்தது மற்றும் எதிராளியை மோதலின்றி அடிப்பதே (வெல்வதே) சிறந்த தீர்மானம் என்று சன்சூ வலியுறுத்துக்கின்றார். நீங்கள் போரை நடத்த வேண்டும் என்றால் அதை உறுதியாவும் விரைவாகவும் செய்யுங்கள் நீண்ட காலமாக நடந்த போர்களில் அனைவரும் தோற்றுப் போகிறார்கள் என குறிப்பிடுகிறார்.

“தந்திர தாக்குதல்” அத்தியாயத்தில் சன்சூ பகைவர்களுக்கு நேருக்கு நேர் மோதல் இல்லாமல் போர்களில் வெற்றி பெற உதவும் குறிப்பிட்ட உத்திகளை விபரிக்கிறார். அவர் சொல்வது போல் எதிர்த்துப் போரிடாமல் வெல்வதே உயர்ந்த சிறப்பு ஆகும். வெற்றிபெற எப்போது சண்டையிட வேண்டும், எப்போது போரிடக்கூடாது, உயர்ந்த மற்றும் தாழ்ந்த சக்திகளை எவ்வாறு கையாள்வது என்பதனை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். உன்னையும் உன் எதிரியையும் நீ நன்றாக அறிவாயெனில் நூறு யுத்தங்கள் வந்தாலும் நீ பயப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் உன்னைக் குறித்தும் உன் எதிரியைக் குறித்தும் நீ ஏதும் அறியாதவனாய் இருந்தால் ஒவ்வொரு யுத்தத்திலும் நீ தோற்கடிக்கப்படுவாய் என்று சன்சூ போரின் யதார்த்த தன்மையினை குறிப்பிட்டுள்ளார்.

“போர்த்தந்திர வியூகங்கள்” எனும் அத்தியாயத்தில் போர்த்தந்திர வியூகங்கள் பற்றிய விளக்கங்கள் கூறுப்பட்டுள்ளது. போர் வீரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்விக்கான சாத்தியக் கூறு இல்லாத நிலையில் தங்களை வைத்துக்கொண்டு அதன் பிறகே எதிரியை தோற்கடிப்பதற்குரிய சந்தர்ப்பம் ஒன்றிற்காக காத்திருக்க வேண்டும் என சன்சூ குறிப்பிடுகின்றார். "தோல்வி ஏற்படா வண்ணம் நம்மைப் பாதுகாத்துக் கொள்வது நமது கைகளில் உள்ளது. ஆனால் எதிரியைத் தோற்கடிப்பதற்கான சந்தர்ப்பம் எதிரியாலேயே வழங்கப்படுகிறது" எனக் கூறியுள்ளார். வெற்றி மற்றும் போருக்குத் தயாராக சன்சூ பின்வருவனவற்றை பரிந்துரைக்கின்றார். அவையாவன "அளவிடுதல் (பணம், எதிரியின் வீரர்கள், நேரம்), கணக்கீடுகள், ஒப்பீடுகள், வெற்றி வாய்ப்புக்கள் என்பனவாகும்." பிழைகள் ஏதும் புரியாதிருத்தலே வெற்றி நிச்சயம் என்பதை நிர்மாணிக்கிறது. ஆகவே தோல்வி என்பதைச் சாத்தியமே இல்லாமல் செய்துவிடும் ஒரு ஸ்தானத்தில் திறமை வாய்ந்த போர் வீரன் தன்னை நிலைநிறுத்திக் கொண்டான் எனில் எதிரியை தோற்கடிப்பதற்கான சந்தர்ப்பத்தினை அவன் தவறவிடுவதில்லை என சன்சூ போரில் வெற்றி பெறுவதற்கான நடவடிக்கைகள் பற்றி கூறியுள்ளார்.

"ஆற்றல்" எனும் அத்தியாயத்தில் படைவீரர்களின் ஆற்றல் தொடர்பாக பேசப்பட்டுள்ளது. போரில் இரண்டு தாக்குதல் முறைகளுக்கு மேல் இல்லை. அவை நேரடி மற்றும் மறைமுகத் தாக்குதல்கள் ஆகும். ஆயினும் இவை இரண்டும் இணைந்து எண்ணற்ற போர்த் தந்திர நடவடிக்கைகளைத் தோற்றுவிக்கின்றன என சன்சூ குறிப்பிடுகிறார்.

நேரடித் தாக்குதல்கள் போரின் போது எதிரியைத் தாக்குவதை உள்ளடக்கியது மறைமுகத் தாக்குதல்களில் மறைத்தல், மற்றும் இரகசியம் ஆகியவற்றறை உள்ளடக்கி உத்திகள் அதாவது உங்கள் எதிரியை பட்டினி கிடக்க வைப்பது அல்லது நீங்கள் வலுவாக இருக்கும் போது பலவீனமாக இருப்பதாக நினைத்து அவர்களை முட்டாளாக்குவது ஆகியவை அடங்கும். சன்சூ இதை "பாசாங்கு பலவீனம்" என்று அழைக்கின்றார். மேலும் இது எந்தவொரு போரினதும் இன்றியமையாத அங்கமாகும். சிறப்பாகப் போர் புரியும் படை வீரர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஆற்றலானது ஒரு உருண்டையான கல்லின் வேகம் மலையிலிருந்து உருண்டது போன்றது என அதன் சக்தியை குறிப்பிடுகிறார்.

"பலவீனமாக ஸ்தானங்களும், பலம் வாய்ந்த ஸ்தானங்களும்" அத்தியாயத்தில் உங்கள் எதிரிக்கு எவ்வாறு பாதுகாப்பது என்று தெரியாத பாதுகாப்பற்ற இடங்களைத் தாக்குங்கள், மேலும் உங்கள் பலவீனமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களை வலுப்படுத்துவதன் மூலம் எதிரிக்கு எதிராக உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் எனக்கூறியுள்ளார். இது போரைச் சுருக்கமாக கூறுகின்றது. மற்றும் சன்சூ கற்பிக்கும் பல தாக்குதல் உத்திகளுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

நீங்கள் சண்டையிட வேண்டும் என்றால் எதிர்பாராத வழிகள் அல்லது உங்கள் தந்திரங்களை தீடிரென்று மாற்றுவது போன்ற சூதாட்டங்களால் உங்கள் எதிரிகளை குழப்புங்கள் உங்கள் சொந்த பிரதேசத்தில் தாக்கப்பட்டால் இது மிகவும் எளிதானது.

சன்சூ உங்கள் இராணுவத்தை கவனித்துக் கொள்வதன் முக்கியத்துவத்தையும் கற்பிக்கின்றார். போர்க்களத்தில் முதலாவதாக வந்து எதிரியின் வருகைக்காக காத்திருப்பவர் சண்டைக்கு தேவையான புத்துணச்சியுடன் இருப்பார். போர்க்களத்தை இரண்டாவதாக அடைந்து போர்புரிவதற்கு அவசர கதியில் விரைய வேண்டுமோ அவன் களைத்துச் சோர்ந்து போய் வந்தடைவான் எனக் கூறுகின்றார்.

இந்த அத்தியாயம் சுயபாதுகாப்பு பற்றிய ஒரு மதிப்புமிக்க பாடத்தை வழங்குகிறது. போரில் நுழைவதற்கு முன் தலைவர்கள் தங்களையும் தங்கள் அணியையும் நன்கு ஓய்வெடுக்க நினைவில் கொள்ள வேண்டும் என சன்சூ நமக்கு நினைவூட்டுகிறார்.

“இராணுவ வியூக நடவடிக்கை” எனும் அத்தயாயத்தில் கடினமான சூழ்நிலைகளை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக பேசப்படுகிறது. கோணலானவற்றை நேரிடையானதாகவும் துரதிஷ்டத்தை ஆதாயமாகவும் மாற்ற சிறந்த தலைவர்களுக்குத் தெரியும் என கூறுகிறார்.

சன்சூ உங்கள் இராணுவம் அதன் வலிமையைக் காக்க மூடிய தரையை மட்டுப்படுத்துவதைக் குறிப்பிடுகிறார். இராணுவம் அதிக தூரத்தைக் கடக்க வேண்டியிருக்கும் போது தாக்குதல்களுக்கு எதிராக தற்காத்துக் கொள்ள போதுமான வலிமையைப் பெற ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் குறைந்த மன உறுதியுடன் சோர்வடைந்த இராணுவம் ஒரு போதும் போர்களில் வெற்றி பெறாது என சன்சூ குறிப்பிடுகிறார்.

எதிரிகள் பலவீனமாக இருக்கும் போது அவர்களை எப்போது தாக்கவேண்டும் என்பதையும் தலைவர்கள் அறிந்திருக்க வேண்டும். தங்கள் துருப்புக்களிடையே மன உறுதியை உயர்வாக வைத்திருக்க, தங்கள் பொருட்களை எவ்வாறு பாதுகாப்பது என்பதை அவர்கள் அறிந்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்றார் சன்சூ. மேலும் இந்த அத்தியாயத்தின் முக்கிய அம்சம் ஒரு நகர்வை மேற்கொள்வதற்கு முன் ஆலோசிக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

"போர்த்தந்திரங்களை மாற்றியமைத்தல்" எனும் அத்தியாயத்தில் வெற்றிக்கு பல பாதைகள் உள்ளன என்பதை சன்சூ நமக்கு நினைவூட்டுகின்றார். இருப்பினும் ஒரு தலைவரின் சில பொதுவான குண குறைபாடுகள் மட்டுமே அவர்களின் இராணுவத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும். அவையாவன, அசட்டுத் துணிச்சல் (சிறைப்படுத்துவற்கு வழிகோலும் கோழைத்தனம்), முன்கோபம் (இது தாக்குதல்களுக்கு ஆளாக நேரிடும்), மென்மையான கௌரவ சுபாவம் (அவமானம் நேர்கையில் நொந்து போகும் மனம்), அதீத அக்கறை (கவலை மற்றும் தொல்லை ஆகியவை அவனைப் பீடிப்பதற்கு வழிவகுக்கிறது) போன்றவனவாகும். உங்களிடமும் உங்கள் தலைவர்களிடமும் உள்ள இந்தக் குறைபாடுகளைக் கண்டறிந்து குறைப்பது போர், வணிகம் மற்றும் வாழ்கையில் வெற்றி பெறுவதற்கு இன்றியமையாதது.

"இராணுவப் பிரயாணம்" என்ற அத்தியாயத்தில் இராணுவ முகாம் அமைத்துத் தாக்குதல் மற்றும் எதிரியின் அடையாளங்களைக் கண்காணித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக சன்சூ குறிப்பிடுகின்றார். உங்கள் சுற்றுப்புறத்தைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் மலைகளை எதிர்கொண்டால், சண்டையிடுவதற்காக உயரத்தில் ஏற வேண்டாம் ஒரு ஆற்றைக் கடந்த பிறகு நீங்கள் அதிலிருந்து வெகு தொலைவில் சென்று பாதி இராணுவம் கடக்கும் போது உங்கள் தாக்குதலைச் செய்ய வேண்டும். சதுப்பு நிலங்களில் சண்டையிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் உங்கள் அருகில் நீரும் புற்களும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மரங்களின் கூட்டம் ஒன்று உனக்கு பின்புறம் இருக்க வேண்டும் ஏனெனில் தரையானது எதிர்பாராத ஆபத்து எதனையும் விளைவிப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு என்று சன்சூ குறிப்பிடுகிறார்.

பறவைகள் பறக்கும் போது ஒலி எழுப்புவது அந்த இடத்திற்கு அடியில் எதிரி பதுங்கியிருப்பதற்கான அறிகுறியாகும். திடுக்கிட்ட மிருகங்கள் தீடீர் தாக்குதல் வருவதைக் குறிக்கின்றன. அதே நேரத்தில் எந்த இடத்தில் கூடினால் அது ஆக்கிமிக்கப்படாமல் இருக்கும் என சன்சூ கூறுகிறார்.

"நிலப்பரப்பு" என்னும் அத்தியாத்தில் ஆறு வகையான நிலப்பரப்புக்கள் தொடர்பாக சன்சூ குறிப்பிட்டுள்ளார். அவை அடைவொண்ணும் நிலப்பரப்பு, சிக்கல் நிலப்பரப்பு, தாமத நிலப்பரப்பு, குறுகிய கணவாய்கள், செங்குத்தான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்கள், எதிரிகளிடமிருந்து நெடுந்தொலைவில் இருக்கக் கூடிய நிலைகள் என்பனவாகும்.

நமது படைவீரர்கள் தாக்கும் நிலையில் இருக்கின்றார்கள் என்று தெரிந்தாலும் எதிரி தாக்குவதற்கு தயாராக இல்லை என்பதை அறியாவிட்டால் வெற்றியை நோக்கிப் பாதித்தூரம் மட்டுமே சென்றுள்ளோம். "தாக்கப்படுவதற்கு உகந்த நிலையில் எதிரி இருக்கிறான் என்பதை நாம் அறிந்து, ஆனால், தாக்குதல் தொடுக்கும் நிலையில் நமது படைவீரர்கள் இல்லை என்பதை நாம் அறியவில்லை எனில், வெற்றியை நோக்கிப் பாதித்தூரம் மட்டுமே சென்றுள்ளோம்." மேலும் எதிரிகள் தாக்குவதற்குத் தயாராக இருப்பதையும் நம்ஆட்கள் தாக்கும் நிலையில் இருப்பதையும் அறிந்தால், ஆனால் போர்களத்தின் தன்மை சண்டையை சாத்தியமற்றதாக ஆக்குகிறது என்பதை அறியவில்லையெனில் அப்போதும் வெற்றியை நோக்கிப் பாதித்தூரம் மட்டுமே சென்றுள்ளோம் என சன்சூ போரின் வெற்றியின் அடைவினை கூறியுள்ளார்.

"ஒன்பது நிலவரங்கள்" எனும் அத்தியாத்தில் போர்க்கலை ஒன்பது வகையான நிலங்களை இனம் காண்கிறது. அவையாவன கலைதல் களம், எளிமைக்களம், சச்சரவுக் களம், திறவொளிக் களம், சந்திக் களம், அபாயக் களம், சிரமக் களம், தடைகள் சூழ்களம், மரணபயங்கரக்களம் என்பனவாகும். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று சர்ச்கைக்குரிய களமாகும். அது ஆக்கிரமிக்கப்பட்டால் இரு தரப்பிற்கும் பெரும் நன்மையைத் தரும். எனவே அதை வைத்திருப்பவர்களுக்கு மறுபுறம் போரில் நன்மை உண்டு வெற்றி உறுதி செய்யப்படும் என சன்சூ கூறியுள்ளார்.

"நெருப்புத் தாக்குதல்" எனும் அத்தியாயத்தில் நெருப்புத் தாக்குதல் தொடர்பாக சன்சூ கூறியுள்ளார். "நெருப்புத் தாக்குதலில் ஐந்து வழிகள் உள்ளன." அவையாவன, படைவீரர்களை அவர்களது முகாமில் தீயிட்டுக் கொளுத்தி விடுதல், பண்டக சாலையைத் தீயிட்டுக் கொளுத்தி விடுதல், பொருட்கள் கொணரும் வாகனங்களை தீயிட்டு கொளுத்தி விடுதல், ஆயுத உற்பத்திச் சாலையையும் இராணுவத்தளபாடக் கிடங்கையும் தீயிட்டுக் கொளுத்திவிடுதல், எதிரிப்படையின் மத்தியில் நெருப்புக் குண்டை வீசியெறிதல் என்பனவாகும்.

நெருப்பால் தாக்குதலின் பிரதான நோக்கம் எதிரியை குழப்பத்தில் தள்ளுவதற்கே ஆகும். எதிரியின் முகாம்களுக்கு அருகில் தீ மூட்டும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வேகமான பரவுவதற்கு காற்றை எதிர்கொள்ளும் பக்கமாக செய்ய வேண்டும் என குறிப்பிடுகிறார்.

"ஒற்றர்களைப் பயன்படுத்துதல்" என்ற போர்க்கலையின் இறுதி அத்தியாயத்தில் சன்சூ "சாதாரண மனிதர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களை எய்துவதற்கும் விவேகமிக்க அரசன் மற்றும் சிறந்த தளபதி ஆகியோருக்குத் திறனளிப்பது என்னவெனில்..... அது முன்னறிவு" என குறிப்பிடுகிறார்.

முன்னறிவிப்பு என்பது தலைவர்கள் தங்கள் எதிரியின் பலம் மற்றும் பலவீனங்களை புரிந்து கொள்ளவும், அவர்களின் அடுத்த நகர்வுகளை கண்காணிக்கவும் உதவுகிறது. இது ஒரு அறிவொளி பெற்ற ஆட்சியாளரை உருவாக்குகிறது. முன்னறிவைப் பெற ஒரு தலைவர் ஒற்றர்களின் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்த வேண்டும். சன்சூ ஒற்றர்களை ஐந்து வகையாக வகைப்படுத்தி கூறியுள்ளார். அவைகளாக உள்ளூர் ஒற்றர்கள், உள்ளுரை ஒற்றர்கள், கட்சிமாறி ஒற்றர்கள், மரணகதி ஒற்றர்கள், ஜீவித ஒற்றர்கள் ஆகும். ஒற்றர்களின் வேலைக்காக அவர்களுக்கு முறைப்படி சன்மாணம் வழங்கினாலொழிய நம்பிக்கையான ஒற்றர்களைப் பெறுவதற்கு சாத்தியமே இல்லை. எனவே ஒருவர் மற்ற இராணுவத்தை விட உளவாளிகளுடன் நெருக்கமான உறவைப் பேண வேண்டும். ஒற்றர்கள் மூலமே எதிரியின் நகரத்திலுள்ள விவகாரங்களை கண்டுபிடிக்க முடியும். அதன் மூலம் எதிரி பற்றிய அறிவு கிடைக்கும்.

உளவாளிகள் போரில் மிக முக்கியமான அங்கம் ஏனெனில் இராணுவத்தின் திறன் உளவாளிகளைச் சார்ந்துள்ளது. உளவாளிகள் இல்லாத இராணுவம் காதுகளும் கண்களும் இல்லாத மனிதனைப் போன்றது என சன்சூ கூறுகின்றார்.

போர்களத்தின் வகைகளுக்கு ஏற்ப பல்வேறு நடவடிக்கைகள், ஆக்கிரமிப்பு அல்லது தற்காப்பு தந்திதேராபாயங்களின் செயல்திறன் மற்றும் மனித இயல்பின் அடிப்படை விதிகள் ஆகியவை போர்க்கலையில் மிக முக்கியமானவை.

சமூகத்திற்குள் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக போரின் நோக்கத்தை சன்சூ இறுதியில் வலியுறுத்தியுள்ளார். அமைதியில் போருக்குத் தயாராகுங்கள். போரில் அமைதிக்கு தயாராகுங்கள். போர்க்கலை அரசுக்கு இன்றியமையாதது. இது வாழ்க்கை மற்றும் இறப்பு பற்றிய விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பிற்கான அல்லது அழிவுக்கான பாதை, எனவே எந்த சூழ்நிலையிலும் போரை புறக்கணிக்க முடியாது என சன்சூ குறிப்பிட்டுள்ளார்.

சன்சூ 13 அத்தியாயங்களிலும் கூறப்பட்டுள்ள விடயங்களினை தொகுத்து நோக்குகின்ற போது, ஒரு யுத்தம் தொடங்குவதற்கு முன்பே வெற்றி கொள்ளப்படுகிறது. யுத்தம் செய்யாமலே எதிரியை வெற்றி கொள்வதுதான் சிறந்த போர்க்கலை, நீங்கள் பலவீனமாய் இருக்கும் போது பலமுள்ளவர்கள் போல காட்டிக் கொள்ளுங்கள், பலமுள்ளவர்களாக இருக்கும் போது பலவீனமாய் இருப்பதாக காட்டிக் கொள்ளுங்கள். உன் எதிரியைக் குறித்து மட்டும் நீ அறிந்து வைத்திருந்தால் நீ வெற்றி பெறும் ஒவ்வொரு யுத்தத்திற்கும் சமமான தோல்வியை சந்திக்க வேண்டி வரும். உன்னுடைய திட்டங்கள் காரிருள் போன்று யாருக்கும் வெளிப்படாததாய் இருக்க வேண்டும், நீ உன் செயலைத் துவக்கும் போது இடியைப் போன்றும் இருளை கிழித்தெறியும் மின்னலைப் போன்றும் எல்லோரும் பார்க்கும் வண்ணம் அது வெளிப்பட வேண்டும், குழப்பத்தின் நடுவே வாய்ப்புக்களும் அமைந்திருக்கின்றன. வெற்றியாளனாக இருக்கும் ஒரு போர் வீரன் முதலில் வெற்றி கொண்ட பிறகே யுத்தத்திற்கு செல்கிறான், தோல்வியான ஒரு போர் வீரன் யுத்தகளத்தில் இறங்கிய பின்பு வெற்றியடைவதற்கு திக்குமுக்காடிக் கொண்டிருப்பான். உன் எதிரியைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டுமெனில் நீ உனக்கு எதிரியாக வேண்டும். உலகின் தலைசிறந்த போர் வாளாக இருந்தாலும் உப்புத் தண்ணீரில் படும் பொழுது அது துருப்பிடிக்க ஆரம்பிக்கும். ஒரு புத்திசாலியான போர்வீரன் யாரெனில் யுத்தங்களில் வெற்றி பெறுபவன் மட்டுமல்ல மிக எளிதாக யுத்தங்களில் வெல்பவனே. மனமானது ஒன்றைச் செய்ய தீர்மானித்து ஒரு முகப்பட்டால் உடலானது அதற்கு ஏற்றவாறு என்ன வந்தாலும் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டே இருக்கும். மிகப் பெரிய விளைவுகள் சிறிய ஆற்றலின் மூலம் உருவாக்கப்படுகின்றது. எப்பொழுது யுத்தம் செய்ய வேண்டும் எப்பொழுது யுத்தம் தவிர்க்க வேண்டும் என்று அறிந்தவனே யுத்தத்தில் வெற்றி பெறுவான், ஒரு யுத்தத்திற்கான யுக்தி மற்றும் ஏற்றவாறு செயல்படும் திறன் இவை இரண்டுமே ஒரு யுத்தத்தில் யார் வெற்றி பெறப் போகிறார்கள். என்பதைத் தீர்மானிக்கிறது போன்ற போர்க்கலை தொடர்பான தகவல்களை வழங்குவதாக காணப்படுகின்றது.

எனவே தொகுத்து நோக்குகின்ற போது சன்சூவின் (sun tzu) போர்க்கலை (The Art of War) என்னும் நூலில் உள்ள 13 அத்தியாயங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கங்களும் போர் எனும் பகுதியை ஆராய்ந்து விபரிப்பதாகவே அமைந்து காணப்படுகின்றது.

ஆகவே போர்க்கலை என்னும் புத்தகமானது பல நூற்றாண்டுகள் அதன் தோற்றம் கடந்தாலும் இன்றும் அதில் இருக்கின்ற தந்திரோபாயங்களினை விளையாட்டு, வணிகம், அரசியல், தனிப்பட்ட வாழ்வில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் போர்க்கலை உண்மையில் போரின் பாதி கலையாகும். ஏனெனில் அது கடற்படைப் போரைக் குறிப்பிடவில்லை. போரின் மாறுபட்ட சித்தாந்தங்களின் செல்வாக்கை அடையாளம் காணத் தவறிவிட்டது போன்ற விமர்சனங்களும் இப் புத்தகத்தின் மேல் இருக்கத்தான் செய்கிறது. எது எவ்வாறாயினும் போர்க்கலை எனும் இப் புத்தகமானது போரின் முக்கியத்துவத்தையும், அது ஒரு நாட்டிற்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதனையும், போரின் ஆழத்தினையும். வெளிப்படுத்துவதாக காணப்படுகின்ற ஒரு சிறந்த நூல் என்றே நான் கூறுவேன்.

சர்வதேச அரசியலின் இயல்பாகவே போர் (war) என்பதாக இன்று மாறிவிட்டது. எனவே போரினைத் தடுத்து அமைதியினை ஏற்படுத்துவதென்பது ஒரு சவாலாகவே உள்ளது. போரினை ஏற்படாது விடுவதற்கு பல காரணங்கள் இருந்தாலும் சர்வதேச உலகம் போரினையே நாடுகின்றது. ஏனெனில் "ஒவ்வொரு அரசுகளும் தமது தேசிய நலனைப் பேணவே விரும்புகின்றன. இதனால் ஏனைய அரசுகளுடன் மோதல்களில் ஈடுபட விரும்புகின்றன." ஆகவே சர்வதேச அரசியலில் இன்று போரும் சமதானமும் (war and peace) என்பது ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக மாறிவிட்டன என்பது எனது கருத்தாகும். (ஏனெனில் போர்களைத் தொடர்ந்து சமாதானச் செயற்பாடுகளும் தீர்வுகளும் இடம்பெறுகின்றன.)

போரானது சர்வதேச அரங்கில் தொடர்ந்து அரங்கேற்றப்படும் நிகழ்வாக காணப்பட்டு வருகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக சமகாலத்தில் இடம்பெறுகின்ற போர்களாக ரஷ்யா-உக்ரைன் போர், சீனா, தைவான் நெருக்கடி, ஏத்தியோப்பியா மற்றும் ஏமன் போர்கள் போன்றவற்றினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

எனவே முடிவாக போர் (War) இன்றி உலகிலுள்ள நாடுகள் தமது அதிகாரத்தினையும் தேசிய நலனையும் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்கின்ற நிலைக்கு உலகம் மாற்றப்பட்டு விட்டது. ஆகவே தான் போரானது அரசுக்கு இன்றியமையாதது என சன்சூ (sun`tzu) குறிப்பிடுகின்றார். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியலில் இருந்து போரினை பிரிக்க முடியாது என்பது எனது கருத்தாகும்.

**உசாத்துணை நூல்கள்.**

நடராஜன்.இரா, (2009), "சுன் சூவின் போர்க்கலை", கண்ணதாசன் பதிப்பகம்.

கிருஷ்ணமோகன்.த, (2010), "அரசியல் விஞ்ஞானம் அரசியல் செயற்பாடும், அரசியல் செயல்முறையும்" சேமமடு பதிப்பகம்.

செல்வாக.V.K,(N.Y), "பொதுத்துறை நிர்வாகம் சர்வதேச உறவுகள் மோதல் மோதல் முகாமைத்துவம்", வணிக வளநிலையம் கொழும்பு.

சோக்லிங்கம்.எஸ்.டி, (2018), "லியோடால்ஸ்டாயின் போரும் அமைதியும்", சீதைப்பதிப்பகம்.

Macmillan.P.(2011), "Global politics" palgrave foundations.

சரவணன்.P.C, (2018) "நாடுகளுக்கு இடையிலான யுத்தம், யுத்தத்துக்கான காரணங்கள், யுத்தத்தின் வகைகள் www.dinamai.com

ஹனியா.ஸீ,(2021), "யுத்தத்தால் இழப்பது அதிகம் கிடைப்பது குறைவு" www.bctamil.com

(N.A), (2020), "Book Review: The Art Of war – Sun tzu", www.eternalisedoffioial.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் இருகட்சி முறையின் பண்புகளை விமர்சன ரீதியாக ஒப்பிட்டு ஆராய்க.

ஜனநாயக அரசியல் சமுதாயத்தில் அரசியல் கட்சிகள் சக்தி வாய்ந்த அமைப்புக்களாக விளங்கி ஜனநாயக பிரதிநிதித்துவ ஆட்சி முறையில் பெரும் பங்கு வகிக்கின்றன. அரசியல் கட்சிகள் இல்லாமல் தேர்தல்களைப் பற்றி சிந்திப்பது எளிதல்ல. ஜனநாயக அம்சங்களை மக்கள் அனுபவிப்பதனை உறுதிப்படுத்துவதும் ஊக்குவிப்பதும் அரசியல் கட்சிகளாக (Political Parties) உள்ளன. அரசியற் கட்சிகள் மக்களின் கருத்துக்களை திரட்டி கருத்துக்களின் அடிப்படையில் வெவ்வேறு கட்சிகளாக உருவாகின்றன. அரசியற் கட்சிகள் ஒழுங்கமைக்கப்பெற்ற சமூக நிறுவனங்களாக விளங்கி தேர்தல் மூலமாக ஆட்சியாளர்களை தெரிவு செய்து அரசாங்கத்தை நடாத்தும் அமைப்புக்களாகும். இவைகள் அதிகாரத்தினை அடைவதனை நோக்கமாகக் கொண்டவைகளாக காணப்படுகின்றன. 90% க்கும் மேற்பட்ட நாடுகள் அரசியற் கட்சிகளினூடாகவே தம்மை ஆட்சி செய்பவர்களை தெரிவு செய்கின்ற ஜனநாயகமானது காணப்படுகின்றது. இவ் அரசியல் கட்சிகள் 19 ஆம் நூற்றாண்டின் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஏற்பட்ட பிரதிநிதித்துவ ஒழுங்கமைப்புடனும் வாக்குரிமை விஸ்தரிப்புடனும் தோற்றம் பெற்றது. மேலும் “பாராளுமன்ற அரசாங்க முறை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் கட்சிகள் என்பது தவிர்க்க முடியாத, இன்றியமையாத அம்சமாக விளங்க ஆரம்பித்தன.”

முதலாம் உலக நாடுகளில் உள்ள அரசியற் கட்சிகள் ஜனநாயக மரபுகளுக்கு அமைவாகவும் முதுர்ச்சி அடைந்த அரசியல் கலாசாரத்தினையும் கொண்டிருக்கிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உள்ள அரசியல் கட்சிகள் வன்முறை அரசியல் கலாச்சாரத்தினை பிரதிபலிப்பதாகவும் ஜனநாயகத்திற்கு மாறாக தொழிற்படுபவையாக காணப்படுகின்றது.

அரசியற் கட்சி என்றால் என்ன என்பது தொடர்பாக பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். அந்தவகையில் மக்ஸ் வெபர் என்பவர் சர்வஜன வாக்குரிமை, மக்கள் அபிப்பிராயம், ஜனநாயகம் என்பவற்றின் குழந்தையாக அரிசியற் கட்சிகள் உள்ளன என்றார். மைக் ஐவர் என்பவர் அரசியல்திட்டப்படி சில கொள்கைகள் மூலம் அரசாங்கத்தை நடாத்த விளையும் கூட்டமே அரசியற் கட்சிகள் என்கின்றார். இவ்வாறு பல்வேறுபட்டவர்கள் பல்வேறு கருத்துக்களை குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் அரசியற் கட்சி தொடர்பான பொது வரைவிலக்கணமாக கருத்து வழி மக்களை ஒன்று திரட்டி ஆட்சியைக் கைப்பற்ற முனையும் சாதனம் என்பதாகும்.

அரசியற் கட்சிகளானது தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்தல், மக்கள் அரசியல் அறிவினை வளர்த்தல், பலமான எதிர்க்கட்சியினை உருவாக்குதல், பொதுசன அபிப்பிராயத்தினை உருவாக்குதல் போன்றவற்றினை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு கொண்டு காணப்படுகின்றது. மேலும் அரசியற் கட்சிகள் தமக்கேயுரிய அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டுள்ளன. அரசியல் கட்சியின் செயற்பாட்டில் மக்கள் பங்கேற்கின்றனர், அரசியல் கட்சிகள் அதிகாரப் போரட்டத்தில் ஈடுபடுகின்றனர் போன்ற பண்புகளையும் சிதறியுள்ள பொதுசன அபிப்பிராயத்தினை ஒன்று திரட்டுதல், வாக்காளருக்கு அறிவூட்டல், எதிர்காலத் தலைவர்களை பயிற்றுவித்தல் போன்ற பணிகளையும் கொண்டு காணப்படுகின்றது.

கட்சிகளை அமைத்துக் கொள்ள அனுமதியளிக்கும் அரசின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டும் கட்சி முறைமை மூன்று வகையாக வகைப்படுத்தப்படுகின்றது. அவையாவன, ஒரு கட்சி முறைமை, இரு கட்சி முறைமை, பல கட்சி முறைமை என்பதாகும்.

எதிர்க்கட்சி எதுவுமின்றி ஒரு கட்சி மட்டுமே ஆட்சி செய்யக் கூடியதாக இருக்கும் முறையே ஒரு கட்சி முறைமை எனப்படும். இதற்கு உதாரணமாக சீனாவினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். பலம் வாய்ந்த பல கட்சிகள் ஒரு நாட்டில் செயற்படுகின்ற நிலை காணப்படுமாயின் அந் நாடு பல கட்சி முறைமை நாடு என அழைக்கப்படும். உதாரணமாக இலங்கை, சுவீடன், பிரான்ஸ், இந்தியா போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஒரு நாட்டில் உள்ள கட்சிகளில் இரு கட்சிகள் மாத்திரம் பெரும்பான்மை மக்களின் ஆதரவினைப் பெற்று ஆட்சியதிகாரத்தினைப் பெறக் கூடிய வல்லமையினைக் கொண்டிருக்குமாயின் அந் நாடு இரு கட்சி முறைமை நிலவும் நாடு என அழைக்கப்படும். உதாரணமாக அமெரிக்கா, பிரத்தானியா பேன்றவற்றினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். அந்தவகையில் இங்கு அமெரிக்காவினதும், பிரித்தானியாவினதும் இரு கட்சி முறையின் பண்புகளை விமர்சன ரீதியாக ஒப்பிட்டு ஆராய்வதாக இக் கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

கட்சி முறையின் வகைப்பாடுகளில் இருகட்சி முறை பிரதானமாக காணப்படுகின்றது. இரு கட்சிமுறை நிலவுகின்ற நாட்டில் கருத்தியல் ரீதியாக இரு பிரிவினராக காணப்படுவதுடன் பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றுகின்ற கட்சி ஆளும் கட்சியாகவும் மற்றைய கட்சி எதிர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியாகவும் காணப்படுவதையும் பலமான ஆளும் கட்சியும் பலமான எதிர்க் கட்சியும் நல்லாட்சியினை நோக்கி அரசாங்க செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற இரு கட்சி முறையினருக்கு ஏதுவானதாக காணப்படுகின்றது.

அமெரிக்க கட்சி முறையானது அமெரிக்க அரசியல் யாப்பின் தோற்றத்துடன் ஆரம்பமானது எனலாம். அரசியல் யாப்பினை உருவாக்கும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஒரு பிரிவினர் மாநிலத்திற்கு அதிகாரம் அதிகளவு இருத்தல் வேண்டும் என வற்புறுத்தினர். இவர்கள் கூட்டாட்சிப் பிரிவினர் என அழைக்கப்பட்டனர். இவர்களே பின்னர் குடியரசுக் கட்சி என தங்களுடைய பிரிவுக்குப் பெயரினை உருவாக்கிக் கொண்டனர். மத்திய அரசுக்கு அதிகாரம் வேண்டும் என இன்னொரு பிரிவினர் வற்புறுத்தினர். அவர்கள் எதிர்க்கூட்டாட்சிப் பிரிவினர் என அழைக்கப்பட்டனர். இவர்களே பின்னர் ஜனநாயகக் கட்சி என தங்களின் பிரிவைக் கூறிக் கொண்டனர். "ஜிம்மிகாட்டர், கிளின்டன் போன்றவர்கள் ஜனநாயகப் கட்சியைச் சேர்ந்தவர்கள் புஸ் போன்றவர்கள் குடியரசுக் கட்சியை சேர்ந்தவர்கள்" ஆவார்.

அடுத்ததாக பிரித்தானியாவின் அரசியற் கட்சி முறையின் வரலாற்றினை நோக்கும் போது உலகிற்கு பாராளுமன்ற அரசாங்க முறையை அறிமுகப்படுத்தியிருந்தது. இதே போல் "அரசியல் கட்சிகளையும் முதன் முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு இங்கிலாந்தேயாகும்." இங்கு கட்சிகள் தோன்றுவதற்கான சூழல் 1641 இல் ஏற்பட்டது. மன்னனுக்கு மறுப்பாணை அதிகாரம் இருக்க வேண்டும் என்பது தொடர்பாக பாராளுமன்றத்தில் இரு குழுக்கள் உருவாகின. மன்னனுக்கு மறுப்பானை அதிகாரம் இருக்க வேண்டும் என வலியுறுத்திய குழுவினர் டோரிகள் (Tories) என அழைக்கப்பட்டுள்ளனர். காலப்போக்கில் இவர்கள் கன்சர்வேடிங் கட்சியாக (Conservative Party) மாற்றிக் கொண்டனர். மறுபுறம் பாராளுமன்றத்திற்கே முதன்மையான இடம் வழங்கப்படல் வேண்டும் என வலியுறுத்தியவர்கள் விக்குகள் (Whig) என அழைக்கப்பட்டனர். இவர்கள் பின்னர் தங்களை தாராண்மைக் கட்சியாக (Liberal Party) மாற்றிக் கொண்டனர்.

கைத்தொழில் புரட்சியின் பின்னணியில் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக 1906ஆம் ஆண்டில் தொழிற்கட்சி உருவாக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் கன்சர்வேடிங் கட்சி, தாராண்மைக் கட்சி ஆகிய இரண்டுமே மாறி மாறி ஆட்சியமைத்துக் கொண்டது. பின்னர் தாராண்மைக் கட்சியின் செல்வாக்குக் குறைய கன்சர்வேடிங் கட்சியும், தொழிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியுமே அரசாங்கத்தை அமைக்க கூடிய பலமான கட்சிகளாக காணப்படுகின்றன. இவ்வாறாக அமெரிக்காவினதும், பிரித்தானியாவினதும் அரசியற் கட்சி முறையின் வரலாற்றுப் பின்னணியானது காணப்படுகின்றது.

அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் கட்சிமுறையின் வளர்ச்சியானது "அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு அப்பால் புறம்பாக ஏற்பட்ட ஒன்றாகும்." அமெரிக்காவில் ஆளும் கட்சியாக ஜனநாயகக் கட்சியும் எதிர்க்கட்சியாக குடியரசுக் கட்சியும், பிரித்தானியாவில் கன்சர் வேடிங் கட்சி ஆளும் கட்சியாகவும் எதிர்க்கட்சியாக தொழிற்கட்சியும் சமகாலத்தில் காணப்பட்டு வருகின்றது. இவ்வாறு அமெரிக்காவிலும், பிரித்தானியாவிலும் காணப்படுகின்ற இருகட்சிகளின் தோற்றமும் வளர்ச்சியும் மாறி மாறி ஆட்சியமைத்துக் கொள்கின்ற நிலைப்பாடும் இரு கட்சி முறை நிலைத்து நிற்பதற்கு வழிவகுத்தன. இதனால் இம் முறைமை அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் அரசியல் வாழ்வில் ஓர் பாகமாகவே அமைந்து விட்டதாகையால் இதை பிரித்தானிய அமரிக்க மக்கள் ஒரு வழக்கமாகவே எடுத்துக் கொள்கின்றனர். இதனடிப்படையில் பார்க்கின்ற போது அரசியலமைப்புக்கு புறம்பான வளர்ச்சி இருப்பெரும் கட்சிகள் இருத்தல் ஆகியவை அமெரிக்கா பிரிட்டன் ஆகிய நாடுகளில் உள்ள கட்சிகளுக்கிடையே நிலவும் ஒற்றுமைகளாக காணப்படுகின்றது.

அமெரிக்கா, பிரித்தானியாவிலுள்ள இரு கட்சிகள் தேசியத் தேர்தல்களில் வெற்றியின் எல்லைக்கு அருகில் கூட எப்போதும் வந்ததில்லை. சாதாரணப் பெரும்பான்மைத் தேர்தலை உடைய ஒற்றை உறுப்பினர் தொகுதிகளே இரண்டு கட்சிகளின் வளர்ச்சிக்குச் சாதகமாக இருக்கின்றன. அந்தவகையிலும் இங்கு ஒற்றுமைத் தன்மையானது நிலவுகின்றது.

அமெரிக்காவில் இரண்டு பெரிய கட்சிகளுக்கிடையே இலட்சிய அல்லது கோட்பாட்டளவில் வேறுபாடுகள் எதுவும் கிடையாது. அவற்றின் தேர்தல் மேடைகளும் கோட்பாடில்லாமல் சொல் அளவிலே வேறுபடுகின்றன. ஆனால் பிரித்தானியாவில் இரு கட்சிகளுக்கிடையே கொள்கையிலும் திட்டங்களிலும் தெளிவான வேறுபாடுகள் இருக்கின்றன. அதாவது கன்சர் வேடிங் கட்சி உற்பத்திச் சாதனங்களையும் பங்கீட்டுச் சாதனங்களையும் கட்டுப்படுத்துகின்ற செல்வந்தர் வகுப்பினரின் நலன்களைப் பாதுகாக்க முயற்சிக்கின்றது. அதே வேளை தொழிற்கட்சி "உற்பத்தி, பங்கீடு போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களில் தொழிலாளர் நலன்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றது.''

அமெரிக்காவில் இலட்சிய வரையறைகள் என்பனவெல்லாம் மறைந்து விடுகின்ற காரணத்தினால் அங்கு இரு கட்சி முறை இருப்பதாகக் கூறுவதே பெரும்பாலும் சரியான கூற்று அல்ல என அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஓர் அமெரிக்கர் ஒரு குறிப்பிட்ட கட்சியிலிருக்கின்றார் என்றால் அதற்கு அடிப்படையிலானது என்பது அக் கட்சி அவர் வாழும் பிரதேசத்தில் நன்றாக வேரூன்றியுள்ளது என்பதே ஆகும். சுருங்கக் கூறின் ஒரு அமெரிக்கக் கட்சியானது கொள்கைகள் நிறைந்த ஒரு அமைப்பாக அல்லாமல் பல நலன்கள் சேர்ந்த ஒரு தொகுதியாகும்.

அமெரிக்காவில் அரசியல் கட்சிகள் தேசியக் கட்சிகளாக இருப்பதால் அவற்றில் அமைப்பைப் பற்றிக் குறிப்பிடுதல் வேண்டும். ஆனால் அவற்றின் அமைப்பை உருவாக்கும் ஈர்ப்பு சக்திகள் மாநிலங்களிலும் நகரங்களிலும் கவுன்ட்டிகள் எனப்படும் உள்ளாட்சிப் பிரிவுகளிலும் காணப்படுகின்றன. இந் நிலை பிரித்தானியாவின் நிலைக்கு முற்றிலும் மாறுபட்டது ஆகும். அங்கு கட்சி அமைப்பின் முழு ஆற்றலும் தெளிவாக உயர்மட்டத்திலேயே காணப்படுகின்றது. அமெரிக்கக் கட்சிகள் மிகவும் தளர்வாக அமைக்கப்பட்டுள்ளன. அங்கு கட்சி ஏணியில் கீழிருந்து மேலாகவோ மேலிருந்து கீழாகவோ அதிகாரம் செலுத்துவதில்லை. உண்மையான இணைப்பு இல்லை.

பிரித்தானியாவில் கட்சிகளின் அமைப்பு, ஒழுங்குவிதிகள் போன்றவற்றில் கடுமையான கட்சிக் கட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் ''கட்சிகளுக்கு மாறாக வாக்களித்தல், கட்சி மாறுதல் போன்ற செயற்பாடுகள் அங்கு இடம்பெறுவதில்லை.'' இவ் வலிமையான கட்டுப்பாடு பாராளுமன்ற அரசாங்க முறை சிறப்பாகச் செயற்படுவதற்கான கூட்டுப் பொறுப்பினையும் வழங்குகின்றது. ஆனால் அமெரிக்காவில் வலிமையான கட்சிக் கட்டுப்பாடு என்பது காணப்படவில்லை.

அமெரிக்காவில் பாராளுமன்ற அரசாங்கமுறை நடைமுறையில் இல்லாததால் இரு கட்சிகளிடையே போட்டித்தன்மை அதிகளவில் இல்லை. ஆனால் பிர்த்தானியாவில் பாராளுமன்ற அரசாங்கமுறை நடைமுறையில் உள்ளதால் இரு கட்சிகளுக்கிடையே அதிகமான போட்டித்தன்மை என்பது காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியாவின் கட்சிகள் தமது நோக்கங்களை அடைவதற்கு பாராளுமன்ற ஜனநாயக முறையினையும், சட்ட ஆட்சி முறையினையும் ஏற்றுக் கொண்டுள்ளன. இதனால் அங்கு வன்முறை நிலவுவதில்லை. இரு பிரதான கட்சிகளும் வன்முறையினை கவனமாக தவிர்த்துக் கொள்கின்றன. வட அயர்லாந்து கத்தோலிக்க மக்களின் கட்சியான சின்பெயின்சி கட்சி வன்முறையை ஆதரித்த போதும் அதுவும் தற்போது முழுமையான வகையில் ஜனநாயக வழிக்கு திரும்பியுள்ளது. இவ் அம்சமானது அமெரிக்காவில் எவ்வாறு காணப்படுகின்றது என நோக்கினால் அங்கும் இரு பிரதான கட்சிகளும் வன்முறைகளை தவிர்த்துக் கொள்கின்றனர் குறிப்பாக கருத்து மோதல்கள் காணப்படினும் வன்முறை என்பது இங்கும் காணப்படவில்லை.

பிர்த்தானியாவில் இரு பிரதான கட்சிக்கிடையே நிலவும் நிதானமான போக்கும் விட்டுக்கொடுக்கும் தன்மையும் கூட ஜனநாயக வழிமுறைக்கு ஊக்கமளிக்கின்றது. ஆளும் கட்சியின் எதிர்க்கட்சியின் விமர்சனம் செய்வதற்கான உரிமைக்கு நன்கு மதிப்பளிக்கின்றது. எதிர்க்கட்சியும் தமது பொறுப்பினை உணர்ந்து நன்று செயல்படுகின்றது. எதிர்க்கட்சியின் எதிர்க்கும் உரிமையை ஆளுங்கட்சி ஏற்றுக் கொள்வதைப் போல ஆளும் கட்சியின் ஆளுமை உரிமையினை எதிர்கட்சி மதிக்கின்றது. இவ்வாறான இணக்க நிலை பாராளுமன்ற முறை சிறப்பாகச் செயற்பட வழிவகுக்கின்றது. இவ் விடயத்தினை அமெரிக்காவுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமானால் இவ் அம்சத்தோடு ஒத்துப் போவதாக காணப்படுகின்றது. ஆனால் அமெரிக்காவிலிருப்பது ஜனாதிபதி அரசாங்க முறையாகும்.

பிரித்தானியாவின் தேசிய ரீதியிலான முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் மற்றும் நெருக்கடிகளின் போது இரண்டு பிரதான கட்சியும் தமது போட்டி நிலையினை மறந்து ஆளும் கட்சி எத்ர்க்கட்சி என்கின்ற நிலைப்பாட்டிலிருந்து விடுபட்டு ஒத்துழைப்புடன் செயல்படும் தன்மையினையும் காண முடிகிறது. உதாரணமாக, ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக ஈராக்கிற்கான அமைதிப்படையினை அனுப்புதல், இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பாக இரு கட்சியும் ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன. அமெரிக்காவிலும் அரசியற்கட்சிகள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஒரே கருத்துடையனவாக விளங்குகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் கட்சி முறையானது கட்சி உறுப்பினர்களை சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கிறது. ஆனால் பிரித்தானியாவில் "உறுப்பினர்களின் தனித்தன்மையை கட்சி முறை அழித்து விடுகின்றது."

பிரித்தானியாவில் ஜனநாயகப் பண்புகள் உயர்ந்தளவில் காணப்படுவதனால் மக்கள் போதுமான அளவு அரசியல் ரீதியில் விழிப்புடையவர்களாக காணப்படுவதால் இரு கட்சி முறை பிரித்தானியாவில் ஆரோக்கியமாக பரீட்சிக்கப்பட்டு வருகிறது. ஆளும் கட்சி தனது பொறுப்புக்களை தட்டிக்கழிக்கின்ற சந்தர்ப்பத்திலும் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பத்திலும் அதனை எதிர்க் கட்சி தட்டிக் கேட்கிறது.

இதே போன்று கொள்கைகள் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சமூக நலத் திட்டங்களை உரிய காலப்பகுதியில் அமுலாக்கல் செய்து அவற்றின் முழு பயன்களையும் பெற்றுக் கொள்ள எதிர்க்கட்சி இடையூறாகக் காணப்படுகின்ற போது ஆளும் கட்சியானது எதிர்க்கட்சியினது எதிர்ப்பு நடவடிக்கைகள், பிரச்சாரங்களினை அனுமதித்தல், எதிர்க்கட்சிக்கு போதுமான மதிப்பளித்து நடத்தல், இவ் இரண்டு கட்சிகளும் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வதற்கு சுயமதிப்பீடுகளினை காலத்திற்கு காலம் மேற்கொண்டு வருகின்றன. இவ்விரு கட்சிகளும் சட்டவாட்சிக்கு முதன்மை வழங்கி செயற்படுவதனால் நீண்ட காலமாக இவ் இரண்டு கட்சிகளையுமே மக்கள் ஆதரித்து வருகின்றன. அமெரிக்காவிலும் "கட்சிக்குள் ஜனநாயகப் பரவலாக்கம் சிறப்பாகச் செயற்படுகின்றது" என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் இரு கட்சி முறையானது ஸ்திரமானதும் நிலையானதுமான அரசாங்கத்தை அமைக்க மிகப் பொருத்தமானதாக காணப்படுகின்றது. குறிப்பாக பிரித்தானியா, அமெரிக்காவானது முதல் தர நாடுகளாக இருப்பதற்கு இரு கட்சி முறையும் முக்கிய காரணங்களில் ஒன்றாக காணப்படுகின்றது.

பிரித்தானியாவின் சமூகக் கட்டமைப்பானது இரண்டு கட்சிக்கு ஏற்றதாகவே காணப்படுகிறது. பிரித்தானிய மக்களது கல்வி அறிவு வாழ்க்கைத்தரம் மற்றும் கலாசாரப் பண்பாடு என்பன இவர்களை இருசாராராகவே இனம் காட்டியது. ஒரு சாரார் மாற்றங்களினை மெதுவாக உள்வாங்குபவர்களாகவும் மற்றைய சாரார் மாற்றங்களினை விரைவில் உள்வாங்குபவர்களாகவும் காணப்படுவார். இத்தகைய நிலையில் இனரீதியாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி ரீதியாக மற்றும் பிரதேச ரீதியாக அரசியற் கட்சிகள் தோற்றம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாக காணப்படுகின்றன. இத்தகைய பின்னணியில் பிரித்தானியா இவ்விரு கட்சிகளுக்கு மட்டுமே தனது முழுமையான ஆதரவை வழங்குகின்றன. மற்றைய கட்சிகளினை எந்த வகையிலும் ஊக்குவிக்காதவர்களாக காணப்படுகின்றனர். ஆனால் அமெரிக்காவில் காணப்படுகின்ற பிரதான இரு கட்சிகளுக்கிடையே முன்னர் குறிப்பிட்டதைப் போல கொள்கை, கோட்பாட்டு ரீதியில் அதிகமான வேறுபாடுகள் இல்லாத காரணத்தினால் இனரீதியாக, மொழி ரீதியாக மற்றும் பிரதேச ரீதியாக அரசியற் கட்சிகள் தோற்றம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றது. உதாரணமாக அமெரிக்காவில் வெர்மான்ட் முற்போக்கு கட்சி, ஓரிகானின் சுதந்திரக் கட்சி, பசுமைக்கட்சி, சுதந்திரக்கட்சி, உழைக்கும் வர்க்க கட்சி போன்ற பல்வேறு வகையான கட்சிகள் காணப்படுகின்றன. இருப்பினும் பிரித்தானியாவினைப் போலவே ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி என்கின்ற இரண்டு கட்சிகளுக்குமே மக்கள் அதிக ஆதரவினை வழங்கி வருகின்றார்கள்.

பிரித்தானியாவில் கட்சி விசுவாசம் என்பது காணப்படுகின்றது. ஆனால் அமெரிக்காவிலும் கட்சி விசுவாசம் என்பது நிலவுகின்றது எனக் கூறமுடியாது. எடுத்துக் காட்டாக கட்சிகளின் இரகசியங்களை கசியவிடுதல், தீர்மானங்கள் சட்டசபையில் எடுக்கின்ற போது ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் தீர்மானங்களுக்கு எதிராகவும் ஆதரவாகவும் வாக்களிப்பதுண்டு.

அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் இரு கட்சி முறையின் முக்கிய அம்சமான எதிர்க்கட்சி காணப்படுவதனால் பாராளுமன்றத்திற்கும் மக்களுக்குமிடையே இணைப்பினை உருவாக்கக் கூடியதாக காணப்படுகின்றது.

அமெரிக்காவின் கட்சியின் உள்ளூர் மட்டப் பிரிவுகள் மிகவும் செல்வாக்குடையவர்களாக இருப்பதோடு உள்ளூர் மட்ட தலைவர்களும் செல்வாக்குடையவர்களாக விளங்குகின்றார். ஆனால் பிரித்தானியாவில் இவ்வியல்பினை காண்பது சாத்தியமற்றதாகும். இதற்கு காரணம் பிரித்தானியாவில் என்னதான் இரு கட்சி முறை நிலவினாலும் ஒற்றையாட்சி காணப்படுவதே ஆகும்.

பிரித்தானியாவின் இரு கட்சிகளும் உட்கட்சி முரண்பாடுகள் மற்றும் கருத்தியல் ரீதியான பிளவுகளை ஏற்படாத வகையில் நடந்து கொள்கின்றதுடன் அவ்வாறு பிரிந்து செல்கின்ற அரசியல் தலைவர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களது அரசியல் அதிகாரம் கேள்விக்குரியதாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. மேலும் பிரித்தானியாவின் இரு கட்சி முறையானது செல்வாக்குடன் வளர்ச்சியடைந்து வர அங்குள்ள அமுக்கக் குழுக்கள் ஏனைய அமைப்புக்களுக்கு பிரதான காரணங்களாக உள்ளது. ஏனெனில் அமுக்கக் குழுக்கள் அரசியல் கட்சிகளாக எழுச்சி அடைவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்ற போதும் அவ்வாறு செயற்படுவதில்லை. அதனை மக்களும் அனுமதிப்பதில்லை.

அமெரிக்காவில் "அரசியற்கட்சிகள் பல விதங்களில் நலன் பேணும் குழுக்களைப் போன்ற தன்னிச்சையான ஓர் ஒழுங்கமைப்புக்களாகும்." ஆனால் ஒரு முக்கியமான வேறுபாடு அடிப்படையில் நலன் பேணும் குழுக்கள் அரசாங்க வழிமுறைகள் மீது செல்வாக்குச் செலுத்த முயற்சிப்பதும் அரசாங்கத்தின் அதிகாரம் மிக்க பதவிகளுக்கு தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதனூடாக அந்த வழிமுறைகளைக் கட்டுப்படுத்தி அதன் கொள்கைகளை தன் வழிப்படுத்துவனவாக அரசியற் கட்சிகள் உள்ளன.

ஆகவே அமரிக்காவின் இரு கட்சி என்பவை அரசாங்க அதிகாரத்தைப் பெற்று நடைமுறைப்படுத்தும் ஒரு ஒழுங்கமைப்பு எனலாம். அமரிக்க அரசாங்கத்தின் வழிமுறைகளில் இன்றியமையாத ஒரு பகுதியாக அரசியற் கட்சிகள் காணப்படுவதனால் மற்றைய தன்னிச்சையான ஒழுங்கமைப்புடன் சேர்ந்து அவற்றை நாம் இனங்காண்பதில்லை. உண்மையில் பெரும்பாலான அமெரிக்க மக்கள் ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி ஆகிய இரண்டையும் ஜனநாயகத்தில் தனிப்பட்டவர்களுக்கு தமது அதிகாரத்துடன் தெடர்புபடும் பிரதான ஒழுங்கமைப்பு வழியாகவே அரசியற்கட்சிகள், நலன் பேணும் குழுக்கள் காணப்படுகின்றன. இந்தவகையில் நாம் அமெரிக்க அரசியற் கட்சி முறையின் வழி அரசியற் கட்சிகள் "தொடர்புபடுத்தும் இயந்திரவியல்" எனக் கொள்ளலாம். ஜனநாயக வழிமுறைகளில் தொடர்புபடுத்தல் என்பது இன்றியமையாத ஒரு பண்பாகும்.

அமெரிக்க இரு கட்சி முறை பற்றி தொகுத்து நோக்குகின்ற போது இரு கட்சி முறையினுடைய இயல்புகள் பல சாதகமான தளத்தினையும், பல பாதகமான தளத்தினையும் ஏற்படுத்தி இருக்கின்றது. அந்தவகையில் நன்மைகளாக, அமெரிக்காவின் அரசியற் கட்சிகள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஒரே கருத்துடையனவாக விளங்குகின்றன, கட்சியின் உள்ளூர் மட்டப் பிரிவுகள் மிகவும் செல்வாக்குடையனவாக இருப்பதோடு உள்ளூர் மட்டத் தலைவர்களும் செல்வாக்குடையவர்களாக விளங்குகின்றனர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிக் கட்டுப்பாடு அதிகமில்லாததனால் கட்சி உறுப்பினர்கள் சுதந்திரமாக செயற்பட முடிகிறது, பிரதான கட்சிகள் கொள்கைகளுக்கிடையே பெரிய வேறுபாடுகள் காணப்படாததனால் கட்சிகளுக்கிடையேயான பகைமையுணர்வு மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது, ஜனாதிபதி வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் உள்ளூர் மட்டப் பிரதிநிதிகள் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். கட்சிக்குள் ஜனநாயகப் பரவலாக்கம் சிறப்பாகச் செயல்படுகின்றது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தீமைகளாக, தேசிய ரீதியான முடிவுகளை எடுக்கும் போது உள்ளூர் மட்டப் பிரிவுகள் அதிகளவில் தடையிடப் பார்க்கின்றன, கட்சிக் கட்டுப்பாடு இல்லாததனால் பல முக்கியமான விடயங்களில் கட்சித்தலைமையின் தீர்மானத்திற்கு எதிராகவும் உறுப்பினர்கள் தொழிற்படுகின்றனர், கட்சியின் மேல்மட்டத்திற்கும் கீழ்மட்டத்திற்குமிடையே உண்மையான இணைப்பு காணப்படுவதில்லை. இதனால் மேல் மட்டம் எடுக்கும் முடிவுகளை பொருட்படுத்தாமல் இருக்கின்ற நிலையும் கீழ்மட்டத்திலுண்டு, கட்சிகளுக்கு உறுதியான, வலுவான கொள்கைகள் என்பது இருப்பதில்லை, கொள்கைகள் தொடர்பான அனைத்து உறுப்பினர்களுக்கிடையேயும் ஒருமைப்பாடு இருப்பதில்லை, தேர்தல் காலங்களில் மட்டுமே கட்சிகள் சுறுசுறுப்புடன் செயற்படுகின்றன ஏனைய காலங்களில் கட்சிகளிருக்கின்றன என்பதை அடையாளம் காண்பதே கடினமாகவுள்ளது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அதே போன்று பிரித்தானியாவிலும் இதன் இரு கட்சி முறையினுடைய இயல்புகள் பல சாதகமான தளத்தினையும் பல பாதகமான தளத்தினையும் ஏற்படுத்தி இருக்கின்றது. அந்தவகையில் நன்மைகளாக, இரு கட்சி முறை நிலவுவதால் ஒருகட்சி அரசாங்கத்தினை நடாத்தவும் மற்றைய கட்சி அரசாங்கத்தினை கண்காணிக்கவும் முடிகிறது, வெளிநாட்டு விவகாரங்களில் இரு கட்சிகளும் ஒரே கொள்கையினை பின்பற்றுகின்றன, தேசிய விவகாரங்களில் பொதுக்கருத்தினை உருவாக்க முடிகிறது, பொதுமக்களை பேணி வளர்க்க முடிகிறது, பாராளுமன்றத்திற்கும் மக்களுக்குமிடையே இணைப்பினை கட்சிகள் உருவாக்குகின்றன, கொள்கைகளை செயற்படுத்த கட்சி முறை உதவுகின்றது ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

தீமைகளாக, சுயேட்சை உறுப்பினர்கள் அரசியலில் ஈடுபடுவதை கட்சி முறை தடுக்கிறது, உறுப்பினர்களின் தனித்தன்மையை கட்சிமுறை அழித்து விடுகின்றது, மூன்றாவது கட்சி செல்வாக்கில்லாததால் நாட்டின் பன்மைத் தன்மையை பலவீனப்படுத்துகின்றது, இரு கட்சிகளுக்குமே மோசமாகி விட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு மாற்று இல்லை, அரசாங்கத்தின் அனைத்து முயற்சிகளையும் எதிர்க்கட்சி எதிர்த்து செயற்படும் நிலையிலிருத்தல், காலணித்துவ நாடுகள் தொடர்பாக இரு பிரதான கட்சிகளுமே பிற்போக்கான கொள்கையினை பின்பற்றல் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

ஆகவே தொகுத்து நோக்குகின்ற போது அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் இரு கட்சி முறை நடைமுறையிலிருந்தாலும் ஒப்பீட்டு ரீதியாக பார்க்கின்ற போது அமெரிக்கா, பிரித்தானியா ஆகியவற்றின் இரு கட்சி முறையின் பண்புகள் பல்வேறுபட்ட அடிப்படையில் ஒற்றுமையினை விட வேறுபாடுகளை அதிகமாகக் கொண்டு காணப்படுகின்றன. குறிப்பாக பாராளுமன்ற அரசாங்க முறை நடைமுறையில் இல்லாததால் கட்சிகளிடையே போட்டித்தன்மை அதிகளவில் இல்லை, கட்சி விசுவாசமும் உறுப்பினர்களுக்கு இருக்கின்றது எனக் கூற முடியாது, தீர்மானங்கள் சட்டசபையில் எடுக்கின்ற போது ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் தீர்மானங்களுக்கு எதிராகவும் ஆதரவாகவும் வாக்களிப்பதுண்டு, தேர்தல் காலங்களில் மட்டும் இக் கட்சிகள் சுறுசுறுப்பாக இயங்குகின்றன. இதனால் "அமெரிக்க கட்சிகள் தேர்தல் தொகுதி இயந்திரங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன." போன்ற அம்சங்கள் அமெரிக்காவினை பிரித்தானியாவின் இரு கட்சி இயல்புகளில் இருந்து வேறுபடுத்துகின்றது. ஆனால் சில ஒற்றுமைகளும் காணப்படத்தான் செய்கிறது எனவும் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

எனவே அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் இரு கட்சிமுறையே நடைமுறையில் காணப்பட்டாலும் அந்தந்த நாடுகளின் அரசியல் அமைப்பு, மக்களினுடைய அபிலாசைகள், கட்சிக் கட்டமைப்பு, மரபுகள் கலாசாரங்கள், ஆட்சி முறைகள் என்பன வெவ்வேறு விதமாக காணப்படுவதனால் கட்சி முறையின் இயல்புகளும் ஒப்பீட்டளவில் வேறுபட்டுக் காணப்படுகின்றது என்பதே உண்மை.

மேலும் பிரித்தானியாவில் பாராளுமன்ற அரசாங்கமுறை காணப்படுவது போல அமெரிக்காவில் ஜனாதிபதி அரசாங்க முறை காணப்படுவதும் இரு கட்சி முறையின் இயல்பியல் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஒரு நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சியில் தேர்தல் முறைமை மட்டும் முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. அரசியற் கட்சிகளின் தன்மையும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது. அந்தவகையில் உலகில் அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் அரிசியற் கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமைகள் உதாரணமாக பேசப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முடிவாக அரசியற் கட்சிகளின் வகைப்பாட்டில் இரு கட்சி முறை மாத்திரம் அல்ல பல கட்சிமுறை, ஒரு கட்சி முறை என்பனவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகவே காணப்படுகின்றன. ஆகவே எவ்வகைப்பாடாக இருந்தாலும் சரி உலகலாவிய ரீதியில் அரசியல் கட்சிகள் என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகவே காணப்படுகின்றன.

எனவே இன்றைய சமகால உலகில் அரசியற் கட்சிகளினூடாகவே பிரதிநிதித்துவ ஜனநாயகமானது உறுதிப்படுத்தப்படுகின்றது. காலத்திற்கு காலம் இடம் பெறுகின்ற தேர்தல்களில் அதிகளவு வாக்குகளினைப் பெறுகின்ற கட்சி அதிகளவு ஆசனங்களைப் பெறும் கட்சி ஆளும் கட்சி ஆகவும் பாராளுமன்றத்தில் தமது பிரதிநிதிகளை முன்னிறுத்தி தொழிற்படுவதனால் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் அடித்தளமாக அரசியற் கட்சிகள் காணப்படுகின்றன எனலாம்.

இறுதியாக அரசியற் கட்சிகள் என்பது மந்திரி சபை அரசாங்க முறை செயற்படுகின்ற நாடுகளில் மட்டுமல்ல ஜனாதிபதி அரசாங்க முறை, சோசலிச அரசாங்க முறை உள்ள நாடுகளிலும் தவிர்க்க முடியாத அம்சங்களாக உள்ளன. அந்தவகையில் "நவீன அரசியல் புவியீர்ப்பு மையமாக அரசியற் கட்சிகள் விளங்குகின்றன" எனலாம்.

என்னுடைய வாதம் இங்கு என்னவெனில் ஒரு நாட்டிற்கு அவசியமானதும் ஜனநாயகத்தின் அம்சமாகவும் காணப்படும் அரசியற் கட்சிகளானது சமகாலங்களில் முழுக்க முழுக்க குறிப்பாக தென் பூகோள நாடுகளில் அதிகாரத்தினை மட்டுமே கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறார்களே தவிர அதனைத் தாண்டி தங்களுடைய கடமைகளினை உற்றுப்பார்க்காத தன்மையினையே காணப்படுகிறது. ஆனால் ஐரோப்பிய நாடுகளில் இத் தன்மை குறைவானதாகும். அதிலும் குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா போன்றவற்றின் அரசியற் கட்சிகள் தங்களுடைய கொள்கைகளுக்கு முதன்நிலைப்படுத்தி பொது நலனையும் நோக்காகக் கொண்டு செயற்படுகின்றார்கள் என்பது உண்மையில் வரவேற்கத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


யோதிலிங்கம்.அ.சி, (2018), "இலங்கையில் அரசியல் கட்சி முறைமை", குமரன் புத்தக இல்லம்.

யோதிலிங்கம்.அ.சி, (2016), "அரசறிவியலில் ஓர் அறிமுகம்", குமரன் புத்தக இல்லம்.

யோதிலிங்கம்.அ.சி, (2008), "ஒப்பியல் அரசாங்கம்", குமரன் புத்தக வில்லம்.

சிவராஜா.அ, (2004), "ஒப்பீட்டு அரசியல்", குமரன் புத்தக இல்லம்.

புன்னியாமீன்.பீ.எம், (1997), பிரித்தானியாவின் அரசியல் முறை", சிந்தனை வட்டம்.

சர்ஜீன்.ஏ,றிபான்.எம்.ஏ, (2012), "சமகால அரசறிவியல் எண்ணக்கருக்கள்", இஸ்லாமிக் புக் ஹவுஸ்.

ராதா.R, பூர்ணிமா திலகம்.G, சாந்தி.S, சலவணகுமார்.R.A, (2020), "சமகால அரசியல் அமைப்பு", சான்லாக்ஸ் பதிப்பகம்.

பக்கிரி சங்கர். ரா.பு, (1960), "அரசியல் அமைப்புக்கள் (ஐரோப்பிய நாடுகள்)", சென்டர் ஆர்ட் பிரஸ்

கிருஜா.S, (2007), "அமெரிக்க அரசாங்க முறை ஒரு கண்ணோட்டம்" - அரசறிவியலாளன் - இதழ் - 02, அரசறிவியல் ஒன்றியம், அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அஜந்தினி.வு, (2003), "பிரித்தானியாவின் அரசியல் முறை" - காலதரிசனம், யாழ். பேராதனை பல்கலைலைக் கழகங்களின் வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம், புதிய உயர் கல்லூரி.

(N.A), (2021), "அரசியல் கட்சிகள்", WWW.vikaspedia.com

கிருஷ்ணன். ஏ.பி, (2016), "இரு பெரும் கட்சிகள்", WWW.hindutamil,com

லிங்கம், (2021), "அரசியல் கட்சிகள்", WWW.freetnnooks.com

(N.A), (2015), "பிரித்தானியப் பாராளுமன்றத் தேர்தல் நடந்தது என்ன?" , WWW.inioru.com

(N.A), (2021), "கட்சி முறைகளின் வகைகள்", WWW.tettnpsc.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹவர்மாக்ஸ் (J.Habermas) மறுசீரமைப்பு ஜனநாயகம் பற்றிய சிந்தனைகளை இலங்கையின் நடைமுறை சார்ந்து ஆராய்க.**

ஹேபர்மாஸ் (J.Habarmas) 1929 இல் ரைன் மாகாணத்தில் உள்ள டுசெல்டார்ட் நகரில் பிறந்தார். இவர் ஐரோப்பாவின் கடைசி சிறந்த பொது அறிவு ஜீவிகளில் ஒருவராகவும் ஜனநாயகத்தின் தத்துவத்திற்கு முக்கிய பங்களிப்பாளராகவும் கருதப்படுகிறார்.

உலகில் பல்வேறு மாற்றங்கள், நிகழ்வுகள், பல்வேறு முன்னேற்றங்கள், பல்வேறு போர்கள், சிக்கல்கள் என்பன நடைபெறுகின்றது. இவை எல்லாவற்றுக்குமான தீர்வினை முன்வைப்பவர்காளாக சிந்தனையாளர்கள் காணப்படுகின்றார்கள். அந்தவகையில் உலகலாவிய ரீதியில் இருக்கக் கூடிய உண்மையான மனிதர்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல்களைக் குறித்து தத்துவார்த்த ரீதியாக அலசி ஆராய்ந்து அதற்கான ஒரு தீர்வினை முன்வைத்தவர் தான் ஹேஹபர்மாஸ் (J.Habermas) ஆவார்.

ஹவர் மாஸ் (Habermas) ஹிட்லரினால் யூதர்களுக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்களை அறிந்த போது அவருடைய மனம் வேதனை அடைந்து கொதிப்படைந்தது. ஏன் இப்படி சமுதாயம் போர் என்கின்ற வெறி பிடித்து அலைகிறது. ஏன் ஒரு இனம் இன்னொரு இனத்தினை நசுக்க முயற்சிக்கிறது. இதை விட உலகில் எந்த மாதிரியான தத்துவக் கட்டமைப்பில் வேலை செய்கிறது என்று யோசிக்கத் தொடங்கினார்.

இந்த பின்னணியில் உலகமயமாதல் பற்றியும், உலகத்தில் நடக்க கூடிய பல்வேறு போட்டி மனப்பான்மை குறித்தும் இவற்றிலிருந்து எவ்வாறு மனித குலம் விடுதலை அடைய முடியும் என்பது பற்றியும் மாஸ் தொடர்ந்து ஆய்வினை மேற்கொள்கின்றார். அந்தவகையில் இவருடைய ஆய்வுகள் எப்போதும் சரி மிகப் பிரமாண்டமாக உலகத்தில் பேசப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தவகையில் ஹேபர்மாஸின் (J.Habermaas) மறுசீரமைப்பு ஜனநாயகம் பற்றிய சிந்தனைகளை இலங்கையின் நடைமுறை சார்ந்து ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். எனவே ஹேபர்மாஸின் மறுசீரமைப்பு ஜனநாயகம் பற்றிய சிந்தனைகளை ஆராய்வது இங்கு பொருத்தமுடையதாக இருக்கும். என்னதான் அறிவொளி காலத்தில் அறிவு முதலாளித்துவத்தால் கட்டப்பட்டாலும் என்னதான் அறிவு ரீதியான அடக்குமுறைகள் சமுதாயத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவப்பட்டாலும் அதற்கு மறுபுறம் என்கின்ற ஒன்று உண்டு. அந்த மறு முகம் தான் ஜனநாயகம் என்றார் ஹேபர்மாஸ்.

ஜனநாயகப் பண்புகள் கொண்ட அதிகாரம் தான் ஒரு நாட்டில் இருக்க வேண்டும் என்கிறார் ஹேபர்மாஸ் எந்த நாட்டில் சுதந்திரமாக விமர்சனம் செய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதோ அங்கு தான் ஜனநாயகம் செழிக்கும் என்கிறார். அதனடிப்படையில் தான் அவர் அறிவு பற்றிக் கூறும் போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். ஹேபர்மாஸ் குறிப்பிடுகின்ற அறிவுகளாக விழுமியம் சார்ந்த அறிவு, கருவி சார் அறிவு, மானிட விடுதலைக்கான அறிவு என்பனவாகும். முதலாளித்துவத்தின் நலன்களை பாதுகாக்கின்ற அறிவு தான் விழுமியம் சார்ந்த அறிவும், கருவிசார் அறிவும் காணப்படுவதாக கூறுகின்றார். இன்று திறன் வளர்ச்சி என்பது முதலாளியம் அதன் வளர்ச்சிக்கு ஏற்றால் போல் அறிவைத்தான் இன்றைக்கு கல்வி நிறுவனங்களின் மூலமாகவும் பிற நிறுவனங்களின் மூலமாகவும் விதைக்கப்படுவதனை காணக் கூடியதாக உள்ளது என்றார். இலங்கையினை எடுத்துக் கொண்டால் ஹேபர் மாஸ் குறிப்பிடுவதைப் போல இடம்பெறுகின்றது. இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்ற போர்வையின் கீழ் சர்வதிகார அடக்குமுறை நிறைந்த ஒரு நாடாகவே காணப்படுகின்றது. ஆனால் மக்கள் தாங்கள், ஜனநாயகம் என்கின்ற போர்வையின் கீழ் சுரண்டப்படுவதனை அறியாதவர்களாகவே காணப்படுகிறார்கள்.

ஹேபர்மாஸ் மூன்றாவது அறிவாக மானிட விடுதலைக்கான அறிவு தொடர்பாகவும் விவாதித்துள்ளார். மானிட விடுதலைக்கான அறிவு என்பது மானிட சமூகம் அடக்கு முறையிலிருந்து விடுதலை பெறுவதனை சிந்திப்பதற்கான அறிவு என்றார். எந்தவகையான அரசு என்றாலும் அதன் கீழிருக்கும் மக்களினை அடக்கி வைப்பது இயல்பாகும். அதுமட்டுமல்ல தற்கால நவீன அரசுகள் அடக்குமுறையினை மிகவும் புத்திசாலித்தனமாக செயற்படுத்தும் என்கின்றார். உதாரணமாக இலங்கையினை எடுத்துக் கொண்டால் சமகாலத்தில் ஆட்சி புரிந்த ஹோட்டபாய ராஜபக்ஷவாக இருக்கட்டும் அவரது குடும்பத்தினராக இருக்கட்டும் ஜனநாயக ரீதியாக ஆட்சியினை கைப்பற்றிக் கொண்டு மக்களினையும் நாட்டினையும் மிகவும் தந்திரமாக சுரண்டிய போக்கினை காணக் கூடியதாக உள்ளது. இதனை விட இலங்கை தமிழர்களை வேதனைப்படுத்தல், அவர்களின் உரிமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்தல், அவர்களது வளங்களை சுரண்டுதல் போன்ற தன்மையினை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஜனநாயகம் என்பதும் சரி, அடக்குமுறை என்பதும் சரி, அறிவிலிருந்து தான் பிறக்கின்றன. இந்த அறிவொளியின் வளர்ச்சியினால் நவீனத்துவம் ஒரு புறம் அழிவுக்கு இட்டுச் சென்றாலும் மறுபுறம் "ஜனநாயகம்" என்ற செழுமையான பகுதியைக் கொண்டிருக்கிறது என்றார்.

மேலும் மக்கள் விடுதலைக்கான அறிவு என்பது என்னவென்றால் எந்தமாதிரியான கருத்தியல்கள் எல்லாம் நம் மீது திணிக்கப்பட்டுள்ளது. கருத்தியலுக்குப் பின்னால் எந்தவிதமான நலன்கள் ஒழிந்து உள்ளது. அந்த கருத்தியல்கள் எந்த விதமான முகமூடியினை அணிந்து கொண்டுள்ளது என்பதனை புரிந்து கொள்வது தான் விமர்சன அறிவு என்று மேலும் வலியுறுத்துகின்றார் மாஸ் (habermas).

இலங்கையில் ஜனநாயகம் என்கின்ற கருத்தியலை பேசிக் கொண்டு அதன் மறைவில் திட்டமிடப்பட்ட பேரினவாதமும் திட்டமிடப்பட்ட காய்நகர்த்தலான குடும்ப அரசியலும் அரங்கேற்றப்பட்டு வந்ததை வருகின்றதைக் காணலாம். இதற்கு எடுத்துக்காட்டாக இலங்கை கல்வித்திட்டத்தில் குறிப்பாக 1 - 10 வரையான பாடப்புத்தகத்தில் பௌத்த மதத்தினை முதன்மைப்படுத்தி பல பாடங்கள் காணப்படுகின்றது. இது ஹேபர்மாஸ் குறிப்பிட்டதைப் போன்று அதாவது கருவிசார் அறிவு, விழுமிய அறிவு போன்றவற்றினைப் பயன்படுத்தி முதலாளிய வகுப்பினர் திட்டமிட்டதான ஒரு சுரண்டலாக இவர் குறிப்பிட்டுள்ளதை இங்கு நினைவுப்படுத்தல் வேண்டியது அவசியமாகும். ஆகவே இலங்கையில் ஜனநாயக முகமூடி அணிந்து கொண்டு முதலாளியங்கள் செய்யும் சுரண்டலினை மக்கள் அறியாதவர்களாகவே காணப்படுகின்றார்கள். இலங்கை சிங்கள அரசாங்கம் தங்களுடைய மதத்தினை கல்வித்திட்டத்தினூடாக மாணவர்கள் (தமிழ்) மனதில் பதித்து மற்றும் உறையச் செய்து வருகின்றது. இதனை விட இலங்கை மக்களுக்கு பயன்தரும் திட்டங்களாகக் கூறி மக்களுக்கு நம்பிக்கையினை வரவைத்து பின்னர் அவர்களுக்குத் தெரியாமலே அவர்களை ஏமாற்றுதல் போன்றவர்களாக இலங்கை மக்கள் காணப்பட்டு வருகின்றார்கள்.

எனவே இத்தகைய சுரண்டல்களை விளக்கிக் கொள்வதற்கு ஹேபர் மாஸ் குறிப்பிட்டதைப் போன்று விமர்சன அறிவு மக்களிடத்தே இருத்தல் வேண்டும். அப்போது தான் இலங்கையில் மறுசீரமைப்பு ஜனநாயகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Reconstructive Democracy) ஏற்படும். இதற்கான முயற்சிகள் இலங்கையில் நடாத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். இதற்கான எடுத்துக்காட்டாக இலங்கை அரசுக்கெதிரான போராட்டம் இடம் பெற்று வருவதனைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இலங்கையில் இதுவரையும் ஜனநாயகம் என்பது உயர் குழாம் அரசியலை அல்லது அரசியல் கட்சிகளை அடியொட்டியே இதுவரை காலமும் விவாதிக்கப்பட்டது. குறிப்பாக மேல்தட்டு வர்க்கத்தின் விருப்பங்களையே வெளிப்படுத்தியுள்ளது ஜனநாயகம். இதனை சற்று பின்னரே இலங்கை மக்கள் அறிந்து விமர்சித்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் காலிமுகத்திடலில் இடம்பெற்ற போராட்டங்களின் நடைமுறைகள், ஒழுங்குகள், அதில் காணப்படும் ஒழுக்கம் அல்லது கட்டுப்பாடு அல்லது பரஸ்பர மரியாதை, பன்மைத்துவதிற்கு மதிப்பளித்தல், பெண்களுக்கான பாதுகாப்பு போன்ற காரணிகள் ஜனநாயக சித்தாந்தத்தினை மீள் கற்பனை செய்வதற்கும், புதிய சட்டகத்திற்குள் இருந்து ஜனநாயகத்தினை நோக்குவதற்குமான பரந்த வாய்ப்பினை வழங்கியுள்ளது.

எனவே ஜனநாயகத்தை வலுப்படுத்த அல்லது மறுசீரமைக்க ஹேபர் மாஸ் மேற்குறிப்பிட்டதைப் போல அறிவொளியினை மக்கள், சிவில் சமூகம் பெற வேண்டும். இதனை விட ஜனநாயகத்தின் வெற்றி தோல்வியை அரசு, சிவில் சமூகம் மற்றும் பொதுத்துறை ஆகியவை தீர்மானிக்கின்றன என்றார்.

ஆகவே பொதுக் கோளம் (Public Sphere) என்பது ஹேபர்மாஸின் கருத்துக்கிணங்க ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும். ஜீர்கன் ஹேபர்மாஸ் (1996) தனது **"சிவில் சமூகம் மற்றும் அரசியல் பொதுக் கோளம்"** என்ற கட்டுரையில் பொதுக்கோளம் ஒரு சமூக அனுபவம் என்று கூறுகிறார். இது ஒரு நிறுவனத்தின் கொள்கைகள் அல்லது கட்டமைப்புக்களை தழுவவில்லை. இதில் உறுப்பினர்களோ தலைவர்களோ இல்லை. பொதுக்கோளம் என்பது வெவ்வேறு நபர்களின் கருத்துக்கள் அல்லது பார்வைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அமைப்பாகும். இந்த கருத்துக்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு பொதுவான கருத்தை உருவாக்க ஒன்றிணைக்கப்படுகின்றன. இந்தக் கருத்துக்கள் தகவல் தொடர்பான போக்கில் மீண்டும் உருவாக்கப்படுகின்றன. பொதுக்கோளத்தின் பல்வேறு வடிவங்கள் உள்ளன. அவையாவன அரசியல், மதம், அறிவியல் மற்றும் கலை போன்றவையை குறிப்பிட்டார்.

ஜனநாயகத்திற்கு பேச்சு சுதந்திரம் தேவை என்றும் மேலும் பொதுத்துறையில் செல்வாக்கைக் கொண்ட சில தலைவர்கள் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கள் தங்கள் சுயநலத்திற்காக அதிகாரத்தினை பயன்படுத்திக் கொள்ளலாம். பொதுமக்களுக்கு பதிலாக சிறுபான்மையினருக்கு அதிகாரம் மாற்றப்படுவதால் இத்தகைய நடவடிக்கைகள் ஜனநாயகத்தை அழிக்கின்றன. இதனாலேயே ஹேபர்மாஸ் பொதுக்கோளப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவற்றை வகைப்படுத்தி, சாத்தியமான தீர்வைக் கண்டறிய வேண்டும் என்று கூறினார்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதில் சிவில் சமூகம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஹேபர்மாஸ் சிவில் சமூகத்தை அரசாங்கம் அல்லது எந்தவொரு பொருளாதார இணைப்புக்களிலிருந்தும் வேறுபட்ட அமைப்புக்களாக விவரிக்கிறார். கல்வி நிறுவனங்கள், மதக்குழுக்கள் மற்றும் வெகுஜன ஊடகங்கள் ஆகியவை இதில் அடங்கும். அவை ஹேபர்மாஸ் குறிப்பிடும் பொதுக்கோளத்தை உருவாக்கும் தகவல் தொடர்பு அமைப்புக்களைப் பாதுகாக்கும் தன்னார்வ குழுக்கள், மதக்குழுக்கள் பொதுவாக அரசியலுக்கு மாறாக தார்மீக எல்லைகளை வழங்குகின்றன. மேலும் ஹேபர்மாஸ் விடுதலை மற்றும் சுதந்திரத்தை அனுபவிக்கும் நாகரீக சமூகங்களில் மட்டுமே சிவில் சமூகம் உள்ளது என்றார். மேலும் சிவில் சமூகம் அறிவொளியையும் வழங்குகிறது என்றார்.

ஜனநாயக அரசாங்கம் என்பது மக்களால் நிர்வகிக்கப்படும் அரசாங்கத்தை குறிக்கும் என்றாலும் ஒரு வெற்றிகரமான ஜனநாயகத்திற்கு நம்பகமாக அரசு தேவை அத்தகைய அரசு சமத்துவத்தை ஊக்குவிக்க வேண்டுமே தவிர சர்வதிகாரத்தை ஊக்குவிப்பதாக இருக்காது அல்லது இருக்கக் கூடாது என்றார்.

ஆகவே ஹேபர்மாஸின் மறுசீரமைப்பு ஜனநாயக சிந்தனைகள் இலங்கையின் நடைமுறை சார்ந்து ஆராய்வது என்றால் இலங்கையர்கள் சுமார் 90 ஆண்டு காலம் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை அனுபவித்து வந்தாலும் மக்கள் இன்னும் ஜனநாயகத்தின் பெறுமதியினை உள்ளார உணரவில்லை என்ற விமர்சனம் தொடர்ச்சியாகவே முன்வைக்கப்பட்டு வந்துள்ளது. இதற்கு சுதந்திரத்திற்குப் பின்னர் இடம்பெற்று வந்துள்ள ஜனநாயகத்துக்கு எதிரான சம்பவங்கள் முக்கிய பங்கினை செலுத்துகின்றன. முக்கியமாக இலங்கையர்கள் போராட்டம் செய்து சுதந்திரத்தினை பெற்றுக் கொள்ளவில்லை. அதனால் ஜனநாயக விழுமியங்களின் பெறுமதிகளை அலட்சியம் செய்து சர்வதிகார ஆட்சியாளர்களை குடும்ப ஆட்சியினை ஊக்குவிக்கிறார்கள் என்ற விமர்சனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகத்தை நேசிக்கும் தரப்பினர்களால் தொடர்ச்சியாகவே முன்வைக்கப்பட்டது.

இன்றைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு வினைத்திறனற்ற கடன் முகாமைத்துவம், தவறான பொருளாதார கொள்கைகள் மற்றும் நிதிக் கொள்கைகள், ஊழல் மோசடிகள் மற்றும் பலவீனமான ஆளுமை என்பவற்றிற்கு அப்பால் பெரும்பான்மை மக்கள் சர்வதிகார மற்றும் குடும்ப ஆட்சியினை விரும்பி ஏற்றுக் கொண்டமை மற்றும் அவர்கள் பின்பற்றிய தமிழ் - முஸ்லீம் எதிர்பார்ப்புக் கொள்கையினை நிபந்தனையின்றி ஏற்றுக் கொண்டமை என்பன முக்கிய காரணங்களாக அமைந்து காணப்படுகின்றன.

ராஜபக்ஷ குடும்பத்தினர் மகா சங்கத்தினருடன் இணைந்து கையாண்டு வந்த தீவிர "சிங்கள பௌத்த தேசியவாதமும் நாட்டின் இன்றைய வங்குரோத்து நிலைக்குக் காரணமென வாதிட முடியும்." ஆனால் இன்று நடைபெறுகின்ற போராட்டங்கள் இளைஞர்களை மையப்படுத்தியதாக குறிப்பாக கோட்டபாயவுக்கு வாக்களித்த இலட்சணங்களுக்கான இளைஞர் யுவதிகள் ஜனநாயகத்திற்கான குரல் கொடுப்பதும், அதன் பெறுமதியைப் புரிந்து கொண்டு செயற்படுவதும் புதிய இலங்கை தேசியத்தினை நோக்கிய பயணத்தின் ஆரம்பமாக தென்படுகின்றது. மேலும் இப் போராட்டம் பல வகுப்பினரின் பங்கேற்பினைக் கொண்டதாக காணப்படுகின்றது.

இதுவரை காலமும் குறுகிய இலாபங்களுக்காகவும், பொருள் சார்ந்த நன்மைகளுக்காக வெறும் வாக்காளர்களாக இருந்த இலங்கை மக்கள் இன்று பிரஜைகளாக மாறி வீதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தீவிர மாற்றத்தை கோரி நிற்பது ஜனநாயக மறுசீரமைப்பைக் காட்டுகின்றது.

இந்த போராட்டங்கள் இன்னொரு பக்கம் 74 ஆண்டு வரலாற்றினைக் கொண்ட பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை கேள்விக்குட்படுத்தியுள்ளது. காரணம் பிரதிநிதித்துவ ஜனநாயகம் இலங்கையர்களை வெறும் வாக்காளர் என்ற விடயத்திற்குள் மாத்திரமே மட்டுப்படுத்தியுள்ளது. அதனைத் தாண்டி ஆட்சிமுறை செயற்பாடுகளில் சாதாரண மக்களுக்கு பெயரளவிலான வகிபங்கு வழங்கப்படவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அந்த வகையில் இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பது உயர் குழாம் வர்க்கத்தின் அபிலாஷைகள் மற்றும் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகவே எப்போதும் இருந்து வந்துள்ளது. பெரும் வர்த்தகர்களின் மற்றும் உயர் அரசியல் வர்க்கத்தின் நன்மைகளுக்காகவே பொதுக் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. இது தென்னாசிய நாடுகளில் காணப்படும் பொதுவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாகும். இப் பின் புலத்திலேயே மக்கள் போராட்டங்கள் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை சவாலுக்கு உட்படுத்தியுள்ளதுடன் அதில் காணப்படும் அடிப்படை குறைபாடுகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இதனையே ஹேபர்மாஸ்சும் குறிப்பிட்டுக் கொள்கிறார்.

தற்போது காணப்படும் பிரதிநிதித்துவ ஜனநாயக கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு ஊழல் அற்ற, நேர்மைத்திறன் கொண்ட, தகைமையுள்ள, சரியான கொள்கையுடன் செயற்படக் கூடிய அரசியல்வாதிகளையோ அல்லது தூய்மையான அரசியல் கலாசாரம் ஒன்றினை உருவாக்க முடியாது. ஆகவே இந்தப் போராட்டங்கள் ஜனநாய மறுசீரமைப்பினை வலியுறுத்துகின்றன என்பது வெளிப்படுகின்றது. அத்தகைய மறுசீரமைப்பினை உடனடியாக செய்ய வேண்டும். அதற்கான தருணம் இன்று மலர்ந்துள்ளது.

ஜனநாயக மறுசீரமைப்புக்களில் முக்கியமான அம்சமாக வலியுறுத்தப்படுவது சர்வதிகார ஆட்சியினை ஒழிப்பதாகும். இதுவே ஹேபர்மாஸின் வாதமாகும். குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை ஒழிப்பதாகும். இலங்கையில் ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்கான தடைகள் மற்றும் சமன்பாடுகள் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஹேபர்மாஸ் ஜனநாயகத்தின் வெற்றிக்கு சுதந்திரமான நிதித்துறை, சுதந்திரமான நீதியாக செயற்படும் முத்துறைகள் என்பன அவசியமாகும் என்கிறார். ஒரு நாட்டில் ஜனநாயகம் பலவீனமடைகின்ற போது அங்கு தடைகளும் சமன்பாடுகளும் அரச அதிகாரத்தினை கட்டுப்படுத்துவதில்லை என்ற முடிவுக்கு வரலாம். எனவே ஹேபர்மாஸின் கருத்துப்படி ஒரு நாட்டில் ஜனநாயக மறுசீரமைப்பினை ஏற்படுத்த முதலாளியங்களின் அதிகாரத்தினை கட்டுப்படுத்த தடைகள் மற்றும் சமன்பாடுகள் காணப்பட வேண்டும் என்றார்.

ஹேபர்மாஸ் (Habermas) குறிப்பிட்டதைப் போன்று "அறிவு என்பது அனைத்து தரப்பு மக்கள் நலன் சார்ந்த அறிவாக இருக்க வேண்டும் என்றால் அது ஒரு விமர்சன அறிவாக இருக்க வேண்டும். கூர்மையாக எல்லாக் கருத்தியல்களையும் தோலுரிச்சு பார்க்கக் கூடிய அறிவாக இருத்தல் வேண்டும். அது நம்பிக்கை அடிப்படையில் இருத்தல் கூடாது" என்றார். இதுவே இலங்கையில் தற்போது நிகழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் பிரதிவிம்பமாகவே மக்கள் ஒன்று திரண்டு ஜனநாயகத்திற்கு எதிரான ஆட்சியாளர்களுக்கு எதிராக போராடினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஹேபர்மாஸ் விமர்சன அறிவு தாகமுடையவர்களுக்கே **"தொடர்பு ஆற்றல்"** இருக்கும் ஆனால் இதனை முதலாளியங்கள் தடுக்கும் என்றும், உரையாடலில் அறம் இருக்க வேண்டும் என்றும் உரையாடல் மூலம் உலகத்திலே அமைதியினையும் நம்பிக்கையினையும் உருவாக்க முடியும் என்கிறார். பொதுக்களங்கள் என்பது சமூக ஊடகங்கள் ஆகும். முதலாளியங்கள் நலன்களுக்காக உருவாக்கிய களங்களினை நாங்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். யார் அறத்தின் மீது அக்கறை கொண்டவர்கள் இருக்கிறார்களோ, யார் ஒரு ஜனநாயக பூர்வமான அரசு உருவாக வேண்டும் என்று நினைக்கிறார்களோ அவர்கள் இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதில் உறுதியான சரியான உரையாடலினை முன்வைக்க வேண்டும் என்கிறார் ஹேபர்மாஸ்.

இதனால் முதலாளியத்தாலும் வேறுபட்ட சக்திகளாலும் எங்களை ஏமாற்றி அடிமைகளாக வைத்திருக்கின்ற இந்த அறிவு பேத்தனையை உடைத்து ஒரு விடுதலைக்கான அறிவாக உண்டாக்கி இந்த சமூகத்திற்கு ஒரு ஜனநாயக பூர்வமான சமுதாயமாக உருவாக்க முடியும் என்ற கோட்பாட்டினைத்தான் ஹேபர்மாஸ் குறிப்பிடுகின்றார்.

ஹேபர்மாஸ் குறிப்பிட்ட இவ் சிந்தனையே இலங்கையிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக சமுக வலைத்தளங்களில் அரசாங்கத்திற்கு எதிரான ஆரோக்கியமான உரையாடல்கள் இடம்பெற்று அதன் வாயிலாக ஜனநாயகத்தினை மறு கட்டமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே ஜனநாயக மறுசீரமைப்புக்கு அறிவொளி, தகவல் தொடர்பு ஆற்றல், உரையாடல் அறம் என்பன இருக்க வேண்டும் என தீர்க்கமாக குறிப்பிடுகின்றார். ஹேபர்மாஸின் கோட்பாடுகள் நவீன அரசாங்கங்கள் ஜனநாயகத்தை நடத்தும் விதத்தை பகுப்பாய்வு செய்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் அடிப்படையை வழங்குவதாக காணப்படுகின்றது. ஜனநாயகமயமாக்கல் தொடர்பான ஹேபர்மாஸின் கருத்துக்கள் உண்மையான ஜனநாயகத்தின் அடிப்படையான பங்கேற்பு அரசியலின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவை. இவர் மக்களிடத்தே சிவில் உரிமைகள் மற்றும் சமத்துவத்தினை நிலை நாட்டினார். ஹேபர்மாஸின் சிந்தனைகள் ஜனநாயக ஆட்சி மாற்றம், நவீன மாற்றம் பற்றிய ஆய்வுக்கு இன்றியமையாததாகும். இருப்பினும் இவரது ஜனநாயகக் கோட்பாடுதொடர்பாக விமர்சனங்களும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது இவரது கோட்பாடு சாராம்சத்தில் இலட்சியவாதமானது என்றும் நவீன ஜனநாயக நிறுவனங்களின் கணிசமான ஜனநாயகமற்ற தன்மையைப் புரிந்து கொள்ளத் தவறியது என்றும் குறைகூறப்படுகிறது. மேலும் ஹேபர்மாஸ் ஜனநாயகத்தின் சம்பிரதாயத்தைக் குறைத்து தவறான பொதுமைப்படுத்தல்களை செய்கின்றார் என்றும் குறை கூறப்படுகின்றது.

ஹேபர்மாஸின் ஜனநாயகக் கோட்பாட்டின் மற்ற விமர்சனங்களில் ஒன்று பொதுக்கோளம் பற்றிய அவரது கருத்தைப் பற்றியதாகும். அதாவது சில சிந்தனையாளர்கள் வெகுஜனத் தகவல் தொடர்பு வளர்ச்சியானது இந்தக் கோளம் இருப்பதை சாத்தியமாக்குகின்றது என்கின்றனர். இந்த விமர்சனங்கள் இருந்த போதிலும் நவீன மேற்கத்திய சமூகத்தின் கட்டமைப்புக்களையும் அதன் மாற்றத்தின் வழிகளையும் புரிந்து கொள்வதற்கு ஹேபர்மாஸ் கோட்பாடு மிகவும் முக்கியமானதாகும். நவீன மேற்கத்திய நாகரிகத்தின் சாதனைகளை முற்றிலுமாக சிதைக்க முற்படும் மற்ற கோட்பாட்டாளர்களைப் போலல்லாமல் மாற்றத்திற்கான சாத்தியம் இருப்பதாக ஹேபர்மாஸ் சரியாகக் கூறுகிறார்.

ஆகவே இன்றும் உயிரோடுஇருக்கக்கூடிய மறுசீரமைப்பு ஜனநாயகம் தொடர்பான ஹெபர்மாஸின் சிந்தனைகள் இன்றும் உலகெங்கிலும் உள்ள நாடுகளது ஜனநாயக வளர்ச்சிக்கு உதவுவதாக காணப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கும் போராட்டங்கள் ஹேபர் மாஸின் மறுசீரமைப்பு ஜனநாயகச் சிந்தனைக்கு இணையாண ஒரு தளத்தினையே ஏற்படுத்தி செயல்பட்டு வருகின்றது. இதிலிருந்து அதாவது ஹேபர் மாஸின் சிந்தனையின் அடிநாதத்திலிருந்து நோக்கும் போது இலங்கையின் சூழ்நிலையினை வைத்துப் பார்க்கின்ற பொழுதும் விரைவாக இலங்கையில் ஜனநாயக மறுசீரமைப்பு ஏற்படும் என்றும் இப்போது ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதனையும் தெளிவாக அடையாளம் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

எனவே நவீன கருத்தியலில் ஹேபர்மாஸ் (Habermas) மற்றும் அவரது மறுசீரமைப்பு ஜனநாயகம் தொடர்பான கருத்துக்களும் சிறப்புக்குரியதாக காணப்பட்டு வருகின்றது என்றே கூறிக் கொள்ள வேண்டும்.

எனவே தொகுத்து நோக்குகின்ற போது ஹெபர்மாஸின் மறுசீரமைப்பு ஜனநாயகம் ஏற்படுவதற்கு ஒரு நாட்டில் நான் மேலே குறிப்பிட்டதைப் போன்று **மக்கள் விடுதலைக்கான அறிவு, சுதந்திரமான பேச்சு, தொடர்பாடல் அறிவு (Communicative competence), உரையாடல் அறம் (Discourse ethics)** என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தல் வேண்டும். இதுவே ஹெபர்மாஸ் குறிப்பிடுகின்ற மறுசீரமைப்பு ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கான மார்க்கமுமாகும். ஆகவே இவைகள் தான் ஹெபர்மாஸின் மறுசீரமைப்பு ஜனநாயகம் பற்றிய சிந்தனைகளாகும். ஆகவே இலங்கையிலும் மக்கள் தமது நாடு ஜனநாயக முகமூடி அணிந்த சர்வதிகார நாடு என்பதனை தோலுரித்து பார்த்துள்ளனர். இது ஹெபர்மாஸ் குறிப்பிட்ட மக்கள் விடுதலைக்கான அறிவு, உரையாடல் அறம் போன்றவற்றினாலே ஏற்பட்டுள்ளது. ஹெபர்மாஸின் சிந்தனைக்கு ஏற்பவும் இலங்கையில் காணப்பட்டு வரும் அரசுக்கு எதிரான போராட்டங்கள் ஹேபர்மாஸ் குறிப்பிடுகின்ற விமர்சன பேச்சுக்கள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பவும் பார்க்கின்ற போது இலங்கையில் ஹேபர் மாஸ் (Habermas) குறிப்பிட்ட மறுசீரமைப்பு ஜனநாயகம் இடம் பெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "முதலாளித்துவத்தின் உச்சக்கட்ட வளர்ச்சியே ஏகாதிபத்தியம்" இக்கூற்றை விளாடிமிர் லெனினுடைய சோசலிசக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு பரிசீலிக்குக?

உலகில் வெற்றிகரமான 1ஆவது சோசலிசப் புரட்சியை ரஷ்யாவில் நடாத்திய பெருமை லெனினுக்குரியது. இத்தகைய பெருமைக்குரிய இவர் "1870 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் தேசி சிம்பிர்ஸ்க் (தற்பொழுது உல்யானோவ்ஸ்க்) எனும் ஊரில் பிறந்தார்" அவர் முழுப்பெயர் விளாடிமிர் இல்லிச் உல்யானோவ். ஆனால் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டதும் லெனின் என்னும் பெயரை அவர் ஸ்வீகரிதார். அவர் ஸ்வீகரித்த அந்தப் பெயர் மனித சமூகத்தின் சரித்திரத்தில் நிரந்தர இடம் பெற்றது. இன்று கோடான கோடி மக்கள் இந்தப் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் புது உத்வேகமும் புத்துணர்ச்சியும் பெறுகிறார்கள். அறிஞர்கள் இந்தப் பெயருக்கு மதியாதை செலுத்துகிறார்கள். அந்தளவிற்கு லெனின் தொடர்ந்து போராடுபவராகவும், நாட்டு விடுதலையையும், மாக்சிச சித்தாந்தத்தையும் எவ்விதத்திலும் விட்டுக் கொடுக்காத ஒருவராகவும் சிறந்த கோட்பாட்டாளராக இருந்த அதே சமயம் நடைமுறையில் பெரும் புரட்சிகர வாதியாகவும், மதிநுட்பம், தீர்க்கதரிசனம் என்பவற்றுடன் கடும் உழைப்பு, தியாக உணர்வு போன்ற பண்புகளைக் கொண்டவராகவும் காணப்படுகின்றார். இதனாலேயே 20ஆம் நூற்றாண்டில் உன்னதமான தலைவராக லெனினையே பலர் கருதுகின்றனர்.

லெனின் மாக்சிச சித்தாந்தத்தில் அசையாத நம்பிக்கையும் பற்றும் கொண்டவர். ரஷ்யாவின் உழைக்கும் வர்க்கத்தினரை விடுவிப்பதற்கு அதைத்தவிர வேறு ஒரு சித்தாந்தம் கிடையாது என்ற கருத்தில் உறுதியாக நின்றவர். இந்த நிலைப்பாட்டை மேற்கொண்டிருந்த போதிலும் கால மாற்றங்களையும், ரஷ்யாவினுடைய உள்நாட்டு நிலைமைகளையும் கருத்திற்கொண்டும் மாக்சிசத்தை அனுகினார்.

19 ஆம் நூற்றாண்டில் மாக்சிசம் 20ஆம் நூற்றாண்டின் நிலைமைகளில் சில அமைதிகளை காண வேண்டியது அவசியம் என்று உணர்ந்தார். மாக்சிசத்தை மாற்ற முடியாத அமைதி செய்ய முடியாத ஒரு சித்தாந்தமாக கருதுகிறார். புதிய நிலைமைகளும் தேவைகளும் மாக்சிசத்திற்கு சில அமைதிகளை அவசியப்படுத்துவதாக லெனின் நம்பினார். இதனால் கண்மூடித்தனமான வரட்டு மாக்சிச சித்தாந்தவாதியாக இல்லாமல் நடைமுறை மாக்சிச வாதியாக லெனின் உருவாகினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையில் லெனின், மாக்சிசத்தில் செய்த கோட்பாட்டு அமைதிகளும் புரட்சி பற்றிய அவருடைய அனுபவங்களும் உலகம் முழுவதிலும் உள்ள பெருமளவு சோசலிச வாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. லெனின் தோன்றியிரா விட்டால் மாக்சிசம் வெறும் கோட்பாடகாவே இருந்து மறைந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அது மட்டுமன்றி கோட்பாடாக இருந்த மாக்சிசம் கருத்தியலாக மாறுவதற்கும் லெனினே வழிசமைத்தவர் ஆவார். இதனால் தான் மாக்சிகம் என்பது லெனினின் பின்னர் **"MARXISM – LENINISM"** என்று அழைக்கப்படலாயிற்று. அதாவது லெனினிசம் இல்லாமல் மாக்சிசம் என்பது பூரணம் பெற முடியாது என்று கருதப்படுகிறது.

லெனின் எழுதிய பல நூல்களும் கட்டுரைகளும் மாக்சிசத்தினுடைய பெரும் சொத்துக்களாக கருதப்படுகின்றன. அவற்றில் மூன்று நூல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவைகள் ஆகும். அவை முறையே, ஏகாதிபத்தியம் (முதலாளித்துவத்தின் உச்சக்கட்ட வளர்ச்சி), அரசும் புரட்சியும் (STATE AND REVOLUTION), யாது செய்யப்பட வேண்டும்? (WHAT IS TO BE DONE) என்பனவாகும்.

மாக்சிசத்திற்கு லெனினுடைய பங்களிப்புக்கள் ஏகாதிபத்தியம் பற்றிய கருத்துக்கள், ஒழுங்கமைப்புப் பற்றிய கருத்துக்கள், புரட்சி பற்றிய கருத்துக்கள் போன்ற வழிகளில் தெளிவாக இணங்கான முடியும்.

மாக்ஸ் (MARX) வாழ்ந்த 19 ஆம் நூற்றாண்டில் முதாளித்துவமே நிலவியது. ஆனால் லெனின் வாழ்ந்த 20 ஆம் நூற்றாண்டில் முதாளித்துவ உச்சகட்ட வளர்ச்சியான ஏகாதிபத்தியம் உருவாகி இருந்தது. லெனின் தான் எழுதிய **"ஏகாதிபத்தியம் - முதாளித்துவத்தின் அதி உயர் கட்டம்"** என்ற நூலில் இந்த ஏகாதிபத்தியத்தினுடைய இயல்புகளையும். அதற்கேற்ப சோசலிச சக்திகள் எவ்வாறு தொழிற்பட வேண்டும் என்பதையும் விரிவாக விளக்கியுள்ளார்.

அந்த வகையில் லெனின் "முதலாளித்துவத்தின் ஏகபோகக் கட்டமே ஏகாதிபத்தியம்" என குறிப்பிட்டார். அந்தவகையில் "முதலாளித்துவத்தின் உச்சக்கட்ட வளர்ச்சியே ஏகாதிபத்தியம்" இக் கூற்றை விளாடிமிர் லெனினுடைய சோசலிசக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு பரிசீலிப்பது இங்கு பொருத்தமுடையதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெனினுடைய ஏகாதிபத்திய கருத்துக்களில் "முதலாளித்துவத்தின் உச்சக்கட்ட வளர்ச்சியே ஏகாதிபத்தியம்" என்று குறிப்பிட்டிருப்பது மிக முக்கியம் வாய்ந்த கருத்துக்களில் ஒன்றாகும். மேலும் ஏகாதிபத்தியம் வலுப்பெற்ற பின்னணியிலே சோசலிசம் ஏற்பட்டது என்பது லெனினுடைய வாதம் ஆகும். ஏகாதிபத்தியத்தின் விளைவுதான் சோசலிசப்புரட்சி ஏற்பட்டது என்றும் கூறுகிறார்.

"ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் மிக உயர்ந்த வடிவம் என்றும், அழுகினாலும் முதலாளித்துவம் தான் ஏகாதிபத்திய வடிவம் எடுத்திருக்கிறதென்றும் முதாளித்துவம் இனி வளர முடியாது என்றும் லெனின் கூறுகின்றார்." உற்பத்தி சக்தி மேலும் மேலும் அதிகரிப்பதையும், உற்பத்தி சாதனங்கள் சமூகமயமாகுவதையும், முதலாளித்துவம் அழிவை நோக்கித் தலைதெறிக்கும் வேகத்தில் பாய்வதையும் லெனின் புள்ளிவிபரங்களுடன் எடுத்துக்காட்டினார். முதலாளித்துவம் தானாகவே மறைந்து விடும் என்பது இதன் பொருளல்ல. "புரட்சியினால் தான் முதலாளித்துவத்தை வேரறுக்க முடியும் என்று லெனின் அழுத்தம் திருத்தமாக கூறினார்." "ஏகாதிபத்தியம் சமூகப் புரட்சி சகாப்தத்தின் ஆரம்பத்தைக் குறிக்கிறது" என்றார் லெனின்.

முதலாளித்துவத்தின் உச்சக்கட்ட வளர்ச்சியே ஏகாதிபத்தியம் என்று கூறிய லெனின் எவ்வாறு முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சியடைந்தது என்பதற்கான இலக்கணமாக ஐந்தைக் கூறினார். அவையாவன பொருளாதாரம் வாழ்வில் தீர்க்கமானகரமான பங்காற்றும் ஏகபோகங்களைத் தோற்றுவிக்கும் படியான உயர்ந்த கட்டத்துக்கு உற்பத்தியின், மூலதனத்தின் ஒன்று குவிப்பு வளர்ந்து விடுதல், வங்கி மூலதனம் தொழில்த்துறை மூலதனத்துடன் ஒன்று கலத்தலும், இந்த "நிதி மூலதனத்தின்" அடிப்படையில் நிதியாதிக்க கும்பல் உருவாக்குதல், சரக்கு ஏற்றுமதியிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டியதாகிய மூலதன ஏற்றுமதி தனி முக்கியத்துவம் பெறுதல், சர்வதேச ஏகபோகமுதலாளித்துவக் கூட்டுக்கள் உருவாகி உலகையே இவை தமக்கிடையே பங்கிட்டுக் கொள்ளுதல், மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளிடையே அனைத்து உலகப் பரப்பும் பங்கிடப்படுதல் நிறைவுறுகிறது என்றார்.

"முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் எந்தக் கட்டத்தில் ஏகபோகங்கள், நிதி மூலதனம் ஆகியவற்றின் ஆதிக்கம் நிலைநாட்டப்படுகிறதோ, மூலதன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுமதி முனைப்பான முக்கியத்துவம் பெற்று விட்டதோ, சர்வதேச டிரஸ்டுகளுக்கு இடையில் உலகம் பங்கிடப்படுவது தொடங்கியுள்ளதோ, உலகின் நிலப்பரப்பு அனைத்தும் மிகப்பெரிய முதலாளித்துவ அரசுகளுக்கிடையே பங்கிடப்படுவது நிறைவு பெற்றுவிட்டதோ அக்கட்டத்திலான முதலாளித்துவமே ஏகாதிபத்தியம்" என்றார்.

ஏகாதிபத்தியத்தின் அடுத்த நடவடிக்கையாக பிற ஏகாதிபத்தியம் கைப்பற்றிய பிரதேசங்களை கைப்பற்றுவதாகும். அதாவது மறுபங்கீடு செய்வதாகும். இது வெறும் பிரதேசங்களை பிடிப்பதாக மட்டும் இல்லாது பிற ஏகாதிபத்தியத்தின் மீது மேலாதிக்கம் செலுத்துவதற்கும் ஆகும். மேலும் அதிக எண்ணிக்கையில் சிறிய அல்லது பலவீனமான தேசங்களைச் சுரண்டுகின்ற ஏகாதிபத்தியத்தை புல்லுருவித்தனமானதாகவும், அழுகி வரும் நிலையினதாகவும் நிர்ணயிக்க வேண்டி வருவதாக லெனின் கூறுகின்றார்.

ஏகபோகத்திற்கு பின்பு ஏராளமான தனியுடைமையாளர்கள் மற்றும் பல்வேறு இடங்களில் பிரிந்து காணப்பட்ட சுதந்திர சரக்கு உற்பத்தியாளர்களுக்கிடையே போட்டி நிலவியது. சமூகத்தில் ஒரு சரக்கின் தேவையினைக் கணக்கிட முடியாமல் இருந்தனர். பொதுவாக சந்தையின் தேவையை முன்வைத்து தொடர்பற்ற பல்வேறு தனித்தனி உற்பத்தியாளர்கள் சரக்கினை உற்பத்தி செய்தனர். அதனால் உற்பத்தியில் அராஜகம் காணப்பட்டது.

இந்தத் தடையில்லா முதலாளித்துவம் தவிர்க்க முடியாதவகையில் உற்பத்தியின் ஒன்று குவிப்பை நோக்கியும் இந்த ஒன்று குவிப்பு குறிப்பிட்ட கட்டத்தில் ஏகபோகத்திற்கு இட்டுச் செல்கிறது. இதனை மார்க்ஸ் தமது மூலதன நூலில் தெரிவித்துள்ளார்.

இதனைப் புரிந்து கொள்ள முடியாத அல்லது படித்தறியாத பலபேர்கள், தடையற்ற போட்டிக் காலத்து முதலாளித்துவத்தைப் பற்றி பேசிய மார்க்சின் பொருளதாரம் பொய்த்துவிட்டது என்று கூக்குரல் எழுப்புகின்றனர். இதனை லெனின் மறுத்துரைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

தடையற்ற போட்டி தவிர்க்கப்பட்டு திட்டமிட்ட உற்பத்தி ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்டதால் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சிக் கோட்பாடு தவறாகிப் போய்விட்டதாக பெர்ன்ஷ்டைன் போன்றோர்கள் கூறத் தொடங்கினர். தடையற்ற போட்டி முதலாளித்துவம் மறைந்து போனது, திட்டமிடல் உற்பத்தி முறையான ஏகாதிபத்தியம் தோன்றியது என்று லெனின் கூறியது உண்மை தான். ஆனால் இது முதலாளித்துவ முரண்பாடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கிட்டதாக அவர் கூறவில்லை. லெனின் தெளிவாக "ஏகாதிபத்திய பொருளாதார உறவின் சிக்கலை நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்" என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இது முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத தீர்க்க முடியாத சிக்கலாகும். எந்தக் காரணங்கள் சோசலிசப் புரட்சிக்கு இட்டுச் செல்லும் என்று மார்க்ஸ் கூறினாரோ அதே காரணங்கள் ஏகாதிபத்தியத்தில் தீவிரமடைந்துள்ளது.

சொந்த நாட்டில் போட்டி போட்டுக்கொண்டிருந்த முதலாளித்துவம் ஏகபோகமாக வளர்ச்சி பெற்ற காலத்தில் அது சர்வதேச அளவில் தமது போட்டியை தொடர்கிறது. இந்தப் போராட்டம் பொருளாதாரப் போராட்டத்துடன் நிறுத்திக் கொள்வதில்லை.

பெர்ன்ஷ்டைன் போன்ற திருத்தல் வாதிகள் முதலாளித்துவம் ஏகபோகமாக வளர்ச்சியடைந்துள்ளதால் பழைய முதலாளித்துவத்தின் சில முரண்பாடுகள் நீக்கிவிட்டன. மீதமிருப்பவையும் தீவிரமானதாக இல்லை. அதனால் சமூக மாற்றம் என்பது தேவையற்றது. முதலாளித்துவத்துக்குள்ளேயே சீர்திருத்தம் போதுமானது என்று கூறினர். லெனின் இதனை முற்றாக மறுக்கிறார். ஏகபோகத்தில் முரண் முற்றவே செய்கிறது என்றார். அதாவது முதலாளத்துவ ஏகபோகம் ஆகும் இது. அதாவது முதலாளித்துவத்திலிருந்து தோன்றி, முதலாளித்துவத்துக்கும் பரிவர்த்தனைச் சரக்கு உற்பத்திக்கும் போட்டிக்குமான பொதுவான சூழலில், இந்தப் பொதுச் சூழலுக்கு நிரந்தரமான, தீர்வுகாண முடியாத முரண்பாடான ஒன்றாய் நிலவும் ஏகபோகமாகும். ஆனபோதிலும், எல்லாவிதமான ஏகபோகத்தையும் போலவே இதுவும் தவிர்க்க முடியாதபடி தேக்கத்துக்கும் அழுகலுக்குமான போக்கை உண்டாக்குறது." மேலும் "முதலாளதித்துவத்தில் ஏகபோகத்தால் முழுமையாகவும் மிக நெடுங்காலத்திற்கும் போட்டியினை உலக சந்தையிலிருந்து நீக்கிவிட முடியாதும்" என்றார்.

ஏகபோகங்களாகச் செயற்படும் இந்த ஏகாதிபத்தியங்கள் தங்களுக்குள் பிரதேச பங்கீட்டுக்கு போரினை தோற்றுவிக்கின்றன. இதில் தான் இன்றைய போரின் பொருளாதார அடித்தளம் அமைந்துள்ளது.

ஏகாதிபத்தியக் காலத்தில் உடல் உழைப்பு செய்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வருகிறது. உற்பத்தி சக்தியின் வளர்ச்சியின் காரணமாக உடலுழைப்பு அல்லாத தொழில் நுட்பம் பயின்ற மூளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பாளர்கள் பெருகி வருகின்றனர். இதன் மூலம் மார்க்சியம் கூறி வருகிற தொழிலாளர்களின் புரட்சி இன்றைக்கு சாத்தியம் இல்லை என்று சிலர் வாதிடுகின்றனர்.

மேலும் உற்பத்தியில் தடையில்லாப் போட்டியே முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு அடிப்படையாய் இருந்தது. இன்று ஏகபோகம் தடையில்லாப் போட்டிக்கு நேர் எதிராக மாறிவிட்டது. இந்த ஏகபோகப் போக்கு ஏகாதிபத்தியமாக இன்று நிலைபெற்றுள்ளது என்றார் லெனின்.

பொதுவாக முதலாளித்துவத்தின் அடிப்படைத் தன்மைக் குறிப்புக்களின் வளர்ச்சியாகவும், நேரடியான தொடர்ச்சியாகவும் ஏகாதிபத்தியம் எழுந்தது. ஆனால் முதலாளித்துவம் அதன் வளர்ச்சியில் திட்டவட்டமான, மிக உயர்ந்த ஒருகட்டத்தில் தான் முதலாளித்துவத்தின் சில அடிப்படைத் தன்மைக் குறிப்புக்கள் அவற்றின் நேர் எதிரானவையாக மாற ஆரம்பித்தன. முதலாளித்துவத்தில் இருந்து மேலானதொரு சமூக, பொருளாதார அமைப்புக்கு மாறிச் செல்வதற்கான காலத்தினுடைய இயல்புகள் உருப்பெற்று எழுந்த எல்லாத் துறைகளிலும் தம்மை வெளிக்காட்டிக் கொண்டன என்றார் லெனின்.

அந்த வகையில் மேற்கூறப்பட்டுள்ள லெனினின் சோசலிச கருத்துக்களின் படி ஏகாதிபத்தியத்தைப் பற்றி இயன்ற அளவுக்கு சுருக்கமான இலக்கணம் அளிக்க வேண்டுமாயின் முதலாளித்துவத்தின் ஏகபோகக் கட்டமே ஏகாதிபத்தியம் என்று கூற வேண்டும். அல்லது கூறுவது மிக்க பொருத்தமுடையதாகும்.

உற்பத்திச் சக்திகள் சமூகமயமாகி விட்ட நிலையில் இந்த புல்லுருவித்தனமான ஏகாதிபத்தியம் அருகிவிழ வேண்டிய நிலையில் இருக்கிறது என்று புரட்சிக்கான புறநிலை காணப்படுவதாக லெனின் கூறுகின்றார். ஆனால் அகநிலையாக கம்யூனிஸிடுகளின் சந்தர்ப்பப் போக்கினாலும் அதன் புரட்சிக்கரப் போர்க்குணம் தேசிய வெறியாக மாறிப் போனதாலும் இந்த செயற்கைத் தன்மையால் ஏகாதிபத்தியம் தூக்கி யெறியப்படுவது தாமதம் ஆகலாம். சமூகப் புரட்சிக்கான புறநிலையாக அடித்தளம் வளர்ச்சி பெற்றிருந்தாலும், மேற்கட்டமைப்பின் சந்தர்ப்பவாதப் போக்கினால் புரட்சிகர வாய்ப்பு தவறிப் போகலாம். இருந்தாலும் இறுதியில் ஏகாதிபத்தியம் தூக்கியெறியப்படுவது உறுதி என்றார் லெனின்.

ஏகாதிபத்தியக் காலக்கட்டத்தின் புறநிலைமைகளையும் கணக்கில் கொண்டு லெனின் மார்க்சியப் புரட்சிக்கர போதனையை விரிவுபடுத்தினார். சோஷலிசப் புரட்சிக்குத்தேவையான பொருளாதய சக்தியான புறநிலைமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவப்பட்டிருக்கின்றன. மூலதனத்தின் தொடர் ஒடுக்கு முறையால் பாட்டாளி வர்க்கமும் ஒன்று திரண்டு காணப்படுகிறது. காலனிய நாடுகளின் விடுதலைப்போராட்டமும் தீவிரம் கண்டுள்ளது. வளர்ச்சிடைந்த ஏகாதிபக்திய நாடுகளில் சோஷலிசப் புரட்சிக்கான சூழல் தோன்றியிருந்தது. இந்தச் சூழ்நிலையை புரட்சியாக மாற்றவேண்டிய அகநிலைச் சக்திகள் செயலில் இறங்க வேண்டும். ஆனால் போல்ஷிவிக்குகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் தாய் நாட்டின் விடுதலை என்று சந்தர்ப்பவாதமாக சுரண்டும் வர்க்கத்தோடு சேர்ந்து கொண்டன. இந் நிலையில் லெனின் புரட்சி பற்றிய மார்க்சியக் கோட்பாட்டை புறநிலைக்கு ஏற்ப மாற்றினார்.

வளர்ச்சி பெற்ற அனைத்து நாடுகளில் அல்லது பெரும்பாண்மையான நாடுகளில் சோஷலிசப் புரட்சி ஏற்படும் என்று இதுவரை மாக்சிச வாதிகள் கருதி வந்தனர். லெனினும் இதே கருத்தையே கொண்டிருந்தார். வளர்ச்சியடைந்த நாடுகளில் முதலாளித்துவத்தின் முதிர்ச்சி இந்த முடிவை எடுக்க வைத்தது என்பது உண்மையே. ஆனால் இன்றைய நிலையில் ஏகாதிபத்தியமாக சீரற்ற வளர்ச்சியின் விளைவாக ஏகாதிபத்தியத்தின் சங்கிலித் தொடரில் பலவீனமான கண்ணியில் புரட்சியை ஏற்படுத்த முடியும் என்று லெனின் முடிவெடுத்தார். அதாவது ஒரு தனிநாட்டில் புரட்சி ஏற்படுத்தி அதன் வெற்றியின் தொடர்ச்சியாக பிறநாடுகளில் புரட்சி வெடிக்கும் என்று விளக்கினார்.

மேலும் லெனினின் படி ஏகாதிபத்தியத்தின் முக்கிய ஓர் அம்சம் நிதி முதலாளித்துவம் (Financial capitalism) என்பதாகும். நிதி முதலாளித்துவம் என்பது யாதெனில் பெருமளவிற்கு பணம் சேர்க்க முதலாளிகளில் ஒரு பகுதியினர் அந்தப் பணத்தை மாத்திரமே முதலீடாகக் கொண்டு பெரும் வங்கியாளர்களாக மாறியமையே ஆகும். இந்த வங்கியாளர்கள் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு பக்கபலமாக இருக்கிறார்கள் என்றார். இந்த வங்கி உடைமையாளர்களின் மூலதனத்துடன் இணைந்து ஏகாதிபத்தியவாதிகளால் உலகம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சிக்கிறார்கள். ஆனால் லெனினின் படி ஏகாதிபத்தியத்தின் உச்சக்கட்ட வளர்ச்சி அதன் அழிவிற்கு வழிவகுக்கும் என்பதாகும். ஆகவே புரட்சியினால் அழிக்கப்பட வேண்டும் இல்லை என்றால் போரினைத் தோற்றுவிக்கும் என்றார் லெனின்.

ஏகாதிபத்திய நாடுகளில் மிகை உற்பத்தியானது அந்நாடுகளின் சந்தை வாய்புக்களைக் குறைக்கிறது. அதேபோன்று இந்த ஏகாதிபத்திய நாடுகளில் உள்ளமூல வளங்களும் குறைவடைந்து வருகின்றது. இதனால் தமது உற்பத்திப் பொருட்களுக்கு சந்தையை பெற்றுக் கொள்வதற்கும் மூலப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும் சர்வதேச ரீதியில் போட்டியிடுகிறார்கள். இந்தப் போட்டியின் வெளிப்படையாகவே காலனித்துவ நாடுகளை ஏகாதிபத்திய வாதிகள் ஆக்கிரமித்துக் கொண்டதாக லெனின் குறிப்பிடுகிறார். மேலும் முதலாம் இரண்டாம் உலக மகாயுத்தங்கள் இந் நோக்கிலேயே இடம் பெற்றதாக லெனின் குறிப்பிடுகிறார். ஏகாதிபத்திய வாதிகளுக்கிடையிலான இந்தப்போட்டியை சோசலிச வாதிகள் சரியாக பயன்படுத்திக் கொண்டு அதனை தோற்கடிக்க முற்பட வேண்டும் ஆனால் இந்த விடயத்தில் சோஷலிச சக்திகள் மதி நுட்பத்துடன் தொழிற்பட வேண்டும் என்கிறார்.

பொருளாதார பலத்திலும் இராணுவ பலத்திலும் வளர்ந்து நிற்கும் ஏகாதிபத்தியத்தை கண்மூடித்தனமாக நேரடியாக எதிர்ப்பது முட்டாள் தனமானது என்பது அவருடைய கருத்தாகும். ஏகாதிபத்திய சங்கிலியை பலவீனமான பாகத்திலேயே முதலில் உடைத்தெறிய வேண்டும் என்பது லெனினுடைய கருத்தாகும். அவ்வகையில் ஏகாதிபத்திய வாதிகள் ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன், அமெரிக்க நாடுகளிலேயே பலவீனமானவர்களாக காணப்படுகிறார்கள். இதனால் இந்நாடுகளில் உள்ள ஏகாதிபத்திய விடுதலை தேசிய இயக்கங்களிற்கும், விடுதலை இயக்கங்களிற்கும் ஆதரவு வழங்கி இந் நாடுகளில் ஏகாதிபத்தியத்தை முதலில் முறியடிக்க வேண்டும் என்பது லெனினுடைய வாதமாகும்.

மேற்குறிப்பிட்டதைப்போல ஏகாதிபத்தியம் வலுப்பெற்ற நேரத்தில் தான் சோசலிசம் உருப்பெற்றது என்பதே லெனினுடைய பிரதான கருத்து ஆகும். ரஷ்யாவில் சோஷலிசப் புரட்சி ஏற்பட்டதும் இதன் பின்னணியே ஆகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். லெனின் ரஷ்யாவில் சோசலிசப் புரட்சியின் மூலம் சோஷலிச அரசினை ஸ்தாபித்திருந்தார். ஆனால் பின்நாட்களில் சோசலிச அரசு சிதைவடைந்தது என்பது அல்லது கலைந்தது என்பது வேறு கதை. ஆனால் ஏகாதிபத்தியத்தை முடிவுகட்டுவதற்கே இறுதி ஆயுதமாக புரட்சியினையே லெனின் கருதினார். புரட்சியின் மூலம் முதலாளித்துவ வளர்ச்சியினை அல்லது ஏகாதிபத்தியத்தினை தடுக்க வேண்டும். இல்லையென்றால் போரினைத் தோற்றுவிக்கும் இந்த வரையறுத்த கோட்பாடுதான் பின்னாட்களில் 1ம், 2ம் உலகப் போர்களாகவும் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்க கூடிய பிராந்தியப் போர்கள் பதவிப்போர்களை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

ஆகவே லெனின் தனது கருத்துக்களினூடாக எவ்வாறு முதலாளித்துவம் வளர்ச்சியடைந்து ஏகாதிபத்தியமாக பரிணமிக்கின்றது என்பதை தெளிவாக கூறியுள்ளார். மேலும் லெனின் ஏகாதிபக்தியத்தை வரையறை செய்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“முலாளித்துவத்தின் உச்சக்கட்ட வளர்ச்சியே ஏகாதிபத்தியம்” என்று கூறி அதனை மிகவும் செம்மையாக சோஷலிசக் கருத்துக்களினூடாக விளக்கிக் காட்டியுள்ளதை மேலே குறிப்பிடப்பட்டுள்ள லெனினின் சோஷசலிசக் கருத்துக்களினூடாக விளங்க முடிகிறது. எனவே முதலாளித்துவத்தின் உச்சக்கட்ட வளர்ச்சியே ஏகாதிபத்தியம் என்பது லெனினுடைய சோசலிசக் கருத்துக்களினூடாக பார்க்கும் போது மிகவும் தீர்க்கமான கூற்றாகவும் வரையறையாகவும் காணப்படுகின்றது.

ஏகாதிபத்தியம் பற்றிய லெனினின் கருத்துக்கள் 20ஆம் நூற்றாண்டில் அரசியல் நிலைமைகளை புதிய கண்ணோட்டத்தில் யதார்த்தமாகவும் நோக்குவதாக கருதப்படுகிறது. அவ்வகையில் லெனின் ஏகாதிபத்தியம் பற்றிய கோட்பாட்டிற்கு பங்களிப்புச் செய்த ஒருவராக கணிக்கப்படுகிறார்.

விளாடிமிர் லெனின் மறைந்துவிட்டார். ஆனால் அவர் கொள்கைகளையும் உறுதியையும் தாங்கி நிற்பவர்கள் இருக்கிறார்கள். அன்று ரஷ்யாவை ஆண்டு கொண்டிருந்த “ஜார்” மன்னரின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்து தனது அண்ணனை அலெக்ஸ்சாண்டர் மார்க்சிசத்தை அறிமுகப்படுத்திய பின்புலத்தினாலும் சோசலிச பரப்புரைகளையும் லெனின் வடிவமைத்துக் கொண்டார். அன்று லெனினினால் கூறப்பட்ட சோசலிசக் கருத்துக்கள் இன்றும் மழுங்காத தன்மையுடையதாக காணப்படுகின்றது என்று கூறுமளவிற்கு லெனினுடைய சோஷலிசக் கருத்துக்கள் இன்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

திருநாவுக்கரசு.மு, (2018), "ஒற்றை மைய உலக அரசியலில் போரும் சமாதானமும்" காலச்சுவடு பதிப்பகம்.

ராமநாதன்.ஆர், (2001), "லெனின்", சந்தியா பதிப்பகம்.

பழனியப்பன்.ஏ.எம், (2006) "மாவீரர் லெனின் வாழ்க்கை வரலாறு" , ஸ்ரீ செண்பகா பதிப்பகம்.

அப்பணசாமி, (2015), (2015), "ஏகாதபத்தியம் முதலளித்துவத்தின் உச்சக்கட்ட வளர்ச்சி" பாரதி புத்தகாலயம்.

சோமசுந்தரம்.பூ, (1973), "இவர் தான் லெனின்", முன்னேற்றப் பதிப்பகம்.

https://youtu.be/46fv8xAyvo

https://youtu.be/mlgcw-9nsxm

https://youtu.be/800uswm-uhE

https://www.wsws.org/ta/topics/-beta/1917-russian-rerolution

https://www.wsws.org/tamil/category/books/1917russi/chap



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசியம் என்பதனை வரையறுத்து தேசியவாதம் இயல்பிலும் பண்பிலும் உலகளாவிய தளத்தில் காணப்படும் முக்கியத்துவத்தினை மதிப்பீடு செய்க?**

தற்கால அரசியல் வரலாற்றில் முக்கிய பேசு பொருளாக தேசியம், தேசியவாதம் என்கின்ற எண்ணக்கருக்கள் காணப்பட்டு வருகின்றன. அந்தவகையில் முதலாவதாக தேசியம் என்பது பற்றி இங்கு நோக்குவோம்.

ஆரம்பத்தில் மனித சமூகம் பூர்வீக கோத்திர சமூகங்களாக பிளவுபட்டு கிடந்தன. அதன் பின்னர் அவை அரசுகளால் ஆளப்படும் சமூகங்களாக வளர்ந்தன. நீண்ட காலமாக மனித சமூகமானது இயற்கைத் தடைகளை (கடல், உயரமான மாலை, நீண்ட சதுப்பு நிலம்) போன்றவையை கடக்க முடியாமல் அவரவர் வாழும் பிரதேசங்களில் சிறைப்பட்டுக் கிடந்தன.

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் உழைப்பாளர்கள் கொத்தடிமைகளாக நிலத்தோடு பிணைக்கப்பட்டு கிராமப் பொருளாதாரத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தனர். முதலாளித்துவப் புரட்சி மனித சமுதாயப்பரிமாண வளர்ச்சியில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தியது. போக்குவரத்து சாதனங்களின் அபிவிருத்தியும் தொலைத்தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியும் நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் நெருக்கமாக பின்னிப்பிணைந்தன. இவ்வளர்ச்சி விரிவான சந்தையையும் மட்டுப்படுத்தப்பட்ட நிர்வாகத்தையும் உருவாக்கி இச் சமூகங்களினை நெருக்கமாக இணைந்தன. இதன் மூலம் நிலையான தேசங்களும் புதுவடிவிலான தேசிய சமூகங்களும் உருவாகின. முதலாளித்துவ புரட்சி ஏற்படுவதற்கு முன்பு நிலையான தேசம் என்று எதுவும் இருக்கவில்லை. அடிக்கடி இடம்பெற்ற நிலப்பிரபுத்துவ யுத்தங்களினால் தேசங்களின் எல்லைகள் சுருங்கியும் விரிந்தும், மாறியும் மறைந்தும் வந்தன. ஆகவே முதாலளித்துவ புரட்சியின் பின்னரே நிலையான தேசியங்கள் உருவாகின அதுவரை இன்று நாடுகளாக அடையாளம் காணப்படும் சமூக புவியியல் அலகுகள் பற்பல நிலையற்ற சிற்றரசுகளாக சிதறிக் கிடந்தன.

ஆகவே பதினெட்டாம் நூற்றாண்டில் (பிற்பகுதி) இருந்து தான் தேசியம் எனும் அரசியற் பதம் உருவானதாகும்.

அந்தவகையில் தேசியம் என்பது "பொதுவான மொழி, பொதுவான கலாசாரம், பொதுவான பிரதேசம் (பெரும்பாலான சந்தர்ப்பங்களில்) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தமக்கிடையே குழும உணர்வையும் ஒருமைப்பாட்டையும் பகிர்ந்து கொள்ளும் சுய அடையாளமுடைய நிலையான நவீன மக்கள் சமூகமே தேசியமாகும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியம் என்பது மக்கள் திரட்சி அரசியலில் பங்கெடுப்பதை, அரசியல் தீர்மானத்தில் அவர்கள் பங்குதாரர்கள் ஆவதைத்தான் தேசியம் என குறிப்பிடுகின்றனர்.

மேலும் பல மொழி, இனம், மதம் ஒன்று சேர்கின்ற நியமம் தான் தேசியமாகும். அதாவது இனம், மதம், மொழி அல்லது பிரதேசம் இவற்றில் ஏதோ ஒன்றின் பெயராலோ அல்லது பல கூட்டாவதன் பெயராலோ அமையலாம். ஆனால் மக்கள் பங்கேற்பது என்பது அவசியமானது ஆகும். இனம், மதம், மொழி, பிரதேசம் என்பன ஏதோ ஒருவகையில் குறியீட்டு முக்கியத்துவத்தினை பெறும் அதேவேளை ஜனநாயகம் என்பது தான் தேசியத்தின் சாராம்சமாக காணப்படுகிறது.

பதினெட்டாம் நூற்றாண்டிற்கு முன்பு தேசியம் தனித்தனியே பலவாறான மொழிகளையும் மதங்களையும் பின்பற்றி வந்த மக்கள் இருந்த போதிலும் அவற்றை தேசியம் என்று அழைக்கவில்லை. அவை இனக்குழுக்கள் என்றும் மதக்குழுக்கள் என்றுமே அழைக்கப்பட்டன. ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இறைமை பற்றிய விடயத்தில் ஜனநாயகம் பற்றிய கருப்பொருள் தோன்றவே தேசியம் என்பது மேற்படி இன, மத, மக்கள் குழுக்களுக்குள் பிரவேசம் பெறுகின்றது.

முன்னைய காலங்களில் மொழிகளோ, மதங்களோ இருந்தன என்பதற்காக அவற்றை தேசியம் என்று அழைக்கவில்லை. இனத்தின், மதத்தின், மொழியின் அல்லது பிரசேத்தின் பெயர்கள் ஒரு குறியீடாக இருக்க அங்கு ஜனநாயகம் குறித்த மக்கள் கூட்டத்தின் உள்ளடக்கமாய் அமைவதே “தேசியம்” ஆகும் என்கின்றனர். எனவே மக்களின் பங்கேற்பினை வலியுறுத்துவதாக தேசியம் காணப்படுகின்றது. இதனாலேயே ஜனநாயகமின்றி தேசியம் காணப்படமாட்டாது என்கின்ற கருத்தும் நிலவுகின்றது.

இறைமை மக்களுக்குரியது என்பதற்குப் பெயர் தான் தேசியம் எனவும் கூறலாம். இதனாலேயே தேசியவாதமானது முற்றிலும் ஒரு ஜனநாயக வடிவம் ஆகும். இத் தேசியமானது ஓர் அரசின், ஓர் இனத்தின் அல்லது ஒரு பிரதேசத்தின் அல்லது மொழி, மதத்தின் பெயரால் அழைக்கப்படலாயிற்று. உதாரணமாக பிரெஞ்சுத் தேசியம், அமெரிக்கத் தேசியம், ஸ்பானியத் தேசியம், ஐரிஸ்தேசியம் என்பவற்றை குறிப்பிட்டுக் கொள்ளலாம். இவ்வாறு எத்தனை வடிவத்தினைக் கொண்டாலும் மக்கள் அரசியலில் நாயகர்கள் ஆவதையும், மக்கள் அரசியலில் ஒரு சக்தி ஆவதையும், மக்கள் அரசியல் தீர்மானங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானகரமான பங்குதாரர் ஆவதையும் உள்ளடக்கமாக கொண்டு தேசியம் அமைகின்றது.

உலகத்தில் தேசியமானது பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக மேலே குறிப்பிட்டதைப் போன்று மேற்குலக தேசியம், கிழக்கு ஐரோப்பிய தேசியம், கிழக்காசிய தேசியம், தென்கிழக்கு ஆசிய தேசியம், ஆபிரிக்க நாடுகளின் தேசியம் என பல வடிவங்களினைக் கொண்டுள்ளது.

மேலும் தேசியத்தை புறத்தோற்றத் தேசியம், உள்ளடக்க தேசியம் என இரு அம்சங்களாக வகைப்படுத்தலாம். இப்புறத்தோற்றம் தான் தேசியத்திற்கான வெளிப்படையான தோற்றப்பாடாகும். இப்புறத்தோற்றத்தினை தவிர்க்க முடியாது. இது மொழி, மதம், பிரதேசம், பண்பாடு என பல அம்சங்களினைக் கொண்டிருக்கின்றது.

தேசியமானது ஏனைய இன, மத, வேறுபாடுகளை எற்றுக் கொண்டு தேசிய உள்ளடக்கமான ஜனநாயகம், ஜனநாயக நிறுவனம், ஜனநாயக பண்பாடு, தேசிய சமூக கூட்டிணைவு மற்றும் இவற்றிக்கான தேசிய அரசியல் பொருளாதாரம் என்பன புறத்தோற்றத்துடன் இணைக்கப்படும் போதே அது ஒரு முழு வளர்ச்சியுள்ள தேசியமாகின்றது.

எனவே இனம், மதம், மொழி என்பவற்றிற்கு அப்பால் தேசியம் என்பது ஜனநாயகத்தில் தான் ஊற்றெடுக்கின்றது. இதற்கு சான்றாக குறிப்பிட்டால் அமெரிக்க சுதந்திர போரை குறிப்பிடலாம். அதாவது பிரித்தானியர் ஆங்கில மொழியைக் கொண்ட தமது இனத்தவர் ஆயினும் தமது குடியேற்றங்கள் மீது புரியப்படும் பிரித்தானிய ஆதிக்கத்திற்கு எதிரானது அதாவது தமது சொந்த ஆங்கில இனத்தவரான பிரித்தானியருக்கு எதிராக அமெரிக்க வாசிகள் தேசிய ஜனநாயக உரிமை கோரித் தேசிய விடுதலைப் போராட்டம் நடத்தினர். இன, மொழி என்பவற்றிற்கு அப்பால் அமெரிக்க ஆங்கிலேயர், பிரித்தானிய ஆங்கிலேயருக்கு எதிராக போராட்டம் நடத்தியமையை குறிப்பிடலாம்.

தமது இனத்தவரே தம்மீது ஆதிக்கம் செலுத்துகின்றனர் என்பதற்காக தேசியம் அந்த ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளாது. அந்தவகையில் மனித குலம் கண்ட முதலாவது உயர்ந்த விடுதலைத் தத்துவம் தேசியம் எனப்படும் தேசிய ஜனநாயகமாகும்.

இன்னொரு வகையில் கூறின் தேசியம் என்பது ஒரு நீதிக் கோட்பாடாகும். ஜனநாயகம், பண்பாடு பற்றிய ஒரு நீதி நெறிதான் தேசியமாகும். ஆதலால் ஒரு தேசியப் போராட்டமானது அநீதிக்கு எதிரான போராட்டமாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாகரிகத்திற்கு எதிரான போராட்டமாகவும், ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான போராட்டமாகவும் அமைகின்றது.

தேசியமானது அனைத்து விதமான சமூக ஏற்றத்தாழ்வுகளையும் அரசியல் ஆதிக்கத்தையும் எதிர்க்கின்ற ஒன்றாக காணப்படுகின்றது. அந்தவகையில் மக்கள் அரசியல் அதிகாரத்தில் பங்காளியாக்குவதே தேசியம் என்றும் கூறலாம். இவ்வாறு மக்கள் அரசியலில் மையப்புள்ளியாகி அரசியல் அதிகாரத்தில் பங்கெடுப்பதையே மக்கள் ஆட்சி என்று கூறப்படுகின்றது. இந்த மக்களாட்சி தத்துவத்தைத்தான் ஜனநாயகம் என்று கூறலாம்.

மேலும் தேசியமானது இந்தப் பூமியில் அனைவரும் சமமானவர்கள், பிறப்பாலோ அதிகாரத்தாலோ உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று எவரும் இருக்க கூடாது. அனைவரும் ஒரு தேசத்தின் அனைத்து விடயங்களிலும் சம உரிமை உடையவர்கள். குறிப்பாக அரசியல் தீரமானம் எடுத்தலில் ஒவ்வொரு பிரஜைக்கும் பங்கு உண்டு என்பதை உணர்த்துவதாகவே காணப்படுகிறது. சுருங்கச் சொல்வதென்றால் தேசியம் என்பதன் பொருள் மக்களை அரசியலில் பங்குபெறச் செய்வதாகும்.

எனவே தேசியம் என்பது உள்ளடக்கத்தில் புதிய சமூக கலாசாரத்தையும் புதிய வாழ்க்கை முறையையும் ஜனநாயக உள்ளடக்கத்தையும் தன்னகத்தே கொண்ட ஓர் உயர்ந்த சமூக அமைப்பு என வரையறை செய்து கொள்ளலாம்.

அடுத்ததாக நாம் இங்கு தேசியவாதம் பண்பிலும் இயல்பிலும் உலகளாவிய தளத்தில் காணப்படுகின்ற முக்கியத்துவம் தொடர்பாக ஆராய்வோம். அதற்கு நாம் முதலில் தேசியவாதம் தொடர்பான தகவல்களையும் அறிதல் வேண்டும். அந்தவகையில் தேசியவாதம் தொடர்பாக இங்கு நோக்குவோம்.

தேசியவாதத்தின் பிறப்பிடம் மேற்கு ஐரோப்பா என்பதனை ஆட்சியாளர்கள் வலியுறுத்துகின்றனர். தேசிய வாதம் தோற்றம் பெற்ற காலப்பகுதி பற்றி கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்தே தேசியவாதத்தை அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. அந்தவகையில் முதலில் தோன்றிய மேற்கு ஐரோப்பிய அரசுகளாக பிரான்ஸ், பிரிட்டன், போரத்துக்கல், ஒல்லாந்து என்பன விளங்குகின்றன. இவ்வாறு ஐரோப்பாவில் ஆரம்பித்து பின்னர் ஐக்கிய அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா, ஆகிய கண்டங்களுக்கும் பரவி இன்று முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலும் செல்வாக்கிற்கு உரிய எண்ணக்கருவாக தேசியவாதம் விளங்குகிறது.

தேசியவாதம் உலகின் நாலாபுறத்திலும் ஒரே காலத்தில் ஒரே வடிவில் தோற்றம் பெற்றது அல்ல. அது இடம், காலம் போன்ற வேறுபாடுகளைக் கொண்டிருப்பதுடன் இடம், காலம் போன்ற வேறுபாடுகளுக்கேற்ப வேறுபாடான அம்சங்களையும் போக்குகளையும் கொண்டு காணப்படுகின்றது. அதாவது ஒரு தேசியவாதம் சார்ந்துள்ள வரலாற்றுச் சூழலுக்கு ஏற்ப அது வேறுபட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது. கைத்தொழில் வளர்ச்சி, பொருளாதார வளம், பிரதேச பேரரசுகள், குடியேற்ற நாடுகள் போன்ற வேறுபட்ட அம்சங்களுக்கு ஏற்ப தேசியவாதத்திலும் வேறுபட்ட வடிவங்களினை காணமுடிகிறது. ஐரோப்பிய தேசியவாதம் மக்களின் ஜனநாயக உரிமைகளுடன் இணைந்த ஒன்றாகும். அமெரிக்க ஆசிய ஆபிரிக்க தேசியவாதமானது ஏகாதிபத்தியம் என்ற ஒன்றிற்கு எதிரான போராட்டம் என்பதோடு தேச சுதந்திரத்தை மையமாகக் கொண்டு எழுந்ததாகும். சோசலிச புரட்சியில் வெற்றி பெற்ற நாடுகள் தேசிய வாதத்தில் சோசலிச பண்புகளை நெருக்கமாக இணைத்து விட்டனர். இவ்வாறு தேசியவாதமானது மாறுபட்ட சூழ்நிலைகளில் வேறுபட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றதனை காணமுடிகிறது.

ஒரு குறிப்பிட்ட சூழலில் தோன்றி வளர்ச்சியுற்ற ஓர் அரசியல் நியமமானது தான் தோன்றிய சூழ்நிலையிலும் பார்க்க அடிப்படையிலே வேறுபட்ட சூழ்நிலையிலே செழிப்புற வேண்டுமாயின் அந்நியமம் கட்டாயமாக பெருமளவு உருமாற்றம் அடைய வேண்டும் என்பது வெளிப்படையாகும். ஐரோப்பிய தொடர்பின் விளைவாக இருபதாம் நூற்றாண்டிலேயே ஆசியாவில் வளர்ச்சிடைந்த தேசியவாதம் அது தோன்றுவதற்கு ஏதுவாய் இருந்த ஐரோப்பிய தேசியவாதத்தை பெரிதும் ஒத்திருந்தது என்பதில் ஐயமில்லை. எனினும் ஆசிய தேசியவாதம் அதற்கே சொந்தமான சில நிகரற்ற குணங்களை கொண்டிருந்ததுடன் பல இனத் தேசியவாதங்களையும் கொண்டதாக காணப்படுகின்றது. இருபதாம் நூற்றாண்டில் காலணித்துவ ஆட்சிக்கு எதிராக தேசியவாத அடிப்படையில் பல அரசுகளிலும் கிளர்ந்தெழுந்த மக்கள் 2ம் உலக மகாயுத்தத்திற்கு பின்னர் உபதேசியவாத கோரிக்கைக்குரியவர்களாக மாற்றப்பட்டனர்.

தேசியவாதம் என்பது நாட்டினம் ஒன்றின் மீது அக்கறை கொண்ட ஒரு கருத்தியல், உணர்வு, ஒரு பண்பாட்டு வடிவம் அல்லது சமூக இயக்கம் ஆகும். தேசிய வாதம் என்றால் என்ன? என்பது குறித்து பல்வேறுபட்ட அறிஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவிதமான வரைவிலக்கணங்களினை முன்வைத்துள்ளனர். அந்த வகையில் "எக்கோன் (H.kohn) என்பவர் "தேசியவாதம் என்பது தனிமனிதர்களுடைய அதியுயர்ந்த விசுவாசம் தேசிய அரசுக்குரியது என உணரும் ஒரு மனநிலை ஆகும். தனது சொந்த மண்ணுடனும் அதன் உள்ளூர் பாரம்பரியங்களுடனும் அங்கு நிறுவப்பட்டுள்ள பாரம்பரிய அதிகாரத்திற்குமான ஆழமானதொரு பிணைப்பு என குறிப்பிடுகிறார்." "ஜே.ஜி.கெலாஸ் (J.G.kellas) என்பவர் "தேசியவாதம் என்பது ஒரு கருத்தியலாகவும் நடத்தையில் ஒருவடிவமாகவும் உள்ளது. தேசியவாதத்தின் கருத்தியல் மக்கள் தம்மை ஒரு தேசியமாக உணர்வதில் இருந்து கட்டியெழுப்பப்பட்டு அதன்வழி ஒரு தொகுதி மனப்பாங்குகளையும் செயற்திட்டத்தையும் தருவதாகும்" என குறிப்பிட்டார். இவ்வாறு தேசியவாதம் குறித்து பல கருத்துக்கள் காணப்படுகின்றது.

இவ்வாறாக தேசியவாதம் தொடர்பாக சிறு அறிமுகத்தினை நோக்கினோம். அடுத்து தேசியவாதம் பண்பிலும் இயல்பிலும் உலகளாவிய ரீதியில் காணப்படும் முக்கியத்துவத்தினை நோக்குவோம்.

தேசியவாதத்தின் பண்புகளாக தத்துவார்த்த அடிப்படையில்லை, பல சமூகங்களிலிருந்து தோன்றியது, ஜனாயகத்தின் வடிவமாகும், இனவெறி ஏற்படுத்தக் கூடியது, புறத்தோற்ற அம்சங்களை கொண்டது, இவ்வாறாக பல பண்புகளை கொண்டது. மேலும் நாம் விரிவாக பண்பிலும் இயல்பிலும் தேசியவாத்தின் முக்கியத்துவத்தினை விரிவாக நோக்குவோம்.

உலகிலுள்ள 90 வீதத்திற்கு மேற்பட்ட நாடுகள் பல்லினத்தன்மை கொண்டவகையாக இருக்கின்றன. ஆகவே தேசியவாதத்தை பொறுத்த வரையில் பல்லின தேசியவாதம் என்பது முக்கிய அம்சமாக விளங்குகின்றது. பல்லின தேசிய வாதத்தை பிரதேச தேசியவாதம் என்று அழைக்கப்படுவதுண்டு. பல்லினங்களுள்ள ஒரு நாட்டில் அரசு என்பது மையக்கருத்தாக அமைய அதனைப் பொதுமையாகக் கொண்டு தேசிய வாதம் வளர்வதுண்டு. அல்லது பிரதேசத் தேசியவாதம் தோல்விக்கான தேசிய இனப்பிரச்சினை உருப்பெற்று தேசிய இனம் சார்ந்த தேசியவாதம் வளர்வதுண்டு. எவ்வாறாயினும் புள்ளிவிபர ரீதியாக நோக்கும் போது பல்லினத் தேசியவாதம் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகின்றது என்பதும் அத்தேசியவாதம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

அடுத்து தேசியவாதம் என்பது ஒரு வாழ்க்கை முறைமையாகவும், சர்வதேச ஒழுங்கமைப்பாகவும் விளங்குகின்றது. தனிமனிதன் தொடக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய நாடுகள் சபை ஈறான சர்வதேச ஸ்தாபனங்கள் வரை தேசியவாதம் என்பது ஒரு ஒழுங்கமைப்பாக, ஒரு முறைமையாகக் காணப்படுகின்றது. தனிமனிதன் சிறு தேசிய இனமாகவோ அமைய தேசிய இனம் தேசிய அரசாகவோ அல்லது பல்தேசிய இனம் பல்தேசிய அரசு ஆகவோ அமைய, அரசுகள் சர்வதேச ஸ்தாபனங்களாக அமைய உலகம் ஓர் ஒழுங்கமைப்பைப் பெற்றுள்ளது.

தேசிய வாதத்திற்கு இனம், மதம், மொழி, பிரதேசம் என்பன ஒரு புறவடிவ வரையறைகளை கொடுக்கின்றனவே ஆயினும் நவீன தேசியவாதத்தின் உள்ளடக்கமாய் ஜனநாயகம், ஜனநாயக நிறுவனங்கள், மன்னராட்சிக்கு பதிலாக மக்களாட்சி, பிறப்பின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளை நிராகரித்தல், மனித உரிமை, சட்டத்தின் முன் அனைவரும் சமன், பரந்த மக்கள் நலன்சார்ந்த அரசுகள் காணப்படுகின்றன. இவ்வாறாக தேசியவாதமானது முன்னேற்றகரமான நல்லம்சங்களை கொண்டு அமைந்திருந்தது.

தனிமனித தீர்மானத்தை முற்றிலும் நிராகரித்து ஏதோ ஒரு வகையில் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருசபையினால் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்பதே தேசியவாதத்தின் அடிநாதமாகும். இவ்வாறு மக்களைக் கொண்டு உருவாகும் அமைப்புக்களே தேசிய நிறுவனமாகும். தேசிய நிறுவனமுறை இல்லாமல் தேசிய ஜனநாயக முறை செயற்பட முடியாது எனவே ஜனநாயகம் என்பது தேசிய ஜனநாய நிறுவன முறையையும் கூடவே உள்ளடக்கியதாகும். அந்தவகையில் தேசியவாதம் என்பது முக்கியமானதாக காணப்படுகின்றது.

ஒரு தேசிய இனத்திடம் ஏற்கனவே நிலம், மொழி, பண்பாடு சார்ந்த தனித்துவங்கள் அமைந்திருக்கும் இங்கு தேசியவாதம் செய்த புதிய பணி என்னவெனில் மேற்படி அம்சங்கள் அனைத்தையும் இணைத்து கூட்டு மொத்த சமூக தன்மைக்கு உட்படுத்தி அதனை ஒரு தேசிய சமூகமாக மாற்றியது. அந்த சமூகத்தை ஒன்றுபடுத்தி கூட்டிணைக்கும் போக்கில் ஏற்கனவே இருந்த அதிகார கட்டமைப்புக்களினை உடைத்ததுடன் குறுகிய சமூக எல்லைகளையும் உடைத்து உள்ளூர் சட்டதிட்டங்களையும் உடைத்து (சம்பிரதாயம்), ஒருபுதிய சமூக கூட்டமைப்பிணையும் அதற்கான புதிய சட்டதிட்ட நீதி நிர்வாக அமைப்புக்களையும் தேசியவாதம் தோற்றுவித்தது. இதற்கு ஜனநாயக முறைமை அடிப்படையானதாகவும் வழிமுறையாகவும் அமைந்தது. இந்தவகையில் அரசியல் அதிகாரத்தில் நாயகர்களாக்கிய ஒரு புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமையாக தேசியவாதம் அமைந்தது. இதனால் தான் தேசிய வாத்திற்கு ஓர் உன்னதமான தனி முக்கியத்துவம் காணப்படுகின்றது.

தேசியவாதம், பாதுகாப்பு கவசமாக அமைகின்றது. நிலத்திற்கான கூட்டுரிமையிலிருந்து அவனது மொழி, மதம், பண்பாடு வாழ்க்கை முறை சார்ந்த அனைத்து கூட்டு உரிமையையும் அதேவேளை அதில் ஒவ்வொருவருக்குமான தனிமனித உரிமையும் சார்ந்த ஒரு உரிமையாக தேசியவாதம் விளங்குகின்றது. ஆதலால் தேசியவாதம் மனிதனது அனைத்து உரிமைகளுக்குமான ஒரு நவீன அரசியல், சட்ட, சமூக பண்பாட்டு பதமாகிவிடுகிறது. அவனது நிலம், அவனது மொழி, அவனது பண்பாடு என்பன கூட்டாக இணைக்கப்படும் இடத்திற்தான் தேசியவாதம் தனக்குரிய இடத்தைப் பெறுகின்றது. அந்த அடையாளமே அவனுக்குரிய பாதுகாப்பு கவசமாகின்றது. அந்தவகையில் தேசியவாதம் என்பது உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

தேசியவாதமானது பண்பளவில் சில பெரும் போக்குக்களாக பிரிப்போம். மக்களை அரசியலில் பங்காளிகளாக்கியதன் மூலம் மக்கள் நலனை தனது பிரதான பணியாக அரசுகள் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த மக்கள் நலனில் ஒரு விடயமே சமூக நலன் பேணும் அரசமைப்பு முறையாகும். முதலில் அரசானது தேசிய அரசாக மாறியது. பின்பு அடுத்தகட்டமாக சமூக ஜனநாயக சோசலிசம் போன்ற பரிமாணங்களை பெறமுற்பட்டது. சமூக ஜனநாயகம் சோசலிசம் என்பவற்றிற்கு மாற்றாக மேற்குலக அரசுகள் சமூகநலன் பேண் அரசமைப்பு முறையை முன்வைத்தன. எப்படியோ மக்கள் நலன் பற்றி சிந்திக்க வேண்டிய அளவிற்கு ஆட்சியாளர்களை அது அடுத்த கட்டம் நோக்கித் தள்ளியது. எனவே தேசியவாதத்தில் ஏற்பட்ட ஒரு கட்டப் பரிணமான வளர்ச்சியாக மக்கள் நலன்பேண் அரசமைப்புத் தேசியவாதத்தை குறிப்பிடலாம். இந்த அமைப்பு முறையானது மேற்குலகத்தில் பரவி இன்று முழு உலகிலும் பின்பற்றப்படும் முறையாக உள்ளது. அந்த வகையில் தேசியவாதம் என்பது முக்கியத்துவம் வாய்ந்தவையாக கருதப்படுகின்றது.

தேசியவாதத்தின் மூலம் மக்கள் அரசியலுக்குள் இழுத்து விடப்பட்டனர். மக்கள் அரசியல் உணர்வு பெற்றவர்களாயினர். மக்களிடம் புதிய சிந்தனையும் உத்வேகமும் பிறந்தது. எப்படியோ தேசிய போராட்டங்கள் மக்களை அரசியலில் ஒரு சக்தியாக்கின. விரும்பியோ விரும்பாமலோ மக்கள் நலன்களைப் பற்றிப் பேசாமல் அரசியல் பேசமுடியாது என்ற நிலையை தேசியவாதம் உருவாக்கியது. எனவே தேசியவதாமானது உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய வாதமானது இளைஞர்கள் அரசியலில் ஒரு சக்தியாக மாறினர். பாரம்பரியமாக இருந்து வந்த சமூகத் தலைமைத்துவங்களுக்கு அப்பாற் போர்க்குணம் கொண்ட புதிய இளைஞர் சக்தியின் பிரவேசம் ஏற்பட்டது. பெண்ணுரிமை பற்றிய விழிப்பையும், சாதிய ஏற்றத்தாழ்வுகள் பற்றிய விழிப்பையும், புதிய சமூகக் கோட்பாடுகள் பற்றிய விழிப்பையும், கல்வி, பொருளாதாரம், சிறுவர் நலம் சார்ந்த எண்ணங்களையும், சிந்தனைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் போன்றவற்றை ஏற்படுத்தியது. இதனால் இது உலகளாவிய ரீதியில் முக்கியம் வாய்ந்தவையாக காணப்பட்டது.

மேலே குறிப்பிட்டதைப்போல தேசியவாதமானது அனைத்து மனிதர்களையும் ஒருவருக்கொருவர் சமதை உள்ளவராக்குகின்றது. மனிதனை அவனது பழைய தளைகள் அனைத்தில் இருந்தும் விடுவித்து சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் உள்ளவனாக மாற்றுகின்றது. இதனால் மக்கள் அமைதியாகவும் தங்கள் ஒவ்வொருவருடைய உரிமைகளைப் பெற்றும் வாழ முடிகிறது. அந்தவகையில் தேசியவாதமானது உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக காணப்படுகிறது.

தேசியவாதத்தின் மூலம் ஒவ்வொரு மனிதனும் பேச்சுச்சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், வழிபாட்டுச்சுதந்திரம், வாழ்வுடைச் சுதந்திரம், சிவில் சுதந்திரம் என அனைத்து வகையான சுதந்திரத்திற்கும் இது உரியவனாக்குகின்றது.

சமூக உழைப்பையும், மூலவளங்கள் உட்பட்ட அச்சமூகம் சார்ந்த அனைத்து வளங்களையும் வாய்ப்புக்களையும், அனைவருக்கும் உரியதாக்குவதும் அனைவரையும் சம பங்காளிகளாக்குவது என்ற குறிக்கோளுடன் அதிகம் சமபங்கீட்டிற்கான அடிப்படைகளை வளர்த்தெடுக்க வல்லதான தொடர் சமூக வளர்ச்சிக்கும் பொருத்தமான அரசியல் பொருளாதார பண்பாட்டுக் கட்டமைப்பே தேசியவாதமாய் அமைகிறது. அந்தவகையில் தேசியவாதம் முக்கியமானதாக காணப்படுகிறது.

மனிதன் தன்னை ஒரு பொது அடையாளத்தின் கீழ் தற்காக்கவும், பாதுகாக்கவும், தன்னை வளர்க்கவும், அவனிடம் உறைந்திருக்கும் மனித ஆற்றலையும், ஆக்க சக்தியையும் வளர்க்கவும், தேவையான ஒரு பாதுகாப்பு கவசமாகவும், வளர்ச்சிக்குகான கலசமாகவும் தேசிய வாதம் அமைகிறது.

தேசியம் என்பது கூட்டு வாழ்வின் பேரால் ஜனநாயத்தை நெறிமுறையாகக் கொண்ட பாதுகாப்பிற்கான ஏற்பாடாகவும், சமூக சமவாய்ப்பிற்கும், தொடர் வளர்ச்சிக்குரிய சமூக, அரசியல், பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு கட்டமைப்பாகவும், இலட்சக்கணக்கான ஆண்டுகால சமூக பண்பாட்டு ஆன்மாவிலிருந்து ஊற்றெடுத்து அதற்கேற்ப நவீன வளர்ச்சிகளை தன்வயப்படுத்தி முன்னேறுவதற்கான ஓர் உன்னத வாழ்வியல் வடிவாக தேசியவாதம் அமைகிறது.

இத்தகைய அனைத்தையும் அந்த சமூகத்தில் தோன்றக் கூடிய எதேச்சதிகார அரசியல் சக்திகளாலோ அல்லது அந்நிய நாடுகளினாலோ அல்லது மேலாதிக்க இனவாதத்தாலோ பாதிக்கப்படாமல் பாதுகாப்பு தேசிய பாதுகாப்பாய் அமைகின்றது. உயிருக்கும், உடமைக்கும், பண்பாட்டிற்கும், வாழ்க்கை முறைக்குமான பாதுகாப்பிற்கு முதற்தர உத்தரவினை அளிக்கும் ஒரு ஜனநாயக சமூக கட்டமைப்பே தேசியவாதமாகும். அந்தவகையில் தேசியவாதமானது உலகளாவிய ரீதியல் முக்கியத்தும் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

தேசியவாதம் என்பது வேகமாக வளர்ந்து வரும் பூகோளவாதம், சர்வதேசவாதம், உலகமயமாக்கல், என்பவற்றைக் கொண்ட உலகளாவிய அரசியல் சூழலில் இவற்றிற்கு ஈடுகொடுத்து பூகோளம் தழுவிய பாதுகாப்பிற்கு ஏற்ப தன் சூழல் சார்ந்த இயற்கை மற்றும் பண்பாட்டு அம்சங்களையும் இணைத்த வகையிலான பாதுகாப்பிற்கும், வளர்ச்சிக்குமான ஏற்பாடாக காணப்படுகின்றது. அந்தவகையில் தேசியவாதம் என்பது முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது.

சுயநிர்ணய உரிமை ஜனநாயக உரிமை என்றும் தேசிய உரிமை என்றும் தேசியப் போராட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. ஓர் இலட்சியம் எத்தனை உயர்ந்ததாக இருப்பினும் அதனை மக்களின் விருப்பத்திற்கு எதிராக அல்லது மாறாக மக்கள் மீது திணிக்க எவருக்கும் உரிமை இல்லை என்பது தேசியவாதத்தின் அடிப்படைக்கூறு ஆகும்.

தேசிய வாதம் தான் பூகோள வாதம், சர்வதேசவாதம் என்னும் இரண்டிற்குமான நெம்புகோலாகவும், அதுவே இவை இரண்டையும் இணைக்கும் நடுநாயகமாகவும் விளங்குகின்றது. பூகோள நலனுக்கும் இயற்கை மற்றும் உயிரியல் நலன்களுக்கும் எதிரான பெருவல்லரசுகளினதும் பெருநிறுவனங்களினதும், இன ஆதிக்க வாதிகளினதும் பிடியிலிருந்து பூகோளத்தையும், குறித்த இயற்கை சார்ந்த சூழலையும் பண்பாட்டையும் எதிர்காலத்திற்கான மனித விழுமியங்களையும், பாதுகாத்து முன்னெடுப்பதற்கான ஏற்பாடாக தேசியவாதம் அமைகின்றது. அந்தவகையில் தேசியவாதமானது முக்கியத்தன்மை வாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகத்திற்கான பயணத்தில் தேசியவாதம் ஒரு கட்டமாகும். தேசிய வாதமானது ஜனநாயகத்தை அடைவதற்கான ஒரு வடிவமும், ஜனநாயகத்தை காவிச் செல்லும் ஒரு வாகனமும் ஆகும். தேசியவாதம் எனும் காலகட்ட கருவியை கையில் ஏந்தாமல் ஜனநாயகத்தை பிரசவிக்க முடியாது. எனவே தேசியவாதமானது உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இவ்வாறு தேசியவாதத்தின் முக்கியத்துவம் ஆனது உலகளாவிய ரீதியில் பரந்து விரிந்து காணப்படுகின்றது என்பது தெரிகின்றது.

இவை அனைத்தையும் நோக்குமிடத்து வாழ்வின் சகல நலன்களும் தேச அரசு என்பதை மையமாகக் கொண்டு நிர்ணயம் பெற்ற ஒரு முறைமைதான் தேசியவாதமாக காணப்படுகின்றது. மேலும் தேசியவாதம் தொடர்பாக உலகில் மிகவும் பிழையாக புரிந்து கொள்ளப்பட்ட பிழையாக கையாளப்படுகின்ற கோட்பாடுகளில் ஒன்றாக இது உள்ளது. இது சமூக வரலாற்று வளர்ச்சிக்குரிய உன்னதமான உள்ளடக்கத்தை கொண்டுள்ளது. நடைமுறையில் அதுமனிதனை ஒருபுறம் பெரிதும் முன்னேற்ற உதவுவதுடன் மறுபுறம் அது பிழையாக புரிந்து கொள்ளப்பட்டதோடு பிழையாகவே தேசிய வெறியுடன் கையாளப்படும் நிலையில் மனித குலத்திற்கு தீங்கையும் ஏற்படுத்தி உள்ளது என்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

இது தேசியவாதத்தின் உள்ளடக்கத்தில் ஏற்பட்டுள்ள தவறல்ல. ஆதிக்க சக்திகள் அதனை பிழையாக கையாண்டதன் விளைவாகும். உதாரணமாக ஹிட்லர் கடைப்பிடித்த தேசியவாதம் என்பது தேசிய வெறியாக அமைந்து அளப்பெரும் தீங்கை மனித வர்க்கத்திற்கு ஏற்படுத்தியது. இப்படி பல மட்டங்களில், பல்வேறு கட்டங்களில் கண்ட வேறுபாடுகளைக் கடந்து தேசியவாதத்தை ஆட்சியாளர்கள் தத்தம் ஆதிக்க நலன்களுக்காகவும் இன ஒடுக்கு முறைகளுக்காகவும் பயன்படுத்தியுள்ளனர். இப்போக்கு இன்றுவரை நீடிக்கிறது என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

தேசியவாதத்திற்கு அதன் உள்ளடக்கத்தில் பலகட்ட பரிமாணங்கள் உண்டு. ஆதலால் தேசியவாதம் ஒரு முடிவுப் பொருள் அல்ல. அது வளர்ந்து செல்லும் பரிமாணங்களைக் கொண்டது. மக்கள் தழுவிய அனைத்து வகை போக்குகளுக்கும் தேசியவாதமே அடிப்டை என்பதனை புரிந்து கொண்டால் தேசிய வாதத்தின் முக்கியத்துவத்தினை தெரிந்து கொள்ளலாம். அதாவது மக்களின் வாழ்நிலை வளர்ச்சிக்கான மொழி, பண்பாடு, பொருளாதாரம், வாழ்க்கை முறை என அனைத்து வளர்ச்சி போக்குக்கும் தேசியவாதம் ஆனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமானதாகவும் அடிப்படையானதாகவும் காணப்படுகின்றது என்றே குறிப்பிட வேண்டும்.

எனவே தேசிய வாதம் என்பது இனம், மதம். மொழி, பிரதேசம் என்கின்ற புறத்தோற்ற அம்சங்களையும் ஜனநாயக உள்ளடக்கத்தையும் கொண்டு காணப்படுகின்றது. எனவே தேசிய வாதமானது சர்வதேச வாதத்தையும் பூகோளவாத்தையும் இணைக்கும் சக்தியாக உலகமயமாக்கலுடன் மேலோங்கிய வழியில் இணைந்ததாக காணப்படுகின்றது.

ஆகவே அதன் இயல்பிலும் பண்பிலும் உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது என்பதற்கு எவ்வித ஐயமும் இல்லை என்றே நான் கருதுகின்றேன். எனவே தேசியவாதமானது மனிதனை முன்னேற்றகரமான பாதையில் இட்டுச்செல்ல வழிகோலுகின்றது என நான் கருதுகிறேன். ஆகவே தேசியவாதம் உலகிற்கு மிகப்பெரிய முக்கியமானது ஆகும்.

**உசாத்துணைநூல்கள்**

திருநாவுக்கரசு.மு, (2017), "தேசியமும் ஜனநாயகமும்" சென்னை

திருநாவுக்கரசு.மு, (2018), "பூகோளவாதம் புதிய தேசியவாதம்" பாரதிபதிப்பகம்.

திருநாவுக்கரசு.மு, (1991), "இனப்பிரச்சனைகளின் அடிப்படைகள்", மாறன் பதிப்பகம்.

காதர்.பி.ஏ, (2003), "சுயம் நிர்ணயம் உரிமை" கொழும்பு

ta.m.wikipeia.org , தேசியவாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்பானின் அரசியல் முறைக்கு அதன் அரசியல் யாப்பு எவ்வாறு ஆதாரமாக விளங்குகின்றது என்பதை ஆராய்க.

ஒரு நாட்டின் அரசியலமைப்பு அந் நாட்டின் அதியுயர் சட்டமாகும். அது முக்கிய சட்ட ஆவணமாகவும் கருதப்படும். அதேசமயம் இவ் அரசியலமைப்பு ஓர் ஆவணமாகவோ அல்லது பல ஆவணங்களாகவோ அமையலாம். வேறு எந்த நியதிச் சட்டத்தையும் விட அரசியலமைப்பு மதிப்புமிக்கதாகும். எனவே ஒரு நாட்டின் அதி உயர் பிரஜை முதல் அடி மட்டத்தில் வாழும் பிரஜை வரை அனைவரும் இவ்விசேட சட்ட ஆவணத்திற்கு கட்டுப்பட்டவர்களாவார்.

அரசியல் யாப்பு (Constitution) என்றால் என்ன என்பது தொடர்பாக பல்வேறு வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். அந்தவகையில் டைசி (Diecy) என்பவர் ஒரு நாட்டில் அதிகாரப் பங்கீட்டையும் அதன் தொழிற்பாட்டையும் நிர்ணயிக்கக் கூடிய கொள்கைகள் அடங்கிய அடிப்படை சட்டமே அரசியல் திட்டமாகும் என்கின்றார். சேர் ஹென்றி மெயின் (Sri Henry Maine) அரசாங்கத்தின் அமைப்பையும் தொழிற்பாடுகளையும் பற்றிக் கூறும் விதிகளின் தொகுப்பே அரசியல் திட்டமாகும் என்கின்றார். இவ்வாறாக பல்வேறு அறிஞர்கள் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தாலும் பொதுவான வகையில் அரசியல் அமைப்பு என்பது "அரசொன்றின் அரசாங்கத்தின் அமைப்பு, அதிகாரம், தொழிற்பாடு ஆகியவற்றையும் அவ்வரசின் எல்லைக்குட்பட்ட மக்களின் உரிமைகளையும் கடமைகளையும் அம் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான உறவுகளையும் தெளிவாக விளக்கும் விதிகளின் தொகுப்பே அரசியல் யாப்பாகும்" என வரையறுத்துக் கொள்ளப்படுகிறது.

அரசியல் யாப்பானது பிரதானமாக மூன்று தன்மையினடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது உருவாக்கத்தினடிப்படையில் அதாவது, எழுத்துரு தன்மையினடிப்படையில் எழுதப்பட்ட யாப்பு, எழுதப்படாத யாப்பு என வகைப்படுத்தப்படுகின்றது. யாப்புத் திருத்த முறையின் அடிப்படையில் நெகிழும் யாப்பு, நெகிழா யாப்புக்களாகவும் அதிகாரம் செறிவாக்கப்படுவதையும் பகிரப்படுவதையும் அடிப்படையாகக் கொண்டு ஒற்றையாட்சி, சமஷ்டியாட்சியாகவும் வகைப்படுத்தப்படுகின்றது.

அரசியல் யாப்பின் முக்கியத்துவங்களாக, மனம் போன போக்கிலும் தவறான முறையிலும் ஆட்சி நடாத்துவதை அரசியல் யாப்பு தவிர்க்கின்றது, மக்களின் உரிமைகள் அரசியல் யாப்பின் மூலம் உறுதி செய்யப்படுகிறது, ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டிற்கு உதவுகின்ற ஒன்றாக அரசியல் யாப்பு காணப்படுகின்றது, சட்டத்தின் ஆட்சி என்கின்ற அம்சம் நடைமுறையில் செயற்படுவதற்கு அரசியல் யாப்புக்கள் உதவுகின்றன, அரசிற்கு அரசியல், பொருளதாரக் கொள்கையினை வழங்குகின்றது, அரசாங்கமுறையின் இயல்பு அரசியல் யாப்பின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறாக அரசியல் யாப்பு என்பது பல்வேறு வகையில் ஓர் அரசிற்கு முக்கியமானதாகக் காணப்படுகின்றது. அத்தோடு ஒவ்வொரு நாட்டின் அரசியல் முறைக்கும் ஆதாரமாக காணப்படுகின்றது. அந்த வகையில் இக் கட்டுரையானது ஜப்பானின் அரசியல் முறைக்கு அதன் அரசியல் யாப்பு எவ்வாறு ஆதாரமாக விளங்குகின்றது என்பதை ஆராய்வதாகவே அமையப் பெற்றுள்ளது.

உலகெலாம் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் போது உதய சூரியனைக் கண்ட மகிழும் நாடு ஜப்பான் கிழக்காசியாவில் அமைந்துள்ளளது. இது உலகின் மூன்றவாது மிகப் பெரிய பொருளாதார சக்தியாகவும் விளங்குவது மட்டுமல்லாமல் உலகின் அதிகபட்ச சராசரி வாழ்நாளைக் கொண்ட நாடாகவும் விளங்குகின்றது. மேலும் உலகத்தின் ஐந்தாவது அதிகபட்ச இராணுவ செலவைக் கொண்டுள்ளதெனினும் இது தன் தற்காப்புக் கென்றே பயன்படுத்துகின்றது. இவ்வாறாக ஜப்பானானது உலகின் தலைசிறந்த நாடுகளில் ஒன்றாக இரண்டாம் உலக யுத்தத்தில் ஹிரோசிமா, நாகசாஹி அகிய நாகரங்கள் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசி தகர்த்தெறிந்த போதும் இன்று மீண்டும் புத்துயிர் பெற்று வளர்ச்சியடைந்ததற்கு அதன் அரசியலமைப்பானது பாரிய முக்கியத்துவம் அல்லது தாக்கத்தினை ஏற்படுத்தியதாக காணப்படுகின்றது.

போருக்கு பின்னால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பானது (ஜப்பான்) முழுக்க முழுக்க அமெரிக்காவின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டதாகும். இது 1946 இல் உருவாக்கப்பட்டு மே, 1947 இல் நடைமுறைக்கு வந்தது. ஜப்பானிய அரசியலமைப்பு உலகின் திருத்தப்படாத அரசியலமைப்பாகும். 70 ஆண்டுகளுக்கும் மேலாக அதன் உரையில் எந்த திருத்தமும் செய்யப்படவில்லை. 21000 சொற்களைக் கொண்ட சராசரி அரசியலமைப்புடன் ஒப்பிடும் போது இது 5000 சொற்களைக் கொண்ட குறுகிய அரசியலமைப்பாகும். முந்தைய ஜப்பானிய சட்ட ஆவணங்களை போலன்றி அரசியலமைப்பு பாரம்பரிய ஜப்பானிய மொழிக்கு பதிலாக நவீன பேச்சு வழக்கு ஜப்பானிய மொழியில் எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பான் அரசியலமைப்பு பாராளுமன்ற ஆட்சி முறையை வழங்குகிறது. மற்றும் சில அடிப்டை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. அதன் விதிமுறைகளின் கீழ் ஜப்பான் பேரரசர் "அரசு மற்றும் மக்களின் ஒற்றுமையின் சின்னம் மற்றும் இறையாண்மையை உடைமையாக்கல், முற்றிலும் சடங்கு பாத்திரத்தை செயற்படுத்துகின்றார்."

ஜப்பான் அரசியலமைப்பு வரைவில் ((முன்னைய) ஜப்பான் பேரரசால் ஆளப்படுவதாகவும் மக்கள் இறையாண்மை மற்றும் ட்ரையஸ் அரசியல் கொள்கைகள் ஏற்றுக் கொள்வதாகவும் கூறப்பட்டது. தற்போதைய அரசியலமைப்பில் அரசாங்கத்தை மக்களின் நன்மையாக குறிப்பிடுகின்றது. மற்றும் மக்களுக்கு அமைதியாக வாழ்வதற்கான உரிமைகளையும் வழங்குகின்றது.

முன்னர் குறிப்பிட்டதைப்போல ஜப்பானின் அரசியல் முறையானது பாராளுமன்ற பிரதிநிதித்துவ ஜனநாயக முடியாட்சியின் கட்டமைப்பில் நடத்தப்படுகின்றது. இங்கு ஜப்பானின் பிரதமர் அரசாங்கத்தின் தலைவராகவும் நிர்வாக கிளையை வழிநடத்தும் அமைச்சரவையின் தலைவராகவும் உள்ளார். சட்டமன்ற அதிகாரம் டயட்டில் உள்ளது. இது பிரதிநிதிகள் சபை மற்றும் கவுன்சிலர்களின் சபை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. ஜப்பானிய அரசியல் பல கட்சி அமைப்பை உள்ளடக்கியது. நீதித்துறை அதிகாரம், உச்ச நீதிமன்றம் மற்றும் கீழ் நீதிமன்றங்களுக்கு உள்ளது.

ஜப்பான் அரசியலமைப்பானது பேரரசருக்கு உண்மையான அதிகாரத்தினை வழங்கவில்லை. அவரச கால இருப்பு அதிகாரங்கள் கூட பேரரசருக்க வழங்கப்படவில்லை. அரசியல் அதிகாரம் (Political power) முக்கியமாக பிரதமர் மற்றும் டயட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் நடத்தப்படுகிறது. ஆனால் பேரரசரின் அதிகாரம் சர்ச்சைக்குரியதாக இருந்தாலும் இராஜதந்திர சந்தரப்பங்களில் பேரரசர் அரச தலைவராக நடந்து கொள்கிறார். அந்தவகையில் ஜப்பானின் அரசியலமைப்பின் பிரகாரம் சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாத்ததுறையின் கட்டமைப்பினை சற்று விரிவாக நோக்குவது பொருத்தமுடையதாக இருக்கும்.

நிறைவேற்று அதிகாரம் அமைச்சரவைக்கு உள்ளது. இதில் பிரதம மந்திரி மற்றும் 17 மாநில அமைச்சர்களையும் கொண்டு காணப்படுகின்றது. பிரதம மந்திரிப் பதவி காலியாகும் போது அல்லது பிரதிநிதிகள் சபையின் பொதுத் தேர்தலுக்கு பிறகு டயட்டின் முதல் அமர்வு தொடங்கப்படும் போது அமைச்சரவை மொத்தமாக இராஜினாமா செய்ய வேண்டும். பிரதிநிதிகள் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றினால் அல்லது நம்பிக்கைத் தீர்மானத்தை நிராகரித்தால் பத்து நாட்களுக்குள் பிரதிநிதிகள் சபை கலைக்கப்படாவிட்டால் அமைச்சரவை மொத்தமாக இராஜினாமா செய்யும்.

டயட்டின் தீர்மானத்தின் மூலம் டயட்டின் உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்பட்ட மற்றும் பேரரசரால் நியமிக்கப்படும் பிரதமர் குடிமகனாக இருக்க வேண்டும். பிரதமர் மாநில அமைச்சர்களை நியமித்து அவர் விருப்பப்படி அவர்களை பதவி நீக்கம் செய்யலாம். அமைச்சரவையை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதம மந்திரி டயட்டிற்கு அறிக்கைகளை சமர்ப்பிப்பார். மேலும் பல்வேறு நிர்வாகக் கிளைகளின் மீது கட்டுப்பாடு மற்றும் மேற்ப்பார்வையை பிரயோகிக்கிறார்.

அமைச்சரவையில் அமைச்சரவை அலுவலகம் மற்றும் அமைச்சகங்கள் 11 உள்ளன. அவை அந்தந்த ஸ்தாபன சட்டங்களால் நிறுவப்பட்டு தேசிய அரசாங்க அமைப்புச் சட்டத்திலும், அமைச்சரவை செயலகம், அமைச்சரவை சட்ட பணியகம், தேசிய பணிப்பாளர் ஆணையம், ஜப்பான் பாதுகாப்பு கவுன்சில் மற்றும் பிறவற்றிலும் பட்டியலிடப்பட்டுள்ளது. மாநில மற்றும் பிற பொது நிறுவனங்கள் மற்றும் ஏஜென்சிகளின் இறுதி கணக்குகளை தணிக்கை செய்ய அரசியலமைப்பு ரீதியாக சுதந்திரமான அமைப்பான தணிக்கை வாரியம் உள்ளது.

ஜப்பான் அரசியலமைப்பின் பிரிவு 73, பொது நிர்வாகத்துடன் கூடுதலாக பின்வரும் செயல்பாடுகளை அமைச்சரவை செய்ய எதிர்பார்கிறது. அவையான, சட்டத்தை உண்மையாக நிர்வகியுங்கள், மாநில விவகாரங்களை நடாத்துதல், வெளிநாட்டு விவகாரங்களை நிர்வகித்தல், சட்டத்தால் நிறுவப்பட்ட தரநிலைகளின் படி சிவில் சேவையை நிர்வகித்தல், பட்ஜெட்டை தயார் செய்து டயட்டில் சமர்ப்பித்தல், பொது மன்னிப்பு, சிறப்பு மன்னிப்பு, தண்டனைக் குறைப்பு மற்றும் உரிமைகளை மீட்டெடுப்பு குறித்து முடிவு செய்தல் ஆகியவற்றை குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

அரசியலமைப்பின் கீழ் அனைத்து சட்டங்களும் அமைச்சரவை உத்தரவுகளும் பேரரசால் முறையாக அறிவிக்கப்படுவதற்கு முன் தகுதி வாய்ந்த அமைச்சரால் கையொப்பமிட்டு பிரதமரால் எதிர் கையொப்பம் இடப்பட வேண்டும் மேலும் அமைச்சரவையின் அனைத்து உறுப்பினர்களும் பிரதமரின் அனுமதியின்றி சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த முடியாது. சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கான இருப்பினும் உரிமையை பாதிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய அமைச்சரவை 10 ஆகஸ்ட் 2022 அன்று உருவாக்கப்பட்டது. இதற்கு பிரதமர் ஃபுமிஜோ கிஷிடா தலைமை தாங்குகிறார்.

ஜப்பானின் சட்டத்துறையானது "டயட்" என்கின்ற பெயரினால் அறியப்படுகிறது. இது ஒரு இருசபை சட்டமன்றமாகும். இது மேற்குறிப்பிட்டதைப் போன்று மக்கள் பிரதிநிதிகள் சபை, கவுன்சிலர்களின் சபை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இது அரச அதிகாரத்தின் மிக உயர்ந்த உறுப்பாகும்.

டயட் பொறுப்புக்களில் சட்டங்களை உருவாக்குதல், வருடாந்த தேசிய வரவு செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல், ஒப்பந்தங்களின் முடிவின் ஒப்புதல் மற்றும் பிரதமரை தேர்ந்தெடுப்பது ஆகியவை அடங்கும். கூடுதலாக அரசியலமைப்புத் திருத்தங்கள் வரைவைத் தொடக்குவதற்கு அதிகாரம் உள்ளது. அவை அங்கீகரிக்கப்பட்டால் மக்களின் பெயரில் பேரரசால் பிரகடனப்படுத்துவதற்கு முன்னர் ஒரு வாக்கெடுப்பு மூலம் மக்களிடம் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

அரசியலமைப்புத் தொடர்பான விசாரணைகளை இரு அவைகளும் நடத்துவதற்கும் சாட்சிகளின் முன்னிலை மற்றும் சாட்சியங்களை கோருவதற்கும் பதிவேடுகளைத் தயாரிப்பதற்கும் அரசியலமைப்புச் சட்டம் அனுமதிக்கிறது. அத்துடன் பிரதம மந்திரி அல்லது மற்ற அமைச்சரின் பிரசன்னத்தைக் கோருவதற்கு டயட்டின் இல்லத்தை அனுமதியளிக்கின்றது. தேவைப்படும் போதெல்லாம் பதில்கள் அல்லது விளக்கங்களை வழங்க, கூறவும் டயட் குற்றவியல் அல்லது ஒழுங்கற்ற நடத்தைக்கு தண்டனை பெற்ற நீதிமன்ற நீதிபதிகளை குற்றஞ் சாட்டவும் முடியும். எவ்வாறாயினும் அரசியலமைப்பு வாக்களிக்கும் முறைகள் ஒவ்வொரு சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு உறுப்பினர்களினதும் தேர்தல் முறை தொடர்பான அனைத்து விடயங்களையும் குறிப்பிடவில்லை.

அரசியலமைப்பின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் குறைந்த பட்சம் ஒரு டயட் அமர்வு கூட்டப்பட வேண்டும். அமைச்சரவை விருப்பத்தின் பேரில் டயட்டின் அசாதாரண அமர்வுகளை கூட்ட முடியும் மேலும் இரு சபையிலும் உள்ள மொத்த உறுப்பினர்களில் ¼ அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் அதைக் கோரும் போது அது தேவை. ஒரு தேர்தலின் போது பிரதிநிதிகள் சபை மட்டுமே கலைக்கப்படுகிறது. எவ்வாறாயினும் கவுன்சிலர்களின் சபை கலைக்கப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மசோதாக்கள் சட்டமாக மாற அவை முதலில் டயட்டின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டு மாநில அமைச்சர்களால் கையொப்பமிடப்பட்டு பிரதமரால் கையொப்பமிடப்பட்டு பின்னர் இறுதியாக பேரரசரால் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

ஜப்பானின் பிரதிநிதிகள் சபையானது 465 உறுப்பினர்களைக் கொண்டது. இதில் 176 உறுப்பினர்கள் பல உறுப்பினர் தொகுதியிலிருந்து விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். மேலும் 289 பேர் ஒற்றை உறுப்பினர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.

கவுன்சில்களின் சபையானது 242 உறுப்பினர்களை கொண்டுள்ளது. இவர்களில் 73 பேர் 47 மாகாணங்களிலிருந்து மாற்ற முடியாத ஒற்றை வாக்குகள் மூலமாகவும் 48 பேர் நாடு தழுவிய பட்டியலிலிருந்து விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மூலம் திறந்த பட்டியல்களுடன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். கவுன்சிலர் சபையை பிரதமரால் கலைக்க முடியாது.

பிரதிநிதிகள் சபையால் எடுக்கப்பட்ட முடிவை கவுன்சிலர்கள் சபை வீட்டோ செய்ய முடியாது என்பதால் கவுன்சிலர்களின் சபை அதன் முடிவை பரிசீலனை செய்ய பிரதிநிதிகள் சபை ஏற்படுத்தலாம். எவ்வாறாயினும் பிரதிநிதிகள் சபையானது அதன் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் கவுன்சிலர்களின் வீட்டோவை மீறுவதன் மூலம் அதன் முடிவை இன்னும் வலியுறுத்த முடியும். ஒவ்வொரு ஆண்டும் தேவைப்படும் போது பேரரசரால் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் ஒரு கூடுதல் அல்லது சாதாரண அமர்வுக்கு கவுன்சிலர்களின் சபையில் தேசிய டயட் கூட்டப்படுகிறது. எவ்வாறாயினும் பேரரசர் சிம்மாசனத்திலிருந்து தனது உரையுடன் டயட்டை தொடங்குவதற்கு முன் ஒரு சிறிய உரை பொதுவாக பிரதிநிதிகள் சபையின் சபாநாயகரால் செய்யப்படுகிறது.

ஜப்பானின் நீதித்துறை கிளை உச்ச நீதிமன்றம் மற்றும் நான்கு கீழ் நீதிமன்றங்களைக் கொண்டுள்ளது. உயர் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், குடும்ப நீதி மன்றங்கள் மற்றும் சுருக்க நீதிமன்றங்கள் என நான்கு அடிப்படை அடுக்களாகப் பிரிக்கப்பட்டு நிர்வாக மற்றும் சட்டமன்றக் கிளைகளிலிருந்து நீதிமன்றத்தின் சுதந்திரம் அரசியலமைப்பின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது.

அரசியலமைப்பின் பிரிவு 76, அனைத்து நீதிமன்ற நீதிபதிகளும் தங்கள் சொந்த மனசாட்சியைப் பயன்படுத்துவதில் சுதந்திரமானவர்கள் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறது. நீதிபதிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கான நிர்வாக உறுப்புக்கள் அல்லது நிறுவனங்களுக்கு எந்தவொரு அதிகாரத்தையும் அரசியலமைப்பு வெளிப்படையாக மறுக்கிறது. எவ்வாறாயினும் ஒரு உச்ச நீதிமன்ற நீதபதி பெரும்பான்மை வாக்குகளால் பதவி நீக்கம் செய்யப்படலாம். இதில் நீதிபதியின் நியமனத்தைத் தொடர்ந்து தேசிய டயட் பிரிவின் பிரதிநிதிகள் சபையின் முதல் பொதுத்தேர்தலின் போதும், அதன் பிறகு ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கும் ஒரு முறை நடைபெறும் முதல் பொதுத்தேர்தலின் போதும் நிகழ வேண்டும்.

நீதிமன்ற நீதிபதிகள் பேரரசரின் சான்றளித்து அமைச்சரவையால் நியமிக்கப்படுகிறார்கள். இது நடைமுறையில் முன்னாள் தலைமை நீதிபதியின் பரிந்துரையின் கீழ் இருப்பதாக அறியப்படுகிறது. ஜப்பானில் உள்ள சட்ட அமைப்பு சீன சட்டத்தால் வரலாற்று ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தியது. இப்போது பெரும்பாலும் ஐரோப்பிய சிவில் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. குறிப்பிடத்தக்க வகையில் ஜேர்மன் மாதிரியை அடிப்படையாகக் கொண்ட சிவில் கோட் இன்னும் நடைமுறையில் உள்ளது. ஒரு அரை ஜீரி அமைப்பு சமீபத்தில் பயன்பாட்டிற்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்தாகும். மேலும் சட்ட அமைப்பு மே, 03, 1947முதல் உரிமைகள் மசோதாவையும் உள்ளடக்கியது.

ஜப்பானில் உள்ள அனைத்து சட்டபூர்வ சட்டங்களும் பேரரசால் ஜப்பானின் அந்தரங்க முத்திரையுடன் மற்றும் கையொப்பமிடப்பட வேண்டும். மேலும் அமைச்சரவையின் கையொப்பம் பிரதமரின் எதிர்கையொப்பம் மற்றும் பேரரசரின் அறிவிப்பு இல்லாமல் எந்தச் சட்டமும் நடைமுறைக்கு வராது.

ஜப்பானின் உச்ச நீதிமன்றமானது நீதித்துறை மறு ஆய்வு அதிகாரத்தைக் கொண்டுள்ளது. அரசியலமைப்பினால் வரையறுக்கப்பட்டபடி எந்தவொரு சட்டம், ஒழுங்கு, ஒழுங்கு முறை அல்லது உத்தியோக பூர்வ செயலின் அரசியலமைப்புத் தன்மையை தீர்மானிக்கும் அதிகாரம் கொண்ட நீதிமன்றமாகும். கீழ் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமனம் செய்வதற்கும், நீதித்துறை நடைமுறைகளை நிர்ணயம் செய்வதற்கும் உச்ச நீதிமன்றம் பொறுப்பாகும். இது நீதித்துறை அமைப்பையும் வழக்கறிஞர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதையும், நீதிபதிகிளின் மற்றும் பிற நீதித்துறை பணியாளர்களையும் ஒழுங்குபடுத்துவதனையும் மேற்பார்வை செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானின் உயர் நீதிமன்றங்கள் உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட வழக்குகளைத் தவிர்த்து மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் குடும்ப நீதிமன்றங்களால் வழங்கப்படும் தீர்ப்புக்களுக்கான மேன்முறையீடுகளை விசாரிக்கும் அதிகார வரம்பைக் கொண்டுள்ளது. குற்றவியல் மேல்முறையீடுகள் உயர் நீதிமன்றங்களால் நேரடியாக கையாளப்படுகின்றன. ஆனால் சிவில் வழக்குகள் முதலில் மாவட்ட நீதிமன்றங்களால் கையாளப்படுகின்றன. ஜப்பானில் எட்டு உயர் நீதிமன்றங்கள் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவையாவன, டோக்கியோ, ஒசாகா, நகோயா, ஹிரோஷிமா, ∴புகுவோகா, சென்டாய், சப்போரோ மற்றும் தகமாட்சு என்பனவாகும்.

ஜப்பானின் தண்டனை அமைப்பு நீதி அமைச்சகத்தால் இயக்கப்படுகிறது. இது குற்றவியல் நீதி அமைப்பின் ஒரு பகுதியாகும். மேலும் இது குற்றவாளிகளை சமூகமயமாக்குதல், சீர்திருத்தம், மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் உள்ளது. அமைச்சகத்தின் சீர்திருத்த பணியகம் வயது வந்தோருக்கான சிறைச்சாலை அமைப்பு, சிறார் சீர்திருத்த அமைப்பு மற்றும் பெண்கள் வழிகாட்டுதல் இல்லங்களை நிர்வகிக்கிறது. மறுவாழ்வு பணியகம் நன்னடத்தை மற்றும் பரோல் அமைப்புக்களை இயக்குகிறது.

எனவே இவ்வாறாக ஜப்பானின் சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்பன அமைந்து காணப்படுகின்றன. அரசியலமைப்பின் பிரகாரம் சட்டவாக்கத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என்பனவற்றின் ஒழுங்கமைப்பானது நாட்டின் அரசியல் முறைக்கு பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதாக காணப்படுகிறது.

ஜப்பானியர்கள் உலகமகாயுத்தத்தில் தம்மை நாசம் செய்த அமெரிக்கர்களால் எழுதப்பட்ட அரசியலமைப்பு என்கின்ற ஒரு குறுகிய சிந்தனைக்குள் நிற்காமல் தங்களுடைய நாட்டினை முன்னேற்றுவதற்கான ஒரு படிக்கல்லாக அமெரிக்காவால் வரைந்த யாப்பினை உபயோகிப்பது அவர்களின் தொலை தூர சிந்தனையை காட்டுகிறது.

அமெரிக்கா தன்னுடைய தேசிய நலனை அதாவது ஜப்பானால் பழிவாங்கப்பட கூடாது என்கின்ற ஒரு இராஜதந்திர நோக்கிலே ஜப்பானின் அரசியலமைப்பினை தயாரித்துள்ளது என்பது யதார்த்தமான உண்மையாகும். இதற்கு எடுத்துக்காட்டாக போரைத் தடுப்பதற்கான உத்திகளும் இராணுவத்தினை பலப்படுத்துவதற்கான எந்த ஒரு உபாயமும் குறிப்பாக இவற்றினை தடுப்பதாகவே இயற்றப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பான் அரசியலமைப்பில் போருக்கு முடக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதே தவிர தேசிய பாதுகாப்பிற்கு தேவையானவற்றை முடக்கவில்லை. மேலும் அரசியலமைப்பின் பிரகாரம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்படும் நிதிப்பங்கீட்டின் அளவினைவிட பொருளதார முன்னேற்றத்திற்காகவும் நாட்டின் அபிவிருத்திக்காகவும் ஒதுக்கப்படும் நிதியின் அளவு அதிகமாகும். இதனாலேயே ஜப்பான் இன்று பொருளாதார அடிப்படையில் உலக அரங்கில் முக்கியப்படுத்தப்படும் நாடாக காணப்படுகின்றது.

ஜப்பானிய அரசியலமைப்பு இறையாண்மை, அடிப்படை மனித உரிமைகள் மற்றும் அமைதிவாதம் ஆகிய முக்கிய அம்சங்களைக் கொண்டு வரையப்பட்டுள்ளது. இதுவே ஜப்பானின் அரசியல், சமூக, பொருளாதார விருத்திக்கு காரணமாக அமைந்துள்ளது எனலாம்.

மேலும் ஜப்பான் அரசியலமைப்பானது மதச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. மற்றும் மத கல்வி அல்லது பிற மத நடவடிக்கைகளில் இருந்த அரசு விலகி இருக்க வேண்டும். இது மத அமைப்புக்கள் எந்த அரசியல் அதிகாரத்தையும் பயன்படுத்துவதையோ அல்லது அரசிடமிருந்து சலுகைகளைப் பெறுவதையோ தடை செய்கிறது. இதனால் ஆட்சி அதிகார சீர்கேடுகளோ, பிற அமைப்புக்களின் தலையீடுகளோ இல்லாமல் ஜப்பானின் அரசியல் முறையானது (Political system) இயங்குவதற்கு காரணமாக காணப்படுகிறது.

ஜப்பான் அரசியலமைப்பின் முன்னுரையில் மக்கள் இறையாண்மைக் கொள்கையின் உறுதியான அறிவிப்பைக் கொண்டுள்ளது. இது "ஜப்பானிய மக்கள்" என்ற பெயரில் பிரகடனப்படுத்தப்பட்டு "இறையாண்மை அதிகாரம் மக்களிடம் உள்ளது" என்று அறிவிக்கிறது. அந்த வகையில் இறையாண்மை அதிகாரத்தில் வசிக்கும் மக்களது விருப்பத்திலிருந்து பேரரசர் தனது பதவியினை பெறுகிறார் என்று அரசியலமைப்பு வலியுறுத்துகின்றது. அந்தவகையில் ஜப்பானின் அரசாங்க உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பது முழுக்க முழுக்க மக்களின் கைகளில் உள்ளதாக காணப்படுகிறது.

ஜப்பான் அரசியலமைப்பில் அடிப்படை மனித உரிமைகளின் தாராளவாதக் கோட்பாட்டையும் வலியுறுத்துகின்றது. குறிப்பாக பிரிவு 97 கூறுகின்றது. இந்த அரசியலமைப்பின் மூலம் ஜப்பான் மக்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை மனித உரிகைள் சுதந்திரம் பெறுவதற்கான மனிதனின் பழமையான போராட்டத்தின் பலன்கள் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடித்து நிலைத்திருப்பதற்கான பல துல்லியமான சோதனைகளிலிருந்து தப்பியிருக்கிறார்கள். மேலும் இது எதிர்கால சந்ததியினருக்கு நம்பிக்கையுடன் வழங்கப்படுகின்றன. இது எல்லா நேரத்திலும் மீறப்படாமல் இருக்கிறது. இது இவ்வாறு காணப்படுவதனாது ஊழல், அதிகார துஷ்பிரயோகம், பாகுபாடு இன்மை போன்றவற்றை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கிறது. இதனால் அரசியல் முறையானது ஸ்திரமானதாகவும் பொறுப்புக்களுடன் காணப்படவும் வழிவகுக்கிறது.

ஒவ்வொரு நபரையும் ஒரு தனிநபராக வரையறுக்க ஒன்றிணைக்கும் குணாதிசயம் மற்றும் ஆளுமையின் கூறுகளை பிரதிபலிக்கிறது. தனியுரிமை, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றிற்கான அரசியலமைப்பு உரிமைகளை நிறுவுவதற்கான அடிப்படையாக கட்டுரை 13 பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில், சட்டத்தின் முன் சகலரும் சமம் (பிரிவு 14) மக்கள் தங்கள் அரசு அதிகாரிகளை தேர்ந்தெடுக்கவும் அவர்களை பணிநீக்கம் செய்யவும் மறுக்க முடியாத உரிமையைக் கொண்டுள்ளனர் என்று கூறுகிறது (பிரிவு 15), அடிமைத் தனத்தை தடை செய்தல் (பிரிவு 18), மதம் மற்றும் மாநிலத்தை பிரித்தல் (பிரிவு 20), ஒன்று கூடும் சுதந்திரம், சுதந்திரமான பேச்சு (பிரிவு 21), தொழிலாளர்களின் உரிமைகள் (பிரிவு 28), சொத்துரிமை (பிரிவு 29), உரிய நடைமுறைக்கான உரிமை (பிரிவு 31), சட்டவிரோத காவலில் வைப்பதற்கு எதிரான பாதுகாப்பு (பிரிவு 33), நியாயமான விசாரணைக்கான உரிமை (பிரிவு 37), சுய குற்றச்சாட்டுக்கு எதிரான பாதுகாப்பு (பிரிவு 38) ஆகிய உரிமைகள் மக்களிடம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜப்பானின் அரசியலமைப்பானது அதன் அரசியல் முறைக்கும் மக்களின் உரிமைகளுக்கும் பல்வேறு வழிகளில் ஆதாரமாகக் காணப்பட்டாலும் ஜப்பான் அரசியலமைப்பினை இரட்டை நோக்கு நிலையில் கொண்டே பல ஆய்வாளர்கள் பார்க்கின்றார்கள். ஜப்பானிய அரசியலமைப்பானது மிகவும் பழமையான திருத்தப்படாத அரசியலமைப்பாகும். திருத்தப்படாத அரசியலமைப்புக்கள் குறுகிய ஆயுட் காலம் கொண்டவை. அவ்வப்போது திருத்தங்கள் இல்லாமல் அவை மாறிவரும் சமூக விதிமுறைகள், பொருளாதார தேவைகள் மற்றும் புவிசார் அரசியல் சவால்களுக்கு ஏற்ற வகையில் தோல்வியடையும். அப்படியானால் ஜப்பானின் அரசியலமைப்பு எந்தத் திருத்தமும் இல்லாமல் இவ்வளவு ஆண்டு காலமாக எவ்வாறு நீடித்தது என்பது புதிர் இதற்குக் காரணம் ஜப்பானில் ஒரு எளிய பாராளுமன்ற பெரும்பான்மையினால் சட்டமாக்கப்படலாம். ஜப்பானில் முறையான திருத்தங்கள் குறைவாகவே தேவைப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பான் அரசியலமைப்பில் இரண்டு முரணான விடயங்கள் காணப்படுவதாக ஆய்வார்கள் குறிப்பிடுகிறாரகள். ஒன்று அதன் தோற்றம் பற்றி இரண்டாவது முரண்பாடான கட்டமைப்பு என்பனவாகும். மேலும் முன்னர் குறிப்பிட்டதைப் போல இராணுவ (தாக்குதல் அல்லது போர்) திறன்களை வைத்திருப்பதை முற்றாக தடை செய்வதாக ஜப்பான் அரசியலமைப்பு காணப்படுகிறது. இதுவும் பாரிய விவாதத்திற்குரிய ஒன்றாக இருக்கிறது என்பதே உண்மை.

தொகுத்து நோக்குகின்ற போது ஜப்பான் அரசியலமைப்பானது நாட்டின் அபிவிருத்திக்கும் ஜனநாயகமான செயற்பாடுகளுக்கும், அதன் அரசியல் முறைமையானது (Political system) சீராக செயற்படுவதற்கும் மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகள். இலவசமான கல்வி முறைகள் என்பவற்றிற்கு உத்தரவாதம் அளிக்கின்ற ஒன்றாக காணப்படுகிறது. வெளிச்சத்தியால் எழுதப்பட்டாலும் ஜப்பானின் சூழ்நிலைக்குத் தகுந்தாற் போல் வரைந்திருப்பது என்பது பாராட்டுக்குரியதாகும்.

எது எவ்வாறாக காணப்படினும் ஜப்பானின் அரசியலமைப்பினை அமெரிக்கா வரைந்தது என்பது அதன் இறையாண்மையினை கேள்விக்குரிதாக்குகின்ற ஒரு விடயமாகவே நான் பார்க்கின்றேன். அந்த வகையில் இன்று ஜப்பானின் அரசியலமைப்பில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற வாதம் முன்மொழியப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக அரசியலமைப்பின் 9ஆவது பிரிவின் படி நாட்டின் இராணுவத்திற்கு கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன. நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசியலமைப்பில் சீர்திருத்தம் செய்து இராணுவத்திற்கு கூடுதல் அதிகாரததை வழங்க வேண்டும் என முன்மொழியப்பட்டு வருகின்றது.

முடிவாக அரசியலமைப்பில் பல முரண்பாடுகள் காணப்படினும் ஜப்பானின் அரசியல் முறைமைக்கு இவ் யாப்பானது பலத்த ஆதாரமாக உள்ளது என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்.


குணரத்தினம்.வே, (2008), "இலங்கையின் அரசியற் திட்டங்களின் பரிணாம வளர்ச்சி", குமரன் புத்தக இல்லம்.

இராமசந்திரன்.ஜே, (1973), "அரசியல் அமைப்புக்கள் (அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, ஜப்பான், ஆஸ்திரேலியா) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,

ஸ்ட்ராங்.F.S, (2000), "தற்கால அரசியல் அமைப்புக்கள்" தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,

தங்கவேலு.கோ, (1977), "ஜப்பானின் வரலாறு" தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,

ராதா.R, பூர்ணிமா திலகம்.G, சாந்தி.ளு, சரவணகுமார்.R.A, (2020), "சமகாலஅரசியல் அமைப்பு", சான்லாக்ஸ் பதிப்பகம்.

வதனாபே.J, (2013), அரசியலமைப்புத் திருத்தங்ள் ஜப்பானை சர்வாதிகார ஆட்சிக்கு தயார் செய்கின்றன", www.wsws.org

சரவணன்.P.C, (2017), "அரசியல் அமைப்பு வகைகள்", www.dinamani.com

(N.A), (2020), "ஜப்பான் அரசியலமைப்பில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் பிரதமர் ஷின்ஜோ அபே விருப்பம்", www.maalaimalar.com

(N.A), (2018), "ஜப்பான் பேரரசின் அரசியலமைப்பு" www.ta.swewe.net.com

கணேசலிங்கம்.ரீ.கே, திருக்குமரன்.தி, (2006), "சேதுக்கால் வாய்த்திட்டம் அரசயில் பொருளாதார இராணுவ சூழலியல் நோக்கு", பிரம்மா வெளியீடு.

அன்ரன் யோகநாயகம்.எ, (1978), "தென் இந்தியாவின் வரலாற்றுப் போக்கில் புவியியல் கூறுகளின் செல்வாக்கு" காலசுரபி - இதழ் - 01 வரலாற்றுக் கழகம், யாழப்பாணம் பல்கலைக்கழகம்.

பாலசுந்தரி.தி, (1998), "சிந்துவெ வளி நாகரீக வீழ்ச்சி பற்றிய ஒரு நோக்கு" காலசுரபி - இதழ் - 01 வரலாற்றுக் கழகம், யாழப்பாணம் பல்கலைக்கழகம்.

(N.A), (N.Y), "south asia – world regional geography www.pressbook.pub




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் மக்கள் தீர்ப்பு முறைமையை சுருக்கமாக விபரிக்குக.

ஒவ்வொரு நாட்டிற்கும் அரசியலமைப்பு என்பது முக்கியம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. அந்தவகையில் இலங்கையில் 1978 ஆம் ஆண்டு யாப்பு மிகவும் முக்கியமானதாகவும் தற்போது நடைமுறையிலுள்ள யாப்பாகவும் காணப்படுகின்றது. இவ் யாப்பினை 1978 ஆம் ஆண்டு தூரநோக்கற்ற ஒரு அரசியல் யாப்பாகவும் முழுக்க முழுக்க ஐக்கிய தேசிய கட்சியின் அபிலாஷைகள் மற்றும் J.R ஜெயவர்தனவின் நலன்களுக்காகவும் J.R ஜெயவர்த்தனாவினால் உருவாக்கப்பட்டது. இவ் அரசியலமைப்பின் முக்கியமான ஒரு விடயமாக "மக்கள் தீர்ப்பு" காணப்படுகின்றது.

நேரடி ஜனநாயகத்தின் உத்திகளுள் ஒன்றாக மக்கள் தீர்ப்பினை குறித்துக் கொள்ளலாம் இதனை ஒப்பங்கோடல் எனவும் அழைப்பார்கள். மக்கள் தீர்ப்பானது பொதுத்தேர்தலுக்கு சமனானதாகவே அமையப்பெறும். உலகின் பல்வேறு நாடுகளில் பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சி முறை நிலவும் நாடுகளில் மக்களின் நேரடியான தலையீட்டினை விரிவுபடுத்துவதற்காக மக்கள் தீர்ப்பு பயன்படுத்தப்படுகின்றது. மக்கள் தீர்ப்பு பற்றி பொதுவாகக் குறிப்பிடும் போது ஏதேனும் ஒரு விடயம் சம்பந்தமாக மக்களின் அங்கிகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கான முறை எனவும் கூறலாம். ஒப்பங்கோடலினை யாப்பு சார் ஒப்பங்கோடல், தெரிவின் ஒப்பங்கோடல், மனு ஒப்பங்கோடல் எனவும் வகைப்படுத்தலாம்.

மக்கள் தீர்ப்பு முறைமையானது சுவிஸ்லாந்திலேயே தோற்றம் பெற்றது. மக்கள் தீர்ப்பு சிறப்பாக இடம்பெற்று வருகின்ற நாடும் சுவிஸ்லாந்தே ஆகும். மக்கள் தீர்ப்பு முறைமையானது சுவிஸ்லாந்து, அவுஸ்ரேலியா, பிரான்ஸ், இலங்கை போன்ற நாடுகளில் பின்பற்றப்படுகின்றது. அந்த வகையில் இலங்கையை எடுத்துக் கொண்டால் 1978 இரண்டாவது குடியரசு யாப்பினூடாகவே முதன் முதலில் மக்கள் தீர்ப்பு முறைமை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கைப் பிரஜைகள் அனைவருக்கும் மக்கள் தீர்பினூடாக சட்டவாக்க அதிகாரத்தினை பயன்படுத்த முடியமெனக் கூறப்படுகின்றது. மக்கள் தீர்ப்பின் போது முழு நாட்டையும் ஒரு தேர்தல் மாவட்டமாக கருதி வாக்கெடுப்பு நடாத்தப்படும். மக்கள் தீர்ப்பு சம்பந்தமான விபரமான விடயங்கள் 1978 ஆம் ஆண்டு யாப்பில் அத்தியாயம் xiii உறுப்புரிமை 85,86,87 இல் தெளிவாக கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்புரிமை 85 இல் சட்ட மூலங்களை மக்கள் தீர்ப்புக்கென மக்களுக்கு சமர்பித்தல் தொடர்பாகவும் உறுப்புரிமை 86 தேசியமுக்கியத்துவம் வாய்ந்த கருமங்களை மக்கள் தீர்ப்புக்கென மக்களிடம் சமர்ப்பித்தல் தொடர்பாகவும் உறுப்புரிமை 87 நடவடிக்கை முறை பற்றி பாராளுமன்றம் ஏற்பாடு செய்தல் வேண்டும். அதாவது மக்கள் தீர்ப்பு ஒவ்வொன்றும் தேர்தல் ஆணையாளரினால் நடத்தப்படல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாப்பு ஏற்பாடுகளின்படி ஜனாதிபதி தேர்தல் ஆணையாளருக்கு பிறப்பிக்கும் ஒரு கட்டளையின் மூலம் மக்கள் தீர்ப்பு நடத்தப்படும். அதற்கான கட்டளையினை ஜனாதிபதி அரசியல் யாப்பின் சில பகுதிகளினைத் திருத்துவதற்கு, அமைச்சரவை மக்கள் தீர்ப்பிற்கு விடப்படல் வேண்டும் என சிபாரிசு செய்த விடயங்கள், உயர் நீதிமன்றம் மக்கள் தீர்ப்பிற்கு விடப்பட வேண்டும் என சிபாரிசு செய்யப்பட்ட விடயங்கள், பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட ஏதேனும் சட்ட மூலம் நாட்டு நலனுக்கு அவசியமானது என ஜனாதிபதி கருதும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என ஜனாதிபதி கருதும் விடயங்கள், ஜனாதிபதியின் பதவிக் காலத்தினை பாராளுமன்றத்தின் கால எல்லையினை மற்றொரு தவணைக்கு நீடிப்பதற்கு ஜனாதிபதி விரும்புகின்ற சந்தர்ப்பத்தில் மக்கள் தீர்ப்பினை நடாத்துதல் போன்ற சந்தரப்பங்களில் விடுவிக்கலாம்.

மேலும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பின் 4 ஆம் உறுப்புரிமை (அ) பந்தி மக்களின் சட்டவாக்க அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தினாலும் மக்கள் தீர்ப்பொன்றின் போது மக்களாலும் பிரயோகிக்கப்படுதல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து சட்டவாக்க அதிகாரத்தை செயற்படுத்தும் ஒரு வழி முறை மக்கள் தீர்ப்பு என்பது புலனாகின்றது.

யாப்பின் 83 ஆம் உறுப்புரை (அ)(ஆ) பந்திகளின் கீழ் குறிப்பிட்டுள்ள உறுப்புரைகளை மாற்றியமைப்பதாயின் பாராளுமன்றத்தில் முழு அங்கத்தினரதும் (சமூகமளிக்காத அங்கத்தவர் உட்பட) 2/3 பெரும்பான்மை பெற்று அதை மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் மக்களும் அனுமதிக்க வேண்டும் எனப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்திற்கமைய 85(2) உறுப்புரையை நீக்கியிருப்பதனூடாக பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்ட ஏதேனுமொரு விடயத்தை மக்கள் தீர்ப்பினூடாக சட்டமாக்கிக் கொள்ளுதல் தடுக்கப்பட்டுள்ளது என்பதனை கூறிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தீர்ப்பில் குறித்த விடயம் பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் அவை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். ஆனால் வாக்காளர்களின் பங்கேற்பு 2/3 இற்குக் குறைவாக இருக்கும் போது 1/3 பகுதி வெற்றிக்கு போதுமானதாகும் என யாப்பு குறிப்பிடுகின்றது. மக்கள் தீர்ப்பில் ஆம் அல்லது இல்லை என்று தீர்மான முடிவை மாத்திரமே கொடுக்க முடியும்.

இலங்கையில் முதன்முதலாக 1982 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்களால் பாராளுமன்றத்தின் காலத்தை ஆறு வருடங்களினால் நீடித்துக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட மக்கள் தீர்ப்பு ஊடாக இலங்கையர்களுக்கு மக்கள் தீர்ப்பு சம்பந்தமான அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

J.R ஜெயவர்த்தனா முன் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் 52.91% வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்டார். ஆனால் சுந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் பெருகிவரும் ஆதரவானது ஐக்கிய தேசியக் கட்சியினால் பொதுத்தேர்தல் ஒன்றில் ஆட்சியமைக்க முடியாமல் போகலாம் அல்லது 2/3 பெரும்பான்மை பலத்தினை பெற முடியாமல் போனால் தம்மிஷ்டத்துக்கு அரசியலமைப்பு மாற்றங்களினை செய்ய முடியாமல் போகலாம். இதனால் கைவசம் இருக்கும் 5/6 பெரும்பான்மையை அப்படியே தக்கவைத்துக் கொண்டால் அதிகாரத்தினை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்ளலாம் என நினைத்தார். அதற்கமைவாக 04.08.1989 வரை பாராளுமன்றத்தின் ஆயுட் காலத்தினை நீடிப்பதற்காக திருத்தம் செய்யப்பட்டது. அதனை மக்கள் தீர்ப்புக்கு (ஒப்பங்கோடல் - referendum) அனுமதிக்க வேண்டும் என கூறப்பட்டது. இதற்கமைய 1982.11.18 ஆம் திகதியின் 218/23 இலக்க வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் விடுக்கப்பட்ட அந்த திருத்தத்தினை ஏற்றுக் கொள்கிறீர்களா என்பதற்கான அபிப்பிராய வாக்கெடுப்பே “1982 சர்வசன வாக்கெடுப்பு.” சர்வசன வாக்கெடுப்பில் 50% மேல் அங்கிகாரத்தை பெற்றாலே போதும் என்பதே ஏற்பாடு.

J.R ஜெயவர்த்தனா “மக்கள் தீர்ப்பு” கோரப்பட்டதனடிப்படையில் பொதுத்தேர்தல் இன்றியே பாராளுமன்ற ஆயுட்காலத்தினை 6 ஆண்டுகள் நீடித்தார். இந்தத் தேர்தலின் மூலம் ஆட்சி செய்யப்பட்ட மொத்த 17 ஆண்டுகளில் 17 அரசியலமைப்பு திருத்தங்களை தமக்கு தேவையான படி செய்து கொண்டது ஐக்கிய தேசியக் கட்சி 5/6 பெரும்பான்யை நீடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட இந்த **"மக்கள் தீர்ப்பு"** முறையில் தான் நிகழ்ந்தது என்பது வருத்தத்திற்குரியதாகும்.

மக்கள் அரசியலில் நேரடியாகப் பங்கு கொள்வதற்கு இம்முறை வாய்ப்பாக உள்ள போதிலும் அரச அதிகாரம் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவதற்கு இம்முறை வழிவிடக்கூடியது என்பதற்கு 1982 ஆம் ஆண்டு தேர்தல் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இலங்கையில் "மக்கள் தீர்ப்பு" (Referendum) இலங்கை வரலாற்றில் ஒரே ஒரு முறைதான் இடம்பெற்றது. அரசியலமைப்பில் **"மக்கள் தீர்ப்பு"** என்னும் அத்தியாயம் சிறுபான்மையினரைக் கவருவதற்காக ஒரு கண்துடைப்பு ஏற்பாடாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றே கூறிக் கொள்ள வேண்டும். இலங்கையில் ஜனாதிபதியாக மைத்திரி பால சிறிசேன காலத்தில் கூட அரசியலமைப்பினை மாற்றுவதற்கு மக்கள் தீர்ப்பினை கோருவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்றன. ஆனால் மக்கள் தீர்ப்பினை ஏற்படுத்த முடியவில்லை.

மேலும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் விகிதாசாரத் தேர்தல் முறை இலங்கையில் உருவாக்கப்பட்டது. இது பல்வேறு குறைபாடுகளைக் கொண்டு காணப்படுகின்றது. அதாவது தேர்தல் மற்றும் வாக்களிப்பு என்பது மக்கள் இறைமையை பிரதிபலிக்கும் ஒன்றாகும். "இலங்கையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் முறைமையே" காணப்பட்ட போதிலும் இவ் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் வாக்களிப்பு தொடர்பாக மக்களுக்கு விளங்கிக் கொள்ள முடியாது உள்ளது. மேலும் தனியான கட்சிகள் பெரும்பான்மையினை பெறமுடியாமை, இடைத்தேர்தல்கள் நடாத்துவதற்கான வாய்ப்பின்மை, மக்களுக்கும் வேட்பாளர்களுக்கும் உள்ள தொடர்பினை குறைக்கின்றது. "மக்கள் தீர்ப்பு" இடம் பெற முடியாமைக்கு இவ் தேர்தல் முறைமையும் காரணமாக அமையலாம் என்றே கூற வேண்டும். இலங்கை அரசியலமைப்பில் நேரடி ஜனநாயக உத்தியான "மக்கள் தீர்ப்பு" உள்ளடக்கப்பட்டு இலங்கை "மக்கள் தீர்ப்பு" முறையினை பின்பற்றுகின்ற ஒரு நாடு என குறிப்பிட்டாலும் நடைமுறையில் நோக்கும் போது அதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகவே காணப்படுகின்றது. ஆனால் சுவிஸ்லாந்து நேரடி ஜனநாயக முறையான "மக்கள் தீர்ப்பினை" மிகவும்நேர்த்தியாக பின்பற்றி வருகின்றது என பெருமையுடன் கூறிக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தீர்ப்பில் நன்மைகளைப் போன்றே தீமைகளும் காணப்படுகின்றது. நன்மைகளாக மக்களுக்கு தமது விருப்பத்தை பிரதிநிதிகள் மூலமாக அன்றி நேரடியாக தெரிவிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. சில சந்தரப்பங்களில் சட்டவாக்கமன்றம் ஒரு குழுவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் போது அந்தக் குழுவின் நன்மைக்காக சட்ட வாக்க மன்றம் செயற்படுவதனை தடுக்கப்படும். இதன் குறைபாடாக பிரதிநிதித்துவ ஜனநாயக முறையை பலவீனப்படுத்துவதாகவும் காணப்படுகின்றது. சட்டவாக்க அலுவல்கள் மிகவும் சிக்கலான மற்றும் பொதுமக்களின் அறிவுக்கு எட்டாத விடயமாக இருப்பதினால் சட்டவாக்க நடவடிக்கைகளின் போது மக்கள் தீர்ப்புக்கு விடல் ஆபத்துமிக்கதாகும். சட்டவாக்க மன்றத்திற்கு கொண்டு வரப்படும் சட்ட மூலங்கள் விவாதத்தின் பின்னர் திருத்தங்களுடன் அங்கிகரித்துக் கொள்ளப்படும். ஆயினும் மக்கள் தீர்ப்பின் போது அதற்கான வாய்ப்புக் கிடைப்பதில்லை. பல்லின மக்கள் வாழுகின்றதொரு நாட்டில் மக்கள் தீர்ப்பு சிறுபான்மையினரது உரிமைகள் மீது தாக்கம் செலுத்த முடியும்.

"மக்கள் தீர்ப்பு" முறை பற்றிய சிந்தனையை முதன் முதலில் 1762 இல் கொண்டு வந்தவர் பிரெஞ்சு சிந்தனையாளரான ரூசோ. அது பிரான்சின் அரசியலமைப்பில் 1763 இல் சேர்க்கப்பட்டது. 1776 அமெரிக்க சுதந்திர சாசனத்திலும் இந்த முறைமை சேர்க்கப்பட்டது. மேலோட்டமாக இது ஜனநாயகத்தின் நல்ல அம்சமாகத் தோன்றினாலும் கூட மறுபுறம் உலகில் பல தலைவர்கள் தமது குறுக்குவழிக்குப் பயன்படுத்தவே செய்திருக்கிறார்கள். 1802 இல் நெப்போலியன் பொனபெர்ட் ஆயுள் முழுவதும் தனது ஆட்சியினை தக்கவைத்தது கூட இந்த மக்கள் தீர்ப்பாலேயாகும். 1991 இல் பங்களாதேஷ் ஜனாதிபதி முறையை நீக்கி பாராளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்கும் முறையை கொண்டு வந்தது, 1991 இல் வட அயர்லாந்து சமாதான ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வது, ஈராக்கிலிருந்து குர்கிஸ்தான் பிரிவதற்கான தீர்ப்பினையும் மக்கள் வாக்கெடுப்பின் மூலம் தான் எடுத்தார்கள். நீண்ட கால குர்கிஸ்தான் மக்களின் சுதந்திரப் போராட்டம் ஜனநாயக வழியில் இம்முறையிலேயே. ஆனால் இலங்கையின் வரலாற்றில் ஒரேயொரு முறை மட்டுமே நிகழ்ந்த இந்த தீர்ப்பு J.R இன் குறுக்கு வழி ஆட்சிக்கே வித்திட்டது.

மக்கள் தீர்ப்பில் நன்மை தீமை இருந்த போதிலும் பிரதிநித்துவ முறையின் ஊடாக மக்கள் அரசியலில் பங்குதாரர்களாவதற்கான நவீன உலகில் மக்கள் நேரடியாக சட்டவாக்க செயற்பாட்டில் பங்குபெற்ற முடியுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பொறிமுறையாக "மக்கள் தீர்ப்பு" முறையை அறிமுகம் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையில் பெண்களின் அரசியல் பங்குபற்றலை பாதிக்கும் காரணிகளை ஆராய்க?**

பெண்ணியம் என்பது பெண்களுக்கு மட்டும் சமத்துவம் வேண்டும் என்பதல்ல. ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான நேர்மையான சமத்துவம் உள்ள சமுதாயம் உருவாக வேண்டும் என்பதே பெண்ணியத்தின் அணுகுமுறையாகும். எல்லா இடங்களிலும் எல்லாத் துறைகளிலும் பெண் இருக்கிறாள் பெண்ணால் எல்லா இடங்களிலும் இருக்க முடியும் ஆனால் பெண் அதிகாரத்தை அல்லது பெண்களல் நிர்வகிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளாத ஓர் ஆணாதிக்க சமூகத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

பால்நிலையும் அரசியலும் (Gender and political) தொடர்பான அக்கறையும், பகுப்பாய்வும், ஆராய்ச்சியும் இன்று வளர்ந்து வருகின்றது. பெண்கள் சார் பிரச்சினைகள் அதிகமாக இருப்பதனால் அவர்களை வலுப்படுத்துவதன் மூலமாகவே அவர்கள் சார் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இதனால் பெண்களை வலுப்படுத்த சமூக செயற்பாட்டாளர்களை அடையாளம் காண வேண்டும். அப்பொழுது தான் பெண்கள் சார் பிரச்சினையை தீர்க்க முடியும் பெண்களை வலுப்படுத்தலில் மிக முக்கியம் பெறுவது அரசியல் ரீதியான வலுப்படுத்தல் ஆகும். இந்த அரசியல் ரீதியான வலுதப்படுத்தலில் பெண்களை ஊக்குவிக்கும் போதே அவர்களுக்கு உரிய பிரச்சினைகள் பற்றி பேசப்படும் நிலை உருவாகும். அவர்கள் சார் பிரச்சினைகளும் தீர்க்கப்படும். ஆகவே பெண்களின் அரசியற் பங்குபற்றலை அதிகரிப்பதாற்கான அவசியப்பாட்டினையும் அதற்கான பொறிமுறைகளும் சமூக அரசியல் விஞ்ஞான நோக்கில் நின்று ஆராய முற்பட்டும் வருகின்றனர். அவ்வாறு பகுப்பாய்வை மேற்கொண்ட பலரும் அரசியற் தளமானது மிக நீண்ட காலமாகவே ஆண்களுக்குரியதாகவும், தந்தை ஆதிக்க மரபுகளால் ஆட்சிப்படுத்தப்படும் ஒரு துறையாகவும் காணப்படுவதையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

“அரசியற் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட ஏனைய அனைத்து அரசியல் செயற்பாடுகளிலும் பங்குபற்றும் உரிமையானது சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் மற்றும் கொள்கைகள் ஊடாக ஆண், பெண் இருபாலருக்கும் சமமாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நடைமுறையில் பெண்கள் அரசியல் பங்குபற்றிலில் சமத்துவம் கிடைக்கின்றதா? என்று வினா எழுப்பினால் நிச்சயமாக இல்லை என்றே கூறிக் கொள்ள வேண்டும். **“தேர்தலில் போட்டியிடுதல், வாக்களித்தல், பாராளுமன்றத்தில் செல்வாக்குச் செலுத்துதல்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீர்மானம் நிறைவேற்றல், சட்டங்களை நிறைவேற்றுதல் முதலான விடயங்களில் இன்று வரையிலும் பெண்களுக்குரிய ஸ்தானம் பூரணமாக வழங்கப்படவில்லை."** பெண்களின் பௌதீக உடற்கூறு மற்றும் வேறு காரணங்களைச் சுட்டிக்காட்டி அவர்களின் அரசியற் பங்கேற்பினை கதவடைப்பதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு இந்த 21ஆம் நூற்றாண்டிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

எனவே எமது நாடான இலங்கையில் பெண்களின் அரசியல் பங்குபற்றலை பாதிக்கும் காரணிகள் பற்றி இக் கட்டுரையில் நோக்குவது பொருத்தமுடையதாக இருக்கும். இலங்கை ஒரு ஜனநாயக நாடு ஆகும். இங்கு 52% பெண்களே உள்ளனர். ஆனால் உள்ளூராட்சி மன்றங்கள் முதல் பாராளுமன்றம் வரை பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் சொற்ப அளவிலேயே காணப்படுகின்றது. இந்த நிலைக்கு காரணம் என்ன? பெண்கள் அரசியலிற்கு அருகதையற்றவர்கள் என்னும் போலி விம்பத்தை இந்த சமுதாயம் உருவாக்கி வைத்துள்ளது என்றே கூற வேண்டும். காலம் காலமாக அடுப்படியே பெண்களுக்கு பொருத்தமான இடம் என்கின்ற போர்வையை சமூகம் உருவாக்கி அதை பெண்களுக்கு பழக்கப்படுத்திவிட்டது என்று கூறுவது தான் மிகவும் பொருத்தப்பாடாக இருக்கும்.

உலகின் முதல் பெண் பிரதமரை உலகிற்கு வழங்கிய நாடு எனும் பெருமையை பலரும் மார்தட்டிக் கொண்டாலும் இன்றும் பெண்கள் அரசியல் எனும் அகன்ற பரப்பின் வாசலில் நுழைவதற்குள் ஆயிரம் சவால்களை எதிர்நோக்குகின்றார்கள் என்பது நமது நாட்டின் சாபமாகவே கருதப்பட வேண்டியுள்ளது. இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கூட அதிகமான பெண்களை அனுப்ப முடியாமல் இருப்பது உலகின் முதல் பெண் பிரதமரை (ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா) தந்த நாட்டிற்கு இழுக்கான விடயம் ஆகும். தெற்காசியா நாடுகளில் ஒன்றான நேபாளத்தில் கூட 25% அதிகமான பெண்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளார்கள். ஏனைய தெற்காசிய நாடுகளை விட ஓரளவிற்கு பெண்களுக்கான ஏனைய உரிமைகளினையும் சமத்துவத்தினையும் அதிகமாக கொண்ட நாட்டில் 25 சதவீத கோட்டா முறை கூட உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பயனளிக்கவில்லை என்று தான் கூற வேண்டும்.

அரசியல் பங்கு பற்றல் என்பது தேர்தலில் வாக்களித்தல், தேர்தலில் போட்டியிடுதல், பாராளுமன்றத்தில் செல்வாக்கு செலுத்தல், தீர்மானம் நிறைவேற்றல், சட்டம் இயற்றுதல், போன்ற விடயப் பரப்புக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கியதாகும். அந்த வகையில் தேர்தலில் வாக்களிப்பது தொடங்கி வேட்பாளராக இருப்பது வரை பெண்கள் பல சவால்களை சந்திக்கின்றார்கள். அந்த வகையில் பெரும்பாலான பெண்களுக்கு சுயமான விருப்பில் வாக்களிப்பதற்கான வாய்ப்பு இலங்கையில் கிடைப்பதில்லை. காரணம் பெண்களுக்கு அரசியல் நடைமுறை, அரசியல் போக்கு பற்றிய கலந்துரையாடல்கள் அல்லது விளக்கங்கள் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதில்லை. அதையும் தாண்டி குடும்ப அங்கத்தவர்களின் விருப்பத்திற்கு வாக்களிக்க வேண்டிய நிலையே காணப்படுகின்றது. கணவன், தந்தை சகோதரன் அல்லது மகன் என்ற ஆணின் தேர்வே அந்த குடும்பப் பெண்களின் வாக்களிக்கும் தேர்வாக காணப்படுகின்றது.

எல்லாத் துறைகளிலும் ஜொலிக்கும் பெண்கள் அரசியல் என்றதும் பின்வாங்குவதற்கு பல காரணங்கள் உண்டு. இதில் முக்கியமானது அவளில் சுமத்தப்பட்டிருக்கும் குடும்ப பொறுப்பு, குடும்பத்திலிருந்து வருகின்ற அழுத்தங்கள், தடைகள் என்பதாகும். இதை எல்லாம் பெண்கள் கடந்து வந்தாலும் பெண்களை அரசியலில் ஈடுபடாமல் தடுக்கும் முக்கிய காரணி பெண்களின் நடத்தையை விமர்சிப்பதும் குறை சொல்வதுமே ஆகும். மேலும் பாலியல் கருத்துக்களை பரப்புதல், துன்புறுத்தல், மிரட்டுதல் போன்ற செயற்பாடுகளையும் இச் சமூகம் செய்து வருகின்றது. ஊடகத்துறையும் தனது பங்கிற்கு பெண் வேட்பாளர்களுக்குப் பல உளவியல், சமூக அழுத்தங்களை கட்டவிழ்த்து விட தவறுவதில்லை. அண்மையில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட பெண் வேட்பாளர்களைப் பற்றி நகைச்சுவை பொழுது போக்கு நிகழ்ச்சிகள் என்ற பெயரில் அவர்களை இழிவு படுத்திய ஊடகங்களும் இலங்கைப் பெண்கள் அரசியலில் வரக்கூடாது என்று எண்ண வைக்கும் நிலையை இன்னும் அதிகப்படுத்தி வருகின்றது. இதனால் இலங்கைப் பெண்கள் தாமும் அரசியலில் நுழைந்தால் எம்மைப் பற்றி தேவையற்ற வதந்திகளும் இழிவான பெயரும் வந்து விடும் என்கின்ற பயத்தினால் அரசியலில் பங்கெடுக்க விருப்பமில்லாத போக்கு காணப்படுகின்றது.

இலங்கையின் அனைத்து கட்சிகளிலும் பால் நிலையின் காரணமாக பெண்கள் இன்னும் பாராபட்சங்களுக்கு உட்படுகின்றார்கள். இவர்களுக்கு குறைந்தபட்சம் வேட்புமனுக்களையேனும் பெற்றுக் கொடுக்காமை பாரிய அசாதாரணம் மற்றும் பிரச்சினையாக காணப்பட்டு வருகின்றது. இதற்கு உதாரணமாக குறிப்பிட்டு கூற வேண்டுமானால் இலங்கை சுதந்திரக் கட்சியின் (இ.சு.க) செயற்பாட்டு உறுப்பினராக (ஹட்டன்- மஸ்கெலியா) 3 தசாப்தங்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டு வந்த பெண் கூறுகையில் "நானும், எனது குடும்பத்தினரும் சிறிமாவோ பண்டார நாயக்கவுக்கும் அனுர பண்டார நாயக்க அவர்களுக்கும் பல்வேறு வகையில் உதவி செய்தோம். 1978 எனது கட்சி செயற்பாடுகளினால் என்னை சிறையில் அடைத்தார்கள். எனினும் நான் கட்சியினை கைவிடவில்லை. நான் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை தேர்தல்களில் 6 முறை வேட்பு மனுவுக்காக விண்ணப்பித்திருந்தேன். இந்த முறை (2011) எனது பெயர் வேட்புமனுவில் இருந்தது. நான் இதனை கைச்சாத்திட ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றேன். எனினும் இறுதி தருணத்தில் தொகுதி அமைப்பாளர் எனது பெயரை வெட்டிவிட்டது" என்று கூறினார். இவ்வாறாகவே இலங்கையில் பெண்களின் நிலை காணப்படுகின்றது.

ஆண்களோடு ஒப்பிடும் போது பெண்களுக்கு அரசியல் அனுபவம், ஏற்புடைமை, தலைமைத்துவம் மற்றும் பிரசித்தி குறைவாக உள்ளமை பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான தடைகளில் ஒன்றாகும். குறிப்பாக பெண்களுக்கு அரசியல் வாதிகளுடன் தொடர்புகள் கட்டியெழுப்ப உள்ள வாய்ப்புக்கள் ஆண்களுடன் ஒப்பிடும்போது குறைவாக காணப்படுகின்றது. விழாக்கள் மற்றும் விசேட நிகழ்வுகளில் பொதுவில் பெரும்பாலான ஆண்கள் முன்வரிசை ஆசனங்களில் அமர்தல், அழைப்பிதல் கிடைக்காமல் கூட விளக்கேற்றலில் பங்குபற்றல் மற்றும் அரசியல் வாதிகளுடன் தேநீர் அருந்துதல் என்பவற்றில் ஈடுபடுவர். ஆனால் பெண்கள் இலங்கை கலாசாரத்தினுள் இவ்வாறான விடயங்களைச் செய்வதற்கு தூண்டப்படுதல் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

பெண்கள் அரசியலில் நுழைய முடியாமைக்கான தடைகளில் ஒன்றாக பெண்களுக்குரிய தேர்தலுக்கான வளங்களின் தட்டுப்பாட்டினையும் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும். இலங்கையில் சம்பிரதாயமாக பெண்கள் சிறந்த வருமானத்தை ஈட்டுபவர்களாகக் கருதப்படுவதில்லை. இதனால் பெண்கள் நிதியினை திரட்டுவதென்பது மிகவும் அரிதாக காணப்படுகின்றது. இதனால் தேர்தல் போட்டிக்காக அதிகமாக வளங்கள் செலவிடப்படுவது ஆண்களுக்கிடையே என்பதால் வளங்கள் குறைந்த பெண்கள் பின்தள்ளப்படுதல் தொடர்ந்து நடைபெறுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக பெண் வேட்பாளர் (உடபலாத்த) குறிப்பிடுகையில் "நான் தங்க ஆபரணங்களை வங்கியில் அடகுவைத்து ரூபா 60000.00 பெற்றேன் எனினும் இப்பிரதேசத்தின் மிகவும் பலம்வாய்ந்த அமைச்சரின் கையாட்கள் வேட்பாளர்கள் ரூபா 25 – 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சத்தை தேர்தலுக்காக செலவு செய்தார்கள். அப்படியானால் எங்களுக்கு அவர்களுடன் போட்டியிட முடியுமா?" என்றார்.

இலங்கையில் "வாக்காளர்களுக்கிடையில் பல்வேறு வளங்களை பகிர்ந்தளித்தல் இலங்கையின் அரசியல் முறையினுள் தேர்தல்களை வெற்றி கொள்ள பயன்படுத்துகின்ற கவர்ச்சியான உபாய முறையாக மாறியுள்ளது." விசேடமாக உணவு வழங்கல், விழாக்களை அல்லது களிப்பு நிகழ்வுகளை நடாத்தல், வீட்டுப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், மூக்குக் கண்ணாடி, உடைகளை மற்றும் பணம் போன்றவற்றினை பகிர்ந்தளித்தல் போன்றன தேர்தல் சட்டத்திற்கு ஒவ்வாததாயினும், இது பிரசித்தி பெற்ற உபாய முறையாக மாறியுள்ளது. எனினும் தேர்தலில் பெண் வேட்பாளர்கள் இவ்வாறான உபாய முறைகளை அவர்களின் சூழ்நிலைகளின் காரணங்களாக குறைவாகவே பின்பற்றுகிறார்கள். இதனால் இன்று இலங்கையிலுள்ள அரசியல் கலாசாரத்தினுள் பெண்கள் வாக்களார்களிடையில் பிரசித்தி அடைவதில்லை. இதனால் பெண்கள் அரசியலில் நுழைவதற்கான வாய்ப்பு குறைவாக காணப்படுகின்றது. பெண்களை விட ஆண்கள் உடலியல் சமூக மற்றும் பொருளாதார ரீதியாகவும் பலமானவர்கள் என்ற சம்பிரதாய சிந்தனை இன்னமும் இலங்கையில் வேரூன்றியுள்ளது. இதுவும் பெண்கள் அரசியலில் பங்கேற்பதற்கு மிகவும் தடையாகவுள்ளது.

"இலங்கையில் வன்முறைசார் அரசியல் கலாசாரம் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் பாரிய தடையாகும்." ஆய்வின் படி இலங்கையில் 76 சதவீதமானோர் வன்முறை, அச்சுறுத்தல், மற்றும் நடத்தைவாத தாக்குதல் என்பவற்றிற்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். ஆய்வுக்குட்பட்ட பெரும்பாலான பெண் வேட்பாளர்கள் இது தொடர்பாக கருத்து வெளியிட்டதோடு ஒரு பெண் வேட்பாளர் குறிப்பிடுகையில் "எங்கள் பிரதேசத்தின் பலமான அமைச்சர் என்மீதும் எமது சுயாதீன குழுவில் வாக்கு கேட்ட பெண்ணொருவருக்கும், வேட்பாளரிலிருந்து விலகி கொள்ள வேண்டும் என தகவல் சொன்னார். நாங்கள் அவ்வாறு செய்யவில்லை எனினும் எங்கள் பதாதைகள் எல்லாவற்றையும் கிழித்து ஏரித்தார்கள். நான் தயாரித்துக் கொண்ட கட்டவுட்டை கிராமத்திற்கு திரும்பவும் வழியில் இரவு 2 மணிக்கு அடித்தார்கள். அதிகாலை 4 மணியாகும் போது அதற்கு தீ வைத்தார்கள். அத்தோடு நாங்கள் வீட்டுக்கு வெளியே செல்லும் போது மோட்டார் சைக்கிள்களில் ஆண் இளைஞர்கள் பின்புறம் தொடர்ந்து வருவார்கள். எங்கே செல்கின்றோம், என்ன செய்கின்றோம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைப் பார்ப்பதற்கு இதனால் தேர்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் நாம் வாழவும் அந்நாட்களில் எமக்கு சுதந்திரம் இருக்கவில்லை" என்று குறிப்பிட்டார். இன்னொரு பெண்வேட்பாளர் குறிப்பிடுகையில் எனது கட்சியில் எனக்கு பதிலாக ஆண் வேட்பாளரை தெரிவு செய்தனர். பின்னர் அவ் ஆண் வேட்பாளரால் எனக்கு பல சிக்கல்கள் ஏற்பட்டன. அத்தோடு எனது மகனை கஞ்சா கடத்தலில் பொய் குற்றச்சாட்டினை ஏற்படுத்தி சிறையில் அடைத்தார்கள். பின்னர் நான் பல துன்பப்பட்டு எனது மகனை வெளியில் எடுத்தேன் என அவர் குறிப்பிட்டார். இவ்வாறாகவே இலங்கையில் உள்ள பெண்கள் அரசியல் பங்கேற்றல் வன்முறையை அனுபவிக்கின்றார்கள். இதனால் பெண்கள் அரசியலில் நுழைவதற்கு முடியாமல் தவிக்கின்றார்கள் என்றே கூறவேண்டும்.

இலங்கையின் கலாசாரத்தினுள் பெண்கள் சமூகமயப்படுத்தல் விதத்திற்கு ஏற்ப ஆண் - பெண் இருசாராரிலும் பெரும்பாலானவர்கள் பெண்களைப் பார்த்து மென்மையான பொது செயற்பாடுகளில் தலைமைத்துவம் ஏற்க விருப்பமற்ற, இதற்கான காலம் மற்றும் பலம் இல்லாத பாரிய தீர்மானங்களுக்கு வருவதற்கு முடியாதவர்களே ஆகும். என்கின்ற வழக்கத்தினடிப்படை பெண்களை அரசியலில் பங்குபற்றுதலுக்கான பாரிய தடையாக காணப்படுகின்றது.

இலங்கையில் பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதனை தடுக்கும் அல்லது சவால் விடும் காரணிகளில் ஒன்றாக அரசியல் கட்சிகளின் வகிபாகமும் காணப்பட்டு வருகின்றது. இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளானாலும் சரி வட கிழக்கில் போட்டியிடும் தமிழ் மற்றும் முஸ்லீம் கட்சிகளானாலும் சரி மலையகக் கட்சிகளானாலும் சரி மிகக் குறைந்த அளவே பெண் வேட்பாளர்களை போட்டியிட வாய்ப்பளிக்கின்றனர். இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் சட்ட திருத்தத்தில் 25% இட ஒதுக்கீடு பெண்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. என்றாலும் அதில் உள்ள சில திருத்தமின்மை காரணமாக பெண்களினை ஆசனங்கள் கொடுக்காமல் ஏமாற்றி வருகின்ற போக்கினையே காணக்கூடியதாகவுள்ளது. அதாவது 25% பெண்களை தமது வேட்பாளர் பட்டியலில் உள்வாங்கி விட்டு அவர்களை போனஸ் ஆசன தேர்வில் சேர்த்துள்ளனர்.

இலங்கையை பொறுத்தவரை பாராளுமன்றத்திலும் சரி மாகாண சபையிலும் சரி உள்ளூராட்சி சபைகளிலும் சரி ஆண்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையினராக உள்ளனர். இதனால் பெண்களினால் கொண்டுவரப்படுகின்ற திட்டங்களோ அரசியல் நகல் திட்டங்களோ பாராளுமன்றத்தில் கூடிய கவனத்தில் எடுக்கப்படாமையினால் பெண்கள் இயல்பாகவே தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளிலிருந்து புறக்கணிக்கப்படுகின்றார்கள். அத்தோடு ஒரு தீர்மானத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வரவேண்டுமேயானால் வெறுமனே ஆறு (225 இல் 13 பேர்) வீதமான பெண்களை வைத்துக் கொண்டு ஏனைய அனைவரும் ஆண்களாக இருப்பதனால் சிக்கல் நிலை தோன்றுகின்றது. எனவே இலங்கை அரசியலில் பெண்கள் வாக்களிப்பதில் இருந்து அரசியல் தீர்மானம் எடுப்பது வரைக்கும் பாரிய சவால்களினை எதிர்நோக்கி வருகின்றனர். இதுவரை காலமும் இலங்கை அரசியலில் நுழைந்த பெண்கள் தமது குடும்ப செல்வாக்கின் காரணமாக நுழைந்தவர்களே அதிகமாக காணப்பட்டுள்ளனர். உதாரணமாக ஸ்ரீமாவோ, விஜகலா மகேஸ்வரன் போன்றவற்றினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். குடும்ப செல்வாக்கு எந்தவித பின்னணியும் இல்லாத பெண்கள் நுழைவது என்பது மிக மிக சொற்ப அளவிலே காணப்படுகின்றது என்பதை குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒரு விடயமாகும்.

சமூகத்தில் ஏற்படுகின்ற பெண்களுக்கெதிரான வன்முறைகள், சமத்துவமின்மை போன்ற பிரச்சினைகளை சந்தித்து வருகின்றார்கள். இதனால் பெண்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பெண்கள் அரசியலில் பங்கேற்பார்களாயின் பெண்களுக்கான உரிமைகள், சமத்துவம் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படும். எனவே பெண்கள் இலங்கை அரசியலில் உள்வரவேண்டும் என்பதற்கு அத்திவாரமாக பெண்கள் சுயமாக வாக்களிக்கும் நிலை, பெண்கள் அரசியல் கலந்துரையாடல்களில் ஈடுபடுதல் போன்ற அடிப்படை செயற்பாடுகள் இடம்பெற வழிவகைகள் செய்யப்பட வேண்டும். தொடர்ச்சியான வழிகாட்டல்களும், அரசியலில் பெண்களின் தேவைப்பாடுகள் குறித்த விழிப்புணர்வும் சமூக மட்டத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

மேலும் படித்த முன்மாதிரிகையான பெண்கள் அரசியலை சாக்கடையாக பார்ப்பதையோ அல்லது தமக்கு அவசியமற்றது என்கின்ற எண்ணத்தையோ கைவிட்டு விட்டு அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது ஏனைய பெண்களையும் அரசியலில் ஈடுபட வழிவகுக்கும் என நான் கருதுகின்றேன். இதனைவிட ஒவ்வொரு ஆண்மகனும் பெண்களின் அரசியல் பங்கேற்ப்பு அதிகரிக்க மனதார உதவ வேண்டும் அல்லது பங்களிப்பினை வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அராசனது வெறுமனே தேர்தல் வேட்பாளர்களில் மட்டும் கோட்டா முறையினை அமுல்படுத்தாமல் அரசு மன்றங்கள் சபைகளின் அங்கத்துவ நிலையில் கோட்டா முறையை அமுல்படுத்தல் செய்ய வேண்டும். இவ்வாறாக பெண்களினை அரசியலில் பங்கேற்பதற்கான வாய்ப்பினை அதிகரித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு அதிகரிப்பதனூடாக பெண்களின் வாழ்வியல் பிரச்சினைகள், பெண்களின் வன்முறைக்கான முற்றுப்புள்ளி, பெண்களுக்கெதிரான சமத்துவமின்மை போன்ற பிரச்சினைகள் இன்றியும் அன்பும் கருணையும் நிறைந்த சமூகத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியும். இவ்வாறான நாடானது அரசியலில் பெண்களுக்கும் சமத்துவம் அளிக்கும் நாடாக புதிய சாதனையை படைக்கும். எனவே இலங்கையில் பெண்களுக்கு அரசியலில் பங்கேற்பதற்கான வாய்ப்பினை அதிகரிக்க செய்து நாட்டினை முன்னேற்றகரமான பாதையில் இட்டுச் செல்வதற்கு அனைவரும் பாடுபடுவோமாக........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைப்படி இலங்கையின் பாராளுமன்ற பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறையினை பகுப்பாய்வு செய்க.**

சமகாலத்தில் பிரதிநிதித்துவத்தின் இன்றியமையானது வெகுவாக உணரப்பட்டுவிட்டது. இதனாலேயே நவீன ஜனநாயகமானது பிரதிநிதித்துவ ஜனநாயகம் எனப்படுகின்றது. ஆகவே பிரதிநிதித்துவத்திற்கு செயலுரு கொடுக்கும் கருவியாகவே தேர்தல் விளங்கிவருகின்றன. இதனால் "நவீன அரசியல் உலகில் ஆட்சியை நடாத்துவதற்காக மக்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறைகளிள் பல்வேறுமுறைகள் பின்பற்றப்படுகின்றன. தேர்தல் முறைமை என்பது ஒரு தேர்தலை நடாத்துவதற்கான சில ஒழுங்கு முறைகளைக் கொண்டதாகும். தேர்தல் முறையினை பலதரப்பட்ட கோணங்களில் வகைப்படுத்தப்படுகின்றது. இருந்தபோதிலும் பன்மை பெரும்பான்மை முறை, இடை நிலை விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை என்கின்ற மூன்று வகைப்பாட்டிற்குள் வரையறுக்கப்படலாம். அந்தவகையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைப்படி இலங்கையின் பாராளுமன்ற பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறையினை பகுப்பாய்வு செய்வதாகவே இக் கட்டுரை அமையப் பொற்றுள்ளது.

தேர்தலொன்றில் போட்டியிடும் அரசியற் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பெற்றுக் கொள்ளும் வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப அக்கட்சிக்கும் சுயேட்சைக் குழுக்களுக்கும் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுக்கும் முறையே விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையாகும். "இத்தேர்தல் பிரதேச ரீதியாகவோ அல்லது நாடு முழுவதையும் ஒரு தேர்தல் தொகுதியாக கொண்டோ மேற்கொள்ளப்படலாம்." ஒரு உண்மையான ஜனநாயகத்தில் எல்லா விதமான அபிப்பிராயங்களும் அவை நாட்டில் பெற்றிருக்கின்ற விகிதாசாரமாக சட்டசபையில் பிரதிநிதித்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும் என்பதே இத் தேர்தல் முறையின் பின்னணியில் உள்ளதத்துவமாகும். இத் தேர்தல் முறை சுவிஸ்லாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், டென்மார்க், ஜேர்மன், இலங்கை போன்ற நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

இலங்கையில் விகிதாசார முறைமை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த சார்பு ரீதியான தொகுதி வாரியான பெரும்பான்மை தேர்தல் முறைமையில் காணப்பட்ட குறைபாடுகளும், 1977இல் $^5/_6$ பெரும்பான்மையுடன் ஆட்சிக்குவந்த ஐக்கியதேசியக் கட்சியின் நீண்டகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நோக்கங்களுமே இத் தேர்தல் முறைமையின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்திருந்தன. அதனடிப்படையில் 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்ற பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இம் முறையின் கீழேயே மாகாணசபை, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் இடம் பெறுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் அடிப்படையில் இலங்கையில் முதன் முதலில் 1989 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதுவரை இலங்கையில் 9 தடவைகள் பொதுத்தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இலங்கையில் உள்ளது போல போனஸ் அங்கத்துவமுறை, கட்சியில் தான் விரும்பும் மூவருக்கு வாக்களித்தல் என்பன ஏனைய நாடுகளில் அதிகளவு பின்பற்றப்படுவதில்லை. இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட முறைமை ஏனைய நாடுகளிலிருந்து சற்றுவேறானது என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். அதனடிப்படையில் பொதுத் தோர்தலின் போது கடைப்பிடிக்கப்படும் விடயங்களே இலங்கையின் விகிதாசாரத் தேர்தல் மாதிரியாகும். எனவே அவ்விடயங்களினை இங்கு விரிவாக நோக்குவது பொருத்தமுடையதாக இருக்கும்.

முதலாவது செயற்பாடாக தேர்தல் மாவட்டங்களினை வரையறை செய்தல் காணப்படுகின்றது. "தேர்தல் மாவட்டங்களை வரையறுப்பதற்காக தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழு ஒன்றைதாபித்தல் வேண்டும்." அது ஜனாதிபதியால் நியமிக்கப்படும் 3 பேரை உறுப்பினராகக் கொண்டிருக்கும். அவர்கள் தீவிரமாக அரசியலில் ஈடுபடுபடாதவராகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய ஆட்களில் ஒருவரை ஜனாதிபதித் தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுவார்கள். இலங்கை அரசியல் யாப்பில் கூறப்பட்டதற்கிணங்க ஆணைக்குழு இலங்கையை 20க்குக் குறையாததும் 25க்கு மேற்படாததுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்து அவற்றிற்கு பெயர்களை குறித்தொதுக்குதல் வேண்டும். இதனடிப்படையில் இலங்கை 22 தேர்தல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. பொதுவாக இலங்கையில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களாக கருதப்பட்ட போதிலும் வன்னி, யாழ்ப்பாணம் என்பவற்றிற்கு அதுவிதிவிலக்காக உள்ளது. வன்னியில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களும் இணைக்கப்பட்டு வன்னித் தேர்தல் மாவட்டம் உருவாக்கப்பட்டது. இதே போல் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரண்டு நிர்வாக மாவட்டங்கள் இணைக்கப்பட்டு யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இத் தேர்தல் முறையில் பராளுமன்ற பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக தேர்தல் மாவட்டங்கள் வரையறை செய்யப்படுகின்றது.

விகிதாசாரத் தேர்தல் முறைப்படி பாராளுமன்ற பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்காக அடுத்த கட்ட நகர்வாக தேர்தல் மாவட்டங்களுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படுதல் அல்லது ஆசனப் பகிர்வு இடம் பெறுகின்றது. இலங்கை பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் 225 ஆகும். இதில் உறுப்பினர்கள் அரசியற் கட்சிகளின் அல்லது சுயேட்சைக் குழுக்களின் தேசியப்பட்டியல்களில் இருந்து நியமிக்கப்படுவர். எஞ்சிய 196 உறுப்பினர்களுள் ஒவ்வொருமாகாணத்திற்கும் சமமானதாக ஒரு மாகாணத்திற்கு 4 உறுப்பினர்கள் என்றவாறு 9 மாகாணங்களுக்கு இடையிலும் 36 ஆசனங்கள் பங்கிடப்படுகின்றன. மாகாணத்தினுள் அடங்கும் தேர்தல் மாவட்டங்களின் வாக்காளர் தொகைக்கு இணங்க தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் 4 உறுப்பாண்மைகளும் பங்கிடப்படவேண்டும்.

எஞ்சிய 160 ஆசனங்களும், தேசியரீதியாக கணிப்பிடப்படும் வாக்காளர் விகிதாசாரத்திற்கு ஏற்ப அந்தந்த தேர்தல் மாவட்டத்திற்குரிய உறுப்பினர் எண்ணிக்கைகள் கணிப்பிடப்படுகின்றது. இதற்காக வேண்டி முழு நாட்டு வாக்காளர் தொகையையும் 160 ஆல் வகுக்கப்பட வேண்டும். இவ்வாறு அறியப்பட்ட தொகையினால் ஒவ்வொரு தேர்தல் மாவட்டவாக்காளர் தொகையும் வகுக்கப்பட்டு குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்திற்கான பாரளுமன்ற பிரதிநிதித்துவ எண்ணிக்கை கணிக்கப்படுகின்றது.

“தேர்தல் மாவட்டங்களில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் கட்சிப்பட்டியல் அல்லது சுயேட்சைக் குழுப் பட்டியல் அடிப்படையிலான விகிதாசாரத் தேர்தல் முறையில் தெரிவு செய்யப்படுகின்றனர்.”

அடுத்ததாக வேட்பாளர் நியமனம் இடம் பெறுகின்றது. இவ் வேட்பாளர் நியமனமானது இரு வகையில் இடம் பெறுகின்றன. அவையாவன, மாவட்டரீதியான வேட்பாளர் நியமனம், தேசியபட்டியல் வேட்பாளர் நியமனம் ஆகும்.

மாவட்டரீதியான வேட்பாளர் நியமனம், திறந்தபட்டியல் முறையின் கீழ் இலங்கையின் தேர்தல் மாவட்டங்கள் அனைத்தும் பன்மை அங்கத்துவ தேர்தல் மாவட்டங்களாக வரையறை செய்யப்பட்டுள்ளது. இதனால் வேட்பாளர் நியமனம், பட்டியல் ரீதியாகவே சமர்ப்பிக்கப்பட வேண்டும். போட்டியிட விரும்பும் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் தமது மனுக்களை உரிய தேர்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தின் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் உரிய கட்டுமானத்தை செலுத்திய பின் சமர்ப்பிக்கலாம். ஒரு தேர்தல் மாவட்டம் எத்தனை ஆசனங்களை தேர்ந்தெடுக்கும் தகுதியைக் கொண்டுள்ளதோ அதனுடன் 03 இனை சேர்த்து வரும் தொகைக்கு சமமான வேட்பாளர்களை ஒவ்வொரு பட்டியலும் கொண்டிருத்தல் வேண்டும். உதாரணமாக யாழ் தேர்தல் மாவட்டத்தில் தெரிவாகவுள்ள ஆசனங்கள் 09 ஆகும். அதனுடன் 03 இனைச் சேர்த்து 12 வேட்பாளர்களைக் கொண்டதாக வேட்பாளர் பட்டியல் அமையும் அல்லது தயார் செய்யப்படும்.

ஒரு தேர்தல் மாவட்டத்தில் எத்தனை பட்டியல்களையும் சமர்ப்பிக்கமுடியும். ஆனால் "ஒருகட்சி ஒரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு பட்டியலை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்." எனவே ஒரு கட்சி அதிக பட்சம் நாடு முழுவதிலும் 22 பட்டியல்கள் மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

பட்டியலில் உள்ள வேட்பாளர்கள் அனைவரும் பாராளுமன்ற உறுப்புரிமை பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் ஒருவர் தலைமை வேட்பாளராக பெயர் குறிப்பிடப்பட வேண்டும். பட்டியல்கள் அனைத்தும் குறித்த மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலக அதிகாரியால் பரிசீலிக்கப்பட்டு உரியதகைமையைக் கொண்டிருப்பின் பட்டியல் ஏற்கப்படும் இல்லையெனில் நிராகரிக்கப்படும். ஏற்றுக்கொள்ளப்பட்டபட்டியல் கட்சிப்பட்டியல் எனில் கட்சிச் சின்னம் அங்கீகரிக்கப்படும். மாறாக சுயேட்சைப் பட்டியல் எனில் அதற்கான சின்னத்தை தேர்தல் ஆணையாளர் தீர்மானிப்பார். "நியமனம் வழங்கப்பட்ட பட்டியல்களிற்கான இலக்கங்கள் சிங்கள அகரவரிசைப் படி 1,2,3 எனதேர்தல் ஆணையாளரால் வழங்கப்படும்."

தேர்தல் பட்டியல், வேட்பாளர் நியமனம், தேர்தல் போட்டியிடுவதற்காக விண்ணப்பித்த கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் ஒவ்வொன்றும் முன் கூட்டியே வேட்பாளர்களை நியமித்துக் கொள்ளும் வழிமுறையை தேசிய பட்டியல் முறை உருவாக்குகிறது. இதற்காக விண்ணப்பித்த கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் தத்தமது சார்பில் 29 பேர் அடங்கிய பட்டியலை தேர்தல் ஆணையாளரிடம் கையளித்தல் வேண்டும். இப் பட்டியிலில் அடங்குவோர் எந்தவொரு தேர்தல் மாவட்டத்திலும் குறித்த வருட பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட விண்ணப்பிக்காதவராக இருத்தல் வேண்டும். பெயர் குறிப்பிடுபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற உறுப்புரிமை வகிப்பதற்கான அடிப்படைத் தகுதியினை கொண்டிருத்தல் வேண்டும்.

விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைப்படி அடுத்த செயற்பாடாக வாக்களிப்பு காணப்படுகின்றது. விகிதசம பிரதிநிதித்துவ முறையின் திறந்த பட்டியல் மாதிரியின் கீழ் இலங்கையின் பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்காளருக்கு ஒரு வாக்கும் மூன்று விருப்பத் தெரிவுகளும் வழங்கப்படும். முதலில் அவன் தனது வாக்கினை குறித்த மாவட்டத்தில் போட்டியிடும் பட்டியல்களில் தான் விரும்பும் ஏதேனும் ஒரு பட்டியலுக்கு (கட்சி சின்னம் அல்லது சுயேட்சைச் சின்னத்திற்கு) சார்பாக அடையாளம் இட்டு தனது வாக்கினை அளிக்கலாம். பின்னர் தனது மூன்று விருப்பத் தெரிவுகளை தான் வாக்களித்த அதே பட்டியலில் போட்டியிடும் வேட்பாளர் மூவரினது இலக்கங்களுக்கு அளிக்க வேண்டும்.

இங்கு கட்சிக்கு மட்டும் வாக்களித்து வேட்பாளருக்கு வாக்களிக்கா விடினும் அவ் வாக்கு செல்லுபடியான வாக்காக கருதப்படும். ஆனால் கட்சிக்கு வாக்களிக்காமல் வேட்பாளர் இலக்கங்களுக்கு மட்டும் வாக்களிப்பின் அவ் வாக்கு செல்லுபடியற்றதாக கருதப்படும். இதனடிப்படையில் மாதிரி வாக்காளர் அட்டை பின்வருமாறு காணப்படும்.

| | |
|---|---|
| ஐ.தே.க |  |
| பொ.மு |  |
| பு.இ.மு |  |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தகட்ட நகர்வாக வாக்கு கணிப்பீடு காணப்படுகின்றது. இலங்கையில் திறந்த பட்டியல் மாதிரியின் கீழ் பாராளுமன்றத் தேர்தலில் வாக்குக் கணிப்பீடானது ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் தனித்தனியாக இடம்பெறும். இதன் போது நான்கு ஒழுங்குமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவையாவன, போனஸ் ஆசனம் அல்லது மேலதிக ஆசனம், வெட்டுப்புள்ளி அல்லது இழிவுத் தொகை, விளைதொகை கணித்தலும் விகிதசம ஆசனப் பகிர்வும், ஆசனங்களுக்குரிய பிரதிநிதிகளை மாவட்ட, தேசிய பட்டியல் ரீதியாக தெரிவு என்பனவாகும்.

போனஸ் ஆசனம் என்பது தேர்தல் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் ஒரு ஆசனமாகும். எனவே 22 ஆசனங்கள் போனஸ் ஆசனமாக அமையும். உதாரணமாக யாழ் தேர்தல் மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட 9 ஆசனங்களில் ஒரு ஆசனம் போனஸ் ஆசனமாகும்.

தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்டு செல்லுபடியான வாக்குகளில் கூடிய வாக்கைப் பெற்ற கட்சிக்கு போனஸ் ஆசனம் விகிதசம ஆசனப்பகிர்வுக்கு புறம்பாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக 2004 தேர்தலில் யாழ் மாவட்டத்தில் வாக்குக் கணிப்பீட்டு விபரத்தின் படி தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குத் தொகை 305,267, நிராகரிக்கப்பட்ட வாக்குத் தொகை 21233 செல்லுபடியான வாக்குத் தொகை 284028 ஆகும். இதன்படி 2004 தேர்தலில் யாழ் மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி 257320 வாக்குகளைப் பெற்று 90.60% முன்னிலையில் வகித்தது. இதனால் போனஸ் ஆசனத்தை இக் கட்சி பெற்றுக் கொண்டது.

குறித்த தேர்தல் மாவட்டத்தின் விகிதசம ஆசனப் பகிர்வுக்கான போட்டிக்கு தகைமை பெற ஒரு கட்சி பெற்றிருக்க வேண்டிய குறைந்தபட்ச வாக்குத் தொகை என்பதே வெட்டுப்புள்ளி ஆகும். இதற்காக ஓர் விகித அளவு பயன்படுத்தப்படும். இலங்கையில் 5% பயன்படுத்தப்படுகின்றது. இதற்கமைய குறித்த மாவட்டத்தில் 5% குறைந்த வாக்குத் தொகையை பெற்ற எல்லாக் கட்சிகளும் போட்டியிலிருந்து நீக்கப்படும். உதாரணமாக 2004 தேர்தல் விபரப்படி வெட்டுப்பபுள்ளி தொகையான (யாழ் மாவட்ட) 14201 க்கு குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், ஐக்கிய சோசலிச முன்னனி, ஏனைய கட்சிகள் சுயேட்சைக் குழுக்கள் என்பன நீக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் மாவட்டத்தில் விகிதாசார ரீதியில் ஆசனப்பகிர்வாக பெறப்படும் அளவீடே விளை தொகை ஆகும். இதற்காக குறித்த மாவட்டத்தில் அளிக்கப்பட்ட செல்லுபடியான மொத்த வாக்குத் தொகையிலிருந்து அம் மாவட்டத்தின் வெட்டுப்புள்ளிக்குக் குறைத்த வாக்குத் தொகை நீக்கப்படும். இவ்வாறு நீக்கி வரும் வாக்குத் தொகையே இயைபான வாக்குத் தொகை எனப்படும் இவ் இயைபான வாக்குத்தொகையானது அம் மாவட்டத்தின் பகிரப்படவுள்ள ஆசனங்களின் எண்ணிக்கையிலிருந்து பிரிப்பதன் மூலம் விளைதொகை பெறப்படும். இதனை மாவட்ட கோட்டா என்றும் கூறலாம்.

விளைதொகை கணிக்கப்பட்ட பின் அதனை அடிப்படையாகக் கொண்டு கட்சிகளுக்குரிய ஆசனங்கள் விகிதசமமாக பகிரப்படும். அதாவது அத் தேர்தல் மாவட்டத்தில் ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குத் தொகையை விளைதொகையால் பிரிக்கப்பட்டு அதற்கு சமமான ஆசனங்கள் விகிதசமமாகப் பகிரப்படும். இவ்வாறு மாவட்டத்திற்கு ஒதுக்கிய ஆசனங்களில் ஏதேனும் ஒன்று எஞ்சியிருப்பின் அவை கட்சிகளின் பெரும்பான்மை மிகுதிவாக்கின் இறங்குவரிசைக்கு அமைய உரிய கட்சிக்கு வழங்கப்படும்.

வாக்குக் கணிப்பீட்டின் இறுதி அம்சமாக பிரதிநிதிகள் தெரிவு இடம்பெறும் மாவட்டத்தில் வெற்றி பெற்ற கட்சிகளுக்குரிய ஆசனங்கள் விகிதசமமாக பகிரப்பட்டதன் பின்னர் அவ் ஆசனங்களுக்குரிய பிரதிநிதிகள் யார்? என்பதை தீர்மானித்தாலே பிரதிநிதிகள் தெரிவு ஆகும். இதற்காக ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகள் தனித்தனியே எடுக்கப்பட்டு அவற்றில் அக் கட்சியின் வேட்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்ட விருப்பத் தெரிவுகள் எண்ணப்பட்டு அவை உரிய வேட்பாளர்களின் கணக்கில் எடுக்கப்படும். இதன்படி கூடிய விருப்பத் தெரிவுகளைப் பெற்றவர்கள் குறித்த மாவட்டத்தில் கட்சி பெற்ற ஆசனங்களின் தொகைக்கு சமமான பிரதிநிதிகளாக தெரிவாவர். எதிர்காலத்தில் குறித்த மாவட்டத்தின் ஏதேனும் வெற்றிடம் எழுமானால் அவ் ஆசனம் எந்தக் கட்சிக்குரியதோ அதன் பட்டியலில் அடுத்த பெரும்பான்மை விருப்பத் தெரிவுகளைப் பெற்றவர் புதிய பிரதிநிதியாக தெரிவாவர். இப் பட்டியலில் அவ்வாறு எவரையேனும் தேர்ந்தெடுக்க இயலாது இருப்பின் புதிய பிரதிநிதி யார் என்பதனை கட்சித் தலைவர் தீர்மானிப்பார்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி இறுதியாக தேசியப் பட்டியல் பகிர்வு இடம் பெறுகின்றது. பாராளுமன்றத்தில் கல்விமான்கள், புத்தி ஜீவிகள், உயர் பிரதிநிதிகள், அனுபவசாலிகள் போன்றோரை உள்ளீர்க்கும் வழிமுறையாக அமைந்த விடயமே தேசியப் பட்டியல் ஆகும். "அகில இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியில் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பெறும் வாக்கு விகிதாசாரத்திற்கேற்ப 29 பேர் தேசியப் பட்டியல் மூலமாக தெரிவாவார்கள்." வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் போதே கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் 29 வேட்பாளர்களைக் கொண்டதாக ஒரு தேசியப் பட்டியல் ஒன்றை தயார் செய்ய வேண்டும். அகில இலங்கை ரீதியில் ஒவ்வொரு கட்சியும், குழுக்களும் பெற்றுக் கொண்ட வாக்குகள் 29 ஆல் வகுக்கப்படுவதன் மூலம் ஒரு தேசியப் பட்டியல் உறுப்பினரை பெற்றுக் கொள்வதற்கான மொத்த வாக்குகள் பெறப்படும். 29 ஆசனங்களையும் ஒதுக்கும் போது ஏதேனும் ஆசனம் எஞ்சியிருப்பின் அவை கட்சிகளின் பெரும்பான்மை மிகுதிவாக்கிற்கமைய உரிய கட்சிக்கு ஒதுக்கப்படும். இதற்கமைய ஒவ்வொரு கட்சிகளுக்கும் தேசிய ரீதியில் தாம் பெற்ற வாக்கிற்கு சமமான ஆசனங்களை தேசிய பட்டியலிலிருந்து விகிதாசார ரீதியில் பெற்றுக் கொள்ளும். உதாரணமாக 2004 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA)-13, ஐக்கிய தேசிய கட்சி - 11, ஜாதிஹ ஹெல உறுமய (JHU)-02, தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)-02, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC)-01 என்ற அடிப்படையில் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் 29 பேரும் பங்கிடப்பட்டனர்.

இத் தேசியப் பட்டியலின் ஒதுக்கீட்டினை தேர்தல் ஆணையாளர் உரிய கட்சிகளுக்கு அறிவித்த பின்னர் அவற்றிற்கு நியமிக்கப்பட வேண்டிய பிரதிநிதிகள் யார் என்பதை உரிய கட்சிகளின் தலைவர்களே தீர்மானிப்பார். அவ்வாறு தீர்மானிக்கும் போது அவர்கள் தமது முன்னைய தேசியப்பட்டியலுக்கென வழங்கப்பட்ட பட்டியலிலிருந்து அல்லது வெளியிலிருந்து பிரதிநிதிகளை நியமித்துக் கொள்ளலாம். இவ்வாறாக பல ஒழுங்குமுறைகளைக் கொண்டு இலங்கையின் தற்போது நடைமுறையிலுள்ள இரண்டாம் குடியரசு அரசியலமைப்புக்கு அமைவாக பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் நடைபெற்று பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

பாராளுமன்றத் தேர்தலில் ஒருவர் போட்டியிடுவதற்கு இலங்கை பிரஜையாக இருத்தல், 18 வயது நிரம்பியவராக இருத்தல், தேர்தல் நடைபெறுவதற்கு 7 வருடத்திற்குட்பட்ட காலப்பகுதியில் நீதிமன்றத்தில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு தண்டிக்கப்படாதவராக இருத்தல், தேர்தல் பட்டியலில் தனது பெயரைக் கொண்டிருத்தல், சித்த சுவாதீனமுள்ளவராக இருத்தல் வேண்டும் போன்ற தகுதிகளை உடையவர்கள் பாராளுமன்றத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் தொகுதியில் போட்டியிட முடியும் என்பது இங்கு முக்கியமாக கூறப்பட வேண்டிய விடயமாகும்.

விகிதாசாரத் தேர்தல் முறைமையானது சார்பு ரீதியான தொகுதிவாரியான பெரும்பான்மை தேர்தல் முறையில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டாலும் யதார்த்த ரீதியாக நோக்குகின்ற போது விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையிலும் சாதக, பாதக என்கின்ற இரண்டு பக்கங்களும் காணப்படவே செய்கின்றன. அந்தவகையில் விகிதாசாரத் தேர்தல் முறையை பின்பற்றுவதனால் இலங்கையில் ஏற்படுகின்ற நன்மைகளினை இங்கு நோக்குவோம்.

பெரும்பான்மை வாக்காளர் விரும்புகின்ற கட்சியை சேர்ந்தவரே, உறுப்பினராக வரக்கூடிய நிலையும் கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப உறுப்பினர்கள் தெரிவு செய்யக் கூடிய நிலையும் காணப்படுவதனால் "கூடுதலான ஜனநாயகத் தன்மை வாய்ந்த தேர்தல் முறையாக இது காணப்படுகின்றது." உதாரணமான 2004 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் UPFA (45%)-105 ஆசனங்கள், UNPC (38.5%)-82 ஆசனங்கள் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதனை எளிய பெரும்பான்மைத் தேர்தலில் உறுதிப்படுத்துவது கடினமாகும்.

இலங்கை வாக்களிப்போர் வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்ற போது இத் தேர்தல் மூலம் எந்த அரசியற் கட்சியும் $^2/_3$ பெரும்பான்மையைப் பெற முடியாத நிலை ஏற்படும். இந்நிலை இரண்டு நன்மைகளைத் தருகின்றது. ஒன்று, நிரந்தரமான அரசியல் யாப்பிற்கு வழிவகுப்பதாக அமைகின்றது. ஏனெனில் அரசியலமைப்பினை மாற்ற வேண்டுமாயின் $^2/_3$ பெரும்பான்மை தேவையாகும். "1989 ஆம் ஆண்டு தேர்தலிலும் 1994 ஆம் ஆண்டு தேர்தலிலும் எந்த ஒரு கட்சியும் $^2/_3$ பெரும்பான்மையினை பெறாததினால் 1989க்குப் பின்னர் எந்தவொரு அரசியற் திருத்தமோ மாற்றமோ ஏற்படவில்லை." (அக் காலப்பகுதிக்குள்)

இரண்டாவது இம் முறையின் மூலம் தேர்தல் நடைபெறும் போது அனேகமாக கூட்டரசாங்கம் அமைக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் தனது சர்வதிகாரத் தன்மையை நீக்கி ஏனைய கூட்டுச் சேர்ந்த கட்சிகளின் கொள்கைகளிற்கும் மதிப்பளித்து அரசாங்கத்தை நடாத்த வேண்டிய நிலை ஏற்படும். உதாரணமாக 1994 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் அரசாங்கத்தை அமைத்துக் கொண்ட PA அரசாங்கம் ஒரு கூட்டரசாங்கமாக காணப்பட்டது. இது ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸினுடனும் மலையக மக்கள் முன்னணியுடனும் இணைந்தே அரசாங்கத்தை அமைத்துக் கொண்டது.

தொகுதிவாரியாக போதியளவு வாக்குகளை பெறமுடியாத ஆனால் தேர்தல் மாவட்ட ரீதியாக கணிசமான வாக்குகளைப் பெறக் கூடிய சிறிய கட்சிகள் குறைந்தளவு எண்ணிக்கையிலாவது தமது பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு அனுப்பக் கூடிய நிலை காணப்படுகின்றது. உதாரணமாக 1989 ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய சோசலிச முன்னணிக்கு (USA) கேகாலை மாவட்டத்தில் ஒரு ஆசனமும் (அதாவுட செனவிரத்தின), இரத்தினபுரி மாவட்டத்தில் ஒரு ஆசனமும் (வாசுதேவநாணயக்கார) கிடைத்தது.

தொகுதிவாரியாக செறிவாக இல்லாத இனங்கள் மாவட்ட ரீதியில் கணிசமான அளவு இருப்பின் தங்களுடைய பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு அனுப்பக்கூடிய நிலை காணப்படுகிறது. உதாரணமாக 1994 ஆம் ஆண்டு தேர்தலில் கொழும்பில் (தேவராஜ், யோகராஜன்), வன்னியில் (சுமதிபாலா-எஸ்.எம்.அபூபக்கர்), கண்டியில் (W.ராஜரட்ணம்), பதுளையில் (வி.சென்னன்) என்றடிப்படையில் பாராளுமன்றத்திற்கு சென்றிருந்தார்கள் என்பது குறிப்படத்தக்கதாகும்.

இம் முறையின் மூலம் அநேகமாக எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையினை பெற முடியாததினால் பலமான எதிர்க்கட்சி உருவாவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் இலங்கை அரசாங்கம் கூட்டரசாங்கமாகவே இருக்கும். இக் கூட்டு அரசாங்கம் சிறுபான்மை இனத்தின் கட்சியினையும் இணைத்தவையாகவே இருக்கும். இதனால் இக் கட்சிகளும் பேரம் பேசி சிறுபான்மையினரின் நலன்களைப் பேணுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகின்றன.

“இம் முறையில் இடைத் தேர்தல் இல்லை. அதனால் இடைத்தேர்தலுக்கு செலவிடப்படும் பணம் மீதப்படுத்தப்படுகின்றது.” மேலும் வாக்காளரின் தெரிவு இங்கு பரந்ததாகக் காணப்படும். பல கட்சிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசனங்களை பெறக்கூடிய நிலை இருப்பதனாலேயே பரந்ததாக காணப்படுகின்றது. சமமான பிரதிநிதித்துவம் உருவாக்குவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. கட்சிகள் பெற்ற வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப பிரதிநிதித்துவம் இங்கு கிடைக்கின்றது. அதி பிரதிநிதித்துவமோ அல்லது குறை பிரதிநிதித்துவமோ இங்கு ஏற்படுவதில்லை.

அரசியற் கட்சிகளின் ஆதிக்கம் குறைவடைந்து காணப்படும். வாக்காளருக்கும் பிரதிநிதிகளுக்குமிடையில் தொடர்பு குறைவதால் பிரதிநிதிகள் வாக்காளரின் செல்வாக்கிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக செயற்பட முடிகிறது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் பொதுஜன அபிப்பிராயம் சரியான முறையில் வெளியிடப்படுகின்றது. வாக்குகளின் விகிதாசாரம் சரியான முறையில் வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறாக பல நன்மைகளினைச் செய்கின்றதாக விகிதாசாரத் தேர்தல் முறைமை காணப்படுகின்றது. எனினும் மாறாக பாதகமான பக்கத்தினையும் கொண்டதாகவே இது காணப்படுகின்றது. அந்தவகையில் தீமைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

எந்தவொரு கட்சியினரும் சுயேட்சைக் குழுவினதும் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாத ஒருவர் தனித்து போட்டியிட்டு பாராளுமன்றம் செல்வதற்கு இத் தேர்தல் முறையில் இடமில்லை. வாக்காளர்கள் இலகுவில் விளங்கிக் கொள்ள முடியாத தேர்தல் முறையாக இத் தேர்தல் காணப்படுகின்றது. இதனால் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. உதாரணமாக 1989,1994 ஆகிய இரு தேர்தல்களிலும் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். 1994 தேர்தலில் நுவரேலியா மாவட்டத்தில் 21591 வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகும். இம் முறையின் மூலம் இடைத்தேர்தல்கள் நடாத்தப்படுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. இதனால் இடைக்காலங்களில் அரசாங்கக் கட்சி பற்றியும் மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதை அறிகின்ற வாய்ப்புக்கள் இல்லாமல் போகின்றது.

இம் முறையின் மூலம் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் பாராளுமன்றத்தை புறக்கணிப்பார்களாயின் அதற்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு மாற்று வழிகள் இல்லை. உதாரணமாக 1989 ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலின் பின்னர் யாழ்ப்பாண மாவட்ட சுயேட்சைக் குழு பிரதிநிதிகள் திருகோணமலை மாவட்ட சுயேட்சைக் குழு உறுப்பினர்கள், வன்னி மாவட்ட சுயேட்சைக்குழு உறுப்பினர் (இம் மூன்று சுயேட்சைக் குழுக்களும் EROS இயக்கத்தினரால் உருவாக்கப்பட்டதாகும்.) பாராளுமன்றத்தை புறக்கணித்திருந்தனர். அதனால் அவ் அரசாங்க காலம் முடிகின்ற வரை அவ் வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலை ஏற்பட்டது. மாவட்டங்களுக்கிடையில் கட்சிகள் பெறும் வாக்குகளுக்கிடையே வேறுபாடுகள் இருப்பதனால் பாராளுமன்றத்திலும் அவை பெறும் ஆசனங்களுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படும். இதனால் இத்தேர்தல் முறைமை விகிதாசாரத் தேர்தல் முறை என கூறமுடியாது.

இலங்கையின் தேர்தல் அனுபவங்களின் படியும் விகிதாசாரப்பிரதிநிதித்துவ முறையில் நடைபெற்ற 1980,1994 தேர்தல் அனுபவங்களின் படியும் பார்க்கின்ற போது இம் முறையின் மூலம் எந்தவொரு கட்சியும் தனித்து பாராளுமன்றத்தில் $^{2}/_{3}$ பெரும்பான்மையை பெற்றுக் கொள்ள முடியாது. இதனால் காலத்தின் தேவைக்கு ஏற்ப அரசியலமைப்பை மாற்ற முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. உதாரணமாக இனப்பிரச்சினை தீர்வாக அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாதுள்ளது.

இத் தேர்தல் முறையின் கீழ் கூட்டரசாங்கத்தை அமைத்துக் கொண்ட கட்சிகளுக்கிடையே கொள்கை ரீதியான முரண்பாடுகள் ஏற்படுகின்ற போது அரசாங்கம் பலவீனமடையக் கூடிய நிலை தோன்றலாம். இத் தேர்தல் முறை பிரதிபலிக்கும் வாக்காளருக்குமிடையே தொடர்பினைக் குறைக்கின்ற ஒன்றாக காணப்படுகின்றது. மேலும் இம் முறைமையில் காணப்படும் விருப்பு வாக்குமுறை ஒரே கட்சியை சேர்ந்த வேட்பாளர்களுக்கிடையே கூட பகைமை உணர்வை உருவாக்குகின்றது. இம் முறையில் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய பட்டியல் முறையானது குறைபாடுகளைக் கொண்டதாக காணப்படுகின்றது. அதாவது கட்சித் தலைமையின் சர்வதிகாரத்திற்கு வழிவகுக்கின்ற ஒன்றாக காணப்படுகின்றது.

இம் முறையின் கீழ் சிறிய கட்சிகளின் செல்வாக்கு அதிகரிக்கிறது. அத்தோடு இனம், பிரதேசம், சமயம் என்பவற்றினடிப்படையில் சிறிய குழுக்களாக நாடு பிளவுபடும் போக்கு காணப்படும் அல்லது வளர்ச்சியடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இத் தேர்தல் முறையானது இன்னும் பல தீமைகளை ஏற்படுத்துவதாக காணப்பட்டு வருகின்றது. இலங்கையில் இத் தேர்தல் முறையானது மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தையும், உறுதியான நிலையான ஆட்சியையும் ஏற்படுத்துவதிலும் பல சவால்களை உண்டு பண்ணி வருகின்றது.

எனவே இத் தேர்தல் முறைமையில் உள்ள குறைபாடுகள் காரணமாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைப்பாடுகள் காணப்படுகின்றன. அந்தவகையில் இலங்கையில் ஜேர்மன் தேர்தல் முறையே பொருத்தமானதாக இருக்கும் என பேசப்பட்டு வருகின்றது. இருப்பினும் அம் முறை இலங்கைக்கு எவ்வகையில் சாத்தியம் என்பது கேள்விக்குறியே?

முடிவாக தொகுத்து நோக்குகின்ற போது ஒரு நாடு தனக்கான தேர்தல் முறையினை வகுக்கின்ற போது தேசிய நலனைக் கருதியே வகுக்க வேண்டும். மாறாக ஆட்சியாளர்களின் நலன் கருதி வகுக்கப்பட்டால் நாடு அபிவிருத்தியோ, முன்னேற்றப் பாதையினையோ, இலக்கினையோ அடையமுடியாது. இலங்கையிலும் ஆட்சியாளர்கள் நலன் முதன்மைப்படுத்தி அறிமுகப்படுத்தப்பட்டதால் இம் முறைமை இலங்கையில் குறிப்பிடத்தக்களவு வெற்றியினை அளிக்கவில்லை. இலங்கையில் இன முரண்பாடு தீவிரமடைவதற்கு இத் தேர்தல் முறையும் ஒரு காரணம் என தெரிய வருகின்றது. எனவே இலங்கையில் இனப் பிரச்சினைக்கு தீர்வாகவும், நாட்டின் அபிவிருத்தியினை உயர்த்துவதற்கும் நாட்டில் அமைதியான உறுதியான அரசாங்கத்தினை ஏற்படுத்துவதற்கும் இலங்கையில் நடைமுறையிலுள்ள விகிதாசாரத் தேர்தல் முறையில் அதன் ஒழுங்குமுறைகளில் சில மாற்றத்தினை நாட்டிற்கு பொருத்தமான முறையில் கொண்டு வருதல் வேண்டும் அல்லது இலங்கை நாட்டிற்கு பொருத்தமான ஒரு தேர்தல் முறையினை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதும் மிக அவசியமாகும் என்பது கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

இரகுநாதன்.க, (2008), "தேர்தல் முறைகளும் அவற்றின் பரிமாணங்களும்", குமரன் புத்தக இல்லம்.

யோதிலிங்கம்.அ.சி, (2016), "அரசறிவியல் ஓர் அறிமுகம்", குமரன் புத்தக இல்லம்.

யோதிலிங்கம்.அ.சி, (2019), "இலங்கையின் அரசியல் யாப்புக்கள்", குமரன் புத்தக இல்லம்.

குணரத்தினம்.வே, (2008), "இலங்கையின் அரசியற் திட்டங்களின் பரிணாம வளர்ச்சி", குமரன் புத்தக இல்லம்.

பிரசாத்.சி, (2016), "இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு-1978", தாயகம் பதிப்பகம்.

திருநாவுக்கரசு.மு, (1994), "அரசியலமைப்பு ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய", மாறன் பதிப்பகம்.

யோதிலிங்கம்.அ.சி, (2004), "இலங்கையின் அரசியல் யாப்புக்கள்", குமரன் புத்தக இல்லம்.

செல்வகுணபாலன்.செ, (2007), "இலங்கை அரசியல் குமரன் புத்தக இல்லம்.

சிவராஜா.அ, (2002), "இலங்கை அரசியல்", குமரன் புத்தக இல்லம்.

(N.A), (2005), "தேர்தல் முறைகளை திட்டமிடல்", மாற்றுக் கொள்கைக்கான நிலையம்.

குமரலிங்கம்.சி,(2010), "இலங்கை அரசியலும் தேர்தல்களும்", பாரதி பதிப்பகம்.

புன்னியாமீன்.பீ.ஏம், (1994), "இலங்கையில் தேர்தல்கள் அன்றும் இன்றும் ஒரு சுருக்க வரலாறு", ஈ.பி.ஜ புத்தகாலயம்,கொழும்பு.

காதர்.எம்.எல்.ஏ, (1999), "இலங்கையின் பத்தாவது பொதுத் தேர்தலும் (1994) முஸ்லீம்களும்: ஒரு கண்ணோட்டம்", அரசியல் ஆய்வுக் கழகம், பேராதனை.

புன்னியாமீன்.பீ.ஏம், (1994), "94 பொதுத்தேர்தலும் சிறுபாண்மை இனங்களும்: ஓர் ஆய்வு", ஈ.பி.ஜ புத்தகாலயம், கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் இடது சாரி அரசியற் கட்சிகளுக்கு இடையிலான பிளவுகளையும் பின்னணிக் காரணிகளையும் தெளிவுபடுத்துக.

"இலங்கையின் நவீன வரலாறு என்பது பிரித்தானியர் ஆட்சிக் காலத்துடன் ஆரம்பமாகிறது." இலங்கையில் 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தினூடாக சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அரசியற் கட்சிகள் (Political Parties) தோற்றம் பெற்றன. "1928 இல் A.E குணசிங்காவினால் தொழிற்கட்சி என்ற பெயரில் ஒரு கட்சி உருவாக்கப்பட்ட போதிலும் அது ஓர் அரியற் கட்சிக்குரிய பண்புகளைக் கொண்டதாக அமையவில்லை" அந்தவகையில் இலங்கையின் முதலாவது அரசியற் கட்சியாக "லங்கா சமசமாஜக் கட்சி (L.S.S.P) 1935 இல் தோற்றம் பெற்றது. இதனைத் தொடர்ந்து இலங்கையில் பல்வேறுபட்ட அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றன. அவற்றுள் முதன்மையானவையாக இலங்கை இந்திய காங்கிரஸ் (1939), இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (1943), அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் (1944), ஐக்கிய தேசியக் கட்சி (1946), தமிழரசுக் கட்சி (1949), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (1951), இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் (1981), மலையக மக்கள் முன்னணி (1988) போன்றவற்றினைக் குறிப்பிட்டு கொள்ளலாம்.

அந்த வகையில் "இடதுசாரி அரசியற் கட்சிகளுக்கு இடையிலான பிளவுகளையும் பின்னணிக் காரணிகளையும் ஆராய்வதாகவே இக் கட்டுரை அமையப் பெற்றுள்ளது." இடது சாரிகள் என்பது "The individuals and groups pursuing generally political goals by reformist or revolutionary means in opposition to broadly conservative established or reactionary interests" என ஆங்கிலத்தில் இதற்கு விளக்கம் கூறுவர்.

இடது சாரி என்பது பழமைவாத அல்லது பிற்போக்கு வாத நலன்களுக்கு எதிராக புரட்சிகர அல்லது சீர்திருத்த வழிமுறைகள் மூலம் சமத்துவ அரசியல் குறிக்கோள்களை முன்னெடுக்கும் தனியாட்கள் அல்லது குழுக்களைக் குறிக்கும் என்று குறிப்பிடலாம். மேலும் இடது சாரிச் சிந்தனையாளர்களான கார்ள் மாக்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்ராலின், ரொஸ்கி, மாஓசேதுங் போன்றவர்களின் கொள்கைகளைப் பின்பற்றும் கட்சிகளை இடதுசாரிக் கட்சிகள் எனலாம். இலங்கையின் ஆரம்பகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடதுசாரிக் கட்சிகளை தேசிய இயக்கத்தின் தீவிரவாதப் பிரிவாகவும் அடையாளம் காணமுடியும்.

இலங்கையில் இடதுசாரிக் கட்சிகள் தோன்றுவதற்கு ஏதுவான நிலமைகள் குறிப்பாக, காலனித்துவ பொருளாதாரம் காரணமாக தொழிலாளர் வர்க்கத்தின் வளர்ச்சி, 1930களின் ஆரம்பத்தில் நிலவிய பொருளாதார மந்த நிலை, சுதந்திரப் போராட்டத்தினை தீவிரமாக முன்னெடுத்தலும் சம உடைமைச் சமூக மொன்றைக் கட்டியெழுப்புதலும், ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கத்தினரில் சிலர் மேற்கத்தைய கல்வியினைப் பயன்படுத்திக் கொண்டமை போன்றன 1930 களின் ஆரம்பத்தில் தோன்றியிருந்தன.

இலங்கையில் இடதுசாரிகளின் தோற்றம் என்பது அரசியல் வரலாற்றிலே புறக்கணிக்கப்பட முடியாத விடயமாகும். இவ்வகையில் 1935 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சியானது (L.S.S.P) இலங்கையின் அரசியல் அம்சங்களில் கட்சி முறையின் வளர்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. 1935 ஆம் ஆண்டு கட்சி முறை என்ற வரையறைக்குள் இடதுசாரிகள் ஸ்தாபன ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட பொழுதிலும் இடதுசாரிகளின் உருவாக்கம் என்பது 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதியிலிருந்தே எழுச்சியடைத் தொடங்கிவிட்டது.

"இலங்கை அரசியல் வரலாற்றிலும், அரசியல் மாற்றங்கள் என்ற வகையிலும் இடதுசாரிக் கட்சிகள் பிரதான பங்கினை வகித்து வந்தன." 1935 ஆம் ஆண்டு பிலிப் குணவர்த்தன, கலாநிதி கொல்வின் R.D சில்வா, கலாநிதி S.A விக்ரமசிங்க, றோய். டி. மெல், கலாநிதி N.M பெரேரா போன்றவர்களால் லங்கா சமசமாஜக் கட்சி (L.S.S.P) நிறுவப்பட்டதும் இலங்கை அரசியலில் புதிய திட்டம் தோன்றியது என்பதே பொருத்தமானது. அதாவது இலங்கையில் இடதுசாரிகளின் தோற்றம் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்புக்காட்டும் பின்னணியிலும், சமூகத்தில் மாக்சியக் கொள்கையைப் பரப்பும் நோக்கிலும் ஏற்பட்டது. முக்கியமாக சமூகத்தில் அடிப்படையான பொருளாதார சமூக மாற்றங்களை சமூகத்தில் ஏற்படுத்தி சோசலிசம் என்பதை அமைக்கும் நோக்கில் இக் கட்சிகள் தமது போராட்டத்தினை நடத்தி வந்தன. மேலும் இலங்கை பூரண சுதந்திரம் பெறவேண்டும், பெருந்தோட்டங்கள் உட்பட சகல உற்பத்தி சாதனங்களும் பொதுவுடமையாக்கப்பட வேண்டும், இன, மத, மொழி, சமத்துவம் உள்ள சமதர்ம சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகளைத் தம்மகத்தே கொண்டதாகவும் லங்கா சமசமாஜக் கட்சி (L.S.S.P) உருவாக்கப்பட்டது.

1935 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி லங்கா சமசமாஜக்கட்சி (L.S.S.P) உருவாக்கப்பட்டது. இதுவே இங்கையில் உரூவாக்கப்பட்ட முதலாவது அரசியற் கட்சியும் முதலாவது இடதுசாரிக் கட்சியுமாகும். ஆனால் இக் கட்சி மிக நீண்டகாலமாக ஒற்றுமைத் தன்மையுடன் காணப்பட்டு வரவில்லை. "மொஸ்கோவில் மழை பெய்தால் கொழும்பில் குடைப்பிடிப்பாளர்கள்" என்ற பழமொழிக்கிணங்க பல கருத்து வேறுபாடுகளுடன் முரண்பட்டுக் கொண்டார்கள். இதன் விளைவாக இக்கட்சியில் பல பிளவுகள் ஏற்படத் தொடங்கின. அந்தவகையில் இடதுசாரிக் கட்சிகளின் பிளவுகளையும் பின்னணிகளையும் சற்று விரிவாக நோக்குவோம்.

"லங்கா சமசமாஜக் கட்சியின் முதலாவது பிளவு"- 1939 ஆம் ஆண்டு இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பமானது. இந்த யுத்தத்தின் போது பரஸ்பரம் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என சோவியத் யூனியனும் ஜேர்மனியும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்தன. இவ் ஒப்பந்தம் பற்றி கருத்து முரண்பாடுகள் உலகிலுள்ள இடதுசாரிக் கட்சிகளிடையேயும் ஏற்பட்டது. இலங்கையின் லங்கா சமசமாஜக் கட்சிக்குள்ளும் இப் பிரச்சினை பெரிதாக எழுச்சி பெற்றது. கட்சியிலிருந்த பெரும்பான்மையோர் சர்வாதிகாரத் தன்மையுடன் செயற்படும் ஜேர்மனுடன் சோவியத் யூனியன் ஒப்பந்தம் செய்தது தவறு எனக் குறிப்பிட்டனர். மறுசாரார் சோவியத் யூனியனைப் பாதுகாப்பதற்கு இது போன்ற ஒப்பந்தம் தவிர்க்க முடியாது எனக் குறிப்பிடுகின்றனர். இறுதியில் இவ் கருத்து முரண்பாடு காரணமாக சோவியத் யூனியனை ஆதரவளித்தவர்கள் கட்சியினை விட்டு வெளியேறினார்கள். இதை விட சமசமாஜக் கட்சி பிளவடைவதற்கான இன்னொரு காரணமாக "ஸ்ராலின் டிரொஸ்கி முரண்பாடேயாகும்."

கட்சியினை விட்டு வெளியேறியவர்கள் 1940 ஆம் ஆண்டு மே மாதத்தில் சிங்கள அரசியல் செய்தித்தாளான "ஜனசக்தி"யை ஆரம்பித்தார்கள். கலாநிதி S.A விக்கிரமசிங்க இதன் ஆசிரியராக விளங்கினார். இப் பத்திரிகை இட்ட அடித்தளத்தினைக் கொண்டு 1940 நவம்பரில் ஐக்கிய சோசலிச கட்சி என்னும் அமைப்பினை S.A விக்கிரம சிங்க தலைமையில் உருவாக்கினர். இக் கட்சியே 1943 யூலை 03இல் பொரளையில் தனது கட்சியின் பெயரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி" என மாற்றிக் கொண்டது. S.A விக்கிரமசிங்க, பீற்றர் கெனமன், பொன் கந்தையா போன்றோர் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குவதில் பெரும் பங்காற்றினர். மேலும் 1940 ஆம் ஆண்டு யூன் மாதம் சமசமாஜக் கட்சியின் முக்கிய தலைவர்களான டாக்டர் N.M பெரேரா, டாக்டர் கொல்வின் R.D சில்வா, எட்மண்ட் சமரக் கொடி ஆகியோரது பிரச்சாரம் யுத்த நடவடிக்கைகளுக்கு இலங்கையை பயன்படுத்துவதற்கு தடையாக உள்ளது எனக் கருதியமையினால் பிரித்தானிய அரசாங்கம் இவர்களை சிறையிலடைத்தது. மேலும் கட்சியின் அச்சகமும் பொலிசாரால் சீல் வைத்து மூடப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது ஒரு விடயமாகும்.

"இடது சாரிக் கட்சியின் இரண்டாவது பிளவு" - 1945 ஆம் ஆண்டு 2ஆம் உலக மகாயுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து இவ்விரு கட்சிகளினதும் தடைகள் நீக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து லங்கா சமசமாஜக் கட்சியின் முக்கிய தலைவர்களான கலாநிதி கொல்வின் R.D சில்வாவும், கலாநிதி N.M பெரேராவும் கட்சியை புணரமைப்புச் செய்ய முற்பட்டனர். அப்போது இரு தலைவர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. இதனால் கொல்வின் R.D சில்வா தலைமையிலான குழுவினர் 1945 இல் லங்கா சமசமாஜக் கட்சியை விட்டு வெளியேறி "போல்சேவிக் லெனினிஸக் கட்சி (B.L.P) என்னும் கட்சியினை உருவாக்கினார்.

"1945, 1946, 1947 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மூன்று இடதுசாரிக் கட்சிகளினதும் தலைமையில் பல வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடைபெற்றன." 1947 ஆம் ஆண்டு சோல்பரி யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டு அதன் கீழ் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது இடதுசாரிக் கட்சிகள் என்ற அடிப்படையில் 3 கட்சிகள் போட்டியிட்டன.

லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிசக் கட்சி, போல்சேவிக் லெனினிஸக் கட்சி என்பனவே அம் மூன்றும் ஆகும். இத் தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி 10 ஆசனங்களையும் போல்சேவிக் லெனினிஸக் கட்சி 5 ஆசனங்களையும், இலங்கை கம்யூனிஸக் கட்சி 3 ஆசனங்களையும் பெற்றன. தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைத்துக் கொண்ட போதும் "லங்கா சமசமாஜக் கட்சி பிரதான எதிர்கட்சியாக பதவி வகித்தது." கலாநிதி N.M பெரேரா எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இடதுசாரிக் கட்சிக்கிடையிலான மூன்றாவது பிளவு" 1950 ஆம் ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சியுடன் போல்சேவிக் லெனினிஸக் கட்சி இணைந்து கொண்டது. இதனை லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்த சிலர் விரும்பவில்லை. அவர்கள் கட்சியிலிருந்து பிலிப் குணவர்த்தனா தலைமையில் வெளியேறி 1950 ஆம் ஆண்ட மே மாதம் 14 திகதி "நவலங்கா சமசமாஜக் கட்சி" எனும் அமைப்பினை உருவாக்கினர்.

1952 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி ஒன்பது இடங்களிலும், நவலங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து நான்கு இடங்களிலும் வெற்றி பெற்றன. 1951 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (S.L.F.P) ஒன்பது ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இதன் தலைவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா எதிர்க் கட்சித் தலைவராக பதவியேற்றார்.

1963 ஆம் ஆண்டு இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, நவலங்கா சமசமாஜக் கட்சி என்பன இணைக்கப்பட்டு இடதுசாரி ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டது. எனினும் 1964ஆம் ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சி, சுதந்திரக் கட்சி அராசங்கத்துடன் கூட்டுச் சேர்ந்ததைத் தொடர்ந்து இடதுசாரி ஐக்கிய முன்னணி சிதைவடைந்தது.

"இடதுசாரிக் கட்சிகளுக்கிடையிலான நான்காவது பிளவு" - 1964 ஆம் ஆண்டு இடதுசாரிக் கட்சிகள் மேலும் பிளவுபடும் நிலை ஏற்பட்டது. லங்கா சமசமாஜக்கட்சி அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்ததை விரும்பாத குழுவினர் எட்மண்ட் சமரக்கொடி தலைமையில் கட்சியிலிருந்து வெளியேறி "புரட்சிகர லங்கா சமசமாஜக் கட்சி (L.S.S.P.R)" எனும் அமைப்பினை உருவாக்கினர். அதேவேளை கம்யூனிஷக் கட்சிக்கு உள்ளும் பிளவு ஏற்பட்டது. இப்பிளவுக்கு காரணம் சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் இடையிலான தத்துவார்த்த முரண்பாடே ஆகும். இதில் சீனாவின் கருத்துக்களை ஆதரித்தவர்கள் N.சண்முகதாசன் தலைமையில் கட்சியினை விட்டு வெளியேறியதால் இலங்கை கம்யூனிஸக் கட்சி பிஜிங் சார்பு, கம்யூனிச கட்சி மொஸ்கோ சார்பு என இரு அணிகளாக செயற்படும் நிலை ஏற்பட்டது. 1965 ஆம் ஆண்ட தேர்தல் நடைபெற்ற பொழுது இடதுசாரிக் கட்சிகளில் லங்கா சமசமாஜக் கட்சி 10 ஆசனங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி 4 ஆசனங்களையும் கம்யூனிஸ்ட் கட்சி 4 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மக்கள் விடுதலை முன்னணி (J.V.P)" 1965 ஆம் ஆண்டு மே மாதம் 20ம் திகதி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் (பிஜிங் சார்பு) வாலிப முன்னணி தலைவராக விளங்கிய றோகண விஜய வீர மக்கள் விடுதலை முன்னணி எனும் அமைப்பை உருவாக்கினார். இவ் அமைப்பு இடதுசாரிக் கொள்கைகளை தீவிரவாதத்துடன் முன்னெடுக்கும் அமைப்பாக விளங்கியது.

"ஐக்கிய முன்னணி" 1968 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன ஒரு பொதுக் கொள்கைத் திட்டத்தின் கீழ் இணைந்து ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கின இவ் ஐக்கிய முன்னணியின் சார்பிலேயே 1970ஆம் ஆண்டு தேர்தலில் அவை போட்டியிட்டன.

"1970 ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி முதல் முதலாக 2/3 பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றது." அதாவது மொத்தம் 151 ஆசனங்களில் 116ஐ அது கைப்பற்றியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 91 ஆசனங்களையும், லங்கா சமசமாஜக் கட்சி 19 ஆசனங்களையும், இலங்கை கம்யூனிசக் கட்சி 6 ஆசனங்களையும் பெற்றன. அரசாங்கம் அமைக்கப்பட்ட போது இடதுசாரிக் கட்சிகளது தலைவர்கள் அமைச்சராகவும் பதவி பெற்றனர். கலாநிதி N.M பெரேரா நிதி அமைச்சராகவும், கலாநிதி கொல்வின் R.D.சில்வா தோட்டத் தொழிற்துறை அமைச்சராகவும் மற்றும் அரசியல் விவகார அமைச்சராகவும், பீற்றர் கெனமன் வீடமைப்பு அமைச்சராகவும் பதவி ஏற்றனர்.

1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தீவிர இடதுசாரிக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (J.V.P) அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டது. இக்கிளர்ச்சி இந்திய அரசாங்கத்தின் துணையுடன் ஒடுக்கப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான றோகன விஜய வீரவிற்கு ஆயுட்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

"இடதுசாரிக் கட்சிகளுக்கிடையிலான ஐந்தாவது பிளவு" 1974 ஆம் ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டது. அதாவது அக் கட்சியிலிருந்து வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஒரு குழுவினர் வெளியேறி "நவ சமசமாஜக் கட்சி (N.S.S.P) எனும் அமைப்பினை உருவாக்கினார்.

1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்தைத் தொடர்ந்து கலவரத்தின் போது தடை செய்யப்பட்ட இடதுசாரிக் கட்சிகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கம்யூனிசக் கட்சியினதும் நவ சமசமாஜக் கட்சியினதும் தடைகள் நீக்கப்பட்டன. ஆனால் மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்து நீண்டகால தலைமறைவு இயக்கமாகவே தொழிற்பட்டது. பின்னர் அரசுக்கு எதிரான ஆயுத நடவடிக்கையிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டது. அதேவேளை ஆட்சியாளரும் மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிரான தாக்குதலில் ஈடுபட்டனர். இறுதியில் 1989 ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி மக்கள் விடுதலை முன்னனியின் தலைவரான றோகணவிஜய வீர உட்பட முக்கிய பல தலைவர்கள் படையினரால் கொலை செய்யப்பட்டனர்.

1989 ஆம் ஆண்டு அழித்தொழிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி 1994ஆம் ஆண்டு திரும்பவும் செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர்களின் உயிருடன் தப்பிய "சோமவன்ச" என்பவரே அதனை புணர் நிர்மாணம் செய்யும் பணியில் ஈடுபட்டார். 2004ஆம் ஆண்டு ஏப்ரல் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்ட J.V.P 39 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. எனினும் 2008ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி பிளவுபட்டது. அதிலிருந்து கட்சியின் பிரச்சாரச் செயலாளர் "விமல் வீரவன்ச" தலைமையிலான குழுவினர் வெளியேறி "தேசிய சுதந்திர முன்னணி" என்ற அமைப்பினை உருவாக்கினர். இவ்வாறாக 1930களின் நடுப் பகுதியில்பலமான அமைப்பாகத் தோற்றம் பெற்ற இடதுசாரியினர் பிற்பாடு "அரசியல் சார்ந்து, கருத்தியல் சார்ந்து தலைமைத்துவ போட்டிகள் சார்ந்து மற்றும் இன்னோரன்ன பல காரணிகள் சார்ந்து" பிளவுண்டதனை அவதானிக்க முடிகிறது.

எனவே இலங்கை இடதுசாரி இயக்கம் இலங்கையில் தனக்குரிய சாதகமான கால கட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டது என்ற உண்மையினை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். இத் தவறுதலுக்குரிய காரணங்களாக ட்ரொஸ்கிய தத்துவார்த்த நிலைப்பாடு நவீன திரிபுவாதப் போக்கு, மாக்சிய லெனினிஸ வாதிகளின் தவறுகள் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இத்தகைய மூன்று அடிப்படை அம்சங்களின் மூலமான விளைவாக இலங்கையின் இடதுசாரி இயக்கம் சாதனைகள், பலம் என்பனவற்றுடன் பெரும் தவறுகளையும், பலவீனத்தையும் சம்பாதித்துக் கொண்ட ஒரு நிலையே காணப்படுகின்றது.

"இலங்கையின் தற்போதையை யதார்த்த நிலையில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத எந்தவொரு இடதுசாரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கட்சியும் நேர்மையான மாக்ஸியவாத இடதுசாரிக் கட்சியெனக் கொள்ளமுடியாது, "இடதுசாரி அணியில் புதிய ஜனநாயக் கட்சியும், நவசமசமாஜக் கட்சியும் மட்டுமே தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஓரளவேனும் தத்தம் நிலைப்பாட்டிற்கமைய உறுதியாகப் பற்றி நிற்கின்றன என்று கூறப்படுகின்றது.

தொழிலாளர் வர்க்கமும், உழைக்கும் மக்களும், தேசிய இனங்களும் இளம் தலைமுறை இடதுசாரிகளிடம் நேர்மையுடனும் நம்பிக்கையுடனும் எதிர்பார்க்கின்றனர். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை இடதுசாரி இயக்கத்தின் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை சிறந்த பட்டறிவாக்கி அதனூடே சரியான படிப்பினை பெற்று மாக்சிஸ - லெனினிஸ அணியினையும், இடதுசாரி இயக்கத்தினையும் ஒளி மிகுந்த பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கு ஒவ்வொரு நேர்மையான மாக்ஸிச லெனினிஸவாதியும், இடதுசாரி சக்திகளும் உறுதியுடனும், துணிவுடனும் முன்வரல் வேண்டும். இதுவே இடதுசாரி இயக்கத்தின் எதிர்கால வளர்ச்சிக்குரிய அடிப்படை உத்தரவாதமுமாகும். எனவே இடதுசாரிக் கட்சிகளது வளர்ச்சி இலங்கைக்கு மிக முக்கியமானதும் தேவைப்பாடானதுமான ஒன்றாக காணப்படுகின்றது. அறுபதுகளுக்கு பின் படிப்படியாக சீரழிந்த நிலைக்கு இறங்கி இன்று அதன் கடைசிப்படிக்கே வந்துவிட்டனர். எனவே இடதுசாரியினர் இதனை உணர்ந்து முன்னேற்றத்தை நேக்கி நகர்தலின் அவசியத்தை விளங்கி நடந்து கொள்ளுதல் வேண்டும். அப்போது தான் இடது சாரியினர் அல்லது இடதுசாரி இயக்கம் அழிவின் பாதையில் செல்லாமல் முன்னேறிச் செல்லும் என நான் கருதுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடதுசாரிக் கட்சிகளின் பிளவுகள்




### உசாத்துணை நூல்கள்.

யோதிலிங்கம்.சி.அ,(2018), "இலங்கையில் அரசியல் கட்சி முறைமை", குமரன் புத்தக இல்லம்.

பிரசாத்.சி, (2015), "இலங்கை நிர்வாக அரசியல் சில பரிமாணங்கள், சேமமடுப திப்பகம்.

https: //maatram.org/?p=1780

https: //inioru.com/%Eo%AE%87%EO%AE%99%EO%AF

https: //www.wsws.ore/tamil/category/books/Keerthi/wije25.s

https: //samuthran.net/2017/04/28/% eo% ae% 87% eo% 62% ae



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையின் மனித உரிமைகள் வளர்ச்சியினை 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.**

சமகால சர்வதேச உலகில் இன்று மனித உரிமைகள் (Human Right) என்ற பதம் முதன் நிலைப்படுத்தி நோக்கப்படுகின்றது. மனித உரிமைகள் என்பது **"மனிதர்கள் மனிதனாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்கு கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க இயலாத, மறுக்க முடியாத சில உரிமைகள்"** ஆகும். மனிதனின் நல்வாழ்விற்கு, மனிதனின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு நவீன அரசுகளின் மனித உரிமைகளே அடிப்படையாகவும் அத்திவாரமாகவும் அமைகின்றன. இருப்பினும் நாடுகளுக்கிடையில் அல்லது நாடுகளுள் கூர்மை பெறும் இன, மத, ஆயுத முரண்பாடுகள் மனித உரிமைகளை குழிதோண்டிப் புதைக்கின்றன.

உரிமையானது மனிதனின் தோற்றத்துடனேயே உரிமையும் தோற்றம் பெற்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். பேராசிரியர் லஸ்கியின் கருத்துப்படி உரிமை என்பது ஒவ்வொரு மனிதனும் தனது ஆளுமையை சிறப்பாக வளர்ப்பதற்கு அவசியமான பொதுவான சமூக நீதிகளே என வரையறுக்கின்றார். பொதுவாக மனித உரிமைகள் தார்மீக உரிமை (Moral Right), சட்ட உரிமை (Legal Rights) என இரண்டு வகைப்படுத்தலாம்.

"அடிப்படை உரிமைகள் என்பது மனித உரிமைகளின் ஒரு பகுதியாகும்." எல்லா உரிமைகளையும் விட அடிப்படை உரிமையே (Fundamental Rights)" இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. மனித உரிமைகள் எல்லாம் அடிப்படை உரிமைகள் அல்ல. அடிப்படை உரிமையின்றி எந்த ஒரு மனிதனும் சமூக அந்தஸ்தினை பெற முடியாது. இதனால் இதனை அரசியல் அமைப்பு உரிமைகள் என்று கூறலாம்.

அடிப்படை உரிமைகள் பொதுவாக ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமாக விளங்கும் அரசியல் அமைப்பின் மூலமாகவே அடிப்படை உரிமைகள் வழங்கப்படுகின்றன. ஏனெனில் சாதாரண சட்டங்கள் மூலமாக அரசு வழங்கும் உரிமைகள் பூரண பாதுகாப்பானவை எனக் கூறமுடியாது. அரசியலமைப்பில் கூறப்பட்ட அடிப்படை உரிமைகள் நாட்டுக்கு நாடு வேறுபட்டதாக காணப்படும். எனினும் சில உரிமைகள் பொதுவாக எல்லா நாட்டு அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்தவகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மனித உரிமைகள் வளர்ச்சியினை 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதாகவே இக் கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

பல இன சமூகம் வாழும் இலங்கையானது நீண்ட காலமாக காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டதாக விளங்கியது. அதாவது 1505 - 1658 வரை போர்த்துக்கேயரும், 1658 - 1796 வரை ஒல்லாந்தரும், 1796 - 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி வரை ஆங்கிலேயரும் ஆட்சி செய்தனர். இதில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் சட்டம், சமயம் போன்ற துறைகளில் மாற்றங்களைச் செய்தனர். ஆனால் ஆங்கிலேயர்கள் மட்டுமே அரசியல் பொருளாதாரத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தினார்கள்.

இவர்கள் அரசியல் திட்ட சீர்திருத்தங்களை இலங்கையிலே முதன் முதலில் அறிமுகம் செய்தார்கள். 1833 கோல்புறுக் கமரன், 1910 குறூமக்கலம், 1921 தற்காலிக மனிங், 1924 மனிங் டிவன்சயர், 1931 டொனமூர், 1947 சோல்பரி ஆகிய அரசியற் திட்ட சீர்திருத்தங்களை முன்வைத்தார்கள். எனினும் இவ் அரசியற் திட்டங்களிலே முழுமையாக அடிப்படை உரிமைகளினை ஆங்கிலேயரால் கொண்டுவரப்படவில்லை. எனினும் ஓர் இரண்டு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

1910 ஆம் ஆண்டு குறூமக்கலம் அரசியற் திட்டத்தினூடாக இலங்கையில் முதன் முதலாக மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை கொண்டுவரப்பட்டது. அதாவது கல்வியறிவுடைய, சொத்துப்படைத்த, 21 வயது நிரம்பிய ஆண்களுக்கு மாத்திரமே வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. இலங்கை மொத்த சனத்தொகையில் 4% மக்களுக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. இவ்வாறு அடிப்படை உரிமையின் சாயல் இலங்கையில் கொண்டு வரப்பட்டது.

இதன் பின்னர் 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டத்தினூடாக பல்வேறுபட்டவர்களின் எதிர்ப்பையும் மீறி சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்து. இதன் படி 21 வயதிற்கு மேற்பட்ட இலங்கைவாழ் மக்கள் அனைவரும் இனம், மதம், மொழி, பால், சாதி வேறுபாடின்றி வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. இது ஏனைய அடிப்படை உரிமைகளுக்கு வித்திட்டதென கூறப்படுவதுண்டு. அரசியல் சுதந்திரத்திற்கு இது வித்திட்டது. சமத்துவத்திற்கான உரிமை மறைமுகமாக கெண்டுவரப்பட்டது.

1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் திட்டத்தினூடாக, அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகள் உட்புகுத்தப்படல் வேண்டும் என்ற கோரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கப்பட்டது. ஆனால் இது வரைபுக்குழுவின் தலைவராக இருந்த சேர் ஐவர்ஜெனிங்ஸால் முற்றாக நிராகரிக்கப்பட்டது. இதற்கு காரணம் இலங்கையர்கள் மனித நாகரிகம் தெரிந்தவர்கள், போதிய கல்வியறிவுடையவர்கள் எனவே இவர்களுக்கு இவை இவைதான் அடிப்படை உரிமைகள் என பட்டியலப்படுத்த தேவையில்லை எனக் குறிப்பட்டு கோரிக்கையினை நிராகரித்தார். எனினும் சமத்துவத்திற்கான உரிமைகள் இச் சீர்திருத்தத்தில் வலியுறுத்தப்பட்டன. அதாவது சிறுபாண்மையினர் காப்பீடுகள் கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அரசியல் சீர்திருத்தங்களில் அடிப்படை உரிமைகள் துளிர்விடத் தொடங்கியிருந்தாலும் சுதந்திரத்திற்கு பின்னரான 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்களிலே அடிப்படை உரிமைகள் அத்தியாயம் கொண்டுவரப்பட்டது. அந்தவகையில் முதலாவதாக, 1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் பற்றி இங்கு விரிவாக நோக்குவது பொருத்தமுடையதாக இருக்கும்.

"முதலாம் குடியரசு அரசியலமைப்பு 1972 மே மாதம் 22ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது" அத்தினமே இலங்கையின் குடியரசு தினமாகும். இவ் அரசியலமைப்பிலேயே முதன் முதலாக அடிப்படை உரிமைகள் என்ற பகுதி சேர்க்கப்பட்டது. இதற்கு முன்னர் தோன்றிய எந்த ஒரு அரசியல் திட்டதிலும் அடிப்படை உரிமைகள் என்ற பகுதி சேர்க்கப்படவில்லை என்ற பாரிய குறை காணப்பட்டது. அதனை நீக்கும் வகையில் 1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியல் திட்டத்தில் 18 ஆம் சரத்தின் (1) ஆம் பிரிவு அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் எடுத்துரைக்கின்றது. அந்த வகையில் பின்வரும் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமனானவர்கள் அத்துடன் சட்டத்தின் மூலம், கிடைக்கும் சமமான பாதுகாப்பிற்கும் உரித்துடையவர்கள், சட்டத்தின் பிரகாரம் அன்றி ஆள் எவரும் அவரது உயிரையோ சுதந்திரத்தையோ சொந்த பாதுகாப்பினையோ இழத்தல் ஆகாது, சட்டத்தின் பிரகாரமாகவன்றி எவரும் கைது செய்யப்படவோ கட்டுக்காவலில் வைக்கப்படவோ, சிறையில் இடப்படவோ, தடுத்து வைக்கப்படவோ கூடாது. ஒவ்வொரு பிரஜைகளுக்கும் சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியின் படி பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பன உண்டு. இந்த உரிமை எந்த ஒரு சமயத்தை போதிக்கவும், பின்பற்றுவதற்கும் உள்ள உரிமையை உள்ளடக்குகின்றது, தனது சொந்த கலாசாரத்தை அனுசரிக்கவும் அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவும் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமை உண்டு, பிரஜைகள் ஒவ்வெருவருக்கும் அமைதியான முறையில் ஒன்று கூடும் உரிமை உண்டு. பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் பேச்சு சுதந்திரம், கருத்து வெளிப்பாடு, வெளியீட்டு உரிமை உண்டு, பிரஜைகள் எவருக்கும் அரசாங்க உள்ளூராட்சி கூட்டுத்தாபனம் சேவையில் பதவி பெறும் தகுதியானவர்களுக்கு இனம், மதம், சாதி, பால் ஆகிய காரணமாக பாரபட்சம் காட்டக் கூடாது எனினும் அத்தகைய சேவைகளின் நலன் கருதி குறிப்பிட்ட பதவிகள் ஆண்களுக்கு அல்லது பெண்களுக்கு வழங்கப்படலாம். இலங்கை முழுவதும் தடையின்றி பிரயாணம் செய்வதற்கும் நான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்கும் சுதந்திரம் ஒவ்வொரு பிரஜைக்கும் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட உரிமைகள் இலங்கை பிரஜைகள் எல்லோருக்கும் உண்டு. இவற்றை மீறுபவர் சட்டத்தின் முன் தண்டனைக்குள்ளாவார். அடிப்படை உரிமைகள் பற்றி இவ்வாறு கூறப்பட்ட போதும் 6ஆவது அத்தியாயத்தின் 18ஆம் சரத்தின் 2ஆம் பிரிவு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பான மட்டுப்பாடுகள் பற்றி குறிப்பிட்டிருந்தது. இதன்படி "தேசிய ஒற்றுமையும், மேன்மையும், தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம், பொதுப் பாதுகாப்பு, பொது சுகாதாரத்தை பாதுகாத்தல், அரச கொள்கையின் தத்துவங்களை நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் நலனை முன்னிட்டு அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் கட்டுப்படுத்தப்படலாம்" எனக் கூறப்பட்டது. இத்தகைய சரத்து "பூச்சுற்றுகின்ற சரத்து" எனக் கண்டிக்கப்படுகின்றது.

அந்தவகையில் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பான பலம் மற்றும் பலவீனங்கள் ஆராயப்பட வேண்டியது அவசியமாகும். 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் இலங்கை அரசியல் வரலாற்றில் முதன் முதலாக மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் பல இங்கு சேர்க்கப்பட்டுள்ளமை, அரசாங்கத் துறைகளில் இன, மத, பிரதேச, சமூக அரசியல் ரீதியாக பாரபட்சம் ஏற்படுவதை அது தடுக்கின்றமை, அவசர கால நிலைகளின் போது தேசிய நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் போன்றவை இவ் அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் உள்ளடக்கப்பட்டதன் சிறப்பியல்புகள் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலங்கள் ஆகும். எனினும் பலவீனங்களாக பின்வருவனவற்றினை அடையாளப்படுத்தப்பட முடியும்.

"அடிப்படை உரிமைகள் சம்மந்தமான மட்டுப்பாடுகள் அடிப்படை உரிமைகள் கூறப்பட்டுள்ளவற்றையே கேலிக்குள்ளாக்குகின்ற ஒன்றாகவே உள்ளது." அரசாங்கம் அதனை சாட்டாக வைத்து பிரஜைகளின் உரிமைகளில் தலையிடுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டது. இதன் மூலம் அரசாங்கம் சர்வதிகார ஆட்சியை நடாத்துவதற்கு வாய்ப்புக்கள் உள்ளது. நடைமுறையிலும் இதுவே நடந்தது. இவ் அரசியல் திட்டம் அமுலில் இருந்த பெரும்பாலான காலப்பகுதி முழுவதும் அவசரகால சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமையினால் அடிப்படை உரிமைகளை அனுபவிக்க கூடிய வாய்ப்பு பிரஜைகளுக்கு இருக்கவில்லை. குறிப்பாக தமிழ் சமூகமே மோசமாக பாதிக்கப்பட்டது.

அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் சம்பந்தமான ஏற்பாடுகள் இலங்கைப் பிரஜைகளுக்கு மட்டுமே பொருந்தும் எனக் கூறப்பட்டிருந்தது. இது அன்றைய கால கட்டத்தில் இலங்கை பிரஜாவுரிமை இல்லாது நாடற்றவர்களாக இருந்த லட்சக்கணக்கான இந்திய வம்சாவழி மக்கள் அடிப்படை உரிமைகளையும், சுதந்திரங்களையும் அனுபவிப்பதை தடை செய்திருந்தது.

அடிப்படை உரிமைகள் சம்பந்தமான ஏற்பாடுகளை சிறிய வசனங்களினூடாக முழுவதையும் வெளிப்படுத்துவதற்கு பதிலாக இங்கு நீட்டி விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அரசியலமைப்பும் சேவியத் யூனியன் அரசியலமைப்பும் சிறிய வசனங்களினூடாகவே பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை வெளிப்படுத்தியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மக்களுக்குள்ள உரிமைகளில் சிலவற்றை மாத்திரம் குறிப்பிட்டுவிட்டு ஏனையவை குறிக்கப்படாமல் விடப்படுகின்ற போது ஏனைய உரிமைகள் மக்களுக்கு இல்லையா? என்கின்ற சந்தேகம் எழுகின்றது. உதாரணமாக தொழிற்சங்கம் அமைப்பதற்குரிய உரிமை, உயிர் வாழ்வதற்கான உரிமை, தனிப்பட்ட சொத்துக்கள் சேர்த்து வைப்பதற்கான உரிமை என்பன இங்கு கூறப்படவில்லை. ஆகவே ஒரு குறிப்பிட்ட பொருளாதாரக் கோட்பாட்டினை அரசியல் திட்டம் ஆக்கும் முயற்சியாக இவை அமைந்துள்ளதென ஐக்கிய தேசிய கட்சி குற்றஞ்சாட்டியது.

இவ் அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் நிவாரணம் பெறுவதற்கு எந்தவொரு வழிவகையுமே கூறப்படவில்லை. மாறாக ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது கைகட்டி வேடிக்கை பார்க்க வேண்டிய துரதிஸ்ட வசமான நிலையில் நிறுத்தப்பட்டார்கள். மாறாக தட்டிக் கேட்க நீதிமன்றம் சென்று நிவாரணம் பெற அல்லது உரிமையைப் பறித்தவர்களுக்கு தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய வழிவகைகள் கூறப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறாக பல்வேறுபட்ட தடங்களுக்குள் சிறைப்பிடிக்கப்பட்ட வகையிலேயே 1972 அரசியல் திட்டத்தில் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் கூறப்பட்டிருந்தன. பல மட்டுப்பாடுகளையும் குறைபாடுகளையும் கொண்டிருந்த காரணத்தினால் இவ் அத்தியாயம் விமர்சனத்திற்குரிய ஒரு அத்தியாயமாக இருந்தது. இந்தவகையிலே 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பு தோற்றம் பெற்ற சில முற்போக்கான விடயங்கள் உள்வாங்கப்பட்டு நீதிமன்றத்தில் நிவாரணம் பெறும் முறைகளும் கூறப்பட்டன.

அந்தவகையில் அடுத்ததாக 1978 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு யாப்பின் அடிப்படை உரிமைகள் பற்றி விரிவாக நோக்குவது இங்கு பொருத்தமுடையதாக இருக்கும்.

இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது "இது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு என்றே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது." முதலாம் குடியரசு யாப்பின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக இவ் யாப்பு கொண்டுவரப்பட்டது. இதுவே தற்போதும் 20 சீர்திருத்தங்களை மேற்கொண்ட நிலையில் காணப்படுகின்றது. 1972 ஆம் ஆண்டு அரசியல் திட்டத்தில் காணப்பட்ட அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகள் போல இவ் அரசியல் திட்டத்திலும் அடிப்படை உரிமைகள் தொடர்பான பல ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டிருந்தன. இதை விட 1972 ஆம் ஆண்டு அரசியல் திட்டத்தில் அடிப்படை உரிமைகளின் பிரயோகம் இலங்கை பிரஜைகளுக்கு மட்டுமே இருக்கும் என கூறப்பட்டது. இதனால் அக்காலத்தில் நாடற்றவர்களாக இருந்த இந்திய வம்சாவழி மக்கள் அடிப்படை உரிமைகளின் பயன்களை அனுபவிக்க முடியாத நிலையில் இருந்தனர். இவ் அரசியல் திட்டத்தில் அந்நிலை நீக்கப்பட்டு, அரசியல் திட்டம் அமுலாக்கப்பட்ட திகதியில் இருந்து 10 வருட காலத்திற்கு இலங்கை பிரஜைகள் அல்லாத நாடற்றவர்களும் அடிப்படை உரிமைகளின் பிரயோகத்திற்கு உட்படுவார்கள் என கூறப்பட்டுள்ளது.

மேலும் அரசியல் திட்டத்தில் அடிப்படை உரிமைகளின் மீறல்களுக்கு உள்ளானவர் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் அதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிகாரத்தினை பெற்றுக் கொள்ளலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. உறுப்புரை 126 இன் படி அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை ஆட்சித் துறை நடவடிக்கையினால் அல்லது நிர்வாக நடவடிக்கையினால் மீறப்படும் போது மீறலுக்கு உள்ளானவர் ஒரு மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும். உயர் நீதிமன்றம் இரண்டு மாதங்களுக்குள் தீர்ப்பினை வழங்கும்.

1978 ஆம் ஆண்டு அரசியல் திட்டத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் அரசியல் யாப்பின் III ஆம் அத்தியாயத்தில் உறுப்புரை 10 தொடக்கம் 14 வரை அடிப்படை உரிமைகள் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு காணப்படுகின்றன.

இலங்கை பிரஜைகள் அனைவருக்கும் சிந்தனை செய்யும் உரிமை, மதச் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம் என்பன உண்டு (உறுப்புரை - 10), ஆள் எவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற தண்டனைக்கோ அல்லது நடத்தைக்கோ உட்படாமல் இருப்பதற்கான சுதந்திரம் (உறுப்புரை - 11), சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கு சம உரித்துடையவர்கள் (உறுப்புரை - 12(1), இனம், மதம், மொழி, சாதி, பால்நிலை, அரசியற் கருத்து அல்லது பிறப்பிடம் காரணமாக எவரும் பாரபட்சமாக நடத்தப்படக் கூடாது. எனினும் நியாயமான ஒரு காலப்பகுதியில் பொதுநீதி, உள்ளூராட்சி, கூட்டுத்தாபன சேவையில் இருக்கும் எவரையும் எந்த ஒரு மொழியிலும் போதிய அறிவைப் பெற வேண்டுமென கோருவது சட்டபூர்வமானதாகும். (உறுப்புரை - 12(2)), எந்த ஆளும் இனம், மதம், மொழி, சாதி, பால் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களில் எந்தவொரு காரணமாகவும் கடைகள், பொதுவுணவுச்சாலைகள், விடுதிகள், பொதுக்களியாட்ட இடங்கள், தனது மதத்திற்குரிய பொது வழிபாட்டிடங்கள் என்பவற்றிற்கு செல்லுதல் தொடர்பில் ஏதேனும் தகுதியீனத்திற்கு, பொறுப்பிற்கு மட்டுப்பாட்டிற்கு அல்லது நிபந்தனைக்கு உட்படக்கூடாது. (உறுப்புரை - 12(3)), ஆனால் பெண்கள், குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக சிறப்பேற்பாடுகளைச் செய்ய முடியும். (உறுப்புரை - 12(3),(4))

சட்டத்திற்கு முரணாக எவரும் கைது செய்யப்படலாகாது, கைது செய்யப்படும் போது அதற்கான காரணம் அறிவிக்கப்பட வேண்டும். (உறுப்புரை - 13(11)), கைது செய்யப்படும் ஆள் எவரும் சட்டத்திற்கமைய நீதிமன்றத்தின் நீதிபதி முன்னால் கொண்டுவரப்படுதல் வேண்டும், தொடர்ந்து தடுத்து வைக்கப்படின் நீதிபதியின் கட்டளைப்படியே அவ்வாறு செய்ய முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உறுப்புரை - 13,(2)), குற்றஞ்சாட்டப்பட்ட எவரேனும் நியாயமான வழக்கு விசாரணைக்கு உரித்துடையவர் (உறுப்புரை - 13(3)), நீதிமன்ற கட்டளையின்றி சிறைவைக்கப்படவோ மரண தண்டனை வழங்கப்படவோ முடியாது. புலனாய்வு அல்லது விசாரணை முடிவுறும் வரையில் ஆளொருவரைக் கைது செய்து வைத்திருத்தல், கட்டுக்காவலில் வைத்திருத்தல் அல்லது அவரது சொந்த சுதந்திரத்தினை வேறுவகையில் பறித்தல் தண்டனையாக அமையாது. (உறுப்புரை - 13(4)), குற்றவாளியென நிரூபிக்கப்படும் வரை ஆள் ஒவ்வொருவரும் சுற்றவாளியென ஊகிக்கப்படுத்தல் வேண்டும் (உறுப்புரை 13(5)), புரியப்பட்ட நேரத்தில் தவறு ஒன்றாக இருந்திராத ஏதேனும் செயலுக்குப் பின்னர் ஒரு குற்றமாகக் கருதி தண்டனை வழங்க முடியாது (உறுப்புரை - 13(6)).

பேச்சுச் சுதந்திரம், வெளியீட்டு சுதந்திரம், கருத்து தெரிவிக்கும் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், ஒருங்கு சேருவதற்கான சுதந்திரம், தொழிற்சங்கம் ஒன்றினை அமைப்பதற்கான சுதந்திரம், தொழிற்சங்கம் ஒன்றில் சேர்வதற்கான சுதந்திரம், தனியாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து வழிபடும் சுதந்திரமும், வழிபாட்டை வெளியிடும் சுதந்திரமும், வழிபாட்டை போதனை செய்யும் சுதந்திரமும் உண்டு, சொந்தக் கலாசாரத்தினை அனுபவிக்கும் சுதந்திரம், சொந்த மொழியினை பயன்படுத்தும் சுதந்திரம், சட்டரீதியான தொழிலில் ஈடுபடும் சுதந்திரம், இலங்கை முழவதும் தடையின்றி நடமாடுவதற்கான சுதந்திரம், இலங்கையில் தாம் விரும்பும் இடத்தில் சென்று வசிப்பதற்கான சுதந்திரம், வெளிநாடுகளுக்குச் செல்லவும் பின் இலங்கைக்கு திரும்பி வரவும் உள்ள சுதந்திரம் (உறுப்புரை - 14 (1)), வேறுநாட்டில் பிரஜையாக இல்லாதிருப்பவரும், இவ்வரசியலமைப்பு தொடங்குவதற்கு முன்னர் இலங்கையில் நிரந்தரமாகவும் சட்டப்படியும் வதிவிலிருப்பவரும் அரசியலமைப்பு தொடங்கியதிலிருந்து 10 ஆண்டுகளுக்கு அடிப்படை உரிமைகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும் (உறுப்புரை - 14(2)).

மேற்கூறியவாறு அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் அரசியல் யாப்பில் காணப்பட்ட போதும் தேசிய பாதுகாப்பு, இனச் சுமூக வாழ்வு, மதச் சுமூக வாழ்வு, பாராளுமன்ற சிறப்புரிமையைப் பேணுதல், நீதிமன்ற அவமதிப்பு, மானநட்டம், தவறு புரியத் தூண்டுதல், தேசிய பொருளாதாரத்தை பாதுகாத்தல், பொதுமக்கள் சுகாதாரத்தை ஒழுங்கை பாதுகாத்தல், பொதுமக்கள் ஒழுங்கிணைப் பேணுதல், உரிமைகள் சுதந்திரத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்தல் என்பவற்றின் நலன் கருதி அவசரகாலச் சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமைகள் மட்டுப்படுத்தப்படலாம் (உறுப்புரை - 15). 16 ஆவது உறுப்புரை ஏற்கனவே எழுத்திலுள்ள சட்டங்கள் எழுத்தில் இல்லாச் சட்டங்கள் அனைத்தும் மேற்கூறிய அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகாதனவாக இருப்பினும் அவை செல்லுபடியாகும் எனவும் கூறப்பட்டுள்ளது.

எனவே மேற்கூறிய மட்டுப்பாடுகளைக் கொண்டிருந்த போதிலும் இவ் அடிப்படை உரிமைகள் சம்பந்தமான ஏற்பாடுகள் மிகவும் பரந்தளவிலான சுதந்திரத்தினையும் விடுதலையையும் மக்களுக்கு வழங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக பிரஜை ஒருவரின் அடிப்படை உரிமையானது ஆட்சித்துறை நடவடிக்கையின் மூலமாகவோ அல்லது நிர்வாக நடவடிக்கையின் மூலமாகவோ மீறப்படுமானால் அந்தப் பிரஜை உயர்நீதிமன்றத்தின் பாதுகாப்பைக் கோரி உரிமையைப் பெறுவதற்கான உரிமையுடையவர் எனக் கூறுகின்றது (உறுப்புரை-17). இது இலங்கையின் மனித உரிமைகள் வளர்ச்சியினை எடுத்துக் கூறுவதாக காணப்படுகின்றது.

இலங்கை அரசு மேற்கொண்ட சர்வதேச ஒப்பந்தத்தின் படி "இலங்கை நீதிமன்றத்தின் தீர்ப்பில் அதிருப்த்தி உள்ளவர்கள் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவைக்கு விண்ணப்பிப்பதன் மூலம் நீதியைப் பெற்றுக் கொள்ளலாம்." மேலும் அடிப்படை உரிமைகளின் பயன்பாட்டினை உரிமை தொடர்பாக இலங்கை மேற்கொண்ட சர்வதேச ஒப்பந்தங்கள் குறிப்பாக குடியியல் அரசியல் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம், சிறுவர் உரிமை தொடர்பான ஒப்பந்தம், சித்திரவதை தொடர்பான ஒப்பந்தம் என்பவற்றுடன் மனிதவுரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகளுடனும் இணைத்துப் பார்க்கின்ற போது உரிமைகளை பேணுவதற்கான செயற்பாடுகள் பரந்த அளவில் இருப்பதனை அவதானிக்கலாம். இது இலங்கையின் மனித உரிமையின் வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகின்றது.

எனவே எது எவ்வாறாக காணப்படினும் 1978 ஆம் ஆண்டு யாப்பில் அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் வளர்ச்சியடைந்து காணப்படினும் பலங்களை விட பலவீனங்களே அதிகமாக காணப்படுகின்றது என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். அந்தவகையில் பலங்களாக, இந்திய வம்சாவளி மக்களுக்கும் அடிப்படை உரிமைகளின் பயன்பாட்டினை பெற்றுக் கொள்ள வழி செய்தது, அடிப்படை உரிமை மீறல்களுக்கு உள்ளானவர்கள் உயர்நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து பரிகாரத்தினை பெற்றுக் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகைகள் இங்கு முதன் முறையாக விளாவாரியாக, தெளிவாக கூறப்பட்டுள்ளது, முக்கியமான அடிப்படை உரிமைகள் எழுத்து வடிவில் இருக்கின்றமையானது மக்கள் அதனை சுதந்திரமாக அனுபவிப்பதற்கான வாய்ப்புக்களை கொடுத்துள்ளது, அடிப்படை உரிமைகள் சம்பந்தமான ஏற்பாடுகளாக ஒம்பூட்ஸ்மன், நீதித்துறைகளின் சுதந்திரம் போன்றன விரிவாக்கப்பட்டுள்ளது, இலங்கை மேற்கொண்ட சர்வதேச ஒப்பந்தங்கள் அடிப்படை உரிமைகளுக்கு வலுவினைச் சேர்த்துள்ளன போன்றன காணப்படுகின்றன.

பலவீனங்களாக, நாட்டின் நலன், பாதுகாப்பு என்பவற்றினைக் கருத்தில் கொண்டு அடிப்படை உரிமைகளில் மட்டுப்பாடுகள் காணப்படுகின்றது. இவ் யாப்பு குறித்த சில உரிமைகளை அடிப்படை உரிமைகளாக கூறிவிட்டு ஏனைய முக்கிய சில உரிமைகளை குறிப்பிடாது விட்டமை. உதாரணமாக உயிர் வாழ்வதற்கான உரிமை, கல்வி கற்பதற்கான உரிமை போன்றன நேரடியாக கூறப்படாமை. இவைகள் அடிப்படை உரிமைகள் இல்லையா? என்ற கேள்வியினை எழுப்புகின்றது. உரிமை மீறல் ஏற்படும் போது நிறுவனமோ குழுவோ பொது நிவாரணம் தேட முடியாமை, உரிமை மீறல் சம்பவம் நிகழ்ந்து ஒரு மாத கால இடைவெளிக்குள் நிவாரணம் தேடப்பட வேண்டும் என அரசியலமைப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இக்கால எல்லை நீடிக்கப்பட முடியாமை ஒரு முக்கிய குறைபாடாகும். இங்கே நிர்வாகத் துறையில் அடிப்படை உரிமை மீறல்களை மேற்கொள்பவர்கள் நிர்வாகக் கட்டமைப்புக்குள் இருப்பதனால் பலமானவர்களாகவும் மாறாக உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் தனி நபர்களாக இருப்பதனால் பலவீனமானவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்நிலையில் ஒரு மாத கால எல்லையானது பலவீனமானவர்களை மேலும் பாதிப்பதாக அமைகிறது, தனியார் நிறுவனங்கள் உரிமை மீறலுக்கு நிவாரணம் பெறமுடியாமை குறைபாடாகவுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியன மக்களின் அடிப்படை உரிமைகளினை மட்டுப்படுத்துவதோடு கேள்விக்குள்ளாக்குகின்றது, சரத்துக்களில் மயக்கநிலை காணப்படுதல். உதாரணமாக அனுமதியான முறையில் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் எனக் குறிப்பிட்டு இருப்பது ஒரு குழப்பத்தினை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது, சட்டமா அதிபர் திணைக்களத்தை சார்ந்தவர்கள் அடிப்படை உரிமைகளை மீறுவோரின் சார்பில் ஆஜராகி வாதாடுவதானது அடிப்படை உரிமைகளை மேலும் மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டுவதாக அமைவதோடு அரசாங்கம் மக்களின் உரிமைகளை பேணி பாதுகாக்காமையும் பாரிய குறைபாடுகளாக காணப்படுகின்றது.

1978 ஆம் ஆண்டு 22ஆம் 23ஆம்சரத்துக்களுக்கு பதிலாக 1988ஆம் ஆண்டு 16ஆவது திருத்தத்தினூடாக பின்வரும் சரத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. சிங்களமும், தமிழும் இலங்கை முழுவதற்குமான நிர்வாக மொழிகளாகும் (22(1)), "எல்லாச் சட்டங்களும் துணைச்சட்டங்களும் சிங்களம் தமிழ் என்ற மொழிகளில் உருவாக்கப்பட்டு பிரசுரிக்கப்படுவதோடு ஆங்கில மொழி பெயர்ப்பொன்றும் இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (23(1)), இது சிறுபான்மையினத்தவர்களுக்கான மொழி ரீதியான சமத்துவ உரிமையினை பெற்றுக் கொடுப்பதாக அமைந்தது.

20 ஆவது யாப்புத் திருத்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் ஜனாதிபதியின் அதிகாரம் அதாவது நிறைவேற்றுத்துறையின் அதிகாரம் இயல்பாகவே அதிகரித்து விட்டது. இவ் அதிகரிப்பு அடிப்படை உரிமைகளையும் பலவீனப்படுத்துவதாக காணப்படுகின்றது. மேலும் இவ் யாப்புத் திருத்தத்தில் இரட்டை பிரஜாவுரிமை என்ற அம்சமும் சேர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக இலங்கையானது, காலனித்துவ ஆட்சிக்காலத்திலிருந்து தற்போது வரை அடிப்படை உரிமைகள் பற்றிய கோசங்களினை எழுப்பி பல்வேறு அரசியல் சீர்திருத்தங்கள் மூலமாக தமது அடிப்படை உரிமைகளை பெற்றுள்ளனர். 1978 ஆம் ஆண்டு 2ஆம் குடியரசு அரசியல் யாப்பின் அத்தியாயம் III உறுப்புரை 10-14 ஊடாக அடிப்படை உரிமைகள் குறிப்பிட்டு அதற்கான காப்பீடுகளும் வழங்கப்பட்டாலும் அவசரகால விதிகளும் பயங்கரவாதச் சட்டங்களும் இலங்கையின் ஜனநாயகம், அடிப்படை உரிமைகளை குழிதோண்டிப் புதைப்பவையாகவும் காணப்படுகின்றன.

மேலும் 1978 ஆம் ஆண்டு யாப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகள் காரணமாகவும், மனித ரீதியிலான பரவலாக்கமின்மை, மனித உரிமைகளை பாதுகாக்கும் நிறுவனங்களின் சுறுசுறுப்பற்ற தன்மை, சர்வதேச குற்றங்களை எதிர்கொள்வதற்கு இலங்கையில் உள்ளூர் சட்ட வேலைப்பாட்டில் போதுமற்ற தன்மை போன்ற பல்வேறுபட்ட காரணங்களினால் இலங்கையில் சாதாரணமாக அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக, இனவொதுக்கல் குற்றங்கள், அமைதிக்கு எதிரான குற்றங்கள், சாதாரணமாக கடத்தல் செயற்பாடுகள், காணாமல் போதல், கட்டாய ஆள் சேர்ப்பு, கூட்டுத் தண்டனை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்படுகொலைகள் என்கின்ற பல்வேறு விதமான மனித உரிமை மீறல்கள் இலங்கையில் நடைபெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே இலங்கையின் அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளில் சிறப்புத் தன்மை உள்ளது போலவே குறைபாடுகளும் காணப்படுகின்றது. இதனால் தற்போது புதிய அரசியல் யாப்புப் பற்றிய கோசங்களும் பேச்சுக்களுமே அதிகளவாகக் காணப்படுகின்றது. எது எவ்வாறாக இருப்பினும் 1978 ஆம் ஆண்டு குறிப்பிடப்பட்ட அம்சங்களே தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ள அடிப்படை உரிமைகளாகக் காணப்படுகின்றது எனலாம்.

இலங்கையானது பல்வேறு மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச அமைப்புக்களிலும் மனித உரிமைகள் தொடர்பான சமவாயங்களிலும் உறுப்பு நாடாக காணப்படினும் இலங்கையின் மனித உரிமையின் வளர்ச்சி என்பது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, சுவிஸ்லாந்து போன்ற நாடுகளினை விட மிகவும் பின் தங்கிய நிலையிலும், மனித உரிமைகள் மிகவும் மோசமான வகையில் சவாலுக்கு உட்படுத்தப்படக் கூடிய வகையில் காணப்படுகின்றது என்பது என்னுடைய வாதமாகும்.

## உசாத்துணை நூல்கள்

திருச்செந்தூரன்.சி,(2011), "இலங்கையில் அடிப்படை உரிமைகள்: ஓர் அறிமுகம்", குமரன் புத்தக இல்லம்.

புஸ்பராசா.ந, (2021), "மனித உரிமைகள் கோட்பாடும் நடைமுறையும்", குமரன் புத்தக இல்லம்.

யோதிலிங்கம்.அ.சி, (2019), "இலங்கையின் அரசியல் யாப்புக்கள்", குமரன் புத்தக இல்லம்.

றயீத்தீன்.மு,(2021), "இலங்கையின் அரசியல் முறைமை", முசலி இளைஞர் ஒன்றியம், சிலாவத்துறை.

சிவராஜா.அ, (2006) , "இலங்கை அரசியல்", குமரன் புத்தக இல்லம்.

திருநாவுக்கரசு.மு, (1994), "ஜேயாரால், ஜேயாருக்காக, ஜேயாருடைய", தமிழ்த்தாய் வெளியீட்டகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணரத்தினம்.வே, (2008), “இலங்கை அரசியற்திட்டங்களின் பரிணாம வளர்ச்சி, குமரன் புத்தக இல்லம்.

அமிர்தின்.வி, (2003), “மனித உரிமைகள் ஓர் அறிமுகம்”, தகவல் நலன்புரி அமைப்பு, பேராதனை.

பிரசாத்.சி, (2016), “இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு 1978”, தாயகம் பதிப்பகம்.

திருச்செல்வன்.நீ, (1996), “சனநாயகமும் மனித உரிமைகளும்”, இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையம், கொழும்பு.

பாராளுமன்ற செயலகம், (1972), “இலங்கை ஜனநாயக ஆசாசலிச குடியரசின் அரசியலமைப்பு 1972”, இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.

பாராளுமன்ற செயலகம்,(1978), “இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு 1978”, இலங்கை அரசாங்க அச்சு திணைக்களம்.

ரவீற்திரன்.து.னு, (2008), “மனித உரிமைகள் நடைமுறை, கற்கை, செயற்பாடு மற்றும் சிந்தனைக்கான அறிவுக் களஞ்சியம்”, மனித உரிமைகள் ஆய்வு மையம்.

யோதிலிங்கம்.அ.சி,(லே.லு), “இரண்டாவது குடியரசு யாப்பும் (1978) தமிழ் மக்களும்” - அரசியல் சிந்தனை நூல்வரிசை - 24, சமூக விஞ்ஞான ஆய்வு மையம்.

சிறிதரன்.வு, (2004), :இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டமும் மனித உரிமைகளும்” - அரசறிவியலாளன் இதழ் - 01, அரசறிவியல் ஒன்றியம், அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமகால இலங்கையின் அரசியல் பொருளதார நெருக்கடிக்கான அடிக்கட்டுமானத்தையும் (Base), மேல்கட்டுமானத்தையும் (Super Structure) மார்க்சிஸ மரபுகளுக்கு ஊடாக ஆராய்க.

நவீன அரசியல் சிந்தனை வரலாற்றில் கால்மாக்ஸ் (Karl Marx) மிகவும் முக்கியமானவராக குறிப்பிடப்படுகின்றார். "இவர் மார்க்சிய கருத்தியலின் குறியீடாகவும் அதன் ஸ்தாபகராகவும் கருதப்படுகின்றார்." மார்க்சிய சிந்தனையானது காலத்திற்கு காலம் புது பொழிவு பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகவும் மார்க்ஸ் (Karl Marx) அரசியல் பொருளாதாரம் என்ற கட்டுரையில் அடிக்கட்டுமானம் (Base), மேற்கட்டுமானம் (Super Structure) என்ற இரண்டு இணைக்கப்பட்ட கோட்பாட்டுக் கருத்துக்களை முன்வைத்துள்ளார். மேலும் கிராம்சி **"மரபுவழி மார்க்சியத்தில் இரட்டைத் திருப்பங்களைச் செய்தவர்"** அவரது சிந்தனைகள் அரசு பற்றிய புதிய நோக்கு முறையினை மார்க்சியத்தில் புகுத்தியது. அடுத்து **"மேற்கட்டுமானம் பற்றிய கோட்பாட்டைத் தந்து மார்க்சியத்தை செழுமைப்படுத்தியவர் அல்தூசர்."** அவர் அமைப்பியல் வாத சிந்தனையை மார்க்சியத்துடன் இணைத்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் சமகால இலங்கையின் அரசியல், பொருளாதார நெருக்கடிக்கான அடிக்கட்டுமானத்தையும் (Base), மேல் கட்டுமானத்தையும் (Super Structure) மார்க்சிய மரபுகளுக்கு ஊடாக மதிப்பீடு செய்வதாக இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

அந்தவகையில் முதலில் அடிக்கட்டுமானம் மேற்கட்டுமானம் தொடர்பாக ஆராய்வது பொருத்த முடையதாக இருக்கும் என நான் நினைக்கின்றேன். அடிப்படை (base) மேற்கட்டுமானம் என்பது சமூகவியலின் நிறுவனங்களில் ஒருவரான கால்மாக்ஸால் உருவாக்கப்பட்ட இரண்டு இணைக்கப்பட்ட கோட்பாட்டுக் கருத்துக்கள். அடித்தளம் என்பது உற்பத்தி சக்திகள் அல்லது பொருட்கள் மற்றும் வளங்களைக் குறிக்கின்றது. அவை சமூதாயத்திற்குத் தேவையான பொருட்களை உருவாக்குகின்றன. சமூகத்தின் மற்ற அனைத்து அம்சங்களையும் மேல்கட்டுமானம் குறிக்கின்றது. சமூகத்தின் மேற்கட்டுமானத்தில் மக்கள் வாழும் கலாச்சாரம், சித்தாந்தம், விதிமுறைகள், அடையாளங்கள் ஆகியவை அடங்கும். கூடுதலாக இது சமூக நிறுவனங்கள், அரசியல் கட்டமைப்பு, அரசு அல்லது சமூகத்தின் ஆளும் கருவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றைக் குறிக்கின்றது. மேற்கட்டுமானம் அடித்தளத்திலிருந்து வளர்ந்து ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலிக்கின்றது என மார்க்ஸ் வாதிட்டார். எனவே மேற்கட்டுமானம் அடித்தளத்தை எவ்வாறு இயக்குகின்றது மற்றும் உயரடுக்கின் அதிகாரத்தைப் பாதுகாக்கின்றது என்பதை நியாயப்படுத்துகின்றது.

உற்பத்தி உறவுகளின் கூட்டு மொத்தமே சமூகத்தின் பொருளாதார அமைப்பாக, அதன் உண்மையான அடித்தளமாக அமைகின்றது. இதன் மீது சட்டம், அரசியல் என்ற மேற்கட்டமைப்பு எழுப்பப்பட்டு, அதனோடு பொருந்தக் கூடிய சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவங்களும் உருவாகின்றன. பொருளாதய வாழ்க்கையின் உற்பத்தி முறை சமூக, அரசியல், அறிவுத்துறை வாழ்வின் பொதுவான போக்கை நிர்ணயிக்கின்றது. மனிதர்களுடைய உணர்வு நிலை அவர்களுடைய வாழ்வு நிலையை நிர்ணயிப்பதில்லை. அவர்களுடைய சமூக வாழ் நிலையே அவர்களுடைய வாழ்வு நிலையை நிர்ணயிக்கின்றது என்றார் கால் மார்க்ஸ்.

அடுத்து மரபுரீதியான மார்க்சியத்தின் முதலாளித்துவ வளர்ச்சி பற்றிய விஞ்ஞான ரீதியான விதிகளையும் அது முன்வைக்கும் புறவய சக்திகள் என்ற கருத்தாக்கத்தையும் விமர்சித்து அதற்கு மாற்றான கொள்கைகளை “கிராம்சி” முன்வைத்தார். மார்க்சிய சிந்தனையின் படி, பொருளாதாரத்தை அடித்தளம் எனக் கொண்டால், அதன் மீது கிராம்சியின் கருத்துப்படி, இருவகை மேல்கட்டுமானங்கள் கட்டப்படுகின்றன. ஒன்று நாம் ஏற்கனவே நன்கு அறிந்த அரசியல் மேல்கட்டுமானம், மற்றொன்று கிராம்சி சொல்லும் குடிமைச் சமூக (சிவில் சமூகம்) மேற்கட்டுமானம், அரசியல் கட்டுமானம், ஆளும் வர்க்கத்தின் ஆதிக்கம், அதிகாரம் போன்ற வன்முறை அல்லது பலாத்கார (coercion) வடிவங்களை நேரடியாக எவ்வித ஒளிவுமறைவுமின்றி தொழிற்படுத்துகின்றது. மற்றொன்றான குடிமைச் சமூக கட்டுமானம் சமயம், குடும்பம், கல்வி நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களின் வழி ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவான பொது மனோபாவம் ஒன்றை உருவாக்குகின்றது.

வர்க்கச் சமூகங்களின் ஆளும் வர்க்கம் குடிமைச் சமூகத்தின் வழி தனது கருத்தியல் மற்றும் கலாச்சார மேலாண்மையைச் (Hegemony) சாதிக்கிறது என்று கிராம்சி குறிப்பிட்டார். குடிமைச்சமூக நிறுவனங்களின் வழி ஆளும் வர்க்கம் தனது நேரடியான பொருளாதார மற்றும் அரசியல் ஆதிக்கத்தை மறைத்துக் கொண்டு ஒரு பொது ஒழுங்கில், சமூக ஏற்பாட்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சமூக அமைதியில் அக்கறை கொண்டதாக காட்டிக் கொள்கிறது என குறிப்பிட்டார் கிராம்சி.

அடித்தளம், மேற்கட்டுமானம் என்பன சமூகம் பற்றிய வருணனையை கட்டிடம் என்னும் உருவகம் தருகின்றது. இந்த உருவகம் முக்கியமானதும் பொருத்தமானதுமான மூன்று அனுமானங்களைத் தருகின்றது என்று சொல்கிறார் அல்தூசர். இவை இறுதியாக தீர்மானிப்பது எது? மேற்கட்டமானத்தின் சுயத்துவமான இயக்கம், அடித்தளத்திற்கும் மேற்கட்டுமானத்திற்கும் இடையிலான பரஸ்பரவினை (Reciprocal Action) போன்றனவாகும்.

மேற்கட்டுமானத்தின் பகுதிகளாக அரசு, சட்டம், கருத்துநிலை என்பன பற்றி ஆராயும் அல்தூசர், அரசு பற்றி ஆராய்கின்றார். நிலவிவரும் உற்பத்தி உறவுகளை மறு உற்பத்தி செய்யும் பணியில் கருத்துநிலை பெரும்பங்கை வகிக்கின்றது. சுரண்டல் அடிப்படையான உற்பத்தி நடைபெற அரசின் ஒடுக்குமுறை அமைப்புக்கள் மட்டும் போதாது. “அல்தூசரின் அரசுக் கோட்பாட்டில் கருத்துநிலை அரசுயந்திரம் (ISA - Ideological State Apparatus) புதுமையான ஒரு கருத்தாக்கமாகும். கருத்துநிலை அரசுயந்திரத்தை RSA எனும் ஒடுக்குமுறை அரசுயந்திரத்தில் இருந்து வேறுபடுத்தி நோக்கும் போது தான் அல்தூசரின் கருத்து நிலை பற்றிய கோட்பாடு விளக்கமுறுகின்றது.

“அரசுயந்திரமானது, படை, பொலிஸ், நீதிமன்றங்கள், சிறைகள் என்பவற்றையும் பாராளுமன்றம் போன்ற அரச உறுப்புக்களையும் கொண்டமைவது எனக் கருதப்பட்டது.” இவற்றை அல்தூசர் **ஒடுக்குமுறை அரசுயந்திரம்** எனும் பெயரால் அழைக்கிறார். RSA யில் இருந்து வேறுபட்ட **கருத்துநிலை அரசுயந்திரம்** பல நிறுவன வடிவங்களுடாகச் செயற்படும் அத்தகைய எட்டு நிறுவனங்களை அல்தூசர் குறிப்பிடுகின்றார். அவையாவன, மதக்கருத்து நிலை அரசுயந்திரம், கல்வி கருத்துநிலை அரசுயந்திரம், குடும்பக் கருத்துநிலை அரசுயந்திரம், சட்டக் கருத்துநிலை அரசுயந்திரம், அரசியல் கருத்து நிலை அரசுயந்திரம், தொழிற்சங்க கருத்து நிலை அரசுயந்திரம், தொடர்பு சாதனக் கருத்துநிலை அரசுயந்திரம், பண்பாட்டு கருத்துநிலை அரசுயந்திரம் (கலை, இலக்கியம், விளையாட்டு) போன்றவைகளாகும்.

எனவே அடித்தளம், மேற்கட்டுமானம் பற்றி புரிதலை, விளக்கத்தை தொடர்ந்து சமகால இலங்கையின் அரசியல் பொருளாதார நெருக்கடிக்கான அடிக்கட்டுமானத்தையும், மேல்கட்டுமானத்தையும் மார்க்சிய மரபுகளுக்கு ஊடாக ஆராய்வது இங்கு பொருத்தமுடையதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் அரசியல், பொருளாதார நெருக்கீட்டிக்கான அடிப்படைக் காரணம் இனவாதம் ஆகும். இனவாதம் என்பது அடிக்கட்டுமானத்திலிருந்து எழுகின்ற ஒரு அம்சமும் அது மேல்கட்டுமானத்தில் அதனுடைய பிரதிபலிப்புக்களைக் கொண்ட அரசியல், பொருளாதார, சமூக விடயங்கள் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றது. அது தமிழர்களாக இருக்கலாம், சிங்களவராக இருக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் ஆட்சித்தலைவர்கள் அரசியல் பொருளாதார விடயங்களினை முதன்மைப்படுத்தாமல் இனவாதத்திற்கு முதன்மை கொடுத்ததன் விளைவே இன்று இலங்கை பாரிய அரசியல், பொருளாதார நெருக்கடியினை சந்தித்து வருவதற்கு காரணமாகும். குறிப்பாக 2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதற்கு சிங்கள அரசாங்கம் பாரியளவான பொருளாதாரத்தை செலவழித்தது குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை அரசியல், பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கின்றதோ அதற்கான அடித்தளம் இனவாதமே ஆகும். இனரீதியான முரண்பாடுகளே இத்தனை நெருக்கீட்டிற்கும் காரணம் என்பேன்.

இலங்கை அரசியல், பொருளாதார நெருக்கீட்டிற்கான காரணங்களில் ஒன்றாக மத அரசியல் காணப்படுகின்றது. சமூகத்தில் உருவாகும் அனைத்திற்கும் அடிப்படை காரணமாக இருப்பது உற்பத்தி முறையே. இதனை மார்க்சியம் அடிக்கட்டுமானம் என்கிறது. இந்த அடிக்கட்டுமானத்தில் உற்பத்தி சக்திகளுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகளை தீர்க்க ஏற்படுத்தப்படும் வடிவங்கள் எல்லாம் மேற்கட்டுமானம் ஆகும். அந்த வகையில் மதம் என்பது ஒரு மேற்கட்டுமான அமைப்பு ஆகும். இவ் மதங்கள் தங்கள் இயல்பில் ஆளும் வர்க்கங்களுக்கு ஆதரவாகவே செயல்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் இலங்கையை எடுத்துக் கொண்டால் பௌத்த மதம் ஆளும் வர்க்கத்தின் நலனை பிரதிபலிப்பதாக காணப்படுகின்றது. குறிப்பாக ராஜபக்ஷ ஆட்சியினை பௌத்த மத பிக்குமார்கள் ஆதரவு தெரிவித்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அல்தூசர் குறிப்பிடுகின்ற மதக் கருத்துநிலை அரசயந்திரம் அதாவது இலங்கையின் ஆட்சியாளர்கள் தங்களது அதிகாரத்தினை கைப்பற்றி அல்லது தக்க வைத்துக் கொள்வதற்கு மதத்தினை ஒரு ஆயுதமாக பயன்படுத்தி கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இலங்கையில் பௌத்த மதம் இன முரண்பாட்டினை தூண்டிவிட்டு ஆட்சியாளர்களின் நலனைப் பேணுகின்ற ஒன்றாகவே காணப்பட்டு வந்தது இன்றும் வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால இலங்கையின் அரசியல், பொருளாதார நெருக்கீட்டுக்கான மற்றொரு காரணம் குடும்ப அரசியல் ஆகும். இது அல்தூசர் குறிப்பிடுகின்ற மேற்கட்டமைப்பான அம்சமாக காணப்படுகின்றது. இலங்கையில் ராஜபக்ஷ குடும்பத்தினரின் குடும்ப அரசியலும், வாரிசு அரசியலும் மேலோங்கி வந்ததை பார்த்தோம். குறிப்பாக 2009 இல் கிடைத்த யுத்த வெற்றியின் விளைவாக ராஜபக்ஷ குடும்பத்தினர் தென்னிலங்கை அரசியலில் விரும்பப்பட்டார்கள். பின்னர் 2009 இற்கு பிறகு ராஜபக்ஷாவின் குடும்ப ஆட்சி முழுமையாக ஆதிக்கம் செலுத்த தொடங்கியது எனலாம். அத்துடன் அரசியல் குடும்பங்களின் ஆதிக்கம் இலங்கை அரசியலில் புதிய விடயம் இல்லை என்றாலும் தற்போதைய இலங்கையில் (2022 ஏப்ரலுக்கு முன்னர்) எங்கு திரும்பினாலும் ராஜபக்ஷ குடும்பம் என்கின்ற நிலையே காணப்பட்டது. ஜனாதிபதியின் சகோதரர்கள், மகன்கள், அத்தைகள், உற்றார் என்று எல்லோரும் அவர்களே ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். வேறு யாரும் அரசியலில் வருவதற்கு அவர்கள் இடம் தருவதில்லை. இலங்கையில் குடும்பத்தினரின் ஆட்சி காணப்பட்டதால் ஆட்சியில் ஊழல் மலிந்து காணப்பட்டது. இதுவே தற்போதைய அரசியல் பொருளாதார நெருக்கடிக்கான பின்னணி காரணமாக காணப்படுகின்றது. இவ்வாறு குடும்ப அரசியல் இலங்கையில் இடம்பெறுவதற்கு கிராம்சி குறிப்பிடும் குடிமைச் சமூகம் ஆதரவளித்தது தான் பிரதான காரணமாகும். அதாவது சமயம், குடும்பம், கல்வி நிறுவனங்கள் போன்ற நிறுவனங்கள் வழியாக ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவாக பொதுமனோபாவம் ஒன்றை உருவாக்குவது அரசுக்கு ஆதரவான பொதுச் சம்மதத்தை (condent) குடிமைச் சமூகம் உருவாக்குகின்றது. குறிப்பாக முன்னர் குறிப்பிட்டதைப் போன்று பௌத்த மதம் இவ்வாறான ஒரு செயற்பாட்டினையே இலங்கையில் செய்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமகால அரசியல், பொருளாதார நெருக்கடிக்கான இன்னொரு காராணமாக ஒடுக்குமுறையச் சிந்தனைகளை அதாவது கிராம்சி குறிப்பிடுகின்ற மேலாண்மை ஆகும். இது அடிக்கட்டுமானத்திலிருந்து எழுந்த ஒரு இன, மத ரீதியான ஒடுக்கு முறைச் சிந்தனைகள் ஆகும். இதனை மேற்கட்டுமானம் எனக் கூறிக்கொள்வது பொருத்தமுடையதாக இருக்கும். இன்னொரு வழியில் பார்ப்போமாயின் அல்தூசர் குறிப்பிடுகின்ற படை, பொலிஸ், நீதிமன்றுகள், சிறைகள் என்பனவற்றையும் பாராளுமன்றம் போன்ற அரச உறுப்புக்களையும் ஒடுக்குமுறை அரசயந்திரம் ஆகும். இலங்கையின் தற்போதைய அரசியலாக இருந்தாலும் சரி 50 ஆண்டுகாலமாக இடம்பெறுகின்ற அரசியலையும் சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குகையில், இலங்கையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இனரீதியான, மத ரீதியான ஒடுக்குமுறைகள் இலங்கை அரசியலில் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. சிறுபான்மை இனங்களை குறிவைத்து ஒடுக்குமுறை நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக 1979, 1981, மலையக இனப்படுகொலைகள், 1983 ஆம் ஆண்டு பாரிய கறுப்பு யூலை இனப் படுகொலை வரை அதன் வரலாறானது அரச அனுசரனையுடன் கூடிய இனக் கும்பல் சார்ந்த வன்முறை கொண்டதாக காணப்பட்டது. தற்போதும் பெரும்பான்மை சிங்களப் பேரினவாத அரசால் நன்கு திட்டமிட்ட வகையில் ஒடுக்குமுறைச் சிந்தனைகள் தூவப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக கல்வி நிறுவனங்கள், மத அமைப்புக்கள் போன்ற மேல்கட்டுமானத்தினால் ஆளும் வர்க்கத்தினால் தூவப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்ததாக இலங்கையின் அரசியல், பொருளாதார நெருக்கடிக்கான இன்னொரு காரணமாக மேற்கட்டுமான இராணுவ ஆதிக்கவாதம் ஆகும். கிராம்சி குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று மேல்கட்டுமானத்தின் இரு பகுதிகளில் ஒன்றான சிவில் சமூகத்தினுள் அடங்குகின்றது. மேலும் அல்தூசர் குறிப்பிடுகின்ற ஒடுக்குமுறை அரசயந்திரம் என்ற நோக்கிலும் அவதானிக்கப்படலாம். இலங்கையில் பல இராணுவத்தினர் குறிப்பாக குற்றச்சாட்டுக்களைக் கொண்டிருக்கும் பல இராணுவத்தினர் முக்கியமான அமைச்சுப் பதவிகளில் நியமிக்கப்பட்டிருக்கின்றன. எனவே இவ்வாறாக அரச நிறுவனங்களில் சிவில் அதிகாரிகள் இருக்க வேண்டிய இடங்களில் படை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளது நாடாளுமன்றத்தை முடக்கி ஜனநாயக அரசியல் ஓட்டத்தை தடுப்பதாக உள்ளது.

அடுத்தாக சமகால இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான காரணமாக அடிக்கட்டுமான உற்பத்தி பொருட்கள், வளங்களை பயன்படுத்தாமை ஆகும். மேலும் உள்ளூர் கைத்தொழில் விவசாய உற்பத்திகளை சரியான முறையில் ஊக்குவிக்காமை, இலங்கை வளங்களை பயன்படுத்தாமை, வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்வதாக காணப்படுகின்றது. உதாரணமாக இலங்கை அரசாங்கம் குண்டூசியைக் கூட உற்பத்தி செய்யாமல் அதனை சீனாவிடம் இருந்து இறக்குமதி செய்கின்றது. இதற்கு காரணம் அடிக்கட்டுமானமே ஆகும். மேலும் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை இருக்கின்றது. இதனை அரசாங்கம் இயங்கச் செய்திருந்தால் சீமெந்தினை இறக்குமதி செய்திருக்க தேவையில்லை. இதனை விட கருவாட்டு தொழிற்சாலை, பால்மா தொழிற்சாலை, மாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணைகளை உருவாக்குதல் போன்றவற்றினை அரசாங்கம் ஊக்குவிதத்திருந்தால் இன்று இவ்வளவு மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை தள்ளப்பட்டிருக்காது.

மேலும் மேற்கட்டுமான சாதி வேறுபாடுகள் போன்றனவும் இலங்கையின் அரசியல், பொருளாதார நெருக்கீட்டுக்கான அடிப்படைக் காரணங்களுள் ஒன்றாகும். இவ்வாறாக சமகால இலங்கையின் அரசியல் பொருளாதார நெருக்கடிக்கான அடிக்கட்டுமானமாகவும் மேற்கட்டுமானமாகவும் காணப்படுகின்றன. ஆகவே இலங்கையில் காணப்படுகின்ற அடிக்கட்டுமானத்தினையும் சமூகத்தின் மேற்கட்டுமானத்தின் இயல்புகளையும், சமூக உருவாக்கத்தில் அதன் பங்கினையும் மறு உற்பத்தி செய்தல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் மேற்கட்டுமானம் ஒவ்வொரு கணுவிலும் வெடிப்புற்று வருகின்றது. வேறுபட்ட வர்க்கங்களின், குழுக்களின் பிரதிநிதிகள் மூலமாக மக்கள் இன்று தங்கள் சொந்த முயற்சியினால் புதிய மேற்கட்டுமானத்தினை கட்டிக் கொள்ள வேண்டும். இன்று பழைய மேற்கட்டுமானம் பயனற்றது என்று எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. அதனாலேயே இன்று காலிமுகத்திடலில் அரசாங்கத்திற்கு எதிராகபோராடி வருகின்றனர். ஆகவே எந்த வர்க்கங்கள் இந்தப் புதிய மேற்கட்டுமானத்தைக் கட்ட வேண்டும் எப்படிக் கட்ட வேண்டும் என்று வரையறுக்கப்பதே இன்றுள்ள பணியாகும். இதை வரையறுக்காவிட்டால் புரட்சிக் கோஷம் பொருளற்ற வெற்றிச் செல்லாகிவிடும்.

ஆகவே சமகால இலங்கையின் அரசியல் பொருளாதார நெருக்கீட்டுக்கு காரணமாக அடிக்கட்டமானத்தையும் மேல்கட்டுமானத்தையும் மறுசீரமைத்தல் அவசியமாக காணப்படுகின்றது. அவ்வாறு மறுசீரமைப்பதன் மூலமே இலங்கையில் காணப்படுகின்ற நெருக்கீட்டினை குறைப்பதற்கும், இலங்கை புதிய வழியில் அபிவிருத்தியை நேக்கிச் செல்லும் என்றும் நான் கருதுகிறேன். இலங்கையில் காணப்படுகின்ற சாதி, வர்க்கம், இனவாதம், மதம், மொழி போன்ற மேற்கட்டுமான பாகுபாடுகள் அழித்தெறிக்கப்படுதல் வேண்டும். ஏனெனில் இதுவே இலங்கையின் இனமுரண்பாட்டிற்கும், ஒற்றுமையின்மைக்கும், நாடு அபிவிருத்தி அடையாமைக்கும் காரணம் என்பேன். எனவே அடிக்கட்டுமானத்தினையும், மேற்கட்டுமானத்தினையும் மறுசீரமைத்து குறிப்பாக அடித்தளமான உற்பத்தி முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வந்து நாட்டினை அபிவிருத்தி நோக்கி நகரவைத்தல் இலங்கையில் அவசியமானதாக காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

பாஸ்கரன்.ச, (2019), "அரசியற் கோட்பாடுகளும் சிந்தனையாளர்களும்", குமரன் புத்தக இல்லம்.

சண்முகலிங்கம்.க, (2009), "நவீன அரசியல் சிந்தனை ஓர் அறிமுகம்", குமரன் புத்தக இல்லம்.

சிவராஜா.அ, (2006), "உயர்தர அரசியல் சிந்தனைகள்", குமரன் புத்தக இல்லம்.

அருந்நவராஜா.க, (2013), "அரசியல் சிந்தனையாளர்கள்.", அஞ்சு வெளியீட்டகம்.

ஏகலைவன், (1994), "மார்க்சியமும் தேசியப் பிரச்சனையும் அமைப்பியல் வாதம் தரும் புதிய வெளிச்சம்" உயிர்ப்பு, (N.P)

(N.A), (2018), "வரலாற்றியல் பொருள்முதல் வாதம் சமூகப் புரட்சியும்", WWW.marxphilosophy.com

வேலன், (2018), "மார்க்சிய அணுகுமுறை பற்றி", www.velanNtyd;.com

கொற்றவை, (2022), "சாதியப் பிரச்சினை……", www.parundhu.com

கொற்றவை, (2016), "சாதியப்பிரச்சினையும், மார்க்சியமும் - தொடரும் வழவாதம்", www.karuvanam.com

யதிந்திரா, (2000), "மார்க்சியம் மற்றும் தேசியம் தொடர்பான அரசியல் உரையாடல்களும் யதார்த்தமும்" www.inioru.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகல விதமான இனரீதியான பாரபட்சங்களை இல்லாது ஒழித்தல் குறித்த சர்வதேச சமவாயத்தின் (ICERD) பொருத்தப்பாட்டினை இலங்கையினை அடிப்படையாகக் கொண்டு விமர்சன ரீதியாக ஆராய்க.**

சமகால சர்வதேச உலகில் இன்று மனித உரிமைகள் (HUMAN RIGHTS) என்ற பதம் முதன்நிலைப்படுத்தி நோக்கப்படுகின்றது. மனித உரிமைகள் என்பது **"மனிதர்கள் மனிதனாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்கு கிடைத்த அடிப்படையான விட்டுக்கொடுக்க இயலாத மறுக்க முடியாத சில உரிமைகள்"** ஆகும். மனிதனின் நல் வாழ்விற்கு மனிதனின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு நவீன அரசுகளில் மனித உரிமைகளே அடிப்படையாகவும் அத்திவாரமாகவும் அமைகின்றன. இருப்பினும் நாடுகளிற்கிடையில் அல்லது நாடுகளுள் கூர்மை பெறும் இன, மத, ஆயுத முரண்பாடுகள் மனித உரிமைகளை குழிதோண்டிப் புதைக்கின்றன. இதனடிப்படையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சியினடிப்படையில் பல்வேறு ஒப்பந்தங்கள், பிரகடனங்கள், வழிகாட்டுதல்கள், பரிந்துரைகள், கோட்பாடுகள் என்பன சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்பட்டன.

எனவே அதனடிப்படையில் மனித உரிமைகள் தொடர்பான முக்கிய சர்வதேச மனித உரிமைகள் ஆவணங்களாக 1948 ஆம் ஆண்டு அனைத்துலக மனித உரிமை பிரகடனம் 1965 ஆம் ஆண்டு சகலவிதமான இன ரீதியான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பது குறித்த சர்வதேச சமவாயம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச பொருத்தனை – 1966, பொருளாதார சமூக, கலாசார உரிமைகள் குறித்த சர்வதேச பொருத்தனை – 1966, 1979 ஆம் ஆண்டு பெண்களுக்கு எதிரான சகலவிதமான பாரபட்சங்களையும் இல்லாது ஒழிப்பதற்கான சமவாயம், 1984 சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் நடத்தல் அல்லது தண்டித்தல் என்பற்றுக்கெதிரான சமவாயம், 1989 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் குறித்த சமவாயம், 1990 ஆம் ஆண்டு சகல குடிபெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உறுப்பினர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பது குறித்த சர்வதேச சமவாயம், வலுவிழப்புடைய நபர்களின் உரிமைகள் குறித்த சமவாயம் 2006, வலிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமலாக்கப்படுவதிலிருந்து சகல நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அந்த வகையில் சகலவிதமான இன ரீதியான பாரபட்சங்களை இல்லாதொழித்தல் குறித்த சர்வதேச சமவாயத்தின் பொருத்தப்பாட்டினை இலங்கையினை அடிப்படையாகக் கொண்டு விமர்சன ரீதியாக ஆராய்வதாக இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

இனரீதியான பாரபட்சங்களையும் இல்லாதொழித்தல் குறித்த சர்வதேச சமவாயமானது **“1965ஆம் ஆண்டில் பொதுச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1969 இல் நடைமுறைக்கு வந்தது”** அன்று முதல் 2020 காலப்பகுதி வரை 182 அரசுகள் இச் சமவாயத்தின் தரப்பினராக உள்ளனர். இச் சமவாயம் தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சியிலிருந்து எழுந்த அன்றைய அரசியல் அழுத்தங்களை கருத்திற் கொண்டு அதன் பின்னணியில் உருவாக்கப்பட்டதாகும். இச்சமவாயமானது இனரீதியான பாரபட்சங்களை எதிர்த்து போராடுவதற்காக அரசுகள் எவ்வாறு செயற்பட வேண்டும் எத்தகைய நடிவடிக்கையையும் எடுக்க வேண்டும் மற்றும் அரச தரப்புக்களின் கடமைகள் என ஆறு விரிவான உறுப்புரைகளில் குறிப்பிடுகின்றது. அந்த வகையில் இலங்கையானது, இன ரீதியான (சகல) பாரபட்சங்களை இல்லாதொழித்தல் சமவாயத்தின் தரப்பினராக உள்ள காரணத்தினால் இச் சமவாயத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்ற ஒப்புக்கொண்டுள்ளது. இருப்பினும் நடைமுறையில் இச்சமவாயமானது இலங்கையை பொருத்தமட்டில் எந்தளவிற்கு பொருத்தப்பாடு உடையதாக அமைகின்றது என்பது கேள்விற்குறியே ஆகும். ஆகவே இதனை ஆராய்வது இங்கு பொருத்தமுடையதாக இருக்கும்.

இலங்கை அரசானது இச் சமவாயத்தில் 1982 ஆம் ஆண்டு இணைந்து கொண்டது. இவ் சகலவிதமான இனரீதியான பாரபட்சங்களை இல்லாது ஒழிப்பதற்கான சமவாயத்தில் (ICERD) உறுப்புரை 1இல் இனப்பாகுபாடு எனும் பதம் “ஒருவரின் அரசியல் பொருளாதார, சமூக, கலாசார அல்லது வேறு ஏதாவது பொதுவாழ்வுத் துறையில் அவரின் அங்கீகாரம் அனுபவிக்கும் உரிமை அல்லது பயன்படுத்தல் என்பவற்றை இல்லாமல் செய்தல் அல்லது பாதிப்படையச் செய்யும் நோக்கத்தையோ அல்லது தாக்கத்தையோ ஏற்படுத்தக் கூடிய சாதி, நிறம், வழிமுறை அல்லது தேசியம் அல்லது இனத்தோற்றம் ஆகியவற்றால் உண்டாகும் வேறுபாடு அல்லது தவிர்த்தல் அல்லது பாரபட்சம் ஆகும்” எனப் பொருள்படுத்தப்படுகின்றது. இவ்வாறான சகல பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதே இச் சமவாயத்தின் குறிக்கோளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. ஆனால் இதற்கு மாறாக இலங்கையில் இனரீதியான பாரபட்சம் காரணமாக சிறுபான்மை இனத்தவர்கள் மீதான அடக்குமுறைகள், சுரண்டல்கள், இனப்படுகொலைகள் போன்ற பல்வேறு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சமயவாத்தின் தரப்பினராக உள்ள இலங்கையானது சிவில் மற்றும் அரசியல், பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகளை அனுபவிப்பதிலுள்ள பாகுபாட்டை அகற்றுவதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால் நடைமுறையில் அதனைப் பின்பற்றவோ நடைமுறைப்படுத்தவோ இல்லை அதில் இலங்கை அரசிற்கு விருப்பம் கிடையாது என்பதே உண்மை. வரலாற்று ரீதியாக பாரக்கின்றபோது அன்றிலிருந்து இன்று வரை சிறுபான்மையினத்தர்வகளாகிய இலங்கைத் தமிழர்கள், இந்தியவம்சாவழித் தமிழர்கள். முஸ்லீம்கள் ஆகியோருக்கு இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்களாகிய சிங்களவர்களைக் காட்டிலும் அவர்களது உரிமைகளை அனுபவிப்பதில் பல்வேறு கோணங்களில் பல மட்டுப்பாடுகளை இலங்கை அரசியல் தலைவர்கள் விதித்து வருகின்றார்கள். எடுத்துக்காட்டாக, இலங்கையில் பெரும்பான்மை, இனமக்கள் சிறுபான்மை இனத்தவர்களை ஒரு பொருட்டாக எண்ணாது தமது தேசம் நாமே ஓர் இனம் என்கின்ற வகையில் தமது நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் குடியேற்ற திட்டங்கள் மற்றும் யாப்பில் பெரும்பான்மையினரது நலன்களை முதன்மைப்படுத்தல் உதாரணமாக 1956 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச் சிங்கள மட்டும் அரச கரும மொழி அதைவிட அரச மதமாக பௌத்த மதம் உள்ளடக்கப்படல் என்பற்றைக் கூறலாம். இவற்றால் சிறுபான்மை மக்களது மனித உரிமைகள் என்பது ஓர் சவாலுக்கு உட்பட்டதானதாக காணப்படுகின்றது.

மேலும் கல்வி கற்கும் போதும் சொந்த மொழியில் கற்கும் உரிமை என்பது இலங்கையில் பாதிக்கப்படும் நிலையை காண முடிகிறது. அதாவது வெளிமாவட்டங்களில் உள்ள பல்கலைக்கழங்களில் ஆங்கில மொழியில் (பொதுமொழி) விரிவுரைகளைக் கற்பிக்காது பெரும்பான்மையான சிங்கள மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்ட விரிவுரைகள் சிங்கள மொழியில் நடாத்தப்படுகின்ற போது அங்கே சிறுபான்மையின மாணவர்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டு வருகின்றது. இது மொழி உரிமையை சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றது. இதைவிட மத உரிமையும் அவ்வாறானதே உதாரனமாக முஸ்லீம் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப்பதற்கான அனுமதி பெரும்பாலும் வழங்கப்படுவதில்லை. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இனவொதுக்கல் எனும் பின்னணியில் சிவில், சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளை சிறுபான்மையினர் அனுபவிப்பது சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் தேசிய தீர்ப்பாயங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் மூலம் இனப்பாரபட்சத்துக்கு எதிராக பயனுள்ள தீர்வுகளை வழங்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது. இவ்விடயம் எந்தளவிற்கு பொருத்தப்பாடுடையதாக இருக்கிறது என்று பார்த்தால் இலங்கை அரசானது வெளிச்சக்திகளின் அழுத்தங்கள், இராஜதந்திர நோக்குடனேயே இனப் பாரபட்சங்களை தீர்க்க பல்வேறு கொள்கைகள், செயற்த்திட்டங்கள், சட்டங்கள் என்பவற்றை கொண்டுவந்துள்ளன. எடுத்துக்காட்டாக 13ஆவது திருத்தம் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வாக மாகாணசபை அறிமுகப்படுத்தப்பட்டது. சிறிதளவு அதிகாரப் பங்கீடும் வழங்கப்பட்டது. எனினும் “அதிகாரப் பங்கீட்டுத் தடையாக யாப்பிலிருந்த ஏற்பாடுகளில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளாமலேயே இத் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது.” குறிப்பிடத்தக்கதாகும்.

மறுபக்கத்தில் இப் 13ஆவது திருத்தம் விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் ஒரு கருவியாகவே பயன்படுத்தப்பட்டது. இந்திய அரசாங்கம் இதனைக் காட்டியே விடுதலை இயக்கங்களிடம் ஆயுதங்களை பறிமுதல் செய்தது. இச் சூழ்நிலையிலிருந்து விடுதலைப் புலிகள் அன்று விடுப்பட்டிருந்தாலும் மீண்டும் தமிழ்ச் சமூகம் சிக்குப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எந்தப் பயனும் இல்லாத மாகாணசபை முறையைத் தான் இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

மொழிப்பாரபட்சத்திற்கு தீர்வாக 13ஆவது திருத்தத்தில் தமிழ் மொழிக்கு வழங்கப்பட்ட அரச கரும மொழி அந்தஸ்தாகும். 33 வருடங்கள் கழித்த பின்னரும் கூட சுற்றறிக்கைகள், தீர்மானங்கள் என்பன வெளிவருகின்றனவே தவிர தமிழ் அரச கருமொழி என்பது 10 வீதம் கூட இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. எழுத்து ரீதியாக யாப்பில் உள்ளவற்றைக் கூட நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் விரும்பியதில்லை என்பதற்கு இது சிறந்த உதாரணம் ஆகும்.

இலங்கை வாழ் மக்களிடத்தில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்காக மைத்திரி பால சிறிசேன ஆட்சிக் காலத்தில் நல்லாட்சி அரசினை பிரதிஷ்டை செய்திருந்தாலும் நடைமுறையில் அது வெற்றியளிக்கவில்லை. மற்றும் இலங்கை அரசியல் யாப்பில் பாகுபாடு காரணமாக ஏற்படும் உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீறல்களுக்க எதிராக வழக்கு தொடர முடியும் எனக் குறிப்பிடப்பட்டாலும் அது நடைமுறையில் கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. மேலும் தற்காலத்தில் இனப்பிரச்சினை, பொருளாதாரப்பிரச்சினை என்பற்றிற்கு தீர்வாக சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கான திட்டமிடல்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் இத் திட்டத்திற்கு பெரும்பாலும் தமிழ் கட்சிகளுக்க இன்னும் அழைப்பு விடுவிக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியது அவசியமாகும்.

ஆகவே இலங்கை அரசானது இனப்பாரபட்சங்களுக்கு எதிராக பயனுள்ள தீர்வுகளை இன்னமும் முன்வைக்காத தன்மையே காணப்படுகின்றது. இதனடிப்படையிலும் பார்க்கின்ற போது சகலவிதமான இனரீதியான பாகுபாடுகளை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச சமவாயம் இலங்கையில் பொருத்தப்பாடில்லாத தன்மையினைக் காணமுடிகின்றது.

சகலவிதமான இனரீதியான பாரபட்சங்களை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச சமவாயத்தின் படி அரசின் கடமையாக பின்வருவன குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவதாக தனிநபர்கள், ஆட்கள், தொகுதியினர், அல்லது நிறுவனங்களுக்கு எதிராக அரச தரப்புக்கள் இனப் பாரபட்ச செயல்களில் ஈடுபடக் கூடாது என குறிப்பிடுகின்றது. இலங்கையை பொருத்தமட்டில் சிறுபான்மையினருக்கு எதிராக அரச தரப்புக்கள் பாரபட்ச செயல்களிலேயே ஈடுபட்டு வருகின்றனர். எடுத்துக்காட்டாக இந்திய வம்சாவழித் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றமை (பிரஜா உரிமைச் சட்டத்தின் மூலம் குடியுரிமை பறிப்பு, அரசியல் பிரதிநிதித்துவத்தை கட்டுப்படுத்தல், வீட்டுரிமை வழங்கப்படாமை) முஸ்லீம் சமூகத்திற்கு எதிரான அடக்கு முறைகள், உதாரணமாக கொரோனாக் காலத்தில் முஸ்லீம்களின் ஜனஸாக்களை அடக்கம் செய்வதற்கு பதிலாக அவர்களின் உடல்களை தகனம் செய்ய அரசு கட்டளை விதித்தமை போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

இவற்றை விட "டொனமூரக் காலத்திலிருந்தே தமிழர் தாயகத்தின் ஒருமைப்பாட்டை சிதைக்கும் வகையில் சிங்களக் குடியேற்றங்களை வடகிழக்கில் மேற்கொண்டு வருகின்றது." சுதந்திரத்தின் பின்னர் வடகிழக்கின் மையமாகவுள்ள திருகோணமலை மாவட்டத்திலேயே சிங்களக் குடியேற்றங்களை அரசு அதிகமாக்கியது. தற்போது வடக்கு மாகாணத்தில் குடியேற்றத் திட்டங்களை அமைக்கும் இராஜதந்திர நோக்கில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் விடுதலைப் புலிகள் - அரசதரப்புக்கிடையிலான யுத்தம் (2009) முழுக்க முழுக்க இனவொதுக்கலின் விளைவே ஆகும். யுத்தத்தின் போதும் கூட தமிழ் மக்கள் என்கின்ற பார்வையிலே பல அப்பாவி தமிழ் பொதுமக்களை கைது மற்றும் கொலை செய்தமையை குறிப்பிட முடியும். அத்தோடு 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தின் (கறுப்பு யூலை) போதும் சிங்களவர்களின் அநீதிச் செயலை அரசு பார்த்து ரசித்தும் அவர்களின் அநீதிச் செயல்களைத் தூண்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாவதாக அனைத்து தேசிய உள்ளூர் பொது அதிகார சபைகளும் பொது நிறுவனங்களும் இனப்பாரபட்ச செயல்களில் ஈடுபடாததை அரசு உறுதிப்படுத்த வேண்டும் இங்கு வேடிக்கை என்னவென்றால் அரசே சிறுபான்மையினருக்கு எதிராக இனப்பாரபட்ச செயல்களில் ஈடுபடுகின்ற போது அதிகார சபைகளும் பொது நிறுவனங்களும் எவ்வாறு இனப்பாரபட்ச செயல்களில் ஈடுபடாமல் இருக்கும் என்றும் அதனை அரசுகள் உறுதிப்படுத்தும் என்றும் எவ்வாறு கூற முடியும் எடுத்துக்காட்டாக "தமிழ் பேசும் மக்களின் முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்ளில் சிங்கள மொழியில் தான் கொடுக்கப்டடுகின்றன. நீதி மன்றங்களில் பொலிஸ் B- Report கள் சிங்கள மொழியில் தான் கொடுக்கப்படுகின்றன. மேலும் அரச திணைக்களச் சுற்றுக்களும் கடிதங்களும் சிங்கள மொழியில் தான் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்தாக அரசின் கடமையாக ஆட்கள் அல்லது ஒழுங்கமைப்புக்களால் இனப் பாரபட்சங்களை ஏற்பாடு செய்யவோ, பாதுகாக்கவோ ஆதரிக்கவோ கூடாது என குறிப்பிடுகின்றது. இந்த விடயத்தினை அரசு செயற்படுத்தினாலும் அதனையும் இனப்பாரபட்சத்தினடிப்படையிலே மேற்கொண்டு வருகின்றது. எடுத்துக்காட்டாக விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் நலன்களுக்காக நியாயமான கோரிக்கைகளை அரச தரப்பிற்கு விடுத்திருந்தாலும் அதனை சிங்களவர்களுக்கு பாதகமானது எனக் கருதி விடுதலைப் புலிகளை இலங்கை அரசு முற்று முழுதாக அழித்தது. ஆனால் அண்மைக் காலமாக பொதுபல சேன (BBS) என்ற பௌத்த தீவிரவாத அமைப்பு ஏனைய பௌத்த தீவிரவாத அமைப்புக்களுடன் இணைந்து கொண்டு முஸ்லீம் விரோத பிரச்சாரத்திலும் நடவடிக்கையிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். இதனை அரசு கண்டும் காணாமலும் இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் அரசாங்கத்தின் தேசிய மற்றும் உள்ளக கொள்கைகளை மீளாய்வு செய்தல் அரசின் கடமையாக காணப்படுகின்றது. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுக்கப்படும் கொள்கைகள் அனைத்து இன மக்களுக்கும் பாரபட்சமற்ற விதத்தில் உருவாக்கப்பட வேண்டும். ஆனால் இலங்கை நாட்டினை எடுத்துக் கொண்டால் அபிவிருத்தித் திட்டங்கள் பெரும்பாலும் சிங்கள மாவட்டங்களை முதன்மைப்படுத்தியே வகுக்கப்படுகின்றன. இதனால் வடக்கு மற்றும் கிழக்கில் 3-59 மாத வயதுடைய குழந்தைகள் நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ள குழந்தைகளுடன் ஒப்பிடும் போது 29% எடை குறைவாக உள்ளனர் மேலும் 46% மட்டுமே பாதுகாப்பான குடிநீர் வசதி உள்ளது போன்ற பல்வேறு சவால்கள் வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்கொள்கின்றார்கள். இந்தளவிற்கு அபிவிருத்திக்கான நிதிகள் வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு என பாரியளவில் ஒதுக்கப்படுவதில்லை.

அத்துடன் இனப்பாரபட்சம் காரணமாக தகுதியான இடங்களில் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் பொருத்தமற்ற இடங்களில் நடைமுறைப்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக மாத்தளை விமான நிலையம் மகிந்த ராஜபக்ஷ தமது சிங்களப் பிரதேசத்தில் அமைக்கப்பட வேண்டும் என்கின்ற ஒரே பின்னணியில் அமைக்கப்பட்டது. இதனால் இவ்விமான நிலையத்தினால் இலங்கை அரசாங்கம் எந்த ஒரு பலனையும் அடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மாறாக அரசிற்கு பலன் பெற்றுத் தரக் கூடிய காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையை அரசு புனர்நிர்மாணம் செய்ய விரும்பவில்லை. இதன் அடிப்படை எல்லாம் இனப் பாகுபாடே ஆகும்.

இச் சமவாயத்தின் பிரகாரம் இனப்பாரபட்சங்களை உருவாக்க கூடிய அல்லது நிலைநிறுத்தும் சட்டங்களையும் விதிகளையும் திருத்த அல்லது இரத்து செய்ய பயனுள்ள நடவடிக்கையினை அரசு எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. ஆனால் இதற்கு மாறாக இலங்கையில் அரசு சிறுபான்மையினரை திட்டமிட்டு அழிப்பதற்கும் எளிமையாகத் தாக்குவதற்குமென பல சட்டங்களை கொண்டு வந்துள்ளது. எடுத்துக் காட்டாக "பாராளுமன்றத்தில் 1978 இல் புலித்தடைச் சட்டமும் 1979 இல் பயங்கரவாதத்தடைச் சட்டமும் கொண்டுவரப்பட்டன. இப் பயங்கரவாதத் தடைச் சட்டமானது "தனது சட்ட ஏற்பாடுகளின் ஊடாக பாதுகாப்புப் படையினருக்கு மக்களை கைது செய்யவும் சிறையிலடைக்கவும் பரவலான அதிகாரம் கொடுத்தது." இதனை அடிப்படையாக வைத்து தமிழ் மக்களை நினைத்தது போல சித்திரவதை செய்வதற்கு ஆயுதப்படைகளுக்கு அனுமதியை வழங்கியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசு. இவ் பயங்கரவாதத்தடைச் சட்டத்தினை நீக்குமாறு உலக அரசுகள் அழுத்தம் கொடுத்தாலும் நீக்காத தன்மையே இன்று காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக அண்மைக் காலத்தில் கூட கடனுதவியினை வழங்குகின்ற நிபந்தனைகளில் ஒன்றாக பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம் கேட்டுக் கொண்டது ஆனால் இலங்கை அரசு அதற்கு உடன்படவில்லை.

இலங்கை அரசானது இன்று சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்து பயங்கரவாதத்தடைச்சட்டத்தினை நீக்கி அதற்கு பதிலாக தேசிய பாதுகாப்புச் சட்டத்தினை கொண்டுவருவதற்கு தீர்மானித்து வருகின்றது. இச் சட்டமானது பயங்கரவாதத்தடைச் சட்டத்தினை விட மிக மோசமான வகையில் சிறுபான்மையினத்தவரை பாதிப்பதாக இருக்கும்.

அடுத்ததாக அரசின் கடமையாக "ஆட்கள், குழுக்கள், மற்றும் அமைப்புக்களால் மேற்கொள்ளப்படும் இனப்பாரபட்சங்களை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறப்பட்டிருக்கிறது. இந்த விடயமும் கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக இனப்பாரபட்ச பிரச்சாரங்களில் ஈடுபட்ட ஞானசார தேரரை குற்றவாளி என சிறையிடலடைக்கப்பட்டாலும் பொது மன்னிப்பு என்னும் பெயரில் இலங்கை அரசு அவரை விடுவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இன்று இவர் ஒரே நாடு ஒரே சட்டம் என்கின்ற எண்ணக்கருவின் அடிப்படையாகத் திகழ்கின்றார்.

இனப்பாரபட்சங்களை தடுத்து நிறுத்துவற்காக இலங்கை அரசானது தண்டனைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். ஆனால் இலங்கையில் நீதி விசாரணைகளே நடாத்தப்படாமல் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, "தமிழர்கள் கூட்டாக கொலை செய்யப்பட்ட போதும், நீதி விசாரணைகள் பெரியளவிற்கு நடத்தப்படாமல் அவை கிடப்பில் போடப்பட்டன. முதூர் கொலை, மன்னார் கொலை, பத்திரிகையாளர் சிவராம் கொலை போன்றவை இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

ஒன்றிணைந்த ஒழுங்கமைப்புக்களும் இயக்கங்களும் இனப்பாரபட்ச இடைவெளியை இல்லாது ஒழிப்பதற்கும், பிற வழிமுறைகள் மூலம் ஊக்குவித்தல் மற்றும் இனப் பிளவுகளை வலுப்படுத்தும் எதையும் ஊக்கப்படுத்தாதிருத்தல் வேண்டும் என்று இச்சமவாயம் குறிப்பிடுகின்றது. ஆனால் இலங்கையை பொறுத்தமட்டில் ஆட்சித்தலைவர்கள் ஆட்சியினை அமைத்துக் கொள்வதற்காக இனரீதியான வெறுப்புக்களை ஒரு ஆயுதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தி வருகின்றார்கள். எடுத்துக்காட்டாக, மகிந்தராஜாபக்ஷ 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தத்தில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்தே அதிகமாக சிங்கள மக்களின் விருப்பினைப் பெற்றார். எனவே இலங்கையில் இனங்களுக்கிடையிலான சிறு விரிசலை பெரிதாக்கியே அரசியல் தலைவர்கள் தமது அரசியல் நகர்வுகளை ஒழுங்கமைக்கின்றார்கள் எனக் கூறுவதே பொருத்தமுடையதாக இருக்கும்.

முடிவாக தொகுத்து நோக்குகின்ற போது சகலவிதமான இனரீதியான பாரபட்சங்களை ஒழிப்பதற்கான சமவாயத்தில் கூறப்பட்ட தான் செய்வதாக ஒப்புக் கொண்ட அனைத்து விடயங்களையும் இலங்கை அரசு செயற்படுத்தவில்லை என்றே கூறவேண்டும். எனவே இச்சமவாயமானது இலங்கையில் பொருத்தப்பாடில்லாத தன்மையினைக் கொண்டே காணப்படுகின்றது. இருப்பினும் இவ் சமவாயத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட இனரீதியான பாரபட்சங்களை இல்லாதொழிப்பது குறித்த குழு ICERD இலங்கையினை தொடர்ந்து கண்காணித்தும் கண்டித்தும் பல சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகின்றது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதும் அவசியமாகும்.

இச்சமவாயமானது இலங்கையில் தோல்வி கண்டாலும் உலகரங்கில் இச் சமவாயத்தில் இணைந்த கொண்ட பல நாடுகளில் இனப்பாரபட்சங்களை இல்லாதொழித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக சிங்கப்பூரினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். சிங்கப்பூர் அரசு தமது இனப்பாரபட்சங்களை ஒழிக்கும் நடவடிக்கை அறிக்கைகளை ஐ.நா அலசி ஆராயலாம் என்று கூறுமளவிற்கு சிங்கப்பூரில் இன நல்லிணக்கம் காணப்படுகின்றது.

மேலும் உலகளாவிய ரீதியில் இச் சமவாயமானது பல தாக்கத்தினையும் ஏற்படுத்தியதாகவும் காணப்படுகிறது. அதாவது, இனரீதியான பாகுபாட்டை ஒழிப்பதற்கான ஒரு ஆரம்பபுள்ளியாக காணப்படுகின்றது. இன ரீதியான பாகுபாட்டினை மேற்கொள்ளும் அரசினை சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்தி விடுகின்றது. இச் சமவாயத்தினை அடியொட்டி பல நாடுகள் தமது அரசியலமைப்பில் இனப் பாரபட்சங்களை நீக்குகின்ற சட்டங்களை கொண்டு வந்தார்கள் போன்றதாக இதன் தாக்கங்கள் காணப்படுகின்றது.

பல நாடுகளில் இச்சமவாயம் வெற்றியினைப் பெற்றுக் கொண்டாலும் இலங்கையின் கதை வேறு இலங்கையை பொறுத்தவரையில் தமிழ், சிங்கள மக்களிடையே ஒற்றுமையினையும், சகோதரத்துவத்தினையும் ஏற்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதளவிற்கு இடியப்பச் சிக்கல் போன்ற பல்வேறு முரண்பாடுகளும் வெறுப்பு சிந்தனைகளுமே வேரூன்றப்பட்டுவிட்டன. இன்னமும் வேரூன்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே இச் சமவாயம் போன்று எத்தனை சமவாயங்கள் எத்தனை சட்டங்கள் கொண்டு வரப்பட்டாலும் இலங்கையில் காணப்படுகின்ற இனப்பாகுபாடு தீராது என்பது எனது தனிப்பட்ட வாதமாகும். எனினும் இலங்கைப் பிரஜைகள் என்கின்ற வகையில் இனப்பாகுபாடுகளை இல்லாதொழிப்பதற்கு மனரீதியான மாற்றத்தினை ஒவ்வொருவரும் கொண்டுவர வேண்டும் அப்போது தான் நாடு அபிவிருத்திப் பாதையினை நோக்கி நகர்வதோடு இலங்கையில் மனித உரிமைகளும் சவாலுக்கு உட்படாமல் பாதுகாக்கப்படும்.

## உசாத்துணை நூல்கள்.

புஸ்பராசா.ந, (2021), "மனித உரிமைகள் கோட்பாடும் நடைமுறையும்", குமரன் புத்தக இல்லம்.

திருச்செந்தூரன்.சி, (2011), "இலங்கையில் அடிப்படை உரிமைகள் ஓர் அறிமுகம்", புதிய தரிசனம் வெளியீடு.

திருச்செல்வன்.நீ, (1996), "சனநாயகமும் மனித உரிமைகளும்" இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம், கொழும்பு.

ரவீந்திரன்.J.D (2008), மனித உரிமைகள் நடைமுறை கற்கை, செயற்பாடு மற்றும் சிந்தனைக்கான அறிவுக் களஞ்சியம்," மனித உரிமைகள் இல்லம்.

குணரத்தினம்.வே, (2007), "மனித உரிமைகள் கோட்பாடுகளும் வியாபகமும்" கிழக்குப்பல்கழைக்கழக வெளியீடு.

தமிழ்மாறன்.ரி, (2010), "ஜனநாகமும் மனித உரிமைகளும்", மதுரமலர்வகம்.

ஸ்கந்தகுமார்.பா,(2012),"மனித உரிமைகள் தொடர்பான சவால்களும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும்," நுகே கொட நியோ கிராகிக்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயகுமார்.சி.அ,(2002), "சிறீ லங்காவின் வாளேந்தும் ஆண்சிங்கக் கொடியும், இலங்கைப் பிரஜைகளும்" வரலாற்று ஆய்வுகள் நிறுவனம், உடுவில்.

சமீம்.அ, (1998), "ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள், நிசானா பப்ளிஷர்ஸ் கொழும்பு.

முகமது சமீர்.அ, (1998), ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் நான்காம் பாகம்", நிசானா பப்ளிஷர்ஸ், கொழும்பு.

மனித உரிமைகள் ஆணைக்குழு, (2010), "மனித உரிமைகள் ஆவணங்கள்," இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

யோதிலிங்கம்.அ.சி, (n.y), "இரண்டாவது குடியரசு யாப்பும் (1978) தமிழ் மக்களும்", அரசியல் சிந்தனை நூல்வரிசை – 24, சமூக விஞ்ஞான ஆய்வு மையம்.

காண்டீபன்.த.சி, கமலகாந்தன், சி, யோதிலிங்கம் அ.சி, (N.Y), "கண்ணியாவைப் பாதுகாப்போம்" அரசியல் சிந்தனை நூல்வரிசை – 16, சமூக விஞ்ஞான ஆய்வு மையம்.

ராம் ஆர், (N.Y), "தொடரபு கதையாகும் ஆக்கிரமிப்புக்கள்" சமூகவிஞ்ஞான ஆய்வு மையம்.

துஷாரா.D.M. (2004) "இலங்கையில் தோல்வி கண்டு வரும் ஜனநாயகம்" அரசறியிலாளன் இதழ் 01, அரசறிவியல் ஒன்றியம், அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சிறிகரன்.T, (2004) "இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டமும் மனித உரிமைகளும்" அரசறிவியலாளன் இதழ் 01, அரசறிவியல் ஒன்றியம், அரசறிவியல்துறை, யாழப்பாணப் பல்கலைக்கழகம்.

சங்கீதா.S, (2009), "இலங்கையின் இன முரண்பாட்டில் மொழிவகித்த பங்கு" அரசறிவியலாளன் இதழ் 03, அரசறிவியல் ஒன்றியம். அரசறிவியல்துறை, யாழப்பாணப் பல்கலைக்கழகம்.

பிரியதர்சன்.வி, (2021), "இலங்கை அரசியலில் ஓர் ஆயுதமாக வெறுப்புப் பேச்சு," www.virakesari.lk

றிப்றாஸ்.எல்.ஏ, (2022), "முஸ்லீம்கள் மீதான உரிமை மீறல்களை பேசுவது யார்? www.virakesari.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையின் சமகால அரசியல் பொருளதார நெருக்கடிக்கான பின்னணிகளை விபரிக்குக.**

சுதந்திரமும் தன்னாதிக்கமும் உடைய இலங்கை நாடானது சமகாலத்தில் அரசியல் ரீதியிலும் சரி பொருளாதார ரீதியிலும் சரி பல நெருக்கடிகளால் சிக்கித் தவித்து வருகின்றது. இவ்வாறு இலங்கை அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கான அடித்தளம் பல ஆண்டுகளுக்கு முன்னே இடப்பட்டுள்ளன. அந்தவகையில் "சமகால அரசியல், பொருளாதார நெருக்கடிக்கான பின்னணிகளை ஆராய்வதாகவே இக் கட்டுரை அமையப் பெற்றுள்ளது"

"புவிசார் அரசியல் கட்டமைப்பு (Geopolitical Struture) நிரந்தரமானது" அந்த வகையில் இலங்கை வளர்ந்து வருகின்ற தென்னாசிய புவியியல் எல்லைக்குள் உள்ள ஒரு நாடாகும். இதனால் உலக அரசியலில் அதிகம் பேசப்பட்டு வருகின்ற ஒரு அரசியல் பின்னடைவை எதிர்நோக்கியுள்ள நாடாகவும் பார்க்கப்பட்டு வருகின்றது. இதற்கு காரணம் ஐம்பது ஆண்டுகளாக சரியான அரசியல் அணுகுமுறைகளினை நடைமுறைப்படுத்தாமேயே ஆகும். குறிப்பாகச் சொன்னால் எமது நாட்டில் மொழி, மத, இன வேறுபாடுகளும் முரண்பாடுகளும் ஏற்பட்டு வருகின்றன. இத்தகைய முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு ஜனநாயகம், பன்மைத்துவம், பல்லினத்தன்மை, சமத்துவம் போன்றவற்றினை இடமளிப்பதற்கு பதிலாக படைகளையும் அதிகாரத்தையும் நம்புகின்றார்கள். மரபுத் தொடர்ச்சி போல இலங்கை கடந்த 50 ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த அத்தனை அரசுகளும் இந்த வழிமுறையினைத் தான் பின்பற்றுகின்றன. ஆட்சியாளர்களது இந்த வழிமுறையானது முரண்பாடுகளை உடனடியாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருமே தவிர முற்றாக நீக்கி விடமாட்டாது. எனவே இவ்வாறான தவறான அணுகுமுறைகள் அரசியல் நெருக்கடிக்கான காரணமாக அமையப் பெற்றுள்ளது.

அரசாங்கத்தின் உறுதியற்ற தன்மையும் அரசியல் நெருக்கடிக்கான பின்னணியாக அமையப்பெற்றுள்ளது. ஸ்திரமற்ற தன்மை என்கின்ற பொழுது எமது நாட்டில் அரசியற்கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகள், அமைச்சர்கள் இராஜினாமா செய்தல், அமைச்சர்களை சடுதியாக பதவி நீக்குதல் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இதை விட சமீப காலமாக ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் என்பன அரசியல் நெருக்கீடுக்கான பின்னணியினை ஏற்படுத்தி விட்டது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசியல் நெருக்கடிக்கு இராணுவ ஆதிக்கவாதமும் ஒரு காரணமாகும் இராணுவ ஆதிக்கவாதம் இலங்கை அரசியலில் முக்கியமான அம்சமாக உள்ளது. இலங்கை நிர்வாகத்தில் இராணுவத்தினர் இணைக்கப்படுகின்றனர். குறிப்பாக தற்போதைய அரசாங்கத்தில் ஒருவர் பிரதமராகவும், ஒருவர் ஜனாதிபதியாகவும் உள்ளனர். இலங்கையின் மிக முக்கியமான பதவிகள் தற்போது இராணுவ வசமாகி உள்ளதை அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக குறிப்பிட்டால் சுகாதார அமைச்சின் முக்கிய பதவியான செயலாளர் இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் குற்றச்சாட்டுக்களைக் கொண்டிருக்கும் பல இராணுவத்தினர் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே இவ்வாறாக அரச நிறுவனங்களில் சிவில் அதிகாரிகள் இருக்க வேண்டிய இடங்களில், படை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளது நாடாளுமன்றத்தை முடக்கி ஜனநாயக அரசியல் சட்டத்தை தடுப்பதாக உள்ளது.

இலங்கை அரசியல் நெருக்கடிக்கான பின்னணியாக குடும்ப ஆட்சி (ராஜபக்சமயம்) காணப்படுகின்றது. இலங்கையில் ராஜபக்ச குடும்பத்தாரின் குடும்ப அரசியலும் வாரிசு அரசியலும் மேலோங்கி வருவதைக் காணலாம். குறிப்பாக 2009 இல் கிடைத்த யுத்த வெற்றியின் விளைவாக ராஜபக்ஷ குடும்பத்தினர் தென்னிலங்கை அரசியலில் விரும்பப்பட்டார்கள். பின்னர் 2009இல் ஏற்பட்ட பெரும் தோல்விக்குப் பிறகு ராஜபக்ஷாவின் குடும்ப ஆட்சி முழுமையாக ஆதிக்கம் செலுத்த தொடங்கியது எனலாம். அத்துடன் அரசியல் குடும்பங்களின் ஆதிக்கம் இலங்கை அரசியலில் புதிய விடயம் இல்லை என்றாலும் தற்போதைய இலங்கையில் எங்கு திரும்பினாலும் ராஜபக்ஷ குடும்பம் என்கின்ற நிலை காணப்படுகின்றது. ஜனாதிபதியின் சகோதரர்கள், மகன்கள், அத்தைகள், உற்றார் என்று எல்லோரும் அவர்களாகவே ஆதிக்கம் செலுத்துகின்றார்கள் வேறு யாரும் அரசியலில் வருவதற்கு அவர்கள் இடம் தருவதில்லை என்று பலராலும் விமர்சிக்கப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வருகின்றார்கள். இலங்கையில் குடும்பத்தினரின் ஆட்சி காணப்படுவதால் ஆட்சியில் ஊழல் மலிந்து காணப்படுகின்றது. இதுவே தற்போதைய அரசியல் நெருக்கடிக்கான பின்னணியாக காணப்பட்டுள்ளது.

சமகால அரசியல் நெருக்கடிக்கான இன்னொரு பின்னணியாக ஒடுக்குமுறைச் சிந்தனைகளை குறிப்பிட்டுக் கொள்ளலாம். ஒடுக்குமுறைச் சிந்தனை என்ற வகையில் இலங்கையின் தற்போதைய அரசியலாக இருந்தாலும் சரி 50 ஆண்டுகாலமாக இடம்பெறுகின்ற அரசியலையும் சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குகையில், இலங்கையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இனரீதியான, மதரீதியான ஒடுக்கு முறைகள் இலங்கை அரசியலில் மிக அதிகமான காணப்படுகின்றன. சிறுபான்மை இனங்களைக் குறிவைத்து ஒடுக்கு முறை நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக "1979, 1981, மலையக இனப்படுகொலைகள், 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பொதுநூலகம் ஒரு மூத்த அமைச்சர் தலைமையில் சிங்களக் காடையர்களுடன் சிவில் உடை தரித்த சிங்கள பொலிசார் உட்பட்டோர் மூலம் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட நிகழ்வு 1983 ஆம் ஆண்டு பாரிய கறுப்பு யூலை இனப்படுகொலை வரை அதன் வரலாறானது அரச அனுசரணையுடன் கூடிய இனக்கும்பல் சார்ந்த வன்முறை கொண்டதாகவே காணப்பட்டது." தற்போதும் கூட ஜனநாயகப் போர்வை அணிந்த பெரும்பான்மை சிங்களப் பேரினவாத அரசால் நன்கு திட்டமிட்ட வகையில் ஒடுக்கு முறைச் சிந்தனைகள் இலங்கையில் தூவப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது இனரீதியான முரண்பாட்டுக்கு வழிவகுப்பதாகவும் அரசியலின் சுமூகமான தன்மையினையும் பாதிப்பதாக அமைகின்றது.

அடுத்ததாக இலங்கையின் சமகால அரசியல் நெருக்கடிக்கு முக்கிய காரணமாக இலங்கையினுடைய "பொருளாதார நெருக்கடி" காணப்படுகின்றது. பல ஆண்டு காலமாக செய்த தவறுகள் இன்று பொருளாதார நெருக்கடியாக இலங்கையின் கழுத்தை அறுப்பதோடு மட்டுமல்லாமல் இலங்கையின் அரசியலில் ஒரு சூறாவளியையும் ஏற்படுத்திவிட்டது. குறிப்பாக தற்போது ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டங்களை மேற்கொண்டு வருவது ஆட்சியாளர்கள் தம்மைப் பாதுகாக்கும் பொருட்டு, அவசரகாலச் சட்டத்ததினைப் பிறப்பிப்பது, அமைச்சர்கள் இராஜினாமா செய்தல், ராஜபக்ஷ குடும்பத்தினர் வெளிநாடு செல்லல் போன்ற பல அசாதாரணமான சூழல் இலங்கையில் காணப்பட்டு வருகின்றது. எனவே இன்றைய இலங்கையின் அரசியல் ரீதியான நெருக்கடிக்கு இலங்கையினுடைய பொருளாதார பின்னடைவும் ஒரு காரணம் என்றே கூறிக் கொள்ள வேண்டும்.

எனவே இதைப் போன்ற பல பின்னணிகள் அரசியல் நெருக்கடிக்கு அத்திவாரத்தினை இட்டு இன்று இலங்கையில் எத்திசையிலும் போராட்டங்களும் அராசங்கத்திற்கு எதிரான முறுகல்களும் ஏற்பட்டு அமைதியற்ற நிலையும் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளன.

அடுத்ததாக சமகாலத்தில் இலங்கையில் ஏற்படுகின்ற பொருளாதார நெருக்கடிக்கான பின்னணிகளை ஆராய்வது பொருத்தமுடையதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் அரசியல் நெருக்கடிக்கான காரணமாக சமகாலத்தில் பொருளதார நெருக்கடியே காரணமாக அமைந்துள்ளது. அந்த அளவிற்கு பொருளாதார நெருக்கடியானது இலங்கையில் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதனை நாம் கண்களினூடாகவே பார்த்து வருகின்றோம். அந்த வகையில் இலங்கையில் இத்தகைய படுமோசமான நெருக்கடி (பொருளாதார) வர என்ன காரணம் என்பது தொடர்பாக நோக்குவோம்.

இலங்கையினுடைய பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை அரசாங்கங்களுடைய முறையற்ற பொருளதார திட்டமிடல்களே காரணமாகும். குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தினை நிர்மாணித்தார்கள். இதனால் கடன் சுமார் 150 கோடி டொலர்களாகும். மேலும் 2009 ஆம் ஆண்டு மாத்தளை விமான நிலையம் மாத்தளையில் நிர்மாணிக்கப்பட்டது. இதனால் இலங்கைக்கு பல கோடிக்கணக்கான கடன் எற்பட்டது. இதில் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவெனில் கோடிக்கணக்கான கடன்களை வாங்கி பொருத்தமற்ற இடங்களில் ஒரு தூரநோக்கற்ற திட்டமிடலின்றி தமது சிங்களப் பிரதேசங்களிலே அமையப் பெற வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கத்தை மட்டுமே கருத்திற் கொண்டு நிர்மாணித்தார்கள். அரச தலைவர்கள் இனவாதம் என்கின்ற ஒன்றை மறந்து வருமானம் தரக் கூடிய காங்கேசன் துறை, திருகோணமலை போன்ற இடங்களில் துறைமுகம், விமானநிலையத்தை அமைத்திருந்தால் பல வருமானங்கள் கிட்டியிருக்கும். ஆனால் இன்று காட்டுக்குள் நடுவில் விமான நிலையத்தினைக் கட்டியதால் ஒருவிமானங்கள் கூட தரையிறங்குவதற்கு பயப்பிடுகின்றது. காட்டுவிலங்குகளால் குறிப்பாக மயில் பறப்பதனால் மொத்தத்தில் கோடிக்கணக்கான கடன் வாங்கி கட்டி எந்தவித பலனும் இல்லாமல் கடன் வாங்கி கட்டிய பணத்தைக் கூட வாங்கியவர்களுக்கு கட்ட முடியாமல் பாரியளவிலான பொருளாதார வீழ்ச்சியினைப் பெற்றுக் கொண்டது.

அடுத்ததாக சமகால பொருளதார நெருக்கடிக்கான பின்னணிகளில் மற்றொன்று உள்ளூர் கைத்தொழில் விவசாய உற்பத்திகளை சரியான முறையில் ஊக்குவிக்காமையும் ஆகும். உதாரணமாக காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இயங்காமல் இருக்கின்றது. இதனை அரசாங்கம் இயங்கச் செய்து இருந்தால் சீமெந்தினை இறக்குமதி செய்திருக்கத் தேவையில்லை. இதனை விட கருவாட்டு தொழிற்சாலை, பால்மா தொழிற்சாலை, மாட்டுப் பண்ணைகளை உருவாக்குதல் போன்றவற்றினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் ஊக்குவித்திருந்தால் இன்று இவ்வளவு மோசமான பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை தள்ளப்பட்டிருக்காது.

அடுத்ததாக அரசினுடைய தூரநோக்கற்ற செயற்பாடுகள் இப் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக அமைந்துள்ளது. இலங்கையில் 2009 முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் சிங்கள அரசுக்கு சீனா பக்க பலமாக இருந்ததன் விளைவாக உள்நாட்டு யுத்தம் முடிவடைந்தது. ஆனால் யுத்தம் முடிவடைந்ததன் பின்னரும் ஒருலட்ச இராணுவ வீரர்களை இலங்கை இராணுவத்தில் சேர்ந்துள்ளது. உள்நாட்டில் போர் நடைபெற்றாலோ அல்லது அயல் நாட்டுடன் பகைமையுணர்வோடு அதாவது மோதல் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்திருந்தாலோ ஒரு லட்சம் இராணுவ வீரர்களை பணியமர்த்தி இருக்கலாம். எந்தவித அவசியப்பாடும் இல்லாமல் ஒரு லட்ச இராணுவ வீரர்களை வேலைக்கெடுத்து அவர்களுக்கு சம்பளத்தினை வழங்கி வருகின்றது. இது பாரிய பொருளாதார பின்னடைவு ஆகும். இராணுவ வீரர்களை பணியமர்த்தியதற்கு பதிலாக தூர நோக்குடைய திட்டங்களை செயற்படுத்தியிருந்தால் இன்று ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியை தடுத்திருந்திருக்கலாம் என்பது என்னுடைய கருத்தாகும்.

மேலும் வரியறவீட்டிலே தூர நோக்கு காணப்படாமையும் இன்று பொருளாதார நெருக்கடிக்கான பாரிய பின்னணியாகும். குறிப்பாக 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் தன்னுடைய ஆட்சி நலனுக்காக வரியறவிடாமல் விட்டமை பொருளாதார ரீதியாக பாரிய நெருக்கடியை ஏற்படுத்திவிட்டது. வரிமுறைமையை இல்லாமையாக்கியமை ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமான இடைவெளியினை அதிகரிக்கவும் செய்துவிட்டது.

அடுத்ததாக தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மற்றுமொரு காரணம் ஏற்றுமதி சொற்பமாகவும் இறக்குமதி அதிகமானதாகவும் இருத்தல் ஆகும். இலங்கையிலிருந்து தேயிலை மட்டுமே பெருமளவு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதனைவிட கறுவா, கராம்பு, ஏலக்காய் போன்ற பொருட்களையும் ஏற்றுமதி செய்கின்றது. ஆனால் குண்டூசி முதல் பெரிய வாகனங்கள் வரை அனைத்து விதமான பொருட்களையுமே இலங்கை அராசங்கம் இறக்குமதி செய்து வருகின்றது. குறிப்பாக சில காய்கறிகளினைக் கூட இலங்கை அரசாங்கம் இறக்குமதி செய்கின்றது. ஏன் ரின்மீனைக் கூட இலங்கை அரசாங்கம் இறக்குமதி செய்கின்றது. இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட மீன் வளத்திற்கு குறையில்லாத நாடு அத்தோடு விவசாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யக்கூடிய நிலம் கொண்ட நாடு இவ்வாறான அனைத்து வசதிகள் இருந்தும் எல்லாப் பொருட்களையும் இறக்குமதி செய்வது யாருடைய தவறு என்பதை யோசிக்க வேண்டும். ஆனால் அந்த விதமான எவ்வித யோசனைகளும் இன்றும் கூட அரசாங்கத்திற்கு வரவில்லை என்பது வருத்தமே. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதில் இருந்து கிடைக்கும் வருமானத்தை விட இறக்குமதி செய்வதற்கு போகும் பணம் அதிகமான காணப்படுகின்றது. எனவே இதுவுமே பொருளாதார நெருக்கடிக்கான காரணமாக அமைந்துவிட்டது.

சமகால இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக பொருளாதார சீர்திருத்தக் கொள்ளைகளை இலங்கை அரசாங்கம் சொந்தமாக நடைமுறைப்படுத்திய வரலாறே இல்லை. குறிப்பாக 50 வருட ஆண்டு பொருளாதார திட்டங்கள், 100 வருட பொருளாதார திட்டங்கள் போன்றவற்றினை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்று இலங்கை பொருளாதாரத்தில் செழிப்படைந்திருக்கும்.

அடுத்தாக தற்கால அரசியல் பொருளாதார நெருக்கடிக்கு கொரோனா தொற்று நோயும் காரணமாக அமைந்து விட்டது. கொரோனாத் தொற்றினால் இலங்கையினுடைய ஆடைத் தொழில் பாதிக்கப்பட்டது, சுற்றுலாத்துறை மந்தடைந்தது, மருத்துவச் செலவு அதிகரித்தமை போன்ற பல பொருளாதார பின்னடைவுகளை ஏற்படுத்தி விட்டது. இவ் கொரோனா பிரச்சினை இலங்கையினுடைய பல ஆண்டு காலமாக ஏற்படுத்திய பொருளாதார ரீதியான தவறுகளை இது மேலும் வீரியமடையச் செய்து பாரிய பொருளாதார நெருக்கடியை இலங்கைக்கு உடனடியாக பரிசளித்து விட்டது.

மேலும் தற்போது ரஷ்யா – உக்ரைன் பிரச்சினையும் பொருளாதார நெருக்கடியை இன்னும் வீரியப்படுத்தி விட்டது. குறிப்பாக கூறினால் எரிவாயு பிரச்சினை, பெற்றோல் டீசலின் விலையேற்றங்கள் என்பனவும் இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இன்னமும் நெருக்கடியினை ஏற்படுத்திவிட்டது. இதற்கு ரஷ்யாவினுடைய எண்ணெய் வளஏற்றுமதி தடைப்பட்டமையே ஆகும்.

எனவே இது போன்ற பல பின்னணிக் காரணங்கள் இலங்கையினுடைய சமகால பொருளாதார நெருக்கடிக்கு அத்திவாரம் இட்டுள்ளன. இவ்வாறான பின்னணியினாலேயே இலங்கையின் பொருளாதார நிலை மிக மிக மோசமான நிலையிலும், பொருளாதார நெருக்கடி சீராகுவதற்கும் இன்னும் ஓரிரு ஆண்டுகள் ஆகும் என்றும் பொருளியல் நிபுணர்கள் கூறுமளவிற்கு அகன்ற பாதாளத்திற்குள் இலங்கையின் நிலை போய்க்கொண்டு இருக்கின்றது. எனவே இலங்கையின் இந்நிலைமையினை சீர்செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்னமும் இலங்கையின் அரசியல்,பொருளாதார நெருக்கடிகளை சீர் செய்வதை விட்டு விட்டு இன்னமும் கடன்களை வாங்கியே நாட்டினை சமாளித்து வருகின்றனர். இதனை விட பில்லியன் கணக்கான பணத்தினை இலங்கை மத்திய வங்கி அச்சிட்டிருக்கின்றது இது மிகவும் முட்டாள் தனமான செயற்பாடே ஆகும். இதனால் இலங்கையினுடைய பணத்திற்கு பெறுமதி குறைந்து கொண்டே போகின்றன. இவ்வாறான பல முட்டாள் தனமான செயற்பாடுகளையே இன்னமும் அரசாங்கம் செய்து வருகின்றது. இதனை எல்லாம் நிறுத்த வேண்டும் என்றால் ஊழல் மிக்க தற்போதைய அரசாங்கத்தை கலைத்து நல் அரசாங்கத்தினை அமைத்தல் வேண்டும். மேலும் IMF இன் உதவியினை நாடியிருக்கிறது. ஆனால் அதற்கான முயற்சியினை தொடர்ந்து எடுத்து வரவேண்டும். அப்போது தான் ஓரளவு அரசியல், பொருளாதார நெருக்கடி குறைவடையும். ஆனால் IMF இடம் நிதியனைப் பெற்றுக் கொண்டாலும் பல இறக்குமதிப் பொருட்களை தடைவிதித்தால் தான் நாட்டினுடைய நிலமையினை சமாளிக்க முடியும்.

எனவே எது எவ்வாறாயினும் நல் மாற்றங்கள் ஏற்படினும் இலங்கை ஓரிரு ஆண்டுகள் பழைய நிலையினை பெற்றுக் கொள்ள முடியாது என்பதே எனது கருத்தாகும். இதற்கு காரணம் 1948 சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கையில் ஆட்சியமைத்த எந்தவொரு அரசாங்கங்களும் எந்தவொரு வழிமுறைகளையோ திட்டமிடல்களையோ இலங்கையினுடைய அபிவிருத்திக்கு ஏற்படுத்தவில்லை. மாறாக இனவாதத்தினையே வளர்த்தார்கள். இதனாலேயே இன்று அவர் பாரியளவிலான அரசியல் பொருளாதார நெருக்கடிகளினை சம்பாதித்துள்ளார்கள். இலங்கையினை ஆட்சியமைத்தவர்களுடைய தவறான நடத்தையே இன்றைய இலங்கையினுடைய அப்பாவி மக்களின் பெரும் துன்பத்திற்கு காரணமாகும்.

எனவே இனிமேலாவது இனவாதத்தினை விட்டுவிட்டு நல் அரசாங்கத்தை உருவாக்கி நாட்டினுடைய வளங்களினைப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து, தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்த்து நாட்டினை அபிவிருத்தி பாதையை நோக்கி நகர்த்துதல் வேண்டும். இவ்வாறு செய்தால் தான் இலங்கையினுடைய பிரஜைகளின் எதிர்காலமும் சுபீட்ஷமாகும் என்பது எனது கருத்தாகும். எனவே இலங்கையினுடைய நெருக்கடியினைத் தவிர்ப்பதற்கு நாமும் எங்களால் முடிந்த உதவிகளினை செய்வோமாக...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்.

யோதிலிங்கம்.சி.அ, (2019), "இலங்கையின் அரசியல் யாப்புக்கள்," குமரன் புத்தக இல்லம்.

திருநாவுக்கரசு.மு, (2016), "இலங்கை அரசியல் யாப்பு டொனமூர் யாப்பு முதல் உத்தேச சிறிசேன யாப்பு வரை (1931-2016)", தமிழ் ஆய்வு மையம் (இலங்கை-பிரித்தானியா)

சிவராஜா.அ, (2006), "இலங்கை, அரசியல்" குமரன் புத்தகம் இல்லம்.

குலரத்தினம்.க.ச, (2008),"இலங்கையின் அரசியல் வரலாறு," குமரன் புத்தக இல்லாம்.

உமாசங்.பி, (2014), "இலங்கையின் சமூக பொருளாதார அரசயில் பின்னணியும் உலகளாவிய போக்குகளும், இஸ்லாமிக் புக் ஹவுஸ் கொழும்பு.

சிவாராஜா.அ, (1986) "இலங்கையின் அரசியல் திட்டங்கள்".

புன்னியாமின்.பீ.எம், (1995), "இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி," ஈ.பீ.ஐ.வெளயீடு கொழும்பு

https://www.virakesari.lk/aticle/124002

https://www.bbc.com/tamil/srilanka-46003297

https://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-0

https://www.dinamalar.com/news.detail.asp?id=2992748

https://www.virakesari.lk/aticle/44141

https://www.hindutamil.in/news/world/780566-lanka-battles-wors

https://www.hrw.org/ta/news/2019/01/17/325128

https://www.vinavu.com/2021/10/14/sri-lanka-reeling-under-debt



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமகாலத்தில் இலங்கையிலிருந்து பல்வேறுபட்ட தரப்பினரும் புலம்பெயர்ந்து (Emigration) செல்வதற்கான அடிப்படைக் காரணிகளை வெளிக்கொணர்க.**

இலங்கை இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவுக்கு கீழே 65,610 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பையும் 18 மில்லியன் மக்கள் தொகையையும் கொண்ட ஒரு சிறிய தீவாகும். இந்து சமுத்திரத்தின் முத்தாக காணப்படும் இலங்கை கேந்திர முக்கியத்துவமும் வளமும் மிக்க நாடு என்பதனால் அந்நிய நாடுகளின் செல்வாக்கு அதிகமாகவே காணப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இலங்கை மிக நீண்ட காலமாக மேற்குத் தேச அரசுகளின் ஆட்சிக்கு உட்பட்ட ஒரு நாடாக விளங்கியது. குறிப்பாக 1505- 1658 வரை போர்த்துக்கேயரும், 1658 – 1796 வரை ஒல்லாந்தரும், 1796 – 1948 வரை ஆங்கிலேயரும் இலங்கையை ஆட்சி செய்தனர் இலங்கையில் 1948 ஆம் ஆண்டு ெப்பவரி மாதம் 04 ஆம் திகதி வரையிலான ஆங்கிலேயர் காலனித்துவத்திற்கு பின்னர் இலங்கையில் இன முரண்பாடு முனைப்படைய ஆரம்பித்து 2009 ஆம் ஆண்டு பாரிய யுத்தத்திற்கு வழியமைத்தது. இதனால் பாரிய பொருளாதார செலவுகள் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்ட பின்னணியில் அரசியல், பொருளாதார ஸ்திரமற்ற தன்மை ஏற்பட வழிவகுத்தது. பின்னர் உலகளாவிய கோவிட் - 19 தொற்றுப் பரவல் இலங்கையினுடைய அரசியல், பொருளாதாரத்தை அதலபாதாளத்தில் தள்ளி பாரியளவிலான அரசியல் பொருளாதார நெருக்கீட்டிற்கு இன்று வழிவகுத்துள்ளது.

குறிப்பாக இலங்கையின் உள்நாட்டு யுத்தம் (2009), அதனைத் தொடர்ந்து ஈஸ்டர் குண்டுவெடிப்பு, கோவிட் - 19 என்கின்ற பலத்த அடிகளும் அரசியல் தலைவர்களுடைய தூர நோக்கற்ற கொள்கைகள் திட்டங்ள், ஊழல்கள் என்பனவும் இலங்கையினை இன்று பாரிய அரசியல் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இச் சூழ்நிலையில் மக்கள் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள். இதன் பின்புலத்தில் இலங்கையில் வாழும் பல்வேறு தரப்பின மக்களும் தமது சுயவாழ்வுப் பயத்தின் நிமித்தம் அல்லது பல்வேறுபட்ட தேவைகளின் நிமித்தமும் புலம்பெயர்ந்து வருகின்றார்கள்.

புலம்பெயர்தல் என்பது DIASPORA என்ற கிரேக்கச் சொல்லினை அடியொற்றி கையாளப்படும் சொல்லாகும். "ஓர் இறைமையுள்ள நாட்டிலிருந்து தற்காலிகமாகவோ அன்றில் நிரந்தரமாகவோ இடப்பெயர்வினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்வதனையே சர்வதேச புலம்பெயர்வு என அழைப்பர்." தான் வாழும் நாட்டின் அரச, பொருளாதார சமூக, பண்பாட்டு ரீதியிலான தேவைகள் காரணமாக எல்லை தாண்டி அகதிகளாகச் செல்லல், தொழில் வாய்ப்பு, கல்வி, மருத்துவம், சுற்றுலா போன்ற நோக்கங்களைக்காக செல்லல் என்பன புலம்பெயர்வு எனக் கொள்ளமுடியும்.

"இலங்கையில் வரலாற்றுக் காலங்களிலிருந்து திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழிக்கிணங்க வர்த்தகம் நோக்கம் மற்றும் மதரீதியிலான யாத்திரைகள் போன்ற காரணிகளை முன்னிட்டு சர்வதேச அல்லது நாட்டுக்கு வெளியேயான நகர்வுகள் நிகழ்ந்துள்ளன. சமகாலத்தில் இலங்கைத் தமிழ் அகதிகள் தென்னிந்தியாவிற்கு சென்றமை, இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்கின்றமை, இங்கிலாந்துக்கு உயர் கல்வி நிமித்தம் செல்லும் நிலை போன்றவற்றிற்காக புலம்பெயர்கின்ற போக்கானது காணப்படுகின்றது. அந்த வகையில் சமகாலத்தில் இலங்கையிலிருந்து பல்வேறுபட்ட தரப்பினரும் புலம்பெயர்ந்து செல்வதற்கான அடிப்படைக் காரணிகளை வெளிக்கொணர்வதாகவே இக் கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

அந்தவகையில் முதலாவதாக, பொருளாதார நெருக்கடி என்பது சமகாலத்தில் இலங்கையிலிருந்து பல்வேறுபட்ட தரப்பினரும் புலம்பெயர்ந்து செல்வதற்கான அடிப்படைக் காரணமாக அமைகின்றது. இலங்கையானது தனது வரலாற்றில் என்றுமில்லாத அளவிற்கு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு இன்று முகங்கொடுத்துள்ளது. "உலகளாவிய கொரோனா தொற்றுப்பரவால் பெரும்பாலான உலக நாடுகளின் பொருளாதாரங்கள் பாதிக்கப்பட்டதைப் போன்று இலங்கையின் பொருளாதாரமும் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்தது." குறிப்பாக நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி, பண உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல்கள், உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு என்பன பாதிப்புக்குள்ளாயின. அத்துடன் அளவு கடந்த பொதுக்கடன் சுமையினாலும் பாரிய டொலர் கையிருப்பு வீழ்ச்சியனாலும் அப்பிரச்சினையிலிருந்து மீண்டெழ முடியாதளவிற்கு பாரிய நிதி நெருக்கடி நிலைமையை இலங்கை முகங்கொடுத்துள்ளது. அந்த வகையில் இலங்கையின் இத்தகைய பாரிய நிதி வீழ்ச்சியினை குறுகிய காலத்தில் சீர் செய்வதென்பது முடியாத காரியம் என்பதை உணர்ந்த இலங்கை மக்கள் இவ் நாட்டின் நிச்சயமற்ற பொருளாதார சூழலானது தமது வாழக்கைத் தரம் வாழ்வாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை மந்தமடையச் செய்யும் என்பதனை உணர்ந்து பல்வேறு நாடுகளுக்கு புலம் பெயர்கின்ற நிலையானது காணப்படுகின்றது. உதாரணமாக கனடா தொழில் விசா கொடுக்கும் தருணத்தில் பல்வேறுபட்ட இலங்கை மக்கள் இம்மனநிலையின் நிமித்தம் கனடா செல்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாவதாக, குறைந்தளவிலான சம்பளம் என்பது சமகாலத்தில் இலங்கையிலிருந்து பல்வேறுபட்ட தரப்பினரும் புலம்பெயர்ந்து செல்வதற்கான அடிப்படைக் காரணமாக அமைகின்றது. இலங்கையில் தற்போது பணவீக்கமானது ஏற்பட்டுள்ளது. இதனால் பொருட்களுக்கான விலைகளானது அதிகரித்துச் செல்கின்றது. ஆனால் பொருட்களின் விலையுயர்வுக்கு ஏற்றால் போல் சம்பள உயர்வானது அதிகரிக்கப்படவில்லை. இவ்வாறான நிலையானது மக்களை பசி பட்டினிக்கு தள்ளியதோடு பல தரப்பட்ட மக்களின் அன்றாட வாழ்வினையும் கேள்விக்குரியதாக்கியது. உதாரணமாக கோவிட் -19 முன்னர் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைவாகவும், கோவிட் - 19க்கு பின்னர் அதிகரித்த போக்கினையும் காண முடிந்தது. குறிப்பாக 1200 ரூபாவிற்கு தினக் கூலி செய்யும் ஒருவர் அத்தியாவசிய பொருட்களை நுகர முடியாத சூழ்நிலையினை ஏற்படுத்தியது. இதனால் இலங்கையிலுள்ள பல்வேறுபட்ட தரப்பினர்களும் புலம்பெயர்ந்து வருகின்றார்கள். குறிப்பாக கள்ளப்படகு மூலம் இந்தியாவிற்கு அகதிகளாக புலம் பெயர்ந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மூன்றாவதாக, நியாயமற்ற வரிக்கொள்கை என்பது சமகாலத்தில் இலங்கையிலிருந்து பல்வேறு தரப்பினரும் புலம்பெயர்ந்து செல்வதற்கான அடிப்படைக் காரணமாக அமைகின்றது. இலங்கையில் சமகால பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கான வழிமுறையாக இலங்கை அரசாங்கமானது வரி அதிகரிப்பை மேற்கொண்டது. இச் சூழ்நிலையானது புத்திஜீவிகளின் வாழக்கைத் தரத்தை கேள்விக்குட்படுத்தி வருகின்ற போக்கானது நிலவி வருகின்றது. இதனால் அரச ஊழியர்கள் பலரும் வெளிநாட்டில் தமது வேலைகளினை தொடரும் நிமித்தம் புலம்பெயர்கின்றார்கள். உதாரணமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2023ஆம் ஆண்டு மே மாதம் வரை 70 மேற்பட்ட விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2023ஆம் ஆண்டில் 800க்கு மேற்பட்ட மருத்துவர்கள், 300க்கு மேற்பட்ட விசேட மருத்துவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1000க்கும் மேற்பட்ட பொறியியளாலர்கள், 500க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் 1000க்கும் மேற்பட்ட தொழில் வல்லுநர்கள் அவர்களின் சம்பளத்தில் அரைவாசி வரியாக அரசாங்கம் அறவிடுகின்றது என்ற நிமித்தம் மட்டுமே புலம் பெயர்ந்துள்ளனர்.

நான்காவதாக, குறைந்தளவிலான வாழக்கைத் தரம் என்பது இலங்கையில் உள்ள பல்வேறு தரப்பின மக்கள் வெளியேறுவதற்கான அடிப்படைக் காரணமாக அமைகின்றது. இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் விளைவாக இறக்குமதிக் கட்டுப்பாடு என்பது காணப்படுகின்றது. இதனால் மக்கள் தமக்கு தேவையான பொருட்களை பெற்றுக் கொள்ளமுடியாத போக்குக்கு வழிவகுத்துள்ளது. எனவே மக்கள் தமது தேவைகளையும் அபிலாஷைகளையும் மட்டுப்படுத்தி குறைந்தளவிலான வாழ்க்கைத்தரத்தை விரும்பியோ விரும்பாமலோ அனுபவிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே இத்தகைய தொரு நிலையினை சகித்துக் கொள்ள முடியாத பலரும் புலம் பெயர்கின்றனர். உதாரணமாக வாகன இறக்குமதி தடை நிலவுவதால் இளைஞர், யுவதிகளுக்கு கடும் சவால் மற்றும் தேவைகள், ஆசைகள் நிமித்தம் ஆடம்பர வாழ்க்கைக்காக புலம்பெயர்கின்றனர்.

ஐந்தாவதாக, போதுமான மருத்துவ மற்றும் சுகாதார வசதியின்மை என்பது இலங்கை மக்கள் புலம்பெயர்வதற்கான அடிப்படைக் காரணமாக அமைகின்றது. இலங்கையில் பல்வேறுபட்ட விசேட மருத்துவர்கள் மற்றும் மருத்துவர்கள் வெளியேறியுள்ளமையினாலும் பொருளதார நெருக்கடி நிமித்தம் பல்வேறு மருத்துவ பொருட்களின் தட்டுப்பாடு நிலவுவதனால் நோயாளிகளுக்கு ஏற்றால் போல சிகிச்சைகள் மற்றும் சுகாதார வசதிகள் இடம்பெறுவதில்லை. இதனால் தமது மருத்துவ வசதிகள் நிமித்தம் பல்வேறு தரப்பட்ட மக்களும் புலம் பெயர்கின்றனர்.

ஆறாவதாக, அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலை என்பதும் சமகாலத்தில் இலங்கையிலிருந்து பல்வேறு தரப்பினரும் புலம்பெயர்ந்து செல்வதற்கான அடிப்படைக் காரணமாக அமைகின்றது. குறிப்பாக இலங்கையில் 2009 யுத்தம், ஈஸ்டர் குண்டுவெடிப்பு, அரகல போராட்டம் என்று தொடரந்து அரசியல் ஸ்திரமின்மை நிலவிவருகின்றது. இதன் நிமித்தம் யுத்தம் முடிந்ததற்கு பின்னரான காலப்பகுதியிலிருந்து இன்று அரகல போராட்டத்தின் நிமித்தமும் பலர் புலம் பெயர்ந்துள்ளனர்.

ஏழாவதாக வேலையின்மை என்பது சமகாலத்தில் இலங்கையிலிருந்து பல்வேறு தரப்பினரும் புலம் பெயர்ந்து செல்வதற்கான அடிப்படைக் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகின்றது. கொவிட் - 19 நோய்த் தாக்கம் வேலையின்மையை அதிகரித்துள்ளதனை அவதானிக்க முடிகின்றது. தனியார் துறை நகரத்துறை சொந்தமாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அதிகளவில் தமது வேலைவாய்ப்புக்களை இழந்துள்ளனர். குறிப்பாக "நகரமயமாக்கப்பட்ட மேல் மாகாணமானது வேலைவாய்ப்பில் 28.6% ஆன பங்களிப்பைக் கொண்டுள்ளது. இவர்களில் 36.3% ஆனோர் தமது தொழிலை இழந்துள்ளதாக அண்மிய புள்ளி விபரங்கள் சுட்டுகின்றன. இலங்கையானது உயரந்த தளவான தொழிலாளர் பாதுகாப்புச் சட்டத்தை கொண்டுள்ள போதும் கொவிட் 19 நோய்ப்பரவல் போன்ற எதிர்பாராத இடர்நிலைமைகளின் போது அவர்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருக்கவில்லை என்பது பொதுவான குறையாகவுள்ளது. இதனால் பல்வேறு தரப்பட்ட மக்கள் வேலைவாய்ப்புத் தேடி புலம்பெயர்கின்றார்கள்.

எட்டாவதாக குறைந்த கல்விக்கான வாய்ப்புக்கள் என்பது இலங்கையிலிருந்து பல்வேறு தரப்பினரும் புலம் பெயர்ந்து செல்வதற்கான காரணமாக அமைகின்றது. இலங்கையில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் போன்றோர் புலம் பெயர்வதினால் தரமான கல்வி என்பது கிடைக்கப் பெறுவதில் பாரிய சவால்கள் காணப்படுகின்றது. அத்தோடு பட்டதாரிகள் தமது மேற்படிப்பை மேற்கொள்வதற்கான ஒரு சாதகமான தளம் இலங்கையில் இன்மையால் தமது கற்றல் விருத்திக்காக பல்வேறுபட்ட இலங்கை மக்கள் புலம் பெயர்கின்றனர்.

மேலும் குறைந்த தனிநபர் வருமானம், வளங்களுக்கான அனுகல் இல்லாமை, வறுமை போன்ற பல்வேறுபட்ட காரணங்கள் இலங்கையில் காணப்படும் பல்வேறுபட்ட தரப்பினர்கள் புலம்பெயர்வதற்கான காரணமாகவுள்ளது. அத்தோடு இவ்விடத்தில் குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயமாக எரிபொருள், வீட்டு சமையல் எரியவாயு இன்மையினால் நகர்புற மக்களில் அதகிமானவர்கள் அந்நிலையினை சமாளித்துக் கொள்ள முடியாமல் புலம்பெயர்ந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்தாகும்.

எனவே இவ்வாறான பல காரணங்கள் இலங்கையிலுள்ள பல்வேறு தரப்பினரும் புலம்பெயர்வதற்கான அடிப்படையாகவுள்ளது. இலங்கையிலிருந்து எண்ணற்ற மூளைசாலிகளின் வெளியேற்றமானது நிகழ்ந்து வருகின்றது. இலங்கை அரசாங்கம் மூளைசாலிகளின் வெளியேற்றத்தைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வில்லை என்றால் எதிர்காலத்தில் நாடு பாரிய பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் மூளைசாலிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேற்றத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாவிட்டாலும் அரசாங்கம் இந்த சந்தர்ப்பத்தில் தலையீடு செய்து அதனைக் குறைப்பதற்கான திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

சமகாலத்தில் இலங்கையிலிருந்து மக்கள் புலம்பெயர்வதற்கான பாரியளவிலான காரணம் பொருளாதார நெருக்கடி காணப்படுகின்றது. எனவே இலங்கை அரசாங்கம் பொருளதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு பொருளாதாரத்தை பழைய நிலைக்குத் திரும்ப முயற்சிக்க வேண்டும். குறிப்பாக மானிய முறையிலான உதவித் தொகைகளைப் பெற்று சுயசார்புப் பொருளாதாரத்தை முன்னேற்றுதல், நஷ்டமடைந்த அரச நிறுவனங்களை தனியார் துறைக்கு விற்றல், சுற்றுலாத் துறையில் துரித வளர்ச்சியினை ஏற்படுத்தல் போன்ற பல வழிமுறைகளை செயற்படுத்தி பொருளாதார நெருக்கீட்டினை குறைப்பதற்கான சாதகமான சூழலை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு ஏற்படுத்துமிடத்தே மக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பது எனது தனிப்பட்ட வாதமாகும்.

ஆனால் இலங்கை அரசாங்கம் கடனுக்கு மேல் மேலதிக கடன்களை வாங்கியும் இன்றும் பல்வேறு உள்நாட்டில் தயாரிக்கக் கூடிய பொருட்களான ரின்மீன், குண்டூசி, முட்டை போன்ற பொருட்களைக் கூட இறக்குமதி செய்யும் ஒரு திட்டமிடலற்ற முறையினையே மேற்கொண்டு வருகின்றது என்பது வருத்ததிற்குரிய ஒன்றாகும். இவ்வாறான திட்டமிடலற்ற செயற்பாடுகளானது இலங்கை மக்கள் புலம்பெயர்வதற்கான நியாயப்பாட்டினை வழங்குவதாகவே நான் கூறுவேன்.

இலங்கை அரசாங்கத்தின் தவறான திட்டமிடலினால் பாவம் இலங்கை பிரஜைகள் நாட்டிற்குள்ளும் நாட்டிற்கு வெளியேயும் புலம்பெயர்ந்து பல சிக்கல்களினை அனுபவித்து வருகின்றார்கள். குறிப்பாக புலம்பெயர்ந்தவர்கள் கலாசார ரீதியான சிக்கல்கள், அகதி முகாம்களில் தங்கியிருத்தல் உள்ளிட்ட பல்வேறுபட்ட சிக்கல்களை அனுபவித்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே எதிர்வரும் காலங்களிலாவது இலங்கை அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வான தூரநோக்குக் கொள்கைகள் திட்டங்களை வகுத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றி இலங்கையிலுள்ள பல்வேறுபட்ட தரப்பினரது வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தி நாட்டினுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திக்கு வளம் சேர்க்க வேண்டும் என்பது எனது பேரவாவாக காணப்படுகின்றது.

## உசாத்துனை நூல்கள்

குகபாலன்.க, (2019) “இலங்கைத் தமிழர் புலம்பெயர்வு கணடாவில் அவர்கள் வாழ்வியல்” குரு பிறிண்டேர்ஸ், திருநெல்வேலி

சந்திரசேகரம்.செ, (2012) “கோவிட் -19 பொருளாதார அரசியல் சமூக நோக்கு”. அபி வெளியீடு யாழப்பாணம்.

யோதிலிங்கம்.அ.சி, (2019) “இலங்கை அரசியல் யாப்புக்கள்,” குமரன் புத்தக இல்லம்.

அஸ்மி, பஸ்ஹா, (2022) “வளமான வாழ்க்கை வாய்ப்புக்களை தேடி நகர்தல் இலங்கையின் தேயிலைப் பெருந்தோட்டத் துறையில் பாதுகாப்பற்ற புலம்பெயர்வு மற்றும் ஆட்கடத்தல்”, இன ஆய்வுக்கான சர்வதேச மையம், கண்டி,

பவன்.வு, (2023), “இலங்கையின் வர்த்தக செயற்றிறன், வெளிநாட்டு இருப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பு” இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடி பொருளியில் துறை கிழக்குப் பல்கலைக்கழகம்.

ரம்யா குமார், (2022), “மூளைசாலிகள் வெளியேற்றமும் மருத்துவக் கல்வியின் எதிர்காலமும்” www.kuppicollective.com

Vishnu. (2023) “இலங்கையின் மருத்துவர்களின் புலம்பெயர்வின் தாக்கம்” www.virakesari.lk

குகன் (2023) “பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள் பற்றாக்குறை www.battinews.com

Feizal Samath, (2023), “with an economy in crisis, srilankans migrate out for jobs” www.ews-decoder.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"பொதுத்துறை நிர்வாகம் என்பது பொதுமக்களையும், பொது வளங்களையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும்" விளக்குக.**

பொதுத்துறை நிர்வாகமானது பொதுமக்களையும், பொது வளங்களையும். பொது விவகாரங்களையும், முகாமை செய்கின்ற ஒன்றாக காணப்படுகின்றது. எந்தவொரு அரசிலும் பொதுத்துறை நிர்வாகம் தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்படுகின்றது. அந்த வகையில் இவ் ஒப்படையில் நான் பொதுத்துறை நிர்வாகம் என்பது பொது மக்களையும் பொது வளங்களையும் பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும் என்பதனை நிறுவுவதற்கு பொதுத்துறை நிர்வாகத்தின் பொருள் விளக்கம், அறிஞர்களின் வரைவிலக்கணம், முக்கியத்துவம், இயல்பு, நடைமுறை நிகழ்வுகள் என்பவற்றினடிப்படையில் ஆராய்ந்து அது சரியான கருத்து என நிறுவியுள்ளேன்.

"பொதுத்துறை நிர்வாகம்" அரசின் ஒரு முக்கிய பகுதியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. மன்னராட்சி காலத்தில் இதன் பாகுபாடுகள் விளக்கமாக இல்லாது விடினும் இப்போது மலர்ந்திருக்கும் மக்களாட்சியில் இது தனித்துறையாக பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்பவற்றுள் நிர்வாகத்துறையே எங்கும் பரந்தும் மிகச் சக்தி வாய்ந்ததுமாகக் காணப்படுகின்றது. அரசு செயற்படவும், நிலைபெறவும் அதுவே அடித்தளமாக உள்ளது. வளர்முக சமுதாயங்களில் அரசின் கடமைகள் பெருகியுள்ள நிலையில் பொது நிர்வாகத்தின் செல்வாக்கும் அதிகரித்துள்ளது. நவீன அரசுகளின் வளர்ச்சிப் படிகளில் நடுநாயகமாகவுள்ளது. இந்தப் பொதுத்துறை நிர்வாகமே ஆகும். இதனாலேயே அரசாங்கத்தின் நான்காவது செயற்பாட்டு கரமாக அழைக்கப்படுகின்றது.

பொதுத்துறை நிர்வாகம் என்பது பொதுமக்களையும் பொது வளங்களையும் பொது விவகாரங்களையும் முகாமை செய்கிறது என கூறுமளவிற்கு, நவீன அரசியல் - சமூக வாழ்க்கையில் பொதுத்துறை நிர்வாகம் ஒரு முக்கிய இடத்தினை வகிக்கின்றது. நாகரிக சமுதாய வளர்ச்சியில் பொதுத்துறை நிர்வாகம் பின்னிப் பிணைந்துள்ளது. மனிதனின் அன்றாட வாழக்கையின் ஒரு பகுதியாக அது பரிணமித்துள்ளமையைக் காணலாம். சமுதாய வாழ்க்கையின் பல தேவைகளை நிறைவு செய்யும் வகையில் திட்டமிடல் நடைமுறைப்படுத்தல் பொது வளங்களை பங்கீடு செய்தல் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளில் பொதுத்துறை நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. இன்றைய அரசினை ஒரு "நிர்வாக அரசு" என்று கூறுமளவிற்கு அது தனது எல்லா அலுவல்களையும் நிர்வாகமயப்படுத்தியுள்ளது. அதனால் நாட்டின் வளர்ச்சி அதன் நிர்வாகிகளைப் பொறுத்துள்ளது எனப் பரவலாக நம்பப்படுகின்றது. மேலும் பொதுத்துறை நிர்வாகத்தினைப் பற்றி கூறவேண்டும் ஆனால் "மக்கள் எப்போது தமது அரசாங்கத்தை நிறுவிக் கொண்டார்களோ அன்றிலிருந்து பொதுத்துறை நிர்வாகமும் இயங்கத் தொடங்கி உள்ளது. பொதுத்துறை என்ற பதம் மக்களைக் கவனித்துக் கொள்கின்ற அல்லது மக்களுடன் தொடர்புள்ள அனைத்து விவகாரங்களையும் செயற்பாடுகளையும் குறித்து நிற்கின்றது.

சேமநல அரசுகள் (Welfare States) வளர்ச்சியை அடுத்து சமூகத்தில் பொதுத்துறை நிர்வாகமும் முக்கியத்துவம் உடையதாக மாறியுள்ளது. அந்தவகையில் முக்கியத்துவம் வாய்ந்த பொதுத்துறை நிர்வாகமானது "பொதுமக்களையும் பொது வளங்களையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும்" என்கின்ற கருத்து பரவலாக நம்பப்பட்டு வருகின்றது.

எனவே பொதுத்துறை நிர்வாகம் பொதுமக்களையும், பொது வளங்களையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும் என்கின்ற கருத்தினை நிறுவுவதற்கு பொதுத்துறை நிர்வாகத்திற்கான பொருள் விளக்கம், பொதுத்துறை நிர்வாகம் தொடர்பாக அறிஞர்களின் கருத்துக்கள், பொதுத்துறை நிர்வாகத்தின் இயல்பு, என்பவற்றினடிப்படையில் நோக்கி ஆராய்வது பொருத்தமுடையதாக இருக்கும். அந்தவகையில் முதலாவதாக பொதுத்துறை, நிர்வாகத்தின் பொருள் விளக்கத்தினடிப்படையில் "பொதுத்துறை நிர்வாகமானது பொதுமக்களையும், பொது வளங்களினையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்கின்ற ஒன்றாகும்." என்கின்ற கூற்றினை நிறுவுவது பொருத்தமுடையதாகும்.

நிர்வாகம் (Administration) என்பது ஒருபிரசித்தி பெற்ற பதமாக இருந்த போதும் அது ஒரு எளிமையான அர்த்தத்தையே கொண்டுள்ளது. அந்த வகையில் "நிர்வாகம்" என்பது கவனித்தல் "மக்களைப் பராமரித்தல்" அல்லது "பொது விவகாரங்களை முகாமை செய்தல்" எனப் பொருள் கொள்ளப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொதுநிர்வாகம்" என்ற பதம் "Public Administration" என்கின்ற ஆங்கிலப் பதத்திலிருந்து பெறப்பட்டதாகும். "Public" என்ற பதமானது அரசு ஒன்றின் வரையறுக்கப்பட்ட பிரதேசத்தில் வாழும் மக்களை அல்லது ஒரு அரசில் வாழும் மக்களின் நிரந்தர வாழ்விடங்களைக் குறித்து நிற்கின்றது. ஒரு அரசில் மக்களுடைய பிரதிநிதித்துவம் அரசாங்கத்தினால் நிரப்பப்படுகின்றது. இதனால் "Public" என்ற பதம் "Governmental" என்ற பதத்தினால் சிறப்பிக்கப்படுகின்றது. நிர்வாகச் செயற்பாடு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் போது அது "பொது நிர்வாகம்" என அழைக்கப்படுகின்றது. ஆங்கிலப் பதமாகிய "Administration" என்பது இலத்தீன் பதங்களாகிய அட் + மினிஸ்ரயர் (Ad+ Ministiare ) என்பதிலிருந்து உருவாக்கப்பட்டதாகும். இதன் கருத்து சேவை செய்தல் என்பதாகும். ஆங்கிலப் பதமாகிய "Administration" என்பதன் கருத்து எல்லா விவகாரங்களையும் முகாமை செய்வது அல்லது மக்களைக் கவனித்துக் கொள்வது என்பதாகும். உண்மையில் நிர்வாகத்தின் இயல்பு அரசினை முகாமை செய்வது ஆகும். பொது நிர்வாகம் அரசாங்க முறைமைகளிலுள்ள எல்லா நிறுவனங்களிலும் காணப்படுகின்றது. முடிவாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் பொது இலக்கிற்காக ஒன்று சேருகின்றமை நிர்வாகச் செயற்பாடாகவே கருதப்படுகின்றது. சமூகத்திலுள்ள ஒவ்வொரு குழுவினதும் செயற்பாடு நிர்வாகச் செயற்பாடேயாகும்.

எனவே சாதாரண மொழியில் கூறினால் "பொதுத்துறை நிர்வாகம்" என்பது "பொதுவிலாக உள்ள அரச விவகாரங்களை முகாமை செய்தல்" அல்லது "பொது மக்களைப் பராமரித்தல் எனப் பொருள்படுகின்றது. "மக்களுக்காக அல்லது பொது நலனுக்காக" செயல்படுவதை பொதுத்துறை நிர்வாகம் எனக் கொள்கின்றோம். ஆகவே பெயருக்கேற்றாற் போல பொதுமக்களுக்காக அந்த நிர்வாக இயந்திரம் இயங்குகின்றது. இந்த ஆட்சி இயந்திரம் வெவ்வேறு நிலைகளில் பலராலும் வழிநடத்தப்படுகின்றது. அதனை இயக்குபவர் அல்லது அதற்கு பொறுப்பாக உள்ளவர் அரசனாகவோ பிரதம மந்திரியாகவோ, ஜனாதிபதியாகவோ அல்லது மாநகரசபைத் தலைவராகவோ இருக்கலாம். அதிகாரம் பரவலாக்கப்பட்ட நிலையில் ஒரு காரியதரிசியோ அல்லது தலைமை நிர்வாகியோ நிர்வாகத்தினை நடத்தலாம். பொது நிர்வாகம் நிரந்தரமான பொது நன்மைகளை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது.

எனவே பொதுத்துறை நிர்வாகத்தின் பொருள் விளக்கத்தினை ஆராயும் போது பொதுத்துறை நிர்வாகம் என்கின்ற பதமானது பொதுமக்களையும், பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களையும். பொது விவகாரங்களையும் முகாமை செய்கின்ற ஒன்றாகவே பொருள் கொள்ளப்படுகின்றது என்பது மேற்கண்ட அல்லது மேலே தெளிவாக முன்வைத்த பொதுத்துறை நிர்வாகத்திற்கான பொருள் விளக்கத்திலிருந்து தெளிவான முடிவிற்கு வரக்கூடியதாக உள்ளது.

இரண்டாவதாக அறிஞர்களின் பொதுத்துறை நிர்வாகம் தொடர்பான வரைவிலக்கணத்தினடிப்படையில் "பொதுத்துறை நிர்வாகமானது பொது மக்களையும், பொது வளங்களையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும்" என்கின்ற கருத்து ஏற்புடையதான ஒன்றே என்பதனை நிறுவுவது பொருத்தமுடையதாகும்.

பொதுத்துறை நிர்வாகத்திற்கு வேறுபட்ட பல வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பொது நிர்வாகம் பற்றி பேராசிரியர் விக் (Vieg) என்பவர் கூறும் போது "இது திட்டமிட்ட முயற்சியாகும். பொது நலனை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்ட குறிக்கோளையும், மூலவளங்களையும் திட்டமிட்டுப் பயன்படுத்தும் செயன்முறையாகும்" என்கிறார். பெலிக்ஸ் அந்தனி நீக்றோ என்பவர் "நிர்வாகம் என்பது ஓர் ஒழுங்கமைப்பு ஒரு குறித்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக மானிடர்களையும் பொருட்களையும் அது பயன்படுத்துகின்றது." என்கிறார். ஜேம்ஸ் பி(F)ப்னர் (James M. Pfiffner) என்பவர் "முன்னரே திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளும் முகமாக மானிட மற்றும் மூலப்பொருள் வளங்களை ஒன்று திரட்டுவதும் இயக்குவதுமே நிர்வாகமாகும்" என்கிறார். ஈ.என்.கிலாடன் (E.N.Gladden) என்பவர் "அரசாங்கத்தின் நடவடிக்கையுடன் தொடர்புபட்டதே பொதுத்துறை நிர்வாகம்" என்கிறார். வூட்றோ வில்சன் (Woodraw Wilson) என்பவர் "பொதுச்சட்டத்தின் முழுமையானதும் முறையானதுமான செயலாக்கம் தான் பொதுத்துறை நிர்வாகம்" என்கிறார்.

மேற்கூறிய வரைவிலக்கணங்களின் மூலம் பொதுக்கொள்கையும், அதன் அமுலாக்கத்தினையும் ஆராய்வதே பொதுத்துறை நிர்வாகம் எனக் கூறலாம். ஆயினும் விஞ்ஞான ரீதியில் நோக்குகின்ற போது பொதுத்துறை நிர்வாகம் என்பது அரசாங்கத்தின் செயற்பாடுகள் மாத்திரமன்றிச் சிவில் சமுகத்தையும் உள்ளடக்கியதே பொதுநிர்வாகம் எனலாம். எனவே மக்களின் நலனிற்காக நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து விடயங்களும் பொது நிர்வாகவியலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடங்குகின்றன. இதனால் பொது நிர்வாகத்தில் பொது மக்களின் நலனும் அபிவிருத்தியுமே வலியுறுத்தப்படுகின்றது.




source https://www.google.com/imgres?imgurl=https%3A%2F%2Fvikingscareerstrategists.com%2Fwp-content%2Fuploads%2F2020%2F05%2Fpublic-admin.png&tbnid=i0bGfP29QEfxwM&vet=1&imgrefurl=https%3A%2F%2Fvikingscareerstrategists.com%2Fcareer-in-public-administration-jobs-career-path-and-relevant-skills%2F&docid=AAHcKMuVLjw4gM&w=709&h=521&source=sh%2Fx%2Fim%2Fm1%2F2&kgs=e7cbdb042de93df3

பொதுத்துறை நிர்வாகம் என்பது "திட்டமிட்ட இலக்கினை அடைவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளையும் குறித்து நிற்கின்றது." அதாவது "அரசாங்க நிறுவனங்களாகிய சட்ட, நிர்வாக, நீதித் துறைகளின் கூட்டுச் செயற்பாடுகளே பொது நிர்வாகமாகும்" "சில சிந்தனையாளர்கள் எல்லா அரசாங்கங்களும் தமது பொதுக்கொள்கை என்ற நோக்கத்தினை அடைவதற்காகக் கையாளும் செயற்பாடுகளே பொதுத்துறை நிர்வாகம்" என்கின்றனர். சிலர் அரசாங்க நிறுவனங்களில் ஒன்றாகிய நிர்வாகத்துறையின் ஒழுங்கமைப்பு, முகாமைத்துவ நுட்பங்களுடன் கூடிய செயற்பாடுகளே பொது நிர்வாகம்" எனக் கூறுகின்றனர். மேலே கூறப்பட்ட வரைவிலக்கணங்கள் பற்றி நோக்கும் போது சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் சம முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். சிலர் நிர்வாகத் துறையுடன் தொடர்புடைய பகுதிகளுக்கும் செயற்பாடுகளுக்கும் மட்டும் முக்கியம் கொடுக்கிறார்கள். சிலர் பொது கொள்கைக்கும், அதன் அமுலாக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

ஒவ்வொரு அறிஞர்களின் வரைவிலக்கணத்தினடிப்படையில் பார்க்கும் போது சில அறிஞர்கள் பொதுத்துறை நிர்வாகமானது "பொது மக்களை முகாமைப்படுத்துதல்" என்கின்ற வகையிலும் வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். ஆகவே பொதுத்துறை நிர்வாகம் தொடர்பாக இவ்வாறான மையக்கருத்துக்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு அறிஞர்கள் தமக்கேற்றால் போல் வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளார்கள். எனவே அறிஞர்கள் கூறிய கூட்டு மொத்த வரைவிலக்கணங்களிலிருந்து ஒரு தீர்க்கமான கருத்தினை பகுப்பாய்ந்து எடுத்தால் அது பொதுத்துறை நிர்வாகம் என்பது "பொது மக்களையும், பொது வளங்களையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும்" என்கின்ற முடிவிற்கு திட்டவட்டமாக வரமுடிகின்றது. ஆகும்.

இவ்வகையில் எல்.டி.வைட் என்பவர் பொது நிர்வாகம் என்பது "பொதுக்கொள்கையின் நோக்கங்களுக்கான எல்லாச் செயற்பாடுகளையும் தன்னுள் கொண்டுள்ளது" என்றார். ஜே.எஸ். ஹொட்சன் (J.A. Hotgson) என்பவர் பொதுத்துறை நிர்வாகம் என்பது தனிமனிதனுடைய அல்லது அரசாங்கக் குழுக்களுடைய அல்லது அதன் பகுதிகளினுடைய எல்லாச் செயற்பாடு களுமாகும். அரசாங்கத்தின் நோக்கங்களை முகாமைப்படுத்துவதற்காக ஆட்சியாளர்கள் தமது செயற்பாட்டினைச் சர்வதேச, பிராந்திய, உள்ளூர் மட்டங்களில் ஒழுங்கமைக்கின்றார்கள்" என்கிறார். எச். சைமன் (H.simon) என்பவர் "பொதுவான இலக்கினை நிறைவேற்றுவதற்காக குழுக்களின் கூட்டுறவான செயற்பாடுகளே நிர்வாகம்" என்றார். எச்.வோல்ஹர் (H.Walker) என்பவர். "அரசாங்கத்தின் சட்டத்திற்குப் பெறுமானத்தைக் கொடுப்பதால் அது நிர்வாகம் என அழைக்கப்படுகின்றது." என்றார்.

இவ்வரைவிலக்கணங்கள் யாவும் மக்களுடைய நலனுக்காக இயங்குகின்ற நிறுவனமாகப் பொதுத்துறை நிர்வாகத்தினை அடையாளப்படுத்துகின்றன. பொது நிர்வாகம் அரசியல் மாற்றங்கள், பதட்டங்களுக்கு மத்தியிலும் பொது வளங்களையும் ஒன்று திரட்டி அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்கிற்குட்படாது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளேயாகும். எனவே தாராண்மை ஜனநாயகம் மக்கள் உரிமைகளை பாதுகாப்பதற்கும், சேவை செய்வதற்கும், முகாமை செய்வதற்கும் மேற்கொள்ளும் செயற்பாடுகளே பொதுத்துறை நிர்வாகம் எனலாம் எனவே இறுதியாக அறிஞர்களின் வரைவிலக்கணங்களினை வைத்து ஆராய்ந்தால் பொதுத்துறை நிர்வாகம் என்பது “பொது மக்களையும் பொது வளங்களினையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும்” என்கின்ற கருத்து சரியானது என்கின்ற முடிவிற்கு வரக்கூடியதாகவுள்ளது.

மூன்றாவதாக பொதுத்துறை நிர்வாகத்தின் இயல்புகளினடிப்படையில் பொதுத்துறை நிர்வாகமானது. “பொதுமக்களையும், பொது வளங்களையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும்.” என்கின்ற கருத்து பொருத்தமானதாகும் என நிறுவுவது ஏற்புடையதாகும்.

பொதுத்துறை நிர்வாகம் தன்மீது உள்ளார்ந்த தடைகளை மெற்கொள்வதனையும் மேற்பார்வை செய்வதனையும் ஏற்றுக்கொள்கின்றது. ஒரு பாராளுமன்ற ஜனநாயகத்தில் அமைச்சர்களின் அமைச்சரவைப் பொறுப்பு என்ற மரபின் கீழ் அவர்களது அமைச்சுச் செயற்பாடுகள் குறித்து அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்கு பொறுப்புடையவர்களாக உள்ளனர். பாராளுமன்றம் மக்கள் பிரதிநிதிகளை கொண்டது. என்ற வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்கு பொறுப்புக் கூறுகின்றனர். பொதுத்துறை நிர்வாகம் சிக்கலான பல சட்டங்கள் மற்றும் திட்டங்கள் ஊடாக இயக்கப்படுவதனால் பொதுத்துறை நிர்வாகிகளும், அமைச்சர்களும் பொதுமக்களுக்கு பொறுப்பு கூறும் கடமைப்பட்டவர்களாவார். ஆகவே பொதுத்துறை நிர்வாகமானது பொதுமக்களுக்கு பொறுப்புக் கூறும் இயல்பினைக் கொண்டு காணப்படுகின்றது.

நேர்மை அல்லது நியாயம் என்கின்ற இயல்பினைக் கொண்டு பொதுத்துறை நிர்வாகம் காணப்படுகின்றது. அதாவது குறிப்பிட்ட விடயத்தில் பொதுமக்கள் மத்தியில் பாரபட்சம் காட்டாது சமமாக நடாத்தும் அல்லது கருதும் தன்மையினை குறித்து நிற்கின்றது.

சட்டபூர்வ தன்மை மிக்கது அதாவது பொதுத்துறை நிர்வாகத்தின் எந்தவொரு செயற்பாடும் அல்லது செயற்பாட்டிற்கான தீர்மானமும் சட்ட அதிகாரத்திற்கு புறம்பாக இராது. பொதுத்துறை நிர்வாகம் சட்டத்தினால் கட்டளையிடப்பட்டு விசேட அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை மட்டுமே மேற்கொள்ளும். ஆதலால் பொதுத்துறை நிர்வகாமானது அதன் பணிகளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி மாற்றியமைத்துக் கொள்ள முடியாது. பொதுத்துறை நிர்வாகாமானது அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை உச்சரிப்புக்களையும் கவனத்தில் கொண்டே பணியாற்ற வேண்டியுள்ளது.

பன்மைத்துவமான செயற்பாடுகளை செய்கின்றமை. அதாவது பொதுத்துறை நிர்வாகமானது தன்னுடைய ஆள்புல எல்லைப்பகுதிக்குள் வாழ்கின்ற எல்லா மக்களுக்கும் உயிரினங்களுக்கும் தேவையாகவுள்ள பல்வேறு மட்டங்களில் உள்ள பல்வேறு பணிகளை செய்கின்றன. எனவே பொதுத்துறை நிர்வாகத்தின் இயல்புகளினடிப்படையில் ஆராயும் போது பொதுத்துறை நிர்வாகம் என்கின்ற பதமானது “பொது மக்களையும் பொது வளங்களையும் பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும்” என்கின்ற கருத்தினை ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே உள்ளது.

பொதுத்துறை நிர்வாகமானது இன்று அரசாங்கத்தின் நோக்கங்களை நிறைவு செய்கின்ற அடிப்படை தாபனங்களுள் ஒன்றாகும். பொதுத்துறையின் அடிப்படை அம்சமாக திட்டமிடல், ஒழுங்கு படுத்தல், கட்டுப்படுத்தல், அமுலாக்கல், இணைத்து வைத்தல், கொண்டு நடாத்துதல் என்பனவாகும். P.Mcqueen என்பவர் principle of public Administration என்ற நூலில் பொது நிர்வாகத்திற்கான அடிப்படை அம்சங்களாகக் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார். அவையாவன, பொது நிர்வாகச் செயற்பாடுகள் அதாவது கருமங்களை வேறுபடுத்தல், கொண்டு நடத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கியது. அடுத்து நிர்வாக அமைப்புக்களை ஸ்தாபித்தல், ஆளணி முகாமைத்துவம், பொருள் மற்றும் நிரம்பல் பணிகள் என்பனவாகும். “பொதுத்துறை நிர்வாகத்தின் அடிப்படை அம்சங்கள் தொடர்பாக கருத்து தெரிவித்த லூதர் குலிங் என்பவர் POSDCORB” பற்றிய எண்ணக்கருவில் குறிப்பிடுகின்றார்.




Source:- https://images.app.goo.gl/qWr3CyEqM2oY9gnMA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுத்துறை நிர்வாகத்தின் அடிப்படை அம்சங்களை வைத்துப் பார்க்கும் போது கூட பொதுத்துறை நிர்வாகமானது பொது மக்கள், பொது வளங்கள் பொது விவகாரங்கள் என்கின்ற விடயங்களை சுற்றியே காணப்பட்டது.

நான்காவதாக பொதுத்துறை நிர்வாகத்தின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் பொதுத்துறை நிர்வாகமானது "பொது மக்களையும், பொது வளங்களையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும்." என்கின்ற கூற்றினை ஆராய்ந்து நிறுவுவது பொருத்தமுடையதாகும். "ஓர் அரசு சிறப்பாக இயங்குவதற்கும் நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும் அரசின் நோக்கங்களையும் இலக்குகளையும் முன்னெடுத்துச் செல்லவும் பொதுத்துறை நிர்வாகம் இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது."

பொது மக்களின் பல்வேறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்து அவர்களின் நிலையை உயர்த்துவது, நாட்டில் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவது, குடிமக்களினதும் தேசத்தினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என பல்வேறுபட்ட பணிகளில் பொதுத்துறை நிர்வாகமும் சிவில் சேவையும் அளப்பரிய பங்களிப்பினை வழங்குகின்றன.

அண்மைக்காலமாக நல்லாட்சி எனும் எண்ணக்கரு அரசியல் மற்றும் பொதுத்துறை அரங்கில் பிரபல்யமாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் பொதுத்துறை நிர்வகாமானது சட்டத்தின் ஆட்சியை நேர்மையாகவும் முறையாகவும் மேற்கொள்ளல் மக்களுக்கிடையிலான வேறுபட்ட அபிப்பிராயங்களை பரந்துபட்ட இணக்கப்பாடுகளுடன் முறையாகத் தீர்த்து வைத்தல், எல்லோரையும் சமமாகவும் நேர்மையாகவும் நடாத்துவதற்கான சமசந்தர்ப்பமும் வழங்கல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை நலலாட்சி வேண்டி நிற்பதால் அவற்றை மேற்கொள்வதில் பொதுத்துறை நிர்வாகம் முக்கிய பங்கினை ஆற்றுகின்றது.

பொதுத்துறை நிர்வாகமானது ஒரு நாட்டின் பிரதான மூன்று துறைகளாகிய சட்டத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறையினரது தீர்மானங்களையும் திட்டங்களினையும் மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று நடைமுறைப்படுத்துகின்ற தரப்பினராகக் காணப்படுகின்றனர். பொதுத்துறை நிர்வாகம் இன்றி எந்தவொரு அபிவிருத்தி செயற்பாடுகளினையும் அரசுகள் வெற்றிகரமாக செயற்படுத்த முடியாமையினால் அனைத்து தேசிய அரசுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுத்துறை நிர்வாகத்திற்கு அதிகளவிலான முக்கியத்துவம் வழங்கி வருகிறது. இதனால் தான் நவீன அரசுகளை நிர்வாக அரசுகள் எனவும் கூறப்படுகின்றன. பொதுத்துறை நிர்வாகமானது தொடர்ச்சியானதும் நீண்ட வரலாற்றினைக் கொண்டதாகவும் வளர்ச்சியடைந்து வருகின்ற பின்னணியில் பொதுத்துறை நிர்வாகத்தின் பங்களிப்பின்றி தேசிய அரசுகள் வெற்றிகரமாக செயற்பட முடியாத நிலை காணப்படுகின்றது.

இன்று மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் பொதுத்துறை நிர்வாகமானது நிரந்தர பணியாளர் தொகுதியைக் கொண்ட அமைப்பு ஒழுங்காக செயற்பட்டு வருகின்றது. இப்பொதுத்துறை நிர்வாகத்தினர் அரசாங்கம் உருவாக்கும் கொள்கை திட்டங்களை அமுலாக்கம் செய்கின்ற செயற்பாட்டினை தமது வாழ்க்கையில் பிரதான பகுதியாகக் கொண்டு நீண்ட காலமாக செயற்பட்டு வருகின்றன. அந்த வகையில் பொதுத்துறை நிர்வாகத்தின் முக்கியத்துவம் அளப்பரியதாகும்.

எமது அன்றாட வாழ்வில் அக்கறை செலுத்தாத அரசாங்க அமைப்புக்களும் மனிதனின் நடவடிக்கையினை கட்டுப்படுத்தாத அரசாங்க விதிகளும் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகளும் இல்லையெனும் வகையில் இன்றைய அரசின் செயல்கள் அதிகரித்துள்ளன. அரசாங்கத்தின் செயல்களின் பரப்பு விரிவடைய விரிவடைய மக்களது வாழ்க்கையில் பொதுத்துறை நிர்வாகம் பெறும் பங்கு முக்கியத்துவத்தினை பெறுகின்றது. மக்களின் விருப்பங்களையும் நாட்டின் விளைவுகளையும் நிறைவு செய்யும் வகையாக அரசு வகுக்கும் கொள்கைகளையும், திட்டங்களையும் வேறு பல விடயங்களையும் நடைமுறையாக்கும் பொறுப்பு பொது நிர்வாகத்தை சார்ந்ததாகவுள்ளது.

அரசாங்கத்தின் பொதுக்கொள்கை வலிமையும், சிறப்பும் பெற்றதாக இருப்பினும் அவை சிறந்த முறையில் செயற்படுத்தப்படவில்லையாயின் அதனால் எவ்வித பலனுமில்லை எனவே "அரசாங்கத்தின் பொதுக்கொள்கையை அமுல்படுத்தும் பொதுநிர்வாகத்துறை விரைவாகவும், செயல்திறனுடனும் நேர்மையுடனும் செயற்படாவிட்டால் அரசாங்கத்தின் சிறந்த சட்டங்களும், பொதுக்கொள்கையும் பயனற்றதாகிவிடும் எனவே பொதுத்துறை நிர்வாகம் முக்கியத்துவத்தினைக் கொண்டு காணப்பட்டு வருகிறது.

எனவே பொதுத்துறை நிர்வாகமானது ஒரு நாட்டிற்கு அளப்பரிய முக்கியத்துவத்துடன் கொண்டு காணப்பட்டு வருகின்றது. அந்த வகையிலும் குறிப்பாக பொதுமக்களை முகாமைப்படுத்துவதற்கும் அவர்களுக்கு சேவை செய்வதற்கும் பொது வளங்களை சரியாகவும் நடைமுறைப்படுத்துவதற்கும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீண்விரயமாக்காமலும், பொது விவகாரங்களை கொண்டு நடாத்துவதற்கும் கொள்கையினை அமுலாக்குவதற்கும் பொதுத்துறை நிர்வாகத்தின் முக்கியத்துவமானது இன்றியமையாததாகும் என்பது நிதர்சனமான உண்மை என்று தெரிகின்றது. ஆகவே பொதுத்துறை நிர்வாகமானது ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது என நோக்கும் போது பொது மக்களையும், பொது வளங்களையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்வதற்கு ஆகும் எனக் கூறுவது பொருத்தமுடையதாகும். எனவே பொதுத்துறை நிர்வாகத்தின் முக்கியத்துவத்தினடிப்படையிலிருந்து பார்க்கும் போது கூட பொதுத்துறை நிர்வாகமானது பொதுமக்களையும், வளங்களையும் பொது விவகாரங்களையும் முகாமை செய்வதோடு மட்டுமே தொடர்புபட்டு காணப்படுகிறது. எனவே பொதுத்துறை நிர்வாகமானது "பொது வளங்களையும், பொது மக்களையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும்" என்கின்ற கூற்றினை ஐயமின்றி ஏற்றுக்கொள்வதே சிறந்தது ஆகும்.

பொது மக்களுக்கு சேவை செய்வது என்பது பொதுநிர்வாகத்தின் கடமையாகும். பொதுத்துறை நிர்வாகத்திற்கு உதாரணமாக பாராளுமன்ற மாகாணசபைகள், திணைக்களங்கள், பிரதேச செயலகம், பிரதேச சபை, நகரசபை, கிராமிய மட்ட சமூக அமைப்புக்கள், போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றின் மூலம் மக்களுக்கு வாழ்வாதார உதவியினை வழங்குதல், மீள்குடியேற்றத்திற்கான உதவியினை வழங்கி வருகிறது. பிச்சைப் பணக்கொடுப்பணவு, சமுர்த்தி திட்டங்கள், பிறப்பு இறப்பு சான்றிதழ்களை வழங்குதல், வாகன வரி அதற்கான சான்றிதழ்கள் போன்ற சகல விடயங்களையும் பொதுத்துறை நிர்வாகமே செயற்படுத்தி மக்களினை சரியான முறையில் வழிநடத்தி கொண்டு செல்வதனை நாம் கண்களினூடாக பார்க்க முடிகிறது. மேலும் பொது மக்களிடமிருந்து வரிகளினை அறவிடுவதும் அவற்றை முறையாக கணக்கு வைத்து பொதுக் காரியங்களுக்கு செலவிடுவதும் இதன் கடமையாகவுள்ளது.

போக்குவரத்துச் சேவை, பாடசாலைகள், வைத்தியசாலைகள், சந்தைகள், தெருக்கள் போன்ற பொது வளங்களினை கண்காணிப்பதும் அதனைப் பராமரிப்பதும், அதனை வழிநடத்துவதும், பொதுத்துறை நிர்வாகிகளே ஆவார்.

நாட்டு மக்களின் நலனுடன் தொடர்புடைய கொள்கைகள் வகுக்கப்படுவதுடன் பல்வேறு திட்டங்கள் மற்றும் சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பொதுத்துறை நிர்வாகம் உதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டால் வீதியோரச் சட்டங்கள், கிராமிய முன்னேற்றம் தொடர்பான கொள்கைகள், நலன்புரித்திட்டங்கள், சமூக அபிவிருத்தி செயற்பாடுகள், திட்டமிடல் நடவடிக்கைகள் பாதை முன்னேற்றத் திட்டங்கள் போன்ற விடயங்களினை அல்லது திட்டங்களினை பல நிர்வாக முறைகளாக பிரித்து பொதுத்துறை நிர்வாகிகள் மூலம் செயற்படுத்தி வருகின்றமையை காணக்கூடியதாகவுள்ளது. மேலும் விவசாயம், சுகாதாரம். கைத்தொழில், கல்வி போன்ற பொது விவகாரங்களையும், பொதுத்துறை நிர்வாகமே முகாமைப்படுத்தி வருகின்றது.

ஒரு தனி மனிதனுக்கு ஏற்பட்டுள்ள அநீதியினை அரசாங்கமானது நேரடியாக கவனம் செலுத்த முடியாது இதனடிப்படையில் குற்றத்திற்கான தண்டனையானது கொள்கையாகவோ அல்லது தீர்மானமாகவோ யாப்பில் அமைந்து காணப்படும். இத் தீர்மானமானது அக் குற்றவாளியை சென்றடைய நீதிமன்றங்களில் உச்ச நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், பொலிஸ் போன்ற அமைப்புக்களினால் வழங்கப்படுகிறது. அதனடிப்படையில் இங்கு நோக்கும் போது ஒரு கூட்டமோ அல்லது தீர்வோ சாதாரண மனிதனை சென்றடைய மேற்கூறிய வழிமுறைகள் மூலமும் பொலிஸ், நீதிபதிகள் போன்ற பொதுத்துறை நிர்வாகத்தின் மூலமே சென்றடைவதை காணமுடிகிறது.

எனவே நடைமுறையில் நாம் பார்க்கின்ற நிகழ்வுகளினூடாகவும் பார்க்கும் போது பொதுத்துறை நிர்வாகமானது பொது மக்களையும் பொது வளங்களையும், பொது விவகாரங்களையும் கொண்டு நடாத்துகின்ற ஒன்றாகவே இருக்கின்றது. ஆகவே பொதுத்துறை நிர்வாகம் என்பது பொதுத்துறை நிர்வாகத்திற்கான பொருள் விளக்கம், அறிஞர்களின் வரைவிலக்கணம், பொதுத்துறை நிர்வாகத்தின் இயல்பு, முக்கியத்துவம், பொதுத்துறை நிர்வாகத்தின் நடைமுறையிலுள்ள செயற்பாடுகள் என்பவற்றினடிப்படையில் பார்க்கும் போது “பொது மக்களையும், பொது வளங்களினையும், பொது விவகாரங்களளினையும் முகாமை செய்தலே ஆகும்” எனக் கூறுவது அர்த்தமுடையதாகவும் பொருத்தம் உடையதாகவும் இருக்கின்றது.

ஒரு நாட்டினை வளர்ச்சியடையவும் முன்னேற்றம் பெறவும் பொதுத்துறை நிர்வாகம் இன்றியமையாததாகும். பொதுத்துறை நிர்வாகமானது “பொது மக்களையும், பொது வளங்களையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும்.” என்று கூறுமளவிற்கு அதன் செயற்பாடானது பரந்து விரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் காணப்படுகிறது. கலானித்துவ ஆட்சியில் கருவியாக செயற்பட்டு வந்து இன்று ஒரு அபிவிருத்தி பெற்ற தேசிய நலனை முன்னெடுத்து செயல்படுவதாக காணப்படுகின்றது. இன்று அரச நடைமுறையில் இப்பொதுத்துறை நிர்வாகமானது நான்காவது கரமாக கொள்ளப்படுகின்றது.

“பொதுத்துறை நிர்வாகமானது கிடைக்கக் கூடிய மூலவளங்களையும் உத்தியோகத்தர்களையும் எப்படித் திறம்பட பயன்படுத்துவது என்பதைக் குறிக்கோளாக கொண்டுள்ளதாகும். வீண்விரயத்தை தவிர்க்கவும் மனித சக்திப் பொருள்களை பயனுள்ள வகையில் பயன்படுத்தவும் பேணவும், அமைதியையும் ஒழுங்கையும் பேணல், கல்வி புகட்டல், சுகாதாரம் பேணல் போன்ற விடயங்களில் முகாமைத்துவ பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. எனவே பொதுத்துறை நிர்வாகமானது “பொதுமக்களையும் பொது வளங்களையும், பொது விவகாரங்களையும் முகாமை செய்தலே ஆகும்.”

நவீன அரசுகளில் இன்று பொதுத்துறை நிர்வகாமானது முக்கியமான தொழிற்பாடுகளை ஆற்றி வருவதனால் அரசுகளானவை இன்று நிர்வாக அரசுகளாக மாற்றமடைந்து வந்துள்ளன. அதாவது ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் எனலாம். இதனால் பொதுத்துறை நிர்வாகம் ஆரம்பகாலந் தொட்டு இன்று வரை நடைமுறையிலிருக்கும் சகல விதமான அரசுகளும் தொடர்ச்சியாக அதன் தொழிற்பாட்டினை செய்து வருவதனால் மக்கள் தங்களது தேவைகளை அரசுகளிடமிருந்து பெற்றுக் கொள்ள முடிகிறது.

## உசாத்துணை நூல்கள்


கிருஷ்ணமோகன்.த, (2010), “அரசியல் விஞ்ஞானம் அரசியல் செயற்பாடும், அரசியல் செயல்முறையும்” , சேமமடு பதிப்பகம்.

அமிர்தீன்.வி, (2001), “பொதுத்துறை நிர்வாகம் ஓர் அறிமுகம்”, தகவல் நலன்புரி அமைப்பு, பேராதனை.

செல்வா,K, (N.Y), “ பொதுத்துறை நிர்வாகம், சர்வதேச உறவுகள், மோதல், மோதல் முகாமைத்துவம்”, கொழும்பு வணிக வளநிலையம்.

கணேசலிங்கம்.ரி, சண்முகநாதன். கா, (2004), “பொது ஆட்சி இயல்”, கிறிப்ஸ்.

கோமதி நாயகம்.பி, (1986), “ பொதுத்துறை ஆட்சி இயல்”, தீபா பதிப்பகம், சென்னை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பங்குபற்றல் அபிவிருத்தி செயற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகிகளைக் காட்டிலும் பயனாளிகள் (மக்கள்) குறித்தே அதிக கரிசனை கொள்கிறது. இக் கருத்துடன் உடன்படுகிறீரா உமது விடைக்கான காரணத்தினை தருக.**

அபிவிருத்தி நிர்வாகமானது அரசறிவியல் கற்கை நெறியில் மிகப் பிரதான இடம் கொடுத்து ஆய்வு செய்யப்படுகின்றது. அபிவிருத்தி நிர்வாகத்தின் புதியதொரு சித்தாந்த முறையாக பங்குபற்றல் அபிவிருத்தி நிர்வாகம் காணப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இக் கட்டுரையானது பங்குபற்றல் அபிவிருத்தி செயற்பாடுகளில் பொதுத்துறை நிர்வாகிகளைக் காட்டிலும் பயனாளிகள் (மக்கள்) குறித்தே அதிக கரிசனை கொண்டு காணப்படுகின்றது என்கின்ற கருத்தினை நான் ஒப்புக் கொள்வதாகவே அமையப் பெற்றுள்ளது. இதனை நான் சரியானது என நிரூபிப்பதற்கு பங்குபற்றல் அபிவிருத்தி நிரவாகம் தொடர்பாக அறிஞர்களின் வரைவிலக்கணங்கள், பங்குபற்றல் அபிவிருத்தியின் மூலக் கொள்கைகள், பங்கேற்பு அபிவிருத்தியில் பொதுத்துறை நிர்வாகிகளின் பங்கு, நடைமுறை நிகழ்வுகள் என்பவற்றினடிப்படையில் அது ஒரு சரியான கருத்து என நிறுவியுள்ளேன். இருப்பினும் ஒரு கட்டுரை என்கின்ற வகையில் பலதரப்பட்ட கோணத்தில் ஆராய வேண்டியது அவசியம் என்பதால் விமர்சன ரீதியான ஆய்வினையும் முன்வைத்துள்ளேன்.

அரசறிவியல் கற்கை நெறியில் 1970 ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் மிகப் பிரதான இடம் கொடுத்து ஆய்வு செய்யப்படுகின்ற ஒரு துறையாக அபிவிருத்தி நிர்வாகம் (Development Administration) காணப்படுகின்றது. அந்தவகையில் உலகின் பல பாகங்களிலும் இன்று அபிவிருத்தி நிர்வாகத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் சுதந்திரம் பெற்ற பெரும்பாலான நாடுகள் தாராள ஜனநாயக முறைமையை பின்பற்றி பொதுநலச் செயற்பாடுகள் பலவற்றை மேற்கொண்டு வந்தன. இதன் மூலம் தம்மை பொதுநல அரசுகளாக அடையாளப் படுத்தி சகல துறையிலும் அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இவ் அரசுகளுக்கு ஏற்பட்டது. இதனால் அபிவிருத்தி நிர்வாகத்திற்கு புதிய சில சித்தாந்த முறைகள் தேவைப்பட்டது. அதேபோன்று தங்குநிலைக் கோட்பாட்டின் விளைவாக மூலதனத்தை மையமாகக் கொண்ட ஓர் அபிவிருத்தி மாற்று வழியை விருத்தி செய்ய வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டது. அதற்கு வழிஅமைத்துக் கொடுக்கும் வகையில் "ரொஸ்கி" அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அபிவிருத்தியானது மக்களை இணைத்துக் கொண்டு அவர்களின் கல்வி, ஒழுங்கமைப்பு, ஒழுக்கம், என்பவற்றோடு ஆரம்பிக்கப்பட வேண்டும். இம் மூன்று காரணிகளும் இல்லாவிடின் வளங்கள் அனைத்தும் பயன்படாதவையாக மாறிவிடும்” என்றார். இவரது விவாதத்தின் விளைவாக பங்கேற்பு அபிவிருத்தி, மாற்று அபிவிருத்தி, கிராமிய அபிவிருத்தி போன்ற புதிய சிந்தனைகள் முன்னணிக்கு வந்தது.

சமூக அசைவுச் செயன்முறையில் வறிய மக்களையும் ஈடுபடுத்தி, அவர்களை அபிவிருத்தி செயன்முறையின் செயற்பாட்டு பங்காளர்களாக மாற்றுவதை இலக்காகக் கொண்ட முறைமையே பங்குபற்றல் அபிவிருத்தி (participation Development) எனப்படும். அந்தவகையில் பங்குபற்றல் அபிவிருத்தி செயற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகிகளைக் காட்டிலும் பயனாளிகள் (மக்கள்) குறித்தே அதிக கரிசனை கொள்கிறது. இக் கருத்துடன் உடன்படுகிறீரா உமது விடைக்கான காரணத்தினை தருக என்கின்ற வினாவிற்கு விடை தேடுவதாகவே இக் கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

பங்குபற்றல் அபிவிருத்தி செயற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகிகளைக் காட்டிலும் பயனாளிகள் (மக்கள்) குறித்தே அதிக கரிசனை அல்லது அக்கறை கொள்கின்றது என்பதே எனது பதிலாகும். ஏனெனில் “பங்கேற்பு அபிவிருத்தியானது வறியோரது சுயசக்தியும் பங்குபற்றலும் ஒன்றிணைந்து உருவாக்கப்படும் சக்தியிலிருந்தே ஏற்படுவதாகும்” அந்த வகையில் இப் பங்கேற்பு அபிவிருத்தி முறைமையானது ஆழமான அம்சமானதும் அர்த்தமிக்கதுமாகும். இது மக்களை ஆதாரமாகக் கொண்டதாகும். அத்துடன் வறியவர்களின் நிலையினை முன்னேற்றுதல் என்பதே இதன் நோக்கமுமாகும்.

எனினும் பங்குபற்றல் அபிவிருத்தி செயற்பாடானது பொதுத்துறை நிர்வாகிகளைக் காட்டிலும் பயனாளிகள் (மக்கள்) குறித்தே அதிக அக்கறை கொண்டுள்ளது. என்ற கருத்தினை நிரூபிக்க வேண்டிய அவசியம் காணப்படுகிறது. எனவே அறிஞர்களின் வரைவிலக்கணங்கள் அல்லது பொருள் விளக்கம், பங்கேற்பு அபிவிருத்தியின் மூலக் கொள்கைகள், பங்கேற்பு அபிவிருத்தியில் பொதுத்துறை நிர்வாகிகளின் பங்கு, நடைமுறைசார் விடயங்கள் என்பவற்றினடிப்படையில் நோக்கி ஆராய்வது பொருத்தமுடையதாக இருக்கும்.

முதலாவதாக பங்கேற்பு அபிவிருத்தி என்றால் என்ன என்பது தொடர்பாக அறிஞர்களின் வரைவிலக்கணத்தினடிப்படையில் “பங்குபற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திச் செயற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகிகளைக் காட்டிலும் பயனாளிகள் (மக்கள்) குறித்தே அதிக கரிசனை கொள்கிறது." என்கின்ற கருத்தினை நிறுவுவது பொருத்தமுடையதாகும்.

பங்குபற்றல் அபிவிருத்தி தொடர்பாக பெஞ்சமின் பெகடியன் என்பவர் "கருத்தினை திட்டமிடல், முகாமைப்படுத்தல் ஆகிய சந்தர்ப்பங்களில் பொறுப்புக்களையும் கடமைகளையும் பொருள்மிக்க வகையில் பகிர்ந்து கொள்ளுதலே பங்கேற்பு அபிவிருத்தி எனலாம்" என்றார்.

கோலி, கோபால் போன்றோர் "கிராம மட்டத்தில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட புதிய சமூக பொருளாதார சக்தியே பங்கேற்பு அபிவிருத்தி ஆகும்." என வரைவிலக்கணம் செய்தனர்.

வில்(F)பிராங் எனும் அறிஞர் "பங்கேற்பு அபிவிருத்தி என்பது பல்வேறு பொருளாதார சக்திகள் கால காலமாக அடக்கி ஒடுக்கிக் கொண்டிருந்த பலவீனமான வறிய மக்களின் மறைந்திருந்த ஆக்கத்திறன்களை கூட்டு முயற்சியின் மூலம் மேலெழச் செய்து அவர்களின் ஆரம்பிப்பினால் உருவாகும் மனித அபிவிருத்தி இலக்கினைக் கொண்ட அபிவிருத்திச் செயன்முறைக்கான ஓர் உபாயமே ஆகும்" என்றார்.

ஒக்லி மற்றும் மிட்லோ ஆகிய இரண்டு அறிஞர்களும் பங்குபற்றல் அபிவிருத்திக்கான மாதிரிகளை அறிமுகம் செய்தனர். இதில் ஒக்லி மூன்று வகையான பங்குபற்றல் மாதிரிகளை குறிப்பிடுகின்றனர். அவற்றினை நோக்குவோம்.

முதலாவது பங்களிப்பு மாதிரி, இது அபிவிருத்தி சார் செயற்பாடுகளில் மக்கள் தெரிவு செய்யப்பட்ட குழுக்களினூடாக திட்ட உருவாக்க செயற்பாடுகளில் பங்குபற்றுதலை எடுத்துக்காட்டுகிறது.

இரண்டாவது ஒழுங்கமைப்பு மாதிரி, இது அபிவிருத்தி செயற்பாடு ஒன்றில் மக்கள் தாங்களாகவோ அல்லது வேலை செய்யும் ஊழியர்களுக்கு ஊடாகவோ பங்குபற்றுதலை எடுத்துக்காட்டுகிறது.

மூன்றாவது வலுவூட்டல் மாதிரி, இது அபிவிருத்தி செயற்பாடு ஒன்றிற்கான பொது முகாமைத்துவம் தொடர்பான விடயங்களை பெற்றுக் கொள்ளல், அறிந்து கொள்ளல், அது சம்பந்தமான தீர்மானங்களை எடுத்தல், பேரம் பேசுதல் ஆகிய திறன்களை மக்கள் வளர்த்துக் கொள்ள முயற்சி செய்தலை எடுத்துக்காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய வரைவிலக்கணங்களின் அடிப்படையில் "பங்கேற்பு அபிவிருத்தி" என்பது பங்கேற்பு செயன்முறைமைக்கு ஊடாக வறிய மக்கள் தாம் அமிழ்ந்துள்ள வறுமையிலிருந்து மீட்சி பெறுவதற்கான ஓர் உபாயமே பங்கேற்பு அபிவிருத்தி ஆகும். இதனை சுயசக்தி எழுச்சி முறைமை எனவும் அழைப்பர்.

மிகப் பழமையான காலங்களில் நீர் முகாமைத்துவ செயற்பாடுகளின் போதும் வளப் பாதுகாப்புச் செயற்பாடுகளின் போதும் மக்கள் பங்குபற்றக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன. ஆயினும் 1970 ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் மக்களின் பங்கு பற்றுதல் தொடர்பான பிரச்சினை அபிவிருத்தியின் பின்னடைவுக்கு காரணம் என்பது உறுதி செய்யப்பட்டு மக்கள் பங்குபற்றுதலுடன் கூடிய அபிவிருத்திக்கு சகல நிர்வாக அலகுகளும் அனுமதி வழங்கின என்பது இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

ஆகவே முடிவாக வரைவிலக்கணத்தினடிப்படையில் தொகுத்து நோக்குகின்ற போது பங்குபற்றல் செயற்பாடானது பொது நிர்வாகிகளை விட மக்களையே முதன்மைப்படுத்துகின்றது என்பது தெளிவாகின்றது.

அடுத்ததாக பங்கேற்பு அபிவிருத்தியின் மூலக் கொள்கைகளினடிப்படையில் "பங்குபற்றல் அபிவிருத்திச் செயற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகிகளைக் காட்டிலும் பயனாளிகள் (மக்கள்) குறித்தே அதிக கரிசனை கொள்கிறது" என்கின்ற கருத்து உண்மையானது என நிறுவுவது பொருத்தமுடையதாக இருக்கும்.

அந்த வகையில் பங்குபற்றல் அபிவிருத்தியின் மூலக் கொள்கைகளில் ஒன்றாக "மனித முதன்மை" காணப்படுகின்றது. பங்கேற்பு அபிவிருத்தியானது மக்களை மையப்படுத்தியதாகவே அமைய வேண்டும். பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாடுகள் மக்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான பகுப்பாய்வாகவும் தீர்மானமாகவும் அமைகிறது. இங்கு அபிவிருத்தி சார் தீர்மானங்கள் மக்கள் மூலமாக முன்வைக்கப்படுவதனால் பொது நிர்வாகிகள் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கும் நபர்களாக மாத்திரம் காணப்படுவர். நிர்வாகச் செயற்பாடுகள் அனைத்தும் பயனாளிகளை மையப்படுத்தியதாக அமைந்திருக்கும்.

மக்களின் அறிவை மையமாகக் கொண்டதாக காணப்படும். பயனாளிகள் தமது பிரச்சினைகளை தாமே இனங்கண்டு அதற்கான தீர்வினை முன்வைப்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுகிறது. இங்கு மக்கள் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவானதும் நியாயமானதுமான தீர்வினை முன்வைப்பதற்கான அறிவு பொதுத்துறை நிர்வாகிகளால் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

பெண்களின் பங்கு பற்றலுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல். பெண்களும் பங்குபற்றுவதற்கான சம வாய்ப்புக்கள் வழங்கப்படுவதுடன் ஆண்களை விடவும் பெண்கள் சிறந்த தலைமைத்துவம் மற்றும் வினைத்திறனான செயற்பாடுகள் உடையவர்கள் என்ற அடிப்படையில் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கையில் பெண்களும் அவர்களது நலனும் முதன்மைப்படுத்தப்படும்.

கீழிலிருந்து மேல் நோக்கி அணுகுமுறையினை பின்பற்றுதல் பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாடானது மேலிருந்து கீழ் நோக்கிய மூலக் கொள்கையின் அடிப்படையிலின்றி கீழிலிருந்து மேல் நோக்கிய மூலக் கொள்கையின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். இதனால் தேவையுடையவர்களது பங்களிப்பு முதன்மைப்படுத்தப்பட்டு சேவை வழங்குபவர்களது பங்களிப்பு குறைக்கப்படும். இந்த ஒரு அம்சமே பங்குபற்றல் அபிவிருத்திச் செயற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகிகளை விட பயனாளிகளையே முதன்மைப்படுத்துகின்றது என்பது தெளிவாகிறது.

சமூக ஏற்றத் தாழ்வுகளை நிராகரித்தல் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இடம் பெறும் அபிவிருத்தி செயற்பாடுகள் சகல மக்களது பங்குபற்றுதல்களுடனும் முன்னெடுக்கப்படும் பொதுத்துறை நிர்வாகிகளும் மக்களும் தீர்மானங்கள் எடுக்கும் போது பிரதேச, பால், வகுப்பு, சாதி என்ற பாகுபாடுகளை கருத்தில் கொள்ளாது அனைவருக்கும் பொருத்தமான தீர்மானங்கள் எட்டப்படும்.

எனவே பங்கேற்பு அபிவிருத்தியின் மூலக் கொள்கைள் அனைத்தும் மக்களை முதன்மையப்படுத்தியதாகவே காணப்படுகிறது. அதாவது மக்களை மையப்படுத்தியதாக அமைவதுடன் சமூகத்திலுள்ள வறிய மக்கள் அல்லது தேவைகளை உடைய மக்கள் தமது பிரச்சினைகளை தாமே இனங்கண்டு அதற்கான தீர்வினை முன்வைப்பதற்கான வாய்ப்புக்களும் சேவை வழங்குபவர்களை விட (பொதுத்துறை நிர்வாகிகள்) தேவையுடையவர்களின் பங்களிப்பே முதன்மைப்படுத்தப் படுவதாகவும் பங்குபற்றல் அபிவிருத்திச் செயற்பாடுகள் அமைந்து காணப்படுகின்றன. எனவே முடிவாக இதிலிருந்தும் பங்கு பற்றல் அபிவிருத்தி செயற்பாடுகள் பொது நிர்வாகிகளை விட பயனாளிகள் குறித்தே அதீத முக்கியத்துவம் கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக பங்கேற்பு அபிவிருத்தியில் பொதுத்துறை நிர்வாகிகளின் பங்கு எத்தகையதாக காணப்படுகின்றது என்கின்ற அடிப்படையில் "பங்குபற்றல் அபிவிருத்திச் செயற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகிகளைக் காட்டிலும் பயனாளிகள் (மக்கள்) குறித்தே அதிக கரிசனை கொள்கிறது என்ற கருத்து உண்மையானது என நிறுவுவது பொருத்தமுடையதாக இருக்கும்.

பங்கேற்பு அபிவிருத்திச் செயன்முறையில் வெளிப்பங்காளர்களாகவே அரச அதிகாரிகள், சிவில் சேவை உத்தியோகத்தர்கள், தொண்டர் ஊழியர்கள் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இவர்களுக்கென சில கடமைகளும் பொறுப்புக்களும் வரையறை செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாட்டுக்குத் தேவையான ஆலோசனைகளை பொது மக்களுக்கு வழங்குதல், வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய நிதி மற்றும் பொருள் சார் வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுதல், உருவாக்கப்பட்ட திட்டங்கள் தீர்மானங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளை வழங்குதல் என்பன இவர்களது பிரதான கடமையாகும்.

பங்குபற்றல் அபிவிருத்தி செயற்பாடுகளில் பொதுத்துறை நிர்வாகிகள் திட்டமிடலாளர்களாக அன்றி அதற்கு உதவும் நண்பர்கள் என்கின்ற வகையில் அபிவிருத்தி சார் செயற்பாடுகளில் தலையீடு செய்ய வேண்டும். தேவை ஏற்படக் கூடிய மக்களை கண்டறிதல் அவர்களை ஒழுங்குபடுத்துதல், அவர்களது பிரச்சினைகளை உரிய இடத்திற்கு அனுப்புதல் என்ற அடிப்படையில் அபிவிருத்தி நிர்வாக செயற்பாட்டிற்கு பொதுநிர்வாகிகள் அவசியமாக காணப்படுகின்றார்கள்.

நீண்டகாலமாக புரையோடி காணப்படும் பெண்கள், வறிய மக்கள், படிப்பறிவற்றவர்கள் என்கின்ற மனோநிலையை பொது நிர்வாகிகள் முதலில் கைவிட வேண்டும். வறிய மக்கள் மற்றும் பெண்கள் மீது நம்பிக்கை கொண்டவர்களாகவும் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் தெளிவானதும் ஆழமானதுமான அறிவைக் கொண்டவராகவும் காணப்பட வேண்டும். இதற்காக குறிப்பிட்ட தொகுதி மக்களது பிரச்சினைகளை அறிவதற்கு சிறிது காலம் அத்தொகுதி மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களது பிரச்சினை பற்றிய ஆழமான தமது புரிதலை பொது நிர்வாகிகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

பொது நிர்வாகிகள் மனித நேயம் உடையவர்களாகவும் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்பவர்களாகவும் காணப்பட வேண்டும். வறிய மக்களது மொழி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரம், விழுமியங்கள் என்பன பற்றிய அறிவில் முழுமையான தேர்ச்சியுடையவர்களாக காணப்பட வேண்டும்.

பொது நிர்வாகிகள் சிறந்த ஆளுமையும் நன்நடத்தையும் கம்பீரமான தோற்றமும் உடையவர்களாக காணப்பட வேண்டும். அவ்வாறு இன்றி இவர்கள் இலஞ்ச, ஊழல் செயற்பாடுகள் மற்றும் நிதி மோசடிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதனால் இவர்கள் பற்றிய கண்காணிப்புக்களையும் முறைப்பாடுகளையும் மேற்கொள்வதற்கான அதிகாரம் உயரதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட கடமையுணர்வுகளோடு பொதுத்துறை நிர்வாகிகள் பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாடுகளில் பொதுமக்களுக்கு அவர்களது தீர்மானம் தொடர்பான அறிவினையும் அதற்கான நிதியையும் பெற்றுக் கொடுத்து அவர்களுடன் இணைந்து பணிபுரியும் ஊழியர்களாக செயற்பட வேண்டும். இங்கு பொதுத்துறை நிர்வாகிகள் சுயவிருப்பு வெறுப்பு அடிப்படையில் செயற்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாடுகளில் பொதுத்துறை நிர்வாகிகள் வெளிப்பங்காளர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

ஆகவே பங்குபற்றல் அபிவிருத்திச் செயற்பாட்டில் பொதுத்துறை நிர்வாகிகளது பங்கின் தன்மையினடிப்படையில் வைத்து தொகுத்து நோக்குகின்ற போது பங்குபற்றல் அபிவிருத்தி செயற்பாட்டில் பொதுத்துறை நிர்வாகிகள் வறிய மக்களை இனங்கண்டு அவர்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்களாகவும் பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாட்டிற்கு மக்களுக்கு ஆலோசனை வழங்குபவர்களாகவும் மக்கள் தொடர்பாக அறிவுடையவர்களாகவும் காணப்பட வேண்டும்.

எனவே இவற்றினை வைத்து பார்க்கின்ற போது பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாடுகளில் பொதுத்துறை நிர்வாகிகளைக் காட்டிலும் பயனாளிகளுக்கே (மக்கள்) முதன்மையிடம் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட வேண்டும் என்பதும் வெட்டவெளிச்சமாக தெரிகிறது. இங்கு பொதுத்துறை நிர்வாகிகள் இரண்டாம் பட்சத்தினராகவும், பொதுமக்களுக்கு சேவை வழங்குபவர்களாகவுமே காணப்படுகின்றார்கள் என்பதே உண்மை.

ஆயினும் பங்குபற்றல் அபிவிருத்தி செயற்பாடு பொதுத்துறை நிர்வாகிகளின் பங்கு இல்லாமல் சிறப்பாக இடம் பெற முடியாததுடன் செயற்பாடுகளை வழிநடத்தவும், அச் செயற்பாடுகளை திட்டமிடவும் ஒழுங்குபடுத்தவும் முடியாது என்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு விடயமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். எனவே பங்கேற்பு அபிவிருத்தியின் அடிப்படை "கிராம மக்கள் தாம் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினைகளை விளங்கி அவற்றினை தீர்ப்பதற்காக தாம் அமைப்பிற்குட்படுதல் ஆகும்"

அடுத்ததாக பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாடானது பொதுநிர்வாகிகளைக் காட்டிலும் பயனாளிகள் குறித்தே அதிக கரிசனை கொள்கிறது என்பதனை நடைமுறை சார் பங்குபற்றல் அபிவிருத்தி செயற்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு நிரூபிப்பது பொருத்தமுடையதாக இருக்கும்.

நடைமுறையில் பல்வேறு பங்கேற்பு அபிவிருத்தி செயற்படுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உதாரணமாக சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம், கால்நடை வளர்க்கும் செயற்திட்டம், கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டம் போன்றவற்றினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இவைகள் அனைத்தும் பயனாளிகள் குறிப்பாக வறிய மக்களின் நிலையினை முன்னேற்றுவதனை நோக்கமாக கொண்டே அமைந்து காணப்படுகின்றது.

பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாட்டினூடாக விவசாயிகளின் நிலையினை முன்னேற்றுவதற்காக தேனீவளர்ப்பு, சோயா அவரை செய்கை, உணவுப் பொருட்கள் தயாரித்தல் போன்றவற்றினை ஏற்படுத்துவதற்கு மூலதன உதவிகளை வழங்குதல் அவற்றினை சரியான முறையில் இடம்பெறுகின்றனவா என்பதனை மேற்பார்வை செய்தல், அச் செயற்த்திட்டங்கள் சரியான முறையில் முன்னெடுப்பதற்கு மக்களுக்கு அறிவுறுத்தல் போன்ற செயற்பாடுகளினையே பொதுத்துறை நிர்வாகிகள் மேற்கொண்டு வருவதனைக் கண்கள் ஊடாக பார்த்து வருகின்றோம்.

மேலும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தினூடாக சமூகத்திலுள்ள வறிய மக்களின் வாழ்வாதாரத்தினை முன்னேற்றுவதற்கு சுயதொழில் திட்டங்கள் ஏற்படுத்திக் கொடுத்து, அவ்வாறு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு யார் தகுதியுடையவர்கள் (வறியர்கள்) என்பதை கண்டறிபவர்களாகவும் பொதுத்துறை நிர்வாகிகள் காணப்பட்டு வருகிறார்கள். எனவே நடைமுறையில் பங்குபற்றல் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக நான் கண்ட அனுபவத்தின் வாயிலாகவும் பங்குபற்றல் அபிவிருத்தி செயற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகிகளை விட பயனாளி (மக்கள்) குறித்தே அதிக கரிசனை கொண்டு காணப்படுகின்றது எனக் கூறிக் கொள்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாடுகள் பயனாளிகள் குறித்து அதிக கரிசனை கொண்டு செயற்பட்டாலும் யதார்த்த பூர்வமாக எந்தளவிற்கு பயனளிக்கின்றது என்பது உண்மையில் கேள்விக்குறியே ஆகும்.

மூன்றாம் உலக நாடுகளில் அல்லது தென்பூகோள நாடுகளில் மக்கள் தொகையில் அதிகமானோர் வறியோராவர். எனினும் அந்நாடுகளின் சமூக, பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளில் இவர்களின் பங்கேற்பு மிகவும் சொற்பமேயாகும். திட்டமிடும் போதும் முடிவெடுக்கும் போதும் அவற்றை செயற்படுத்தும் போதும் அவர்களின் பங்களிப்பு என்பது இல்லாமல் காணப்படுகின்றது. எந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் அவர்களால் உணரப்பட முடியாமல் காணப்படுகின்றது. அவர்களின் எழுச்சிக் குரல் இல்லாதவர்களாக காணப்படுகின்றார்கள். அபிவிருத்தி பலாபலன்கள் எதுவுமே அவர்களிடம் வருவதில்லை. இதனாலேயே "மூன்றாம் உலகத்தில் வறியோர் அபிவிருத்தி செயற்பாடுகளில் பங்கு கொள்ள முடியாமல் பின் தள்ளப்பட்டிருப்பதோடு பிரதான அபிவிருத்தி நீரோட்டத்திலிருந்தும் புறம் தள்ளப்பட்டுள்ளனர்" என்பதே உண்மையான ஒரு விடயமாகும்.

எனவே பங்குபற்றல் அபிவிருத்தியானது மூன்றாம் உலக நாடுகளில் வறிய மக்களின் முன்னேற்றத்திற்காக தன்னகத்தே சில விடயங்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டிய அவசியப்பாடு காணப்படுகின்றது. அந்த வகையில் பங்கேற்பு அபிவிருத்தி செயன்முறையின் போது எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் நீண்ட கால இலக்கினை கொண்டதாகவும் நன்கு அலசி ஆராயப்பட்டதாகவும் அமைய வேண்டும்.

மேலும் ஒரு பிரச்சினையினை இனங்கண்டு கொண்டதுடன் அதற்கான உடனடித் தீர்வினை முன்வைக்கக் கூடாது. சடுதியாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் குறிப்பிட்ட இலக்கினை அடைந்து கொள்ள முடியாமல் இருப்பதுடன் இத் தீர்மானங்கள் மூலம் மக்கள் புதிய பிரச்சினையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம். இதனால் பங்குபற்றல் அபிவிருத்திச் செயன்முறையானது வினைத்திறனை மக்களது பங்குபற்றுதலுடன் நிலைத்திருக்கக் கூடிய நீண்ட காலத் தீர்மானங்களை எட்டுவதற்கு முயற்சிக்கின்றது.

எனவே எது எவ்வாறாக காணப்படினும் பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாடுகளினூடாக வறிய மக்களின் நிலையினை ஓரளவேனும் முன்னேற்றமடையச் செய்கின்றது என்றே கூறிக்கொள்வேன். ஆகவே முடிவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் என்பது “பல்வேறு அதிகார சக்திகளால் காலம் காலமாக அடக்கி வைக்கப்பட்டிருந்த பலவீனமான மக்களின் உருவாக்கத் திறன் மிக்க ஆற்றல்களை கூட்டுமுறையில் வெளிக்கொணரச் செய்து அவற்றின் மூலம் அவர்களுக்கு நன்மையை ஏற்படுத்தக் கூடிய வகையில் இன்றைய நிலையை மாற்ற அவர்களாகவே சிந்தித்து உருவாக்கும் அபிவிருத்தி முறைமையாகும்.

முடிவாக தொகுத்து நோக்குகின்ற போது பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாடுகளானது பொதுத்துறை நிர்வாகிகளைக் காட்டிலும் பயனாளிகள் (மக்கள்) குறித்தே அதிக கரிசனை கொண்டு காணப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாடானது வறிய மக்களை முன்னேற்றும் நோக்கில் அவர்களது பங்களிப்புடனும் பொது நிர்வாகிகளது வழிகாட்டுதல்களுடனும் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு நிகழ்வாகும். இவ் பங்கேற்பு அபிவிருத்திச் செயற்பாடுகள் முழுக்க முழுக்க பயனாளிகளை முதன்மைப்படுத்துகின்றது. மேலும் பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாடுகள் முதலாம் உலக நாடுகளில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருப்பினும் மூன்றாம் உலக நாடுகளில் யுத்தங்கள், மக்கள் அறிவின்மை, அரசியல் தலைவர்களின் தூர நோக்கற்ற தன்மை, பொது நிர்வாகிகளின் ஊழல், இலஞ்சம் போன்ற பல்வேறுபட்ட காரணங்களினால் மக்கள் அபிவிருத்திச் செயற்பாடுகளிலிருந்து விலகிக் காணப்படுகின்றார்கள். எனவே இவ்வாறான ஒரு நிலையினை களைந்து மக்களை இணைக்கும் வகையிலான பங்கேற்பு அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அபிவிருத்தி நிர்வாகத்தில் மாற்றங்களை கொண்டுவர வேண்டிய அவசியப்பாடானது மூன்றாம் உலக நாடுகளில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துனை நூல்கள்.**

நாதன்.சு, (1978), "அபிவிருத்தி நிருவாகம்", யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகம்.

ஆறுமுகம்.ஓ, (1995), "பங்கேற்பு அபிவிருத்தி", இலங்கை கனடா அபிவிருத்தி நிலையம்.

ஆறுமுகம்.உ, (2012), ஜனநாயகமும் பங்கேற்பு அபிவிருத்தியும், அபிவிருத்திக்கான உதவி ஊக்க இலங்கை மையம்.

சந்திரசேகரன்.சொ, (1996),"அபிவிருத்தியும் கல்வியும்", தர்ஷனா பதிப்பகம், கொழும்பு.

சண்முகநாதன்.கா.ச, (1993), "பொது ஆட்சி இயல்", ஸ்ரீ காந்தா அச்சகம், யாழப்பாணம்.

கிருஸ்ணவேனி.ம, (2011), "அபிவிருத்தி நிர்வாகம்"- அரசறிவியலாளன் இதழ்-04, அரசறிவியல் ஒன்றியம், அரசறிவியல்துறை, யாழப்பாணப் பல்கலைக்கழகம்.

சுரேஷ் கண்ணா.பா, (2007), "சமூக அபிவிருத்தியும் வளங்களும்" திட்டமிடல் இதழ் - 01, புவியியற் கழகம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(N.A), (2020), "people's participation" www.upscwithnikhil.com

(N.A), (2020), "people's participation Guide introduction to public participation", www.epa.gov.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொள்கைச் செயன்முறையினை விளக்கிக் கொள்வதில் டேவிட் ஈஸ்ட்டனின் கறுப்புப் பெட்டி (Black Box) பெறும் முக்கியத்துவம் குறித்து கருத்துரைக்குக.**

பொதுக் கொள்கை செயன்முறை என்பது அரசாங்கத்தின் மிகவும் பிரதானமான செயற்பாடாகும். மக்களின் நலனில் அதிக கவனம் எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். பொதுக் கொள்கையானது (Public Policy) சகல மக்களுக்குமாக இயற்றப்படுகின்ற கொள்கை ஆகும். அந்த வகையில் பொதுக் கொள்கைச் செயன்முறை தொடர்பான அறிவு எல்லோரிடத்திலும் இருக்க வேண்டும்.

அந்தவகையில் "கொள்கைச் செயன்முறையினை விளங்கிக் கொள்வதில் டேவிட் ஈஸ்டனின் கறுப்புப் பெட்டி மாதிரி பெரும் முக்கியத்துவம் குறித்து கருத்துரைக்குக" என்னும் கட்டுரையில் பொதுக் கொள்கை செயன்முறையை விளக்குவதாக உள்ளது இக்கட்டுரையில் பொதுக் கொள்கை அறிமுகம், கொள்கை உருவாக்கம், டேவிட் ஈஸ்ட்டனின் முறைமைப்பகுப்பாய்வு அணுகுமுறை, கருப்புப் பெட்டி மாதிரியின் முக்கியத்துவம், அதன் விமர்சனம் என்று ஆராயப்பட்டுள்ளது.

அரசியலிலும் சரி ஆட்சியிலும் சரி மனித வாழ்வில் அடிக்கடி பயன்படுத்துகின்ற சொல் பொதுக்கொள்கை (Public Policy) ஆகும். மக்களின் நலனில் அதிகம் கவனம் எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கம் பல்வகைப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. அரசாங்கத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் கொள்கை முக்கியமானதாகும். அரசு தோற்றம் பெற்ற பொழுதே பொதுக்கொள்கையும் தோற்றம் பெற்றது. ஆனால் பொதுக்கொள்கை எனும் விடயம் பொது நிர்வாகவியல் கற்கை நெறிக்குள் ஒரு உப பிரிவாக மிகவும் அண்மைக் காலத்திலே தோற்றம் பெற்றதாகும்.

"பொதுக் கொள்கையானது (Public Policy) சகல மக்களுக்குமாக இயற்றப்படுகின்ற ஒரு கொள்கையாகும்." அரசின் இயக்கத்திற்கு கொள்கை அவசியம். இப் பொதுக் கொள்கையானது அரசாங்கத்தின் வழிகாட்டியாகவும் பொதுத்துறை நிர்வாகத்தினால் நடைமுறைப்படுத்துகின்ற ஒன்றாகவும் காணப்படுகின்றது.

பொதுக் கொள்கையானது ஒரு அரசாங்கத்தின் உற்பத்தியுமாகும் என குறிப்பிடலாம். பொதுக்கொள்கை தொடர்பாக பல அறிஞர்கள் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளார். உதாரணமாக Birkland என்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொதுக்கொள்கையானது அரசாங்கத்தினால் உருவாக்கப்படுகின்றது. அரசாங்கம் தான் எதனைச் செய்ய விரும்புகின்றது என்பதனை விளக்குவதே பொதுக் கொள்கையாகும் என்றார்." அடுத்து டேவிட் ஈஸ்ட்டன் "முழு சமூகத்திற்குமான விழுமியங்களில் அதிகார ரீதியான ஒதுக்கீடே பொதுக்கொள்கை ஆகும்" என்றார். தோம்ஸ் டை (Thomaள Dye) என்பவர் "அரசாங்கத்தின் மூலம் நாம் செய்யக் கூடியது எது? செய்யக்கூடாது எது? என்பவற்றுடன் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எத்தகைய தீர்மானங்களும் அரச கொள்கையாகும்" எனக் குறிப்பிட்டார். இவர்களினை விட கரோல் லாஸ்வெல், ஜேம்ஸ் அன்ரூஷன், பேராசிரியர் றிச்சட் றோஸ் போன்ற அறிஞர்களும் கருத்துக்களை முன்வைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுக் கொள்கையை (Public Policy) அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டினையும் அந் நாட்டின் அரசியல் கொள்கையினையும் அறிந்து கொள்ளலாம். அந்தவகையில் பொதுக்கொள்கையானது நான் முன்னர் குறிப்பிடப்பட்டதைப் போல சகல மக்களுக்குமாக இயற்றப்படுவதனால் சகல மனிதர்களும் பொதுக்கொள்கை தொடர்பான சகல அறிவினையும் பெற்று இருப்பது மிகவும் அவசியமாகும்.

பொதுவாக பொதுக் கொள்கையினை வரையறை செய்கையில் பொதுக் கொள்கை என்பது குறிப்பிட்ட இலக்கை அல்லது நோக்கத்தை அடைய அதிகாரத்தில் உள்ளவர்களினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் வழிமுறையாகும். அது அரசினால் அல்லது அதிகாரத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் என தெளிவாக வரையறுத்துக் கொள்ளலாம்.

"பொதுக் கொள்கை உருவாக்கம் என்பது அரசாங்கத்தின் மிகவும் பிரதான செயற்பாடாகும். நாட்டில் காணப்படும் ஏதோ ஒரு அரசியல், கலாசார, பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் கொள்கைகள் வகுக்கப்படும். இவ்வாறு கொள்கைகள் வகுக்கப்படுகின்ற போது ஆவணம், விதிமுறை, தகவல், அதிகாரம், உரிமை எனும் 5 விடயங்கள் முதன்மைப்படும்.

"கொள்கை உருவாக்கமானது பெரும்பாலானோர்கள், நிறுவனங்கள், போன்றவற்றினால் உருவாக்கப்படுவதாகவும்" அதாவது பங்குதாரர்கள், அரசியல் வாதிகள், பொதுத்துறை நிர்வாகிகள், அரசியற் கட்சிகள், ஊடகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், அழுத்தக் குழுக்கள், சமூக விழுமியங்கள் முதன்மையிடத்தைப் பெற்றுக் கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் நடைமுறையில் கொள்கை உருவாக்கமானது அல்லது கொள்கைச் செய்முறையானது அரசியல் வாதிகளால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்கின்ற எண்ணப்பாடு நிலை பெற்றுள்ளது. ஆயினும் இச் செயன்முறைகளில் அதிகாரமிக்க நபர்களாக அரசியல் வாதிகளே காணப்படுகின்றார்கள்.

அந்தவகையில் பொதுக் கொள்கைச் செயன்முறையை விளங்கிக் கொள்வதற்கு பல்வேறு கோட்பாடுகளும் மாதிரிகளும் உள்ளன. அவை அரசாங்கத்தின் எந்திரங்கள் எவ்வாறு கொள்கைகளை உருவாக்குகின்றன என்பதனை விளக்க முற்படுகின்றன. பொதுக் கொள்கையானது "ஒரு அரசாங்கத்தின் உற்பத்தியாகும்." அந்தவகையில் "இக் கட்டுரை பொதுக் கொள்கைச் செயன்முறையை விளங்கிக் கொள்வதங்கான டேவிட் ஈஸ்ட்னின் முறையைப் பகுப்பாய்வு அனுகுமுறைக்கான கறுப்புப் பெட்டி (Black) மாதிரி பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்வதாகவே அமையப் பெற்றுள்ளது."

முறைப்பகுப்பாய்வு என்பது (System analysis) அரசியல் அறிவியலின் நடத்தைவாத இயக்கத்தின் ஒரு பகுதியாகும். மற்றும் பாரம்பரிய அணுகுமுறைக்கு எதிர்வினையாக உள்ளது. டேவிட் ஈஸ்ட்டன் தனது அரசியல் அமைப்பு (1953) என்ற படைப்பில் முறைமைக் கோட்பாட்டினை விளக்கியுள்ளார். முறைமைப் பகுப்பாய்வின் மையக்கருத்து உயிரியலுடனான ஒப்புமையை அடிப்படையாக கொண்டது. இதயம், நுரையீரல் மற்றும் இரத்தம் முழுவதுமாக செய்படுவது போலவே சமூகம் மற்றும் அரசியல் அமைப்புக்களின் கூறுகளும் செயற்படுகின்றன. ஒரு கூறு மாறும் போது மற்ற கூறுகள் அதனை ஈடு செய்யும் வகையில் சரி செய்யப்படும்.

இரு நாட்டில் காணப்படும் மக்களின் நன்மைக்காக தமது கொள்கைகளை வகுத்துக் கொள்ளும் அரசு அந்த மக்களின் தேவைகளையும் கோரிக்கைகளையும் கொண்டு தமது கொள்கைகளை வடிவமைக்கின்ற முறைமையே முறைமைப் பகுப்பாய்வு அணுகுமுறையாகும். இதன் போது சமூகச் சூழலிலிருந்து வெளிவரும் கோரிக்கைகள் தனது அரிசின் முறைமைப் பகுப்பாய்வுச் செயற்பாட்டிற்கு உட்பட்டு சட்டமாகவோ அல்லது அபிவிருத்தி திட்டமாகவோ, கொள்கையாகவோ வெளியிடப்படும். இந்த கொள்கை முறைமைகள் நாட்டின் அபிவிருத்தி நிலைமைகளினை கருத்திற் கொண்டே இவை பெரும்பாலும் உருவாக்கப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் முறைமையின் கீழ் வகுக்கப்படும் அரசியற் கொள்கைகள் அரசின் பொதுத்துறை நிர்வாகத்தின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந் நடைமுறைப்படுத்தல் செயற்பாடு அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கிடையில் வேறுபாடு கொண்டதாக காணப்படும். இம் முறைமைப் பகுப்பாய்வு அணுகுமுறைக்கான சிறந்த மாதிரி அமைப்பினை டேவிட் ஈஸ்ட்டன் வடிவமைத்துள்ளார். அதுவே கறுப்புப் பெட்டி (Black Box) மாதிரி ஆகும். இம் மாதிரி மூலம் பொதுக் கொள்கைச் செயன்முறையை விளக்கியுள்ளார் டேவிட் ஈஸ்ட்டன்.

கறுப்புப் பெட்டி (Black Box) என்பது பெரும்பாலான மக்களால் பார்க்க முடியாத அல்லது ஆய்வு செய்ய முடியாத செயல்முறைகளை அல்லது நடைமுறைகளைக் குறிக்கும். பல விடயங்களை கறுப்புப் பெட்டி (Black Box) என்று விபரிக்கலாம். உதாரணமாக மனித மூளை, டிரான் சிஸ்டர் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம் பொருளின் செயற்பாட்டை விபரிப்பதுடன் அதன் வெளிப்புறம் அதன் உற்புறத்தில் எவ்வாறு தொடர்பு கொள்கிறது என்பதைப் புரிந்து கொள்வது கறுப்புப் பெட்டி கோட்பாட்டின் குறிக்கோள் ஆகும். தேசிய மற்றும் சர்வதேச அரசாங்கக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை விபரிக்க இந்த கோட்பாடு அரசியலில் பயன்படுத்தப்பட்டது. அதிலும் குறிப்பாக டேவிட் ஈஸ்டன் கொள்கைச் செயன்முறையை விளக்குவதற்கு இம் மாதிரியைப் பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். அந்தவகையில் கொள்கைச் செய்ன்முறையை விளங்கிக் கொள்வதற்கு கறுப்புப் பெட்டி மாதிரி முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

கறுப்புப் பெட்டி மாதிரியானது உள் செயற்பாடுகள் பற்றிய எந்த தகவலையும் வெளிப்படுத்தாமல் பயனுள்ள தகவல்களை உருவாக்குவதாக காணப்படுகின்றது. எனவே டேவிட் ஈஸ்ட்டன் கொள்கைச் செயன்முறையை விளக்குவதற்கு எவ்வாறு கறுப்புப் பெட்டியை உபயோகித்துள்ளார் என்பதனை இங்கு தெளிவாக நோக்குவோம்.

டேவிட் ஈஸ்ட்டன் கொள்கைச் செயன்முறையை விளக்குவதற்கான கறுப்புப் பெட்டி மாதிரியில் ஐந்து அம்சங்களினை முன்னிறுத்தி கொள்கைச் செயன்முறையை விளக்கியுள்ளார். அவையாவன உள்ளீடுகள், வாயில்காவலன், தீர்மானம் எடுக்கும் செயற்பாடு (Black Box), வெளியீடு, பின்னூட்டம் என்பனவாகும். “அதிலும் குறிப்பாக எந்தவொரு அரசியல் அமைப்பிலும் உள்ளீடு, வெளியீடு என்ற இரண்டு கூறுகள் உள்ளன என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேவிட் ஈஸ்டன் கூறுகின்றார். அந்தவகையில் கருப்புப் பெட்டி மாதிரியில் உள்ள ஐந்து அம்சங்களினூடாக பொதுக் கொள்கைச் செயன்முறை எவ்வாறு இடம் பெறுகின்றது என்பது தொடர்பாக விரிவாக நோக்குவோம்.

ஒவ்வொரு அரசியல் முறைமையும் பல்வேறு சவால்களுக்கு உட்படுத்தப்படுவதாக ஈஸ்ட்டன் கருதுகிறார். இத்தகைய அழுத்தங்கள், கோரிக்கை அழுத்தங்கள், ஆதரவு அழுத்தங்கள் என இரு வகைப்படும். இவற்றினையே டேவிட் ஈஸ்டன் "உள்ளீடுகள்" என அடையாளப்படுத்தினார். அமைப்பில் இருக்கின்ற உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக செலுத்தும் அழுத்தங்களை **ஆதரவு அழுத்தங்கள்** எனவும் புறச் சூழலில் இருந்து முறைமையிடம் செலுத்தப்படும் கோரிக்கைகளை **கோரிக்கை அழுத்தம்** எனவும் குறிப்பிடுகின்றார்.

டேவிட் ஈஸ்டனின் முறைமைப் பகுப்பாய்வில் ஒரு முக்கிய பகுதியான உள்ளீடானது நவீன அரசுகளின் கொள்கையாக்க செயன்முறைக்கான ஆதரவுகளும் கோரிக்கைகளையும் வழங்குவதில் முக்கிய இடம் பெறுகின்றது. இதற்கு உதாரணமாக வீதி புணரமைப்பு தொடர்பான கோரிக்கைகள், முதியோர், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கோரிக்கைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

வாயில் காவலன் முறைமை தொடர்பாக விமர்சிக்கும் டேவிட் ஈஸ்டன் பொது மக்களிடமிருந்து செயற்படும் கோரிக்கைகள் மற்றும் அழுத்தங்களுக்கு பதிலளித்து அவற்றினை ஒழுங்குபடுத்தி அரசியல் முறைமைக்கு கொண்டு செல்லும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நபர்களை வாயிற்காவலன் என்று குறிப்பிடுகின்றார். உதாரணமாக அரசியற் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், தொழிற்சங்க அமைப்புக்கள், வாயிற்காப்போனுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் தரப்பினராக காணப்படுகின்றனர்.

தீர்மானம் எடுக்கும் செயற்பாடு பொதுக் கொள்கை உருவாக்கச் செயற்பாட்டில் மிக முக்கியமான இடத்தைப் பிடிக்கிறது. இதன் போது அரச முறைமையில் காணப்படும் நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட நபர்களுக்குமான இடையிலான அம்சங்களைத் தெளிவுபடுத்தி அவை வெளியீடுகளாக இடம் பெற உதவி புரியும். இதன் போது பிரதம நிர்வாகி, சட்ட சபை உறுப்பினர்கள் (Assembly Members), நிர்வாகத் துறையினர், பணியக அமைப்பாளர்கள் (Bureu Organizers) பங்குபற்றுவார்கள்.

பொதுக் கொள்கை செயற்பாட்டில் உள்ளீடுகளாக கோரிக்கைகள், ஆதரவுகள் அமைந்து அது வாயில் காவலனைத் தாண்டி தீர்மானம் எடுக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறைக்கு உற்படுத்தப்பட்டு கொள்கையாக்க நிறுவனங்களினால் வெளியீடுகளாக வெளிப்படுத்தப்படும். இவை சட்டங்களாகவும் தீர்மானங்கள் ஆகவும் கொள்கைகளாகவும் காணப்படலாம்.

உள்ளீடுகளும் வெளியீடுகளும் ஓரளவு சமமானதாக காணப்பட்டால் இம் முறை அமைவு தொடர்ந்து செயற்படும். அவை குறைந்தால் முறை அமைவு பின்னூட்டல் செயற்பாடுகளினூடாக மீண்டும் உள்ளீடுகளாக மாற்றப்படும்.

பொதுக் கொள்ளை தொழிற்பாடானது கொள்கை உருவாக்கத்திலோ அமுலாக்கத்திலோ நின்று விடாது. மாறாக மக்களின் கருத்துக்களில் அதிக கவனம் செலுத்துகின்றது என்பதனை முதன்மைப்படுத்துகின்ற செயற்பாடே பின்னூட்டல் (Feed Back) ஆகும். வெளியீடுகள் (Outputs) நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் அது குறித்த மக்களின் எதிர்ப்புக்கள், நியாயப்படுத்தல்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு எதிர்ப்புக்கள் அதிகம் காணப்படின் அவற்றினை மீண்டும் உள்ளீடாக அரசியல் முறைமைக்கு எடுத்துச் செல்லும் செயற்பாடே பின்னூட்டல் எனப்படும்.

மக்களாட்சி நிலவும் நவீன அரசுகளில் பின்னூட்டச் செயற்பாடுகள் மிக முக்கியமானவையாகும். பின்னூட்டல் செயற்பாடு சிறப்பாக அமையாவிடின் ஓர் அரசியல் முறைமை தோல்வி அடையும். ஆகவே டேவிட் ஈஸ்டன் கறுப்புப் பெட்டி மாதிரி மூலம் கொள்கைச் செயன்முறையை விளக்கிக் கொள்வதற்கு உதவிபுரிந்துள்ளார்.




Source - https://images.app.goo.gl/bZZwbTrEJe24j7Yu7

கறுப்புப் பெட்டி மாதிரியானது கோரிக்கையாளர்களின் நடத்தைபற்றிய நுண்ணறிவை வழங்குகிறது. கறுப்புப் பெட்டி மாதிரியானது எவ்வாறு முடிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கப்படுகின்றது மேலும் இந்த முடிவுகள் எவ்வாறு நடத்தைகளாக மொழி பெயர்க்கப்படுகின்றன என்பதைப் பற்றிய ஒரு யோசனையை நமக்கு வழங்குகின்றது. அந்தவகையில் இது முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

இது அரச உழியர்கள், ஆர்வலர்கள் மற்றும் சட்டங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளின் இலக்குகளை செயல்படுத்த கிடைக்கக் கூடிய விருப்பங்களை ஆராயவும் மதிப்பீடு செய்யவும் உதவுகிறது. சிக்கலான கொள்கைகளைக் கொண்ட பெரிய நிறுவனங்களின் நிர்வாகத்திலும் இந்த செயல்முறை பயன்படுத்தப்படுகின்றது.

கறுப்புப்பெட்டி கொள்கைகள் மற்றும் இலக்குகளுக்கு இடையிலான உறவுகளின் வெளிச்சத்தில் கொடுக்கப்பட்ட இலக்குகளின் தொகுப்பை அடையும் பல்வேறு கொள்கைகளில் எது என்பதை தீர்மானிப்பதற்கான செயல்முறையாக வரையறுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இவ் கறுப்புப் பெட்டி மாதிரி முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

டேவிட் ஈஸ்டன் கொள்கைச் செயன்முறையை விளக்குவதற்கு மேற்குறிப்பிட்டதைப் போல ஐந்து அம்சங்களை முதன்மைப்படுத்தி மிக இலகுவான முறையில் விளக்கியுள்ளார். அந்தவகையில் இம் மாதிரி முக்கியத்துவம் வாய்ந்தது என்றே குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும். மேலும் டேவிட் ஈஸ்டனின் கறுப்புப் பெட்டி மாதிரியானது அரசியல் செயல்முறையின் அறிவியல் பகுப்பாய்விற்கான கட்டமைப்பினை வழங்குகிறது. மேலும் அரசியலில் ஏற்படும் மாற்றத்தையும் விளக்கக் கூடியது.

கறுப்புப் பெட்டி மாதிரியானது அரசியல் செயல் முறையின் அறிவியல் பகுப்பாய்விற்கான கட்டமைப்பினை வழங்குகிறது. மேலும் அரசியலில் ஏற்படும் மாற்றத்தையும் விளக்கக் கூடியது. கறுப்புப் பெட்டி மாதிரியானது பொதுக் கொள்கை மற்றும் அரசியல் பற்றிய ஒருவரது சிந்தனையை தெளிவுபடுத்தி இலகுபடுத்துகின்றது. அந்தவகையில் இது முக்கியமானதாக காணப்படுகின்றது. கறுப்புப்பெட்டி மாதிரியானது கொள்கைப் பிரச்சினைகளில் உள்ள முக்கிய அம்சங்களை அடையாளப்படுத்துகின்றது. மேலும் அரசியல் வாழ்க்கையின் அடிப்படையான அம்சங்களில் கவனம் செலுத்துவதிலிருந்து மற்றவர்களோடு ஒருவர் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் உதவுகின்றது.

கறுப்புப்பெட்டி மாதிரியானது எது முக்கியமானது? எது முக்கியமற்றது? எனப்பரிந்துரை கூறுவதிலிருந்து பொதுக் கொள்கை பற்றிய பொதுக் கொள்கைக்கான விளக்கத்தினையும் அதன் விளைவுகள் பற்றிய எதிர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறல்களையும் வழங்குகின்றது. மேலும் தெளிவான புரிந்துணர்வுக்கான ஒருவரது முயற்சிக்கும் வழிகாட்டுகின்றது. அந்தவகையில் முக்கியமானதாக காணப்படுகின்றது.

எனவே கொள்கை உருவாக்கச் செயன்முறையை விளங்கிக் கொள்வதற்கு பல மாதிரிகள் காணப்படினும் டேவிட் ஈஸ்டனின் கறுப்புப் பெட்டி மாதிரியானது மிக எளிமைத்தன்மையாகவும் விளங்கிக் கொள்ளக் கூடியனவாகவும் காணப்படுகின்றன. இவர் தனது மாதிரியில் **உள்ளீடு, வாயிற் காவலன், தீர்மானம் எடுக்கும் செயன்முறை, வெளியீடு, பின்னூட்டல்** என்பவற்றினூடாக மிக இலகுவாக எல்லோருக்கும் எளிதில் விளங்குகின்ற வகையில் கறுப்புப் பெட்டியினை வடிவமைத்துள்ளார்.

கறுப்புப் பெட்டி மாதிரியானது பொதுக் கொள்கைச் செயன்முறையை விளங்கிக் கொள்வதற்கு முக்கியம் வாய்ந்ததாக காணப்படினும் பல விமர்சனங்களைக் கொண்டு காணப்படுகின்றது. பொதுக் கொள்கை ஒன்று தான் செயற்படும் சமூகத்தின் புறச் சூழலில் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்கின்ற விடயத்தினை நிரூபிக்கின்ற ஒன்றாக காணப்படுகின்றது. மேலும் பொதுக் கொள்கை மக்களின் பங்குபற்றுதலுக்கு முதன்மையிடம் அளிக்கின்ற ஒன்றாக காணப்படுகின்றது.

பின்னூட்டம் என்கின்ற அம்சம் உண்மையான ஜனநாயகத்தினை நிலை நிறுத்துவதற்கு உதவி புரிகின்றது. மேலும் கோட்பாடுகளுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தினை நடைமுறைக்கு வழங்க தவறியுள்ளது. கறுப்புப்பெட்டி அணுகுமுறையில் இலக்குகளை தெளிவாக விளக்கப்படவில்லை.

இவ்வாறான குறைபாடுகள் இருந்த போதிலும் டேவிட் ஈஸ்டனின் முறைமைப் பகுப்பாய்வுக்கான கருப்புப் பெட்டி மாதிரி நவீன அரசியல் பகுப்பாய்வில் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பிடித்துள்ளது. அத்தோடு எளிமையான வகையில் கொள்கைச் செயன்முறையினை விளக்கியுள்ளது என்றே கூறிக் கொள்ள வேண்டும்.

வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் இருந்து முறைமைப் பகுப்பாய்வில் டேவிட் ஈஸ்டனின் கருத்துக்கள் அரசியல் அமைப்புக்களின் செயற்பாடுகள் பற்றிய சில கோட்பாட்டுத் தகவல்களை வழங்குகின்றன. எந்தவொரு அரசியல் அமைப்பின் செயல்பாட்டு வழிமுறைகளையும் உள்ளீடு - வெளியீட்டு பகுப்பாய்வு மூலம் தீர்மானிக்க முடியும். கூடுதலாக பின்னூட்டம் அமைப்புக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கும் இடையிலான தகவல் தொடர்புக்கான ஒரு பயனுள்ள சேனலாகவும் செயல்படுகின்றது.

இருப்பினும் டேவிட் ஈஸ்டனின் கறுப்புப்பெட்டி மாதிரி முற்றிலும் சரியானதாக கருத முடியாது. அவரது கருத்துக்கள் மிகவும் சுருக்கமானவை மற்றும் அனுபவ ஆய்வுகள் அற்றவை. பல்வேறு துறைகளில் மாற்றத்தை சந்தித்து வரும் ஆசிய - ஆபிரிக்க நாடுகள் அரசியல் வளர்ச்சியின் செயற்பாட்டில் ஈஸ்டனின் முறைமைப் பகுப்பாய்வின் பழமைவாதத் தன்மையை அரிதாகவே ஏற்றுக் கொள்கின்றன.

எது எவ்வாறாயினும் கொள்கைச் செயன்முறையை விளக்கிக் கொள்வதற்கு மிக பயனுள்ளதாக கறுப்புப் பெட்டி (Black Box) மாதிரி காணப்படுகிறது. என்னைப் பொறுத்தமட்டில் கொள்கைச் செயன்முறையை விளக்கிக் கொள்வதற்கு இலகுவாக அமைந்துள்ளது.

## உசாத்துணை நூல்கள்


கிருஷ்ணமோகன்.த, (2010), “அரசியல் விஞ்ஞானம் அரசியல் செயற்பாடும், அரசியல் செயல்முறையும்”, சேமமடு பதிப்பகம்.

செல்வா.V.K, (N.Y), “பொதுத்துறை நிர்வாகம் சர்வதேச உறவுகள் மோதல் மோதல் முகாமைத்துவம், வணிக வள நிலையம், கொழும்பு.

https://gkscientist.com / david - Easton - system - analysis - criticism /

https://www.brainyias.com / iasbuzz / models - public - policy - critique

https://www.owlgen.in / describe - the - eastons - policy - making - process

https://www.slideshare.net / matakab / systems - theory - 47503

https://www.slideshsre.nrt / BEINGPLITICAL /david - eastons

https://www.jstor.org / stable / 2128889




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு பல்லின சமூகத்தில் பொதுக் கொள்ளை எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு இலங்கையின் பொதுக் கொள்கை உருவாக்கத்தில் உள்ள சவால்களை தெளிவுபடுத்துக.**

பொதுக் கொள்கை (Public Policy) என்பது பொதுமக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் கருத்திற் கொண்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைத் திட்டங்கள் ஆகும். பொதுக் கொள்கை உருவாக்கம் என்பது (Public Policy Making) "அரசாங்கத்தின் மிகவும் பிரதான செயற்பாடாகும்." மக்களின் நலனில் அதிக கவனம் எடுக்கப்படுவது அரசாங்கத்தின் பெறுப்பாகும். அரசாங்கமானது பல வகைப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்கிறது. "அரசாங்கத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் கொள்கை முக்கியமானதாகும்." அந்த வகையில் "ஒரு பல்லின சமூகத்தில் பொதுக்கொள்கை எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு இலங்கையின் பொதுக் கொள்கை உருவாக்கத்தில் உள்ள சவால்களை தெளிவுபடுத்துவதாக" இவ் பிரதிபலிப்பு அறிக்கை அமையப் பெற்றுள்ளது.

எந்த ஒரு நாட்டினை எடுத்துக் கொண்டாலும் அந்த நாட்டிற்கு பொதுக்கொள்கை என்பது முக்கியமான விடயமாக காணப்படுகிறது. ஒரு நாடு பலம் பொருந்திய நாடா அல்லது பலமற்ற நாடா என்பதை தீர்மானிப்பது அந்த நாடு மேற்கொள்ளும் கொள்கை உருவாக்கத்தில் தான் தங்கியுள்ளது. தற்போது உலகில் தன்னை வல்லரசு எனக் கூறும் அமெரிக்க, ரஷ்யா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் சிறந்த கொள்கையாக்கமே அதற்கு காரணமாகும். ஆனால் பல்லின சமூகங்கள் வாழும் நாடுகள் அதிலும் குறிப்பாக தென் பூகோள நாடுகள் பெரிதாக முன்னேற்றம் காண்பதில்லை. அதற்கான காரணம் அவர்கள் உருவாக்குகின்ற பொதுக்கொள்கையில் ஏற்படுகின்ற சவால்கள், சிக்கல்கள், முரண்பாட்டுத்தன்மையே காரணம் என நான் நிச்சயமாக வாதிடுவேன். காரணம் பல்லின சமூக நாடுகளில் பல இன, மத, மொழி பேசுகின்ற மக்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் அனைவரையும் திருப்திப்படுத்திய ஒரு பொதுக்கொள்கையை உருவாக்குவது என்பது முடியாத ஒன்றாகவே இருக்கிறது. இதனால் இவ் நாடுகளில் இன முரண்பாடுகளும், குரோதங்களும், சிக்கல் தன்மையும் காணப்படுகின்றது. இதனால் பல்லின சமூக நாடுகள் முன்னேற்றகரமான பாதையில் செல்ல அங்கு பொதுக்கொள்கையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் என்றால், **"பொதுக் கொள்கையானது சாதி, இன, மத, மொழி பேதமின்றி சகல மக்களின் நலனை பேணுகின்ற வகையில், அனைவருக்கும் திருப்தி அளிக்கின்ற வகையில், பாகுபாடின்றி உருவாக்கப்படல் வேண்டும்."** என்று குறிப்பிடுவேன்.

பல்லின சமூகத்தில் இவ்வாறானதொரு கொள்கையை உருவாக்குவது என்பது சிக்கலான ஒரு விடயமாகும். இலங்கையினை எடுத்துக் கொண்டால் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட பல இன, மத, மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பல்லின நாடாகும். இலங்கையில் ஆரம்பகாலம் தொட்டு இன்று வரைக்கும் கொள்கை வகுப்புக்களில் மட்டுமன்றி சாதாரணமாகவே தமிழ், சிங்களம் என்கின்ற பாகுபாடு காணப்பட்டு வருகின்றது. மேலும் ஆட்சியமைப்பவர்களும் பெரும்பான்மை சமூகத்தினரான சிங்களவர்கள் என்பதால் பொதுக்கொள்கை உருவாக்கமானது பாரபட்சம் உடையதாக அமைகின்றது என்பது கொள்கை உருவாக்கத்தில் ஒரு பின்னடைவாகவே காணப்படுகின்றது. தனிச் சிங்கள சட்டம் (1956), பிரஜாவுரிமைச் சட்டம், சிங்கள குடியேற்றத் திட்டங்கள் போன்றவற்றினை சான்றாக குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

இது ஒரு புறம் இருக்க இலங்கையின் பொதுக்கொள்கை உருவாக்கத்தில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. கொள்கை உருவாக்கமானது **"மிகவும் சிக்கல் தன்மை வாய்ந்ததும் அரசியல் தன்மை கொண்டதுமான ஒரு செயல்முறையாகும்."** ஆனால் இலங்கை போன்ற பல்லின நாடுகளில் அதைவிட சிக்கல் மிக்கதாக காணப்படுகின்றது என்றே நான் கூறுவேன். இலங்கையில் கொள்கை உருவாக்கத்தில் பல சக்திகள் பங்குபற்றுவதால் காலத்தோடு கொள்கையினை உருவாக்குவதில் சிக்கல் தன்மை காணப்பட்டு வருகின்றது. இலங்கையில் பாராளுமன்றத்திலோ, அரசியற்கட்சிகளிலோ, அமுக்கக் குழுக்களிலோ, நீதித்தறையிலோ பல்வேறு இன மக்களும் இருக்கிறார்கள். இதனால் கொள்கை உருவாக்கத்தின் போது பாரிய வாக்குவாதங்களும், முரண்பாடுகளும் ஏற்பட்டு வருகின்றன. இதனால் சில தருணங்களில் கொள்கை உருவாக்கத்தையே கைவிடுகின்ற தன்மை காணப்பட்டு வருகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக 21 ஆவது சீர்திருத்த முயற்சி தோல்வி கண்டமை குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

இலங்கையில் அனைத்து மக்களுக்கும் பயனளிக்கின்ற, விரும்புகின்ற கொள்கையினை உருவாக்க முடியாமை கொள்கை உருவாக்கத்தின் போது ஏற்படுகின்ற பாரிய சவாலாக காணப்படுகின்றது. இலங்கையில் சிங்கள மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பும் கொள்கைகள் தமிழ் மக்களை திருப்திப்படுத்துவதில்லை. தமிழ் மக்கள் விரும்பும் கொள்கைகளை சிங்கள மக்கள் விரும்புவதில்லை. இவ்வாறானதொரு தன்மையே இலங்கையில் காணப்பட்டு வருகின்றது.

மேலும் கொள்கை உருவாக்கத்தின் போது ஏற்படும் இன்னொரு சவாலாக இலங்கை திரைசேரியில் போதியளவு பணம் இல்லாமை ஆகும். கொள்கையினை உருவாக்குகின்ற போது அதனை நடைமுறைப்படுத்துவதற்கு போதியளவு பணம் இருக்கிறதா? இல்லையா? அதன் பின்னணியில் மட்டுப்பாடுகளுடனேயே கொள்கை உருவாக்கமானது இடம் பெற வேண்டும். மேலும் போதியளவு வளங்களும் இல்லாமையும் பாரியளவு சவாலாக உள்ளது.

இலங்கையில் கொள்கை உருவாக்குவதில் அறிவான பாத்திரங்கள் இல்லாமை ஒரு சவாலாக காணப்படுகின்றது. இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களான அரசியல் வாதிகள் படிப்பறிவு அற்றவர்களாக அநேகமானவர்கள் காணப்படுகிறார்கள். இதனால் நாட்டுக்கு பயனுள்ள கொள்கைகளை உருவாக்குவதில் சிக்கல் காணப்படுகிறது.

மேலும் இலங்கையில் கொள்கை உருவாக்குவதில் வெளிநாட்டு சக்திகளது தலையீடு காணப்படுவது பாரிய சவாலாக உள்ளது. எடுத்துக் காட்டாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை குறிப்பிட்டுக் கொள்ளலாம். இலங்கை - இந்திய ஒப்பந்தமானது புலிகளை மையப்படுத்திய ஒப்பந்தமாக இருந்தாலும் புலிகளின் பங்குபற்றுதலின்றி வெளிநாட்டு சக்தியின் பங்குபற்றலே அதிகமாக காணப்பட்டது.

மேலும் இலங்கையில் கொள்கை உருவாக்கத்தின் போது எதிர்கொள்ளும் மற்றுமொரு சவாலாக ஜனாதிபதியின் தன்னிச்சையான போக்கு காணப்படுகின்றது. எடுத்துக் காட்டாக அம்பாந்தோட்டை துறைமுகம், மாத்தளை விமான நிலையம் என்பன மகிந்தராஜபக்ஷ தன்னிச்சையாக உருவாக்கிய திட்டங்களாகும்.

ஆகவே இத்தகைய சவால்களை கொள்கை உருவாக்கத்தில் இலங்கை சந்தித்து வருகின்றது. எனவே இவற்றை எல்லாம் களைந்து இலங்கையில் கொள்கை உருவாக்கமானது அனைத்து தரப்பு மக்களுக்கும் பயனளிக்கும் விதத்திலும், பாரபட்சம் அற்ற விதத்திலும், நாட்டின் முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் விதத்தில் தூர நோக்குடைய கொள்கைகளை வகுத்து நாட்டினை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்பதே என்னுடைய அவாவாக காணப்படுகின்றது என்பதனை குறிப்பிட்டுக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


கிருஷ்ணமோகன்.த, (2010), "அரசியல் விஞ்ஞானம் அரசியல் செயற்பாடும், அரசியல் செயல்முறையும்", சேமமடு பதிப்பகம்.

Selva.V.K, (N.Y), "பொதுத்துறை நிர்வாகம் சர்வதேச உறவுகள் மோதல் மோதல் முகாமைத்துவம், கொழும்பு வணிக வள நிலையம்.

Abdul Jabbar . M, (N.Y), "பொதுக்கொள்கையும் கொள்கை அமுலாக்கலும்", மட்டக்களப்பு பல்கலைக்கழகம் இலங்கை

(N.A), (2020), "நிர்வாக முகாமைத்துவம்", www.blogspoot.com

(N.A) , (2022), "தேசிய கொள்கை", www.Gov.lk

Mansoor.U, (2015), "சிறுபான்மை வாழ்வுக்கான கொள்கை உருவாக்கம்", www.kalpitiyavoice.com

(N.A), (2016), "அரசறிவியல் எண்ணக்கருக்கள்", www.kalviulagam.com

(N.A), (2014), "இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொதுக் கொள்கைகள்", www.politicsunitseusl.com.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏதாவது ஒரு அபிவிருத்தி திட்டம் ஒன்றை குறிப்பிட்டு ஆராய்க.

அரசறிவியல் கற்கை நெறியில் அபிவிருத்தி நிர்வாகம் என்பது பிரதான இடத்தினைக் கொண்டதாக காணப்பட்டு வருகின்றது. அபிவிருத்தி நிர்வாகமானது. நாட்டின் அபிவிருத்திக்கான பல திட்டங்கள், கொள்கைகளை வகுத்து வருகின்றது. அந்த வகையில் நான் இக் கட்டுரையில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற சமுர்த்தி அபிவிருத்தி திட்டம் தொடர்பாக ஆராய்ந்துள்ளேன். இக் கட்டுரையின் மூலமாக சமுர்த்தி அபிவிருத்தி திட்டத்தின் தோற்றம், அதன் உள்ளடக்கங்கள், நிர்வாகக் கட்டமைப்பு, சமுர்த்தி திட்டத்தின் பலம், பலவீனங்கள், சமுர்த்தி அபிவிருத்தி திட்டத்தினால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள், அது எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அதனைத் தீர்ப்பதற்கான சில பரிந்துரைகள் என சில கருத்துக்களை முன்வைத்துள்ளேன்.

உலகின் பல பாகங்களிலும் இன்று அபிவிருத்தி நிர்வாகத்தின் (Development administration) முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. "இரண்டாவது உலகமாகயுத்தத்திற்கு பின் பல சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் தோன்றின." இவற்றிற்கு முகம் கொடுத்து பல்வேறுபட்ட சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அபிவிருத்தி நிர்வாகக் கோட்பாடு முன்வைக்கப்பட்டது.

அபிவிருத்தி நிர்வாகம் என்பது "ஒரு நாட்டின் அரசியல் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான நிர்வாகம்" ஆகும். எனவே நாட்டின் அபிவிருத்தியினை ஏற்படுத்தத்தக்க வகையில் திட்டங்கள், கொள்கைகள், கோட்பாடுகள், திட்டமிடல்கள் என்பவற்றினை வகுப்பது அபிவிருத்தி நிர்வாகத்தின் பிரதான பணியாகும். அதனடிப்படையில் இலங்கையினை எடுத்துக் கொண்டால், இலங்கையானது ஒரு வளர்முக நாடு என்கின்ற ரீதியில் அபிவிருத்தி நிர்வாகத்தில் பல சிக்கல்கள், சவால்கள் காணப்படினும் தனது நாட்டின் முன்னேற்றத்திற்காக பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏதாவது ஒரு அபிவிருத்தி திட்டம் ஒன்றைக் குறிப்பிட்டு ஆராய்வதாகவே இக் கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

இலங்கையானது இந்தியத் துணைக் கண்டத்தின் தென்கீழ் கரைக்கு அப்பால் இந்தியப் பெருங்கடலில் ஏறத்தாழ 20 மில்லியன் மக்கள் வாழும் தீவு நாடாகும். 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்ததிலிருந்து நாட்டினை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் நோக்கில் பல அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. எடுத்துக்காட்டாக சமுர்த்தி அபிவிருத்தி திட்டம், மகாவலி அபிவிருத்தி திட்டம் உணவூட்டல் நிகழ்ச்சி திட்டங்கள், கம்பரெலிய அபிவிருத்தி திட்டம், திவிநெகும அபிவிருத்தி திட்டம், கமநெகும அபிவிருத்தி திட்டம், ஜனசவிய திட்டம் போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை குறிப்பிட்டுக் கொள்ளலாம். அந்த வகையில் இங்கு வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றான சமுர்த்தி அபிவிருத்தி திட்டம் தொடர்பாக விரிவாக ஆராய்வதாக காணப்படுகின்றது.

இலங்கையில் மிக முக்கியமான வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றான சமுர்த்தி அபிவிருத்தி திட்டம் (Samurdhi development Project) 1995 தொடக்கம் செயற்பட்டு வருகிறது. "இத்திட்டம் ஏற்கனவே நாட்டில் காணப்பட்ட உணவு முத்திரைத் திட்டம், மதிய உணவுத்திட்டம், ஜனசக்தித் திட்டம் போன்றவற்றை அகற்றியது." இத் திட்டமானது இலங்கையின் மொத்த சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கான சுமார் 1.2 மில்லியன் வறிய குடும்பங்களை உள்ளடக்கியது. "இந் நிகழ்ச்சித் திட்ட அமுலாக்களில் சமுர்த்தி அதிகார சபை தவிர சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களமும் வறியோர் நிவாரண திணைக்களமும் ஈடுபட்டு வருகின்றன." இத் திட்டத்தின் ஆரம்பம் தொடக்கம் அமுலாக்கப்பட்டு வந்த பல்வேறு செயற்றிட்டங்களுக்கு ஊடாக வறுமை ஒழிப்பில் ஈடுபட்டு வருகின்றது. குறிப்பாக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிறுவனங்களிடம் நலன் புரி சீர்திருத்தத்திற்கென கடனற்ற உதவிகளைப் பெற்றே பல ஆண்டு காலமாக பல மாற்றங்களை உள்ளடக்கி சமூக நலனை வளப்படுத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (தொழில் நுட்ப உதவிகள்)

உற்பத்திச் செயற்பாட்டில் ஏழைகளின் பங்களிப்பை உறுப்படுத்துவதன் மூலம் வறுமையைக் குறைப்பது, ஏழைகளின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து, நிலையை மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு சமுர்த்தி அபிவிருத்தி திட்டம் உருவாக்கப்பட்டது. அதனடிப்படையில் திட்டத்தில் கூறப்பட்ட முக்கிய நோக்கங்களாக, வருமான மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்புக்களை விரிவு படுத்தல், இளைஞர்கள், பெண்கள் மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட மக்கள் பிரிவினரை சிறு குழுக்களாக ஒழுங்குபடுத்தல் மற்றும் வளர்ச்சி செயல்முறைகளில் பங்கேற்க அவர்களை ஊக்குவித்தல், நபர்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை வளர்த்துக் கொள்ள உதவுதல் மற்றும் வேலைவாய்ப்பின் மூலம் அவர்களின் சொத்துத் தளங்களை வலுப்படுத்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புற அளவில் கூடுதல் ஊதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்க உற்றபத்தி சொத்துக்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் போன்றவை காணப்படுகின்றன.

இந்த நோக்கங்களுக்கு அதிகாரம் அளிக்கும் செயல்முறைக்கு அவர்களை வெளிப்படுத்துவதன் மூலம் வளர்ச்சியில் மக்களை ஈடுபடுத்தும் நடவடிக்கைகளாக பல முக்கியமான செயல்களை உள்ளடக்கியதாக சமுர்த்திதிட்டம் காணப்படுகிறது. அவையாவன, சமூக நிலைமையை மதிப்பிடுதல் மற்றும் பயனாளி சமூகத்திற்கு நன்மை பயக்கும் நடவடிக்கைகளில் பங்கேற்பதை ஊக்குவிப்பதற்கான அணுகுமுறைகளை பின்பற்றுதல், குழு உருவாக்கம் மற்றும் தலைவர்களை அடையாளம் காணத்தக்க சூழ்நிலையை உருவாக்குதல், குழு சேமிப்புக்களை ஊக்குவித்தல், உள்குழு மற்றும் சூழலும் நிதி அடிப்படையிலான கடன் வழங்குதல் எளிய கணக்குகளை பராமரித்தல் மற்றும் குழு மட்டத்தில் அறிக்கை, சேமிப்பு மற்றும் வருமானம் ஈட்டும் நிறுவனங்களின் சாத்தியக்கூறு ஆய்வுகள் மற்றும் திட்ட அறிக்கைகளை உருவாக்குதல் என்பன காணப்படுகின்றன.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகார சபையினை உருவாக்கும் சட்டத்திற்கமைய, அதிகார சபையின் பணிப்பாளர் சபை சட்டரீதியாக நியமிக்கப்படுகின்ற 04 பணிப்பாளர்களுடனும் விடயப் பொறுப்பு அமைச்சரால் நியமிக்கப்படுகின்ற ஏனைய பணிப்பாளர்கள் மூவரையும் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதற்கு அமையவே பணிப்பாளர் சபை செயற்பட்டு வருகின்றது.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் நிர்வாகப்பிரிவானது தாபனம் மற்றும் நிர்வாகம் ஆகிய இரு பிரதான பிரிவுகளாக செயற்படுகின்றது. நிர்வாகத்தில் முகங்கொடுக்கக் கூடிய நாளாந்த செயற்பாடுகளை நிர்வாகப் பிரிவின் மூலமும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்குரிய நடைமுறைச் செயற்பாடுகளை தாபனப் பிரிவின் கீழும் செயற்படுத்துகின்றது. நிர்வாக மற்றும் நிறுவனப் பிரிவு இரண்டும் முக்கியமாக பொது முகாமையாளரின் நேரடி கண்காணிப்பிற்குள் உட்படுத்தப்பட்டுள்ளதோடு நிர்வாகப் பிரிவின் பணியாளர் எண்ணிக்கையானது 32 இனையும் தாபனப் பிரிவின் பணியாளர்களது எண்ணிக்கையானது 42இனையும் கொண்டதாக காணப்படுகின்றது. மேலும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுர்த்தி அதிகார சபையின் மொத்தப் பணியாளர்களாக 27,662 பேர் உள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சமுர்த்தி பணிக்குழுவிற்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் பிரதேச மற்றும் மாவட்ட சமுர்த்தி குழுக்கள் என இரண்டு வகையான குழுக்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மற்றொரு குழு மகாசங்கம் 10,000 பயனாளிக் குடும்பங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் சமுர்த்தியின் நிர்வாக கட்டமைப்பு, வேலைப்பிரிப்பு முறைமைகள் தொடர்பாக பின்வரும் படங்களினூடாக மேலும் விரிவாக அறிந்து கொள்ளலாம்.

இலங்கை சமுர்த்திஅதிகார சபையின் தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரையிலான தாபனக் கட்டமைப்பு வரைபடம்.

**நிர்வாக அல்லது முகாமைத்துவ மட்டம் - குறித்த நிறுவனம் அல்லது அமைப்பு**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் தாபனக் கட்டமைப்பானது தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரை விரிவடைந்து செல்வதைக் காட்டும் இந்த அட்டவணை மூலம் கிராமிய மட்டத்திலுள்ள சிறுகுழுக்களை வலுவூட்டுகின்றமை நிறுவனத்தின் அடிப்படைக் குறிக்கோளாகவும் அதன் செயற்பாடு பற்றியதுமான கருத்தினை வெளியிடுவதாக காணப்படுகின்றது.

அபிவிருத்தி மற்றும் தாபனச்சேவைகள் பிரிவு




சமுர்த்தி அபிவிருத்தித் திட்டத்தின் முக்கிய கூறுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். மொத்த சமுர்த்தி வரவு செலவுத்திட்டத்தில் ஏறத்தாழ 80% கொண்டு தகுதியுள்ள குடும்பங்களுக்கு உணவு முத்திரையை வழங்குதல், "சமுர்த்தி வங்கிகள்" மூலம் செயல்படும் சேமிப்பு மற்றும் கடன் திட்டம், தொழில் முனைவோர் மற்றும் வணிக வளர்ச்சிக்காக விதிக்கப்பட்ட கடன்கள், பலவேலை மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் சமூக உள் கட்டமைப்பின் மறுவாழ்வு மற்றும், மேம்பாடு - (உற்பத்தித் திறன் மேம்பாட்டு பயிற்சி, கணக்கியல் செயற்பாடுகளில் பயிற்சி நிர்வாகக் குழுக்களின் பயிற்சி மற்றும் பொருள் வள மேம்பாடு.)

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு கூறுகளுக்கும் வெளியீட்டு குறிகாட்டிகளை பயன்படுத்தி அதன் தாக்கம் மதிப்பிடப்படுகின்றது. அதனடிப்படையில் நாடு முழுவதும் மொத்தம் 905 சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் 1,427,322 குடும்பங்களின் மொத்த உறுப்பினர்களுடன் நிறுவப்பட்டன. மேலும் நீர்ப்பாசன கால்வாய்கள், அணைகள், கண்காட்சிகள் மற்றும் பிற சந்தைப்படுத்தல் மையங்கள் கட்டப்பட்டது போன்ற விடயங்கள் தெரிய வருகின்றது. இந்தத் திட்டம் பல குறிப்பிடத்தக்க சாதனைகளுக்காகப் பாராட்டப்படலாம். இருப்பினும் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார மற்றும் ஊட்டச்சத்து பாதிப்புக்களை மதிப்பிடுவதற்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை.

வறுமையினை ஒழிப்பதற்காக சமுர்த்தி திட்டமானது தனக்கு கீழ் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டு காணப்படுகிறது. அவையானவன, கிராமியச் சமூகச் செயற்திட்டங்கள், கட்டாய சேமிப்புத் திட்டம், தன்விருப்புச் சேமிப்புத்திட்டம், சுயவேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு உப திட்டங்களை கொண்டு காணப்படுகிறது.

சமுர்த்தி அபிவிருத்தி திட்டத்தின் பலங்களாக அல்லது நன்மைகளாக, இத்திட்டம் தீவிர ஏழைகளுக்கு அவர்களின் உணவுத் தேவையில் குறைந்தது 10% உத்தரவாதப்படுத்துகின்றது. குடும்பங்கள் தங்கள் திறன்களை கவனமாக மதிப்பீடு செய்தல் மற்றும் உள்நாட்டில் கிடைக்கும் வளங்களை அணுகுவதிலிருந்து அல்லது அணுகுவதன் அடிப்படையில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். பயிற்சி வழங்கும் பயிற்சி நிறுவனங்களுடன் வலுவான நிறுவப்பட்ட தொடர்புகள் காணப்படும், பயிற்சிக்கான அனைத்து செலவுகளையும், சமுர்த்தி தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல், கடனுக்கான விதை மூலதனம், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் இதர சமூக நலக்கூறுகள் அனைத்தையும் தாங்குவதற்கான முழுநிதி உதவியின் மூலம் அரசாங்கத்தின் திட்ட உரிமையானது நிரூபிக்கப்பட்டுள்ளது. கட்டாய மற்றும் தன்னார்வ சேமிப்பு திட்டத்தின் மூலம் சமூக உரிமையை எளிதாக்குகின்றது. பல்வேறு அரச துறைகளால் தொழில்நுட்ப, மேலாண்மை மற்றும் நிதி ஆதாரங்களை வழங்குவதன் மூலம் சமூகங்களால் எடுக்கப்பட்ட முயற்சிகள் அராசங்க திட்டங்களுடன் பொருந்துகின்றன. சமுர்த்தி வேலைத்திட்ட செயற்பாட்டாளர்களாக பழங்குடியின தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர், முடிவெடுப்பதில் சமூகத் தலைவர்கள், தொழிலாளர்கள் மற்றும் இலக்கு குடும்பங்களின் வலுவான ஈடுபாடு காணப்படக் கூடியதாக இருக்கிறது போன்றவற்றினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

சமுர்த்தி அபிவிருத்தியில் பல பலங்கள் காணப்படினும் பல பலவீனங்களும் காணப்படவே செய்கின்றன. அந்தவகையில் பலவீனங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம் நீண்டகாலமாக அரசு கடைப்பிடித்து வரும நலன்புரி அணுகுமுறையானது மக்கள் நீண்டகாலமாக அரசை சார்ந்து இருக்க வழிவகுத்தது, அரசு அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் அரசியல் பின் விளைவுகளுக்குப் பயந்து பொதுநல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகுமுறையைத் தவிர வேறு அணுகுமுறைகளை கையாளத் தயங்குகின்றார்கள். நலன்புரி அணுகுமுறையானது மக்களது முன்னேற்றத்தை தடுக்கிறது. அரசுசாரா நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் பிறவளர்ச்சி நடவடிக்கைகளுடன் இத்திட்டத்தினை இணைப்பதில் பாரிய சிக்கல்கள் காணப்படுகின்றன. சில பகுதிகளில் ஒருங்கிணைக்கப்படுவதற்கு பதிலாக சேவைகளில் பிரிவுபடுத்தல் காணப்படுகிறது. வருமானம் ஈட்டும் நிறுவனங்களின் தயாரிப்புக்களுக்கு சந்தைப்படுத்தல் வசதிகள் இல்லாமை, தீவிர ஏழைகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதி உதவி வாழ்வாதாரத் தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை, சமுர்த்தி திட்டமானது சில வேளைகளில் யாருக்கு உதவித் திட்டத்தினை வழங்க வேண்டும் என்கின்ற கொள்கையை தாண்டி செய்றபட வாய்ப்புள்ளது.

சமுர்த்தி திட்டத்தில் பல பலங்கள், பலவீனங்கள் காணப்படினும் இத்திட்டமானது வறுமையினை ஒழிப்பதாற்காக மட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை செயற்படுத்தி அதில் வெற்றி தோல்வி என இரண்டையும் கண்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. அந்த வகையில் 1995 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதிலிருந்து பல சமூக மாற்றத்தினை ஏற்படுத்தி வருகின்றது. எனவே சமுர்த்தி திட்டம் சமூகத்தில் எத்தகைய தாக்கம் அல்லது மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஆராய வேண்டியது அவசியமானதாக காணப்படுகிறது.

சமுர்த்தி திட்டத்தின் மூலம் விவசாயம் செய்யவும் பயிரடவும் கடன் திட்டம், நிவாரணம், மானிய முறை வழங்கப்பட்டது. கிராமிய விவசாயம் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழான மக்களின் வாழ்வாதாரம் என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தி உதவி புரிந்தது. மேலும் விலங்கு வேளாண்மை கடற்றொழில் நடவடிக்கை என்பவற்றிற்கான மானிய நிதி கடன் வழங்கல் நடைமுறை வழி இத்தொழிலை சார்ந்து வாழும் மக்களின் வறுமையைத் தணிப்பதில் பங்காற்றியதாய் அமைகிறது. அத்துடன் இத்திட்டத்தினை தொடர்ந்து கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவில் அதிகளவானோர் உள்ளீர்க்கப்பட்டு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள கூடிய சூழ்நிலை உருவானது முக்கிய மாற்றமாகும். மேலும் தகுதி வாய்ந்த குடும்பங்களுக்கு உணவு முத்திரை வழங்க சமுர்த்தி கணக்கில் சுமார் 80% ஒதுக்கப்பட்டமை முன்பு கொண்டு வந்த திட்டங்களைப் பார்க்க சிறப்புக்குரிய மாற்றமாய் சமூக வளர்ச்சிக்கு உதவியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசாங்க வேண்டுகோளுக்கு இணங்க உலகவங்கி 2003 முதல் சமுர்த்தி நலன்புரி சீர்திருத்தத்திற்கு கடனற்ற உதவிகளை வழங்கி வருகின்றது. அதன் படி இத்திட்டம் பல ஆண்டுகளாக மாற்றங்களை உள்ளடக்கி சமூக நலனை வளப்படுத்தியது. குறிப்பாக இதன்கீழ் அதிகாரமளித்தல் எனும் திட்டம் 5துணைத் திட்டங்களை உள்ளடக்கி கிராமப்புற உட்கட்டமைப்பு வாழ்வாதார சமூக மேம்பாடு சமுர்த்தி வீட்டுத் திட்டம் என்பவற்றை மேற்கொண்டமை முக்கிய சமூக மாற்றமாகும். மேலும் இளைஞர் யுவதி என்போரை ஒன்றிணைத்து அடிமட்ட முடிவெடுத்தல் செயன்முறை, மேம்பாட்டு செயன்முறை என்பவற்றில் பங்கேற்க ஊக்குவித்தமை குறிப்பிடத்தக்க சமூக மாற்றமாகும். கிராமப்புற அளவில் கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்க உற்பத்தி சொத்தை நிறுவுதல் பராமரித்தல் என்பன சமூக மாற்றத்திற்கு அடிப்படையாகி தொழில் நடவடிக்கை விரிவானது. இவ்வாறான பல மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி திட்டமானது நடைமுறையில் பல சவால்களையும் சிக்கல் தன்மையினையும் எதிர்கொண்டு வருகின்றது. அதற்கான காரணங்களாக இலஞ்சம் ஊழல், சமுர்த்தி அதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாடுகள், வறுமை அதிகரிப்பு, பொருளாதார பற்றாக்குறை, வளங்களை பகிர்தளிப்பதில் பாரபட்சம் காட்டுதல் (தமிழ், சிங்கள, முஸ்லீம் பாகுபாடு பார்க்கப்படல்) இனங்களுக்கிடையிலான முரண்பாடு, அரசியல் கட்சிகளின் தலையீடு, அதிகரித்த இலங்கை அரசின் கடன்கள், தொழல்நுட்ப அறிவின்மை, சமுர்த்தி அதிகாரிகளுக்கு போதிய பயிற்சியின்மை போன்றன காணப்படுகின்றன.

"சமுர்த்தி திட்டம் என்பது வறுமைப்பட்ட, அரசதொழில் புரியாத பிள்ளைகள், வெளிநாட்டில் இல்லாத பிள்ளைகள், வேலையற்ற அன்றாடம் சீவிக்கவே கஸ்டப்படும் மற்றும் உடல் அங்கவீனம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக பரிந்துரை செய்யப்பட்ட திட்டமாகும்." ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ளசிக்கல் சமுர்த்தி அபிவிருத்தி திட்டம் எதிர்கொள்ளும் பாரிய சவாலாகும். அதாவது சொந்தக் காணிவீடு, தொழிலில் ஈடுபடுபவர்கள், வெளிநாடுகளில் பிள்ளைகள் சகோதரர்கள் இருப்பவர்கள் என்போருக்கு சமுர்த்தி முத்திரை கிடைக்கின்றது. மாறாக ஒரு ஓலைக்கொட்டிலில் ஐந்து ஆறு பிள்ளைகளுடன் கஸ்டப்படும் குடும்பங்களுக்கு சமுர்த்தி முத்திரை கிடைக்காமல் உள்ளது. இதனால் இத்திட்டத்தின் உருவாக்க நோக்கம் பலனற்றதாக மாறிவிடுகிறது. இந்த நிலைமைக்கு காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுர்த்தி அலுவலகர்களுக்கு பொறுப்பில்லாத தன்மையும் அதனை வாங்குபவர்களின் மனச்சாட்சியுமில்லாத நடத்தையே காரணமாகும்.

வறுமையான மக்களுக்கு கிடைக்கவேண்டிய உதவித் திட்டமானது வழங்காமல் வறுமை, கல்வியறிவு குறைவு, அதிகாரிகளை தங்கியிருத்தல் உள்ளிட்ட பல காரணங்களால் நியாயம் கேட்டு குரல் எழுப்பும் வல்லமையற்ற எளிய மக்கள் மீது நிகழ்த்தப்படும் மாபெரும் அநீதி இதுவரை கண்டுகொள்ளப்படாமல் இருப்பது பெருந்துயரமே.

"சமுர்த்தி தொடர்பான அத்தனை குற்றச்சாட்டும் உத்தியோகத்தர்களின் நடவடிக்கையால் எழுந்தவை" ஆகும். அவற்றை சீராக்குவதெனில் உத்தியோகத்தர்கள் சரியாக நடக்கவேண்டும். பக்கச்சார்பான முகம் பார்த்து செயற்படும் உத்தியோகத்தர்கள் இருக்கும் வரை இப்பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும் இதுவே யதார்த்தமும் கூட. இதனால் தான் இன்னும் சமுர்த்தி அபிவிருத்தி திட்டம் அதன் முழுமையான இலக்கினை அடைய முடியாதுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி திட்டத்தின் உருவாக்க நோக்கம் சரியான முறையில் இடம்பெறுவதற்கு, சமுர்த்தி கட்டுப்பாட்டு சபை தலைவர்கள் வருடாவருடம் மாற்றப்பட வேண்டும். அவர்களை தெரிவு செய்யும் பொறுப்பு பயனாளிகளிடம் தான் இருக்க வேண்டுமே தவிர சமுர்த்தி உத்தியோகத்தர்களிடமோ அல்லது கிராம உத்தியோகத்தர்களிடமோ இருக்கக்கூடாது. "ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள சமுர்த்தி பயனாளிகளை உறுதி செய்து கொள்ள நேரடியாக சென்று பார்வையிடும் குழு அவசியம்" பிழையான பயனாளிகளை தேர்வு செய்யும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உள்வாங்கப்பட வேண்டும். பயனாளி தேர்வு தொடர்பான தெளிவான நடைமுறை வரையறுக்கப்பட வேண்டும். பயனாளிகளின் மாத வருமானத்தை சரியான ஆவணங்கள் மூலம் கண்டறிய வேண்டும் இவ்வாறான சீர்திருத்தங்களையோ நடவடிக்கைகளையோ மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

முடிவாக தொகுத்து நோக்குகின்ற போது இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்டு 1995ஆம் ஆண்டு இலங்கையில் வறுமையைக் குறைக்கும் முக்கிய குறிக்கோளுடன் இலங்கை அரசாங்கத்தால் சமுர்த்தி அபிவிருத்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் செயற்பாடுகளை நிர்வாகிக்கும் தேசிய மற்றும் உள்ளூர் மட்ட அதிகாரிகளின் பரந்த வலையமைப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறது. இத்திட்டம் சமுர்த்தி அதிகார சபையினால் வழிநடத்தப்படுகிறது. இத் திட்டத்தின் மூலம் பல நல்ல மாற்றம் இடம் பெற்ற போதிலும் சில அரசியல் தலையீடு, அதிகாரிகளது கவனயீனம் மூலம் வறுமைக்கோட்டிற்கு கீழான பல மக்களிடம் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது என விமர்சிக்கப்படுகின்றது.

எது எவ்வாறாயினும் சமுர்த்தி அபிவிருத்தி திட்டமானது நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் காணப்படினும் அதை நடைமுறைப்படுத்தி அதன் நிலைப்புத்தன்மையை நிறுவியுள்ளது என்றே நான் கூறிக்கொள்வேன். சமகாலத்தில் இத்திட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை நீக்குவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே எதிர்காலத்தில் இத் திட்டத்தின் உருவாக்க நோக்கம் பூரணமாக நிறைவு பெற வாய்ப்பான சூழல் ஏற்படும் என்பதை நான் மனமார நம்புகிறேன்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுள் ஒன்றாக காணப்படும் இலங்கை சுதந்திரத்திற்குப் பின்னர் பொது நிர்வாகத்திலும் அபிவிருத்தி நிர்வாகத்திலும் முதன்மையான பங்களிப்பை வழங்க வேண்டியதாக முன் உணரப்பட்ட போதிலும் இலங்கையின் அபிவிருத்தி நிர்வாக அமுலாக்கல் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதில் தோல்வியே கண்டு வருகின்றது. இலங்கையின் அபிவிருத்தி நிர்வாக அமுலாக்கல் செயற்பாடுகள் பல்வேறு சவால்களை எதிர் நோக்கி வருகின்ற போதிலும் இயன்றளவு தன்னால் முடிந்த அளவு சேவையினை மக்களுக்கு வழங்குகின்றது. எனினும் சமுர்த்தி அபிவிருத்தித் திட்டம் போன்ற சேவைகளை முழுமையான அளவில் வழங்க முடியாமலும் காணப்படுகிறது. இதற்கு காரணம் நிர்வாகிகளின் பொறுப்பற்ற தன்மையும் திட்டமிடலின் பலவீனமும் பிரதானமாகும்.

எனவே அபிவிருத்தி நிர்வாக அமுலாக்கல் செயற்பாடுகளில் காணப்படும் பலவீனங்களையும் சவால்களையும் துல்லியமாக இனங்கண்டு அவற்றிக்கான தீர்வுகளை முன்வைக்கும் போது இலங்கையில் அபிவிருத்தி நிர்வாகமானது தனது அடைவு மட்டத்தினை எட்டக் கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**

நாதன்.ச.கா, (1998), “அபிவிருத்தி நிருவாகம்”, புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்,

கருணாகரன்.வே, (2000), “பொருளாதார அபிவிருத்தியில் கொள்கைகள்”, கங்கை ஒவ்செட் பிரிண்டர்ஸ்

இலங்கை மத்தியவங்கி, (2000), “இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளி விபரம் 2000” புள்ளி விபரத்திணைக்களம், கொழும்பு

இலங்கை சமூர்த்தி அதிகார சபை, (2000), “வறுமை ஒழிப்புக்கான சமுர்த்தி வேலைத்திட்டம்” கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு.

இலங்கை சமுர்த்தி அதிகார சபை, (2011) “2011ம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை”, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.

கிருஸ்ணவேனி.டீ, (2011), “அபிவிருத்தி நிர்வாகம்” அரசறிவியலாளன் இதழ் - 04 அரசறிவியல் இன்றியம் அரசறிவியல் துறை யாழப்பாணம் பல்கலைக்கழகம்

சுமனபால.எச், (2000), “சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் அதன் அமுலாக்கலும் முன்னேற்றமும் 1995-2000” பொருளியள் நோக்கு இதழ் 08-09, லேக்ஹவுஸ் நூல்நிலையம்.

சியா.பி,(2016), “நகைக்கடை காரணிற்கு முத்திரை….. பிச்சைகாரணிற்கு வெட்டு அதிரவைக்கும் சமுர்த்தி குழறுபடிகள்” –தீபம் இதழ் - 06, (N.P)

டயா,(2018), “தங்கிவாழும் மனநிலையிலிருந்து விடுபட்டு சுய முயற்சியில் எழுந்திருக்க கூடிய தேசத்தைக் கட்டியெழுப்புவோம்.” www.virakesari.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தென்னாசியாவின் பன்மைத்துவ நெருக்கடியால் ஏற்பட்ட முரண்பாடொன்றிற்கு நியாயமான தீர்வினை பரிந்துரைக்குக.**

பௌதீக, பண்பாட்டடிப்படையில் உலகினை பிராந்தியமாக வகைப்படுத்தி நோக்குவர் புவியியலாளர்கள். அதனடிப்படையில் "உலகில் தென்னாசியா பரந்த நிலப்பரப்பையும் (4489517 சதுர கி.மீ) அதிக மக்கள் தொகையையும் கொண்ட (1230.41 மில்லியன்) பிராந்தியமாக விளங்குகின்றது. தென்னாசியாவின் வடக்கே இமயமலைத் தொடராலும் தெற்கில் இந்து சமுத்திரத்தாலும், கிழக்கில் வங்காள விரிகுடாவினாலும், மேற்கில் அரேபியக் கடலாலும் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக பிராந்தியங்கள் ஒத்த தன்மைகளினை அடிப்படையாகக் கொண்டே வகைப்படுத்தப்படுவது இயல்பானதாகும். அந்த வகையில் தென்னாசிய பிராந்தியத்தில் காணப்படுகின்ற பொதுவான இயல்புகளில் ஒன்றாக பன்மைத்துவ சமூகமானது காணப்படுகின்றது குறிப்பிடத்தக்கதாகும்.

பன்மைத்துவ சமூகம் என்பது பல இன, மத, மொழி, கலாசாரங்களைக் கொண்ட மக்கள் வாழும் சமுதாயத்தினை பன்மைத்துவ சமூகம் எனக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். ஒவ்வொரு இனமும் அவர்களது அடையாளத்தைப் பாதுகாப்பதற்காக அவர்களுக்கு உரித்தான வழக்காறுகள், நடைமுறைகள், மொழிகள், மதங்கள், நம்பிக்கைகள், அபிலாஷைகள், பாரம்பரியங்களைக் கொண்டிருக்கின்றன.

பன்மைத்துவ சமூகக் கட்டமைப்பு என்பது உண்மையில் பாதகமான பிரதிவிம்பங்களைத் தரக்கூடியது அன்று மாறாக அது வலிமையான சமூகக் கட்டமைப்பு என்பதனை எல்லோரும் புரிந்து கொள்ளுதல் அவசியமானதாகும். இதனையே கோபி அணான் கூறுகையில் பன்முகத்தன்மை வலிமையின் ஆதாரமாகக் கருதினால் சமூகங்கள் ஒரு ஆரோக்கியமானதாகவும் வளமானதாகவும் காணப்படும் என்றார். இந்தக் கருத்தினை வைத்துப் பார்க்கின்ற போது ஒரு ஆதாரமாக பன்மைத்துவத்தினை சாதகமாகப் பயன்படுத்தி வெற்றி பெற்ற நாடாக சுவிஸ்லாந்து காணப்படுகின்றது குறிப்பிடத்தக்கதாகும். மாறாக தென்னாசிய பிராந்தியத்தினை நோக்கி உலகம் இன்று திரும்பிப் பார்ப்பதற்கு பன்மைத்துவ சமூகம் காரணமாக அமைந்தாலும் துரதிஷ்டவசமாக தென்னாசிய நாடுகளில் பன்மைத்துவ சமூகங்கள் தேசிய அடையாளம், சாதி மதம், மொழி போன்ற அம்சங்களினால் கட்டமைக்கப்பட்டு பன்மைத்துவ சமூகத்தின் சாதக தன்மையினை அடைய முடியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல்கள், போர்கள், கலவரங்கள், கருத்து வேறுபாடு போன்ற பல்வேறுபட்ட நெருக்கடிக்குள் அகப்பட்டு இதன் காரணமாக வெளிச்சக்திகளின் பிடிக்குள் தெரிந்தோ தெரியாமலோ சிக்கித்தவிக்கின்றன.

அந்தவகையில் தென்னாசிய நாடுகளில் ஒன்றான இந்தியா "பல்வேறு பண்பாட்டு வகைகளையும், பூகோள அமைப்புக்களையும் மொழிகளையும், இனத்தவர்களையும் உள்ளடக்கிய ஒரு பரந்த துணைக் கண்டம் ஆகும்." இதனால் பல்வேறுபட்ட மத ரீதியான பிரச்சினைகள், மொழிரீதியான பிரச்சினைகள் என பல்வேறுபட்ட நெருக்கடிகளை இந்திய நாடு எதிர்கொண்டு வருகின்றது. உதாரணமாக பாபர் மசூதிப் பிரச்சினை, குஜராத் பிரச்சினை, தெலுங்கான பிரச்சினை போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளை குறிப்பிட்டுக் கொள்ளலாம். இந்த வரிசையில் தான் சமகாலத்தில் அதிகம் பேசப்பட்டு வருகின்ற ஒரு பிரச்சினையாக மணிப்பூர் பிரச்சினையானது காணப்படுகின்றது. அந்த வகையில் மணிப்பூர் முரண்பாட்டிற்கு நியாயமான தீர்வினை பரிந்துரைப்பதாகவே இவ் ஆய்வு அறிக்கை அமையப் பெற்றுள்ளது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூர் இந்திய மாநிலங்களான நாகலாந்து, மிஸோரம், அஸ்ஸாம் மற்றும் வங்காளதேஷ், மியன்மாரை எல்லையாகக் கொண்டது. மணிப்பூர் 1947 வரை முடியாட்சியுடன் கூடிய மணிப்பூர் இராச்சியமாக விளங்கியது. 1949 இல் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. 1956 வரை இந்தியாவின் ஒன்றியப் பகுதியாக இருந்தது. 1972 இல் தனி மாநிலத் தகுதி கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று மணிப்பூரில் ஏறக்குறைய 3.3 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள். இதில் மெய்தீஸ் (Meiteis) இனப்பிரிவினர் ஏறக்குறைய மக்கள் தொகையில் அரைப்பங்கினர் ஆவார். ஏனைய ஐம்பது சதவீதத்தில் 43% ஆனவர்கள் குக்கீஸ் மற்றும் நாகாஸ் (Kukid and Nagas) காணப்பட 7% ஆனவர்கள் ஏனைய பழங்குடி இனத்தவர்களாக காணப்படுகின்றனர். இதில் மெய்தீஸ் இனத்தவர்களே மணிப்பூரில் மூத்த இனத்தவராக கொள்ளப்படுகின்றனர். மணிப்பூரில் இந்துக்களே பெரும்பான்மையினர். மெய்தீஸ் இனத்தவரே அதிகம் இந்துக்களாவர். குக்கீஸ் இனத்தவர்களில் பெரும்பான்மையினர் கிறிஸ்தவர்களே மணிப்பூரின் இனப்பரம்பல் மற்றும் மத அடையாளத்தில் அதிகம் மியன்மார் சார்ந்ததாகவே அமைந்துள்ளது. மெய்தீஸ் இனத்தவர் இம்கால் பள்ளத்தாக்கை அதிகம் மையப்படுத்தியே வாழ்கின்றனர். குக்கீஸ் அதனை அண்டிய மலைப்பகுதிகளில் வாழ்கின்றனர். இத்தகைய மெய்தீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் குக்கீஸ் இனப் பிரிவினர்களுக்கிடையே பிரித்தானியர் காலத்திலிருந்தே வன்முறைகள், மோதல்கள் இடம்பெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கதாகும்.

மணிப்பூர் கலவரமானது மதச்சிந்தனையினால் கட்டியமைக்கப்பட்ட ஒன்றாகவே ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். அதாவது மணிப்பூர் வன்முறைக்கு பல்வேறுபட்ட காரணங்கள் காணப்பட்டாலும் இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்குமிடையிலான மத ரீதியான வேற்றுமையே முதன்மைக் காரணமாக அனைத்து தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது.

எது எவ்வாறாக இருந்தாலும் இன்றைய மணிப்பூர் கலவரத்திற்கான உடனடிக் காரணத்தினை நோக்குகின்ற போது இந்தியா சுதந்திரமடைந்த அல்லது சுதந்திரக் காலப்பகுதியில் பழங்குடியினத்தவர்களின் இட ஒதுக்கீட்டின் போது (ST) மெய்தீஸ் இனத்தவர்கள் நாம் நாகரிகமடைந்துவிட்ட சமூகமாகவும் தாம் பழங்குடியினத்தவர்கள் பட்டியலில் சேர மாட்டோம் எனக்கூறி இட ஒதுக்கீட்டை (ST) நிராகரித்தது. ஆனால் குக்கீஸ் இனத்தவர்கள் பழங்குடி இனத்தவர் பட்டியலில் (ST) சேர்ந்து கொண்டனர். இதனால் பல்வேறு சலுகைகள் குக்கீஸ் இனத்தவர்களுக்கு கிடைக்கப்பெற்றது.

குறிப்பாக குக்கீஸ் இனத்தவர்கள் 90% ஆன தமது மலைப்பிரதேசங்களிலும் 10% ஆன மெய்தீஸ் இனத்தவர்களின் சமதளப் பிரதேசங்களிலும் காணிகளை வாங்கவும் விற்கவும் உரிமையுடையவர்களாக காணப்பட்டனர். ஆனால் மெய்தீஸ் இனத்தவர்கள் தமது 10% ஆன சமதளப் பிரதேசத்தில் மட்டுமே காணிகளை விற்க வாங்க உரித்துடையவர்களாக காணப்பட்டார்கள்.

இந்த பின்னணியில் குக்கீஸ் இனத்தவர்கள் தமது 10% ஆன நிலப்பரப்பினையும் கொஞ்சம் கொஞ்சமாக தம் வசப்படுத்துகின்றார்கள் என்கின்ற கோபத்தின் வெளிப்பாடாக தமது சுயமரியாதையினை விட்டுக்கொடுத்து தம்மையும் பழங்குடி இனத்தவர்களின் பட்டியலில் (ST) சேர்த்துக் கொள்ள வேண்டும் என்கின்ற கோரிக்கையினை மெய்தீஸ் இனம் முன்வைத்திருந்தது. இதற்கு பாரதீய ஜனதாக் கட்சி அரசு (B.J.P) தேர்தல் அரசியல் நிமித்தம் அதற்கு ST வழங்குவதாக உத்தரவாதம் கொடுத்திருந்தது.

இந்தப் பின்னணியில் மெய்தீஸ் இனத்தவர்களுக்கு ST வழங்கப்பட்டால் குக்கீஸ் இனத்தவர்கள் தாம் மெய்தீஸால் அடக்கி ஆளப்படுவோம் தமது சுதந்திரங்கள் பறிக்கப்படும் எனக்கருதினார்கள். காரணம் சட்டசபையில் 60% ஆனவர்கள் மணிப்பூரைச் சேர்ந்தவர்கள் ஆவார். அதில் 40% ஆனவர்கள் மெய்தீஸ் 9% ஆனவர்கள் குக்கீஸ் 11% ஆனவர்கள் நாகாக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றார்கள். இங்கு குக்கீஸ் இனத்தவர்கள் நாகாஸ் இனத்தவர்களோடு இணைந்து செயற்பட்டாலும் கூட மெய்தீஸ் இனத்தவர்களின் ஆசனங்களுக்கு சமமான இடத்தினை பெறமுடியாத போக்கே காணப்படுகின்றது. இதனடிப்படையினைக் கருத்தில் கொண்டு மெய்தீஸ் இனத்தவர்களுக்கு ST வழங்கப்படுவதின் பாதகத் தன்மையினை உணர்ந்து பழங்குடி இனத்தவர்களின் மாணவர் அமைப்பு அதற்கெதிராக போராட்டத்தில் இறங்கியதன் பின்னணியில் மணிப்பூர் வன்முறையானது தொடங்கியுள்ளது.

இங்கு குக்கீஸ் இனத்தவர்களுக்கு மியன்மார், வங்களாதேஷ் மற்றும் மிசோராம் மாநிலமும் ஆதரவு வழங்குவதாக மெய்தீஸ் பிரிவினர் குற்றம் சாட்டி வருகின்றனர். இதே நேரம் வன்முறைக்கு பாரதீய ஜனதாக் கட்சியின் அணுகுமுறையே அடிப்படைக் காரணம் என மணிப்பூர் மக்கள் குற்றம் சாட்டுகின்றார்கள். குறிப்பாக "இந்திய அரசியல் என்பது ஆட்சிக்கு வருகின்ற அரசியல் கட்சிகளின் அதிகாரத்தன்மையினையும், அரசியல் கொள்கையும் மதத்துவத்தின் செல்வாக்கினை நிர்ணயிக்கின்றன." இந்துத்துவவாதக் கொள்கை சார்பான B.J.P ஆட்சிக்கு வருகின்ற போது தேசிய அரசியலின் கட்டமைப்பில் இந்துத்துவ சார்பான கொள்கை வகுப்பிற்கு துணை நிற்பதுடன் அக் கொள்கை வகுப்பு அதன் நடைமுறை ஏனைய சமயத்தவர்களை அடிமைப்படுத்துவதுடன் வெளிநாட்டுக் கொள்கையிலும் சற்று மதவாத அரசியலினைத் திணிக்கின்றது. இந்தப் பின்னணியிலே தேர்தல் நெருக்கிக் கொண்டிருக்கின்ற கால கட்டத்தில் B.J.P அரசாங்கம் தமது வாக்குகளினைப் பெற்றுக் கொள்வதற்காக மணிப்பூர் பிரச்சினைக்கு உரமூட்டி வருகின்றது.

மணிப்பூர் வன்முறையில் பழங்குடியினப் பெண்கள் இருவரை நிர்வாணமாக்கி வீதியில் இழுத்துச் சென்றதுடன் கூட்டுப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி படுகொலை செய்தமை பெரும் அதிர்ச்சியினை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தியுள்ளது. இச் செயலினை மெய்தீஸ் தரப்பினர் மேற்கொள்கின்ற போது பொலிஸ் படையினர் அவர்களுடன் காணப்பட்டதாக இந்திய இராணுவப் படைப்பிரிவில் பணியாற்றும் இராணுவ வீரர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதிலிருந்து வெட்ட வெளிச்சமாக தெரிவது யாதெனில் B.J.P அரசாங்கம் இந்து மதம் என்ற அடிப்படையில் மெய்தீஸ்க்கு ஆதரவளிப்பதாக காணப்படுகின்றது. இப் பிரச்சினையில் 200 க்கும் மேற்பட்ட தேவாலயங்கள், கோவில்கள் மற்றும் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தொகுத்து மணிப்பூர் பிரச்சினைக்கான காரணத்தினை நோக்குகின்ற போது பலர் பல்வேறு விதமாக வாதாடுகின்றனர். சிலர் இனரீதியான வேற்றுமை என்றும் சிலர் மத ரீதியான வேற்றுமை என்றும் வாதாடுகின்றனர். இன்னும் சிலர் B.J.P இன் வாக்குப் பின்புலம், குடியுரிமைச் சட்டம், ST இட ஒதுக்கீடு போன்றவற்றினைக் குறிப்பிடுகின்றார்கள். எது எவ்வாறாக இருந்தாலும் மணிப்பூர் வன்முறையின் அடிப்படை பல்லினத் தன்மையே ஆகும்.

மணிப்பூர் பிரச்சினையானது கிட்டத்தட்ட 3,4 மாதங்கள் கடந்த நிலையில் இன்னும் தீர்க்கப்படாத ஒன்றாகவும் கொதிநிலையுடைய பிரச்சினையாகவுமே காணப்படுகின்றது. அந்தவகையில் இப்பிரச்சினையினை எவ்வாறான வழிமுறைகளைக் கொண்டு தீர்க்கலாம் என்பதனை அடுத்ததாக இங்கு நோக்குவது பொருத்தமுடையதாக இருக்கம்.

முதலாவதாக, இப்பிரச்சினையில் மத்திய அரசு தீவிரமாக இறங்கி கலவரத்தினை அடக்க வேண்டும். ஆயுதம் தரித்தவர்களினை நிராயுதபாணியாக ஆக்கப்பட வேண்டும். இதற்கு மத்தியரசு இராணுவ அமைதிப் படையினரை களத்தில் இறக்க வேண்டும். குறிப்பாக 36000 இராணுவ வீரர்களினை அனுப்பியிருந்தாலும் கூட அந்த இராணுவ வீரர்களினாலும், பொலிஸ் பிரிவினராலும் வன்முறையை தடுக்க முடியவில்லை. இந்தப் பின்புலத்தில் இராணுவ அமைதிப் படையினரை மத்திய அரசாங்கம் உடனடியாக மணிப்பூர் வன்முறையை அடக்குவதற்கு சட்ட விதிப்படி இடமுள்ளதால் அனுப்பி வைப்பதால் இதனை உடனடியாகத் தீர்த்துக் கொள்ள முடியும்.

இரண்டாவதாக, அனைத்துக் கட்சிக்கூட்டம் கூட்டப்படுவதோடு இப்பிரச்சினை தொடர்பாக பாராளுமன்றத்தில் மனம் திறந்து விவாதத்திற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். அத்தோடு இரு குழுக்களுக்குமிடையிலான பகைமை நடுநிலைமையாளர்கள் அடிக்கடி மணிப்பூரிற்கு சென்றோ தங்கியோ அவர்களின் மனநிலைகளில் மாற்றத்தினை உண்டு பண்ணுவதன் மூலம் இப் பிரச்சினையின் கொதி நிலையினை தளர்வடையச் செய்யலாம்.

மூன்றாவதாக, மணிப்பூரில் மட்டுமல்ல ஏனைய மாநிலங்களிலும் பிரச்சினையைத் தூண்டுகின்ற குடியுரிமைச் சட்டக் கொள்கைகள் மாற்றியமைக்கப்படவேண்டும். அதாவது இந்து மதத்தினர் குடிபெயர்ந்தால் அவர்கள் பிரஜையாக ஏற்றுக் கொள்ளப்படுவார் மாறாக ஏனைய மதத்தவர்கள் குடிபெயர்ந்தால் அவர்கள் பிரஜையாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டார்கள் என்கின்ற சட்டத்தினை மாற்றியமைக்க அல்லது இரத்து செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஆயுதப்படை சிறப்புப் பாதுகாப்புச் சட்டம் இது கொலை செய்வதற்கு அனுமதி வழங்குகின்ற சட்டமாகும். இந்தச் சட்டம் தான் மணிப்பூரினை சின்னாபின்னம் ஆக்குவதற்கான அடிப்படைக் காரணமாகும். இந்த சட்டம் என்பது நீக்கப்பட வேண்டிய சட்டமாகும்.

நான்கவாதாக இரு இனக் குழுமங்களுக்கிடையேயும் இந்தியர்கள் என்கின்ற இன உணர்வினை ஊட்டுவதோடு இரு இன மக்களுக்கும் சமமான ஒரு அரசு என்கின்ற நம்பிக்கையினை B.J.P அரசு கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்தால் வன்முறை தணிவதற்கான சாத்தியப்பாடானது உருவாகும். அதாவது மணிப்பூர் மாநில முதல்வர் பிரேன் சிங் மற்றும் மத்திய உள்துறை அமைச்சரினை பதவியிலிருந்து நீக்கி நம்பிக்கை தரக்கூடியவர்களை பதவியில் அமரச் செய்ய வேண்டும். அப்போது தான் அங்கு பேச்சுவார்த்தையினை நடாத்தக் கூடியதற்கான சுமூகமான சூழல் என்பது தோற்றம் பெறும்.

ஐந்தாவதாக, குக்கீஸ் இனப் பெண்களை கூட்டுப்பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய அனைவருக்கும் சட்டத்தின் முன் தண்டனையை விரைவில் மத்தியரசாங்கம் பெற்றுக் கொடுப்பதோடு முகாம்களிலுள்ள பழங்குடியினத்தவர்களின் தேவைகளையும் மலைகளில் ஒழிந்து வாழும் மக்களுக்கு உணவு மற்றும் சுகாதார வசதிகளை B.J.P அரசு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

ஆறாவதாக B.J.P அரசு இனவாதப் போக்கினை கைவிடாதது வரையும் மணிப்பூரில் B.J.P ஒன்றியரசாக நீடிக்கும் வரைக்கும் இப் பிரச்சினை சுலபமாக தீர்க்கப்படமாட்டாது. எனவே இவர்களது அரசியல் இலாபம், இனவாதப் போக்கினை கைவிடுவதற்கு எதிர்க்கட்சியினாலேயே முடியும். அதாவது எதிர்க்கட்சி ஆளுங்கட்சி மீது பல்வேறு விமர்சனங்கள், அழுத்தங்களினை பிரயோகித்து வந்தால் இப்பிரச்சினை ஓர்முடிவை நோக்கி நகர்த்தப்படும்.

ஏழாவதாக, மணிப்பூரின் பிரச்சினைக்கான பின்புலம் அங்கு மலைகளில் காணப்படுகின்ற நிக்கல், பிளாற்றினம், தாமிரம் போன்றன காணப்படுவதனால் அதனை அபகரிக்கும் முயற்சியில் அம்பாணி மத்திய அரசினைக் துணை கொண்டு செயற்பட்டு வருகின்றது என்ற ஒரு கருத்து நிலவுகின்றது. இந்நிலையில் தன்னார்வக் குழுக்கள், சிவில் அமைப்புக்கள், நலன்பேண் குழுக்கள், அம்பாணியின் தனியார் நிறுவனங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், பிரச்சாரங்கள், போன்றவற்றை மேற்கொண்டால் இப் பிரச்சினைக்கான உண்மை நிலையினையும் B.J.P அரசாங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையினையும் அறிவதோடு இப்பிரச்சினையினை முடிவுப்பாதைக்கு கொண்டு வருவதற்கான வழி பிறக்கும்.

எட்டாவதாக, நான் இந்த வழிமுறையினை மணிப்பூர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சிறந்த தீர்வாக கருதுகின்றேன். மெய்தீஸ் இனத்தவருக்கு தமது தாய்நிலம் பறிபோகுது என்பதே இப் பிரச்சினையின் சாரம்சம் ஆகும். இப்பிரச்சினைக்கு தீர்வாக மெய்தீஸ் கேட்ட பழங்குடி இனத்தவர் பட்டியலினை வழங்காது அத்தோடு குக்கீஸ் இனத்தவர்களை மெய்தீஸ்களின் நிலப்பரப்பில் காணிகளை வாங்குவதற்கு தடை செய்து குத்தகை முறைப்படி 50 வருடத்திற்கோ அல்லது 90 வருடத்திற்கோ வாங்கலாம் என்ற சட்டத்தினை அறிமுகப்படுத்தினால் இப் பிரச்சினை சுமூகமாகத் தீர்த்துக் கொள்ளப்படும். காரணம் குக்கீஸ் இனத்தவர்கள் காணிகளை வாங்க வேண்டும் என்கின்ற கட்டாயம் இல்லை அத்தோடு குக்கீஸ் வாங்கிய குத்தகைக் காணிகளின் காலம் முடியும் தறுவாயில் மீண்டும் மெய்தீஸ் இனத்திற்கே அல்லது மணிப்பூரின் மாநில அரசிற்கே சென்றடையும். மாநில அரசில் பெரும்பான்மை மெய்தீஸ் இருப்பதனால் அக் காணிகள் மெய்தீஸிடமே வந்தடையும், இதனால் மெய்தீஸ் மக்கள் அச்ச உணர்வற்று இருக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே இத்தகையதொரு சட்டத்தினை உடனடியாகக் கொண்டு வருமிடத்து இப் பிரச்சினை காணாமல் போய்விடும். இத் தீர்வானது இரு குழுக்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவகையிலும் இரு குழுக்களது பிரச்சினைகளை தீர்க்கும் விதத்திலும் அமைந்த நியாயமான தீர்வாகக் காணப்படுகின்றது.

இவ்வாறாக பல்வேறு வழிமுறைகள் உபாயங்களைக் கையாண்டு மணிப்பூர் பிரச்சினைக்கு தீர்வினை சுலபமாக அடைந்து கொள்ள முடியும். ஆனால் B.J.P அரசு மௌனம் காத்து ஏனோ தானோ என்கின்ற செயற்பாட்டினையே மேற்கொண்டு வருகின்றது. அரசியல் தலைவர்கள் தமது சுயலாப உள்நோக்கங்கள் கருதி இவ்வாறான உள்நாட்டு முரண்பாடுகளை ஊக்குவிப்பது அரசியல் இராஜதந்திர செயற்பாடென்பது நாம் அறிந்ததே.

எனவே இன்றைய உலகம் நாகரீகங்களின் மோதல்களாகவே காணப்பட்டு வருகின்றது. அதனுடைய ஒரு வெளிப்பாடாகவே தென்னாசியப் பிரந்தியத்தினை பார்த்துக் கொள்ளலாம். இன்று இந்தியாவை உலக நாடுகள் திரும்பிப் பார்ப்பதற்கு அதன் பன்மைத்துவ இலாபமே காரணமாகும். ஆனால் இதனை இந்தியா தவறவிட்டுவிட்டது. ஒருவேளை பன்மைத்துவத்தை சாதகமாக பயன்படுத்த முனைந்திருந்தால் இன்று வல்லரசுக் கனவினை நிறைவேற்றியிருக்குமோ என்னவோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இந்தியாவில் பல நெருக்கடிக்கள் பன்மைத்துவ சமூகத்தினால் ஏற்பட்டாலும் கூட இந்திய சமுதாயம் வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு எனப் புகழப்படுகின்றது. "சாதி, மத, இன, மொழி வேறுபாடுகள் இருப்பினும் அதன் சகிப்புத்தன்மை, கருணை, விட்டுக்கொடுத்தல், பிறரிடம் அன்பு காட்டல் போன்ற தன்மைகளால் இந்திய சமுதாயம் ஒற்றுமையுடன் விளங்குகின்றது.

எனவே தொகுத்து நோக்குகின்ற போது மணிப்பூரில் மட்டுமன்றி "தென்னாசிய அரசியலில் மதம் அடிப்படை என்பதை நிராகரிக்க முடியாதது மட்டுமன்றி இப் பிராந்திய மக்களின் வாழ்வியலோடும் பின்னிப்பிணைந்தவையாக மதம் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மதம் மட்டுமல்லாமல் இனம், மொழி, சாதி, கலாசாரம் என்பனவும் அரசியலை நிர்ணயிப்பதாக காணப்படுகின்றது. உண்மையில் "மனித நாகரீகம் என்பது இன்னொரு நாகரீகத்தை எதிர்ப்பதற்காக தோன்றிய ஒன்றல்ல ஆனால் நாகரீகத்தை அடக்கி ஆள அரசுகள் வலிமை பெற்றிருக்கின்றன." என சாமுவேல் ஹண்டிங்டன் கூறுகின்றார். இது உள்நாட்டு அரசிற்கும் பொருத்தமானதே.

எனவே முடிவாக தொகுத்து நோக்குகின்ற போது தென்னாசியப் பிராந்திய பல்தன்மை சமூக அமைப்பினால், ஏற்படுகின்ற முரண்பாடுகளையும் அதனை அடிப்படையாகக் கொண்ட அரசியல் காய்நகர்த்தலின் பின்னணியில் ஆட்சியாளர்கள் தமது சுய இலாபத்தினை அடைந்து வருகின்றார்கள். என்பதுமே உண்மையானதாகும். எனவே இன, மத, மொழி, கலாச்சார, சாதி வேறுபாட்டின் நிமித்தம் எழும் பிரச்சினைகளை களைந்தெடுப்பதற்கு மக்கள் மத்தியில் நாட்டுப் பற்றினை அதிகமாக ஊட்டுவதோடு இன, மத வேறுபாடுகள் நீக்கி எல்லோர் மனதிலும் சகோரத்துவ உணர்வு இயல்பாக தோன்றினாலே ஒழிய பன்மைத்துவ நெருக்கடியிலிருந்து சமூக நல்லிணக்கத்தினை ஏற்படக் கூடிய வாய்ப்பும் பல்லின சமூகக் கட்டமைப்பின் சாதகமான தன்மைகளினை பயன்படுத்தி நாடுகளினை விருத்தி செய்யக் கூடிய சூழலானது ஏற்படும் என்பது என்னுடைய கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்.


நாதன்.எஸ்.கே.எஸ், (2003), "தென்னாசியா", பாரதி பதிப்பகம்.

கணேசலிங்கம்.ரீ.கே, (2017), "தென்னாசியாவின் அரசியல் கலாசாரம்", சேமமடுப் பதிப்பகம்.

புஸ்பராஜ்.சி, (2008), "உலக அரசியலும் நடைமுறை பிரச்சனைகளும்", தகவல் நலன்புரி அமைப்பு, பேராதனை.

செல்வராசு.து, (2000). "இந்தியச் சமூக நிறுவனங்கள்," அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மதன்.து, (2001), "மதச்சார்பற்ற அணிதிரட்டலை நோக்கி" www.tamilonline.com

தாமஸ், ∴ப்ரைட்மேன்.எல், (2014), "பிரிவினையை வென்ற பன்மைத்துவம்," www.hindutamil.com

பிரபாத் பாண்டே, (2023), "மணிப்பூர் வன்முறை இன மோதலுக்கு என்ன காரணம்? மோதி அரசால் ஏன் தடுக்க முடியவில்லை? www.bbc.com

பாமரன், (2023), "மணிப்பூர் கலவரம், காரணம் என்ன?," www.parankuruthu.com

(N.A),(2023), "மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் ஒருவார்த்தை கூட பேசவில்லை. ராகுல்", www.dinamalar.com

(N.A), (2023), "மணிப்பூர் தோன்றிய வரலாறு" www.madhimugam.com

மதுசூதனன், வி.கே, (2023), மணிப்பூர் பிரச்சினையின் பின்னனி என்ன? www.arunchol.com

ரஜீபன், (2023), "மோதல்களின் போது ஆயுதமாக மாறும் பாலியல் வன்முறை – மணிப்பூரின் வீடியோ வெளிப்படுத்தயுள்ள உண்மை", www.virakesari.com

கணேசலிங்கம்.ரீ.கே, (2023), "மணிப்பூர் வன்முறையும் தென்னாசியாவின் மரபார்ந்த அரசியல் ஒடுக்குமுறையும்?" ktganeshalingam.com

Shridhar naik, (2023), "A holistic approach needed to solve the Manipur problem" www.sundayguardiadianlive.co




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேசப் பொருத்தனை (ICCPR)

இன்றைய உலக அரசுகள் ஒவ்வொன்றும் தம்மை நிர்வகித்துக் கொள்ள எவ்வாறு அரசியலமைப்பு ஒன்றினை ஏற்படுத்திக் கொள்கின்றனவோ அவ்வாறே இன்றைய உலகமயமாக்கலினால் உலக நாடுகளின் உறவு நிலையை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் அரசுக்கான பொதுச்சட்டம் அல்லது சர்வதேச சட்டம் (International Law) என்பது முக்கியமானதாக காணப்படுகின்றது.

சர்வதேச சட்டம் என்பது அரசுக்குரித்தான சர்வதேச ரீதியான நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான உரிமைகள், கடப்பாடுகளை வழங்குவதற்கான விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகும். ஜெரமி பெந்தம் (Jeremy Bentham 1748 – 1832) சர்வதேச சட்டம் பற்றி குறிப்பிடுகையில் நாடுகளுக்கிடையிலான தொடர்புகளின் போதிலான பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒழுங்கு விதி என்றார். இவரினாலேயே சர்வதேச சட்டம் என்ற பதம் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சர்வதேச சட்டமானது அரசுகளுக்கிடையேயான செயல்களை மட்டும் ஆளுங் சட்டமென்பதிலிருந்து பொதுவான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேவைப்படுவதான அரசுகளுக்கிடையேயான ஒத்துழைப்போடு சம்பந்தப்பட்டதாகவும் மனிதாபிமான உள்ளடக்கம் கொண்ட சட்டமொன்றாகவும் மாறி வந்துள்ளது. இன்று மனித உரிமைகள் சட்டமும் மனிதாபிமானச் சட்டமும் சர்வதேச சட்டத்தின் கிளைகளாகக் கொள்ளப்படுகின்றன. அந்தவகையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமென பல்வேறு முக்கிய மனித உரிமை கருவிகள் நிறுவப்பட்டன. இவை நூற்றுக்கும் மேற்பட்ட ஒப்பந்தங்கள், பிரகடனங்கள், வழிகாட்டுதல்கள், பரிந்துரைகள் மற்றும் கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. அந்த வகையில் முக்கியமான சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்களில் ஒன்றாக சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச உடன்படிக்கை (ICCPR) காணப்படுகின்றது. எனவே சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச பொருத்தனை பற்றி ஆராய்வதாகவே இவ்வறிக்கை அமையப் பெற்றுள்ளது.

ICCPR 1966 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1976 இல் அமுலுக்கு வந்தது. செப்டம்பர் 29,2020 வரைக்குமான காலப்பகுதிகளில் 173 அரசுகள் பொருத்தனையின் தரப்பினராகவும், 116 அரசுகள் முதலாவது விருப்புக்குரிய பின்னேட்டின் தரப்பினராகவும், 88 அரசுகள் இரண்டாவது விருப்பத்துக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னேட்டின் தரப்பினராகவும் உள்ளன. ICCPR நீதியை நிர்வகிக்கவும் சட்டத்தின் ஆட்சியை பேணுவதற்குமான அரசுகளின் பாரம்பரிய பொறுப்புக்களை குறிக்கின்றது. பொருத்தனையில் உள்ள பல விதிகள் தனி நபருக்கும் அரசுக்குமிடையிலான உறவில் காணப்படும் பாரிய சிக்கல்களை நிவர்த்தி செய்கின்றன. இந்தப் பொருத்தனையில் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பாதிக்கப்பட்டவருக்கு மட்டுமல்ல குற்றம் சாட்டப்பட்டவர்களதும் மனித உரிமைகள் மதிக்கப்படுவதை அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ICCPR இன் உள்ளடக்கமானது அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை விபரிப்பதாக காணப்படுகின்றது. சொத்துரிமை மற்றும் புகலிடம் பெறுவதற்கான (அகதிக்கான) உரிமைகள் தவிர்ந்த அனைத்துலக மனித உரிமைகள் பிரகடகனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை விபரிக்கிறது. உதாரணமாக ICCPR உறுப்புனர 2 இன் கீழ் அனைத்து அரச தரப்புக்களும் பொருத்தனையில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை இனம், நிறம், பாலினம், மொழி, மதம், அரசியல் அல்லது பிற கருத்து, தேசிய அல்லது சமூகத் தோற்றம், சொத்து, பிறப்பு அல்லது பிற அந்தஸ்து போன்ற வேறுபாடு இல்லாமல் உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கூறுகின்றது. மேலும் பொருத்தனையானது சுயநிர்ணய உரிமை, உயிர் வாழவதற்கான உரிமை, சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கான உரிமை, வசிக்கும் இடத்தை தேர்ந்தெடுப்பதற்கான உரிமை மற்றும் நாட்டை விட்டு வெளியேறும் உரிமை உட்பட நடமாடும் சுதந்திரம், சிந்தனை சுதந்திரம், சங்கம் அமைப்பதற்கான உரிமை போன்றவை இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் தடுத்து வைக்கப்படுபவர்களின் உரிமை (உறுப்புரை 10) மற்றும் சிறுபான்மையினர் பாதுகாப்புத் தொடர்பான ஏற்பாடுகள் (உறுப்புரை 27) போன்றவை இந்தப் பொதுத்தனையில் காணப்படுகின்றன. ICCPR இல் மொத்தமாக 53 உறுப்புரைகள் உள்ளன. அவற்றில் 227 உறுப்புரைகள் தரநெறிசார் தன்மைகளைக் கொண்டுள்ளன. ICCPR க்கு இரண்டு மேலதிக பின்னேடுகள் காணப்படுகின்றன. 1966ஆம் ஆண்டில் பொருத்தனை ஏற்றுக் கொள்ளப்பட்ட நேரத்தில் விருப்பத்துக்குரிய முதலாவது பின்னேடும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது தனிநபர் முறைப்பாடுகள் தொடர்பான நடைமுறைகளை உருவாக்கியுள்ளது. அத்தோடு மரண தண்டனையை ஒழிப்பதை நோக்கமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு 1989 இல் இரண்டாவது விருப்புக்குரிய பின்னேடு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ICCPR இன் உரிமைகளின் மட்டுப்பாடு பற்றி நோக்குகின்ற போது சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் இந்தப் பொருத்தனையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சில உரிமைகளை அரச தரப்புகளால் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு உறுப்புரை 4 அனுமதியளிக்கிறது. அந்த வகையில் ஒரு அரசின் இருப்பிற்கு அச்சுறுத்தல் எழும் போதும் மற்றும் இயற்கை அனர்த்தம் மற்றும் பொது சுகாதார சீர்கேடு போன்ற அசாதாரண சூழ்நிலைகளில் ஒரு அரசு அதிகாரபூர்வமாக பொருத்தனையில் உள்ள சில உரிமைகளை தற்காலிகமாக மட்டுப்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுகின்றது. இருந்தாலும் மேலும் இத்தகைய வரம்புகள் சூழ்நிலைக்கு ஏற்ப கண்டிப்பாக தேவைப்படும் அளவிற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படுகின்றன. இத்தகைய மட்டுப்பாடுகள் சில விதிமுறைகளுக்கு உட்பட்ட வகையில் அமைய வேண்டும். அந்தவகையில் சர்வதேச சட்டத்தின் கீழ் அரசுகளின் பிறகட்டுபாடுகளுக்கு முரணாகாத வகையிலும் எந்தவிதமான பாகுபாடுகளையும் அற்ற வகையிலும் இருத்தல் வேண்டும். அத்தோடு அரசின் அத்தகைய தீர்மானம் ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டு ஏனைய உறுப்பு நாடுகளுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனினும் இத்தகைய மட்டுப்பாடுகளில் உயிர்வாழ்வதற்கான உரிமை, சித்திரவதை மற்றும் அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவதற்கான சுதந்திரம் போன்ற சில விதிகள் ஒரு போதும் எச்சந்தர்ப்பத்திலும் கட்டுப்படுத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ICCPR இன் கண்காணிப்பு பொறிமுறை தொடர்பாக நோக்குகின்ற போது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த பொருத்தனையானது அரசதரப்புக்கள் பொருத்தனையைச் செயல்படுத்துவதை கண்காணிக்க மனித உரிமைகள் குழுவை (Human Rights Committee) நிறுவுவதற்கான விதிகளை உள்ளடக்கியுள்ளது. அந்தவகையில் ICCPR இன் 28ஆவது உறுப்புரையின் படி மனித உரிமைகள் குழு நிறுவப்பட்டுள்ளது. இது அரச தரப்புகள் பொருத்தனையை செயல்படுத்துகின்றனவா என்பதைக் கண்காணிக்கின்றது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச உடன்படிக்கையின் முக்கியத்துவமாக உலக நாடுகளிலுள்ள ஒவ்வொரு மக்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனால் ICCPR சர்வதேச ரீதியில் பல்வேறுவிதமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தை ஏற்படுத்தியதாக காணப்படுகின்றது. அந்த வகையில் அவற்றினை இங்கு நோக்குவது பொருத்தமுடையதாக இருக்கும்.

இச் சமவாயத்தில் இணைந்து கொண்ட பல நாடுகளில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை பாதுகாத்து நாடுகளிலுள்ள சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகளை அனுபவிப்பதற்கு உதவுகின்றது. சர்வதேச ரீதியில் மனித உரிமைகள் பிரகடனத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் ICCPR காணப்படுகின்றது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை மீறும் ICCPR இன் அரச தரப்பினர்களை மனித உரிமைக் குழு சர்வதேசத்திற்கு அம்பலப்படுத்தி விடுகின்றது. அத்தோடு இச்சமவாயத்தினை அடியொட்டி பல நாடுகள் தமது அரசியலமைப்பில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை கொண்டு வந்தன. உதாரணமாக ICCPR இன் இரண்டாவது விருப்பத்திற்குரிய பின்னேட்டில் கசகஸ்தான் கையெழுத்திட்டத்தைத் தொடர்ந்து மரண தண்டனையை ஒழித்தது. குறித்த முடிவு எடுக்கப்பட்டது குறிப்பாக 2003 ஆம் ஆண்டிற்கு பிறகு மரணதண்டனை யாருக்கும் நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக 2016 ஆம் ஆண்டு 8 காவல்துறையாளர்கள் 2 பொதுமக்கள் என்போரை சுட்டுக் கொன்ற ரஸ்லான் குலேக்பாயேவ் எனும் நபருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. எனினும் அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறாக ICCPR உலகளாவிய ரீதியில் நேர்மறையான தாக்கங்களை கொண்டு காணப்படினும் பல நாடுகளில் தோல்வி கண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக 2016 ஆம் ஆண்டு இங்கிலாந்து மற்றும் சுவீடன் அரசாங்கங்கள் ஜூலியன் அசான்ஜ் மீதான ஏதேச்சதிகாரமான தடுப்புக் காவல் வைத்துள்ளனர். இது ICCPR இன் சரத்துக்கள் 7, 9(1), 9(3), 9(4), 10, 14 இன் விதி மீறுவதாக காணப்படுகின்றது.

ICCPR தோல்வி கண்டு வரும் வரிசையில் எமது நாடான இலங்கை முதன்மை நிலை வகிக்கின்றது. அந்த வகையில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயமும் இலங்கை அரசியல் யாப்பும் என்ற ரீதியில் நோக்கும் போது ICCPR இன் தோல்வி நிலையானது தெளிவாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இலங்கை அரசானது 1980 ஆம் ஆண்டு யூலை 11 ஆம் திகதி ICCPR இல் இணைந்து கொண்டது. எனினும் ICCPR இல் கூறப்பட்டுள்ள அனைத்து சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை இலங்கை அரசாங்கம் தமது யாப்பில் இணைத்துக் கொள்ளவில்லை. எனினும் ICCPR உறுப்புரை – 01 இல் கூறப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமை என்ற உறுப்புரிமையை நீக்கம் செய்து 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் ஆண்டு சமவாயச் சட்டம் என்ற பெயரில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் 56ஆம் இலக்கச் சட்டமாக ராஜபக்ஷ அரசாங்கம் இணைத்துக் கொண்டது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்த போதே இந்த சமவாயச் சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இலங்கை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டாமல் சாதாரண இலங்கைச் சட்டங்களில் ஒன்றாக சர்வதேச நாடுகளின் அழுத்தங்களினால் இணைக்கப்பட்டிருந்தது. ஆறு பகுதிகளாகக் குறைந்தது 37 பக்கங்களைக் கொண்ட ICCPR எனப்படும் இந்த சமவாயத்தில் ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்களின் சுயநிர்ணய உரிமை (Self – determination) அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது பிரதான உள்ளடக்கமாகும். ஆனால் பிரதான உள்ளடக்கத்தைத் தவிர்த்து அதாவது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டு இலங்கைக்கு ஏற்ற சில பகுதிகள் மாத்திரமே 56 ஆம் இலக்கச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆனால் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட நாடொன்றில் வாழும் மக்களிடையே இனக்குரோதங்கள், மதங்களுக்கிடையிலான வெறுப்புக்கள் போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் மனித விரோதங்களை தூண்டுதல் போன்ற குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை விதிக்கும் உறுப்புரைகள் ICCPR இல் பிரிவு 3(1) இல் உள்ளன. ஆயினும் இலங்கை அரசு இவ்வுறுப்புரையில் உள்ளிட்ட சில பகுதிகளை மாத்திரமே 56ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் இணைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் தேரவாத பௌத்த சமயத்தை மையப்படுத்திய பிக்குமார் சிலரின் ஓர்பால் சேர்க்கை தொடர்பாக (Homosexuality) சிங்கள மொழியில் “களுமக்கற” என்ற சிறுகதையை எழுதிய சக்திக சத்குமார என்ற சிங்கள இளைஞன் இந்த சமவாயத்தின் பிரிவு 3(1) இன் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். பௌத்த சயத்துக்கு எதிராகக் குரோத உணர்வுகளைத் தூண்டும் வகையில் களுமக்கற என்ற குறுந்திரைப்படம் அமைந்துள்ளதாக குற்றம் சுமத்தியே இவர் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கைது செய்யப்பட்டிருந்தார். மேலும் “கருத்தியல் கொள்கைக்கான புனித போர்” என்ற வாக்கியத்தினை உள்ளடக்கி சமூக ஊடகத்தில் ஒரு பதிவேற்றத்தை செய்தமைக்காக றம்சி றசீக் என்பவரும் கைது செய்யப்பட்டும் அவர்களுக்கான குற்றப்புலனாய்வும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் 2014 மற்றும் 2018 இல் முஸ்லீம் சமூகத்திற்கு எதிராக நிகழ்ந்த கலவரங்களுடன் தொடர்புபட்ட பிரதான நபர்கள் மீது தண்டனையோ அல்லது கைதோ இடம்பெறாமையானது தேசிய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்துவ மற்றும் மத வெறுப்புணர்வு காரணமாக வன்முறை தூண்டப்படும் சந்தரப்பம் பற்றிய பொருள் கோடலுக்கு ஏற்ப ICCPR சட்டம் வெவ்வேறு விதமாக பயன்படுத்தப்படுகின்றது. ICCPR சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுதலின் விளைவாக இச் சட்டம் இயற்றப்பட்டதன் தேவை மீறுகின்றது. அத்துடன் இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 10 இல் வெளிப்படுத்திய சுதந்திரமான சிந்தனை, மனசாட்சி, மதம், ஆகியவற்றிற்கான உரிமையையும் மறுக்கின்றது.

இலங்கை அரசியலமைப்பின் 10ஆவது மற்றும் 14ஆவது சரத்தின் பிரகாரம் சமயச் சுதந்திரம் பாதுகாக்கப்படுகின்றது. அதேபோலவே சர்வதேச சமவாயம் ICCPR இல் 18 ஆவது சரத்திலும் சமயச் சுதந்திரம் பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ICCPR உடன்படிக்கையில் இலங்கை கையெழுத்திட்ட நிலையில் இலங்கையில் வாழும் முஸ்லீம்களுக்கு எதிராக தொடர்ச்சியாக பல்வேறு விரும்பத்தகாத நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. உதாரணமாக ஈஸ்டர் தற்கொலை தாக்குதல் பின்னணியில் முஸ்லீம் பெண்களை மைத்திரிபால சிறிசேன காலத்தில் புர்கா அணிவது தடை விதிக்கப்பட்டது. மேலும் கொரோனாக் காலத்தில் முஸ்லீம் உடல்களை தகனம் செய்தமை போன்ற மத மீறல்களைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இது ICCPR உடன்படிக்கையின் பலவீனத்தையும் சர்வதேச சட்டத்தின் பலவீனத்தையும் எடுத்துக் கூறுவதாக காணப்படுகின்றது.

அறவழிப் போராட்டங்களை ஒடுக்கு முறைகளுக்கூடாக அடக்கி விட்டு அதற்கு நியாயம் கற்பிக்கும் விதத்தில் ஐ.நாவில் அங்கம் வகிக்கின்ற முதலாளித்துவ நாடுகளால் கூட்டுச் சேர்ந்து வரையப்பட்டதாக ICCPR காணப்படுகின்றது. ICCPR இன் மூலாதார அறிக்கையில் சுதந்திரமான கருத்துரிமைகளை வரம்பிற்குட்படுத்தும் பிரிவு 19(3), 20 என்கின்ற இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவைகள் தேசிய பாதுகாப்பின் பெயரால் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் வாய்ப்பை பயன்படுத்த ஒடுக்கு முறை அரசுகளுக்கு வாய்ப்பளிக்கின்றது. இலங்கை அரசும் இதனுள் ஒளிந்து கொண்டு ஒடுக்கப்படும் சிறுபான்மைத் தமிழரின் உரிமைகளின் குரல்வளையைத் திட்டமிட்டு அறுத்தெறிய முனைகின்றது.

எனினும் ஒடுக்கப்படும் இனம் ஒட்டுமொத்தமாக ஓரணியிலிணைந்து போராடும் போது அல்லது பேரினவாத அரசிற்கு எதிராக எதிர்வினையாற்றும் போது ICCPR இன் 19 ஆம் 20ஆம் பிரிவு வலுவற்றதாகி அது ஒடுக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இனத்தின் தற்காக்கும் உரிமை எனும் தார்மீக உரிமையாக 2005 ஆம் ஆண்டு உலக கூட்டொருமை மாநாட்டுத் தீர்மானமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வாழ்வதற்கான உரிமையானது உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தில் 2 – 3 இன் கீழும் ICCPR இல் உறுப்புரை 6(1) இன் கீழும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனினும் இலங்கை அரசியலமைப்பில் உயிர் வாழ்வதற்கான உரிமை சுட்டிக்காட்டப்படவில்லை. மேலும் ICCPR பகுதி 5(2) ஆனது இலங்கையின் தேசிய சட்டமுறைமைக்குள் உள்வாங்கப்பட்டதானது "பிள்ளை நலச் சிறப்பு" கோட்பாடு பற்றி நம்பிக்கை கட்டியெழுப்புகின்றது என்பது வரவேற்க்கத்தக்க அம்சமாகும்.

ICCPR இலங்கை போன்ற நாடுகளில் தோற்றமைக்கான காரணங்களை ஆராய்கின்ற போது உள்நாட்டுச் சட்டங்கள் வலிமையானதாக காணப்படுகின்றது. அத்தோடு இந்த சமவாயத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றமையும் காரணங்களாக அமைகின்றன.

சர்வதேச சமவாயத்தில் சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறப்பட்டுள்ள உறுப்புரை 1இலும் கோளாறுகள் உள்ளன. குறிப்பாக சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறப்படுகின்ற உறுப்புரை 1 இல் "ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்கள்" என்றே குறிப்பிட்டிருக்கின்றது. ஒரு நாட்டில் வாழும் அனைத்துத் தேசிய இனங்களுக்குரிய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றோ தேசிய இனம் ஒன்றைத் தேசமாக ஏற்க வேண்டுமென்றோ குறிப்பிட்டுக் கூறவில்லை. ஆகவே ஆட்சி உரிமை மறுக்கப்பட்ட நாடொன்றில் வாழும் தேசிய இனங்களை ஒரு தேசமாக அங்கீகரிக்கக் கூடிய முறையில் சுயநிர்ணய உரிமை குறித்து ICCPR சமவாயத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுக் கூறவில்லை என்பது வெளிப்படை.

ICCPR இல் கருத்துரிமைகளை வரம்பிற்குட்படுத்தும் பிரிவு 19(3), 20 காணப்படுகின்றது. இது தேசிய பாதுகாப்பின் பெயரால் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் வாய்ப்பை நாடுகளுக்கு வழங்குகின்றது. ICCPR இன் கண்காணிப்புப் பொறிமுறையின் வலிமைத் தன்மை குறைவாக காணப்படல் போன்ற பல குறைபாடுகளைக் கொண்டு காணப்படுகின்றது.

முடிவாக தொகுத்து நோக்குகின்ற போது சர்வதேச சட்டங்கள் மற்றும் அரசுகளுக்கிடையிலான உடன்படிக்கைகள், பொருத்தனைகள் போன்றன சட்டத்தினையோ அல்லது மனித உரிமைகளை நிலைநிறுத்துவதில் முதன்மையானதாகவும் முக்கியமானதாகவும் காணப்படினும் உள்நாட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்களையும் இறைமை பொருந்திய அரசுகளை விடவும் வலுக்குன்றியதாகவும் பலவீனமானதாகவும் காணப்படுகின்றது என்பதே எனது வாதமாகும். எனவே சர்வதேச சட்டத்தினை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக ஐ.நாவினை அதிகார அரசியல் நிலையிலிருந்து விடுபடச் செய்து சர்வதேச சமூகத்திற்கும் நீதி நியாயத்திற்கும் கட்டுப்பட்ட அமைப்பாக மாற்றப்பட வேண்டும். அப்போதே சர்வதேச சட்டங்கள் சர்வதேச அரசியல் பரிமாணத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக மிளிர முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## உசாத்துணை நூல்கள்


புஸ்பராசா.ந, (2021), ‘‘மனித உரிமைகள் கோட்பாடும் நடைமுறையும்’’, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

ரவீந்திரன்.யே.டி, (2008), ‘‘மனித உரிமைகள் நடைமுறை: கற்கை செயற்பாடு மற்றும் சிந்தனைக்கான அறிவுக் களஞ்சியம்’’, யுனி ஆட்ஸ் லிமிட்டெட், கொழும்பு.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, (2010), ‘‘மனித உரிமைகள் ஆவணங்கள்’’, மனித உரிமை ஆணைக்குழு, இலங்கை.

நிக்ஸன்.அ, (2021), ‘‘ICCPR எனப்படும் சர்வதேச சமவாயமும் இலங்கை அரசியல் யாப்பு’’, www.thinakural.lk

அசோக்பரன்.கே.என், (2019), ‘‘இலங்கையில் சுயநிர்ணயம்’’, www.tamilmirror.lk

(N.A), (2019), ‘‘ICCPR சட்டம் என்றால் என்ன?’’, www.vidivelli.lk.

அசோக்பரன்.கே.என், (2021). ‘‘ICCPR சட்டத்திற்கும் அதன் பயன்பாட்டிற்கும் இடையிலான முரண்பாடு’’, www.journo.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னாசிய அரசியலில் அரசியல் புவியியல் மூலங்கள் வகிக்கும் முக்கியத்துவத்தினை ஆராய்க.

இன்றைய சர்வதேச அரசியலானது அரசியல் புவியியல் (Political Geography) புவிசார் அரசியல் (Geopolitics) என்ற எண்ணக்கருக்களினை மையமாகக் கொண்டே பயணிக்கின்றன. அந்த வகையில் அரசியல் புவியியல் என்பது "அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட பிரதேசங்கள், அவற்றின் வளங்கள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டதாகும்" அத்துடன் குறிப்பிட்ட புவியியல் வடிங்களுடனான காரணங்கள் தொடர்பிலும் சம்பந்தப்பட்டதாக அமைந்துள்ளது. மிகவும் எளிமையாகக் கூறுவதாயின் அரசியல் புவியியலானது அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட அப்பிரதேசங்களின் முக்கியத்துவம் பற்றிக் கருத்தில் கொள்கின்றது.

அரசியற் புவியியலானது கல்விசார் வலயத்தினுள் ஒரு நீண்ட மரபினைக் கொண்டிருப்பினும் அது ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட வழியில் அமைந்திருக்கவில்லை. அரசியற் புவியியலானது குறிப்பாக பதினேழாம் நூற்றாண்டிலிருந்தே விபரிக்கத்தக்கதாக காணப்படுகின்றது. குறிப்பாக சேர் வில்லியம் பெற்றியின் (Sir William Petty) "Essays in political Arithmetic" எனும் தொகுப்பின் வெளியீட்டுடன் ஆரம்பித்தது எனலாம்.

அரசியல் புவியியலின் மூலங்கள் அல்லது கருப்பொருட்களாக பிரதேசம் மற்றும் பிராந்தியம் (Territory and territoriality) புவிசார் அரசியல் (Geopolitics), அரசு (state) தேசம் (Nation), அடையாளம் மற்றும் குடியுரிமை (Identity and citizenship), தேர்தல் புவியியல் (Electoral geography), சுற்றுச் சூழல் (Environment) போன்றன அடையாளப்படுத்தப்படுகின்றன. இவ் அரசியல் புவியியல் மூலங்களானவை நாடுகளின் அரசியலில் இருந்து பிராந்திய அரசியலிலும் அதைத்தாண்டிய சர்வதேச அரசியலிலும் முக்கியத்துவத்தினை வகிப்பதாக காணப்படுகின்றன. அந்த வகையில் தென்னாசிய அரசியலிலும் அரசியல் புவியியல் மூலங்கள் பல்வேறு வழிகளிலும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக காணப்படுகின்றன.

"பௌதீக, பண்பாட்டடிப்படையில் உலகினை பிராந்தியமாக வகைப்படுத்தி நோக்குவர் புவியியலாளர்." அதனடிப்படையில் ஆசிய நாடுகளை தூரகிழக்காசியா, தென்கிழக்காசியா, தென்மேற்காசியா, தென்னாசியா என வகைப்படுத்தப்படுகின்றன. இங்கு தென்னாசியா ஒரு பிராந்தியம் என்ற கருத்தானது அண்மைக் காலத்தில் தோற்றம் பெற்றது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கதாகும். தென்னாசியாவின் எல்லைகளாக வடக்கே இமயமலைத் தொடராலும், தெற்கில் இந்து சமுத்திரத்தாலும் கிழக்கில் வங்காள விரிகுடாவினாலும், மேற்கில் அரேபியக் கடலாலும் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

இன்றைய உலகில் சர்வதேசத்தவர்களின் கவனத்தை பல வழிகளிலும் கவர்ந்துள்ள இந்திய உப கண்டம் என அழைக்கபடும் தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய ஏழு நாடுகள் உள்ளடக்கப்படுகின்றன. மேலும் நிக்கோபார், அந்தமான் தீவுகளும் தென்னாசியவிற்கு உரித்தானவை ஆகும். தென்னாசிய பிராந்திய அமைப்பான சார்க்கில் ஆப்கானிஸ்தான் உறுப்புரிமையை பெற்றிருப்பினும் புவியியல் ரீதியில் அது மத்திய ஆசியப் பிரதேசத்திற்கு உரித்தானது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயமாகும். எனவே இத்தகைய தென்னாசிய பிராந்தியத்தின் அரசியலில் அரசியல் புவியியல் மூலங்கள் வகிக்கும் முக்கியத்துவத்தினை ஆராய்வதாகவே இக் கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

முதலாவதாக தென்னாசிய அரசியலில் அரசியல் புவியியல் கருப்பொருளான பிரதேசம் மற்றும் பிராந்தியம் வகிக்கும் முக்கியத்துவத்தினை நோக்குமிடத்து பிரதேசம் என்பது எல்லைக்குட்பட்ட புவியியல் இடத்தினைக் குறிக்கின்றது. தென்னாசியப் பரப்பில் பல்வேறுபட்ட பிரசேதங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக காணப்படுகின்றன. இப்பிரதேசம் புவியியல் ரீதியாக பனிமலைகள், மழைக்காடுகள், அயனக் காடுகள், பாலைவனங்கள், புல்வெளிகள், இந்துமா சமுத்திரம், அரேபியன் கடல், பல்வேறு நதிகள் என்பவற்றை உள்ளடக்கிய பல் நில உறுப்பு பிரதேசமாகும். இதன் காரணமாக தென்னாசிய பிரதேசத்தில் பல்வேறு வகைப்பட்ட சுற்றுலாவை மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகள் உலகின் எல்லா பிரதேச காலநிலைகளையும் இங்கு காணக்கூடிய தன்மை காணப்படுகின்றது. இதனால் இப் பிரதேசங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகமாகவுள்ளது. இது தென்னாசிய நாடுகளின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதாக காணப்படுகின்றது. இது உலக நாடுகளின் பார்வையினை தென்னாசியா மீது திருப்பவும், தமது முதலீட்டு நிறுவனங்களினை தென்னாசிய நாடுகள் மீது நிறுவிக் கொள்ளவும் காரணமாக அமைகின்றது. இச் செயற்பாடுகளானவை தென்னாசிய அரசியலினை அசை போடுவதாகவும் பாதிப்புச் செலுத்துவதாகவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர் வலய பிரதேசமான காஷ்மீர் தென்னாசியப் பரப்பிலே அழகு மிக்கதாக காணப்படுவதே சர்ச்சைக்குரியதாகவும் தென்னாசிய அரசியலினை தீர்மானிக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது. காஷ்மீர் பிரதேசமானது இந்திய பாகிஸ்தானுக்கிடையில் மோதல்களினை ஏற்படுத்துவதாகவும் இந்தியாவின் பாதுகாப்பினை வலுப்படுத்தும் பிரதேசமாகவும் காணப்படுகின்றது. காரணம் இந்தியாவிற்கு சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் அச்சுறுத்தலுக்கும் ஆபத்தும் வருமானால் பெரும்பாலும் காஷ்மீர் வழியாகத் தான் வர வாய்ப்புள்ளது. ஆகவே இந்தியாவின் பாதுகாப்பு காஷ்மீரின் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டது. எனவே காஷ்மீரினை இந்தியா ஒரு பொழுதும் விட்டுக் கொடுக்க மாட்டாது எனவே இதனை மையப்படுத்திய இந்திய – பாகிஸ்தான் முரண்பாடுகள் ஓய்வு பெறப்போவதில்லை. எனவே ஒரு பிரதேசத்திற்கான மோதல் என்பது இரு நாடுகளினையும் மாத்திரமன்றி தென்னாசிய அரசியலில் பாதிப்புச் செலுத்துவனவாக காணப்படுகின்றது.

அரசியல் புவியியலானது பிராந்தியத்தினை ஆய்வு செய்வதாகவும் அமைந்துள்ளது. பிராந்தியம் என்பது புவியியல், கலாசார, அரசியல், அல்லது பொருளாதாரம் போன்ற பொதுவான குணாதிசயங்களால் பிரிக்கப்பட்ட பகுதி ஆகும். அந்தவகையில் தெற்காசியப் பிராந்தியமானது கலாசார, பொருளாதார பாதுகாப்பு போன்றவற்றில் ஒருங்கிணைப்புத் தன்மை வாய்ந்ததாக காணப்படுகிறது.

தென்னாசிய அரசியலை வழிநடாத்தும் மென் அதிகார மூலங்களில் கலாசாரம் முதன்மையானதாக காணப்படுகின்றது. இது சமூக நடத்தையின் மாதிரி எந்தப் பிரிவினரின் விழுமியங்கள், அறிவூட்டல்கள் பல் பரிமாணத்தளத்தில் பரவலாகின்றதோ அதுவே அதிகாரத்தினை நிர்ணயிக்கும் வலிமையுடையதாகின்றது. இது மரபுகளை ஆதாரமாகக் கொண்ட இன, மத, மொழி அடிப்படையிலான உறவு முறையினைத் தோற்றுவிக்கின்றது. உதாரணமாக தென்னாசியப் பிராந்தியத்தில் இலங்கை - இந்திய உறவானது காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக ஈழத்தமிழர் - தமிழகத்திற்குமான உறவு குறிப்பிடத்தக்கதாகும். 2009 இலங்கை உள்நாட்டு போரின் போது ஈழத் தமிழர்களுக்காக தழிழகத்தில் பலர் தீக்குளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இச் செயற்பாடானது தென்னாசிய அரசியலினை அசை போட்டதாக காணப்பட்டது. மேலும் தென்னாசியப் பரப்பில் நவீன கலாசார மாதிரிகளை உள்வாங்கும் புதிய சந்ததியினரின் எழுச்சி மேற்குப்பாணியிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன நாகரீக அடையாளங்களை சேர்த்துக் கொள்வதன் வாயிலாக ஒரு புதிய உறவு அரசுகளுக்கிடையே நிகழ்கின்றது.

உலக அரங்கில் பிராந்தியங்களினை மையமாகக் கொண்டு பாதுகாப்பு நட்புறவு நிமித்தம் பிராந்திய அமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. தென்னாசியப் பிராந்தியமானது பௌதீக, பண்பாட்டடிப்படையில் ஒற்றுமைத் தன்மையுடையதாகக் காணப்படுவதனால் தமது பாதுகாப்பு நிமித்தம் தெற்காசிய பிராந்தியக் கூட்டமைப்பு (சார்க்) உருவாக்கப்பட்டது. இவ் பிராந்திய அமைப்பினூடாக தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஏற்பாடானது (SAPTA) சார்க் உறுப்பு நாடுகளுக்கிடையே வர்த்தக தாராளமயமாக்கலினை ஏற்படுத்தியது. இது தெற்காசியாவிலுள்ள இலங்கை போன்ற சிறிய நாடுகளினையும சர்வதேச ரீதியில் பேரம் பேசும் ஆற்றலை அதிகரிக்கச் செய்ய வழிவகுத்தது. இது தொன்னாசிய அரசியலில் பல்வேறு ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக கருதப்படுகின்றது.

இவ்விடத்தில் அழுத்திக் கூறப்பட வேண்டிய ஒரு விடயமாக கலாசார அடிப்படையில் மதம் என்பது தென்னாசிய அரசியலைத் தீர்மானிப்பதாக காணப்படுகின்றது. உதாரணமாக இந்திய அரசியல் ஒரு மதச்சார்பற்ற அரசியல் எனக் கூறிக் கொண்டாலும் யதார்த்தம் என்னவோ இந்து மதத்தினை மையமாகக் கொண்டே இடம் பெறுகின்றது. பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வருகின்ற போது இந்துதத்துவ சார்பான கொள்கை வகுப்பிற்கே துணை நிற்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாவதாக, தென்னாசிய அரசியலில் அரசியல் புவியியல் மூலமான புவிசார் அரசியல் வகிக்கும் முக்கியத்துவத்தினை நோக்குமிடத்து புவிசார் அரசியல் என்பது அரசியல் நடவடிக்கைகளில் புவியியல் காரணிகளின் செல்வாக்குப் பற்றிய ஆய்வு என எளிமையாக வரையறுக்கப்படுகின்றது. நிக்கோலஸ் ஸ்பைக்மேன் (Nicholas Spykman) புவிசார் அரசியல் பற்றி குறிப்பிடுகையில் **"அமைச்சர்கள் வருகிறார்கள் போகிறார்கள், சர்வாதிகாரிகள் கூட இறக்கிறார்கள் ஆனால் மலைத் தொடர்கள் கலங்காமல் நிற்கின்றன"** என்றார். இது புவிசார் அரசியலின் ஆழத்தை வெளிப்படுத்துவதாகவும் புவியியல் நிலைப்புத்தன்மையை கூறுவதாகவும் காணப்படுகின்றது.

தென்னாசியப் பிராந்தியமானது புவியியல் வளம் சார்ந்து செழிப்பு மிக்கதாக காணப்படுகின்றது. குறிப்பாக ஆறுகள், மலைகள், பீட பூமிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரங்கள், தீவுகள், பருவநிலைகள் என்பன தென்னாசியாவின் புவிசார் அரசியலை வடிவமைக்கின்ற காரணிகளாக காணப்படுகின்றன.

தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள மலைகள் தொடர்பாக நோக்குகின்ற போது ஏனைய ஆசிய நாடுகளை தென்னாசியாவிலிருந்து பிரிக்கும் பகுதியாக வடக்கே இமயமலை இருந்து வருகின்றது. இந்த இமயமலையானது உப கண்டத்தின் வடக்குப் பகுதியில் 800 மைல் நீளமுள்ள ஒரு தடுப்புச் சுவராகவும் அமைந்துள்ளது. மேலும் இவ் உப கண்டத்தின் மேற்காகவும் கிழக்காகவும் தொடராக அமைந்துள்ள மலைத் தொடரானது இப் பிராந்தியத்திற்கு இயற்கையாகக் கிடைத்த மற்றுமொரு அரணாகும். இவ்வாறு தென்னாசியப் பிராந்தியத்தினை வெளிச்சக்திகளின் ஆக்கிரமிப்பிலிருந்து தடுக்கும் ஒரு சுவராக காணப்பட்டு வருகின்றது. விதிவிலக்காக மொகலாய பேரரசு ஆக்கிரமிப்பானது இயற்கைவியலுக்கு முரணாக அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தென்னாசியாவில் கிட்டத்தட்ட 25 மலைகள் காணப்படுகின்றன. இவ் மலைத் தொடர்கள் காலநிலைகளினை தீர்மானிப்பதாகவும் காலநிலைகள், உடை, உணவு. போன்ற கலாசாரங்களையும் தீர்மானிப்பதாக அமைந்து காணப்படுகின்றன. இவ் கலாசாரமானது நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல தென்னாசிய அரசியலில் முக்கிய பங்கு வகிப்பவையாக காணப்படுகின்றன.

“மனிதக் கலாசாரத்தை வளர்ப்பதிலும், பல்லாயிரக்கணக்கான மக்களைப் பேணிக் காத்தலிலும் பெரும் ஆறுகளின் படுகைகள் பீட பூமிகளைப் போலல்லாமல் பெரும் பங்கேற்றிருக்கின்றன.” இது உண்மையான ஒரு கூற்றேயாகும். தென்னாசியாவில் சிந்து நதியினை மையமாகக் கொண்டே சிந்துவெளி நாகரிகமானது தோற்றம் பெற்றது.

தென்னாசியாவில் கிட்டத்தட்ட 17 நதிகள் பாய்கின்றன. இவ் நதிகளினை மையமாகக் கொண்டு தென்னாசிய நாடுகளுக்கிடையே பிரிவினைகள், முரண்பாடுகள் என்பன தோற்றம் கண்டுள்ளது. உதாரணமாக நாடுகளுக்கிடையில் ஆறுகளுக்கான மோதலினால் பல நதி ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது (1960) இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையிலான சிந்து நதி நீர் ஒப்பந்தம், (1996) இந்தியா பங்களாதேஷ் இடையிலான கங்கை நதி ஒப்பந்தம், மகாநதி ஒப்பந்தம் 1996 போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

தென்னாசிய பிராந்தியத்தில் 17 நதிகள் இருந்தும் நீர்ப்பிரச்சினை காணப்படுவதானது பிராந்திய முகாமைத்துவம் சரியானதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறாமைக்கான சிறந்த ஆதாரமாக காணப்படுவதென்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

தென்னாசியப் பிராந்தியத்தில் ஆறுகளை புனிதமாகக் கருதி இறைவனுக்கு ஒப்பாக பாவிக்கின்ற மரபானது காணப்படுகின்றது. குறிப்பாக இந்தியாவில் கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதா போன்ற நதிக்கரைகளில் கும்பமேனா, மகாமகம், ஓணம் போன்ற ஆறு சார்ந்த பண்டிகைகள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இது இந்து மத ஆதிக்கத்தினை அல்லது தென்னாசியப் பரப்பில் அதன் ஆழத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

தென்னாசியப் பரப்பில் பல பீடபூமிகள் காணப்படுகின்றன. இது தென்னாசிய நாடுகளுக்கிடையிலான உறவுகளையும் பிரிவினைகளினையும் தீர்மானிப்பதாகவும் அமைந்துவிடுகின்றன. உதாரணமாக திபெத் பீடபூமி இந்திய-சீனாவுக்கு இடையிலான மோதல்களுக்கு வழி ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமுத்திரவியல் அல்லது சமுத்திரம் சார் அரசியல் என்பது சர்வதேச அரசியலில் முதன்மையானதாக காணப்படுகின்றது. தென்னாசியப் பரப்பில் இந்து சமுத்திரம் என்பது அதன் அரசியலைத் தீர்மானிப்பதில் முதன்மையானதாக காணப்படுகின்றது. "உலகில் உள்ள முக்கிய ஐந்து பெருங்கடல்களில் மூன்றாவது பெரிய நீர்த் தொகுதியாக இந்தியப் பெருங்கடல் அல்லது இந்து சமுத்திரம் (Indian Ocean) காணப்படுகின்றது." இது ஆபிரிக்கா, கிழக்காசியா, மத்தியகிழக்கு நாடுகளை அமெரிக்கா மற்றும் ஐரேப்பாவுடனும் மலாக்கா நீரினையும் ஆரபிக் கடலையும் (தென்கிழக்காசியா-மத்தியகிழக்கு) இணைக்கும் கடற்பிரந்தியமாக காணப்படுகின்றது.

இவ் இந்து சமுத்திரமானது பல வழிகளில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. அதாவது ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகளுக்கான 80% ஆன மசகு எண்ணெய் வர்த்தகம் இக்கடற் பிராந்தியத்திற்கு ஊடாக நடைபெறுகின்றமை அத்தோடு இந்து சமுத்திரப் பிராந்தியமானது பல ஒடுங்கிய மறைவிடங்களைக் கொண்ட பகுதியாகும். எடுத்துக்காட்டாக மலாக்கா, ஹார்மஸ் போன்ற மறைவிடங்களைக் கொண்டுள்ளது. இவ்வாறான காரணங்களினால் மேற்குலக நாடுகளின் பார்வையானது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் விழுந்துள்ளது. அதனடிப்படையிலான தந்திரோபாய நகர்வுகள் இந்தியாவினை மையமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நகர்கின்றன. காரணம் இந்து சமுத்திரமானது இந்தியாவுடன் அதிக எல்லையினை பகிருகின்ற ஒரு நாடாக காணப்படுகின்றதாகும்.

மேலும் "இந்தியப் பெருங்கடல் கப்பல் போக்குவரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக உள்ளது" பிரதான கடல் மார்க்கங்களாக சுயெஸ் கால்வாய் - மலாக்கா ஜலசந்தி ஆஸ்திரேலியாவின் தென் மேற்குக்கோடி, ஆபிரிக்காவின் தென்பகுதி சுயெஸ் கால்வாய் என்று ஒரு நாற்கோணத்தை உருவாக்குவது போல அமைந்துள்ளது. இது தென்னாசிய நாடுகளுக்கிடையிலான கடல் வர்த்தகத்தையும் உறவினையும் அதிகரிப்பதாக காணப்படுகின்றது.

இவ்வாறாக உலகில் முக்கியம் பெறும் ஓர் புவிசார் அரசியற் பிராந்தியமாக இந்து சமுத்திரப் பிராந்தியம் காணப்படுகின்றது. இப் பிராந்தியம் தற்காலத்தில் மட்டுமன்றி நீண்ட காலமாகவே பெரிய, சிறிய நாடுகளால் ஆதிக்கம் செலுத்த முனையும் ஓர் முதன்மையான அரசியற் பிராந்தியமாகக் காணப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக இன்று ஆசிய வல்லரசுகளான இந்தியா சீனா தமது ஆதிக்கத்தை இப்பிராந்தியத்தில் நிலை நிறுத்தி பிராந்திய வல்லரசு என்ற நிலையை உருவாக்கும் நோக்குடன் பொருளாதார இராணுவ ரீதியாக தம்மைப் பலப்படுத்தி இக் கடற் பிராந்தியம் மீது செல்வாக்கைச் செலுத்தி போட்டி போட்டு வருகின்றன. எனினும் இப் போட்டியில் முத்துமாலைத் திட்டம் என்கின்ற இராஜதந்திர வியூகங்களை வகுத்து சீனாவின் நிலையே இந்தியாவிலும் பார்க்க அதிகரித்து வருகின்றது.

உலக, பிராந்திய நலன், அதிகாரங்கள் போன்றவற்றைக் கைப்பற்றுவதற்கு தீவுகள் பெரும் பங்கு வகிக்கின்றன. அந்தவகையில் தென்னாசியப் பரப்பில் அமெரிக்கா, சீனா, இந்தியா, ஐரோப்பிய யூனியன் நடாத்தும் அதிகாரப் போட்டியில் இலங்கை முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தியப் பெருங்கடல் பொருளதார ரீதியிலும் மற்றும் பாதுகாப்பு ரீதியிலும் பெற்றுள்ள முதன்மை இலங்கைத் தீவின் கேந்திர முக்கியத்துவத்தினை ஏற்படுத்துகின்றது. புவிசார் அரசியல் அர்த்தப்படி இந்தியாவிற்கு அண்மையில் காணப்படுவதோடு இந்தியாவின் பாதுகாப்போடு தொடர்புள்ள கேந்திர நிலையத்தில் இலங்கை அமைந்துள்ளதால் இந்தியாவுடன் அதிக தொடர்பு கொண்டு காணப்படுகின்றது. அத்துடன் இந்து சமுத்திரத்தில் இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததும், வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்ததுமான மையத்தில் இலங்கை அமைந்துள்ளதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நலன்களோடு சம்பந்தப்பட்ட பூகோள வல்லரசு அரசியலுடன் இலங்கை தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. இது தென்னாசிய அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

தென்னாசியப் பரப்பில் சீனா தீவுகளை முதன்மைப்படுத்தி தனது அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு தீவுகள் கடல் வணிக இடைத்தங்கலுக்கு முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. எனவே தெற்காசியப் பிராந்தியத்தில் வளம் மிக்க தீவாக இலங்கை காணப்படுவதனால் அநேகமான சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையினை தென்னாசிய அரசியலினை மாற்றும் ஒரு புள்ளியாக மாற்றி வருகின்றனர்.

மேலும் தென்னாசிய அரசியலின் இருப்பைத் தீர்மானிப்பதாக இந்தியாவின் இருப்பானது காணப்படுகின்றது. காரணம் தென்னாசியாவில் பெரும் பகுதியை உள்ளடக்கியதாக இந்தியா காணப்படுவதோடு அதிகளவு மக்கள் தொகையைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. அத்தோடு இப்பிராந்தியத்தின் எல்லா அரசுகளுடனும் நில ரீதியான அல்லது நீரியல் ரீதியான தொடர்பினைக் கொண்டிருக்க இப்பிராந்தியத்தின் ஏனைய அரசுகளுடையே இவ்வாறான தொடர்பினைக் காணமுடியாமையே இந்தியாவை இப் பிராந்தியத்தில் முதன்மை நிலைக்கு இட்டுச் செல்கின்றது. எனவே தென்னாசிய அரசியலைத் தீர்மானிப்பதாக இந்தியா விளங்குகின்றது.

தென்னாசிய பருவ நிலைகள் என்பது தென்னாசிய அரசியலைத் தீர்மானிப்பதாகக் காணப்படுகின்றது. தென்னாசியாவின் பொருளாதாரத்தில் விவசாயம் முதன்மையானதாக காணப்படுகின்றது. விவசாயம் முழுக்க முழுக்க பருவ மழைகளை நம்பியே காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தொகுப்பாக தென்னாசிய அரசியலில் முக்கியத்துவம் வகிக்கும் தென்னாசிய புவிசார் மூலோபாயங்களாக தென்னாசிய அமைவிடம், இந்து சமுத்திரம், இராணுவ முகாந்திரத்திற்கான தளங்கள், மலாக்கா ஜலசந்தி போன்ற வழித்தடங்கள், தென்னாசியப் பிராந்தியத்திற்கு அருகில் சீனாவின் இருப்பிடம் போன்றன காணப்படுகின்றன.

மூன்றாவதாக, தென்னாசிய அரசியலில் அரசியல் புவியியல் மூலமான அரசு வகிக்கும் முக்கியத்துவத்தினை நோக்குமிடத்து அரசு என்பது சுதந்திரமான, இறையாண்மை(Sovereignty) கொண்ட அரசாங்கம் ஆகும். இது குறிப்பிட்ட எல்லைக்குள் வரையறுக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப்பட்ட பகுதி மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசானது இரண்டு அம்சங்களுடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. ஒன்று நிலப்பரப்பின் ஒழுங்கமைப்பு, மற்றையது அந்நிலப் பரப்பில் வாழுகின்ற மக்களின் உறவுகளை உள்ளடக்கிய ஒரு முறைமை ஆகும். தென்னாசிய நாடுகளின் மக்களின் உறவு முறை என்பது இன, மத, ரீதியான வேறுபாடுகளால் நாடுகளுக்குள் பிரிவினைவாதம் என்பது காணப்படுகின்றது.

அரசு பற்றி ஆராயும் அரசியல் புவியியலானது அரசியல் எல்லைகள் பற்றிய வினாவினை எழுப்புவதோடு நிலப்பரப்பு பற்றிய உரித்துக் கோரல்களையும் எழுப்பும் குழுக்கள் பற்றியும் உள்ளடக்குகின்றது. அந்த வகையில் தென்னாசியப் பிராந்தியத்தினை நோக்கும் போது அரசுகளுக்கிடையே எல்லைத் தகராறு ஆனது அதிகளவில் காணப்படுகின்றதோடு அது தென்னாசிய அரசியலை தீர்மானிப்பதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாவும் காணப்படுகின்றது. உதாரணமாக, இந்தியாவின் வட கிழக்கே உள்ள கடைசி மாநிலம் அருணாச்சல பிரதேசம் ஆகும். இப் பிரதேசம் சீனாவிற்கு உரியது என சொந்தம் கொண்டாடி வருகின்றது. இதைவிட லடாக், திபெத் போன்ற பிரதேசங்களும் சர்ச்சைக்குரிய எல்லைப் பிரதேசமாகக் காணப்படுகின்றது.

"அரசானது தனது சொந்த, உள்ளவாரியான வளங்களில் மட்டுமே முழுமையாக தங்கியிருப்பதில்லை அது தனது நோக்கத்தின் அடைவிற்கு ஆதரவளிக்கும் அரசுகளுடன் கூட்டுறவு கொண்டிருப்பதோடு அவற்றில் தங்கியிருக்கவும் செய்கிறது." குறிப்பாக தென்னாசியப் பிராந்தியத்தில் நாடுகளுக்கிடையிலான உறவும், வர்த்தகமும் ஏனைய பிராந்தியங்களினை விட குறைவானதாக காணப்படுகின்றது. தென்னாசியப் பிராந்தியத்தின் முதன்மையான நாடான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கிடையே முரண்பாடு கொண்டதாக காணப்படுகின்றது. இது தென்னாசியப் பிராந்தியத்திற்கான முன்னேற்றத்தில் பெரும் தடையாகக் காணப்படுகின்றது.

நான்காவதாக, தென்னாசிய அரசியலில் அரசியல் புவியியல் மூலமான தேசம் வகிக்கும் முக்கியத்துவத்தினை நோக்குமிடத்து தேசம் என்பது பகிரப்பட்ட பண்பாடு அல்லது வரலாற்று அடிப்படையில் ஒருங்கிணைந்த மற்றும் ஒத்திசைவான மக்கள் குழுவினரை தேசம் என்கின்றோம். குறிப்பாக தென்னாசியப் பிராந்தியத்தில் இத்தகைய மக்கள் குழுவினர் தமக்கான சுயநிர்ணய உரிமைகளைக் கோரி வருகின்ற போக்கானது காணப்படுகின்றது. உதாரணமாக இந்தியாவில் தெலுங்கான விடுதலைப் போராட்டம் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியலை சீர் குலைக்கும் ஒன்றாக காணப்படுகின்றது. இவ்வாறாக தேசமானது தென்னாசிய அரசியலை பாதிக்கும் காரணியாகக் காணப்படுகின்றது.

ஐந்தாவதாக, தென்னாசிய அரசியலில் அரசியல் புவியியல் மூலமான அடையாளம் மற்றும் குடியுரிமை வகிக்கும் முக்கியத்துவத்தினை நோக்குமிடத்து அடையாளம் என்பது ஒரு நபர் அல்லது குழுவின் பொதுவான குணாதிசயங்களின் தொகுப்பாகும். அந்த வகையில் தென்னாசியப் பிராந்தியத்தின் அடையாளமாக கலாச்சாரம் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக சாதிக் கட்டமைப்பு என்பது இந்தியாவில் உச்சமாக காணப்படுவதென்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்சாதி முறைமை தென்னாசியாவின் அடையாளமாகவும் அரசியலைத் தீர்மானிப்பதாகவும் காணப்படுகின்றது.

குடியுரிமை என்பது சிறப்பாக ஒரு நாட்டின் குடிமகனாகவோ குடிமகளாகவோ இருப்பதற்கான உரிமையைக் குறிக்கும். இவ்வுரிமையில் அந்நாட்டு அரசியலில் பங்கு கொள்ளும் உரிமையும் அடங்கும் பல நாடுகளில் குடியுரிமை அற்றவர் அந்நாட்டுத் தேசிய இனத்தவராக கருதப்படுவதில்லை. தென்னாசிய பிராந்தியத்தில் குடியுரிமை என்பது அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கையில் இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரஜாவுரிமை என்பது இன்றும் கேள்விக்குரிய ஒன்றாகவே இருந்து வருகின்றது. இது இலங்கை அரசியலில் மட்டுமல்ல இந்திய - இலங்கை உறவு நிலையிலும் குறித்த விரிசல்களினை ஏற்படுத்துவதாக அமைந்து காணப்படுகின்றது.

ஆறாவதாக தென்னாசிய அரசியலில் அரசியல் புவியியல் கருப்பொருளான சுற்றுப்புறச் சூழல் வகிக்கும் முக்கியத்துவத்தினை நோக்குமிடத்து சுற்றுச் சூழல் என்பது மனிதனுடைய அல்லது மனிதன் உள்ளிட்ட சமுதாயத்தின் வெளிப்புறத் தன்மைகளைப் பொதுவாகக் குறிப்பிடுகின்றது. தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள நிலம், நீர், காற்று, விண்வெளி, காடுகள், கடல்கள், விலங்கினங்கள், பறவைகள், ஆகியவற்றின் இயக்க தன்மை அதன் அரசியலில் முக்கியம் மிக்கதாக காணப்படுகின்றது.

குறிப்பாக மேற்குலக நாடுகள் தமது கழிவுப் பொருட்களினை தமது சுற்றுச் சூழல் கருதி வளர்ந்து வரும் மற்றும் வறுமை நாடுகளில் கொட்டும் மரபானது காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக தென்னாசியப் பரப்பில் அதிகளவான கழிவுகள், கொண்டு வந்து சேர்க்கப்படுகின்றன. இது காலநிலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவநிலைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதோடு தென்னாசியப் பிராந்தியத்தை மாசுபடுத்துகின்றது. இவ்வாறான செயற்பாடானது பசுமை அரசியலை நோக்கிய இவ்வுலகில் தென்னாசியப் பிராந்தியத்திற்கு ஆபத்தானதாக அமைகின்றது. இன்றைய காலப்பகுதியில் தென்னாசியாவின் சுற்றுச் சூழலானது மிகவும் மோசமான நிலையாகக் காணப்படுகின்றது. இது ஏதோ ஒரு வழியில் தென்னாசிய அரசியலைப் பாதிப்பதாக அமைவதோடு தென்னாசிய புவியியல் கட்டமைப்பினையும் சிதைப்பதாகவும் காணப்படுகின்றது.

மேலும் தென்னாசிய சுற்றுச் சுழலைப் பாதிக்கும் காரணியாக கண்டல் தாவர அழிப்பு, முருகைக் கல் அகழ்வு, சுற்றுலாத்துறை விருத்தி, எண்ணெய்க் கழிவுகள் கடலில் சேருதல் போன்றவற்றினையும் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டியது இங்கு அவசியமானதாகக் காணப்படுகின்றது.

ஏழாவதாக, தென்னாசிய அரசியலில் அரசியல் புவியியல் மூலமான தேர்தல் புவியியல் வகிக்கும் முக்கியத்துவத்தினை நோக்குமிடத்து தென்னாசிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான். பங்களாதேஷ், இலங்கை, போன்ற நாடுகளின் தேர்தல்கள் பலவற்றின் முடிவுகள் நிச்சயமாக பிராந்திய ரீதியில் மட்டுமன்றி பூகோள ரீதியிலும் தாக்கத்தினை ஏற்படுத்துவதாக அமைகின்றன. உதாரணமாக இலங்கையின் தேர்தல் முடிவுகள் என்பது பிராந்திய, சர்வதேச ரீதியில் முதன்மையானதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கைத் தேர்தலில் மஹிந்த குடும்ப ஆட்சி நிலவுகின்ற போது இலங்கை சீனாவிற்கு சார்பானதாகவும் ஐக்கிய தேசிய கட்சி குறிப்பாக ரணில் ஆட்சி இடம் பெறுகின்ற போது அமெரிக்கா, இந்தியாவிற்கு சார்பானதாகவும் இலங்கை காணப்படும். மேலும் 73 வயதுடைய பிரதமர் மோடியின் புகழ் குஜராத் போன்ற இந்துக்கள் ஆதிக்கம் செலுத்துகின்ற மாநிலங்களில் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் காணக் கூடியதாகவுள்ளது. எனவே இத்தகைய தன்மையானது தென்னாசிய அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாக் காணப்படுகின்றது.

அடுத்து எட்டாவதாக, அரசியல் புவியியல் மூலமான தேசிய அரசு என்பதும் தென்னாசிய அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றது. தேசிய அரசுகள் நிலப்பரப்பு, மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை, சர்வதேச அங்கிகாரம் கொண்டு காணப்படுகின்றன. தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள நாடுகள் அனைத்திலும் இவ்வம்சங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக இந்தியா சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற நாடாகவும் அதன் நிலப்பரப்பு, மக்கள் தொகை காரணமாக வெளிச்சக்திகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுக் கொள்கையில் இந்தியா முதன்மையானதாக காணப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே தொகுத்து நோக்குகின்ற போது தென்னாசிய அரசியலில் அரசியல் புவியியல் மூலங்கள் வகிக்கும் முக்கியத்துவம் என்பது பரந்துபட்டதாகவும் ஆழமானதாகவும் அமையப்பெற்றுள்ளது. இன்று "புதிய உலக ஒழுங்கை மீண்டுமொரு தடவை மறுசீரமைக்கப்பட வேண்டிய சூழல் கருக்கொண்டுள்ளது." எனவே வல்லாதிக்கத்தை அடைதல், தக்கவைத்துக் கொள்வதற்காக நாடுகள் போட்டி போட்டுக் கொள்ளும் சூழலானது காணப்படுகின்றது. இத்தகைய போட்டிக்கான மேகங்கள் சூழ்வதற்கு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக இருப்பதனாலோ என்னமோ உலகின் பார்வை இன்று தென்னாசியப் பிராந்தியத்தினை விட்டு விலகாத போக்கானது காணப்படுகின்றது.

இன்று உலக நாடுகளுக்கு இந்தியாவுடன் நட்புறவு பேணுகின்றதை காட்டிக் கொள்கின்ற தேவையானது காணப்படுகின்றது. அத்தோடு உலக நாடுகள் தமது வெளியுறவுக் கொள்கையை வடிவமைக்கின்ற போது இந்தியாவினை மையப்படுத்தியதாகவே அமைக்கின்ற போக்கானது காணப்படுகின்றது. இன்றைய காலப்பகுதியில் தென்னாசியாவின் முக்கியத்துவமானது நரேந்திர மோடியினை இரண்டாவது தடவையாக அமெரிக்கா அழைத்து பேசியதிலிருந்து வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது. அத்தோடு பிறிக்ஸ் G – 20 மாநாடு போன்றவற்றில் அங்கத்துவம் என்பதும் சமகாலத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துகின்றது. இத்தகைய நிகழ்வுகளுக்கு காரணம் தென்னாசியாவின் மூலோபாய முக்கியத்துவமே ஆகும்.

தென்னாசியப் பரப்பிலான அதிகாரப் போட்டி என்பது தென்னாசியாவின் மூலோபாயத்திற்கான போட்டியாகவே காணப்படுகின்றது. இதற்காக சீனா, அமெரிக்காவானது தமது மேலாதிக்கத்தினை மென், வன் அதிகாரம் மூலம் நடைமுறைப்படுத்தி வருகின்றன. குறிப்பாக அமெரிக்கா இந்தோ – பசுபிக் தந்திரோபாயத்தினை குவாட், குவாட் II என்கின்ற தளத்திலும், சீனா முத்துமாலைத் திட்டத்தினூடாகவும் மேற்கொண்டு வருகின்றது.

சீனா - அமெரிக்க அதிகார மேலாதிக்கப்பிடியில் தென்னாசியா சிக்கிக் கொண்டு அதிலிருந்து வெளிவர முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றது. தென்னாசியப் பிராந்திய சக்தியாகவும், துரித பொருளாதார வளர்ச்சி கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாக இந்தியா காணப்படினும் தென்னாசியப் பிராந்தியத்தை பாதுகாப்பதிலும் இந்தியா தவறவிட்டுவிட்டது என்றே கூறிக் கொள்ள வேண்டும்.

எனவே தென்னாசியப் பிராந்தியத்தினை வறுமை, வெளிச்சக்திகளின் ஆக்கிரமிப்பு, சுற்றுப்புறச் சூழல் சீர்கேடு, நீர் மற்றும் மின்சாரத் தட்டுப்பாடு போன்றவற்றிலிருந்து விடுவிக்க வேண்டுமானால் சார்க் (SAARC) அமைப்பினை மீண்டும் புத்துயிர்பெறச் செய்து நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தை விருத்தி செய்து, தென்னாசிய நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளை பிராந்தியம் என்ற தூர நோக்கிற்காக விட்டுக் கொடுத்து இந்தியா தனது தேசிய நலன் என்ற நிலையினை சற்று குறைத்து பிராந்திய நலன் என்பதற்காக செயற்பட வேண்டும் அவ்வாறு செயற்படும் போது இந்தியா மட்டுமல்லாமல் தென்னாசிய பிராந்தியமும் விருத்தியுறும் என்பது என்னுடைய கருத்தாகும்.

## உசாத்துணை நூல்கள்


குணரத்தினம்.வே,(2008), "புவிசார் அரசியல்" அபிலாஷ் பதிப்பகம்

கணேசலிங்கம்.ரீ.கே, (2002) "மாறிவரும் புதிய உலக ஒழுங்கு புவிசார் அரசியல் நோக்கு" அரசறிவியல் - சமூகவியல் துறை, கலைப்பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

(N.A) (1981) "புவியியல் மேல்நிலை - இரண்டாம் ஆண்டு" தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

குணராசா.க, (2007) "மானிடப் புவியியல்" கமலம் பதிப்பகம்.

நாதன்.எஸ்.கே.எஸ், (2003), "தென்னாசியா" பாரதி பதிப்பகம்,

குபின்ஸ்ரலா.சி, (2017), "இந்து சமுத்திரமும் இந்திய -சீன அதிகாரப் போட்டியும், யாழ் பாரதி வெளயீட்டகம்.

கிருஸ்ணமோகன்.த, (2012), "இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் முக்கோண அதிகாரப் போட்டியும் இலங்கையின் இன மோதலும்", குமரன் புத்தக இல்லம்.

கணேசலிங்கம்.ரீ.கே, (2017) "சீனாவும் இந்து சமுத்திரமும்" சேமமடுப் பதிப்பகம்.

கணேசலிங்கம்.ரீ.கே, (2017), தென்னாசியாவின் அரசியல் கலாசாரம்" சேமமடு பதிப்பகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமகாலத்தில் ரஷ்யாவுக்கும் உக்கிரைனுக்கும் இடையிலான போர் பதட்ட நிலையும் அது தொடர்பாக மேற்கு நாடுகளின் போக்கையும் யதார்த்தவாதத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.**

சர்வதேச அரசியலை விளங்கிக் கொள்வதற்கு சர்வதேச அரசியல் கோட்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக யதார்த்தவாத கோட்பாடானது (Realism) சர்வதேச அரசியலை பொருத்தமட்டில் முக்கியமானதொரு அணுகுமுறையாகும். இது யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு யதார்த்த சூழலில் நின்று சர்வதேச அரசியலை விளக்க முற்படுகிறது. இவ் அணுகுமுறை பாதுகாப்பு மற்றும் அதிகாரம் என்கின்ற இரு சக்கரங்களினால் சுழல்கின்றது. "ரியல் பொலிட்டிக் என்பதன் பொருள் அதிகார அரசியல் (Power Politics) என்பதாகும்." தோமஸ்கொப்ஸ், கௌடில்யர், மாக்கியவல்லி போன்றவர்களின் உத்வேகத்துடன் 20ஆம் நூற்றாண்டில் முன்னணி வகித்த யதார்த்த வாதிகளான George kennan மற்றும் Hans Morgenthau போன்றோர் சர்வதேச அரசியல் அல்லது உறவுகளின் கருப்பொருள் அதிகாரத்திற்கான போராட்டமே என வாதிட்டனர்.

யதார்த்தவாத ஆதரவாளர்கள் சர்வதேச அரசியலில் அடிப்படைக்காரணி அதிகாரமாக ஏற்றுக் கொள்வதுடன் ஒவ்வொரு அரசும் அதன் இலக்கை அடைந்து கொள்ள தமக்கு முடியுமான எந்த ஒரு வழிமுறையையும் பயன்படுத்துகிறது என்பதையும் அங்கிகரிக்கிறது. **"சர்வதேச உறவுகளில் அதிகார அரசியலின் முக்கியத்துவத்தை வற்புறுத்தும் கோட்பாடு யதார்த்தவாதம் (Realism) எனப்படும்."**

அதனடிப்படையில் சமகாலத்தில் நடைபெறுகின்ற ரஷ்யா – உக்கிரைன் மோதல் குறித்தும் அது தொடர்பாக மேற்குலக நாடுகளின் போக்கையும் யாதார்த்த வாத்தினடிப்படையில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சர்வதேச அரசியல் அரங்கை மிகுந்த பரபரப்புக்கு உள்ளாக்கிய ஆப்கானிஸ்தான் விவகாரம் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு மெல்ல நீர்த்து போன நிலையில், தற்போது ரஷ்யா – உக்னரன் இடையேயான மோதல் சர்வதேச அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகின்றது. ரஷ்யா – உக்கிரைன் போர் பாரிய நெருக்கடியை உலகளாவிய பரப்பில் ஏற்படுத்தியுள்ளது. தனித்து உக்கிரன் - ரஷ்யா போராக அமைந்தாலும் அதன் விளைவுகள் உலகளாவிய பாதிப்பினை தருவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. இன்று உக்கிரன் - ரஷ்யாவுக்கு இடையில் இடம்பெற்று வருகின்ற போருக்கு முக்கிய காரணமாக நேட்டோவில் இணைவதற்கான உக்ரைனின் திட்டமிடலே இப்போருக்கான அடிப்படையாக அமைந்துள்ளது. இப்போரில் மேற்குலக நாடுகளின் சுயநலமும் அவர்களின் தெளிவான காய் நகர்த்தலுமே காணப்படுகிறது என்பது தெளிவாகவும் அப்பட்டமாகவுமே காணப்படுகிறது. குறிப்பாக சொன்னால் ரஷ்யாவின் புவிசார் அரசியலை இலக்கு வைத்த நேட்டோவின் உத்தியே இப்போர் இவ்வளவு வேகமாக நகர்வதற்கு காரணமாக உள்ளது எனலாம்.

ரஷ்யா – உக்கிரைன் போரானது யதார்த்த வாதத்தினடிப்படையில் நோக்குகின்ற போது அதிகாரத்தினை முதன்மைப்படுத்திய போராகவே காணப்படுகின்றது. உக்கிரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தற்கான காரணம் உக்கிரைனின் நேட்டோவில் சேர்தல் தொடர்பான திட்டமிடலாக காணப்பட்டாலும் உலக நாடுகளில் தனது அதிகாரத்தினை நிலை நிறுத்துவதற்கும் ரஷ்யாவின் எல்லை, வர்த்தகம், ஆதிக்கம் என அனைத்தும் விரிவாக்கம் அடைய வைக்கும் நோக்கிலுமாகும். அத்தோடு மறுபக்கம் புரட்டி பார்த்தால் அமெரிக்கா தனது வல்லரசாக இருப்பதை தக்க வைத்துக் கொள்வதற்காக ரஷ்யா – உக்கிரைன் இடையில் கொதிநிலையை உருவாக்கி வந்ததையும் காணமுடிந்தது. மேலும் ரஷ்யாவில் மீண்டும் புடின் ஆட்சிக்கு வந்த பின்னர் இராணுவ அதிகார மையமாக ரஷ்யா மாறி வருகின்றது. இதனை உடைக்க வேண்டும் என நினைத்தே இப்போரினை நீட்டிக் கொள்ள வைக்கிறது. இதற்கு எடுத்துக் காட்டாக போரை நிறுத்த வேண்டுமானால் முதலில் போரில் ஈடுபடும் பகுதியினருக்கான ஆயுத வழங்கலை நிறுத்தினாலே போர் நின்று விடும். ஆனால் மேற்குலக நாடுகள் தொடர்ந்தும் உக்கிரனுக்கு ஆயுதங்களை வழங்கி வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது. எனவே இங்கே போரை நிறுத்துவற்கான விருப்பம் யாருக்குமில்லை. எல்லோரும் இப் போரினை சாதகமாக பயன்படுத்தி தமது அதிகாரத்தினை நிலைநிறுத்துவதற்கான ஒரு உத்தியாகவே பார்க்கின்றார்கள். குறிப்பாக அமெரிக்கா இந்தப் போரை விமர்சையாக ஆதரித்து வருதை காணக்கூடியதாக உள்ளது.

இந்தப் போரின் மூலம் ரஷ்யாவை சர்வதேசத்திடமிருந்து பிரிக்கவும், ஆசியாவுக்குள் அதனை முடக்கவும் விரும்புகின்றது. தனக்கு சவால் விடக் கூடிய எந்த ஒரு பலவானும் இந்த பூமிப் பந்தில் இருக்கக் கூடாது என்பதனை அமெரிக்கா விரும்புகிறது. எனவே இவ் ரஷ்யா – உக்ரைன் போரினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்ட ரீதியாக பார்க்கப்பட முடியாது. இதனை உலக நாடுகளுக்கிடையிலான அதிகார போராட்டமாகவே கொள்ளப்படுகிறது.

அடிக்கடி முரண்படும் தேசிய நலன்களை பாதுகாப்பதற்காக தேசங்களுக்கிடையே இடம்பெறும் போராட்டம் என்பதே யதார்த்தவாதிகளது கருத்தாக காணப்படுகிறது. சமகாலத்தில் இடம்பெறும் ரஷ்யா – உக்கிரன் மீது போர் தொடுத்ததற்கான முக்கிய காரணமே ரஷ்யா தனது தேசிய நலனை பாதுகாப்பதற்கே ஆகும். பல தசாப்பதங்களாகவே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் பனிப்போர் நடைபெற்று வருகின்றது. இந்த சூழலில் தனக்கு அண்டை நாடான உக்ரைன் நாட்டின் மேற்குலக நாடுகளின் நேட்டோ மையம் அமைந்திட ரஷ்யா விரும்பவில்லை. இதனால் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் அச்சுறுத்தல் ரஷ்யாவுக்கு இருக்கும் இதை உணர்ந்த ரஷ்யா உக்கிரைனை நேட்டோவிலும் இணைவதை தடுக்கவே போரினை துவக்கியது.

ரஷ்யாவுடன் இணைந்திருந்த காலத்தில் உக்ரைனுக்கு பொருளாதார ரீதியாக பிரச்சினைகள் எழவில்லை. 1991இல் உக்ரைன் தனிநாடாக ஆக்கப்பட்டதன் பின்னர் உக்ரைன் பொருளாதார ரீதியாக மோசமாக பாதிக்கப்பட்டது. இன்று உக்ரைன் நாடானது மிகவும் ஏழைநாடு. அதே போல ஊழல் மலிந்த நாடு. ரஷ்யாவிடம் இருந்து பெரிய அளவிலான பலன்கள் கிடைக்காமல் போனதால் உக்ரைன் தனது தேசிய நலனிற்காக மேற்குலக நாடுகளுடன் நட்புக் கொள்ள விருப்பம் தெரிவித்தது. அதேபோல் பாதுகாப்பு காரணங்களுக்காக நேட்டோவில் இணையவும் உக்ரைன் விரும்பி அதற்கான நடவடிக்கையை துவக்கியது. இதுவுமே போருக்கான காரணமாக உள்ளது. மேலும் சுய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல், இனப்படுகொலை ஆகியவற்றை முன்னிறுத்தியே உக்கிரைன் மீது ரஷ்யா தாக்குதலை ஏற்படுத்தியது.

யதார்த்த வாதத்தின் எடுகோள்கள் எனப்பார்க்கும் போது இதில் மனிதர்கள் எப்போதும் சுயநலம் மிக்கவர்கள் எனவும் அதிகாரத்திற்கான பேராசை மற்றும் ஏனையவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் மனநிலை மனித இயல்பின் பிரதான அம்சமாகும் எனவும் கருதப்படுகிறது. அந்தவகையில் தோமஸ் ஹொப்ஸ் தனது சமூக ஒப்பந்தக் கோட்பாட்டில் இயற்கை நிலையில் மனிதன் எத்தகைய தன்மையை கொண்டிருந்தான் எனக் குறிப்பிட்டாரோ அதனை யதார்த்தவாதிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர். கொப்ஸ் குறிப்பிட்ட அராஜகத்தினையே இவ் ரஷ்யா - உக்ரைன் போர் எடுத்துரைக்கின்றதனை காணக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல் அதிகாரத்திற்கான போராட்டம் எனவும் ஒவ்வொரு நாடும் தனது தேசிய நலனை அடைந்து கொள்ள அதிகாரத்தை பயன்படுத்துகிறது எனவும் சர்வதேச அரசியலின் அடிப்படைப்பண்பு சுய பாதுகாப்பாகும் என யதார்த்த வாதிகள் கருதுகின்றனர். ஓர் அரசு சுய பாதுகாப்பை எவ்வகையிலும் விட்டுக் கொடுக்கக் கூடாது. தேசிய நலனை முன்னேற்றும் போது எதிரிகளை வெற்றி கொள்ள வேண்டிவரும் போது பாதுகாப்பு தயார்நிலைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என குறிப்பிடுகின்றது. இந்த தத்துவத்தினையே ரஷ்யா தற்போது மேற்கொண்டுள்ளது.

சமாதானத்தை வலுச்சமநிலை, கூட்டுப்பாதுகாப்பு, உலக அரசாங்கம், இராஜதந்திரம், கூட்டணி போன்ற அதிகாரத்தை முகாமை செய்யும் பொறிமுறைகளினூடாக மட்டுமே பேணல் வேண்டும் எனக்குறிப்பிடுகின்றது. நட்பு நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்துவதன் மூலம் சுயபாதுகாப்புத் திறனை அதிகரித்துக் கொள்ளும் அதேவேளை ஒரு அரசு அதன் நட்பு அரசுகளின் மீது சுய பாதுகாப்பிற்காக தங்யிருக்கக் கூடாது என யதார்த்தவாதம் வலியுறுத்துகின்றது.

முன்னர் சோவியத் ஒன்றியத்தில் இணைந்திருந்த நாடுகள் 1991 இல் சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்னர் உடைந்தன. இவ்வாறு உடைந்த நாடுகள் பல நேட்டோ அமைப்பில் சேர்ந்து கொண்டன. இது ரஷ்யா வின் இருப்பிற்கு பாரிய பின்னடைவாக காணப்பட்டது. தற்போது உக்ரைனும் நேட்டோவில் இணைய போவதாக கூறிய திட்டமிடலானது ரஷ்யாவுக்கு பெரும் கோபத்தை தூண்டியுள்ளது. அதன் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலுமாகும். அவ்வாறு உக்ரைன் நேட்டோவில் இணைக்கப்பட்டால் ரஷ்யாவுக்கான இறுதி பாதுகாப்பு வளையமும் அகற்றப்பட்டுவிடும். அதன் மூலம் ரஷ்யா ஐரோப்பாவிலிருந்து துண்டிக்கப்படும்.

இது ரஷ்யாவின் புவிசார் அரசியலில் அதனுடைய வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் மிக ஆபத்தானது. எனவேதான் தொடர்ந்தும் ரஷ்யா தனது கடல்வழிப்பாதையை தக்கவைக்கவும் மேற்குலக அச்சுறுத்தலில் இருந்து தன்னை பாதுகாப்பதற்கும் அது தொடர்ந்து போராட வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டு இருக்கிறது.

மேலும் ரஷ்யா பொருளாதார ரீதியாக பின்தங்கிய நாடாக இருந்தாலும் இராணுவ பலத்தில் ஒரு வல்லரசாகவே காணப்படுகின்றது. எனவே இதன் இராணுவ பலத்தை குறைக்க அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் திட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டி இப்போரினை துவக்கி வைத்துள்ளன. இப்போரினைக் காரணம் காட்டி மேற்குலக நாடுகள் ரஷ்யா மீது பல பொருளாதார தடைகள் உட்பட்ட பல தடைகளை விதித்துள்ளன. இது ரஷ்யாவுக்கான முன்னேற்றத்தினை தடுப்பதாக அமைந்துள்ளன.

ரஷ்யா மீதான மேற்குலக நாடுகளின் காய்நகர்த்தல் பல ஆண்டுகளாகவே தொடர்கின்றன. இது மேற்குலக நாடுகளின் இராஜதந்திரம் என்றே கூறிக் கொள்ள வேண்டும். ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்ற நாடுகள் அனைத்தையும் பின் அமெரிக்கா தன்னோடு இணைப்பது அமெரிக்கா தன் மீது போர் தொடுப்பதாகவே ரஷ்யா கருதுகின்றது. மேலும் ஒரு நாட்டுக்கு எதிராக இராணுவக் கூட்டுக்களை உருவாக்குவது, படை விஸ்தரிப்பு, போர் பயிற்சிகளில் ஈடுபடுவது, படைக்குவிப்புகளில் ஈடுபடுவது என்பனவெல்லாம் ஒரு வகையில் போர்தான் அந்தப்போர் குறித்த ஒரு அரசியல் இலக்கை அடைவதற்கான ராஜதந்திர வழிமுறையாக அல்லது பலப்பிரயோகமாகவே பார்க்கப்படவேண்டும்.

உக்ரைனை மேற்குல நாடுகள் தமது ஆதாயத்திற்காக பயன்படுத்தி வருகின்றனர். அதனை உக்ரைன் விளங்கிக் கொள்ளாமல் மேற்குலக நாடுகளின் தூண்டுதலுக்கு ஏற்ப துலங்கலை வெளிப்படுத்தி வருகிறது. இதனால் பாதிக்கப்படுவது உக்ரைனுடைய தேசிய நலனும், மக்களுமே ஆகும். மேலும் உக்ரைன் இப்போரிற்காக மேற்குலக நாடுகளில் அளவுக்கதிகமான உதவிகளை வாங்குவது அதன் சுய இருப்பிற்கு அச்சுறுத்தலாகவும் மாறக்கூடும். மேலும் ரஷ்யா உக்ரைன் போர் விகாரத்தினால் உலக நாடுகளில் பல பொருட்கள் தட்டுப்பாடு மேலும் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதே ஆகும்.

யதார்த்த வாதத்தின் பாதகமான அம்சமாக கோப உணர்வு, சுயநலம், கொடூரத்தன்மை ஆகிய பண்புகளை தூண்டுபவனவாக காணப்படுகின்றன. எனவே இந்த உக்ரைன் விவகாரத்தில் சமாதான வழிமுறை அரசுத் தலைவர்களின் நடவடிக்கையிலேயே தங்கியுள்ளது. புட்டினால் இந்தப் போரை நிறுத்த முடியாது. அவரால் நிறுத்தப்பட்டாலும் அது நீண்ட காலத்திற்கு நிலைக்கமாட்டாது. இந்த விவகாரம் ரஷ்யாவின் வாழ்வை நிர்ணயிக்கும் பிரச்சினை. எனவே ரஷ்யா மண்ணிலிருந்து இன்னும் பல புட்டின்கள் தோன்றுவார்கள். இதற்கு யதார்த்த வாதத்தின் பண்பான கோப உணர்வு காரணமாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்ரைனை வழி நடத்துவது மேற்குலக கூட்டு. எனவே இந்தப்போரை மேற்குலகத்தினால் மட்டுமே நிறுத்த முடியும். உக்ரைன் ரஷ்யா போரில் பல உயிர்கள் இறந்துள்ளன. இது யதார்த்தவாத்தின் பண்பையே எடுத்துக் காட்டுகிறது. எனவே இப்போரினை நிறுத்த மேற்குறிப்பிட்டதை போல் மேற்குலகமே மனது வைக்க வேண்டும். இப்போது பந்து மேற்குலகத்தின் கையில் உள்ளது. உக்ரைன் மக்களின் சமாதானமும், சக வாழ்வும் மேற்குலகினால் மட்டுமே தீர்மானிக்கக் கூடிய ஒன்றாக மாறிவிட்டது. மேற்குலகத்தின் சேவகராக ஜெலன்ஸ்கி மாறியதே உக்ரைனின் இந்த நெருக்கடிக்கு காரணமாக அமைந்துள்ளது.

எனவே உக்ரைன் - ரஷ்யா போர் நீடிக்கும் நிலையை கடந்துள்ளது. உக்ரைனின் தலைநகரம் கிவ்விலும் நிலை முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதுடன் மேற்குலக அரசியல் இருப்புக்குள் அதிக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு காணப்படுகிறது. இந்தப் போர் (ரஷ்யா உக்ரைன்) ரஷ்யாவை மட்டுமல்ல அதன் அணிகளையும் மாற்றத்துக்கு உள்ளாக்கும் என நான் கருதுகிறேன். அதற்கான வாய்ப்புக்கள் சாதகமாகவோ பாதகமாகவோ அமைய வாய்ப்புள்ளது. எதுவாயினும் உலகம் ஒரு மாற்றத்தை நோக்கி நகர்கிறது என்று இன்று இப்போர் தெளிவாக காணப்படுகிறது.

எனவே ரஷ்யா உக்ரைன் போர் கொதிநிலை ஐரோப்பாவை தகர்த்துவிடும் என்ற பதட்டமே பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியின் இராஜதந்திர நகர்வுகளுக்கு பிரதான காரணமாகிறது. மேலும் உக்ரைன் விவகாரத்தை பயன்படுத்தி ரஷ்யா ஐரோப்பாவுடன் வலுவான உறவை கட்டமைக்க முயலுகின்றது. இதனை பார்க்கின்றபோது அதிகாரத்திற்கான போராட்டமாகவே எனக்கு தோன்றுகின்றது.

இப்போரினை ஆரம்பித்த அமெரிக்கா அதாவது மறைமுகமாக காய்நகர்த்தி இராஜதந்திரங்களை பிரயோகித்து ஏற்படுத்திய போரில் அமெரிக்கா வெற்றி பெற்றால் குலைந்து செல்லும் அதன் ஒற்றைமைய உலகத் தலைமைத்துவம் மீண்டும் ஸ்தாபிதமடைய முடியும் என்கின்ற இராஜதந்திர சிந்தனையே இப் போர் என தெளிவாக தெரிகிறது.

எனவே ரஷ்யா – உக்ரைன் போரானது உலக அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கான ஒரு போராககொள்ளப்படுகிறது. இப் போரானது யதார்த்த வாதத்திற்கான சிறந்த எடுத்துக் காட்டாகவே அமைகிறது. இப் போரில் மேற்குல நாடுகளின் ஆதாயமும் சுயநலமும் காணப்படுகிறது. மேலும் ரஷ்யாவின் தேசிய பாதுகாப்பும் இதில் தங்கியுள்ளது. எது எவ்வாறாயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போரில் என்னமோ சிக்கி தவித்து சாவது உக்ரைன் மக்களே ஆகும். மனிதாபிமானமற்ற இப்போர் அதிகாரத்திற்கான போராட்டமாகவே கொள்ளப்பட வேண்டும் ஹெப்ஸ் குறிப்பிட்ட காட்டுமிராண்டியாகவே ரஷ்யா, மேற்குலக நாடுகள் மாறிவிட்டன. அத்தோடு அங்கு அராஜகம் தலை விரித்தும் ஆடுகின்றது இதுவே உண்மையாகும் இதுவே யதார்த்தமாகும்.

இவ் ரஷ்யா உக்ரைன் போரானது இன்று வரை தொடர்கின்றது. இந்த அரசியல் சூழ்நிலைகளை பார்க்கும் போது மூன்றாம் உலக யுத்தம் ஏற்படுத்துவதற்கு சாதகமான பண்புகள் இன்று காணப்படுகின்றது. ஆனால் அரசியல் சூழல் என்பது காலத்திற்கு காலம் மாறுகின்ற தன்மை கொண்டது எனவும் நான் குறிப்பிடுவது இங்கு அவசியமாகும். இராஜதந்திரத்தின் மூலம் சர்வதேச உறவுகளை நிலை நிறுத்தலாம் என யதார்த்த வாதிகள் கருதினர். இன்று அதே இராஜதந்திரத்தினை பிரயோகித்தே மேற்குலக நாடுகள் சுலபமாக தமது நலன்களுக்கு தேவைப்பட்டால் போல் காய்களை நகர்த்துகின்றனர். அதில் ஒன்றே இவ் ரஷ்யா உக்ரைன் போராகும். இவ்வுலகம் அதிகாரத்திற்கான வேட்கையில் திரிகிறது. எனவே அதிகாரம் என்னும் நீரினை பருகும் வரை வேட்கை என்னும் தாகம் அடங்கமாட்டாது. ஆனால் அதிகார வேட்கை ஒரு நாளும் அடங்காது என நான் கருதுகிறேன். இவ்வுலகம் இயங்கும் வரை அதிகாரத்திற்கான போட்டி நடைபெற்றுக் கொண்டே இருக்கும் என நான் கூறுகின்றேன். யதார்த்தவாதத்தின் பிரதான வாதமும் "சர்வதேச அரசியலானது அதிகாரத்திற்கான போராட்டமே"என்பதாகும்.

## உசாத்துணை நூல்கள்


சண்முகலிங்கம்.க, (2019), சர்வதேசஉறவுகள் பற்றிய கோட்பாடுகள்," குமரன் புத்தக இல்லம்.

கணேசலிங்கம.கே.ரீ., (2010), "சர்வதேச அரசியல் சில பார்வைகள்" சேமமடு பதிப்பகம்.

https://www.hindutamil.in/news/world/771338-ukraine-war.html

https://www.dinamalar.com/news-detail.aps?id=2972312

https://www.puthiyathalaimurai.com/newsview/130542/Reason

https://www.nakkheeran.in/special-articles/special-articles/russia-ukraine

https://www.dinamalar.com/news-detail.aps?id=2972312

https://tamil.asianetnews.com/world/us-forces-will-not-clash




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவில் போர் என்கின்ற எண்ணக்கருவினை விபரித்து மேற்காசியப் பிராந்தியத்தில் நிகழும் சிவில் போர்களையும் அவற்றின் விளைவுகளையும் ஆராய்க.**

சிவில் யுத்தம் (Civil war) என்பது ஒரு அரசிற்குள் இரண்டு அல்லது இரண்டு குழுக்கள் அரசிற்கெதிராக மேற்கொள்ளும் மோதல் ஆகும். அதாவது சட்ட ரீதியாக அசாங்கத்திற்குஎதிராக ஏனைய குழுக்கள் போராடி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முனையும். பெரும்பாலான மக்கள் சட்டரீதியான அரசாங்கத்திற்கும் எதிராக புரட்சியினை மேற்கொள்வதும் இவ் சிவில் போர் என்கின்ற தன்மையிலேயே அடையாளப்படுத்தப்படுகின்றது.

யுத்தம் என்பது மனித வரலாற்றில் எப்போதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் ஒரு அம்சமாக மாறிவிட்டது. இன்றைய உலகில் அதிகாரத்தினை தீர்மானிக்கும் நீதிபதியாக யுத்தம் காணப்படுகிறது. இன்றைய மனித வாழ்வு யுத்தமும் சமாதான விதமாகவே காணப்படுகின்றது.

அந்த வகையில் போர் என்பது ஒரு நாட்டின் மூலோபாயத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இதனையே சன்சூவும் குறிப்பிடுகின்றார். போரானது இரு கருத்தியலின் அடிப்படையில் உலகில் பரிணமிக்கின்றது.

1. இராணுவப் போர்
2. வர்க்க முரண்பாடு

இன்று சிவில் யுத்தம் என்பதே உலகளவில் அதிகமாக இடம் பெற்று வருகின்றது. அத்தோடு சிவில் யுத்தத்தில் இன்று வெளி சக்திகளின் தலையீடு என்பது காணப்படுகின்றது. குறிப்பாக M. ரீகன் என்பவர் civil war and foreign powers எனும் நூலில் 1945-2000 காலப்பகுதியில் 138 சிவில் யுத்தங்கள் இடம்பெற்றதாக குறிப்பிடுகின்றார். இதில் 2/3 பங்கு வெளிநாட்டு சக்திகளின் தலையீடு என்பது காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக 35 சிவில் யுத்தங்களில் அமெரிக்கா தலையிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நவீன காலகட்டத்தில் குறிப்பாக உலக மகாயுத்தங்களின் பின்னர் சிவில் யுத்தம் என்பது இஸ்லாமிய நாடுகளிடையே அதிகமாக இடம் பெற்று வருகின்றது. அந்தவகையில் "மேற்காசியா" வில் அதிகமான சிவில் யுத்தங்கள் இடம் பெற்று வருகின்றது. மேற்காசியாவானது 93% இஸ்லாமிய மதப்பிரிவைக் கொண்ட ஒரு நாடாகும். அத்தோடு எண்ணெய் வளத்திலும் உலக இருப்பில் அரைவாகிக்கு மேல் இங்கு தான் காணப்படுகின்றது (கறுப்பு தங்கம்) என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காசியாவில் இஸ்லாமிய மதத்தின் பிரிவுகளுக்கிடையில் அதாவது மத அடிப்படையிலான போர் என்பது இங்கு நிகழ்கின்றது என்று கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும். அதாவது பிரிவுகளான சியா, சன்னி பிரிவுகளிடையே ஒரு மோதலானது இங்கு கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. இவ் மேற்காசியாவில் இடம் பெறுகின்ற போரானது மத அடிப்படையிலான சிவில் யுத்தங்களாக காணப்படினும் அங்கு மேற்கத்திய நாடுகளின் ஏகாதிபத்தியம் என்பதும் சேர்க்கப்பட்டு காணப்படுகின்றது.

மேற்காசியாவில் இடம் பெறும் இடம்பெற்ற சிவில் யுத்தங்களாக சிரியா சிவில் யுத்தம், லெபனான் சிவில் யுத்தம், அல்ஜீரியா சிவில் யுத்தம், ஜோர்டான் சிவில் யுத்தம், யேமன் சிவில் யுத்தம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மேற்காசியாவில் எண்ணெய் வளம் என்கின்ற கறுப்புத் தங்கம் காணப்படினும் அதாவது எண்ணெய் அரசியல் என்ற யுகத்தின் கதாநாயக்கர்களாக காணப்படினும் மேற்காசியாவானது வறுமை, பாலைவனமாக்குதல், இன அழிவு, நிராதாரமற்ற தன்மை போன்ற பல்வேறு சவால்களை இப் பிராந்தியத்தில் இடம் பெறுகின்ற சிவில் யுத்தத்தினால் அனுபவிக்கின்றார்கள்.

மேற்காசிய சிவில் யுத்தங்களில் லெபனான் சிவில் யுத்தத்தினை நோக்கில் லொபனானில் கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களும் அதன் உட்பிரிவுகளும் அரசுக்கெதிரான கிளர்ச்சியில் (1975-1990) ஈடுபட்டார்கள். பின்னர் "ரைவ் உடன்படிக்கையின்" படி 50:50 அரசியல் பிரதிநிதித்துவம் கொண்டுவரப்பட்ட யுத்தமானது முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இது இன்று ஊழல் மிக்க நாடாக மாற்றியதோடு வறுமை, பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பல பிரச்சினைகளுக்கு வழி கோலியுள்ளது. இம் மக்கள் இன்று பிரான்ஸிடமே தாங்கள் காலனித்துவமாக்கப்பட விருப்பம் தெரிவிக்கும் அளவிற்கு அவர்களின் நிலை என்பது காணப்படுகின்றது.

அடுத்து சிவில் யுத்தம் என்பது அண்டைய நாடுகளின் GDP வளர்ச்சியை தடுப்பதாகவும் அதிக உயிர் தேசத்தை விளைவித்தாகவும் காணப்படுகின்றது. மேற்காசியாவில் நடைபெற்ற ஜோர்டான் சிவில் யுத்தத்தினை எடுத்துக் கொண்டால் காலிமைட் இராச்சியத்திற்கும் மக்களுக்கும் இடம்பெற்ற யுத்தமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இவ் யுத்தத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் அதன் தலைமைத்துவமும் முக்கிய பங்கு வகித்தது.

மேலும் பாலஸ்தீனிய ஜோர்டான் நெருக்கமானது 1967 இல் ஜோர்டான் மேற்க்குக்கரையை இஸ்ரேல் கைப்பற்ற முனைந்ததற்கும் காரணம் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோர்தானிய எல்லைப் புறங்களில் ஜோர்தானிய அமைதிப்படைகளும் அநாதை விடுதிகளும் பாதுகாக்கும் சுவராக காணப்பட்டனர். இது ஜோர்தான் இராணுவத்திற்கும் பாலஸ்தீன விடுதலைப் போராட்ட இயக்கத்திற்குமிடையே கறுப்பு செப்டம்பர் எனும் அளவிற்கு வழிவகுத்தது. இது பகுதியளவிலான அராபியப் போருக்கு வழிவகுத்தது.

அதனை அடுத்து சிவில் யுத்தம் என்பது மிக அதிகமான பொருளாதார விளைவினை ஏற்படுத்தும் அத்தோடு பசி, பட்டினி என்பவற்றினை உருவாக்க கூடிய தன்மையைக் கொண்டவையாக காணப்படுகின்றது. இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு யேமன் சிவில் யுத்தமாகும். அரச தரப்புக்கும் ஹாதிய இயக்கத்திற்குமிடையே குறிப்பாக 2015 இல் தீவிரடைந்த சிவில் யுத்தம் இன்று சிரியா நாட்டின் நிலைக்கு யேமனை தள்ளியுள்ளது.

அடுத்து மேற்காசியாவில் அல்ஜீரியா சிவில்யுத்தம், மொரோக்கோ போன்றனவும் பாரிய தாக்கத்தினை அம் மக்களிடையே ஏற்படுத்தியது. மேற்காசியாவில் சிவில் யுத்தம் என்பது ஒருநாகரீகமாகவே மாறிவிட்டது. இதற்கு காரணம் வெறும் மத அடிப்படையிலான வேறுபாடு அல்ல. அதனை பயன்படுத்தி தங்களுடைய தேசிய நலன்களை அடையும் மேற்கத்திய நாடுகளின் சதி வலையாகும். அதாவது முன்னர் குறிப்பிட்டது போல மேற்கத்தேய நாடுகளின் தலையீட்டிற்கு உதாரணமாக யேமன் சிவில் யுத்தத்தினை எடுத்துக் கொண்டால் சியா முஸ்லீம் பிரிவுக்கு ஆதரவாக ஈராக் அத்தோடு சன்னி முஸ்லீம்களுக்கு ஆதரவாக அமெரிக்கா, சவுதி அரேபியா போன்ற நாடுகள் காணப்படுகின்றன.

இதே போல சிரியா யுத்தத்தினை எடுத்துக் கொண்டால் அரசுக்கு ஆதரவாக ரஷ்யாவும் கிளர்ச்சியாளருக்கு ஆதரவாக அமெரிக்காவும் காணப்படுகின்றது. இவ்வாறு மேற்காசிய ஒவ்வொரு சிவில் யுத்தத்திலும் வல்லாதிக்க அரசுகளின் தலையீடானது சிவில் யுத்தத்தினை நீட்சியடையச் செய்துள்ளது.

இது அவர்களின் தேசிய அதிகாரம் அதாவது வல்லரசினை நிர்ணயிக்கின்ற ஒரு அம்சமாக எண்ணெய் காணப்படுவதனால் மேற்காசிய நாடுகள் ஒவ்வொன்றிலும் தாங்கள் தலையிட்டு தங்ளுக்கு சார்பான பொம்மை ஆட்சியாளர்களை அமைக்க அமெரிக்கா ரஷ்யா போன்ற முதல்தர நாடுகள் நினைக்கின்றனர். தங்களுடைய எண்ணங்களுக்கு மாறாக செயற்படுகின்ற போது லிபியா-கடாபி, ஈராக்-சதாம்உஷைன் கொன்றது போன்று மேற்குலகம் கொன்று விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே மேற்காவியாவின் உண்மை நிலவரம். அத்தோடு சிவில் யுத்தத்தினை மேற்காசிய நாடுகளில் சில நேரங்களில் உருவாக்கி விடுவதும் இவ் வல்லாதிக்க நாடுகளாகவே காணப்படுகின்றன. மேலும் மேற்காசியாவில் இஸ்ரேல் போன்று தனக்கு சாதகமான அரசினை உருவாக்கவே அமெரிக்கா ஆர்வம் கொண்டு மேற்காசியாவில் கழுகுப் பார்வையுடன் காத்திருக்கிறது.

முடிவாக தொகுத்து நோக்குகின்றபோது மேற்காசியாவில் சிவில் யுத்தம் என்பது மத அடிப்படையில் எங்கும் இடம்பெற்றுக் கொண்டு இருக்கிறது. இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்தியும் உருவாக்கியும் வல்லாதிக்க மேற்குலக நாடுகள் சதிவலைகளைப் பின்னி தமது தேசிய நலனை அடைந்து கொள்கின்றார்கள். குறிப்பாக எண்ணெய் வளத்தினை அபகரிக்கிறார்கள். இவ்விடயம் மேற்காசிய நாடுகளுக்கு தெரியாதா? என்றால் இல்லை இருப்பினும் தேசிய வாதம் என்கின்ற அடிப்படையிலும் மத அடிப்படையிலும் போர்களையும் மோதல்களிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். இது உண்மையில் கவலைக்குரிய விடயம்.

அடுத்து சிவில் யுத்தம் என்பது பல்வேறு வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது.

1. உரிமைகளை (இனக்குழுமங்களின்) வென்றெடுப்பதற்கு,
2. சுயநிர்ணய உரிமைகளை அடைவதற்கு,
3. அரசாங்கத்தின் கொள்கையை மாற்றி அமைப்பதற்கு,
4. சர்வாதிகார ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு

என முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது.

மேற்காசியாவிலும் பல புதுமைகளும் மாறுதல்கள் ஏற்படுத்துவதற்கும் சிவில் யுத்தம் பங்களித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எனவே மேற்காசியா என்றால் இன்று அந்தப் பிராந்தியமா? என்று கேட்கும் அளவிற்கு எங்கு பார்த்தாலும் போர், சிவில் யுத்தம் என்றடிப்படையில் காட்சியளிக்கின்றது.

எண்ணெய்யின் இருப்பிடம் அரைவாசி (உலக இருப்பில்) காணப்பட்டாலும் என்னவோ இப் பிராந்தியம் சீர்குலைந்து மேற்கத்திய பிடிக்குள் சிக்கி காணப்படுகின்றது என்று கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும். இவ் மேற்காசியா நாகரீகத்தின் தொட்டிலாகவும் இஸ்லாம், கிறிஸ்தவம் மதத்தின் தோற்றுவாயாகவும் புவியியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இருப்பிடமாகவும் காணப்படினும் இவ் அம்சங்களே அதன் நிலையினை மேற்கத்திய நாட்டின் பிடிக்குள் பார்வைக்கு தள்ளியது எனக் கூறுவதும் இங்கு பொருத்தமுடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமகால சர்வதேச அரசியலில் பனிப்போரினுடைய தாக்கத்தினை ஆராய்க.**

அரசியல் என்ற பதம் நலன்கள், மோதல்கள், அதிகாரம் ஆகிய மூன்று விடயங்களுடன் தொடர்புபட்டதாகும். அரசியலைச் சர்வதேச அரசியலுடன் தொடர்புபடுத்தும் போது சர்வதேச இறைமையுடைய அரசகளின் நலன்கள் ஒரே மாதிரியானதாக இருப்பதில்லை. "இறைமையுடைய அரசுகளின் நலன்கள்" **"தேசிய நலன்கள்"** என்றே அழைக்கப்படுகின்றன. இறைமையுடைய அரசுகள் தங்களுடைய தேசிய நலன்களை அடைவதற்காக ஒன்றுடன் ஒன்று மோதலில் ஈடுபடுகின்றன. இதற்காக அதிகாரத்தினை பொதுவாக அரசுகள் பயன்படுத்துகின்றன. அந்தவகையில் சர்வதேச அரசியல் (International Politics) என்பது இறைமையுடைய அரசுகளுக்கிடையிலான உறவுகள் உள்தொடர்புகள் என்பவற்றின் வழி ஏற்படுத்தப்படும் நலன்களிற்கான மோதல்களாகும். இன்னொரு வகையில் கூறின் சர்வதேச அரசியல் என்பது இறைமையுடைய அரசுகளுக்கிடையிலான பரஸ்பர உறவு நிலைகளைக் குறித்து நிற்கின்றது.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்த பின்பு போரின் அனுபவம் அனைத்து வல்லரசு நாடுகளையும் புதிய பாதையில் சிந்திக்க நடைபோட தூண்டியது. போர்... போர்....... போர்.......... (war.... war..... war...) என்று இருந்த வல்லரசு அரசியலில் போரானது தணிவுக்கு உள்ளாகி அது பனிப்போராகியது. (cold war)

கிறிஸ்தவத்திற்கும் இஸ்லாத்திற்கும் இடையேயான பகைமையை விளக்க 14ஆம் நூற்றாண்டில் Don Juan manuel என்பவர் முதன் முறையாக பனிப்போர் என்ற சொற்றொடரை பயன்படுத்தியுள்ளார். இதன் பின் "இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்ததும் நவீன வரலாற்றில் முதல் முறையாக cold war என்ற சொற்றொடரை பிரயோகித்தவர் George orwell ஆவர்.

உண்மையில் வல்லரசுகளுக்கிடையேயான முரண்பாடு முழு அளவிலான ஆயுதம் தாங்கிய நேரடிப் போராக அல்லாமல் அது யுத்தத்தின் விளிம்பில் நிற்கும் போராக அமைந்தது. அதாவது பெரு வல்லரசுகளுக்கிடையே யுத்தத்தின் விளிம்பை யுத்தமாகக் கொண்டதுதான் பனிப்போராகும்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் 1945 ஆம் ஆண்டிலிருந்து 1990 ஆம் ஆண்டு வரை அதாவது சுமாராக அரை நூற்றாண்டு காலமாக அமெரிக்கத் தலைமையிலான NATO அணிக்கும் சோவியத் யூனியன் தலைமையிலான WARSAW அணிக்கும் இடையே நிகழ்ந்த விளிம்பு நிலை யுத்தமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிப்போராகும். பனிப்போர் முடிந்த பின்பும் அதனுடைய தாக்கமானது இன்றும் சர்வதேச அரசியலில் தாக்கத்தினை செலுத்துவதாக காணப்படுகின்றது. அந்த வகையில் "சமகால சர்வதேச அரசியலில் பனிப்போரினுடைய தாக்கத்தினை ஆராய்வதாகவே இக் கட்டுரை அமையப்பெற்றுள்ளது." பனிப்போரானது சர்வதேச அரசியலில் பல சாதக பாதக விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் முதலாவதாக பனிப்போரின் சாதகமான விளைவுகளை ஆராய்வது இங்கு பொருத்தமுடையதாக இருக்கும்.

பனிப்போரினுடைய சாதகமான விளைவுகளில் ஒன்று காலனித்துவ நீக்கம் ஆகும். அதாவது காலனித்துவத்திலிருந்து நவகாலனித்துவத்தின் தன்மையை பெற்றிருப்பதற்கு அடிப்படைக் காரணம் பனிப்போராகும். குறிப்பாக 1947 – 1980 களுக்கு இடைப்பட்ட காலத்தில் 49 பிரதேசங்களுக்கு அல்லது நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தன. குறிப்பாக 1947 இல் பிரித்தானியா தமது சாம்ராச்சியத்தை இந்தியாவிலிருந்து விலக்கிக் கொண்டமையானது பிரித்தானிய காலனித்துவ நீக்க வரலாற்றில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு வெற்றிகரமான விடயமாகக் காணப்படுகின்றது. இது உலகிற்கு மிகப் பெரிய ஜனநாயக நாட்டை உருவாக்குவதற்கு வித்திட்டது. காலனித்துவ நீக்கமானது பூரணமாக அமைதியானதாகவும் ஜனநாயக மற்றும் நிலையான அரசுகளை உருவாக்கக் கூடியதாகவும் அமைந்தது. சமகாலத்தில் சர்வதேச அரசியல் ஏதோ ஒரு வகையில் சுமூகமாக செல்வதற்கு இந்த பனிப்போரினுடைய தாக்கமே காரணமாகும்.

அடுத்து பனிப்போரின் விளைவாக தேசிய இனங்களின் விடுதலை சர்வதேச அரசியலில் ஏற்பட்டது. சமகால சர்வதேச அரசியலிலும் இதன் தாக்கம் காணப்படுகின்றது. பனிப்போர்க் காலத்தில் தேசியமானது பெரு வல்லரசுகளைச் சார்ந்து இருக்க வேண்டி இருந்தது. இந்த நிலைமையே சம கால சர்வதேச அரசியலிலும் காணப்படுகின்றது. இவ்வாறு காணப்படுவதனால் அதாவது பெரு வல்லரசுகளின் தேவைக்கு ஏற்ப ஆசிய- ஆபிரிக்க -லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசியவாதம் பாதிப்புக்கு உள்ளாகி வந்தது இன்றும் வருகின்றது. ஆனால் சில வேளை தேசிய இயக்கங்களுக்கு சில "நன்மைகளும்" இருக்கச் செய்தன. அதாவது பெரு வல்லரசுகளில் இரண்டில் ஒன்று ஒரு விடயத்தை எதிர்க்கும் போது மற்றையது அதை ஆதரிக்கும் இந்நிலையில் தேசிய போராட்டங்கள் தம் இலக்கை அடைய முடியாத இடத்திலும் கூட கொதிநிலை தணியாது பேணக்கூடிய சூழல் இருந்தது. இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையே சமகால சர்வதேச அரசியல் போக்கிலும் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக அமெரிக்காவின் ஆதரவுடன் தென்சூடான் விடுதலை அடைந்தது. பனிப்போரின் முடிவு தேசிய இனங்களின் விடுதலைக்கான சகாப்தத்தை ஓரளவு தொடக்கியது. இதில் பிரிந்து செல்லும் தேசிய இனங்களின் தொட்டப்பாவாக (God father) அமெரிக்கா விளக்கியது. ஆனாலும் அமெரிக்கா தனது நலன்களோடு பொருந்தி வரும் தேசிய இனங்களின் விடுதலைக்குதான் முன்னுரிமை கொடுத்தது. இதற்கு இன்னொரு உதாரணமாக குறிப்பிட்டால் பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்து செல்ல உதவுவது இந்தியாவின் புவிசார் நலனுக்கு மிக முக்கிய தேவையாய் அமைந்தது.

ஏட்டிக்கு போட்டியாக இரு பெரும் வல்லரசுகளும் தமது பனிப்போர் நலன்களுக்காக ஆசிய – ஆபிரிக்க நாடுகளின் தேசிய இன விடுதலைப் போராட்டங்களை தத்தமது தேவைகளுடன் இணைத்து அவற்றை நீண்ட யுத்தங்களுக்கும், அழிவுகளுக்கும் தள்ளி தேசிய இனங்களின் உரிமை, விடுதலை, என்பவற்றையும் புறந்தள்ளின. ஆனால் பனிப்போர் முடிந்ததும் இந்த ஏட்டிக்கு போட்டி நிலை பெருமளவு இல்லாது போகவே தேசிய இனங்களின் விடுதலை அடைவதற்கான வாய்ப்புக்கள் மேலெழுந்தன. இதனால் தேசிய இனங்கள் பல விடுதலை அடைய முடிந்தது.

உலகளாவிய புவிசார் அரசியல் நலன்களின் அடிப்படையில் உள்நாட்டில் காணப்படும் ஓர் அரசுக்கும் தமது புவிசார் அரசியல் நலனுக்கும் இடையில் உள்ள உறவின் அளவிற்கும் ஏற்பவே ஒடுக்கப்படும் இனங்களின் உரிமை சார்ந்த நிலைப்பாட்டையும் மேற்குலகும் சமகாலத்தில் எடுத்து வருகின்றது. இந்த விடயத்தில் ரஷ்யா, சீனா, ஆகிய வல்லரசுகளும் கூடவே கியூபாவும் அரசு சார்ந்த தமக்கான உறவைப் பலப்படுத்தும் வகையில் தேசிய இனங்களின் விடுதலைக்கு எதிரான நிலைப்பாடுகளையே தொடர்ந்து பனிப்போரின் பின்னும் முன்னெடுத்து வருகின்றன.

பனிப்போரின் விளைவுகளில் ஒன்று சுயநிர்ணய உரிமை பற்றிய சிந்தனை எழுவதற்கு காரணமாக அமைந்தது. ஒரு தேசிய இனமானது தான் உட்பட்டிருக்கும் அரசுக்குள் தொடர்ந்து அங்கம் வகிப்பதா அல்லது அதில் இருந்து பிரிந்து சென்று வேறொரு அரசுடன் இணைவதா அல்லது ஓர் அரசு இன்னொரு அரசுடன் இணைவதா என்பதையெல்லாம் தீர்மானிப்பதே சுயநிர்ணய உரிமை எனப்படுவதாகும். இதற்கான பொது வாக்கெடுப்பும் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான வாக்கெடுப்பு என்று அழைக்கப்படும். 2014 ஆம் ஆண்டு உக்ரைனில் இருந்து இராணுவ நடவடிக்கையின் மூலம் கிருமியாவை ரஷ்யா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்து அதை ரஷ்யாவுடன் இணைத்துக் கொண்டது. இந்த இணைப்பை இறுதியில் ரஷ்யா பொதுவாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமல்லாமல் இந்தியாவின் தெலுங்கானா விடுதலைப் போராட்டம் மற்றும் இலங்கையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய விடுதலைக்கான போராட்டத்தினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

சமகால சர்வதேச அரசியலில் பனிப்போரினுடைய தாக்கமாக சர்வதேச அரசியல் ஒழுங்கு ஆகும். வல்லரசு வலுச் சமநிலையை (Balance of power) உருவாக்கும் கொள்கையின் அடிப்படையில் வலிமைவாய்ந்த நாட்டுடன் ஏட்டிக்குப் போட்டி அரசியலை மேற்கொள்ளாமல் அத்தகைய வலிமையான வல்லரசுடன் அதற்கு இடம் கொடுத்து இணைந்து போகும் கொள்கை சர்வதேச அரசியல் ஒழுங்கு 1990 ஆம் ஆண்டின் பின்னான ஒற்றைமைய உலக அரசியல் உருவாகத் தொடங்கியது. "இன்றைய சர்வதேச அரசியலில் இப்படி இடங்கொடுத்து இணைந்து போகும் கொள்கையானது (Accommodation policy) ஒரு விதியாகவே அமைந்து விட்டது." இத்தகைய சர்வதேச ஒழுங்குக்கான பாதையில் முதலடி எடுத்து வைத்த முக்கிய பெரிய நாடாக சீனாவை கூறலாம். ஒரு புறம் இவ்விடயம் நன்மையானதாக அமைந்தாலும் இன்னொரு புறம் "தீமையாக" அமைய அது மறுக்கவில்லை என்றே கூற வேண்டும். இவ்வாறு சக்தி வாய்ந்த அல்லது மேம்பட்ட அரசுக்கு இடம் கொடுத்து அத்துடன் இணைந்துபோகும் அரசியல் போக்கு ஒரு புறம் உருவாகிக் கொண்டிருந்த போது மறுபுறம் பனிப்போரின் பின்பும், பனிப்போரின் பின்-பின்பும் மேற்குலகிற்கும் இஸ்லாமிய உலகிற்கும் இடையேயான பகைமையானது அவ்வப்போது யுத்தங்களாக வெடித்தது. இது மட்டுமல்லாமல் தற்போது நடைபெறும் ரஷ்ய – உக்ரைன் போரானது ஒரு விதத்தில் அமெரிக்க – ரஷ்ய பனிப்போராகவே காணப்படுகின்றது. சமகால அரசியல் பல துருவ அரசியலிலான ஒரு துருவ அரசியல் ஒழுங்கு காணப்பட்டு வருகின்றது. இதற்கு பனிப்போரின் நீட்சியும் ஒரு காரணமாகும்.

அடுத்தது சர்வதேச அரசியலில் பனிப்போரினுடைய தாக்கமானது சர்வதேச நிறுவனங்களின் உருவாக்கத்தினையும் குறிப்பிட்டுக் கொள்ளலாம். பனிப்போர் காலத்தில் அமெரிக்கா தனக்கு சார்பாக நேட்டோ (NATO) அமைப்பினையும் ரஷ்யா வோர்சோ அமைப்பினையும் தனக்கு சார்பாக உருவாக்கிக் கொண்டது. இதனை முன்மாதிரியாகக் கொண்டு தற்போது குவாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு (Quad) ஆக்கசு திட்டம் (Aukus) போன்றன உருவாக்கப்பட்டுள்ளன குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்ததாக "கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட உடைவு சீரழிவு என்பன உலகளாவிய வர்த்தக வாதத்திற்கு அதன் நெருக்கடிகளில் இருந்து உடனடி ஆறுதல்களையும் தென்பையும் வாய்ப்புக்களையும் அளிக்கக் கூடிய விடயங்களாய் அமைந்தன." சோவியத் யூனியனது உடைவும் அதன் அளிகளின், சிதைவும் உடனடியாக உலகளாவிய வர்த்தக சாம்ராஜ்யத்தின் புதுவாழ்வுக்கு பெரிதும் உதவின. இத்தகைய சந்தை வாய்ப்பை உருவாக்கி அதனைப் பாய்விரிப்பது போல விரித்து வரும் ஈட்டிமுனைப் பணியை அமெரிக்கா செய்து வருவதால் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், சீனா, இந்தியா போன்றவை அமெரிக்காவின் கொடுக்கில் பிடித்துக் கொண்டே நுழைகின்றன என்ற உண்மையினை இங்கு கவனிக்க தவறக்கூடாது. அதாவது, அமெரிக்கா-சீனா-இந்தியா-ஜப்பான் என்பவற்றிக்கிடையே முரண்பாடுகள், பிரச்சனைகள் என்பன இருந்தாலும் வர்த்தக, பொருளதார ரீதியான வர்க்க உறவு இந்நாடுகளுக்கிடையே இப்பிராந்தியத்தில் பனிப்போர் முடிவின் நீட்சியாயும், அதன் விளைவாயும் உருவாகியது ஆகும்.

அடுத்து பல புதிய அரசுகள் தோற்றம் பெறுவதற்கு பனிப்போரினுடைய தாக்கம் காரணமாக அமைந்தது. பனிப்போரின் முடிவின் போது சோவியத் ரஷ்யாவின் பிடியிலிருந்த பல நாடுகள் "1990 ஆம் ஆண்டு உடைந்து ரஷ்யா உட்பட்ட 15 புதிய அரசுகளாக உருவாகின." இதனை விட சமகாலத்தில் இடம்பெற்று வரும் தைவான் - சீனப் பிரச்சினை கூட தைவான் தனக்கானதொரு தனியான அரசினை பெற வேண்டும் என்கினற விடாப்பிடியுடன் நிற்று வருவதனை பாரக்க முடிகின்றது.

சர்வதேச அரசியலில் பனிப்போரினுடைய தாக்கங்களில் சாதகமானவைகளை நோக்கினோம். ஆனால் அதில் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயம் என்னவெனில் ஒரு வகையில் நோக்குகின்ற போது நன்மையானதாக காணப்படினும் மறுமுனையில் இருந்து பார்க்கும் போது தீமையானதாகவும் காணப்படுகின்றது. இதுதான் சர்வதேச அரசியலின் பண்பாகும்.

சர்வதேச அரசியலில் பனிப்போரினுடைய "பாதகமான தாக்கத்தினை" அடுத்ததாக இங்கு நோக்குவது பொருத்தமுடையதாக இருக்கும். பனிப்போர் முடிவடைந்ததன் நீட்சியாலும் விளைவுகளாலும் கிழக்கு ஐரோப்பாவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய அரசியல் பொருளாதாரச் சூழல் என்பது பனிப்போரின் பின்னான கால சர்வதேச உறவுப் போக்கை நிர்ணயிக்க வல்ல ஒரு முக்கிய புது அம்சமாகும். இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் சோவியத் தலைமையிலான சோவியத்தின் வீழ்ச்சியானது சந்தைப் பொருளாதாரத்தை உலகளாவிய ரீதியில் பலப்படுத்தி விட்டது. என்பது மட்டுமல்ல சோவியத் யூனியன் பதினைந்து அரசுகளாகப் பிரிந்து விட்டது.

மேலும் அது “யூகோஸ்லாவியா ஆறு அரசுளாகப் பிரிய வழிவகுத்ததுடன் செக்கோஸ் லோவாக்கியாவை இரண்டு அரசுகளாகவும் பிரித்து விட்டது.” அத்துடன், மேற்படி நாடுகள் அனைத்தும் அணியாக இருந்த அணிபலம் என்பதும் கெட்டு அவை சிறுசிறு நாடுகளான போது உலகரங்கில் முன்பிருந்த தமது பேரம் பேசும் சக்தியையும் இழந்து விட்டன. இதனால் இவை இலகுவில் அரசியல் பொருளாதார திணிப்புக்களுக்கு உள்ளாக்கப்படக் கூடியனவாகின. இத்தகைய பேரம் பேசும் ஆற்றலைக் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவும் பனிப்போர் முடிவின் நீட்சியாய் இழந்தமையானது இந் நாடுகள் மீது உலகாளவிய வர்த்தக சாம்ராச்சியம் கோலோச்சக்கூடிய முன்னேற்பாடுகளை ஏற்படுத்தி விட்டன எனலாம்.

அடுத்தாக பனிப்போர்க் காலத்தைப் போல் உலக வரலாற்றில் இராஜந்திரம் வளர்ச்சி அடைந்த காலம் எதுவும் இல்லை. முழு அளவிலான போர் அல்லாத போரையும் முழுஅளவிலான சமாதானம் அல்லாத சமாதானத்தையும் கொண்ட இந்த யுகத்தில் இவ்விரு நேரெதிர் முரண்களையும் கையாள்வதற்கு அதிக தந்திரங்கள் தேவைப்பட்டன. அத்துடன் கூடவே பனிப்போர்க் காலத்தில் புலனாய்வுத் துறைகளின் வளர்ச்சியும் அபரிமிதமானதாக அமைந்து இதன் வழித்தோற்றலாகவே இஸ்ரேலினுடைய மொசாட் உளவுத்துறையே இஸ்ரேலினுடைய வெற்றிக்கு காரணமாகும். இவ்வாறாக பல நாடுகள் தமக்கான உளவுத் துறைகளை உருவாக்கிக் கொண்டன. இது ஒரு புறம் இருக்க இராஜதந்திரமும் புலனாய்வும் இணைந்து தனிமனித சுதந்திரத்திலும் தேசிய சுதந்திரத்திலும் சுருக்குக்கயிற்றை மாட்டின.

இப்படி இரு பெரும் வல்லரசுகள் தத்தமது இராஜதந்திர வியூகங்களினாலும் புலனாய்வுப் பலத்தினாலும் அப்பாவி ஆசிய – ஆபிரிக்க நாடுகளின் மீது சுருக்குக் கயிற்றை மாட்டியது மட்டுமல்ல கூடவே இரும்புச் சப்பாத்துக்களையும் மாட்டிவிட்டன. இந்நிலை இன்றும் நீடிக்கின்றன. உதாரணமாக சீனாவின் இராஜதந்திர நகர்வில் இலங்கை சிக்கித்தவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா தனது இராஜதந்திர நகர்வினால் ஆபிரிக்க நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

அடுத்ததாக பனிப்போர் காலத்தில் நியூக்கிளியர் ஆயுதங்கள் போர்க் கப்பல்கள் போன்ற ஆயுதப் பரிகரணங்கள் தோற்றம் பெற்றன. "வடகொரியா, தென்கொரியா ஆயுத உற்பத்தி அதிகரிப்பானது பனிப்போரின் அடிப்படையாகும்" பனிப்போரின் ஆயுதப் பரிமாணமானது பல்வேறு அழிவு தரும் விடயங்களை ஏற்படுத்துகின்றதே தவிர ஆக்க ரீதியான செயற்பாடுகளுக்கு என்றுமே அடிப்படையாக அமைந்தது இல்லை வரலாற்றில் அதன் தன்மை என்பதும் காண்படவில்லை. ஜப்பானின் ஹிரோசிமா நாகசாகி தாக்கம் இன்றும் கூட ஓர் அழியாத வடுவாகவே காணப்படுகின்றது. அத்தோடு அண்மைக் காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட வன்னிப் பெரும்போரின் தடயங்கள் இன்றும் சரி செய்யப்படவில்லை. இவை அனைத்திற்கும் அடிப்படைக்காரணம் ஆயுதப் பரிமாணமோயகும். இன்று பனிப்போர் காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட சிறியசிறிய ஆயுதங்கள் பாரியவையாக மாற்றப்பட்டுள்ளன. மேலும் ஒரே நேரத்தில் 20 குண்டுகள் செல்லக் கூடிய நவீன இராணுவ ஆயுதப் பரிமாணம் என்பது உருவாக்கப்பட்டுள்ளது. இதனைவிட ஒலியினை விட ஆறு மடங்கு வேகமாக பயணிக்கக் கூடிய ஹைபார்சனிக் (Hypersonic) ஏவுகணைகள் உருவாக்கப்பட்டள்ளது. இதன் மூலம் பல்வேறுபட்ட அழிவுகள் ஏற்படும் நிலை காணப்படுகிறது. அத்தோடு உலகத்தினை அச்சுறுத்துவதாகவும் காணப்படுகின்றது.

மேலும் பனிப்போரானது முரண்பட்ட அரசியல் கலாசாரத்திற்கு வித்திட்டது. உதாரணமாகக் குறிப்பிட்டால் இலங்கையில் முரண்பட்ட அரசியல் கலாசாரத்திற்கு வித்திட்டுள்ளது. சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் இவ் ஆயுதப் பரிமாணம் என்பது ஒரு அழிவினை ஏற்படுத்துகின்றது. சர்வதேச அரசியலில் இலங்கையே அண்மையில் அதிகமாக பாதிக்கப்ட்ட நாடாக கொள்ளப்படுகின்றது. இதற்கு அடிப்படை யாதெனில் ஆயுதங்களின் வருகையும் இறக்குமதியுமே ஆகும். இன்றைய காலத்தில் நாடுகள் காலனித்துவத்திலிருந்து விடுபட்டு நவகாலனித்துவத்தின் தன்மையினைப் பெற்றிருப்பதற்கு அடிப்படைக் காரணம் பனிப்போராகும் அந்தவகையில் பனிப்போரானது இராணுவ ஆயுதப் பரிமாணத்தை தீவிரப்படுத்தியுள்ள தன்மையினைக் காணக்கூடியதாகவுள்ளது.

அடுத்ததாக பனிப்போர் முடிந்து விட்ட ஆண்டாய் 1990 உதயமானது. ஆனால் கிழக்கு ஐரோப்பாவில் அப்பனிப்போர் முடிவடைந்ததன் நீட்சியாயும் விளைவாயும் 1990 ஐத் தொடர்ந்து அரைத் தசாப்தத்திற்கு மேற்பட்ட காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரமாய் உருண்டோட வேண்டியிருந்தது. தற்போதும் உக்ரைன் - ரஷ்யா போர் நடைபெற்று வருவதைக் குறிப்பிட வேண்டும். பனிப்போர்க் காலத்தில் ஆசியாவில் வெடித்த முதலாவது யுத்தம் 1947 ஆம் ஆண்டு வெடித்த இந்தோ – பாகிஸ்தான் யுத்தமாகும். இதன் பின்பு 1948 ஆம் ஆண்டு வெடித்த அரபு - இஸ்ரேல் யுத்தமும், 1950 ஆம் ஆண்டு வெடித்த கொரியன் யுத்தமுமாகும். பிராந்தியத்தின் அல்லது பிராந்தியங்களின் அமைதியின்மை தான் பனிப்போருக்கான களமாகும். இவ்வகையில் அரபு - இஸ்ரேல் யுத்தத்தினால் மத்திய கிழக்கு குழம்புவது பனிப்போருக்கான தளமாக அமைந்தது. எனவே நேரடி அர்த்தத்தில் மட்டும் யுத்தத்தையோ அதில் பங்கேற்கும் நாடுகளையோ பார்க்க வேண்டியதில்லை. அந்த யுத்தம் எதற்கு இடம் கொடுக்கிறது என்பதை புரிந்து கொள்வதில் இருந்து தான் அதன் நீண்ட காலப் பண்பை எடைபோட வேண்டும். குறிப்பாக சமகாலத்தில் உக்ரைன் ரஷ்யா போரானது தனித்து ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்குமான போர் அல்ல. குறிப்பாக ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்குமான பனிப்போர் என்றே கூறவேண்டும். ஆனால் பாவம் உக்கிரைன் மக்கள் இதற்கு பலியிடப்படுகின்றார்கள். ஆகவே பனிப்போர் முடிவடைந்தாலும் அதனுடைய தாக்கமானது சர்வதேச அரசியலில் காணப்பட்டு வருகின்றது.

அடுத்தாக உலகில் பயங்கரவாத அமைப்பு தோன்றுவதற்கு பனிப்போர் வித்துட்டுள்ளது. பனிப்போர் காலத்திலும் அரசற்ற பல்வேறு இயக்கங்கள் ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வந்தன. அக்கால கட்டத்தில் ஓர் அமைப்பின் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை ஓர் அணி நாடுகள் ஆதரித்தால் மற்றைய அணிநாடுகள் அந்த அமைப்பினை பயங்கரவாத அமைப்பு என முத்திரையிடும் இதனடிப்படையில் தான் ஈரான்-சிரியா என்பன உலக ஒழுங்கிற்கு கட்டுப்பட்ட போதிலும் இன்னொரு வகையில் இஸ்லாத்தின் பேரால் மத்திய கிழக்கில் இராணுவ அரசியல் மேலோங்கத் தொடங்கியது. அதில் ஒன்று தான் "IS (Islamic state) என்று சொல்லப்படுகின்ற இஸ்லாமிய அரசை ஆயுதமுனையில் கட்டியெழுப்பும் இயக்கம் மத்திய கிழக்கில் உதயமானது." அந்த இஸ்லாமிய அரசு தனக்கென ஒரு கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை உருாவக்கி அங்கிருந்து முழு இஸ்லாமிய அரசுகளையும் இணைத்து ஒரு இஸ்லாமிய அரசை உருவாக்கும் கொள்கையுடன் செயற்படத் தொடங்கியது. இதனைவிட அல்கெய்தா இயக்கம், தலிபான்கள் போன்றவையும் உருப்பெற்றன. பனிப்போரின் பின் - பின்னான காலம் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதான பின்லேடனின் தாக்குதல்தான் தொடக்கமாகும். இந்த காலகட்டம் முதலாவது கால கட்டத்தை விடவும் உலகளாவிய அர்த்தத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டமாகும். பின்லேடன் இரட்டைக் கோபுரத் தாக்குதலினால் அமெரிக்கா கோபமடைந்து அல்கெய்தா தீவிரவாத இயக்கத்திற்கு ஆப்கான் தலிபான்கள் ஆதரவளித்தார்கள் இதனால் பயங்கர வாதத்திற்கு ஆதரவாக யாரும் செயற்படக்கூடாது என கருதி ஆப்கானை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டது கடந்த 2021இல் தான் ஆப்கான் மண்ணிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறின. என்பது எல்லோரும் அறிந்ததே. இதனால் தற்போது தலிபான்களின் ஆட்சியினால் ஆப்கான் மக்கள் அவதிப்படுவது வரை பனிப்போரினுடைய நீட்சியும் தாக்கமே ஆகும். இதில் ஒன்று இங்கு கூறப்பட்ட வேண்டியது அவசியமாகும். இலங்கையில் ஈழத்தமிழர்களின் தேசிய இன விடுதலை இயக்கத்தினை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி உலக நாடுகள் ஒன்றிணைந்து அவ் இயக்கத்தை அழித்தனர் என்பது மறக்க முடியாத ஒன்றாகும்.

சர்வதேச பயங்கரவாதம் என்ற பதத்திற்கு ஊடாக, உலகில் அனைத்துப் பிரச்சினைகளையும் அரசுகள் எதிர்கொள்ளும் ஒரு சர்வதேச உலகளாவிய அரசியல் இப்போது உருவாக்கியுள்ளது. போராட்டம் பயங்கரவாதம் ஆகிய இரண்டையும் தற்போது வேறுபடுத்த முடியாதளவிற்கு சர்வதேச பயங்கரவாதம் எனும் பதம் முதன்மை பெற்றுள்ளது. இறைமை என்பது அரசுக்குரியதாகவே பார்க்கப்படும் நிலை சர்வதேச அரசியலில் இப்போது இருப்பதால் அரசின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, இன ஒடுக்கு முறைகளுக்கு எதிராக, தேசிய விடுதலைக்காகப் போராடும் போராட்டங்களுக்கும் பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தப்படுகின்றது. இதன்படி ஆயுதம் தாங்கிய எந்தவொரு போராட்டமும் பயங்கரவாதம் என்று முத்திரை குத்துப்படல் மிகவும் இலகுவானது. நடைமுறை சர்வதேச அரசியலிலும் இவ்வாறு தான் உள்ளது.

அடுத்ததாக பனிப்போரின் விளைவுகளில் தேசிய இனங்களின் விடுதலை என்பது நான் முன்னர் குறிப்பிட்டதைப் போன்று சாதகமானதாக இருந்தாலும் அது பாதகமான அம்சங்களையும் ஏற்படுத்துகின்றது. ஒரு நாட்டில் தேசிய இனங்கள் விடுதலை பெற கோருவது நாட்டினுடைய ஸ்திர தன்மையினை கெடுப்பதாகவும் உள்நாட்டுப் போருக்கு வழி வகுப்பதாகவும் காணப்படுகின்றது. குறிப்பாக 2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தினியருக்குமான யுத்தம், சீனாவின் உய்குர் முஸ்லீம்கள் போராட்டம் போன்றன இவ் வகையினதாகும்.

எனவே பனிப்போரானது சமகால சர்வதேச அரசியலும் பல தாக்கத்தினை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது. மேலும் பனிப்போரினுடைய தாக்கமானது நாடுகளுக்கிடையிலான உறவுகளில் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பல தாகத்தினை ஏற்படுத்தி வருகின்ற போக்கினை காண முடிகின்றது. குறிப்பாக பனிப்போரினுடைய தோற்றம் ஐரோப்பாவினை மையப்படுத்தியதாகக் காணப்பட்டதோடு அவை விரிவாக்கமடைந்ததோடு ஏனைய நாடுகளையும் மக்களையும் மிகுந்த பாதிப்புக்கு உட்படுத்தியுள்ளது.

1945 களில் இருந்து உலக அரசியல் பல்வேறு விதமான மாற்றங்களுக்கு (transformed) உட்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கு காரணம் பனிப்போரினுடைய தாக்கம் என்றே நான் கூறுவேன். இந்த மாற்றங்கள் அரசியல் தொழில் நுட்பம் மற்றும் கருத்தியல் அபிவிருத்திகளில் பிரதிபலிப்பதினைக் காணக் கூடியதாக உள்ளது.

பனிப்போரினுடைய தாக்கமானது சர்வதேச அரசியலில் பல சாதகமான விளைவுகளினைத் தந்தாலும் அது பல பாதகமான அம்சங்களையே சர்வதேச அரசியலுக்கு கொடுத்துள்ளது என்றே நான் கூறுவேன். குறிப்பாக கூறினால் பனிப்போரானது நான் முன்னர் குறிப்பிட்டதைப் போல அணுவாயுத வளர்ச்சிக்குரிய சந்தரப்ப சூழல்களையும் போலிக் காரணங்களையும் வழங்கியது. இது இன்றும் மனித குலத்தின் இருப்புக்கு அச்சுறுத்தலாக விளங்குகின்றது. இந்த ஒரு விளைவே உலகையே கூறுபேடக் கூடிய அல்லது இல்லாது ஆக்கக் கூடிய தன்மையைக் கொண்டுள்ளது.

எனவே என்னுடைய கருத்தின் படி பனிப்போரின் விளைவானது கூடுதலாக சர்வதேச அரசியலில் பல பாதகமான அம்சங்களினையே ஏற்படுத்தியுள்ளன என்றே கூறுவேன். எது எவ்வாறாயினும் பனிப்போரினுடைய தாக்கமானது சர்வதேச அரசியலின் இருப்பை அசைபோடுவதாகவே அமைந்துள்ளது. இன்னொரு வகையில் கூறின் பனிப்போரினுடைய விளைவுகளாலேயே அல்லது தாக்கத்தாலேயே சர்வதேச அரசியல் ஏதோ ஒரு வகையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பேன். எனவே சர்வதேச அரசியலில் பனிப்போரின் தாக்கமானது முக்கியம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்வதேச சட்டத்தின் தோற்றம் வளர்ச்சி சார்ந்து முன்வைக்கப்படும் விடயங்களை பகுப்பாய்விற்கு உட்படுத்துக.**

இன்றைய உலக அரசுகள் ஒவ்வொன்றும் தம்மை நிர்வகித்துக் கொள்ள எவ்வாறு அரசியலமைப்பு ஒன்றினை ஏற்படுத்திக் கொள்கின்றனவோ அவ்வாறே இன்றைய உலகமயமாக்கலினால் உலக நாடுகளின் உறவுநிலையை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் அரசுகளுக்கான பொதுச்சட்டம் அல்லது சர்வதேச சட்டம் (International Low) என்பது முக்கியமானதாக காணப்படுகின்றது.

சர்வதேச சட்டம் என்றால் என்ன என்பதை நோக்கின் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். அந்தவகையில் ஜெரமி பெந்தம் நாடுகளுக்கிடையிலான தொடர்புகளின் போதிலான பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒழுங்கு விதி என குறிப்பிடுகின்றார். ஜெரமி பெந்தம் அவர்களினாலேயே சர்வதேச சட்டம் என்ற பதம் முதலில் பயன்படுத்தப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஜான் ஆஸ்டின் சர்வதேச சட்டம் என்பது “இறையான்மை பெற்ற அரசு அதன் கீழ்ப்பட்ட குடிமக்களுக்காக இயற்றும் நிகழ்நிலைச் சட்டமல்ல” என குறிப்பிடுகின்றார். சால்மாண்ட் சர்வதேச சட்டம் என்பது வெளிப்படையான அல்லது உட்கிடையான சர்வதேச பொது ஒப்பந்தங்களின் சட்டமே என குறிப்பிடுகின்றார். பொதுவான அடிப்படையில் தளத்தில் சர்வதேச சட்டம் என்பது “அரசுக்குரித்தான சர்வதேச ரீதியான நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான உரிமைகள், கடப்பாடுகளை வழங்குவதற்கான விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகும்.”[1]

சர்தேச சட்டத்தின் இயல்புகளாக உலகலாவிய ரீதியில் உள்ள நாடுகள் மத்தியில் அல்லது அங்கீகாரம் மிக்க நாடுகள் மத்தியில் பொது நியமத்தை ஏற்படுத்தல், வியாக்கியானங்களை செய்யக் கூடிய திறனுடையதாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. அத்தோடு நோக்கங்களாக உலக சமாதானத்தை ஏற்படுத்தல், உலகலாவிய யுத்தத்தைத் தவிர்த்தல், சிறுவர்கள், பெண்கள், சார்ந்து பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தல், நலிந்து போன ஒடுக்கு முறைகளுக்கு உட்படுத்திய தேசங்களின் நலன்களைப் பாதுகாத்தல் போன்றவற்றை உள்ளடக்கிய சட்டவரைபுகளைக் கொண்டு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய உலக அரங்கில் ஒவ்வொரு நாடும் தனித்து இயங்க முடியாது எனும் நிலையில் ஏனைய நாடுகளோடு உறவுகளை பேணிக் கொள்வதற்கு சர்வதேச சட்டத்தின் துணை என்பது அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இதன் படி உலக ஒழுங்கில் சர்வதேச சட்டமே அடித்தளமாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச சட்டத்தின் தோற்றம் வளர்ச்சி சார்ந்து முன்வைக்கப்படும் விடயங்களை பகுப்பாய்விற்கு உட்படுத்துவதாகவே இக் கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

சர்வதேச சட்டமானது இன்று நேற்று கட்டமைக்கப்பட்ட ஒன்றல்ல. அது நீண்ட பரிணாம வளர்ச்சியின் விளைவானதாகவுள்ளது. "சர்வதேச சட்டத்தின் வளர்ச்சிக்கு பூகோள ரீதியான வர்த்தகம், சூழல் பாதிப்புக்கள், மனித உரிமை மீறல்கள், நாடுகளுக்கிடையிலான போக்குவரத்துத் தொடர்பாடல்கள், பூகோள ரீதியான தேவைப்பாடுகள் பின்னணியாக அமைந்தன."[2] இன்றைய சர்வதேச சட்டத்தின் வளர்ச்சி நிலை என்பது மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் (Custom), ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கைகள் (Treaties), சர்வதேச மட்டத்தில் முதன்மைப்படுத்தப்படும்.

நீதிமன்றத் தீர்ப்புக்கள் (Decision of judicial or arbitral tribunals), நீதிப்புனராய்வு (Juristic works), சர்வதேச நிறுவனங்களின் தீர்மானங்கள் (Decisions or determinations of the organs of international institution), பிரகடனங்கள் (Declarations), ஆகிய மூலக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டே கட்டமைக்கப்பட்ட ஒன்றாக அடையாளப்படுத்தப்படுகின்றது. எனவே இத்தகைய மூலக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டே சர்வதேச சட்டத்தின் தோற்றம் வளர்ச்சி சார்ந்து பகுப்பாய்வினை மேற்கொள்ளல் என்பதே பொருத்தமுடையதாக இருக்கும்.

முந்தைய புராதன காலத்தில் அரசுகளோ அவற்றின் சட்டங்களோ கிடையாது. எனவே அக்காலத்தில் சர்வதேச சட்டத்தின் கூறுகள் உருவாவதற்கான வாய்ப்பு இல்லை. அதன் பிறகு சிறு சிறு இனக்குழு அரசுகள் தோன்றி அவற்றுக்கிடையே பண்டாமாற்று வணிகமும் பிற பரிவர்த்தனைகளும் ஏற்படத் தொடங்கிய பழங்காலத்தில் சர்வதேச சட்டத்தின் சுவடுக்களை அங்காங்கே காண முடிகின்றது. உதாரணமாக கி.மு 2100இல் மெசபடோமியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் லாகாஷ் (lagash) பகுதியின் ஆட்சியாளருக்கும் உம்மா (umma) என்னும் பகுதியின் ஆட்சியாளருக்குமிடையே உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

"கிரேக்க அரசுகளில் சட்டத்திற்குக் கீழ்ப்படிதல் மக்களின் உயர் நடத்தையாக இருந்தது"[3] இதன் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேச உறவுகளை ஏற்படுத்திக் கொண்டதுடன் இதற்கான விதிகளையும் உருவாக்கிக் கொண்டனர். உதாரணமாக நகர அரசுகளுக்கு கிடையிலான உறவுகள், யுத்தங்கள், இராஜதந்திரப் பாதுகாப்புப் போன்றவற்றிற்கான விதிகளை உருவாக்கிக் கொண்டனர்.

கிரேக்க அறிஞர்களின் அடிப்படைக் கோட்பாடுகள் பின்னாட்களில் சர்வதேச சட்டத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். பல நாடுகளை வென்று தன் ஆட்சிக்கு உட்படுத்தியிருந்த பழங்கால ரோமப் பேரரசியல் ரோமானியர்களுக்கும் பிற நாட்டவருக்கும் இடையிலான சட்ட உறவுகள் பற்றிய கோட்பாடுகள் உருவாக்கப்பட்டிருந்தன. அவை நாடுகளின் பொதுச் சட்டம் (Jus gentium) எனப்பட்டன. இது போன்றே ரோமானியர்களின் கருத்தாக்கங்கள் பின்னாளில் சர்வதேச சட்டம் உருவாகும் போது ஒப்புமை மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டன. உதாரணமாக ரோமானியர்களின் குடியரசு என்னும் கருத்தாக்கம் பின்னாளில் ஆள்நில இறையாண்மை எனும் கருத்தாக்கமாக வளர்ச்சியடைந்தது. அது போல முகமை (Agency) பற்றிய கருத்தாக்கம் பின்னாளில் தூதுவ முகவர்களின் மரபாக வளர்ச்சி பெற்றது. அந்தவகையில் சர்வதேச சட்டத்திற்கு ரோமானியச் சட்டம் பெரிதும் துணைபுரிந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். உரோமனியச் சட்டம் உரோம சாம்ராச்சிய வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட மத்திய காலம் வரையில் சர்வதேச சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

கீழைத்தேய மரபில் திருக்குறளில் அரசியல், அமைச்சியல் என்ற பகுதிகளில் அரசர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் கூறப்பட்டுள்ளன. அர்த்தசாஸ்திரத்திலும் அரசன் மற்ற அரசர்களைப் பொறுத்து கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

மத்திய ஐரோப்பாவில் பழைய கிரேக்க நகர அரசுகள் அழிந்து ரோமின் கத்தோலிக்க மதகுருவான போப்பின் தலைமை அதிகாரத்திற்குக் கட்டுப்பட்ட கிறிஸ்தவ அரசுகள் தோன்றின. கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் ரோமானியப் பேரரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ச்சியடைந்ததன் பின்னர் 11ஆம் நூற்றாண்டு வரை ஏறத்தாழ 500 ஆண்டுகள் ஐரோப்பாக் கண்டம் தொடர்ச்சியான போர்களால் சீரழிந்தது. இக்காலகட்டத்தில் இயற்கை சட்டம் சார்ந்தும் அதனுடைய எண்ணக்கரு சார்ந்தும் முதல் முதலில் யூத தத்துவவியலாளரான மோசஸ் மெய் மொனிடஸ் (Moses Maimonides 1135 – 1204) என்பவர் மதம் சார்ந்த கொள்கைகளை முன்னிறுத்தி அவற்றின் சட்ட பரிமாணங்களை இயற்கை நிலைச் சட்டங்களுக்கு உரித்துடைய பரிமாணங்களாக வடிவமைத்தார். இவரைத் தொடர்ந்து புனித தோமஸ் அக்குவைனாஸ் (1224 – 1274) அவர் ஒரு மதபோதகர் என்ற அடிப்படையிலும் மதத்தின் இயற்கை நிலை விதிகளை ஒன்றிணைத்தவர் என்ற அடிப்படையிலும் இதற்கான நியதிகளை வரைந்து இயற்கை நிலைச்சட்டங்களை சட்டத்தன்மை வாய்ந்த ஒன்றாக வலிமைப்படுத்தினார். இவர்கள் உருவாக்கிய மதக் கோட்பாடுகளின் அடிப்படையிலான சட்டமே இறையாண்மை நாடுகளுக்கிடையிலான அரசியல் உறவிற்கு பொருந்தும் இயற்கை சட்டமாக இருந்தது.

12ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா மட்டுமன்றி பேரரசுகளதும் முடியாட்சி முறைகளதும் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு இராணுவச் சட்டம் முதன்மையான ஒன்றாக அமைந்தது. சர்வதேச சட்டத்தின் தோற்றம் மத்திய காலத்தின் முடிவுக்குப் பின்னர் ஐரோப்பாக் கண்டத்தில் முதல் முதலாக உருவான தேசிய அரசுகளின் (Nation state) தோற்றத்துடன் தொடர்புடையது. புதிதாக உருவான ஐரோப்பிய நாடுகளின் சுதந்திர அரசுகள் தமக்கிடையிலான உறவுகளை ஒழுங்கமைத்துக் கட்டுப்படுத்தும் முயற்சியில் உருவாக்கப்பட்ட விதிகளே சர்வதேச சட்ட விதிகளாயின.

12ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 13ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஐரோப்பா முழுவதும் தேசிய அரசுகள் தோன்றின. இந்த வளர்ச்சிப் போக்கு 15ஆம் நூற்றாண்டில் முழுமை பெற்றது. இந்த காலகட்டத்தில் ஐரோப்பாக் கண்டம் எண்ணற்ற சுதந்திரமான தேசிய அரசுகளாக பிரிந்திருந்தது. இந்த இறையாண்மை பெற்ற நாடுகளுக்கிடையிலான அரசியல் உறவுகளை ஒழுங்குபடுத்த பொதுவான சட்டம் ஒன்றின் தேவை எழுந்தது. அத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஐரோப்பாவில் மெல்ல உருவானதே இந்த சர்வதேச சட்டமாகும். இக்காலகட்டத்தில் மதத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் விடுபட்ட சூழ்நிலையானது சட்டத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது. இக்கால கட்டத்தில் பிரான்ஸ் நாட்டின் ஜீன் போடின் (Jean Bodin), இத்தாலியின் மாக்கியவல்லி இங்கிலாந்தின் கொப்ஸ் போன்ற சட்டவியலாளர்கள் அரசின் இறையாண்மை மற்றும் இயற்கைச் சட்டம் பற்றிய மதச் சார்பற்ற கண்ணோட்டங்களை முன்வைத்தனர்.

16ஆம் நூற்றாண்டில் இறைமை பற்றிய உரையாடல் முடி அல்லது மன்னன் அல்லது தெய்வீக உரிமை சார்ந்த நியதிகளுக்கான விடுபாட்டுத் தன்மை உலகளாவிய ரீதியில் வலுவடைய வழிவகுத்தது. இதனால் எழுந்த அரசுகளும் ஆட்சிமுறைகளும் அரசுகளின் ஜனநாயக மரபுக்குள்ளால் புதிய வகைக் கட்டுமானத்தை தோற்றுவித்தது. இதுவே சட்டம் தொடர்பான நவீன வடிவங்களுக்கும், சர்வதேச சட்டத்தினுடைய மேலெழுகைக்கும் வழிவகுத்தது. இதனை அடிப்படையாகக் கொண்டு இயற்கை சட்டம், மதச் சட்டம், இராணுவ சட்டம், சர்வதேச சட்டம், பொது சர்வதேச சட்டம் என்ற பரிமாணத்தின் தன்மை வளர்ச்சியடைந்தது என்பதை அடையாளப்படுத்த முடியும்.

15ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் வணிகர்களுக்கு இடையில் எழும் தகராறுகளை தீர்க்க வணிகச் சட்டங்கள் (Commercial law) உருவாகின. நாடுகளுக்கிடையிலான வணிகச் சிக்கல்களை தீர்ப்பதற்காக சர்வதேச சட்ட விதிகளும் சர்வதேச வழக்காறுகளும் உருவாகி வளர்ந்தன இக்காலகட்டமே நவீன சர்வதேச சட்டத்தின் துவக்க காலம் என்றால் மிகையாகாது.

நவீன இயற்கைச் சட்டத்திற்கு அடித்தளம் இட்டவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஹியூஹ் க்ரோஷியஸ் ஆவார். இவர் வாழ்ந்த காலம் நாடுகளுக்கிடையிலான வணிகம் பெருகிய காலமாகும். எனவே அவர் நாடுகளுக்கிடையிலான வணிக ஒப்பந்தங்கள், உடன்பாடுகளை மதித்து நடக்கவேண்டியதும் இயற்கைச் சட்டங்களில் ஒன்று என்றார். அவர் இயற்கைச் சட்டப்படி கடல் எந்த நாட்டின் ஆளுகைக்கும் உட்படாத ஒன்று என்றார். எனவே கடல் வணிகம் செய்யும் உரிமை அனைத்து நாடுகளுக்கும் பொதுவான உரிமை என்ற சர்வேதச சட்டநிலை ஏற்பட்டது. ஹியூஹ் க்ரோஷியஸ் 1625 இல் வெளியிட்ட **போர் மற்றும் அமைதிச் சட்டம்** (law of war and peace) எனும் நூலில் நாடுகளுக்கிடையிலான பல்வேறு வழக்காற்று விதிகளை ஒழுங்குபடுத்தித் தொகுத்து வெளியிட்ட முதல் நூலாகும். இந்நூலில் சர்வதேச சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நடந்து வந்த 30 ஆண்டு கால போரின் முடிவாக வடமேற்கு ஜெர்மனி பகுதியிலுள்ள வெஸ்ட்பாலியா என்ற இடத்தில் 24, அக்டோபர், 1648 இல் ஐரோப்பிய இனத்தவரிடையே கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கை **வெஸ்பாலியா சமாதான உடன்படிக்கை (Westphalia peace Treaties)** என இனங்காணப்படுகின்றது. வெஸ்பாலியா சமாதான உடன்படிக்கையின் விளைவாக நவீன தேசிய அரசுகள் நவீன ஆள்புல அரசுகளுடன் அடையாளம் காணப்பட்டமை நவீன அரசுகளின் இறைமையினை ஏனைய தேசிய அரசுகள் ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக நவீன அரசுக்கள் நிலையான நிலப் பிரதேசத்தினுள், நிச்சயமானதும், ஒப்பீட்டு நீதியில் நெகிழ்ச்சியற்றதுமான எல்லைகளைக் கொண்ட ஆள்புல (Territorial) அரசுகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இதனாலேயே சர்வதேச சட்டத்தின் முக்கிய மைல்கல்லாக வெஸ்பாலியா சமாதான உடன்படிக்கை காணப்படுகின்றது.

கி.பி 843இல் கரோலிஞ்சிய பேரரசை பகிர்ந்து கொள்ள லூயி என்பவருடைய மூன்று புதல்வர்கள் செய்து கொண்ட வர்துன் ஒப்பந்தம் (Treaty of Verdun) சர்வதேச சட்ட வடிவத்திற்கு ஒரு சிறந்த உதாரணமாக இருக்கின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

ஏகாதிபத்தியம் அல்லது காலணித்துவ காலத்தில் மேலை ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட வணிகப் போட்டி மற்றும் நாடு பிடிக்கும் போட்டிகளின் காரணமாகவும் சர்வதேச சட்டத்தின் வளர்ச்சி துரிதமானது. 1872 இல் ஏற்பட்ட அலபாமா தீர்வுக் கோருரிமையை (Alabama Award Claim 1872) தொடர்ந்து சர்வதேச தகராறுகளை தீர்ப்பாயங்கள் மூலம் தீர்த்துக் கொள்ளும் வழக்கம் அதிகரிக்கத் தொடங்கியது.

1718இல் இங்கிலாந்து, பிரான்ஸ், ஆஸ்திரியா, போலந்து ஆகிய நாடுகளுக்கிடையே ஹானோவர் வம்சத்துக்கு இங்கிலாந்தும், பூர்பான் வம்சத்துக்கு பிரான்சும் கிடைத்திட **நானாட்டு உடன்படிக்கை (Quardruple Alliance)** ஏற்பட்டது.

1783, செப்டம்பர் 3 பிரிட்டனுக்கும் அமெரிக்க கமிஷ்னர்களுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின் படி சுதந்திரம் வழங்கப்பட்டது. ஏழாண்டு போரின் முடிவில் 1793, பெப்ரவரி, 10 அன்று பிரிட்டன், பிரான்ஸ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்பெயின் நாடுகளுக்கிடையே ஓர் **பாரிஸ் உடன்படிக்கை** ஏற்பட்டது. மேலும் 30.மே.1814 இல் ஒரு ஒப்பந்தமும் , 20 நவம்பர் 1815 இல் உறவு நாடுகளுக்கும் பிரான்சுக்குமிடையே ஏற்பட்டது. கிரீமியாபோருக்கு பின் 30 மார்ச் 1956 இல் ஒரு ஒப்பந்தமும் (பாரிஸ்) ஏற்பட்டது. 1815 இல் நடைபெற்ற **வியென்னா மாநாடு** சர்வதேச சட்டமியற்றலின் தொடக்கமாக அமைந்தது. ஏனெனில் இம் மாநாட்டில் முதல் முதலாக தூதுவப் பிரதிநிதிகள், சர்வதேச ஆறுகளின் போக்குவரத்து போன்ற விதிகள் ஏற்பட்டன.

1856 இல் நடைபெற்ற கடல் பற்றிய பாரிஸ் மாநாடு கடல் போரில் ஈடுபடும் நாடுகள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் வகுக்கப்பட்டன. 1864 இல் நடைபெற்ற ஜெனிவா மாநாடு தரைப்போரில் காயமடைந்த உடல் நலம் இழந்தவர்களின் நல் வாழ்விற்கு வழிவகை செய்தது. இன்றும் ஜெனிவா அரங்கம் இடம்பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1907 இல் **ஹேக் மாநாடு** நாடுகளுக்கிடையிலான போர் மனிதத் தன்மையுடன் இருக்க வலியுறுத்தியது.

முதலாம் உலகப் போர் மற்றும் அதன் பிந்திய கால கட்டத்தில் (1914 – 1934) சர்வதேச சட்டத்தின் வளர்ச்சி தொடர்பாக நோக்குகையில், முதலாம் உலகப்போர் சர்வதேச சட்டம் மிகவும் பலவீனமானதொரு சட்டம் என்று நிரூபித்தது. வருங்காலத்தில் இது தொடர்பான போர் நிகழாமல் தடுப்பதற்கு 1919 ஆம் ஆண்டின் நேச நாடுகளுடன் ஜேர்மனி செய்து கொண்ட **வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்** படி சர்வதேச சங்கம் (League of Nations) அமைக்கப்பட்டது.

நாடுகள் தங்களுக்கிடையிலான தகராறுகளை சட்ட பூர்வமாக தீர்த்துக் கொள்வதற்காக நிரந்தர சர்வதேச நீதிமன்றம் (Permanent Court of international Justice) ஏற்படுத்தப்பட்டது. போர்களைத் தடுப்பதற்கு 1925 இல் ஏற்படுத்தப்பட்ட லொகார்னோ – மற்றும் 1928 இல் ஏற்படுத்தப்பட்ட **கொல்லாக் பிரையன் உடன்படிக்கை (Kellogg Briand or Paris Pact),** 1929 இல் நடைபெற்ற **ஜெனிவா மாநாடு** போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவைகள் சர்வதேச சட்டத்திற்கு வலுச்சேர்ப்பவையாக அமையப் பெற்றுள்ளன.

இரண்டாம் உலகப் போரும் அதன் பிந்தைய காலத்திலும் சர்வதேச சட்டத்தின் வளர்ச்சியானது அதன் உன்னத நிலையினை அடைந்துள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே கூறிக் கொள்ள வேண்டும். 1945இல் இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தபோது உலகம் பல்வேறு சர்வதேசப் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. காலனி நாடுகளின் விடுதலை, நாடுகளின் எல்லைகளைத் திருத்துதல், அகதிகளின் பாதுகாப்பு, போரில் தோற்ற நாடுகளின் ஆள்நிலை எல்லைகளின் ஆட்சி நிர்வாகம் போன்றவை அவற்றுள் முக்கியமானவை. சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பாராமரிப்பதில் சர்வதேச சங்கம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அதைக் காட்டிலும் கூடுதல் அதிகாரங்களுடன் 1945இல் **ஐக்கிய நாடுகள் சபை (United Nations)** உருவாக்கப்பட்டது. இது சர்வதேச சட்டத்தின் வளர்ச்சிக்கு புதுப்பொழிவினை உண்டுபண்ணுவதாக அமையப் பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை மீறல்கள் இனப்படுகொலைகளை மேற்கொள்ளும் நாட்டுத் தலைவர்களை கைது செய்வதற்கான அதிகாரத்தைப் பெற்றுள்ளது. அதுமட்டுமன்றி சர்வதேச போர்க்கருவி வர்த்தகத்தை கட்டுப்படுத்தல் அணுசக்தி பாவனையை கட்டுப்படுத்தல் போன்ற அதிகாரங்களையும் கொண்டுள்ளது. ஒரு நாட்டினுடைய அரசின் விருப்பிற்கு மாறாக அந்நாட்டு மக்களின் மனிதவுரிமைகளை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபைக்கு அதிகாரம் உண்டு.

ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச சட்டத்தின் அடிப்படைத் தத்துவங்களாக பின்வருவனவற்றை வரையறுத்துள்ளது. அதாவது அரசுகள் சமாதானத்தினை பேச்சு வார்த்தை மூலம் ஏற்படுத்த வேண்டும், எந்தவொரு அரசும் ஏனைய அரசுகளின் உள்விவகாரங்களிலும் அதிகாரத்திலும் தலையிடக் கூடாது, ஒவ்வொரு அரசுகளின் எல்லைகளை அத்துமீறக் கூடாது, அரசுகளின் பிரதேச ஒருமைப்பாடு போணப்பட வேண்டும் போன்றனவாகும்.

ஐ.நாவின் தோற்றத்தினைக் தொடர்ந்து சர்வதேச சட்டம் முன்னர் குறிப்பிட்டது போன்று வேறொரு பரிணாம வளர்ச்சியினை தொட்டுள்ளது. அந்தவகையில் சர்வதேச சட்டத்தின் நியாயாதிக்கக் கோட்பாடு மாற்றியமைக்கப்பட்டு **"சர்வதேச நியாயதிக்கம்"** என்ற பதம் பாவனைக்கு வந்தது. வெளிநாட்டுப் பிரஜைகளைப் பாதுகாக்க அரசு கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகளையும் பொறுப்புக்களையும் தெளிவாக இது வடிவமைத்துள்ளது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பிரிதொரு அரசுகளிற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நடவடிககைகளை தவிர்ப்பது தொடர்பான அரசுகளின் கட்டுப்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.”[4]

மேலும் குற்றவாளிகளை “மீளொப்படைப்பு செய்வது” தொடர்பில் சட்டக் கண்ணோட்டம் பரந்ததாக்கப்பட்டிருக்கிறது. இதில் பாரிய குற்றங்கள் செய்த குற்றவாளிகளை மீளொப்படைப்பு செய்யும் அவசியம் பற்றிக் கூறப்படுகின்றது. கடல் தொடர்பான சட்டம் கோவைப்படுத்தப்பட்டு பரந்ததாக்கப்பட்டிருக்கின்றது. விண்வெளிச் சட்டம் தொடர்பான கண்ணோட்டமும் வளர்ச்சியடைந்துள்ளது. மனித உரிமைகள் சட்டம், சூழல் சட்டம், சர்வதேச பொருளாதாரச் சட்டம், மனிதாபிமானச் சட்டம் என்பவை தொகுக்கப்பட்டு பட்டயமாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. உதாரணமாக “பாரியளவிலான மனித உரிமை மீறலானது சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் கேடுவிளைவிக்கக் கூடியது” என ஐ.நா பட்டயத்தின் கட்டுரை vii இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சூழல் சட்டம் மிகவும் வளர்ச்சியடைந்த ஒன்றாகும் அது தொடர்பாக 350 பலதரப்புப் பொருத்தானைகள் 1000 இரு தரப்பு பொருத்தானைகள் பிரகடனங்கள், தீர்மானங்களாக இயற்றப்பட்டுள்ளன. சர்வதேச மனிதாபிமானச் சட்டம் 20 ஆம் நூற்றாண்டில் வளர்ச்சியை எட்டியது. மனித உரிமைச் சட்டத்தின் பாகமாக இருந்த மனிதாபிமானச் சட்டம் தற்போது மனிதஉரிமைச் சட்டத்தின் அம்சங்களையும், சூழல் சட்டத்தின் அம்சங்களையும் உள்வாங்கி புதிய வடிவத்தை எடுத்துள்ளது. மனிதாபிமான, மனித உரிமைகள் மீறப்படும் பொழுது இவ்வுரிமைகளைப் பாதுகாக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தோற்றுவிக்கப்பட்டது. யுத்தக் குற்றம், மனித நேயக்குற்றம், புரிந்தோரை இனங்கண்டு தகுந்த தண்டனை வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

இவ்வாறாக சர்வதேச சட்டத்தின் தோற்றம் வளர்ச்சியானது காணப்படுகின்றது. எனவே தொகுத்து நோக்குகின்ற போது சர்வதேச சட்டத்தின் வளர்ச்சியானது **வழக்காறுகள், உடன்படிக்கைகள் ஒப்பந்தங்கள், மாநாடுகள், சர்வதேச தீர்ப்புக்கள்** போன்ற மூலக்கூறுகளிலிருந்தே கட்டமைக்கப்பட்டுள்ளது என்பது மேலே கூறப்பட்ட விடயங்களிலிருந்து தெளிவாகக் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலகட்டத்தில் சட்டம் அரசுகளை விட முதன்மையானதாகும். "சர்வதேச சட்டமானது அரசுகளின் இறைமையினையும் அதனைப் பாதுகாப்பதற்கான வழிவகையையும் எடுத்துக்கூறுகின்றன."[5] எனவே தான் சர்வதேச சட்டம் அரசுகளின் இறைமையின் நண்பன் எனக் கூறப்படுகின்றது.

எனினும் எது எவ்வாறாக இருப்பினும் சர்வதேச சட்டம் தொடர்பாக பல விமர்சனக் கண்ணோட்டங்கள் காணப்படவே செய்கின்றன. குறிப்பாக சர்வதேச சட்டமானது ஒரு சட்டமா இல்லையா என்கின்ற சர்ச்சையானது காணப்பட்டுவருகின்றது. சர்வதேச சட்டமானது ஒரு இறையாண்மை பெற்ற அரசின் அதிகாரத்திலிருந்து பிறந்தது அல்ல. மாறாக அது ஒன்றுக்கு மேற்பட்ட இறையாண்மை அரசுகள் ஒன்றக்கொன்று இணக்கம் அளிக்கும் ஒத்திசைவின் மூலம் உருவாவது ஆகும். எனவே சர்வதேசச் சட்டம் ஒரு சட்டமல்ல. அது அறவொழுக்கமே என்று ஒரு சாராரும், அது ஒரு சட்டம் என்று மற்றொரு சாராரும் இரு வேறு கோணங்களில் இருந்து வாதிடுகின்றனர். இரண்டும் இல்லை அது சர்வதேச ஒப்பந்தங்களின் சட்டம் என்று வேறொரு சாராரும் கூறி வருகின்றனர். என்னடைய பார்வையில் சர்வதேச சட்டம் என்பது சட்டம் என்பதற்குரிய அந்தஸ்தினை அது முழுமையாகப் பெறவில்லை என்றே கூறிக்கொள்ள வேண்டும். அதாவது சர்வதேசச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது சாதாரண குடிமக்கள் அல்ல. இறையாண்மை அரசுகளே. எனவே சர்வதேச சட்டத்தை மீறினால் தண்டிக்கப்படுவோம் என்ற பயத்தின் காரணமாக எந்தவொரு அரசும் சர்வதேச சட்டத்தை மதித்து நடப்பதில்லை. ஏனெனில் உலகின் இறையாண்மை அரசுகளைத் தண்டிக்கும் அதிகாரம் உடைய உலக அரசு என்று எதுவுமில்லை என்பதால் ஆகும்.

இதனை விட சர்வதேச சட்டமானது பல குறைபாடுகளைத் தன்னகத்தே கொண்டும் காணப்படுகின்றது. "சர்வதேச சட்டத்தின் முதல் குறை அதன் விதிகள் திட்ட வட்டமாக வரையறுக்கப்படாமலிருத்தல் ஆகும்."[6] அத்தோடு நீதி வழங்கும் அதிகாரங்கள் மாறுபட்டும் வரையறுக்கப்பட்டும் காணப்படுகின்றது. சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படுகின்றது. சர்வதேச சட்டத்தின் நோக்கங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றது. சட்டத்தின் நோக்கம் தொடர்பாக தவறான கருத்துக்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை விட மிகவும் முக்கியமான ஒரு குறைபாடாக சர்வதேச சட்டத்தை அமுல்படுத்தும் அமைப்புப் பற்றியதாகும். வல்லரசு, சிற்றரசு வேறுபாடுகளின்றி எடுத்த முடிவை நிலை நிறுத்தும் அதிகாரமும் வல்லமையும் பொருந்த ஓர் அமைப்பு இருப்பதாகக் சொல்ல முடியாது. இவ்விடத்தில் வல்லாதிக்கத்தின் தலையீடானது காணப்படவே செய்யும். இவ்வாறாக பல குறைபாடுகளைக் கொண்டு சர்வதேச சட்டமானது காணப்படுகின்றது.

“சர்வதேச அரசுகளின் தொடர்புகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுமாயின் அவர்களுக்கு இடையே ஏற்படும் மோதல்கள், பிரச்சினைகள் என்பவற்றை முகாமைத்துவம் செய்து சர்வதேச சமாதானத்தை நிலைநிறுத்த முடியும்”[7] என்பது சர்வதேச சட்டத்தினால் வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் நடைமுறையில் இது எந்தளவுக்கு காணப்படுகின்றது என்பது கேள்விக்குரிய ஒன்றே ஆகும்.

எனவே சர்வதேச சட்டத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பரிகாரமானது மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அந்தவகையில் முதலில் சர்வதேச சட்டத்தை தொகுத்து வெளியிட வேண்டும். இரண்டாவதாக நாடுகளின் எல்லாத் தகராறுகளையும் பூசல்களையும் விருப்பு வெறுப்புக்கு இடமின்றி அமைக்கப்பட்ட ஒரு சர்வதேச நீதிமன்றத்துக்கு விடவேண்டும். இந் நீதிமன்றம் எல்லாவிதமான தகராறுகளையும் சட்ட விதிகளுக்கு இணக்க முடிவு செய்ய வேண்டும். மூன்றாவதாக “சர்வதேச நீதிமன்றம் செய்த முடிவுகளை அமுல் நடத்த பலம் பொருந்திய ஓர் அமைப்பு வேண்டும். இந்த அமைப்பு ஐக்கிய நாடுகள் சபை போல் முடிவெடுக்கும் அமைப்பாய் இருக்கக் கூடாது.”[8] முடிவு எடுப்பது சர்வதேச நீதிமன்றத்தின் தனி உரிமையாய் இருக்க வேண்டும். நீதிமன்றம் எடுத்த முடிவை நிலை நிறுத்துவதே இதன் கடமையாய் இருக்க வேண்டும். இந்த அமைப்பு தன்னந் தனியாக நின்று எந்த நாட்டையும் பணிய வைக்கும் பலம் பெருந்தியதாய் இருக்க வேண்டும். நாடுகளின் செல்வாக்கு என்பது காணப்படாதாக இருத்தல் வேண்டும் போன்ற சீர்திருத்தங்களை கொண்டு வருமிடத்து சர்வதேச சட்டமானது புதுப் பொழிவுடன் உருமாற்றம் பெற்று நாடுகளுக்கிடையிலான மோதல்கள், பிரச்சினைகள், என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவம் செய்து சர்வதேச சட்டத்தை நிலை நிறுத்தக் கூடிய தன்மையானது ஏற்படும் என்பது எனது வாதமாகக் காணப்படுகின்றது.

பெந்தம் முன்வைத்த நியாயாதிக்கம் கொண்ட தேசிய வரைவியலுக்குட்பட்ட பெறுமானங்களை அரசுகளின் அல்லது தேசிய அரசுகளின் நியதிகளுக்கு உள்ளால் கட்டமைக்கப்பட்ட கூட்டுத் தன்மை சர்வதேச சட்டம் என புரிந்து கொள்ளப்பட்டதற்கும் தற்போதுகாணப்படுகின்ற சர்வதேச சட்டத்திற்குமிடையே பாரிய வேறுபாடானது காணப்படுகின்றது. அந்த வகையில் சர்வதேச சட்டத்தின் வளர்ச்சி என்பது மேற்குறிப்பிடப்பட்டதைப் போல் மரபுகள், ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், சர்வதேச அமைப்புக்கள், நீதிமன்றத் தீர்ப்புக்கள் போன்றவற்றினால் வடிவமைக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது. அதனடிப்படையில் சர்வதேச அமைப்புக்கள் இல்லாவிட்டால் சர்வதேச சட்டம் இயங்க முடியாத தன்மை என்பது இன்று காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முடிவாக தொகுத்து நோக்குகின்ற போது சர்வதேச சட்டத்தின் தோற்றுவாயான இயற்கை சட்டமானது (இயற்கை சட்டம் என்பது நமது செயல்களையும் மனநிலைகளையும் கட்டுப்படுத்தும் உள்ளார்ந்த மதிப்புக்களில் கவனம் செலுத்தும் ஒரு கோட்பாடு ஆகும் ) பல காலகட்டங்களில் பல்வேறு பரிமாணங்களுக்கு உட்படுத்தப்பட்டு இன்றைய பொது சர்வதேச சட்டமாக மிளிர்ந்துள்ளது. அந்த வகையில் சர்வதேச சட்டமானது பல்வேறுபட்ட நிலைகளிலிருந்து உருவாக்கப்பட்டாலும் அவற்றை அமுல் செய்வதில் இறுக்கமான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பது கண்கூடு. வலிமை வாய்ந்த அரசுகள் சர்வதேச சட்டத்தை மீறும் பட்டத்தில் வலிமை குறைந்த நாடுகளுக்கு உதவ சர்வதேச சட்டங்களோ அமைப்புக்களோ சாத்தியமற்றவையாகவே காணப்படுகின்றது.

எனவே இவற்றினை நிவர்த்தி செய்ய வேண்டுமாயின் நான் முன்னர் குறிப்பிட்டதைப் போன்று அல்லது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினை அதிகார அரசியல் நிலையிலிருந்து விடுபடச்செய்து சர்வதேச சமூகத்திற்கும் நீதி நியாயத்திற்கும் கட்டுப்பட்ட அமைப்பாக மாறும் வேளையிலேயே சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்களானவை சர்வதேச அரசியல் பரிமாணத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக மிளிர முடியும் என்பதே குறிப்பிடத்தக்கதாகும்.

## அடிக்குறிப்பு

தர்மினி.N (2011), "சர்வதேச சட்டமும் சர்வதேச அரசியலும்" - அரசறிவியலாளன் - இதழ் - 04, அரசறிவியல் ஒன்றியம், அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், ப – 56

மேலது, ப- 57

கிருஷ்ணமோகன்.த, (2010), "அரசியல் விஞ்ஞானம் அரசியல்செயற்பாடுகள் அரசியல் செய்முறைகள் சேமமடுப் பதிப்பகம், ப- 135

தர்மினி.N (2011), "சர்வதேச சட்டமும் சர்வதேச அரசியலும்" – அரசறிவியலாளன் - இதழ் 04, ப – 58

கிருஷ்ணமோகன்.த. (2010), "அரசியல் விஞ்ஞானம் அரசியல் செயற்பாடும், அரசியல் செயற்முறையும்" – ப - 135

பழனிச்சாமி - அ, (1963), "சர்வதேசச் சட்டம், பழனியப்பா பிரதர்ஸ், ப – 186

செல்வா.V.K, (N.Y) "பொதுத்துறை நிர்வாகம் சர்வதேச உறவுகள் மோதல் முகாமைத்துவம்" வணிகவள நிலையம், கொழும்பு, ப – 45

பழனிச்சாமி.அ, (1963), " சர்வதேசச் சட்டம்", ப – 187

## உசாத்துணை நூல்கள்

கிருஷ்ணமோகன்.த, (2010), "அரசியல் விஞ்ஞானம் அரசியல் செயற்பாடும், அரசியல் செயல்முறையும், சேமமடுப் பதிப்பகம்.

பழனிச்சாமி.அ. (1963), "சர்வதேசச் சட்டம்", பழனியப்பா பிரதர்ஸ்

03. செல்வா V.K, N.Y) "பொதுத்துறை நிர்வாகம் சர்வதேச உறவுகள் மோதல் முகாமைத்துவம்" வணிக வள நிலையம், கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்கரன்.ச, (2019), “அரசியற் கோட்பாடுகளும் சிந்தனையாளர்களம்”, குமரன் பத்தக இல்லம்.

பாஸ்கரன்.ச, (2019), “அரசியற் கோட்பாடுகளம் சிந்தனையாளர்களும்”, குமரன் புத்தக இல்லம்.

தர்மினி.N, (2011), “சர்வதேச சட்டமும் சர்வதேச அரசியலும்” – அரசறிவிலாளன் - இதழ் - 04 அரசறிவியல் ஒன்றியம், அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

சரவணன்.P.C, (2017), “சர்வதேச சட்டத்தின் மூலாதாரங்கள் - (பாகம்)” W.W.W. dinamani.com

சரவணன்.P.C (2017) “சர்வதேச சட்டத்தின் இயல்பும் அடிப்படையம்”, W.W.W. dinamani. com

சரவணன்.P.C (2020), “சர்வதேசச் சட்டமும் உள்நாட்டுச் சட்டமும்” W.W.W. Vikaspedia.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசறிவியல் ஆய்வின் முக்கியத்துவத்தினை விபரித்து ஆய்வு முறைமைக்கும் (Research Methods) ஆய்வு முறையியலுக்கும் (Research Methodology) இடையிலான வேறுபாடுகளை ஆராய்க.**

குழப்பங்கள் பல நிறைந்த இவ்வுலகில் உண்மையினைக் கண்டறிந்து யதார்த்தபூர்வமானதாகவும் அபூர்வபூர்வமானதாகவும் இவ்வுலகினை வழிநடாத்துவதற்கு ஆய்வுகள் மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை அவசியமானதாக காணப்பட்டு வருகின்றது. அந்தவகையில் நாம் இன்று ஆய்வுகளின் பயனால் விளைந்த நவீன தொழில்நுட்பச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மனிதனின் ஒவ்வொரு கால கட்டச் சிந்தனைகளும், அறிவார்ந்த செயற்பாடுகளும் இன்றைய புதிய ஆய்வுகளுக்கு அடிப்படைகளாயின. "மனிதனின் இயல்பான பண்பு தேடுதலாகும்." பசிக்கு உணவு தேடுதல் எனத் தொடங்கி இன்று விண்வெளிப்பயணம், அணு ஆயுதங்கள், உயிர்காக்கும் மருந்துகள் என அடைந்த வளர்ச்சி மனிதனின் இடைவிடாத நீண்டகாலத் தேடுதல் முயற்சியின் விளைவுகளாகும். இன்றைய ஆய்வு வளர்ச்சி பல வசதிகளை உருவாக்கினாலும் மனித இருப்புக்கு பேரச்சம் விளைவிக்கின்ற சிக்கல்களையும் உருவாக்கியுள்ளது என்பது மறப்பதற்கில்லை.

ஆய்வு என்பதன் அடிப்படைச் சொற்பொருள் "ஏதேனும் ஒன்றை மிக்க கவனத்தோடும் விடாமுயற்சியோடும் நுட்பமாய்த் தேடுவது" ஆகும். ஆங்கிலத்திலுள்ள Research என்ற சொல்லானது பிரெஞ்சு மொழிச் சொல்லான Research என்பதிலிருந்து தோற்றம் பெற்றதாகும். இப் பிரெஞ்சுச் சொல்லிற்கு "தேடுதல்" என்று பொருள். அந்தவகையில் ஆய்வு எனப்படுவது அறிவைத் தேடுவதாக அமைகின்றது. எனினும் அறிவினை அதிகரித்தல் அல்லது தேடுதல் என்பது ஆய்வு என வெறுமனவே சொற்களில் விபரிப்பதாக இல்லாமல் "தகவல்களைச் சேகரித்து, ஒழுங்குபடுத்தி, பகுப்பாய்வு செய்து அவற்றின் மூலம் பெறப்பட்ட பெறுபேற்றினை விபரிப்பதன் மூலம் ஒரு விடயத்தினைக் கண்டறிவதற்கான ஒரு முறையான செயன்முறையே ஆய்வு எனக் கூறப்படுகின்றது."

மேலும் ஆய்வு என்றால் என்ன என்பது தொடர்பாக பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். அந்த வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுண்ட்பேர்க் என்பவர் "அவதானிக்கப்படும் தரவுகளை வகைப்படுத்தல், பொதுப்படுத்தல், நிரூபித்தல் ஆகிய செயன்முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு வழிவகுக்கின்ற செயன்முறை ஆய்வு எனப்படும்" எனக் குறிப்பிட்டுள்ளார். கேர்லிங்கர் என்பவர் "ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட சில புலனாய்வுகளையும் கருது கோள்களையும் உருவாக்கி அவற்றை இயற்கையுடன் தொடர்புபடுத்துவதே ஆய்வு" என்றார். எனவே தொகுத்து நோக்குகின்ற போது ஆய்வு என்பது அறிவினைத் தேடுவதாகவோ அல்லது உண்மையினை தேடுவதாகவோ அமைகின்றது. ஆய்வின் நோக்கங்களாக அறியாப் பொருளை அறிய முயலுதல், கருதுகோள்களை பரீட்சித்தல், இருக்கும் அறிவை மீளாய்வு செய்தல், புதிய விபரிப்புக்களை முன்மொழிதல் போன்றன காணப்படுகின்றன.

ஆய்வின் முக்கியத்துவங்களாக, ஒரு பிரச்சினை ஏற்படுகின்ற போது அப் பிரச்சினைக்கான தீர்வுகளை கண்டறிவதற்கும், புதிய விடயங்கள் மற்றும் கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை சிறந்த முறையில் நிறுவுவதற்கும் அதனூடாக பல புதிய விடயங்களை பெற்றுக் கொள்வது போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

அந்தவகையில் நவீன கல்வி உலகிலும் ஆய்வுகளது முக்கியம் என்றுமில்லாத அளவுக்கு உணரப்பட்டுள்ளது. இந்த ஆய்வு முயற்சியில் உயர் கல்வி நிறுவனங்கள் மட்டுமல்லாது அவற்றிற்கு வெளியேயுள்ள தனிப்பட்ட சில நிறுவனங்களும் அமைப்புக்களும் கூட ஈடுபட்டு வருவதனை நாம் காணமுடிகின்றது. அந்தவகையில் அரசறிவியலில் ஆய்வின் முக்கியத்துவத்தினை விபரித்து ஆய்வு முறைமைக்கும், ஆய்வு முறையியலுக்குமிடையிலான வேறுபாடுகளை ஆராய்வதாகவே இக் கட்டுரை அமையப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் முதலாவதாக அரசறிவியல் ஆய்வின் முக்கியத்துவத்தினை நோக்குவது இங்கு பொருத்தமுடையதாக இருக்கும்.

அரசறிவியல் ஒரு யதார்த்த பூர்வமான கற்கைநெறி ஆகும். அரசியல் விஞ்ஞானம் என்பது மனிதர்களின் பொது நன்மைகளை ஒழுங்கமைக்கவென எதனை எவ்வாறு தீர்க்கலாம் என்பதனை விஞ்ஞான ரீதியாகக் கற்கும் ஒரு பாடமாகும். எனவே இங்கு சிந்தனையாளர்கள், கோட்பாட்டாளர்கள், தத்துவ வாதிகள் என்பவர்களின் கருத்துக்கள் முக்கியம் பெறுகின்றது. அந்தவகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசறிவியற் கற்கையானது பல்வேறு கோட்பாடுகளுடனும் அவற்றுடன் தொடர்புபட்ட நடப்பு விவாகாரங்களிலுமே கூடுதலான கவனம் செலுத்தும் (Concentration on theories and practice) பண்பு கொண்டிருத்தல் இயல்பான தொன்றாகும்."

அரசறிவியலில் ஆய்வினூடாக பல்வேறுபட்ட கண்டுபிடிப்புக்கள், புத்தாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக கிரேக்க காலம் தொட்டு இன்று வரைக்கும் பல்வேறுபட்ட ஆய்வுகள், ஆய்வு நுட்பங்களினூடாக அரசறிவியல் கற்கைநெறியானது வளர்ச்சியடைந்து வந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

அரசறிவியலானது பரந்த விடயப்பரப்புக்களை உள்ளடக்கி யுள்ளதால் அதன் ஆய்வு முறைகள் பலவற்றையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இவ் ஆய்வு முறைகள் நீண்டகால வரலாற்றைக் கொண்டு வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சியில் இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட விருத்தி முக்கியமானதாகும். இருபதாம் நூற்றாண்டிலேயே அரசிறிவியல் சுயாதீன அறிவியல் கற்கை ஒன்றாக தன்னை அடையாளப்படுத்தியது. அதே போன்று அரசறிவியலில் ஆய்வு முறைகளாக இன்று நாங்கள் கருதுகின்றவைகளில் பெரும்பாலானவை இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சிடைந்தவைகளாகும். அரசியல் விஞ்ஞானத்தினை விளங்கிக் கொள்வதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல ஆய்வு முறைகள் அல்லது அணுகுமுறைகள் காணப்படுகின்றன. (Eg:- வரலாற்று அணுகுமுறை, தத்துவார்த்த அணுகுமுறை)

அந்தவகையில் முதலாவதாக ஆய்வு முறைகள் அல்லது அணுகுமுறைகள் அரசறிவியல் பாடப்பரப்பில் பல்வேறு புதிய விடயங்கள் உட்புகுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். அரசறிவியல் ஒரு சமூக விஞ்ஞானமாக கருதப்படுகின்றது. சமூக வாழ்க்கையில் அரசியலும் ஒரு தவிர்க்க முடியாத செயற்பாடாகும். அதனால் அரசியல் நடத்தைகள் மற்றும் நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்வது அரசியல். முன்பு அதனை அரசியல் என்று பொதுவாகக் கூறினார்கள். இன்று பலவகையான அறிவியல் கண்ணோட்டங்கள் ஆய்வு முறைகள் என்பன வளர்ச்சியடைந்துள்ள நிலையில் அதனை அரசறிவியல் எனக் கூறுகின்றோம் இதற்கு ஆய்வே அடிப்படைக் காரணியாக அமைந்துள்ளது. உதாரணமாக அரிஸ்ரோட்டில் அரசு பற்றிய ஆய்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசறிவியல் என குறிப்பிடுகின்றார். 15 ஆம் நூற்றாண்டிற்கு பின்பு மாக்கியவல்லியின் புதிய ஆய்வின் வெளிப்பாடாக அரசறிவியல் அதிகாரம் பற்றிய கற்கையாக மாற்றமடைந்தது. 20 ஆம் நூற்றாண்டில் ஜனநாயக, சோசலிச, பாஸிச அரசு முறைமைகளின் அபிவிருத்தியால் அரசாங்கம் பற்றிய புதிய கருத்துக்கள் பரிணமிக்க தொடங்கியது. இதனால் ஜனாதிபதி அரசாங்க முறை, பாராளுமன்ற அரசாங்க முறைமை என்ற புதிய அரசாங்க முறைமை தோன்றியதுடன் இவற்றை சிறப்பிக்க அரசியல் கட்சி முறைகள், பிரதிநிதித்துவ முறைகள், அமுக்கக் குழுக்கள் என்பவற்றுடன் தொடர்பான கற்கையாக பரிணமித்துள்ளது. 21 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் நடத்தை வாத அணுகுமுறையின் தாக்கத்தால் அரசியல் உயர்குழாம், அரசியல் கலாசாரம், அரசியல் வன்முறை என்கின்ற புதிய சிந்தனைகளும் இடம் பெறுவதுடன் இன்று கொள்கைகளை வகுத்தல், நடைமுறைப்படுத்தல், மோதல், முரண்பாட்டு முகாமைத்துவம் போன்ற புதிய விடயங்களும் அரசறிவியலில் உள்வாங்கப்பட்டுள்ளது.

அரசறிவியலில் ஆய்வின் முக்கியத்துவமாக பல்வேறுபட்ட அரசியல் சித்தாந்தங்கள் அல்லது கோட்பாடுகள் தோற்றம் பெற்றன என்பதனைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். உதாரணமாக அரசின் தோற்றம், வளர்ச்சி தெடர்பாக ஆய்வினை மேற்கொண்ட அறிஞர்கள் தெய்வீக உரிமைக் கோட்பாடு, சமூக ஒப்பந்தக் கோட்பாடு, பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு போன்றவற்றினை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறன ஆய்வின் வெளிப்பாடாக அரசு பற்றிய புரிதலை ஏற்படுத்தக் கூடியது இலகுவானதாகக் காணப்படுகின்றது.

எனினும் ஒரு எண்ணக்கரு தொடர்பாக பல்வேறு கோட்பாடுகளானது அரசறிவியலில் தோன்றுவதால் அது சிக்கல் தன்மையினை ஏற்படுத்துவதாகவும் விளங்கிக் கொள்வதில் கடினத்தன்மையினையும் ஏற்படுத்தி விடுகின்றது என்பது இவ்விடத்தில் குறிப்பிடப்பட வேண்டியது அவசியமானதாகும்.

மூன்றாவதாக அரசறிவியலில் ஆய்வின் முக்கியத்துவமாக உள்ளக வெளியக அரசாங்க முறைபற்றிய ஒரு தெளிவினை ஏற்படுத்தியது குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒன்றாகும். ஒப்பீட்டு அணுகுமுறையை முதன் முதலில் பயன்படுத்தியவர் அரிஸ்ரோட்டில் ஆவார். இவர் அரசியல் என்ற நூலின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

158 நாடுகளின் அரசியல் யாப்புக்களினை ஒப்பீடு செய்து சிறந்த அரசாங்க முறைமை தொடர்பாக தனது கருத்துக்களை முன்வைத்தார். அந்தவரிசையில் இன்று பிரைஸ் பிரபு, மொண்டஸ்கியூ போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார். அரசறிவியலில் ஒப்பீட்டு ஆய்வு முறையின் ஊடாக ஒப்பீட்டு அரசியல் என்கின்ற கற்கை நெறியானது தோன்றி இன்று அரசியல் மற்றும் அரசாங்கம் என்கின்ற கற்கை நெறியாக வளர்ச்சியடைந்துள்ளது.

அரசறிவியலின் முக்கிய கூறுகளான சனத்தொகை வளர்ச்சி, அசைவுகள், வாக்களித்தலும் பொது அபிப்பிராயமும், கைத்தொழில் உற்பத்தி, வெளிநாட்டு வர்த்தகம், வரியும் நிதியும் போன்றவை தொடர்பிலான ஓரளவு உறுதியான எதிர்வு கூறலை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஆய்வுகள் முக்கியமானதாக காணப்படுகின்றது. உதாரணமாக கணித பாடம் போல அரசியல் விஞ்ஞானத்திலும் தரவுகளைப் பெற்று ஆய்வுகளை மேற்கொள்ள புள்ளிவிபரவியல் ஆய்வுமுறை உதவுகின்றது. மனித நடத்தைகள் காலத்துக்கு காலம் மாற்றமுறக் கூடியது. எனவே எதிர்காலத்தில் சமூக பொருளாதார முறைகளில் ஏற்படும் மாற்றத்தினை மதிப்பிடவும் புள்ளிவிபரவியல் அணுகுமுறை பயன்படுகின்றது. குறிப்பாக தேர்தல் காலங்களில் கட்சிகள் பெற்ற வாக்குகள் புள்ளிவிபரவியல் ஆய்வு முறையினால் கணிக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஐந்தாவதாக அரசறிவியலில் ஆய்வின் முக்கியத்துவங்களாக அரசியல் தலைமைத்துவங்கள் பற்றிய ஆழமான அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுகின்றது என்பது குறிப்பிட்டுக் கூறக் கூடிய ஒன்றாக காணப்படுகின்றது. ஏனெனில் ஆட்சியாளன் என்பவன் ஒரு நாட்டின் ஜனநாயகத்திற்கும் அபிவிருத்திக்கும் எதிர்கால ஆட்சியாளர்களுக்குமான முன்னோடியாக காணப்படுபவன் ஆவான். அந்த வகையில் நடத்தைவாத ஆய்வுமுறையானது அரசியலில் ஈடுபடும் மனிதர்களினதும் மனிதக் குழுக்களினதும் அரசியல் நடத்தையை ஆராய்ந்து அதனூடாக அரசியலை விளங்கிக் கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்துகின்றது.

ஆறாவதாக, அரசறிவியலில் ஆய்வின் முக்கியத்துவங்களாக, நாடுகளின் அரசியல் கலாசாரத்தினை விளங்கிக் கொள்வதற்கும், பல புதிய கற்கை நெறிகள் தோற்றம் பெறுவதற்கும் உதவிபுரிவனவாக காணப்படுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். உதாரணமாக சமூகவியல் ஆய்வுமுறையானது "சமூக நிறுவனங்களையும், தனி மனிதர்களையும், சமூகக் குழுக்களையும் முதன்மைப்படுத்தி ஆய்வு செய்யும் முறையே" ஆகும். இவ் அணுகுமுறையில் பங்குபற்றல் சோதனை, நேரடி அவதானிப்பு, நேர்முகம், கேள்விக் கொத்து, விவகார ஆய்வு போன்ற ஆய்வு நுட்ப முறைகள் பயன்டுத்தப்படுகின்றன. இவ்வாறன நுட்ப முறைகளினால் ஒரு நாட்டின் அரசியல் கலாசாரத்தினை இலகுவாக கட்டியெழுப்புவதற்கும் அதனை விளக்கிக் கொள்வதற்கும் உதவியளிக்கின்றது. அத்தோடு "அரசியல் சமூகவியல் என்னும் புதிய கற்கைநெறி தோற்றம் பெறுவதற்கும் இவ் ஆய்வு முறையானது உதவிபுரிவதாக காணப்படுகின்றது."

ஏழாவதாக மனதன் ஓர் அரசியல் பிராணி என்றவகையில் அரசிலே பிறந்து அரசிலே இறக்கிறான். அதாவது அரசு என்பது யாது? அரசாங்கத்தை எவ்விதம் தெரிவு செய்வது, அரசாங்கத்தின் சொல்லையும் செயலையும் மதிப்பிடல், பௌத்தறிவுடன் இறுதித் தீர்மானங்களை மேற்கொள்ளல் போன்றவற்றிற்கு ஆய்வானது முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசறிவியலில் காணப்படுகின்றது.

எட்டாவதாக, மிக அண்மைக் காலங்களில் பொது அமைப்புக் கோட்பாடானது முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு முறை உயிரியல் விஞ்ஞானத்திலிருந்து சமூக விஞ்ஞானத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தக் கோட்பாட்டினை டேவிட் ஈஸ்டன் முன்வைத்தார். இவ் ஆய்வு முறையினூடாக அரசறிவியலில் அரசியல் நிறுவனங்களின் கட்டமைப்பு, பணிகள், அதன் அதிகாரம் என்பன தொடர்பாக விளங்கிக் கொள்ளலாம்.

இவ்வாறாக அரசறிவியல் பரப்பில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட ஆய்வு முறைகள் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்தவையாக காணப்படுகின்றன. எனவே தொகுத்து நோக்குகின்ற போது அரசறிவியலை இலகுவாகக் கற்றுக் கொள்வதற்காகும். அரசறிவியலில் பல்வேறுபட்ட விடயப்பரப்புக்களை உள்வாங்கிக் கொள்வதற்கும், பல்வேறுபட்ட கோட்பாடுகள் உருவாக்கம் பெறுவதற்கும், அரசியல் தொடர்பாக உறுதியான எதிர்வு கூறலை முன்வைப்பதற்கும், புதிய கற்கைநெறிகள் தோற்றம் பெறுவதற்கும், வரலாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியான பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் ஆய்வானது முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

எனவே இது போன்ற பல்வேறு முக்கியத்துவம் மிக்கதாக ஆய்வு காணப்பட்டாலும் ஆய்வொன்றின் உரிய நுட்பங்கள் கடைப்பிடிக்கும் போதே ஆய்வின் உண்மையான இலக்கு, பயன்பாடு, முழுத்தன்மை ஆகியன எய்தப்படும். தவறும் பட்சத்தில் அதனை நாம் முழுமையானதோர் ஆய்வாகக் கொள்ள முடியாத போக்கு காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அரசறிவியலானது ஒரு சமூக விஞ்ஞான கற்கை நெறி என்பதனால் இதனை ஆய்வுக்கு உட்படுத்துதல் என்பது சிரமமானதாகவும் காணப்படுகின்றது.

அடுத்ததாக இங்கு ஆய்வு முறைமைக்கும் (Research Methods) ஆய்வு முறையியலுக்கும் (Research Methodology) இடையிலான வேறுபாடுகளை ஆராய்வது பொருத்தமுடையதாக இருக்கும். ஆய்வில் பயன்படுத்தப்படும் இரண்டு முக்கிய சொற்பதங்களாக ஆய்வுமுறைமை மற்றும் ஆய்வு முறையியலானது காணப்படுகின்றது. மேலும் ஆய்வின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான இரு வேறுபட்ட வழிமுறைகளாகவும் அடையாளப்படுத்தப்பட முடியும். ஆய்வு முறைமை மற்றும் ஆய்வு முறையியலானது உச்சரிப்பின் தன்மையில் ஒத்த ஒலியமைப்பினைக் கொண்டு காணப்படினும் அவை இரண்டிற்குமிடையில் தனித்துவமான வரையறைகள் மற்றும் இயல்புகளைக் கொண்டு காணப்படுகின்றது.

ஆய்வு முறைமை என்பது ஆய்வு சார்ந்து தகவல்களைத் திரட்டுதல் அல்லது தரவுகளைத் திரட்டுதல், தொகுத்தல் அது தொடர்பிலான நடைமுறை உபாயங்களையும் வழிமுறைகளையும் கண்டறிதல் அல்லது பிரயோகப்படுத்துதல் ஆகும். அதாவது தரவுகளை எவ்வாறு விபரித்தல் அல்லது விளக்குதல் அல்லது தெளிவுபடுத்தல் என்பதும் ஆய்வு முறைமைக்குள் உட்படுத்தப்படும். ஆனால் பெருமளவிற்கு ஆய்வு முறைமை ஆராய்ச்சியின் முன்னாயத்தத்திற்கான செயல் வடிவத்தின் முழுமையினை வெளிப்படுத்ததுவதோடு அதன் உள்ளடக்கம் குறிப்பிட்ட விடயத்தின் விபரணமாகவும் பகுதியளவிலான திட்டமிடலாகவும் அமைந்திருக்கும்.

இதனை ஆங்கிலத்தில் ஆய்வு அறிக்கை (Research Report) எனப்படுகின்றது. அத்தகைய ஆய்வு அறிக்கையில் முன்வைக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து அம்சமும் சரியானவையாக அமையும் என்பது அல்லது முழுமையானதாக விளங்கும் என்பது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அதாவது ஆய்வு அறிக்கையின் பலவீனங்கள் இருக்கின்றன. அத்தகைய பலவீனங்களை நீக்கிவிட்டு புதியவற்றை உள்வாங்கும் செயன்முறை என்பது காணப்படும். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் முடிவுகள் பலமானதாகவோ பலவீனமானதாகவோ அமையும் போது அதற்கான நியாயப்பாடுகள் உள்வாங்கப்படும்.

ஆய்வு முறையியல் என்பது அறிவாராய்ச்சி இயல் என்றும் அல்லது அறிவுக் கோட்பாடு (Theory of Knowligy) எனவும் அழைக்கப்படுகின்றது. அதாவது அறிவு ஆராய்ச்சியல் என்பதை முறைகள் பற்றிய போட்பாட்டு அனுமானங்களையும் தத்துவார்த்த அல்லது மெய்யியல் அடிப்படைகளையும் ஆராயும் தன்மையினை முறையியல் என அழைத்துக் கொள்ளலாம்.

ஆய்வு முறையியல் அறிவுக் கோட்பாட்டை உள்ளடக்கிய தனித்துவமான அம்சங்களின் பிரதிபலிப்புக்களோடு அறிவின் உற்பத்தியை சாத்தியப்படுத்துகின்றது. அறிவின் உற்பத்தி அறிவுக் கோட்பாட்டின் துணையுடன் அல்லது அறிவு ஆராய்ச்சியின் துணையுடன் நியாயப்படுத்துதலை உருவாக்கின்றது. இங்கு அறிவுக் கோட்பாடு அல்லது அறிவாராய்ச்சி என்பது மெய்யியல் சார்ந்த எண்ணங்களையும் பிரச்சினைகளையும் பரிசீலிப்பதாக விளங்குகின்றது. இதன் அடிப்படையில் அறிவு ஆராய்ச்சி அல்லது அறிவியல் கோட்பாடு பின்வரும் விடயங்களை ஆராய்கின்ற மெய்யியல் அல்லது தத்துவவியல் துறையாக விளங்குகின்றது. அதாவது, உலகை பற்றிய அறிவுக்கான வாயில்களை ஆராய்தல், அத்தகைய உலகைப் பற்றிய அறிவுக்கான முன்வைக்கப்படும் கருத்தியல்களை உறுதிசெய்தல், ஆராத பூர்வமான உண்மை மற்றும் அறிவு என்பவற்றின் அடிப்படையை தேடுதல், அறிவுக்கு புறநிலைத் தன்மை உள்ளதா என்பதை தேடுதல், அத்தகைய அறிவுக்கான அகவயப்பட்ட எண்ணங்களை விவாதித்தல் போன்றவைகளாகும்.

ஆய்வு முறையியலின் படி தரவுகள் இரு பரிமாணங்களிலும் திரட்டப்படுகின்றது. அதாவது அளவு ரீதியான தரவுப் பரிமாணம், பண்பு ரீதியான தரவுப் பரிமானம் அவைகளாகும். இத்தகைய அளவு, பண்பு சார்ந்த தகவல்களைத் திரட்டும் போது ஆய்வாளன் தனது தெரிவை தனது எண்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலும், அறிவு அடிப்படையிலும், விருப்பு அடிப்படையிலும் மேற்கொள்வதாக இருத்தல் வேண்டும். இவ்வாறாக வரையறைகளினடிப்படையில் ஆய்வு முறைக்கும் ஆய்வு முறையியலுக்கும் இடையிலான தெளிவான வேறுபாடு உள்ளது என்பதனை விளங்கிக் கொள்ள முடிகின்றது. அவற்றினை விரிவாக நோக்குவோம்.

முதலாவதாக ஆய்வு முறை என்பது ஆராய்ச்சியை மேற்கொள்வதாக ஆராய்ச்சியாளன் பயன்படுத்தும் செயல்முறை அல்லது நுட்பம் ஆகும். மறுபுறம் ஆய்வு முறையியல் என்பது ஆய்வு சிக்கல்களைத் தீர்க்க அறிவியல் ரீதியாக பயன்படுத்தப்படும் முறைகளின் அமைப்பாகும்.

இரண்டாவதாக, ஆய்வு முறையானது (Research Method) பரிசோதனை, சோதனை, ஆய்வுகள், நேர்காணல்கள் போன்றவற்றை மேற்கொள்வதில் அக்கறை கொண்டுள்ளது. ஆய்வு முறையியலானது (Research Methodology) பரிசோதனை, சோதனை அல்லது கணக்கெடுப்பின் செயற்திறனில் பயன்படுத்தக் கூடிய பல்வேறு நுட்பங்களைக் கற்றுக் கொள்வதில் அக்கறை கொண்டுள்ளது.

மூன்றாவதாக, ஆய்வு முறைக்கு எடுத்துக்காட்டாக ஆய்வுகள், பரிசோதனைகள், அவதானிப்புக்கள், நேர்காணல்கள் ஆகியவை அடங்கும். ஆனால் ஆய்வு முறையியலுக்கு எடுத்துக்காட்டாக பண்பு, அளவு மற்றும் கலப்பு முறைகள் அடங்கும்.

நான்காவதாக, ஆய்வு முறை என்பது ஆராய்ச்சி நுட்பத்தைத் தேர்ந்தெடுப்பதிலும் உருவாக்குவதிலும் தரவைச் சேகரிக்கப் பயன்படுத்தப்படும் நுட்பங்கள் மற்றும் கருவிகளில் கவனம் செலுத்துகின்றது. மாறாக ஆய்வு முறையியல் ஆராய்ச்சியின் ஒட்டுமொத்த மூலோபாயம் மற்றும் கட்டமைப்பில் அக்கறை கொண்டுள்ளது.

ஐந்தாவதாக, ஆய்வு முறையானது சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட வேண்டிய தரவின் வகையைத் தீர்மானிக்கின்றது. மாறாக ஆய்வு முறையியல் பொருத்தமான ஆராய்ச்சி முறைகளைத் தேர்ந்தெடுப்பதில் ஆராய்ச்சியாளருக்கு வழிகாட்டுகிறது.

ஆறாவதாக, ஆய்வு முறைமை பல்வேறு விசாரணை நுட்பங்களை உள்ளடக்கியது. ஆனால் ஆய்வு முறையியலானது நோக்கத்தை அடைவதற்கான முழுமையான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாவதாக, ஆய்வு முறையானது கையில் உள்ள பிரச்சினைக்கான தீர்வைக் கண்டறியும் நோக்கம் கொண்டது. ஆனால் ஆய்வு முறையியலானது தீர்வுகளைக் கண்டறியும் நோக்கில் பொருத்தமான நடைமுறைகளைப் பயன்படுத்த முனைகின்றது.

எட்டாவதாக, ஆய்வு முறையானது ஆராய்ச்சியின் நடைமுறை அம்சங்களுடன் தொடர்புடையது. மறுபுறம் ஆய்வு முறையியலானது ஆராய்ச்சியின் தத்துவார்த்த அம்சங்களுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

ஒன்பதாவதாக, ஆய்வு முறையியலின் நோக்கம் ஆய்வு முறைமையை விட பரந்ததாகும். ஏனெனில் ஆய்வு முறையியலின் ஒரு பகுதியே ஆய்வு முறைமையாகும். அதாவது ஆய்வு முறைமையானது ஆராய்ச்சி முறையியலின் ஒரு துணைக்குழு ஆகும். மாறாக ஆய்வு முறையியல் முழு ஆராய்ச்சி செயல்முறையையும் உள்ளடக்கியது.

பத்தாவதாக, ஆய்வு முறையானது ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்களின் நம்பகத்தன்மை மற்றும் செல்லுபடியை தீர்மானிக்கின்றது. ஆனால் ஆய்வு முறையியலானது ஆராய்ச்சியின் ஒட்டுமொத்த செல்லுபடியாக்கத்தையும் உறுதியையும் தீர்மானிக்கின்றது.

பதினொராவதாக, ஆய்வு முறையானது ஆய்வின் பிற்பகுதியில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் ஆய்வு முறையியல் ஆராய்ச்சி செயல்முறையின் ஆரம்ப கட்டத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

பன்னிரெண்டாவதாக, ஆய்வு முறையானது ஒரு குறிப்பிட்ட ஆராய்ச்சித் திட்டம் அல்லது ஆய்வுக்கு பொருந்தும், மறுபுறம் ஆய்வுமுறையியலானது வெவ்வேறு ஆராய்ச்சி திட்டங்கள் மற்றும் ஆய்வுகள் முழுவதும் பொருந்தும்.

எனவே இவற்றினைத் தொகுத்து நோக்குகின்ற போது ஆய்வு முறையியல் தத்துவார்த்த ரீதியில் முழுமையான ஆய்வுக்கான கட்டமைப்பை குறிப்பதாகும். அத்தகைய கட்டமைப்பு எண்ணக்கருக்களையும் கோட்பாடுகளையும் மையப்படுத்தியிருப்பதோடு ஆய்வின் முழுப்பரப்பினையும் உள்ளடக்கியதாக காணப்படும்.

ஆய்வுமுறையியல் ஆய்வுக்கான வழிமுறையை இயங்கியல் தளத்திலும் வரலாற்றுத்தளத்திலும் அமைக்கப்படுவது போல் அது உள்ளடக்கியிருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கை அலகுகளுக்குள்ளால் அல்லது நெறிக்குள்ளால் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்.

முறையியல் என்பது "ஆய்வின் செயற்றொகுதியை (System) கூட்டு மொத்தமாகக் குறிப்பிடும்." அதாவது முறையியல் ஆய்வினுடைய முழுப்பரப்பினையும் உள்ளடக்கியிருப்பதோடு ஒன்றுக்கு மேற்பட்ட முறைமையின் முழுமையினை பிரதிபலிக்கும். சில சந்தர்ப்பங்களில் ஆய்வின் அளவீட்டுத் தன்மையினையும் பண்புத் தன்மையினையும் கடந்து முழுமையினை பிரதிபலிக்கும் பரப்பெல்லையை தாங்கியிருப்பதோடு அதன் அளவு மற்றும் பண்புக் கூறுகளின் தனித்துவங்களையும் கலப்பையும் கலப்பு முறைகளையும் உள்ளடக்கியிருக்கின்றது. ஆய்வின் முழு வளர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதோடு கருதுகோள் அல்லது ஆய்வுப் பிரச்சினைகள் சார்ந்து முன்வைக்கப்படும் உள்ளடக்கங்களை மெய்ப்பிப்பதாகவும் அல்லது நிராகரிப்பதாகவும் ஆய்வு முறையியல் காணப்படுகின்றது.

எல்லா ஆய்வுகளும் முறைமைக்கு ஊடாக அல்லது புதிய தேடலின் ஆரம்பத்தை அதன் வளர்ச்சிக்கான பரிந்துரைகளையும் பிரதிபலிக்கக் கூடியதாக அமைகின்றது.

ஆய்வு முறை அல்லது முறைமை என்பது தவல்களை திரட்டுவது அல்லது சேகரிப்பது அவற்றை தொகுப்பது அவ்வாறு தொகுக்கின்ற போது பிரயோகிக்கப்படுகின்ற நுட்பங்களை விபரிப்பது என்ற சமன்பாட்டை பிரதிபலிக்கும். ஆய்வு அறிக்கை இடல் முறைமைக்கு ஊடாக சாத்தியப்படுத்தப்படும். அது ஒரு பகுதியளவான தொகுப்பாக அமையும்.

ஒன்றுக்கு மேற்பட்ட தொகுப்புக்கள் ஆய்வு முறைமைக்கு உதவுவதாகவும் அமையும். இதனால் சாதாரண குறிப்பிடப்பட்ட பரப்பெல்லைக்குட்பட்ட விடயங்களுக்கான தொகுப்பாக ஆய்வு முறைமை புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

எனவே இவ்வாறாக ஆய்வு முறைமைக்கும் ஆய்வு முறையியலுக்கும் இடையிலான தெளிவான வேறுபாடுகளானது காணப்படுகின்றது. எனினும் அவற்றிற்கிடையே சில ஒத்த அம்சங்கள் பிரதிபலிப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. அதாவது, ஆய்வு முறை மற்றும் முறையியல் ஆகிய இரண்டும் ஆராய்ச்சி செயல்முறையின் ஒருங்கிணைந்த கூறுகளாகும், இவை பல்வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளில் அறிவு மற்றும் புரிதலை உருவாக்க பங்களிக்கின்றன, இவை இரண்டும் பொருத்தமான நுட்பங்கள் மற்றும் கருவிகளின் தேர்வு மற்றும் பயன்பாட்டை உள்ளடக்கியது, இவை ஆராய்ச்சி நடைமுறைகளின் முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் பங்களிக்கின்றன போன்றவற்றினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

எனவே முடிவாக தொகுத்து நோக்குகின்ற போது எது எவ்வாறாக காணப்படினும் ஆய்வு முறைமைக்கும் ஆய்வு முறையியலுக்கு மிடையே பல்வேறுபட்ட வேற்றுமைகள் காணப்படினும் ஆராய்ச்சி செயல் முறையில் இணைக்கப்பட்டதாகவும் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இன்றியமையாததாகவும் காணப்படுகின்றது என்பதே நிதர்சனம் என்பது என்னுடைய வாதம் ஆகும்.

ஆய்வானது இன்று அரசறிவியல் துறையில் மாத்திரமன்றி எல்லாத்துறைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஒன்றாக காணப்படுகின்றது. ஆய்வாளர் தேர்ந்தெடுத்துக் கொண்ட தலைப்பிற்கு ஏற்ப அவர் எந்த ஆய்வு முறை மற்றும் முறையியலை பின்பற்றுவது என்பது அமையும். ஆய்வு சிறப்பாக அமைவதென்பது நம்முடைய உழைப்பினால் மட்டும் அமையாது. ஆய்வு முறை மற்றும் முறையியல்களை பழுதற அறிந்து கொண்டு கவனமாகப் பின்பற்றுவதன் மூலமாகத் தான் அமையும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் அரசறிவியலில் அல்லது ஏனைய துறைகளில் ஆய்வுகளை மேற்கொள்கின்ற போது எழுந்தமானதாக இருக்கக் கூடாது. அதன் முடிவுகள் உயர்மட்ட சிந்தனையை பிரதிபலிப்பதாகவும் நடைமுறை சார்ந்த அமுலாக்கல்கள் ஏற்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும் என்பதும் இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒரு விடயமாகும்.

எனவே தினசரி வாழ்விலிருந்து குறிப்பாக மாப்பிள்ளை பார்ப்பதிலிருந்து விண்வெளி நடைமுறைகள் வரை ஆய்வின் கண்டுபிடிப்புக்களே ஆகும். இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஆய்வாளன், நான் மேற்குறிப்பிட்டவாறு ஆய்வு முறைமை, ஆய்வு முறையியல்கள், ஆய்வு நெறிமுறைகள் என்பவற்றைக் கற்பது என்பது அவசியமானதாகும். இவற்றை கற்றுத்தேர்ந்த ஆய்வாளன் ஒருவனாலேயே சிறந்த கண்டுபிடிப்புக்கள், புதுமைகளை தோற்றுவிக்க முடியும் என்பது என்னுடைய கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


சண்முகம்.ஆ, சித்திரபுத்திரன்.எச், (2005), "ஆய்வு முறையியல்", அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர்.

தமிழண்ணல், இலக்குமனன்.எஸ்.எம், (2014), "ஆய்வியல் அறிமுகம்", செல்லப்பா பதிப்பகம்.

கெங்காதரன், லிங்கேசியா, (2019), "ஆய்வு முறையியல்", குமரன் புத்தக இல்லம்.

நந்தகுமார்.வை, (2008), "ஆய்வு முறையியல் - முறைகளும் நுட்பங்களும்", யுனி ஆர்ட்ஸ், கொழும்பு.

இரகுநாதன்.க, (2009), "ஆய்வு நுட்பங்களுக்கான ஒரு கையேடு", அரசறிவியல் ஒன்றியம், அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யோதிலிங்கம்.அ.சி, (2016), "அரசறிவியல் ஓர் அறிமுகம்", குமரன் புத்தக இல்லம்.

ஜெயராசா.சபா, (2017), "ஆய்வு முறையியல்", அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர்.

பஞ்சாங்கம்.க, (2017), "ஆய்வு நெறிமுறைகள்", அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர்.

சதாசிவம்.ஆ, (2020), "ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை", சதாசிவம் பதிப்பகம்.

தமிழண்ணல், இலக்குமணன்.சு.மா, மோகன்.இரா, (1979), "ஆய்வியல் வழிகாட்டி", ஏரக வெளியீடு.

பொன்னுசாமி.மு, (1982), "ஆராய்ச்சி முறையியல் ஓர் அறிமுகம்", கலா பதிப்பகம், ளோயம்புத்தூர்.

குணரத்தினம்.வே, (2009), "அரசியல் விஞ்ஞான ஆய்வில் அணுகுமுறைகள்", குமரன் புத்தக இல்லம்.

கணேசன்.N.S, (2002), "ஆய்வின் கோட்பாடுகளும் செயல்முறைகளும்", பயோனியர் புக் சர்வீசஸ், சென்னை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுயதிறன் எய்தல் அல்லது தன்னிறைவு எய்தல் மற்றும் உளவியல் தொடர்பான ஆரோக்கியமான நபரின் குணாதிசயங்கள் பற்றி மாஸ்லோ மற்றும் ரோஜர்ஸ் நோக்குகளை ஒப்பிடுக.**

உலவியலில் பல்வேறு விதமான கோட்பாடுகள் எழுந்தன. அதில் ஒன்று மனிதாயக்கோட்பாடு ஆகும். இவ் மனிதாயக் கொள்கையானது 1960களில் உருவாக்கப்பட்டது ஆகும். இவ் மனிதாயக் கொள்கையானது அடிப்படையில் தனிநபரின் வளர்ச்சியைப் பற்றியது. 1970 களில் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாக இருந்தது. மனித நேயக் கோட்பாடு தனி நபரின் மீது மிகவும் அதகமான கவனம் செலுத்துகின்ற அதே வேளையில் சமூகத்திற்கு சாதகமான பங்களிப்பினை செய்வதற்கு நன்கு வளர்ந்த, வெற்றிகரமான நபர்கள் சிறந்த இடத்தில் வைக்கப்படுகின்றார்கள் என்கின்ற நம்பிக்கையினடிப்படையில் இது அமைந்துள்ளது. மனிதாயக் கோட்பாட்டாளர்களாக மாஸ்லோ, ரோஜர்ஸ் முக்கியமானவர்கள் ஆவார்.

சுயதிறன் எய்தல் அல்லது தன்னிறைவு எய்தல் என்பது மனிதநேய உளவியல் கோட்பாட்டிலிருந்து பெறப்பட்ட ஒரு கருத்தைக் குறிக்கின்றது. அந்த வகையில் நாம் இங்கு சுயதிறன் எய்தல் தொடர்பாக மனித நேயக் கொள்கையாளர்களான மாஸ்லோ மற்றும் ரோஜர்ஸின் கருத்துக்களினை ஒப்பிட்டு நோக்குவோம். முதலாவதாக சுயதிறன் எய்தல் (self Actualization) தொடர்பான மாஸ்லோவின் நோக்குகளை ஆராய்வோம்.

மாஸ்லோவின் நோக்குப்படி சுயதிறன் எய்தல் என்பது மிக உயர்ந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஒரு நபரின் வளர்ச்சியைக் குறிக்கின்றது. இவரின் கருத்துப்படி சுயதிறன் எய்தல் என்பது “தேவை” என்கின்ற கருத்தைச் சுற்றியே உருவாகின்றது எனக் கூறினார்.

மாஸ்லோவின் படிநிலை ஒரு நேரடி பிரமிட் ஏறுதலில் சித்தரிக்கப்பட்ட வளர்ச்சியின் நேரடி வடிவத்தை பிரதிபலிக்கின்றது. மேலும் சுயதிறனை எய்கின்ற தனி நபர்கள் சுதந்திரம் மற்றும் நிர்ணயிப்பின் இறுதி முரண்பாட்டில் பிரதிபலிக்கும் இரு வேறுபாடுகளை தீர்க்க முடியும் என்று அவர் கூறுகின்றார். சுயதிறனை எய்தவர்கள் மிகவும் ஆக்கபூர்வமான உளவியல் ரீதியாக வலுவான நபர்கள் என்றும் வாதாடுகிறார்.

மாஸ்லோ சுயதிறன் எய்தல் என்பது உடலியற் தேவை, பாதுகாப்புத் தேவை, சமூகத்தேவை, சுயமரியாதை ஆகியன பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே சுயதிறன் எய்தல் என்பன எட்டப்படுகின்றன என கருதினார். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேவைகள் ஒழுங்கான முறையில் தான் இடம்பெற வேண்டும் என்று கூறமுடியாது. உதாரணமாகக் கூறின் பாரதியார் சாப்பிட உணவு இல்லாமல் இருந்த போதிலும் அவர் சுயதிறனை அடைந்தார்.

இவ்வாறாக மாஸ்லோவின் கருத்துக்களில் விமர்சனங்கள் எழுந்தன. எது எவ்வாறாக இருந்தாலும் மாஸ்லோவின் நோக்கினடிப்படையில் சுயதிறன் எய்தல் என்பது தேவைகளின் (ஒவ்வொரு அதாவது அடிப்படை தேவை, பாதுகாப்புத் தேவை, சமூகத்தேவை, சுயமரியாதை) பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் தான் ஏற்படுவது ஆகும் எனக் குறிப்பிடுகின்றார். இதனாலே இவர் சுய திறன் எய்தல் என்பது முதியவர்களுக்கே ஏற்படும் என்றும் அதிலும் 1% ஆனவர்களுக்கு மாத்திரமே சுயதிறனை எய்கின்றனர் எனவும் கூறியிருந்தார்.

அடுத்ததாக கார்ல் ரோஜர்ஸின் நோக்குப்படி சுயதிறன் எய்தல் என்ற சொல்லாடலை ஆராய்வோம். ஆபிரகாம் மாஸ்லோவின் முக்கிய அனுமானங்களுடன் உடன்பட்டார். இருப்பினும் ரோஜர்ஸ் ஒரு நபர் "வளர" அல்லது சுயதிறன் எய்ய அவர்களுக்கு உண்மையான தன்மை மற்றும் சுய வெளிப்பாடு ஏற்றுக் கொள்வது மற்றும் பச்சாத்தாபம் இவை இல்லாமல் உறவுகள் மற்றும் ஆரோக்கியமான ஆளுமைகள் அவர்கள் விரும்பும் அளவிற்கு வளராது என்று கூறினார்.

கார்ல் ரோஜர்ஸ் ஒரு நபர் சுயதிறனை எய்வதற்கு அவர்கள் ஒத்தநிலையில் இருக்க வேண்டும் என்று நம்பினார். இதன் பொருள் "இலட்சியம் சுயம்" அதாவது அவர்கள் யாராக இருக்க விரும்புகிறார்கள். மற்றும் அவர்களின் உண்மையான நடத்தை (சுய உருவம்) உடன் ஒத்துப் போகும் போது சுயதிறன் எய்தல் நிகழ்கின்றது எனக் கூறினார். எனவே சுயதிறன் எய்தல் தொடர்பாக மாஸ்லோ, ரோஜர்ஸ் நோக்குகள் சற்று வித்தியாசமாக நோக்கின்றனர் என்று தெளிவாகின்றது.

ரோஜர்ஸ் அனைத்து மக்களும் திறமையானவர்கள் என்றும் சுயதிறன் எய்தலினை உள்ளார்ந்த வளர்ச்சியாக மாற்ற வேண்டும் என்று நம்பினார். மறுபுறம் ஆபிரகாம் மாஸ்லோ ஒரு சில நபர்கள் மட்டுமே தங்கள் முழுதிறனை அடைய முயற்சிக்க முடியும் என்று பரிந்துரைக்கின்றார்.

எனினும் ஆபிரகாம் மாஸ்லோவும் கார்ல் ரோஜர்சும் மக்கள் எல்லோரும் சுய திறன் எய்வதற்காக அவர்கள் பாடுபடுகின்றார்கள் என இருவரும் நம்பினார்கள். அவர்கள் சுதந்திரமான விருப்பத்தையும் சுய நிர்ணயத்தையும் வலியுறுத்துகின்றார். ஒவ்வொரு நபரும் தாங்கள் ஆகக் கூடிய சிறந்த நபராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறவே எல்லோரும் விரும்புகின்றனர். என்ற கருத்தினை இருவரும் ஒத்துக் கொள்கின்றனர். ஆகவே சுயதிறன் எய்தல் தொடர்பாக மாஸ்லோ மற்றும் ரோஜர்ஸின் கருத்துக்களை நோக்கினோம்.

அடுத்தாக நாம் இங்கு உளவியல் தொடர்பான ஆரோக்கியமான நபரின் குணாதிசயங்கள் பற்றி மாஸ்லோ மற்றும் ரோஜர்சினின் கருத்துக்களை நோக்குவோம். அந்த வகையில் முதலாவதாக ஆரபிரகாம் மாஸ்லோ உளவியல் தொடர்பாக ஆரோக்கியமான நபரின் குணாதிசயங்கள் பற்றி ஆராய்வோம்.

எல்லோரும் சுயதிறன் எய்தல் திறன் கொண்டவர்கள் ஆவார்கள், சுயதிறன் எய்தல் திறன் கொண்டவர்கள் உளவியல் தொடர்பான ஆரோக்கியமான பண்புகளைக் கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள். அந்த வகையில் உளவியல் தொடர்பான ஆரோக்கியமான தனிநபரின் குணாதிசயங்கள் எவை எவை உள்ளன என்று மாஸ்லோ குறிபிப்பிடுகின்றார் என்று நோக்குவோம்.

ஆரோக்கியமான நபரின் பண்புகளாக அவர்கள் யதார்த்தத்தை திறமையாக உணர்கிறார்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மையை வெறுத்துக் கொள்கின்றார்கள், தங்களையும் மற்றவர்களையும் ஏற்றுக்கொள்ளல், சிந்தனையிலும் செயலிலும் தன்னிச்சையான சுயநலம் அற்றவர்களாக இருப்பார்கள், அசாதாரண நகைச்சுவை உணர்வு கொண்டவர்களாக இருப்பார்கள், வாழ்க்கையை புறநிலையாக பார்க்க வல்லவர், மிகவும் படைப்பாற்றல் மிக்கவர்களாக காணப்படுவார்கள், மனித குலத்தின் நலனுக்காக அக்கறை கொண்டவர்காளாக இருப்பார்கள், அடிப்படை வாழ்க்கை அனுபவத்தை ஆழமாக பாராட்டும் திறன், ஒரு சிலருடன் ஆழ்ந்த திருப்பதிகரமான ஒருவருக்கொருவர் உறவுகளை ஏற்படுத்துவார்கள், உச்ச அனுபவங்களினை கொண்டிருப்பார்கள், தனியுரிமையுடையவர்களாக இருப்பார்கள், ஜனநாக அணுகுமுறைகளுடன் காணப்படுவார்கள், வலுவான தார்மீக அல்லது நெறிமுறை தர நிலைகள் கொண்டவர்களாக இருப்பர். இவ்வாறான குணாதிசயங்களை கொண்டு ஆரோக்கியமான நபர்கள் காணப்படுவதாக மாஸ்லோ கூறுகின்றார்.

அடுத்ததாக கார்ல் ரோஜர்ஸ் உளவியல் தொடர்பாக ஆரோக்கியமான நபரின் குணாதிசங்களை எவை எவை உள்ளன என்று கூறுகிறார் என்பதனை நோக்குவோம். முழுமையாக செயல்படும் நபர்கள் சில குணாதிசயங்களையும் கொண்டிருக்கின்றார்கள், அவை தங்கள் சொந்த உணர்ச்சிகளுடன் ஒத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவும், ஒரு தனிநபராக வளரவேண்டிய அவசியத்தைத் தழுவவும் உதவுகின்றன.

அந்த வகையில் ரோஜர்சின் நோக்குப்படி உளவியல் ரீதியாக தனிநபரிடம் காணப்படும் குணாதிசயங்களாக அனுபவத்திற்கு சிறந்த தன்மை உடையவராக இருப்பார்கள், தற்காப்பு இல்லாமை, அனுபவங்களை துல்லியமாக விளக்கும் திறன்களைக் கொண்டவர்களாக இருப்பார்கள், ஒரு நெகிழ்வான சுய கருத்து மற்றும் அனுபவத்தின் மூலம் மாற்றும் திறன் கொண்டவர்களாக இருப்பார்கள், ஒருவரின் அனுபவங்களை நம்பும் திறன் மற்றும் அந்த அனுபவங்களின் அடிப்படையில் மதிப்புக்களை உருவாக்குதல், நிபந்தனையற்ற சுயமரியாதை உடையவர்களாக இருப்பார்கள், அனுபவங்களை சிதைக்கவோ மறுக்கவோ தேவையில்லை என்கின்ற மனப்பான்மை கொண்டவர்களாக காணப்படுவர், கருத்துக்குத் திறந்திருக்கும் மற்றும் யதார்த்தமான மாற்றங்களைச் செய்ய தயாராக உள்ளது, மற்றவர்களுடன் இணக்கமாக வாழ்கிறார்கள் போன்ற பண்புகளைக் கொண்டவராக காணப்படுகின்றார்கள் என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு கார்ஸ் ரோஜர்சும், ஆபிரகாம் மாஸ்லோ ஆகிய இருவரும் ஆரோக்கியமான நபரின் குணாதிசயங்கள் தொடர்பாக ஆராய்ச்சி செய்துள்ளனர். இவர்கள் இருவரின் கருத்துக்களும் பொதுவாக உடன்பட்டாலும் சற்று முரணான போக்கு உடையதாகவே காணப்படுகின்றது.

கார்ஸ் ரோஜர்ஸ் மற்றும் ஆபிரகாம் மாஸ்லோ ஆகிய இரு மனித நேய கொள்கையாளர்களும் சுயதிறன் எய்தல், ஆரோக்கியமான தனிநபரின் குணாதிசயங்கள் போன்ற எண்ணக்கருக்களினிடையே இரு உளவியலாளர்களிடையேயும் ஒற்றுமையான பண்புகளும் வேற்றுமையான பண்புகளும் அதாவது கருத்துக்களும் காணப்படுகின்றன.

எது எவ்வாறாயினும் மனிதநேயக் கொள்கையானது சமூகத்தின் உண்மையான நிலைப்பாட்டை எடுத்துச் சொல்ல வல்லதாக காணப்படுகின்றது. மேலும் விரிவாகக் கூறின் சுயதிறன் எய்தல் அல்லது தன்னிறைவு எய்தல் வாழ்வின் மிக உச்சகட்டமாகும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

அடுத்ததாக உளவியல் மாணவி என்கின்ற வகையில் எனது கருத்துக்களினையும் கூறவேண்டிய கடப்பாட்டிலும் உள்ளேன். சுயதிறன் எய்தல் என்பது வாழ்வின் மிக உச்சக் கட்டமாக பெறப்படுகின்ற ஒரு முதிர்ச்சி நிலை எனக் கூறலாம் இவ் சுயதிறன் எய்தலினை வாழ்க்கையின் எக்கால கட்டத்திலும் அடைந்து கொள்ளமுடியும் என நான் கருதுகின்றேன். இவ் சுயதிறனை எய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களிடையே நல்ல சூழலில் வசித்து வருபவர்களாகவும் இருத்தல் என்பது அவசியமானதாகும் என நான் கருதுகின்றேன்.

அடுத்ததாக உளவியல் ரீதியாக ஆரோக்கியமான நபர்களின் குணாதிசயங்கள் மிகவும் நல் ஒழுக்கம் பண்புகளுடையதாகவே இருக்கும் என நான் கருதுகின்றேன். ஆகவே மனிதாயக் கொள்கையில் "சுயதிறன் எய்தல்" மற்றும் "ஆரோக்கியமான தனிநபரின் குணாதிசயங்கள்" போன்ற சொல்லாடல்கள் மிகவும் முக்கியமானவையாகவும் வாழ்வியலுடன் தொடர்புடையதாகவும் காணப்படுகின்றன.

எனவே மனிதாயக் கொள்கையாளர்களின் கருத்துக்கள் (மாஸ்லோ, ரோஜர்ஸ்) சற்று முன்னுக்குப் பின் முரணானதாக இருந்தாலும் அவர்கள் கூற முன்வருகின்ற தார்ப்பரியங்கள் முதன்மையானதாகவும் முக்கியமானதாகவும் காணப்படுகின்றன.

### உசாத்துணை நூல்கள்


ஜமாஹீர்.மி.எம், (2002), பொது உளவியல் ஓர் அறிமுகம், ஈஸ்வரன் புத்தகாலயம், கொழும்பு.

சிவானந்தமூர்த்தி.க, (2002), உளவியல் ஓர் அறிமுகம்- I அம்பாள் வெளீட்டகம்.

ஸ்ரவின்.இ, (2015) ஆளுமைக் கொள்கைகள், ஜீவநதி கலையகம். அல்வாய்.

கஜசிந்தன்.க, (2013) உளவியல் குமரன் புத்தக இல்லம், கொழும்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முழுநிலைக்காட்சி வாதிகள் உளவியலிற்கு ஆற்றிய பங்களிப்பினை புலக்காட்சி, அகக்காட்சி தலைப்புக்களின் கீழ் ஆராய்க.**

உளவியல் துறையில் பல உளவியல் சிந்தனை கூடங்கள் தோற்றம் பெற்றன. அந்தவரிசையில் "முழுநிலைக் காட்சிக்கொள்கை" முக்கியம் வாய்ந்த சிந்தனா கூடம் ஆகும். 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆண்டின் அமைப்பு வாதத்திற்கு எதிராக உருவானது தான் கெஸ்ரால்ட் மரபு. கெஸ்ரால்ட் உளவியற் சிந்தனையைத் தொடக்கியவர் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த ஓரன்ஸ்பெலய் (Ehrenfels) என்னும் அறிஞர் ஆவார். பின்பு ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்த மாக்ஸ் வேதிமர் (max Wertheimer) என்பவர் இது தொடர்பான கருத்துக்களை முன்வைத்து முழுநிலைக்காட்சிக் கொள்கையை உருவாக்கினார். அவர் உபயோகப்படுத்திய சொல் கெஸ்ரால்ட் (Gestalt) என்பதாகும். அதன் அர்த்தம் முழுமை எனப் பொருள்படும்.

ஒன்றை நாம் பார்க்கும் போது அல்லது அறிய முற்படும் போது அதன் முழு அங்கங்களையும் அல்லது முழு அமைப்புக்களினையும் பிரித்துப் பார்க்கக்கூடாது அதன் முழுமையையும் நாம் சேர்த்துப் பார்க்கும் போது தான் எமக்கு அர்த்தமும் அப் பொருளும் புலப்படும் என்கிறார்கள்.

கெஸ்ரால்ட் கொள்கையின்படி ஒரு பொருளை அறிய அதனை முழுமையாகவே அதனை பரிசோதனை செய்து அதன் அடிப்படை உண்மைகளை அறிய வேண்டும் என்கிறார்கள். ஆனால் இருத்தல் கொள்கையினருக்கும் நடத்தை கொள்கையினருக்கும் அனுபவத்தையும் நடத்தையையும் அறிய அவைகளை பகுதி பகுதியாக பாகுபடுத்தி அறிய வேண்டும் என்கின்றனர். ஆனால் கொஸ்ரால்ட் கொள்கையினர் இது தவறு என பரிசோதனை மூலம் விளக்கமளித்துள்ளனர். உதாரணமாக குறிப்பிட்டால் ஒரு இசையின் நாதத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து அதனை புரிய முடியாது மேலும் அது பகுதிகளாக அமைவதில்லை. இவைகள் ஒன்றாக இருப்பதனாலேயே நம்மால் அதனை ரசிக்க முடிகின்றது என்கின்றனர்.

கொஸ்ரால்ட் கொள்கையினரின் கொள்கையானது வூல்ப்காங் கோலர் (Wolfgang kohler) என்பவரால் பிரபல்யப்படுத்தப்பட்டது. மேலும் முழுநிலைக்காட்சி வாதிகளாக வெர்திமர் (wartheimer 1880-1943), கொ.'.ப்கா (Koffka 1886-1941) கொஹ்லர் (Kohler) போன்றவர்களை குறிப்பிட்டுக் கொள்ளலாம். அந்தவகையில் கெஸ்ரால்ட் வாதிகள் உளவியலுக்கு ஆற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பினை அகக்காட்சி, புலக்காட்சி என்கின்ற எண்ணக்கருக்களின் அடிப்படையில் நோக்குவோம்.

அந்த வகையில் முதலாவதாக கெஸ்ரால்ட் வாதிகள் அல்லது முழுநிலைக் காட்சி வாதிகள் உளவியலுக்கு ஆற்றிய பங்களிப்பினை அகக்காட்சியனடிப்படையில் ஆராய்வோம். கற்றல் என்பது உள்ளத்திலே உருவாக்கப்படும் அகக்காட்சியுடன் இணைந்த செயற்பாடு என்பதனை கொவ்கொ, கோலர், வேதிமர், போன்றவர்கள் ஆய்வு வழியாக சுட்டிக்காட்டினர். இதனால் உளவியல் துறையில் "அகக் காட்சி" என்கின்ற எண்ணக்கருவானது வலுச்சேர்த்துக் கொண்டது.

கற்றல் செயற்பாட்டை தூண்டி துலங்கல் என்ற வாய்ப்பாட்டுக்குள்ளே பொறிமுறையாக உருவாக்கப்படும் வழிமுறையாக இவர்கள் கருதவில்லை. நோக்குடமை, கண்டுபிடிப்பு முனைப்பு, ஆக்கத்திறன் ஓங்கல் முதலியவற்றை உள்ளடக்கிய மலர்ச்சி தொழிற்பாடாகவே கற்றல் குறிப்பிடப்படுகின்றது. கற்போர் சூழமைவை எப்பொழுதும் முழுமையாகவே காட்சி கொள்கின்றனர். பொருத்தமான தொடர்புகளும் இணைப்புக்களும் நுண்மதி பூர்வமாக முன்னெடுக்கப்படுகின்றனவே அன்றி குறிப்பிட்ட தூண்டியை மட்டும் கருத்திலே கொண்டு இயக்கப்படும் செயற்பாடு அன்று எனக் குறிப்பிடுகின்றனர்.

1925 ஆம் ஆண்டிலே கோலர் கற்றல் தொடர்பான "அகக் காட்சி" என்ற எண்ணக்கருவை முன்வைத்தார். கனறி தீவில் 1913ஆம் ஆண்டு முதல் 1917 ஆம் ஆண்டு வரை அவர் சின்பன்சிக் குரங்குகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் பரிசோதனையை நிகழ்த்தினார். அவரது பரிசோதனைகளிலே சுல்தான் என்ற மனிதக் குரங்கு பின்வரும் ஆற்றுகைகளை வெளிப்படுத்தியது.

முதலாவதாகக் கூறின் உயரத்தில் அதற்கு எட்டாது வைக்கப்பட்டிருந்த வாழைப்பழத்தைப் பெற்றுக் கொள்வதற்குரிய பரிசோதனையில் தனது உயரமோ பாய்தலோ அடைய முடியாதவை என்ற நிலையில் திடீரெனத் தோன்றிய அகக்காட்சியினால் பெட்டிகள் ஒன்றன் மேல் மற்றயதை அடுக்கி அதன் மேல் ஏறிப் பழத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாவது ஆற்றுகையாக கூட்டுக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த பழத்தை பெற்றுக் கொள்வதற்குரிய தனித்த ஒருதடியின் நீளம் போதாது என்ற நிலையில் திடீர் திருப்பமாக அகக்காட்சி பெற்று தடிகளை ஒன்றோடு ஒன்று இணைத்துப் பழத்தைப் பெற்றுக் கொண்டது. "அகக்காட்சி"என்பது மின்னல் வெட்டுப் போன்று திடீரெனத் தோன்றும் பளிச்சீடு என்று அவர் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான அகக் காட்சிகள் பின்வரும் காரணிகளிலே தங்கியுள்ளது என கெஸ்ரால்ட் வாதிகள் கூறுகின்றனர். அதாவது அகக்காட்சியானது அனுபவத்தில் தங்கியுள்ளதாக கூறினர். அகக்காட்சி நிலைப்பட்ட தீர்வுகளை எட்டுவதற்கு அனுபவம் முக்கியமானது ஆகும். உதாரணமாகக் கூறின் குறியீட்டு மொழி தொடர்பான அனுபவமின்றி ஒரு மாணவரால் நவீன கணிதப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது.

அடுத்தாக நுண்மதி-இவ் நுண்மதி விரைந்து நுண்மதியாற்றல் தொழிற்படும் பொழுது புலக்காட்சி சார்ந்த தீர்வுகளை இலகுவில் எட்ட முடியும்.

அடுத்ததாக கற்றல் சந்தர்ப்பம் குறிப்பிட்ட சூழலை அடிப்படையாகக் கொண்டே அகக் காட்சி நிலைப்பட்ட வினைப்பாடு மேலெழும். பொருத்தமான கற்றல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வாயிலாக கற்றலுக்குரிய அகக் காட்சியைத் தோற்றுவிக்கத் துணை செய்யலாம்.

அடுத்ததாக கூறின் அகக்காட்சியில் செல்வாக்கு செலுத்தும் காரணியாக ஆரம்பநிலை முயற்சியினைக் குறிப்பிடலாம். எளிமையான முயன்று தவறல் செயற்பாடுகளிலிருந்தே பொருண்மை கொண்ட அகக் காட்சி கற்றல் ஆரம்பிக்கின்றது. முயன்று தவறலை ஆரம்ப நிலையிற் கொண்டிருந்தாலும் அச்செயற்பாடு நீடித்துச் செல்லமாட்டாது ஆகும்.

அடுத்த காரணியாக மீளச் செய்தலும் பொதுமையாக்கலும் ஆகும். அகக் காட்சியினால் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப்பெற்றதும், அதைப் போன்றே வேறு சந்தர்ப்பங்களுக்கும் விரிவாக்கம் செய்யப்படும்.

இவ்வாறான காரணிகள் அகக்காட்சியில் செல்வாக்கு செலுத்துவதாக அமைகின்றன. ஆகவே அனுபவத்தை முழுமையாக எடுக்கும் போது அதில் உண்டாகும் அமைப்பை நிர்ணயிப்பது அகக்காட்சியாகும். அமைப்பு என்பது ஒருவரின் அகவய அமைப்பு அல்லது நியாயித்தலைக் கருத்திற் கொள்கிறது.

இவ்வாறாக கெஸ்ரால்ட் வாதிகள் அகக்காட்சி பற்றி தெளிவாக விளக்கமளித்துள்ளனர். "அகக்காட்சி" என்கின்ற விடயப்பரப்பானது உளவியலில் மிக முக்கியமான எண்ணக்கருவாகவும் உளவியலின் வளர்ச்சிக்கு துணைபுரிந்ததாகவும் இருந்தது என்பதனையும் குறிப்பிட வேண்டும். அடுத்ததாக கெஸ்ரால்ட் வாதிகள் உளவியலுக்கு ஆற்றிய பங்களிப்பினை புலக்காட்சியின் தலைப்பின் கீழ் ஆராய்வோம்.

கெஸ்ரால்ட் உளவியலாளர்களின் படி தூண்டிகள் எமது புலனுறுப்புக்களைத் தாக்கும் போது புலனுறுப்புக்களைத் தாக்கும் போது புலனுணர்ச்சியைப் (sensation) பெறுகின்றோம். அப்புலனுணர்ச்சிகளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் ஓர் அமைப்பாக்கி அவற்றைப் பற்றிய விளக்கம் பெறுதலே புலக்காட்சி (Perception) எனப்படும். புலனுணர்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டு அர்த்த பூர்வமாக்குவதற்கு உதவும் படிநிலை புலக்காட்சியாகும். இது ஒரு பொருள் அல்லது ஒரு நிகழ்வு குறித்த முழுமையை உள்ளடக்குவதாகும்.

ஐம்புலன்களால் பெறப்படும் விடயங்களை ஒரே நேரத்தில் இணைப்பதற்கு புலக்காட்சி உதவுகின்றது. முழுமையான ஓர் உண்மையை பல கூறுகளாக பிரித்தறிய முடியாதென்பது கெஸ்ரால்ட் கொள்கையாகும். கணிதப் பாடம் என்பது எண்ணுதல், கூட்டல், கழித்தல் கணிப்புக்கள் என்பவற்றை தனித்தனியாக கற்பதில்லை, அது எண்களின் ஒழுங்கமைப்பைக் கற்பதாகும். இவ்வாறே நாம் ஒரு பாடலைக் கேட்கும் போது வெறும் ஒலிகளை மட்டும் கேட்பதல்ல. ஒலிகளின் ஓர் ஒழுங்கமைப்பையே கேட்கிறோம். இந்த ஒழுங்கமைப்பே புலக் காட்சியாகும் என கெஸ்ரால்ட் வாதிகள் கூறுகின்றனர். ஆகவே புலனுணர்ச்சிகளுக்கு மனித உள்ளம் ஓர் ஒழுங்கான அமைப்பைக் கொடுக்கின்றது என்பதே கெஸ்ரால்ட் வாதமாகும்.

நாம் புலக்காட்சியல் அமைக்கும் தூண்டிகள் உருவமாகவும் ஏனையவை பின்னணியாகவும் காட்சி பெறுகிறோம். ஆனால் பின்னணியாக உள்ளதைப் புலக்காட்சியில் அமைக்கும் போது உருவமாக இருப்பது பின்னணிக்கும் போய் விடும் எனக் கூறினர்.

கெஸ்ரால்ட் வாதியான "வூல்ப்காங் கோலர்" இவரது கருத்துக்கள் அமைப்பியல் வாதக் கொள்கைக்கு எதிராகவே காணப்பட்டது. இவர் கருத்துப்படி உள்ளத்தினை எண்ணம் எனவும் இவ் எண்ணங்கள் ஒரு மனிதனின் புலன் செயற்படுவதனால் அல்லது இயக்கங்களினால் பெறப்பட்டவை எனவும் உள்ளத்தினை எண்ணங்கள் வடிவமைக்கின்றன. அவற்றைப் பகுதி பகுதியாக நோக்காது முழுமையாக நோக்க வேண்டும் என்றும் அவ்வாறு பகுதி பகுதியாக நோக்குவது பிரயோசனமற்றது என்றும் ஒரு பிரச்சினைக்கு அது தீர்வைத் தரமாட்டாது என்றும் குறிப்பிடுகின்றார். புலக்காட்சி என்பது எப்போதும் முழுமையாகக் காண்பதைக் கொண்டிருக்கின்றது என்று அவர்கள் வலியுறுத்தினர். மூளையின் அடிப்படைச் செயல்களில் ஒன்று புலக்காட்சி எல்லையை அமைப்பதும் அமைவுள்ள முழுமைகளைப் புலன்காணுவதுமாகும் கீழே காட்டப்பட்டுள்ள படத்தில் முன்பு காணப்படும் புள்ளிகள் வட்டம் எனப் பிரித்துப் பார்ப்பதை விட அதனைச் சேர்த்துப் பார்த்தல் ஒருமுக அமைப்பினை நாம் அவதானிக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமைக் காட்சியை மனத்தால் உணர்வதற்கும் புலன் உணர்ச்சியோடு ஏற்கனவே நாம் பெற்ற அனுபவங்களும் துணைபுரிகின்றன. முழுமைக்காட்சிக்கோட்பாட்டினர் மனித நடத்தை, புலக்காட்சி அடிப்படையில் அமைகிறதென்றும் புலக்காட்சி பெற சிந்தனையும் அறிவுத்திறனும் அவசியம் என்றும் வாதாடுகின்றனர்.

ஒரே தூண்டல் ஒரே மாதிரியான துலங்களை ஏற்படுத்துவதில்லை என்றும் அவரவர் அனுபவத்திற்கேற்ப துலங்களை வெளிப்படுத்துகின்றனர் எனவும் கூறுகின்றனர். இச்சிந்தனா கூடத்தின் வளர்ச்சியானது காட்சி, கற்றல், பிரச்சினை தீர்த்தல், நோய்நீக்கும் முறை பற்றிய பல துறைகளுக்கு உதவி புரிந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். அந்தவகையில் கெஸ்ரால்ட் உளவியலாளர்களின் கருத்துக்கள் உளவியலின் வளர்ச்சிக்கு துணை புரிந்துள்ளது. அண்மைவிதி, முடித்தல்விதி, ஒப்புமைவிதி, தொடர்ச்சி விதி, நிறைவுவிதி, போன்ற விதிகளை முழுமையான அமைப்பு எவ்வாறு உண்டாகின்றது என்பதனை விளக்குவதற்கு இவ் விதிகளினை முன்வைத்தனர்.

கெஸ்ராஸ்ட் உளவியலாளரின் கருத்துப்படி இவ்வாறான புலக்காட்சி செயல் முறைகளே உளவியலாளரின் மையப்பொருளாக அமைதல் வேண்டும். ஏனெனில் எமது புலக்காட்சி தூண்டலின் அமைப்பிலேயே தங்கியிருக்கின்றன. அவை அமைப்பியல்வாதிகள் கூறியது போன்று ஒன்றைப் பகுப்பாய்வு செய்வதை அல்லது வேறு வடிவங்களாகவோ மூலக்கூறுகளாகவோ பிரிப்பதனால் அதன் உருவம் அல்லது கெஸ்ரால்ட் எனப்படும் முழுமை இழக்கப்படும் என்பதே இம்மரபினர் கருத்தாகும்.

எனவே கெஸ்ரால்ட் வாதிகளின் கோட்பாடானது குறிப்பாக அகக்காட்சி புலக்காட்சி பற்றிய தெளிவான விளக்கமானது உளவியல் வளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரிகின்றது. அதாவது மேலே குறிப்பிட்டதைப்போல காட்சி, கற்றல், பிரச்சினை தீர்த்தல், நோய்தீர்க்கும் முறை பற்றிய பல துறைகளுக்கு உதவி புரிந்துள்ளது இச்சிந்தனா கூடம் ஆகும்.

எனவே முழுநிலைக் காட்சிக் கொள்கை வாதிகள் உளவியல் வளர்ச்சியில் மிகப் பெரிய பங்களிப்பினை ஆற்றியுள்ளனர். அதாவது இவர்கள் அகக்காட்சி, புலக்காட்சி தொடர்பான கருத்துக்களினை முன்வைத்து பரிசோதனைகளையும் மேற்கொண்டனர். பரிசோதனையின் மூலமாக அகக்காட்சி, புலக்காட்சி எண்ணக்கருக்களினை உண்மையானவை என்பதனை நிறுவித்தனர். இதன் விளைவாக அகக்காட்சி புலக்காட்சி என்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு உளவியலானது ஒரு புதிய திசையை நோக்கி வளர்ச்சி பெறத் தொடங்கியது எனலாம். ஆகவே முழுநிலைக் காட்சிக் கொள்கை வாதிகள் உளவியலின் வளர்ச்சியில் பங்களிப்பினை செய்துள்ளனர் என்பது எனக்கு தெளிவாகப் புலப்படுகிறது.

**உசாத்துணை நூல்கள்.**


சிவானந்தமூரத்தி.க, (2002), உளவியல் ஓர் அறிமுகம், அம்பாள் வெளியீட்டகம்.

கஜவிந்தன்.க, (2013), உளவியல், குமரன் புத்தக இல்லம் கொழும்பு.

ஜமாஹிர்.பீ.எம்,(2002), பொது உளவியல், ஓர் அறிமுகம், ஈஸ்வரன் புத்தகாலயம், கொழும்பு.

சிவகுமார்.ம, (2009) அடிப்படை உளவியல், சேம்மடு பதிப்பகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கெப்னரின் மாதிரியை பிரயோகித்து செய்தி அறிக்கையிடலைப் பகுபாய்வு செய்தல்.

### கெப்னரின் மாதிரி பற்றிய அறிமுகம்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் தொடர்பாடல் பற்றி இருந்திருக்கக் கூடிய அறிவு தொடர்பாடலை புரிந்து கொண்ட விதம் ஆகியவை பற்றி மாதிரிகள் உருவாக்கப்பட்டிருந்தன. அந்த வகையில் கெப்னரின் மாதிரியும் முக்கியமானதாகும்.

ஜோர்ச் கெப்னர் தொடர்பாடல் களத்தில் மிக முக்கியமான ஆய்வாளர்களில் ஒருவராக கருதப்படுகிறார். பயிரிடல் கோட்பாடு எனும் வெகுசன ஊடகங்கள் உருவாக்கும் செல்வாக்கினை எடுத்துச் சொல்லும் ஓர் முக்கியமானதான கோட்பாட்டினை முன்வைத்தவராகவும் கெப்னர் அமைவது சிறப்பானது ஆகும்.

அவர் தனது பயிரிடல் கோட்பாட்டினை முன்வைப்பதற்கு முன்னதாக சாதாரண தொடர்பாடல் களத்தில் எவ்வாறு செய்தி ஒன்று வெவ்வேறு படிநிலைகளில் மாற்றமடைந்து, திரிபடைந்து கையாளுவதற்கு எடுத்துச்செல்கின்றது என்பதனை எடுத்துக்காட்டும் விதமாக மாதிரி ஒன்றை முன்வைத்தார். இந்த மாதிரி கெப்னரின் மாதிரி என்று அழைக்கப்பட்டது.




மேற்கொண்ட மாதிரியின் வழியாக சாதாரண மானுட தொடர்பாடலில் செய்திகள் கையாளளுக்கு உட்படும் விதத்தினை ஜோர்ச் கெப்னர் விளக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பட்டிருந்தாலும் பின்னாட்களில் வெகுசன ஊடகங்கள் வழியாக செய்தி அறிக்கையிடல் இடம்பெறும் விதத்தினை விளக்கிச் செல்வதாகவும் கெப்னரின் மாதிரி தொடர்பாடல் அறிஞர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த மாதிரியில் பின்வரும் அம்சங்கள் முக்கியமானவாக காணப்படுகின்றன.

**E - நிகழ்வு**

ஓர் தொடர்பாடல் சூழலில் இடம்பெறுகின்ற நிகழ்வை E குறிக்கின்றது. M -மானுடன் அல்லது பொறி இங்கு M என்பது E என்னும் தொடர்பாடல் நிகழ்வை பார்வையிடுகின்ற மானுடன் அல்லது பொறியை குறித்து நிற்கின்றது. E1-M எனும் மானிடனால் அல்லது பொறியினால் உள்வாங்கப்படும் செய்தியை குறித்து நிற்கிறது. E2-El ஆக உள்வாங்கப்பட்ட செய்தியை M எனும் மானிடன் வெளிப்படுத்தும் செய்தியை E2 குறித்து நிற்கின்றது. இங்கு S என்பது E2 ஆக வெளிப்படுத்தப்படும் செய்தியை காவிச் செல்கின்ற ஊடகமாக அல்லது வழிமுறையாக அமைகின்றது.

SE2-E2 எனும் செய்தியானது S எனும் ஊடகத்தினால் வெளிப்படுத்தப்படும் போது அது SE2 எனும் வடிவத்தில் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. கெப்னர் தரும் விளக்கத்தின்டி ஒரு செய்தியானது ஒரே விளக்கத்தின் படி எல்லோரிடமும் சென்றடையாது வெவ்வேறு விதமாக சென்றடையும் என்பதனை கூறினார்.

**கெப்னரின் மாதிரியை பிரயோகித்து செய்தி அறிக்கையிடலை பகுபாய்வு செய்தல்.**

கெப்னர் ஒரு செய்தி பல்வேறு படிநிலைகளில் மாற்றமடைந்து, திரிபடைந்து, கையாளளுக்கு உட்படுத்தப்படும் என கூறியிருந்தார். இவர் ஒரு தகவல் அல்லது ஒரு செய்தி பரிமாற்றப்படும் போது அவர் அவர் அனுபவங்களுக்கு ஏற்ற விதங்களிலும் பார்வை போக்குளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு அச் செய்தியோ நிகழ்வானது மெருகூட்டப்பட்டு பரிமாற்றப்படும் என கெப்ரனர் கூறியிருந்தார். அதாவது ஒரு செய்தி வெவேறு ஆட்களிடையே வெவ்வேறு விதமாக சென்றடையும் என கூறியிருந்தார்.

இவ்வாறு மானுட தொடர்பாடலில் செய்திகள் கையாளளுக்கு உட்படும் விதத்தை கெப்னர் விளக்க முயற்சித்தாலும் இன்றைய முன்னைய காலங்களில் வெகுஜன ஊடகங்கள் வழியாக செய்தி அறிக்கையிடல் இடம் பெறும் விதத்தினை விளக்கிச் சொல்வதாகவும் காணப்பட்டு வருகின்றது. கெப்னரின் கருத்துப்படி ஒரு செய்தியானது வெவ்வேறு வெகுஜன ஊடகங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறாக அறிக்கையிடப்படுகின்றமையை அவரின் மாதிரியின் அடிப்படையில் கொண்டு நோக்குவோம்.

கெப்னரின் மாதிரியில் E, M, E1, S, E2, SE2, போன்ற அம்சங்கள் முக்கியமானதாக கருதப்படுகின்றன. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு ஓர் வெகுஜன ஊடக செய்தி அறிக்கையிடலை எவ்வாறு கையாளளுக்கு உட்படுகிறது என்பதனை கீழ்வரும் கட்டங்களின் ஊடாக நோக்கலாம்.

**கட்டம்-1**

E எனும் நிஜ வாழ்வில் நடக்கின்ற ஓர் சம்பவத்தை அல்லது நிகழ்வை M எனும் மானுடன் அல்லது பொறி தனக்குள் உருவாக்குகின்றது. இங்கு M என்பது மானுடனாக இருக்கும் பட்சத்தில் அந்த மானுடன் கொண்டிருக்கக்கூடிய அனுபவங்களின் களம், அவனுக்கு இருக்கக்கூடிய உசாத்துனை சட்டகம் ஆகியவற்றின் அடிப்படையில் அந்த மானுடன் E எனும் நிகழ்வை தனது பார்வையின் அடிப்படையில் El ஆக உள்வாங்குகின்றான். இதே போல M என்பது ஒரு பொறியாக அமைகின்ற பட்சத்தில் (CCTV) அது தனது சட்டகத்திற்குள் உட்படும் பார்வை புலத்தை மாத்திரமே பதிவு செய்வதாக காணப்படுகிறது.

இந்த வகையில் E எனும் நிகிழ்வானது E1 ஆக உள்வாங்கப்படுகின்றதை நாங்கள் அவதானிக்கலாம். இது ஒருவர் கொண்டிருக்கக்கூடிய பார்வை, நோக்கு, பரிமாணம் என அழைக்கப்படுகிறது. இங்கு M எனும் மனிதன் அல்லது பொறி E எனும் நிகழ்வினை உள்வாங்கு வதற்கான ஏரினிடைகளை தீரமானிப்பதற்காக 3 அம்சங்கள் காணப்படுகின்றன.

**1. தெரிவு**

இங்கு தெரிவு எனப்படுவது M கொண்டிருக்கக்கூடிய அனுபவம், அறிவுப்புலம், பார்வை கோணம் ஆகியவற்றின் அடிப்படையில் தீரமானிக்கப்படுகிறது. அதேவேளை M கொண்டிருக்கக்கூடிய தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களும் நிலைப்பாடுகளும் குறித்த நிகழ்வை உள்வாங்குவதற்குரிய சூழலை தீர்மானிப்பவையாக அமைகின்றன.

**2.சூழல்**

இங்கு சூழல் எனப்படுவது M அமைந்திருக்கக் கூடிய பௌதீக மற்றும் உளவியல் நிலைப்பாடுகளை எடுத்துக்காட்டுகிறது. குறிப்பாக ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது உளவியல் நிலைப்பாடுகளுக்கு அப்பால் ஓர் விடயத்தை முழுமையாகவோ அல்லது பௌதியாகவோ உள்வாங்கிக் கொள்கின்றான்.

### 3.வாய்ப்பு

குறித்த நிகழ்வொன்றை உள்வாங்குவதற்கு M எனும் மானுடன் இருக்கக்கூடிய வாய்புக்களையும் சந்தரப்பங்களையும் அந்த நிகழ்வை உள்வாங்குவதை தீர்மானிக்கும் 3ஆவது அம்சமாக கருத்தில் கொள்ளப்படலாம். இங்கு வாய்ப்புக்களாக ஒருவருடைய பண்பாடு மற்றும் அவருடைய ஆளுமை செல்வாக்கு செலுத்துவனவாக அமைகின்றன.

இந்த 1ஆவது கட்டத்தை ஓர் ஊடகத்தின் செயற்பாட்டிற்கு ஒப்பிட்டு ஆராய்வோமானால் ஊடகவியலாளரும் குறித்ததொரு பொது நிகழ்வொன்றை செல்வாக்கு செலுத்துவதாக அமைகின்றது. இந்த 1ஆவது கட்டத்தில் ஓர் ஊடகச் சூழலில் ஒவ்வொரு ஊடகவியலாளரும் குறித்ததொரு நிகழ்வொன்றை உள்வாங்கும் போது அவர் அவர் கொண்டிருக்கக்கூடிய அனுபவங்கள், உசாத்துணை சட்டகத்தின் வழியேதான் அவற்றை உள்வாங்குவதையும் அவரைப் போல ஏனைய ஊடகவியலாளரும் தத்தமது அனுபவக்களம் மற்றும் உசாத்துணை சட்டகத்தின் அடிப்படையிலேதான் அந்த நிகழ்வை தமக்கேற்றவாறு உள்வாங்குதலையும் நாங்கள் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

### 2ஆவது கட்டம்

E எனும் நிகழ்வு E2 ஆக உள்வாங்கப்பட்டு அது வெளிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தை பொறுத்து அங்கும் மாற்றம் இடம்பெறுவதை இந்த 2ஆவது கட்டம் விளக்குகின்றது. அந்த வகையில் El ஆக உள் வாங்கப்பட்ட செய்தியை ஒரு நபர் தனது விருப்பு வெறுப்புக்களினடிப்படையில் அல்லது தனது நோக்கங்களின் பேறாக அதனை அவ்வாறே வெளிப்படுத்தாமல் அதில் மாற்றங்கள் செய்து E2 ஆக வெளிப்படுத்துவதை இந்த 2ஆவது கட்டம் எடுத்துக்காட்டுகிறது. இதனை ஒரு ஊடகச் சூழலில் ஒப்பிட்டு ஆராய்வோமானால் குறித்ததொரு நிகழ்வினை அவதானிக்கும் ஒரு ஊடகவியலாளன் தன்னளவில் அர்த்தப்படுத்திக்கொண்டு தன்னுடைய அறிவுகளின டிப்படையில் மாற்றங்களை செய்வதினை அவதானிக்கலாம், இவ்வாறே ஒவ்வொரு ஊடகவியலாளரும் ஒரே பொது நிகழ்வை வெவ்வேறு விதமாக அர்த்தப்படுத்திக் கொண்டு வெவ்வேறு விதமாக வெளிப்படுத்துவதை கெப்னரின் மாதிரி எமக்கு உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ஆவது கட்டம்

E2 ஆக வெளிப்படுத்தப்படும் செய்தி S எனும் ஊடக வழியாக வெளிப்படுத்தப்படுகையில் அது SE2 எனும் வடிவத்தை பெறுகிறது. இங்கு S எனும் ஊடகமானது குறித்த ஊடகவியலாளரின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஊடகமாக இருக்கின்ற பட்சத்தில் அல்லது அவரது செய்தி அறிக்கையிடலுக்கு எவ்வித மாற்றங்களுக்கு உட்படாத பட்சத்தில் SE2 ஆனது E2 க்கு சமனானதாக அமைகின்றது.

ஆனால் S ஊடகம் குறித்த ஊடகவியலாளரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாட்பட்டதாகவும் அது தனக்கென நெறிமுறைகளையும், விதிகளையும் கொண்டிருக்கும் பட்சத்தில் அது தனது நெறிமுறைகள், கட்டுப்பாடுகளினடிப்படையில் E2வாக ஊடகவியலாளரினால் அனுப்பப்படுகின்ற செய்தியை SE2 ஆக செம்மையாக்கம் செய்து வெளிப்படுத்த முயற்ச்சிக்கிறது. இங்கு SE2 ஆனது E2 விற்கு சமனற்றதாக இருப்பதை நாங்கள் அவதானிக்கலாம்.

இந்த வகையில் ஓர் பொது தொடர்பாடல் தளத்தையும் ஊடக தளத்தையும் அங்கு நடைபெறுகின்ற செய்திகள் மீதான மாற்றங்கள் கையாளள்களையும் எடுத்து சொல்வதாக கெப்னரின் மாதிரி அமைகின்றது. இந்த வகையில் ஒரே நிகழ்வானது வெவ்வேறு ஊடகங்களில் வெவ்வேறு விதமாக வெளிப்படுத்தப்படுவதை அதற்கான காரணங்களை நாங்கள் அறிந்து கொள்ள முடியும். இதனடிப்படையில் செய்தி அறிக்கையிடலில் ஊடகவியலாளர்களது அனுபவக்களம், அறிவுப் பின்புலம், விருப்பு வெறுப்புக்கள், அரசியல் நிலைப்பாடுகள், புரிந்து கொள்ளும் பக்குவம், சமூக பண்பாட்டுச் சூழலின் செல்வாக்கு போன்ற பல விடயங்கள் செல்வாக்கு செலுத்துவதையும் காணலாம். ஊடகங்களின் நெறிமுறைகள், கட்டுப்பாடுகள் செய்தி அறிக்கையிடலில் செல்வாக்கு செலுத்துவதையும் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

கெப்னரின் மாதிரி பற்றி மேலே தெளிவாக விளங்கிக்கொண்டோம். இனி சமீப காலங்களில் நாட்டில் இடம்பெற்ற அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நிகழ்வொன்றை தெரிவு செய்து அந்த நிகழ்வு வெவ்வேறு வெகுசன ஊடகங்களில் எவ்விதம் அறிக்கையிடப்பட்டுள்ளது என்பதனை கெப்னரின் மாதிரியின் துணை கொண்டு நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீப காலத்தில் நமது நாட்டில் நிலவிவரும் பேசுபொருளாக M.C.C உடன்படிக்கை காணப்பட்டு வருகிறது. Millennuim challenge corporation எனப்படும் எம். சி. சி உடன்படிக்கை ஊடாக காணி உரிமைகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் தனியார் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள அரச காணிகளுக்கான வாடகையைப் பெற்று அரசாங்கத்தின் வருமானத்தை உயர்த்தும் இயலுமை காணப்படுவதாக இவ் ஒப்பந்தம் காணப்படுகின்றது.

எனினும் இவ் ஒப்பந்தம் தொடர்பாக நமது அரசாங்கத்திற்கு உள்ளேயே ஆதரவான கருத்துக்களும் எதிரான கருத்துக்களும் காணப்படுகின்றன என்பதனை வெகுஜன ஊடகங்கள் வெவ்வேறு விதமான கருத்துக்களை தெரிவிப்பதன் ஊடாக நாங்கள் அறிந்து கொள்ள முடிகிறது.

கெப்னர் தனது மாதிரியில் கூறப்பட்ட எண்ணக்கருவின் படி எம். சி. சி. ஒப்பந்தம் பற்றிய விடயம் வெவ்வேறு வெகுஜன ஊடகங்களிலும் வெவ்வேறு கருத்துக்களை தாங்கியவாறு செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அதாவது ஒவ்வொரு வெகுசன ஊடகங்களும் தங்களுக்கு ஏற்றால் போல மெருகூட்டி, படங்களை பிரசுரித்து, அவர் அவர்கள் வெவ்வேறு போக்கான மொழி நடைகளிலும் செய்திகளை பிரசுரித்தமை கெப்னரின் மாதிரியை அடிப்படையாகக் கொண்ட ஒரு கையாளல் முறையே என குறிப்பிட வேண்டும்.

அந்தவகையில் எம். சி. சி உடன்படிக்கை பற்றிய ஒரு விடயத்தை எவ்வாறு வெகுசன ஊடகங்களில் வெவ்வேறு விதமாக எவ்வாறு செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை நோக்குவோம். எம்.சி.சி உடன்படிக்கையில் நிபந்தனைகளை திருத்துவதற்கு இணக்கம் தெரிவிப்பதாயின் அது தொடர்பான தொழில் சார் ஆய்வின் பின்னர் மக்கள் கலந்துரையாடல்கள், மற்றும் பாராளுமன்ற அனுமதியின்றி நடைமுறைபடுத்தக்கூடாது என உடன்படிக்கை குறித்து மீளாய்வு செய்த குழு பரிந்துரைத்துள்ளது. என News 1st tamil கூறியுள்ளது.

மேலும் 24.06.2020 புதன்கிழமை வலம்புரி பத்திரிகையில் நாட்டின் சுயாதீன தன்மையை விட்டுக்கொடுத்து அமொரிக்காவிற்கு அடிபணியமாட்டோம் என எம்.சி.சி உடன்படிக்கை குறித்து கம்மன்பில கருத்து என்கின்ற தலைப்பில் எம்.சி.சி விவகாரம் குறித்து அமெரிக்கா மீது குற்றச்சாட்டு கூறும் விதத்தில் வலம்புரி பத்திரிகையில் செய்தி அறிக்கையிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.சி.சி உடன்படிக்கை நிராகரிப்பு விடயத்தை அமெரிக்காவிற்கு அடிபணியமாட்டோம் என்ற விதத்தில் இச் செய்திகளின் தலைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது கெப்னரின் மாதிரியில் உள்ள எண்ணக்கருவிற்கு உண்மையில் எடுத்துக்காட்டாக அமைகின்றது. மேலும் இப் பத்திரிகையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

எக்காரணத்தைக் கொண்டும் அமெரிக்காவுடன் எம்.சி.சி ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். இந்த ஒப்பந்தம் இலங்கையில் இறையாண்மைக்கும் தேசிய பாதுகாப்பிற்கும் முரனாணது என்பதனை கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கா பாதுகாப்பு தரப்பினருக்கு தெரிவித்துள்ளார் என பிவிதுறு ஹெல உறுமய அமைப்பின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பொதுதேர்தல் முடிந்தவுடன் அரசாங்கம் அமெரிக்காவுடன் எம்.சி.சி ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதாக எதிர் தரப்பினர் குறிப்பிட்டுக் கொண்டு அரசியல் பிரசாரம் செய்கிறார்கள். மேலும் இலங்கையின் இறையாண்மைக்கு முரணானது என்பதனை ஜனாதிபதி தேர்தல் காலத்தில் தெளிவாக எடுத்துக்காட்டினோம். இதன் பிரகாரம் நாட்டுக்கு எதிராக ஒப்பந்தக்களுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இவ் ஒப்பந்தந்தை இரகசியமான முறையில் கைச்சாத்திட்டுக் கொள்ளும் தேவை கடந்த அரசாங்கத்திற்கு குறிப்பாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் மங்கள சமரவீரருக்கு இருந்தது. மேலும் கைச்சாத்திடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அப்போதைய எதிர்க்கட்சியாக செயற்பட்ட பொதுஜன பெரமுன இடமளிக்கவில்லை எனவும் அவர் கூறியிருந்தார். மேலும் நாட்டின் இறையாண்மைக்கும் தேசிய பாதுகாப்பிற்கும் முரணானது என்பது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதனை ஜனாதிபதி அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு தரப்பினருக்கு எடுத்துரைத்துள்ளார் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் கம்மன்பில அமெரிக்கா ஒரு நாட்டிற்கு நேசக்கரம் நீட்டுகின்றது என்றால் அந்த நாட்டின் அழிவு ஆரம்பம் என்றே கருதமுடியும். ஆகவே எமது நாட்டின் சுயாதீனத்தன்மையை விட்டுக்கொடுத்து அமெரிக்காவிற்கு அடிபணிய வேண்டிய தேவை எமக்கு கிடையாது என அவர் தெரிவித்தார். இவ்வாறான செய்திகளை தாங்கியவாறு 24.06.2020 வலம்புரி பத்திரிகையில் செய்திகள் பிரசுரமாகி இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எம்.சி.சி உடன்படிக்கை கைச்சாத்திடப்படமாட்டாது என்கின்ற செய்தி 26.06.2020 வெள்ளிக்கிழமை அன்று உதயன் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. இந் செய்திப் பத்திரிகையில் இவ் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்கின்ற முடிவில் அரசு மாற்றங்களை ஏற்படுத்தப் போவதில்லை என திட்டவட்டமாக கூறப்பட்டுள்ளது. எம்.சி.சி உடன்படிக்கை தொடர்பாக 27.06.2020 வீரகேசரி பத்திரிகையில் "எம்.சி.சி ஒப்பந்த விவகாரத்தை பொதுத்தேர்தல் பிரசுரமாக்குவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் அந்துரலியே ரத்னதேரர்" அப்படி என்கின்ற ஒரு செய்தி பிரசுரமாகியிருந்தது.

இப் பத்திரிகையில் பொதுத்தேர்தலில் எம்.சி.சி ஒப்பந்தத்தை தேர்தல் பிரச்சாரம் ஆக்குவதை ஆளும் தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஒப்பந்தம் தொடர்பில் அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாட்டை ஜனாதிபதி மற்றும் பிரதமர் நாட்டு மக்களுக்கு பொதுத்தேர்தலுக்கு முன் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவேண்டும் என்றும் கூறினார். மேலும் ஜனாதிபதி தேர்தல் காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் பல பொய்யாக்கப்பட்டுள்ளதை மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர் என்றும் அந்துரலியே ரத்ன தேரர் தெரிவித்திருந்தார்.

கெப்ரன் கூறியவாறு ஒரு நிகழ்வானது (E) குறித்த ஊடகங்களிலிருந்து (S) வெளிவரும் போது வெவ்வேறு விதமாக வெளியிடப்படுகிறது(SE1 SE2 SE3) என கூறியிருந்தார். இவர் கூறியது வெகுஜன ஊடகங்களில் பிரயோகிக்கின்ற தன்மை காணப்படுகின்றது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக எம்.சி.சி உடன்படிக்கையே கண்ணெதிரே உள்ளது.

எம்.சி.சி உடன்படிக்கை குறித்து அரசாங்கம் கைச்சாத்திடாது என்கின்ற தகவல்களை தாங்கியவாறு உதயன், வலம்புரி போன்ற பத்திரிகைகளில் வந்துள்ளது. எனினும் வீரகேசரி பத்திரிகையில் அரசாங்கம் கைச்சாத்திடாது என்று சொல்வது தேர்தல் பிரச்சாரத்திற்கே தவிர உண்மையில் கைச்சாத்திடாது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என அரசாங்கத்தை குற்றம் சாட்டும் விதத்தில் வீரகேசரி பத்திரிகையில் செய்தி பிரசுரமாகி இருக்கிறது. எம்.சி.சி. ஒப்பந்தம் என்கின்ற பிரதான செய்தி எவ்வாறு வெவ்வேறு கருத்துக்களை தாங்கியவாறு, அதாவது சில பத்திரிகைகளில் எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பில் தற்போதைய அரசாங்கத்திற்கு சார்பாகவும் முன்னைய அரசாங்கத்தை குற்றஞ்சாட்டியும் சில பத்திரிகைகளிலும் வேறு சில வெகுஜன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்களிலும் தற்போதைய அரசாங்கத்தை பிழை கூறுகின்ற விதங்களிலும் அந்த அந்த ஊடகங்களுக்கு ஏற்றால் போலும் மெருகூட்டியும் செய்திகள் பிரசுரமாகியிருந்தது. இது கெப்னரின் மாதிரிக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

மேலும் 27.06.2020 வலம்புரி பத்திரிகையில் எம்.சி.சி ஒப்பந்தத்தில் பாதகமான விளைவுகள் உள்ளன. நிபுணர் குழு அறிக்கை என்கின்ற தலைப்பில் செய்தி பிரசுரமாகியிருந்தது. 28.06.2020 ஞாயிற்றுக்கிழமை **"எம்.சி.சி ஒப்பந்த நிதிக்கு நல்லாட்சி அரசே பொறுப்பு ரோஹித அபே குணவர்த்தன குற்றச்சாட்டு"** என்கின்ற தலைப்பில் உதயன் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. இப் பத்திரிகையில் ஒப்பந்தத்தின் முதற்கட்ட நிதியாக கிடைத்த 10 மில்லியன் நிதி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி (மைத்திரி பால ஸ்ரீசேன) பிரதமர் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் பொறுப்புக் கூறவேண்டும் என முன்னைய அரசாங்கத்தை குறை கூறும் விதத்தில் அமைந்திருந்தது.

29.06.2020 News 1st tamil **எம்.சி.சி குழு அறிக்கைகளின் குற்றச்சாட்டுக்களை ஐக்கிய தேசிய கட்சி நிராகரித்தது** என்ற தலைப்பில் வெளிதாகியிருந்தது. இச் செய்தியில் ஐக்கியதேசிய கட்சிக்கு சார்பான விடயங்களும் ஐக்கிய தேசிய கட்சிகளின் சின்னமும் பிரசுரிக்ககப்பட்டு வந்தமை கெப்னரின் மாதிரியை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

இச் செய்தியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி தேர்தல் காலத்தில் எம்.சி.சி தொடர்பில் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி மக்களை ஏமாற்றியதுடன் மீண்டும் தேர்தல் காலத்தில் அந்த செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தயாராகவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி அறிக்கை விடுத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இவ் ஊடகம் ஐக்கிய தேசிய கட்சிக்கு சார்பாகவும் பொதுத்தேர்தல் பிரச்சாரத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் விதத்திலும் செய்தி அறிக்கையிடப்பட்டுள்ளது என்பது தெரிவாகின்றது. இதுவும் கெப்னரின் மாதிரியில் கூறப்பட்ட விடயம் வெகுசன ஊடகங்களில் பிரயோகப்படுகின்றதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

04.06.2020 எம்.சி.சி ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டும். அது அழகானதாக இருந்தாலும் ஆபத்தானது மீளாய்வுக்குழு பரிந்துரை என்கின்ற தலைப்பில் வீரகேசரியில் செய்தி வந்துள்ளது. இலங்கையின் இறையாண்மைக்கும் தேசிய பாதுகாப்பிற்கும் பொதுச் சட்டத்திற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணானவை ஆகவே எவ்வித நிபந்தனையும் இன்றி ரத்துச் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 2020.07.04 தினகரன் பத்திரிகையில் சமூக ஊடகங்களில் எம்.சி.சி தொடர்பாக பொய்யான தகவல்கள் பரப்புரை நம்ப வேண்டாம் என அஜித் கப்ரால் தெரிவிப்பு என்கின்ற செய்தி பிரசுரமாகியிருந்தது.

மேலும் 05.07.2020 வீரகேசரி வார வெளியீட்டிலும் எம்.சி.சி உடன்படிக்கை பூதமா? பூச்சாண்டியா? என்கின்ற தலைப்பில் வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இச் செய்தியில் எம்.சி.சி விவகாரம் அரசாங்கத்திற்கு ஒரு பின்னடைவாகவே அமையும் ஏனென்றால், எம்.சி.சி யை பூதமாக காண்பித்து விட்டு அதனை வெறும் பூச்சாண்டியாக அடையாளப்படுத்த முனைந்தால் சிங்கள மக்களை வெறுப்படையச் செய்யும் என குறிப்பிடப்பட்டு இருந்தது.

மேலும் ஆதவன் தொலைக்காட்சியில் பத்திரிகைக் கண்ணோட்டத்தில் எம்.சி.சி குறித்து செய்தி வாசித்த ஊடகவியலாளர் தன்னுடைய தனிப்பட்ட கருத்துக்களையும் குறிப்பிட்டார். அதாவது எம்.சி.சி பாதுகாப்பு அற்றது என அவர் கூறியிருந்தார். இவ்வாறாக எம்.சி.சி உடன்படிக்கை குறித்து வெவ்வேறு விதமான கருத்துக்கள் வெவ்வேறு வெகுஜன ஊடகங்களில் செய்திகளாக பிரசுரிக்கப்பட்டு வருகின்ற தன்மையை காணக்கூடியதாக உள்ளது.

ஊடகங்களில் வெளியிடப்படுகின்ற செய்திகள் எல்லாம் உண்மைத்தன்மை உடையனவாக கருதக்கூடாது. எல்ல ஊடகங்களையும் நுகர்ந்து உண்மைத்தன்மையுடைய செய்தி எது என்பதனை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகள் அனைத்தும் உண்மைத்தன்மை இல்லை என்பதனை நாங்கள் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். எம்.சி.சி உடன்படிக்கை தொடர்பாக பல்வேறுபட்ட வெகுஜன ஊடகங்களில் பல தரப்பட்ட செய்திகளைக் கேட்டு இவ் ஒப்பந்தம் தொடர்பாக நான் ஊடகவியல் மாணவி என்ற ரீதியில் என்னுடைய கருத்துக்களையும் கூற வேண்டிய கடப்பாட்டில் உள்ளேன்.

எம்.சி.சி உடன்படிக்கை அமெரிக்காவினதாகும். முன்னைய அரசாங்கம் அமெரிக்காவிற்கு ஆதரவாகவும் தற்போதைய அரசாங்கம் சீனாவிற்கு ஆதரவாகவும் காணப்படுகின்றன. அதோடு அமெரிக்காவிடம் கைகோர்க்காது சீனாவிடம் கைகோர்த்து தமது உள்ளக அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கிலும் அமெரிக்காவின் எம்.சி.சி ஒப்பந்தத்தை நிராகரித்து உள்ளது என நான் கருதுகிறேன்.

அதாவது இலங்கையில் தமிழ் சிங்கள இனப்பிரச்சினை இடம்பெறுகிறது. இந்நிலையில் தமிழர் சுயநிர்ணய உரிமை கோரி தமிழகத்துடன் இணைந்தால் தங்களுடைய பலம் குன்றிவிடும் என்கின்ற காரணத்தினால் பௌத்த மதத்தினரான சீனரிடம் கைகோர்த்தால் தங்களுக்கு உதவிபுரியும் எனும் நோக்குடன் சீனாவின் எதிரி நாடான அமெரிக்காவுடன் கைகோர்க்க இலங்கை மறுக்கிறது என நான் கருதுகிறேன்.

இல்லாவிடின் பொதுத் தேர்தலில் மக்களின் நன்மதிப்பை பெறுவதற்கு பொய்யான வாக்குறுதிகளை தற்போதைய அரசாங்கம் வழங்குகின்றது என நான் கருதுகிறேன். கெப்னரின் மாதிரி பல ஆண்டுகளுக்கு முன்பாக வந்தாலும் அவர் கூறிய விடயம் அதாவது ஒரு செய்தி அல்லது நிகழ்வு வெவ்வேறு படிநிலைகளில் மாற்றமடைந்து திரிபடைந்து கையாளளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என கூறிய விடயம் தற்போது வெகுஜன ஊடகங்களிலும் காணக்கூடியதாக உள்ளது.

அதாவது ஒரு செய்தி அல்லது நிகழ்வு வெளிப்படுத்தப்படும் போது அவர் அவர் எண்ணங்கள், அறிவுப்புலன், விளங்குகின்ற தன்மை, உசாத்துணை சட்டகம் என்பவற்றினடிப்படையில் ஒரு விடயத்தை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக புரிந்து கொள்ளப்படும் என்பதையே கெப்னர் கூற முயற்சித்திருந்தார். அவர் கூறிய இவ் விடயம் தற்போது வெகுசன ஊடகங்களில் தென்படுகிறது. கெப்னரின் இம் மாதிரி இன்று வரைக்கும் ஏதோ ஒரு முறையில் நடைமுறையில் உள்ளது என்பது சிறப்பிற்குரியதாகும்.

கெப்னரின் மாதிரி துணை கொண்டு எம்.சி.சி உடன்படிக்கை எவ்வாறு வெகுஜன ஊடகங்களில் மாறுபட்ட கருத்துக்களை கொண்டுள்ளன என்பதனை நோக்கினோம். அதாவது ஊடகத்தின் வழியாக வெளிப்படுத்தப்படும் செய்தி உண்மைத்தன்மையுடையவை நிதர்சனமானவை என்பதற்கு அப்பால் அவற்றில் மாற்றங்களும், கையாளல்களும் உள்ளன என்பதனை கெப்னரின் மாதிரியின் ஊடாக அறிந்து கொள்ள முடிகிறது. எனவே முன்னைய காலங்களில் உருவாக்கப்பட்ட மாதிரிகள் தற்போதைய காலங்களில் ஏதோ ஒரு விதத்தில் நடைமுறையில் உள்ளன என நான் கூறுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபீனாவின்

# சாகரம்




சுபீனா குணரத்தினம்

(பல்கலைக்கழக மாணவி)

அரசறிவியற் துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


2024


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எதிர்காலத்தில் சிறந்த ஆய்வாளராக தன்னை அடையாளப்படுத்தக் கூடிய அனைத்துப் பண்புகளும் கொண்டவராக காணப்பட்ட சுபீனாவினது இழப்பு குடும்பத்திற்கு மட்டும் உரியதல்ல. அரசறிவியல் துறையையும் கடந்து இந்த சமூகத்திற்கான இழப்பாகவே தெரிகிறது"

– பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம் –
தலைவர்
அரசறிவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சுபீனா உயிரோடு இருந்திருந்தால் அவரை சிறந்த ஆய்வாளராக நாம் மாற்றி இருப்போம் "அரசறிவியலாளன் " இதழ் வெளியீட்டு விழாவில் நான் இதனை கூறி இருந்தேன் சுபீனாவுக்கு நாம் செய்யும் சிறந்த அஞ்சலி எதிர்காலத்தில் சிறந்த ஆய்வாளர்களை உருவாக்குவதே!
யாழ் பல்கலைக்கழக அரசறிவியல் துறை இருக்கும் வரை
சுபீனாவின் நாமம் வாழும்

– சி.அ.யோதிலிங்கம் –
வருகைதரு விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Though she was taken from us for too soon, her memory continues to inspire us. We honor all today and always, remembering the joy she brought into our lives and the lasting impact she left on our hearts.

Tharmini Narendranathan
Lecturer(prob)
Dept of political science
University of jaffna

எதிர்காலம் பற்றிய திட்டங்கள், கனவுகளுடன் இறுதியாண்டில் காலடி எடுத்து வைக்கவிருந்த மாணவிகளில் ஒருவரான சுபீனா இவ்வுலகைப் பிரிந்த செய்தி தெலைபேசி வழி எட்டிய போது, பிரபஞ்ச நியதியின் கையறு நிலையையே உணர முடிந்தது.

– த.அருணகிரிநாதன் –
ஆங்கிலப் போதனாசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Thurkka @ mallakam - 0750109501

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org